அனைத்திந்திய நூல்வரிசை

சிக்கவீர ராஜேந்திரன்

கன்னட மூலம் :

மாஸ்தி வெங்கடேஸ அய்யங்கார்

தமிழாக்கம் :

ஹேமா ஆனந்ததீர்த்தன்

நேஷனல் புக டிரஸ்ட், இந்தியா

முதற்பதிப்பு : 1974 (சக : 1896)

இரண்டாம் அச்சு : 1990 (சக : 1912)

© *மாஸ்தி வெங்கடேஸ அய்யங்கார்*

ரூ. 32.00

Original Title : Chikkaveera Rajendra *(Kannada)*

Tamil Title : Chikkaveera Rajendran

வெளியிட்டவர் : டைரக்டர், நேஷனல் புக் டிரஸ்ட், இந்தியா,

ஏ-5, கிரின்பார்க், புது தில்லி-110016.

முகவுரை

ஆயிரத்துத் தொள்ளாயிரத்துப் பதினேழில் முதலிலும், இருபத்தெட்டில் இரண்டாவது முறையும், நான் மைசூர் மாவட்டத்தில் வேலையில் இருந்த நாட்களில் குடகு நாட்டின் வரலாற்று விவரங்களைக் கேட்கவும் படிக்கவும் வாய்ப்புக் கிட்டி சிக்கவீர ராஜனைப் பற்றிய ஒரு நாடகத்தை எழுதவேண்டும் என்ற எண்ணம் எனக்கு உண்டாயிற்று. நாள் செல்லச் செல்ல அந்த விஷயம் ஒரு நாடகத்தின் எல்லைகளை மீறி வளர்ந்து அதை ஒரு நாவலாக எழுதவேண்டும் என்று நிச்சயமாயிற்று "சென்னபசவ நாயக்கன்" பிரசுரமான சமயத்தில் எழுத ஆரம்பித்து, இடையில் நான்கு வருடங்கள் விட்டு, மீண்டும் தொடர்ந்து இரண்டு வருடங்களுக்கு முன்னால் இதை எழுதி முடித்தேன். புத்தகத்தை அச்சிடுவதற்கு முன்னால் நால்கு நாடு அரண்மனையைப் பார்த்து விடவேண்டும் என்ற எண்ணத்தால் கிட்டத்தட்ட இரண்டு வருடங்கள கழிந்துவிட்டன. இந்த வருடம் அந்த அரண்மனையைப் பார்த்துவிட்டு வந்து புத்தகத்தைப் பிரசுரித்து வாசகர்களிடம் சமர்ப்பித்துள்ளேன்.

இந்த நாவலை எழுத முதலில் என்னைத் தூண்டியது ரைஸ் பெரியாரின் கெஜடியரும், "Mysore and Coorg" என்ற நூலும், ஆகும். குடகு நாட்டைக் குறித்த ஒரு பல்கலைக் களஞ்சியம் போன்றிருக்கும் ஸ்ரீ நடிகேரியண்ட சிண்ணப்பா அவர்களின் "பட்டோலெ பளமெ" இந்நாவலுக்கு ஆதார நூலாகும். ஸ்ரீ சிண்ணப்பா அவர்களின் குமாரர் ஸ்ரீ சுப்பய்யா அவர்கள் வெகு நாட்களுக்கு முன்னர் இந்த நூலின் ஒரு பிரதியை எனக்குக் கொடுத்து உதவினார்கள். மடிகேரியின் இலக்கிய ரஸிகர் ஸ்ரீ மை. சே. அனந்த பத்மநாபராவ் பாதிரி மேக்லிங், மற்றும் வீரராஜனிடம் சேவை புரிந்த அதிகாரி இவர்கள் எழுதிய குடகு பற்றிய நினைவுகள் அடங்கிய புத்தகங்களை தமது காரியத்திற்காக கைப் பிரதியாக எழுதி வைத்துக்கொண்டிருக்கிறார். இந்தப் பெரியார் இந்தக் கையெழுத்துப் பிரதிகளை உதவி, பெரிதும் சகாயம் செய்துள்ளார். மைசூர் பல்கலைக் கழகத்து நூல் நிலைய பிரதம அதிகாரி தம்மிடமுள்ள ஒரு நூலிலிருந்து அவசியமான பகுதிகளைப் பிரதி எடுத்தும், அந்த நூலை இரவலாகக் கொடுத்தும், உதவி புரிந்தார். அந்த நூல் குடகு நாட்டின் நமது சகோதர எழுத்தாளர்

ஸ்ரீ ஜ. எம். முத்தண்ணா அவர்களின் ஆங்கில நூலான "A Tiny Model State of South India" என்பதாகும். இந்த நூல்களல்லாமல் "The Imperial Gazetteer of India" என்ற நூலிலுள்ள "Coorg" என்ற பகுதியும் மிகவும் பயன்பட்டது. ரைஸ் பெரியாரின் "Mysore and Coorg" என்ற நூலை சமீபத்தில் மறுபடியும் பார்க்கவேண்டிய தேவை ஏற்பட்டபொழுது ஸ்ரீ வி. சீதாராமையா அவர்கள் உதவினார்கள்.

இந்த எல்லா நூலாசிரியர்களுக்கும், நூல்களை எனக்குத் தந்துதவிய நண்பர்களுக்கும், என் மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நால்கு நாடு அரண்மனையைப் பார்க்கவேண்டுமென்ற என் விருப்பத்தைப் பூர்த்தி செய்வதற்காக சொண்டிகொப்ப ஸ்ரீ ஜி. எம். மஞ்சுநாதய்யா அவர்கள் தமது சொந்த வசதிகளைப் பொருட்படுத்தாமல் என்னை அங்கு அழைத்துக்கொண்டு சென்றார். இந்தப் பிரயாணத்தின்பொழுது ஸ்ரீ ஆர். எஸ். ராமராவ் எங்களுடன் வந்து பிரயாணத்தை உல்லாசமானதாக ஆக்கினார். அவருக்கும் நான் மிகவும் கடமைப் பட்டிருக்கிறேன்.

பெங்களூர்
19-9-1956

மாஸ்தி வெங்கடேஸ அய்யங்கார்

மீண்டும் எழுதியது

நான்கு வருடங்களுக்கு முன்னால் அப்பங்கொளம் அரண்மனையைப் பார்க்கவேண்டுமென்று விரும்பியபொழுது அப்பொழுது குடகு சர்க்காரில் முக்கிய காரியதரிசிகளாக இருந்த ஸ்ரீ ஸி. நரசிம்ஹமூர்த்தியவர்கள் அதற்கு ஏற்பாடு செய்து உதவினார்கள். இந்தப் பெரியவருக்கு நன்றிசெலுத்த முன்னுரை எழுதும் பொழுது அஜாக்கிரதையினால் மறந்துவிட்டது. எனவே என் அஜாக்கிரதைக்காக மன்னிப்புக் கோருகிறேன்.

மாஸ்தி வெங்கடேஸ அய்யங்கார்

முன்னுரை

புதுக் கன்னட நாவலுக்கு ஏறக்குறைய நூற்றைம்பதாண்டு வரலாறுண்டு. கெம்பு நாராயண என்னும் கவிஞரின் 'முத்ராமஞ்சூஷ' (1823) என்னும் நூலில், நாவலின் சாயை உள்ளது என்று கூறலாமென்றாலும், தனிப்பட எழுந்த முதல் நாவல் குல்வாடி வெங்கடராயரின் 'இந்திராபாய்' அல்லது 'சத் தர்ம விஜய' (நன்னெறியின் வெற்றி) (1899) என்பதுதான். உண்மை, மனத்தூய்மை ஆகிய இரண்டு நெறிகளே இம்மைக்கும் மறுமைக்கும் நலம் பயக்கும் என்பதைக் காட்டுவதற்காகவே அதை எழுதுவதாய், அந்த ஆசிரியர் முன்னுரையில் கூறியிருக்கிறார் இந்த நாவலில் கலை பின்னணியில் உள்ளது; சமூக வாழ்க்கையும் சமூகச் சீர்திருத்தமுமே பொருளாகக் கொள்ளப் பட்டிருக்கின்றன என்பது நினைவில் இருத்த வேண்டியதாகும்.

இந்தக் காலப் பகுதிக்கு முன்பே கன்னட மக்களுக்கு, மொழி பெயர்ப்புகள் மூலம் நாவலின் வடிவம் அறிமுகம் ஆகியிருந்தது. பி. வெங்கடாசாரியர், பங்கிம் சந்திரரின் 'துர்க்கேச நந்தினி'யை மொழி பெயர்த்திருந்தார் (1885). வெங்கடாசாரியருடைய நடை வடமொழியை ஒட்டிய தூய நடை, மராட்டியிலிருந்து ஹரிநாராயண ஆப்டே யவர்களின் நாவல்களைக் கன்னடத்தில் பெயர்த்தளித்த களக நாதரின் நடை எளிமை நிரம்பியது; பேச்சு மொழிக்கு மிக நெருங்கியது. ஆனால் அதில் சுவைவேறுபாடு இல்லை. நாட்டின் பழங்காலச் சிறப்புக்களையும் வீரரின் செயல்களையும் எடுத்துக் காட்டி நாட்டுப் பற்றை வளர்ப்பதே பங்கிம் சந்திரர், ஆப்டே ஆகிய இருவரின் நோக்கமாயிருந்தது. அண்மையில் வரலாற்று நாவல்கள் எழுதிய அ. ந. கிரு., த. ரா. சு., முதலியவர்களையும் இந்த நோக்கமே தூண்டியது.

நாவல் என்று நாம் தெளிவாகக் காட்டக் கூடிய முதல் நாவல் எம். எஸ். புட்டண்ண அவர்களின் 'மாடித்துண்ணோ மகாராய' (1915) என்பதாகும். இதிலும் இலட்சியம், அறிவுரை ஆகியவை இடம் பெற்றிருக்கின்றன என்றாலும், பல நிகழ்ச்சிகளைப் பின்னிய அழுத்தமான கதை உண்டு. அரச அவை முதல் கள்ளர், வேடதாரிகள், தீயவர்கள் முதலிய பல்வேறு வகையினரின் வாழ்க்கை

வரை இதில் வருணிக்கப்பட்டிருக்கின்றன. தற்காலக் கன்னட நாவலின் தொடக்கத்திலேயே கிராம வாழ்க்கையை எடுத்து விளக்கும் நூல் வெளிவந்தது மகிழ்ச்சிக்குரிய தொன்றாகும். 1915 முதல் 1947 வரையிலான காலப்பகுதியில் ஏறக்குறைய நூறு மூல நாவல்கள் வெளிவந்தன என்று கூறலாம்.

புது யுகத்தின் தோற்ற காலத்தில் (1918-25) நாவலாசிரியர்கள், பொதுவாக, நடுத்தர வகுப்பினராகிய படித்த நகரவாசிகளாயிருந்தனர். வாசகர்களும் பெரும்பாலும் இத்தகையவர்களே. பத்திரிகைகள் மிகச் சிலவே. அவையும் இந்த நாவல்களைத் (தொடர்ச்சியாக) வெளியிடும் வம்புக்குப் போகவில்லை. இக் காலப் பகுதியைச் சேர்ந்த நாவலாசிரியர்கள் ஆங்கிலம், வடமொழி ஆகிய இரண்டு மொழிகளிலும் உள்ள இலக்கிய விமரிசனம், அணியிலக்கணம் ஆகியவற்றை அறிந்தவர்கள். காந்தியடிகளின் புகழும் செல்வாக்கும் நாட்டில் பரவி வந்த காலம் அது. எழுத்தாளனுக்கும் வாசகனுக்கும் பொதுவாயிருந்த பின்னணியும், இரு தாப்பினரும் ஒப்புக் கொண்டிருந்த வாழ்க்கையடிப்படைகளும் எழுத்தாளனின் வேலையை எளிதாக்கின. வாழ்க்கையைப் பயனுள்ளதாக ஆக்கிக் கொள்வது எவ்வாறு, தனிமனிதன் சமூகத்தின் ஒரு பகுதியாகத் தன் தனித்தன்மையை வளர்த்துக்கொண்டு சமூகத்துக்குப் பயன் படுமாறு வாழ்வது எவ்வாறு என்பது போன்ற பல அடிப்படைப் பிரச்சினைகளை, அக்காலப் பகுதியைச் சேர்ந்த நாவல்கள் தம்முள் அடக்கிக்கொண்டிருந்தன. அவ்வாசிரியர்களுக்கு வாழ்க்கை பொருள் பொதிந்ததாயிருந்தது. பாரத நாட்டின் பாரம்பரியச் செல்வத்தை ஒப்புக்கொண்டு, அதன் பண்பாட்டு வரம்புக்குள் சமூகத்துக்கும் தனி மனிதனுக்கும் இருந்த தொடர்பையும் இரண்டின் பயனையும் கண்டு கொண்டவர்கள் அவர்கள். இதனால் அந்த நாவல்களில் ஒரு வேகமோ புரட்சிப் போக்கோ இல்லை. உத்தியைப் பற்றியும் அவர்கள் அதிக கவனம் செலுத்தவேண்டியிருக்கவில்லை. தமக்கு முன்பு வாழ்ந்தவர்களின் செல்வாக்கிலிருந்து மொழி, நடைகளின் மூலம் விடுபடவேண்டும் என்னும் பிரச்சினையும் இப்புது யுக நாவலாசிரியர்களுக்கு இல்லை.

இப்புது யுக நாவல்கள் மயங்கவைக்கும் வகையில் பலபல தரங்களையும் பெருமையையும் சாதித்தன. தற்காலத்துக் கன்னட உரைநடையின் தோற்ற காலத்திலேயே 'ஸ்ரீநிவாச' (டாக்டர் மாஸ்தி வெங்கடேச ஐயங்கார்) பேச்சு மொழிக்கு மிக நெருங்கிய எளிய-ஆனால் அழுத்தத்தைக் காட்டவல்ல-நடையை எழுதிக் காட்டினார்

என்பது வியப்புக்குரிய செய்தியாகும். சிவராம காரந்தரின் நூல்கள் கலைஞனின் உண்மை வடிவங்களாகும். வாழ்க்கையை அப்படியே ஏற்றுக்கொள்ளவேண்டும், வாழ்க்கை பொருள் பொதிந்தது, வாழ்க்கையை உயர்ந்ததாக்கிக் கொள்ளலாம் என்னும் நம்பிக்கையில், புது யுகத்தைச் சார்ந்தவராகிய காரந்தர் அநுபவத்தை அலசிப் பார்த்து, சோதித்தெடுத்து, வாழ்க்கைக்கு அது பயன்படும் அளவைத் திட்டவட்டமாக நிர்ணயித்துள்ளார்: அவ்வாறு நிர்ணயிப்பதில் அவர், புது யுகத்துக்கு முன்பே எழுதிய புது யுகத்தினர் ஆவர். 'தேவுடு' எழுதியது குறைவு என்றாலும் ஒவ்வொன்றுமே உள்ளத்தை ஈர்க்கும் எழுத்து. 'மயூர' கன்னடத்தின் தொடக்க கால வரலாற்று நாவல்களில் ஒன்று. 'அந்தரங்க' மனத்தத்துவ நூல்களுக்கு வழிகாட்டியது. 'மகாப்பிராம்மண,' 'மகா க்ஷத்திரிய,' 'மகா தர்சன' முதலியவற்றில் தேவுடு, தமது ஆழ்ந்த கல்வியை ஒப்பற்ற ஒளியூட்டிக் காட்டினார். உபநிடத, புராண காலத்துப் பாரதத்தை மீண்டும் உண்டாக்கினார். காரந்தர், தேவுடு, ஸ்ரீரங்கர் ஆகியவர்களது அறிவுத் திறமை வெவ்வேறு வகையில் வெளிப்பட்டது. ஸ்ரீரங்கரிடம் சிந்தனை முதலிடம் பெற்றது. 'குவேம்பு' உள்ளத்தைப் பிணிக்கும் மற்றொரு நாவலாசிரியர். 'கானூரு சுப்பம்ம ஹெக்கடத்தி' (1936) என்னும் நாவலில் உண்மை நிலையும் இலட்சியமும் முழுதும் விரவாது, கதா நாயகன் பூவய்யனின் பாத்திரம் தளர்ந்து விடுகிறது. 'மலைகளில் மதுமகள்' (1966) என்பதில், அநுபவத்தை எல்லா மட்டங்களிலும் சேகரித்து, நிறுத்துப் பார்க்கும் துலாக்கோல் தன்மை காணப்படுகிறது. ஒரு கிராமத்தையே கதாநாயகனாகக் கொண்டு, தெளிந்த கலைச் சிறப்போடு, அதன் ஏற்றத் தாழ்வுகளைச் சித்தரிக்கும் நாவல், ராவ்பஹதூர் எழுதிய 'கிராமாயணம்.' புது யுக நாவலாசிரியர்களின் வழியிலேயே மேலும் பல நாவல்களை எழுதியவர் மிகப் பலர்; கடங்கோட்லு சங்கரபட்ட, எம். ஆர். ஸ்ரீநிவாசமூர்த்தி, ஆனந்தகந்த, ரங். ஸ்ரீ. முகளி, கிருஷ்ண மூர்த்தி புராணிக, எம். ஏ. சீதாராமய்ய, நாடிகேர கிருஷ்ணராவ், மிர்ஜி அண்ணாராவ், பாரதீசுத (நாராயணராவ்) இவர்களில் சிலரவர். வி. எம். இனாம்தாரரின் நாவல்களில் அறிவுக் கூர்மையுடன் பச்சாத்தாபமும் விரவியிருக்கிறது.

1934-இலேயே இரண்டு நாவல்களை—'ஜீவன யாத்திரை,' 'உதயராக'—வெளியிட்ட அ. ந. கிரு. (அ. ந. கிருஷ்ணராவ்) 37 ஆண்டுகளில் 112 நாவல்களை எழுதினார். முற்போக்கு நடவடிக்கைகளைத் தொடங்கிவைத்தவர் இவரே. 1940-க்குப் பிறகு ஆங்கிலம் என்

னும் திறவுகோலைப் பயன்படுத்தி, கன்னட எழுத்தாளர்கள் பல்வேறு இலக்கியக் கருவூலங்களைத் திறந்தனர். ஃப்ளாபெர், மாப்பசான், இப்சன் முதலிய ஐரோப்பிய எழுத்தாளர் மட்டுமன்றி, கம்யூனிஸ்ட் ரஷியாவின் மாக்ஸிம் கார்க்கி, மய்கோவிஸ்கி முதலியவர்களின் செல்வாக்கும் இந்த எழுத்தாளர்கள்மீது பரவியது. அனைத்திந்திய முற்போக்கு எழுத்தாளர்களின் சங்கம் ஒன்று தொடங்கிய காலம் இதுவே. சுதந்திரம் நெருங்கிக்கொண்டிருக்கிறதென்று தெளிவாகத் தெரிந்ததும் எழுத்தாளர்களின் நாட்டம் சமுதாய நிலையின் பால் திரும்பியது. கிராம வாழ்க்கையை மேற்கொண்டிருந்த எழுத்தாளர்களையும் இலக்கியப் படைப்பு ஈர்த்தது. குடும்ப வாழ்க்கையின் சூழ்நிலையும் மாறியது; எழுத்தாளர்களுக்கும் வாசகர்களுக்கும் சாத்திர புராணங்களுக்கும் இடையிலிருந்த தூரம் பெரிதாகியது; பாரதத்தின் பெருமைகளைப் பெருமளவுக்கு, காந்தியடிகள் போன்றவர்களின் வாழ்க்கையிலிருந்தும் சம்பிரதாயத்திலிருந்தும் தெரிந்து கொண்டார்கள் இக்காலத்து மக்கள். இந்தக் காலப் பகுதியில் படிப்பவர்களின் தொகை பல்கியது. இவையெல்லாமே முற்போக்கு எழுத்தாளர்கள்மீது தம் செல்வாக்கைப் பதித்தன. இலக்கியம் வாழ்க்கையைச் செம்மைப்படுத்தும் ஓராற்றலாக மாறவேண்டும்; அழகு, படைப்பு, சுவையான அநுபவங்கள் என்னும் பெயரில் வாழ்க்கையின் அழுக்கையும் ஆஷாடபூதித்தனத்தையும் புறக்கணிக்கக் கூடாது; வெளிப்படையாக கடுமையாக, அப்பட்டமாக உண்மை நிலையை வெளிப்படுத்துவதே உயர்ந்த இலக்கியத்தின் அடிப்படை என்பது முற்போக்கு வாதிகளின கொள்கை. நீண்ட முன்னுரைகளை எழுதுதல், மிகுதியான எண்ணிக்கையில் நாவல்களை எழுதுதல் என்னும் வழக்கத்தை அ. ந. கிரு தொடங்கி வைத்தார் முற்போக்கு நூல்கள் பெரும்பாலானவற்றில் கலை(த்தன்மை) பின்தங்கிவிட்டது; நடை கோஷம்போல அமைந்தது; பாத்திரங்கள் பிரதிநிதித் தன்மை வாய்ந்தனவாக அமைந்தன; நாவலாசிரியர் வக்கீலாக மாறினர். ஆனால், அந்த முற்போக்கு வாதிகளும் 'சந்தியாராக' (அ. ந. கிரு.), 'சந்தவள்ளிய தோட்ட,' 'பிடுகெடெய பேடி' (த. ரா. சு.), 'ஜ்வாலாமுகிய மேலே' (பசவராஜ கட்டேமனி), 'சர்வ மங்கள' (சதுரங்க)— முதலிய நினைவிற்கொள்ளத் தக்க பல நாவல்களை வழங்கினர்.

முற்போக்கு நடவடிக்கைகளின் தொடக்க காலத்தில் நடந்த தீவிரமான விவாதம், சூழ்நிலையின் உண்மையிருப்பைக் கணிப்பதைக் கடினமாக்கியது. முற்போக்கு வாதிகள் முந்தைய தலைமுறையினரைப் பழமை வாதிகள், மடிசஞ்சிகள் என்று கேலி செய்தாலும்,

உண்மையில் அவர்களிடமிருந்து பெரிதும் விலகி நிற்கவில்லை. பழந்தலைமுறையினருக்கும் முற்போக்கு வாதிகளுக்கும் கருத்து வேற்றுமை ஏதும் இல்லை. முற்போக்கு வாதிகள் சமூகச் சீர்திருத்தம், இலக்கியம் நேரடியாக ஏற்படுத்தக்கூடிய விளைவு ஆகியவற்றை வலியுறுத்தினர். புது யுகத்தைச் சேர்ந்த நாவலாசிரியர்களுக்கோ முற்போக்கு எழுத்தாளர்களுக்கோ பழைய அடிப்படைகளைக் கருத்திற் கொள்வது தேவை என்று தோன்றவில்லை. வாழ்க்கை வாழ்வதற்கே, பொருளுடைய (கருத்துச் செறிந்த) சமுதாய வாழ்க்கையே உயர்ந்ததாகும் என்பனவற்றில் ஐயம் ஏதுமில்லை. அவர்களுக்கும் வாசகர்களுக்கும் இடையே நோக்கில் வேறுபாடு இல்லை. இந்த இரண்டு காலப்பகுதிகளையும் சேர்ந்த நாவலாசிரியர்கள் வரலாற்று நாவல்களை, பொதுவாக, பாரதத்தின் பெருமையைக் காட்டுவதற்காகவும் பெரியவர்களின் வாழ்க்கையைச் சித்திதரிப்பதற்காகவும் பயன்படுத்தினர் என்பது கவனிக்கத் தக்கது.

1952–53-க்குள் கன்னட இலக்கியத்தில் புதியதொரு கோஷ்டி உருவாகியது. சுதந்திரம் பெற்ற சில ஆண்டுகளுக்குளளேயே காந்தியடிகளும் மறைந்த பிறகு—நாட்டில் ஏற்பட்ட நீதியின் வீழ்ச்சி, சிந்தனையாளர்களுக்குத் திகைப்பை உண்டாக்கியது. தொழில் நகரங்கள் வளர்ந்ததும் தொழிற் பிரச்சினைகள் எழுந்ததும் இக்காலத்தில் தான். கல்வியை நாடியும் வேலைகளைத் தேடியும் குடும்பத்தின் உறுப்பினர்கள் சிதறிப் போகவேண்டிய நிலை பெருகியது. விஞ்ஞானம், தொழில் நுட்பம், உளவியல் ஆகியவற்றின் செல்வாக்கு பெருகியது டி. எஸ். எலியட், சாமுவேல் பெக்கெட், சாலிங்கர், காமூ முதலிய மேற்கத்திய எழுத்தாளர்களின் செல்வாக்கு மிகுந்திருந்த காலம் இது. வழி வழி வந்த அடிப்படைகளை அப்படியே ஏற்றுக்கொள்வது சிந்தனையாளர்களுக்குக் கடினமாயிருந்தது. ஒருவன் தானே முயன்று தனது வாழ்க்கையின் அடிப்படையையும் பொருளையும் தேடிக் கண்டுபிடிக்க வேண்டியிருந்தது இதற்கு முன்பிருந்த காலப் பகுதிகளைச் சேர்ந்த எழுத்தாளர்கள் போற்றி வந்த இலட்சியம் இவர்களிடமில்லை. மனிதனின் இயற்கையில் காமம் முக்கியமான பங்கு வகிப்பதால் புதிய எழுத்தாளன் மீண்டும் மீண்டும் அதை விளக்குவதிலேயே தன் படைப்பைத் தொடங்குகிறான். இலக்கியப் படைப்பு என்பது அவனுக்கு, தன் அநுபவத்தின் உள்ளே நுழைந்து பொருள் தேடும் ஒரு சாதனை. தனது அநுபவத்தின் தனித் தன்மை, மொழியின் அளவு ஆகிய இரண்டு காரணங்களாலும் புதிய எழுத்தாளர்களுக்குக் குறியீடு

களைப் பயன்படுத்தும் கட்டாயம் ஏற்படுகிறது. அதனால் புதிய நாவல்களில் 'கதை'யின் ஆழத்தில் ஆர்வம் குறைந்து, உத்திகளில் அதிக கவனம் செலுத்தப்படுகிறது. புது யுகத்தில் — தற்காலக் கன்னட இலக்கியத்தில் — முதல் தடவையாக வாழ்க்கை துன்ப மயமானதும் கூட என்னும் எண்ணம் உருப்பெற்றது. இலக்கியம் படிப்பது கஷ்டமான செயல், நூல்கள் விளங்குவதில்லை என்ற பேச்சும் எழலாயிற்று.

சாந்திநாத் தேசாய் எழுதிய 'முக்தி,' யசவந்த சித்தாலரின் 'மூருதாரிகளு,' லங்கேசரின் 'பிருகு' (சாலிங்கர் எழுதிய Catcher in the rye என்பதை இது நினைவூட்டுகிறது), (அண்மையில் தீவிரமான விவாதத்தை எழுப்பிய) அநந்தமூர்த்தியின் 'ஸம்ஸ்கார' முதலியவை புதிய நாவல்களில் முக்கியமானவை.

இப்போதைய காலத்தைப் 'புது யுகம்' என்று அழைத்தாலும் புதுக் கோஷ்டியைச் சேர்ந்த பலர் சிறந்த நாவல்களை அண்மைக் காலத்தில் வழங்கியிருக்கிறார்கள் என்பதை மறப்பதற்கில்லை. எடுத்துக்காட்டாக, பல்லாள, மேகாசி ஆகிய இருவரும் எந்தப் பிரிவையும் சேராதவர்கள். அண்மைக் காலத்து (இன்றைய) நாவலாசிரியர்களில் மிகச் சிறந்தவரெனப்படும் எஸ். எஸ். பைரப்ப எழுதிய 'வம்ச விருட்ச,' 'நாபிநெரளு,' 'கிரக பங்க' போன்ற நாவல்களில் காரந்தரில் காணும் ஆழ்ந்த அநுபவம், நடுவு நிலைமை, ஆகியவை காணப்படுகின்றன. காலஞ்சென்ற 'திரிவேணி' உளவியலைத் தமது நாவல்களில் பயன்படுத்திக்கொள்ள முயன்று, புதிய வழியைப் பின்பற்றினார். எம். கே. இந்திரா, அநுபமா நிரஞ்சன முதலிய பல பெண் எழுத்தாளர்கள் நல்ல நாவல்களைத் தந்திருக்கிறார்கள்.

மேற்குறித்த எல்லா வகையிலும் புது யுகத்தின் முதல் வரிசையில் இடம் பெறுபவர், இப்போது 81-ஆம் ஆண்டில் காலிட்டிருக்கும் 'ஸ்ரீநிவாச' — (மாஸ்தி வெங்டேச ஐயங்கார்) ஆவார். சிறுகதை என்னும் அமைப்பு இவருக்காகவே காத்திருந்தது என்று சொல்லும் வகையில் அதைக் கையாண்டு கன்னடத்தில் சிறுகதையின் தந்தை என்று அழைக்கப் பெற்றார். அழகிய கதை, கவிதைகளை எழுதியிருக்கிறார். சுநீத, எளிய ரகளை (யாப்பு வகைகள்) ஆகியவற்றைப் பயன்படுத்திய முதல் கவிஞர்களில் ஒருவர்; 'யசோதரா,' 'காகன தோட்டெ' போன்ற அழகிய நாடகங்களை எழுதியிருக்கிறார்; விமரிசனக் கட்டுரைகளை வரைந்திருக்கிறார். கன்னட சாகித்திய சம்மேளனம், கன்னடசாகித்திய பரிஷத் ஆகியவற்றின்

தலைவராயிருந்த மாஸ்தியவர்கள் சாகித்திய அகாதெமியின் பரிசையும் பெற்றிருக்கிறார்.

உரை நடைக் கற்பனை இலக்கியத்தில் சிறுகதையைவிடப் பரந்த திரைச் சீலையை 'ஸ்ரீநிவாச' பயன்படுத்தியது மூன்று முறை. 'சுப்பண்ண' (1926) ஒரு குறு நாவல். 'சென்னபசவ நாயக்க' (1949), 'சிக்கவீர ராஜேந்திர' (1956)—இரண்டும் வரலாற்று நாவல்கள்.

'சுப்பண்ண'வில், கதை பெரும்பாலும் பழைய மைசூர் சம்ஸ்தானத்தில், பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பாதியில் நடைபெறுகிறது. சுப்பண்ண இசையில் வாழ்க்கையின் பொருளைக் கண்டு திடசித்தம் பெற்றவன். அவன் வாழ்க்கையில் கலந்து போன மனைவி லலிதம்மா, நாவலின் முற்பாதியில் தொடங்கும் தெளிவான விவாதத்தினால் கதை மேற்கொண்டு செல்கிறது. மகனுக்கோ இசையில் நாட்டம்; சிறந்த வடமொழி யறிஞரான தந்தைக்கோ இசை என்றாலே இளக்காரம். இதனால் தந்தையும் மகனும் விலகிக்கொண்டே போகிறார்கள். சுப்பண்ணனின் தாய் கெட்டவளல்ல; ஆனால் அவளுக்குப் பேதைமையின் காரணமாய் அமைந்த தற்பெருமை; மாமியார் என்னும் கர்வம். பாரிஜாதப் பூப் போன்ற பெண் லலிதாம்மா காலிட்டதால் தாய்க்கும் மகனுக்கும் இடையே மனக்கசப்பு தலையெடுக்கிறது. சுப்பண்ண தந்தையின் வீட்டைவிட்டு வெளியேறும் வரை வெளியுலகம் மனவுலகம் இரண்டிலும் போராட்டம் நடைபெறுகிறது. கொடுமை நிரம்பிய நிகழ்ச்சிகளினிடையிலும் ஆர்வம் குன்றாத வகையில் கதை செல்கிறது. பிறகு தெளிவான நீரோட்டம் போன்ற நிகழ்ச்சிகள் இடம் பெறுகின்றன. சுப்பண்ணனிடமிருந்து வாழ்க்கையின் பல்வேறு தொடக்குகள் தாமாகவே கழன்றுவிடுகின்றன (மகன் மரணம், மகளின் சாவு, மனைவி இறத்தல், தந்தை தாய் முதலியவர்கள் மறைதல்; இச்செய்திகள் தெரிய வருதல்); ஆனால் இந்தத் தொடக்குகளிலிருந்து விடுபடவேண்டுமென்று நினைக்கும்போது புதிய தொடக்குகள் உண்டாதல், படிப்படியாக அவருடைய மனம் பக்குவப்படுதல், முதலியவற்றை இரண்டாம் பகுதி கூறுகிறது. போராட்டத்துக்குப் பதிலாக அவருடைய அறிவுக்கும் சூழ்நிலைக்குமான தொடர்பு மாறிக் கொண்டே போவதைப் பார்க்கிறோம். கூடவே, சுப்பண்ணன் பெற்ற சித்திக்கும் லலிதம்மா அடைந்த சித்திக்கும் வேறுபாடு தெளிவாகத் தோன்றிக் கொண்டே வருகிறது. 'சுப்பண்ண' நாவலால், கன்னடக் கதை இலக்கியத்தில், கதைத் தொடக்கத்

திலேயே வெளியுலக நிகழ்ச்சிகளுக்கு முக்கியத்துவம் கிடைக்காமல், பாத்திரத்துக்கும் மனவுலக ஏற்றத் தாழ்வுகளுக்குமே முக்கியத்துவம் கிடைத்தது. நிகழ்ச்சிகள் நடந்துகொண்டிருக்கும் போதே வளரும் பாத்திரத்தை அது சித்திரித்தது. அதனோடு, பகட்டின்றியே ஆழத்தை நிலைநாட்டவல்ல உரையின் நடையும் இதிலிருந்து கன்னட மொழிக்குக் கிடைத்தது.

'சென்ன பசவ நாயக்க'னின் கற்பனை 1920-21-இலேயே 'ஸ்ரீநிவாச'ருக்கு ஏற்பட்டது. தென்னாட்டில் மைசூர் சமஸ்தானத்துக்கு அருகிலிருந்த பிதனூர் என்னும் சிறு சமஸ்தானத்தின் சிங்காதனத்துக்குரிய பட்டத்திளவரசனும் இளைஞனுமான சென்ன பசவ நாயக்கன் இந்த நாவலின் முக்கிய பாத்திரம். நிகழ்ச்சிகள் பதினெட்டாம் நூற்றாண்டின் இடைப் பகுதியில் இடம் பெறுகின்றன. பிதனூரின் பெரிய நாயக்கன் (மன்னன்) மறைந்துவிட்டான். சென்ன பசவ நாயக்கனின் தாய் வீரம்மாஜி அரண்மனையதிகாரி நம்பய்யன் என்பவனுக்கு மிகுதியான சலுகையைக் கொடுத்திருந்தாள். மக்கள் பல்வேறு விதமாகப் பேசுகிறார்கள்; நாயக்கனுக்கு வெறுப்பு. ஊர்ப் பிரமுகர் நேமய்யனின் மகள் சாந்தவ்வை நாயக்கனின் மனைவி. அரசின் நிர்வாகம் தனி மனிதர்களின் வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்து குலைந்துகொண்டே வருகிறது. நிறைசூலியான ஒரு பெண்ணை வைரவக் கடவுளுக்குப் பலி கொடுத்தால் எல்லாம் நன்மையாக முடியும் என்று கேள்விப்பட்டு, சாந்தவ்வை தானே பலியாகிறாள். நாய்க்கன் இறந்துவிடுகிறான் பிதனூர் மைசூரின் சர்வாதிகாரியான ஹைதர் அலியின் கையை அடைகிறது. நாயக்கன் இனியும் வருவான் என்னும் நம்பிக்கை இன்றைக்கும் மக்கள் பாடும் பாடல்களில் தெரிகிறது என்னும் வாக்கியத்துடன் நாவல் முடிவடைகிறது.

இந்த நாவலில், வீரம்மாஜி, சென்ன பசவ நாயக்கன், ஹைதர் அலி, மும்மடி கிருஷ்ணராயர், நம்பய்ய முதலானோர் வரலாற்றில் இடம் பெற்றவர்கள். நேமய்ய, சாந்தவ்வை முதலியவர்கள் கற்பனைப் பாத்திரங்கள். பிதனூர், மைசூர் நாடுகளின் ஏற்றத் தாழ்வுகளின் வருணனை பெரும்பாலும் வரலாற்றை ஒட்டியே இருக்கிறது. மக்கள் வாயில் வழங்கி வந்துள்ள செய்திகளையும் ஆசிரியர் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்.

'சிக்கவீர ராஜேந்திர,' தென்பாரத்தில் மைசூர் அரசுக்கு அருகில் உள்ள சிறிய நிலப்பரப்பான குடகு நாட்டின் வரலாற்றுடன் தொடர்புடையது. (1956-இல் குடகு புதிய மைசூர் மாநிலத்தின்

ஒரு பகுதியாயிற்று.) வீர ராஜேந்திரன் காலத்தில் ஆங்கிலேயர் குடகைத் தம் வசமாக்கிக் கொள்வதற்கு முன்பு நடந்த வரலாற்று நிகழ்ச்சிப் பந்தலை 'ஸ்ரீநிவாச' பயன்படுத்திக் கொண்டிருக்கிறார். இராணி கவுரம்மாஜி, அரசனின் தங்கை தேவம்மாஜி, அரசன் மகள், அமைச்சர் போபண்ணா, மைத்துனன் சென்ன பசவ, நண்பன் நொண்டி பசவ இவர்களெல்லாம் வரலாற்றுப் பாத்திரங்கள். (அரசனின் இயல்புபற்றி வரலாற்றாசிரியர்கள் முரண்பட்ட கருத்துக்களைத் தெரிவிக்கிறார்கள்.) மன்னனின் தங்கையும் மைத்துனனும் கம்பெனியாரிடம் அடைக்கலம் வேண்டியதும், மன்னன் கேட்டுக் கொண்டபடி அவர்களைக் கம்பெனி விட்டுவிடாமல் பெங்களூரில் வைத்திருந்ததும், வீர ராஜேந்திரனின் செயல், அநியாயங்களைப் பற்றிப் புகார் வந்திருக்கிறது என்று சென்னைக் கவர்னர் கடிதம் எழுதியதும், கம்பெனியின் பிரதிநிதிகளில் கருணாகர மேனன் என்பவனை அரசன் கைது செய்ததும், கம்பெனிப் படைகள் குடகை முற்றுகையிட்டபோது, அமைச்சர் போபண்ணா கர்னல் பிரேசரிடம் சேர்ந்ததும், அரசனும் கைதியானதும் இங்கிலாந்து சென்றதும், அவன் மகள் கிறித்து மதத்தைச் சேர்ந்ததும் — எல்லாமே வரலாற்றுப் பகுதிகள் ஆகும். வரலாற்றில் நிழல்களாகத் தோன்றும் கவுரம்மாஜியும் லட்சுமிநாராயணய்யனும் இங்கே தெளிவாகத் தோற்றமளிக்கிறார்கள். 'ஸ்ரீநிவாச' இங்கே படைத்துள்ள பாத்திரங்களில் மிக முக்கியமானவை பகவதி, தீட்சிதர் ஆகிய இரண்டு பாத்திரங்களாகும்.

கன்னடத்தில் பிற நாவலாசிரியர்கள் நாட்டின் பெருமையையும் வரலாற்றின் சிறந்த மனிதர்களையும் சித்திரிப்பதற்கு வரலாற்றுப் பகுதிகளைப் பயன்படுத்துகிறார்கள். ஆனால், 'ஸ்ரீநிவாச.' அழிவை நோக்கிச் சென்று கொண்டிருந்த நாடுகளின் கதைகளையே சொல்கிறார் என்பது கவனிக்கத் தக்கது. 'சென்ன பசவ நாயக்க' இருள் கவிந்த உலகத்தைச் சித்திரிக்கிறது. பெரிய நாயக்கன் மறைந்த துயரம் அரசு முழுவதையுமே கவிந்திருப்பது போலத் தோன்றுகிறது. பிதனூர், அருகிலுள்ள வஸ்தாரெ, மைசூர் ஆகிய மூன்று பிரதேசங்களிலும் அரணமனைகள் செயலற்று நிற்கின்றன. சென்ன பசவனாவது செயல் வீரனாக மாறவேண்டும்; அப்படி மாறும்போது வேறு பெயரில் வேடத்தை மாற்றிக்கொண்டு ஆற்றலுடையவனாகத் திகழவேண்டும். இந்த அளவுக்காவது இந்த இடத்தில் சிறிது ஒளி, மகிழ்ச்சி, சிரிப்பு புலப்படுகிறது. சாந்தவ்வையும் நாயக்கனும் மைசூர் அரசரைச் சென்று கண்டபோது சிறிது இளவெயில்

தோன்றியது போலிருக்கிறது. இந்த நாவலில் வரும் மல்லிகை என்னும் பணிப்பெண் மின்னல் கொடியேதான். அவள் செல்லு மிடமெல்லாம் சிரிப்பு, குதூகலம்! 'சிக்கவீர ராஜேந்திர'னில் இந்த அளவு மகிழ்ச்சி கூட இல்லை. கதை தொடங்குவதே சிறையில் தான். நாவல் முழுதும் கைதிகளே நிரம்பி யிருக்கிறார்கள். குடகு அரண்மனையே சிறையாகி யிருக்கிறது. அரண்மனையையும் நாட்டை யும் சிறை வீடாக மாற்றிய அரசனைச் சுற்றிலும் அவனுடைய பாவச் செயல்களே சிறையை உருவாக்கும் கொடுமை நாவலில் கண்ணில் படுகிறது.

சுருக்கமாக, வரலாற்று நாவல்களைப் பொருத்தவரை அரசு களின எழுச்சி வீழ்ச்சிகளில்தான் 'ஸ்ரீநிவாச'ருக்குப் பற்று என லாம். ஒரு காலத்தின் நிகழ்ச்சிகள், தனி மனிதர்கள் ஆகியவர் களைவிட, நிகழ்ச்சிகளுக்கும் மனிதர்களுக்கும் உள்ள தொடர்பு களில் அவருக்கு ஈடுபாடு மிகுதி 'ஸ்ரீநிவாச'ருக்கு மனித இயல் பில் உள்ள அக்கறை காரணமாக, பாத்திரங்கள நிழலாக அமை யாது, உயிருள்ள மனிதர்களாகவே திகழ்கின்றன. மேலும், வர லாற்று நிகழ்ச்சிகளுக்குப பொருள் தேட அவர் முயல்வதால், பாத் திரங்கள் பொருள் பொதிந்தவையாகவும், செயல்கள் ஆழ்ந்தவை யாகவும் விளங்குகின்றன. எடுத்துக் காட்டாக, பரியாரியின் மகனாகிய நொண்டி பசவன் வீர ராஜேந்திரனின் உயிர் நண்பன் என்று வரலாறு குறிப்பிடுகிறது. இது எவ்வாறு ஏற்பட்டது? வீர ராஜேந்திரனின் தந்தை இதற்கு எவ்வாறு இடங்கொடுத்தார் என் பதை அது விளக்குவதில்லை. இந்த நாவலில், நொண்டி பசவன், பாவத்தின் உருவாக அவனைப் பின்தொடர்கிறான். லிங்கராஜன் பகவதியிடம் தனக்குப் பிறகு அவளுடைய மகனே அரசன் எனப தாகக் கூறி நம்பவைத்து, ஏமாற்றி, குழந்தையின் காலை முறுக்கி விட்டபோதே விஷவித்து விதைத்தாகிவிட்டது. அரண்மனையின் பாவத்திற்குப் பலியாகி, பகவதி மடிகேரியில் நின்று விடுகிறாள்; பாவத்தின் பயனான பசவன் வீர ராஜேந்திரனைப் பாவப் பாதையில் அழைத்துச் செல்கிறான்.

'ஸ்ரீநிவாச' சூழ்நிலையையும் அதில் பங்குகொள்ளும் சில பாத்தி ரங்களையும் முதலில் காண்கிறார். பாத்திரங்கள் நடந்துகொள்ளும் விதத்திலிருந்து சூழ்நிலை உருவாவது ஓடும் நீரிலிருந்து பருவடி வான பனிக்கட்டி உண்டாவதுபோல என்றும், அந்தப் பருவடிவிலி ருந்து நீர் உருக உருமாறி ஓடுவதைப் போன்றது சூழ்நிலையிலிருந்து பாத்திரங்கள் உண்டாவது என்றும் அவர் வருணிக்கிறார்.

மனத்தில் மிக ஆழமாகப் பதிந்துவிடும் பெருங்காட்சிகள் 'ஸ்ரீநிவாச'ரின் நாவல்களில் மிகவும் குறைவு, ஆனால், ஒவ்வொரு பேச்சிலும் பாத்திரங்களின் மனப்போக்கு, அந்தப் போக்கை நிறுவும் சொற்கள், அந்தச் சொற்கள் பிறர்மீது உண்டாக்கும் விளைவு இவையனைத்தையும் மனத்தில் பதியுமாறு செய்து, நாம் நடப்பு உலகில் நின்றும், அதன் வெளியில் இருந்தும், பாத்திரங்களையும் நிகழ்ச்சிகளையும் சீர்தூக்கிப் பார்க்குமாறு செய்யக் கூடியவர் அவர். இந்த உலகில் மனிதர்களின் பலவீனங்கள், அந்தப் பலவீனங்கள் அவர்களே எதிர்பார்த்த முறையில் அவர்களுடைய வாழ்க்கையையும் அரசின் வாழ்க்கையையும் சீர்குலைத்து அழிவுக்காளாக்கும் முறை முதலியவை அவாது நாவல்களில் தெளிவாகத் தெரிகின்றன. அவர்களுடைய பலவீனங்கள் ஆற்றிய செயல்களே, பேசுவித்த பேச்சுக்களே கொடிகொடியாகக் காலைச் சுற்றிப் பிணித்துக் கொள்கின்றன 'சென்ன பசவ நாயக்க'னில் நேமய்ய, 'சிக்கவீர ராஜேந்திர'னில் லட்சுமிநாராயணய்ய ஆகிய இருவரும் அரசின் கடமைகளில் தான், தனது என்பவற்றை முழுதும் மறந்த, மனித சக்திக்குமீறிய ஆற்றல் கொண்டவர்களல்ல என்றாலும், தன்னலம் என்னும் மஞ்சு கவியாதவாறு, தூய்மையான அறிவுடன் எதிர்காலத்தில் நிகழக் கூடியதைக் காணவல்லவர்கள். இவர்களுடன் தொடங்கி, வீரம்மாஜி, நம்பய்ய, வீரராஜேந்திரன், நொண்டிபசவன் வரை மையக் காட்சிக்குத் தேவையான விளைவுகளைக் காட்டும் பாத்திரங்களைத் தொடர்ந்து அடுக்கிக் கொண்டேபோகிறார், நாவலாசிரியர். நிகழ்ச்சிகள், பாத்திரங்கள் — அனைத்தையும் மீறிய பேராற்றல் ஒன்றுண்டு என்பது குறிப்பாகத் தெரிகிறது. இன்ப துன்பங்களால், விருப்பு வெறுப்புக்களால் கொதித்தெழும் பாத்திரங்களினிடையே நிலையாக நின்ற—'சென்ன பசவநாயக்க'னில் வரும்—ஐயா,—'சிக்க வீர ராஜேந்திர'னில் வரும்—தீட்சிதர் இருவரும் இதன் பிரதிநிதிகள். ஆனால் இந்தப் பேராற்றலின் இருப்பு மிக நுண்மையாக, கலைச் சிறப்போடு குறிக்கப்படுகிறது: இதைச் சில பாத்திரங்களின் நம்பிக்கை என்றே நாம் நினைக்குமளவுக்கு நுண்மையாக இது கையாளப்பட்டிருக்கிறது. வாழ்க்கைக்கு வெளியே விலகி நின்று, கலங்காத மனத்தைக் கொண்ட பெரியவர்களையும், வாழ்க்கையில் இருந்துகொண்டே கணவன்—மக்களின் நலனுக்காகத் தம்மை வழங்கி விட்டு, பக்குவமடைந்தவர்களாகத் திகழும் பெண்ஞானிகளையும் படைத்துத் தருகிறார் 'ஸ்ரீநிவாச'. (சுப்பண்ணனின் மனைவி லலிதா, நாயக்கனின் மனைவி சாந்தவ்வை, வீர

ராஜனின் மனைவி கவுரம்மாஜி—இவர்களிடையே உள்ள ஒற்றுமை யைக் கவனிக்க) அரசுகளின் ஏற்றத்தாழ்வுகள், அரசன் அரசியர் முதல் பொது மக்கள் வரை பலருடைய வாழ்க்கையிலும் ஏற்பட்ட ஏற்றத்தாழ்வுகள் ஆகியவற்றோடேயே, உயிரின் பயணத்தில் பல நிலைகளை எட்டிய பல்வேறு பாத்திரங்களின் வருணனையும் இணைந்து, எழுத்துக்கு ஒரு பெரும் சிறப்பு ஏற்படுகிறது. 'ஸ்ரீநிவாச' பாத் திரத்தை விட்டு விலகி நின்று, அதன் சாதனையைக் கணிக்க வல்லவர்; கூடவே இருந்து அதன் துன்பங்களை அநுபவிக்கவும் வல்லவர். வீரம்மாஜி, வீரராஜேந்திரன் இருவரும் இந்த அநுதா பத்துக்குப் புறம்பானவர்களல்லர். வரலாற்று நாவல்களில் 'ஸ்ரீநி வாச'ரின் சிறந்த சாதனை இதுவே' பாத்திரங்கள் தம் காலத்துக்கேற்ற முறைமை, மதிப்பீடுகளுக்குப் புறம்பாக நடந்துகொள்ளமாட்டா; பேசவும் மாட்டா; ஆனால் அவை தம்காலத்துப் பிரதிநிதிகளாக, பழம்பொருட் காட்சியில் உள்ள உருவங்களாக விளங்குவதற்குக் காரணம், வாழ்வில் ஒளியை நோக்கி அல்லது இருளை நோக்கி நடந்த - அறிவுடைய - உயிர்கள் அவை என்பதுதான். இந்தப் பாத்திரங்கள் மொழியைக் கையாளும் முறை, அவை தம் உள்ளுலக (ஆனம)ப் பயணத்தில் எட்டிய தொலைவைக் காட்டி நிற்கிறது. (வீரராஜேந்திரன் ஒரு முறை கோபத்தோடு லட்சுமிநாராயணய்யனை நோக்கி 'ஐயா, நீங்கள் பிராம்மணர், உயிரை வேண்டுமானாலும் விட்டுவிடுவீர்கள், ஆசாரத்தை விடமாட்டீர்கள், அல்லவா? என்று கேட்கிறான். இது வெறும் ஆசாரத்தின பிரச்சினை மட்டுமன்று. மதிப்பீடுகளுக்கும் மனிதர்களுக்கும் உள்ள தொடர்பு பற்றிய பிரச் சினை என்பதை அவன் அறிந்திருக்கவில்லை.) 'ஸ்ரீநிவாச'ரின் நாவல் களில் பல இடங்களில் பல்வேறு நோக்கங்களை ஒன்றுக்கொன்று வேற்றும் வகையில் மொழி வேலை செய்வதைத் தனியாக எடுத்துச் சொல்வதே மகிழ்ச்சிக்குரிய ஒரு முயற்சியாகும்.

—எஸ். எஸ். சேஷகிரி ராவ்

முன்னுரை

1

பாரத நாட்டின் பலவகைச் சிறப்புக்களின் ஒரு முக்கிய அம்சம் அது ஒரு தேசத்தின் அடக்கத்தோடு ஒரு கண்டத்தின் விசாலத்தையும் பெற்றிருப்பது எனலாம். "கங்கே ச யமுனேச் சைவ கோதாவரி சரசுவதி நர்மதே சிந்து காவேரி ஜலேஸ்மின் சந்நிதிம் குரு" என்று நமது பெரியோர்கள் தமது ஏழு புண்ணிய நதிகளை தினமும் ஒரு முறையாவது ஸ்நாநத்தின்போது ஸ்மரித்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் அவ்வாறு ஸ்மரணை செய்துகொண்டிருந்தவர்களில் கங்கையைப் பார்த்தவன் காவேரியையும் பார்த்திருந்ததும், காவேரியைப் பார்த்தவன் கங்கையைப் பார்த்திருந்ததும் ஆயிரத்தில் ஒருவன் கூட இருக்கமாட்டான். இவ்வளவு விசாலமான இந்த பூமி தர்மம், நீதி, பண்பாடு இவை காரணமாக எவ்வளவோ ஆண்டுகளாக ஒன்றாக இருந்துவந்தபோதிலும் அரசாட்சி ஒன்றாக ஆனது சமீப காலத்தில்தான். ஒவ்வொரு பிராந்தியமும் தத்தம் வாழ்க்கையை வாழ்ந்து வந்தன; ஒவ்வொரு பிராந்தியத்திலும், சில வேளைகளில் ஒரே பிராந்தியத்தின் பல பாகங்களில், வெவ்வேறு அரச குடும்பங்கள் இருந்து ஒவ்வொரு பிராந்தியத்தின் சரித்திரமும் ஒரு நாட்டின் சரித்திரத்தைப்போல பிரம்மாண்டமாக இருக்கிறது. இதற்கு மிகச் சிறந்த உதாரணம் ராஜபுத்திர ஸ்தானம். ராஜபுத்திரஸ்தானங்களின் அந்த இருப்பிடம் பாரத பூமியின் ஒரு சிறு பகுதி; ஆனால் அதற்குள்ளாக இருபது பகுதிகள் இருக்கின்றன; ஒவ்வொன்றின் சரித்திரமும் ஒரு நாடடின் சரித்திரத்தைப்போல விஸ்தாரமாகவும் புகழ் வாய்ந்ததாகவும் விளங்குகிறது. வீரம், தர்மம், தேஜஸ், சிரத்தை இவைதான் அந்த பூமியில் எவ்வளவு செழிப்பாக வளர்ந்தன! கூடவே கெட்ட எண்ணங்கள், அவிவேகம், சுயநலம், பேராசை இவைகளும் எவ்வளவு அதிகமாக இருந்தன! "பஹுரத்ன வசுந்தரா" என்பது உண்மையே; பாரத பூமியைப் பொறுத்த வரையில் இது மிகவும் உண்மையான பேச்சு. ஒரு பிராந்தியமாக வாழ்ந்த அதன் எந்த பாகத்தை எடுத்துக்கொண்டாலும் அதன் சரித்திரம் புகழ் எய்தியதாகவும், கவனத்தை ஈர்ப்பதாகவும், வழிகாட்டியாகவும் இருக்கிறது.

இந்த மூன்று வகையிலும் சிறந்தது என்று சொல்லக்கூடிய சரித்திரத்தைப் பெற்றிருப்பது சிறிய நிலப்பரப்பான குடகு. பம்பாயில் ஆரம்பிக்கும் சஹ்யாத்ரி மலைத்தொடர் தெற்குமுகமாக நீண்டு, வழிநெடுக மேற்குக் கடலைப் பார்த்தவாறு உயரத்தின்மேல் உயரமாக வளர்ந்து, நீலகிரியில் முடிவடையும் முன்னர் குடகுப் பிரதேசத்தில் வடமேற்கிலுள்ள புஷ்பகிரியிலிருந்து தாவளகேரி மூரு நாட்டின் பிரம்மகிரி வரையில் ஐந்து யோசனை நீளமுள்ள மலைத்தொடராக விளங்குகிறது. இவ்வளவு நீளத்தில் மலை குறுக்காக இரண்டு மூன்று யோசனையளவு பூமியில் பரந்து நின்று இங்கே இறங்கியும் அங்கே ஏறியும் ஒரு மலைக் கூட்டத்தையே ஏற்படுத்தியுள்ளது. இவைகளில் பெயர் பெற்ற பல குன்றுகள் உள. புஷ்பகிரியிலேயே இரண்டு குன்றுகள்; மடிகேரிக்குப் பக்கத்தில் கோட்டைமலை; எல்லாவற்றையும்விட உயரமான தடியண்டமோளு; பிரம்மகிரியின் ஹுய்யாலெ மலை, தேவசிமலை; நால்குநாட்டின் தும்பை மலை, இக்குதப்பன மலை; கடியத்துநாடின சோமன—மலை. இவை யெல்லாம் உயரமான சிகரங்கள்; போட்டி போட்டுக் கொண்டு ஒன்றையொன்று மீற முயற்சிப்பதுபோல் உயர்ந்து நிற்கின்றன.

குடகு காவேரியின் பிறந்த ஊர். நதி பிரம்மகிரியில் தோன்றி தென் கிழக்காக சித்தாபூர் வரையில் பாய்ந்து, அங்கிருந்து வட கிழக்காக சிரியங்கள வரையிலும் குடகு நாட்டில் பாய்கிறது. மத்தியில் தடியண்டமோளிலிருந்து பாய்ந்து வரும் கக்கபை; சோமன மலையிலிருந்து பாந்துவரும் கரட; ஹெக்களத்திலிருந்து வரும் கதனூர் ஆறு, பெப்பு நாட்டில் அருகிலிருந்துவரும் கும்மை ஆறு, எடநால்கு நாட்டில் கக்கோடு நாட்டிலிருந்து முத்தாரமுடி, ஹொரூர் நூரொக்கலிலிருந்து சிகலி; கக்கெசோரனின் ஆறுகளும், மாதாபுரம் ஹட்டெ ஆறுகளும் சேர்ந்து வளர்ந்த ஹாரங்கி குசால நகரத்துக்கு வடக்கே: இவ்வாறு பத்து பக்கங்களிலிருந்து பல சிற்றாறுகள் இதனுள் பாய்ந்து இதை வளர்க்கின்றன. ஹேமாவதி நதி இந்த நாட்டு நீரால் வளர்ந்து, நாட்டின் வடக்கு எல்லையாக அமைந்தும், இதன் மலைகளிலேயே தோன்றிய லக்ஷ்மண தீர்த்தம் வடகிழக்காகக் காடு மலைகள் நிறைந்த பிரதேசத்தில் ஓடி நாட்டின் எல்லைக்கப்பாலும், காவேரி நதியோடு கலக்கின்றன.

ஐந்து யோசனை நீளம் மூன்று யோசனை அகலமுள்ள இந்த மலைநாடு ஒரு விசேஷமான ஜனக்கூட்டத்தாரின் இருப்பிடமாக இருந்து வந்திருக்கிறது. அவர்கள் தான் குடகர்கள். இந்த

ஜனங்கள் ஒரு கூட்டமாக வாழ்ந்து ஒரு வாழ்க்கையை நடத்திய தில் இவர்களின் இருப்பிடம் தானாக வேறொரு விதமான நாடா யிற்று. நாட்டின் விசேஷ வாசிகளானாலும் குடகர்கள் இந்த நாட்டை என்றைக்கும் ஆண்டதாகத் தெரியவில்லை. குடகர் களல்லாத அநேக அரச குடும்பங்கள் இங்கே அரசாண்டன. கதம்ப, கங்க, சோழ, சாளுக்கிய, ஹொய்சள வம்சங்கள் இதன் மீது தமது ஆதிக்கத்தைச் செலுத்தியுள்ளன. கடைசியாக இக் கேரி அரச வம்சத்தைச் சேர்ந்த ஒரு உத்தினி இங்கே வந்து பழைய ராஜ குடும்பத்தை நிர்மூலமாக்கிவிட்டு மக்களின் விருப்பத் திற்கிணங்க தானே அரசனானான். அவனது வம்சம் இருநூறு வருஷங்களுக்கு மேல் நடைபெற்றது.

ஒரு பக்கம் மைசூர், ஒரு பக்கம் மலையாளம், ஒரு பக்கம் மங்க ளூர் அரசாங்கங்கள் இருந்ததனால் இவைகளின் இடையே இருந்த குடகின் அரசர்கள் தங்கள் சுதந்திரத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்காக வெகுவாகப் போரிடவேண்டியதாயிற்று. இது மலைக்காடானதால் வெளிராஜ்யங்கள் இவர்களைத் தோற்கடிப் பது இல்லாமற்போயிற்று. தொட்ட வீர ராஜேந்திரன் என்ற இந்த வம்சத்து மன்னன் மிகவும் சிறப்புடன் அரசாண்டு, தன் காலத்து மற்ற மன்னர்களின் மதிப்பைப் பெற்றிருந்தான்.

தொட்ட வீர ராஜேந்திரன் தனக்குப் பிறகு தனது மகள் தேவம்மாஜி ஆட்சிபுரிய வேண்டுமென்று விரும்பினான். தேவம் மாஜி பட்டத்திற்கு வந்தாள். ஆனால் அவளது தம்பி லிங்க ராஜன் இது கூடாதென்று பிடிவாதம் செய்து முதலில் தான் திவானாக வந்து, பிறகு தேவாம்மாஜியைப் பட்டத்திலிருந்து நீக்கி, தானே அரசனாகிவிட்டான்; ஒன்பது வருடங்கள் அரசாண்ட பின்னர் மடிந்தான். அப்பொழுது இருபது வருடங்கள் நிரம்பிய வனாக இருந்த அவனது மகன் சிக்க வீர ராஜன் அரசனானான்.

குடகின் இந்த ராஜ வம்சத்தில் இவன் கடைசி அரசன். இவ னது ஆட்சியின் பதினான்காவது வருடத்தில் குடகு ஆங்கிலேயரின் வசமாயிற்று. சிக்கவீர ராஜன் தனது வம்சத்திற்குப் புகழ் தேடித் தரவில்லை; அவனது கடைசி வருட அரசாட்சிதான் நமது கதை யின் வஸ்து.

2. அறிமுகம்

2

சீகசம்வத்ஸரம் ஆயிரத்து எழுநூற்று ஐம்பத்தைந்து விஜய. மடிகேரி அரண்மனையில் உள்புறத்து ஒரு மூலையிலுள்ள மூன்று அறைகள்; அவைகளுக்கு ஒரு கதவு; அந்தக் கதவு பூட்டப்பட்டிருந்தது. சேவகன் ஒருவன் மத்தியான வேளையில் விடுதியிலிருந்து சாப்பாட்டுத் தட்டு ஒன்றை ஏந்திக்கொண்டு அந்தக் கதவருகே வந்து நின்றான். அந்த நேரத்துக்குச் சரியாக ஒரு நொண்டி சாவிக்கொத்து ஒன்றைக் கையிலெடுத்துக்கொண்டு அங்கே வந்தான்; கொத்திலிருந்து ஒரு சாவியைப் பொறுக்கி எடுத்துப் பூட்டைத் திறந்தான்.

அறைக்குள் நுழைந்து அவன் கதவருகே நின்றிருந்த சேவகனுக்கு ஜாடை காட்டி உள்ளே வரச் சொன்னான். சேவகன் தான் கொண்டுவந்திருந்த சாப்பாட்டுத் தட்டுகளோடு உள்ளே சென்று நின்றான்.

நொண்டி கடுகடுப்பான குரலில், "சாப்பாடு வந்திருக்கிறதம்மா, எடுத்துக்கொள்ளுங்கள்" என்றான்.

மூலையில் உட்கார்ந்திருந்த யுவதி, "உனக்கும் உன் சாப்பாட்டுக்கும் நெருப்பு வைக்க; தொலைந்து போ இங்கிருந்து, நீ இங்கே வராதே," என்றாள்.

"அப்படியானால் இன்றைக்கு நீங்கள் சாப்பிடப் போவதில்லையா?"

"நான் சாப்பிட்டால் என்ன, சாப்பிடாவிட்டால் என்ன? அதைக் கட்டிக்கொண்டு உனக்கு என்ன ஆகவேண்டும்? உன் வேலையை நீ பார்."

"மறுபடியும் உணவு வேண்டுமென்றால் கிடைக்காது."

"டேய், நீ போடா, பேசாதே. சாப்பாடு வேண்டினார்களாம் இந்த முட்டாளிடம்!"

இந்தச் சமயத்தில் சுமார் பதினான்கு வயதுப் பெண் ஒருத்தி கதவருகே வந்து நின்றாள்; இவர்கள் பேசுவதைக் கேட்டு முகம் சுளித்துக்கொண்டு வேகமாக உள்ளே நுழைந்தாள்.

நொண்டி அந்தப் பெண்ணை அங்கே எதிர்பார்க்கவில்லை என்று தோன்றுகிறது. "ஐயோ, அம்மா, உங்களை யார் இங்கே விட்டார்கள்? போங்க, போங்க, அப்பாஜி பார்த்தால் எங்களையெல்லாம் வெட்டிப் போட்டுவிடுவார்," என்றான்.

அந்தப் பெண், "வெட்டிப் போடட்டும் வேண்டுமானால்; நான் அத்தையின் அருகில்தான் இருப்பேன்" என்றாள்.

நொண்டி சேவகனை நோக்கி, "ஏய், வரும்போது இந்தக் கதவை சாத்திக்கொண்டு வரச் சொன்னேனே, திறந்து வைத்துவிட்டு வந்திருக்கிறாயே, சனியே," என்று திட்டிவிட்டு, அந்தப் பெண்ணைப் பார்த்து, "அம்மா! உங்களைக் கும்பிடுகிறேன், இனி புறப்படுங்கள். வேண்டுமானால் அம்மாவிடம் ஒரு வார்த்தை சொல்லி விடுங்கள். ரொம்பவும் நேரம் செல்லக் கூடாது. அப்பாஜி பார்த்துவிட்டால் மிகவும் தொந்தரவு ஏற்படும்" என்றான்.

நொண்டியின் பேச்சில் கைதியைக் குறித்து சிறிது கௌரவம் நிரம்பிய தாட்சண்ணியம், அந்தப் பெண்ணைக் குறித்து சலுகையோடு கூடிய அன்பு, சேவகனைக் குறித்து கொழுப்பு நிறைந்த திமிர், குரூரம் இவை காணப்பட்டன.

பெண், "அப்பாஜி வரட்டுமென்பதற்காகவே நான் இங்கே வந்தேன். அப்பாஜி வரவேண்டும். அம்மாவும் வரவேண்டும். நான் அத்தையை விட்டுப் போகமாட்டேன்." என்றாள்.

நொண்டிக்கு கோபம் நெற்றிக்கேறியது. அவன் சேவகனை மறுபடியும் திட்டி அவன் கன்னத்தில் அறைந்தான். "சனியனே, கதவை சாத்திக்கொண்டு வாடா என்றால் அப்படியே வந்திருக்கிறாயா? கழுதை, இரு உனக்குச் சரியான வழி வைக்கிறேன்," என்று பல்லைக் கடித்தான். பெண்ணைப் பார்த்து சிறிது அதட்டும் குரலில், "அப்படியானால் அப்பாஜியை அழைத்துக்கொண்டு வரட்டுமா?" என்றான்.

சேவகன், "பாருங்கம்மா உங்களாலே! நான் முடியாது என்று சொல்லியும் கதவை மூடாமல் செய்துவிட்டீர்கள். உங்கள் பேச்சைக் கேட்டு இப்பொழுது நான் சாகிறேன்," என்றான்.

அந்தப் பெண், "சரி. நீ தூரப்போய் நின்றுகொள். மறுபடியும் நொண்டியின் கையில் அகப்படாதே. அவன் மறுபடியும் உன்னைத் தொடாமல் நான் பார்த்துக்கொள்கிறேன்," என்று

அவனிடம் சொல்லிவிட்டு, நொண்டியிடம், "போ, அப்பாஜியை அழைத்துவா," என்றாள்.

பேச்சோடு பேச்சாக அவள் தன்னை நொண்டி என்று சொல்லி விட்டாளே என்று அவனுக்குக் கோபம். அவன் அவளை முறைத்துப் பார்த்தான். ஒரு கணம் அப்படியும் ஒரு கணம் இப்படியுமாகப் பார்த்து ஏதோ யோசனை செய்தான். விருப்பமில்லாத ஒரு காரியத்தைச் செய்கிற வகையில் வெளியே அடிபெடுத்து வைத்தான்.

அங்கே மற்றொரு ஸ்திரீயின் உருவத்தைக் கண்டதும் நொண்டி தலை குனிந்து கைகூப்பினான். "இங்கே யாரையும் விடாதே என்று அரசர் உத்தரவு. சின்னம்மா வந்ததே தவறு. இனி அம்மா அவர்களும் உள்ளே சென்றால் என்ன கதி?" என்றான்.

"அரண்மனையில் நான் இங்கே போகலாம், அங்கே போகக் கூடாது என்று நீ எனக்குச் சொல்லுகிறாயா பசவய்யா?" என்று அவள் சாந்தமான முகபாவத்துடனும் கம்பீரமான குரலிலும் கேட்டாள்.

அவள் குடகின் ராணி கௌரம்மாஜி. அவளது அந்த முகத்தைக் கண்டும், குரலைக் கேட்டும் நொண்டி நடுங்கினான்.

"மன்னரின் உத்தரவு என்று சொன்னேன் அம்மாஜி. அவர் கோபித்துக்கொண்டால் யாரால் தடுக்க முடியும்?"

"சரிதான். அவரைச் சமாதானப் படுத்துவது என் பொறுப்பு. இப்பொழுது நான் உள்ளே போகவேண்டும்."

"உத்தரவு அம்மா."

கௌரம்மாஜி முன்னால் நடந்து அறைக்குள் நுழைந்தாள். பசவன் அவள் பின்னால் சென்று கதவருகே நின்றான்.

ராணி உள்ளே நுயையும்பொழுதே அந்தப் பெண் ஓடிவந்து அவள் கையைப் பிடித்துக்கொண்டு, "அம்மா, அத்தை சாப்பிட மாட்டேனென்கிறார். நீங்களாவது சொல்லுங்கள், சாப்பிடட்டும்,' என்றாள்.

மூலையிலிருந்த யுவதி அழுதவாறு முகத்தை மறைத்துக் கொண்டு உட்கார்ந்திருந்தாள். ராணி அவளருகில் சென்று "என்னக்கா இது? பசவய்யா ஏதாவது சொன்னானா?" என்று கேட்டாள்.

யுவதி அழுதுகொண்டே, "பாருங்கள் மன்னி, அண்ணா 'நீ யாரால் கர்ப்பம் தரித்தாய்?' என்று கர்ணகடூரமாகப் பேசி

இந்த நொண்டியின் தொடைமீது உட்கார வைக்கிறேன் என்றார் ராத்திரி. ஒரு வருடம் சிறையில் இருந்தாயிற்று. இனி எதற்காகப் பிழைத்திருக்க வேண்டும்? செத்துப்போனால் எல்லோரும் சந்தோஷமாக இருப்பார்கள் என்று தோன்றுகிறது. நான் இனி சாப்பிடப் போவதில்லை," என்றாள்.

பெண், "சாப்பிடாவிட்டால் வயிற்றிலிருக்கும் பாப்பா என்ன செய்யும்?" என்றாள்.

ராணி: போகட்டும். என்னவானாலும் பிறந்த வீடு விளங்க வேண்டாமா? பொறுத்துக்கொள்ளத்தான் வேண்டும். தந்திரமாகத் தப்பிச் செல்ல வேண்டியதுதான். அவர் கெடுதல் செய்தார் என்பதற்காக நாம் கெடுதல் செய்துகொண்டால் வீட்டுக் கல்லவா மகளைக் கொன்ற பாவம் சூழ்ந்துகொள்ளும்?

யுவதி: மகளைக் கொல்வது இந்த வீட்டுக்குப் புதிதல்ல. பத்து மக்கள் இப்படியே செத்திருக்கிறார்கள். நான் பதினொன்றாவதாக இருந்துவிட்டுப் போகிறேன்.

பெண் தன் தாயாரிடம், "அம்மா, இன்றைக்கு அத்தையை அவர்கள் ஊருக்கு அனுப்பிவிட வேண்டும். இல்லாவிட்டால் நான் சாப்பிடப் போவதில்லை" என்றாள்.

பசவன் இதற்குள்ளாக சேவகனிடம் அரசருக்குச் சொல்லியனுப்பிவிட்டான். 'தங்கை சிறை வைக்கப்பட்டிருக்கும் அறையில் ராணியும் மகளும் ஏதோ வாதம் செய்து கொண்டிருக்கிறார்கள்; உடனே வரவேண்டும்' என்று சொல்லச் சொல்லியிருந்தான். அதைக் கேட்டவுடன் வீரராஜன் மிகுந்த கோபம் கொண்டு வேகமாக அங்கே ஓடோடி வந்தான்.

3

வீரராஜன இன்னும் இளைஞன். முப்பத்தைந்து வருடம் கூட இல்லை. ஆனால் அவன் வாழ்ந்த வாழ்க்கையின் பலனாக அந்த முகத்தில் அநாரோக்கியத்தின் சின்னங்கள் நிறைந்து மூப்பின் லட்சணங்கள் தோன்றியிருந்தன. இளைய உடலில் முதிய கண்கள், பார்வையில் குரூரம் மேலோங்கி யிருந்தது.

தந்தை வருவதைத் தொலைவிலிருந்தே பார்த்து விட்ட மகள் அவன் கோபமாக இருக்கிறான் என்பதை அறிந்தும் லட்சியம் செய்யாமல் அவனை நோக்கி ஓடினாள்; அவன் கையைப் பிடித்துக் கொண்டாள்.

"அப்பாஜி, பசவய்யா என்ன சொன்னாரோ என்னவோ, அத்தை சாப்பிட மாட்டேன் என்று உட்கார்ந்திருக்கிறார். அவரை அவர் வீட்டுக்கு அனுப்பிவிடுங்கள்," என்றாள்.

வீர ராஜன் அந்த வார்த்தைகளைக் காதில் போட்டுக் கொண்ட தாகத் தெரியவில்லை. அவனுக்கு ஒரே கோபம். தனது உத்தர வில்லாமல் இவர்கள் இங்கே எப்படி வந்தார்கள்? "நீ ஏன் இங்கே வந்தாய்? யார் உன்னை வரச்சொன்னார்கள்?" என்று அவளை அதட்டிவிட்டு முன்னால் சென்றான். அறைக்குள் சென்று ராணி யைப் பார்த்து, "உன்னை யார் இங்கே வரச் சொன்னது? இருக் கிற இடத்தில் மரியாதையாக இருந்துகொண்டிருக்கவேண்டும். என்னைக் கேட்காமல் யாரும் இங்கே அடி எடுத்து வைக்கக் கூடாது," என்று கர்ஜித்தான்.

கௌரம்மாஜி அவனுக்குப் பதில் சொல்லவில்லை. பசவனை யும் சேவகனையும் பார்த்து, "கதவுக்கு வெளியே சென்று இருங் கள்" என்று சொன்னாள்.

வீரராஜன், "ஏய், நீங்கள் இங்கேயே இருங்கள்" என்று அவர் களிடம் சொல்லிவிட்டு, "கதவுக்கு வெளியே நீதான் போகவேண் டும்" என்றான்.

"என் எஜமானர் எனக்கு என்ன கட்டளை வேண்டுமானாலும் இடலாம். அதைக் கேட்டுக்கொண்டு ஆட்கள் எதிரே நிற்க வேண்டுமா?"

"ஆமாம், இருக்கவேண்டும். என் பேச்சைமீறி நடக்கும் பெண்ஜாதி என் பெண்ஜாதி அல்ல. தாசி."

"கை பிடித்த மனைவி தாசியானால், வயிற்றில் உதித்த மகள் என்னவானாள்? அவளையும் ஆட்களின் எதிரே தண்டிக்க வேண்டுமா?"

"நான் செய்கிற காரியத்தைப்பற்றிக் கேட்க வேண்டியவளல்ல நீ. போ அப்பால்."

ராணி ராஜ கம்பீரத்துடன் பசவனையும் சேவகனையும் பார்த் தாள். சேவகன் ஏற்கனவே மெதுவாகக் கதவண்டை சென்று

விட்டான். ராணியின் பார்வைக்குப் பயந்து பசவனும் உபாயமாக கதவண்டை சென்று வேறுபுறம் முகத்தைத் திருப்பிக் கொண்டு நின்றான்.

ராணி: 'ஜாதகம், யோகம் சரியாக இல்லை. கம்சன், தேவகி கதை போல இருக்கிறது. ஜாக்கிரதை,' என்று தீட்சிதர் எச்சரித்தார். அதற்காக நான் இங்கே வந்தேன். இல்லாவிட்டால் இங்கே எனக்கென்ன வேலை? அண்ணாவாச்சு, தங்கையாச்சு.

"ஆமாம், உன் தீட்சிதன் ரொம்பத்தான் கண்டுவிட்டான். அந்தக் கிழம் சொன்னாலும், இவள் கேட்டாளாம். என்னைக் கேட்காமல் நீ இதையெல்லாம் செய்திருக்கிறாய்."

ராணி: நான் வந்ததும் தவறாக இருக்கலாம். ஆனால் மன்னருக்கும் மன்னர் மகளுக்கும் நல்லதாகட்டும் என்பதற்காகவே வந்தேன். என் தவறை மன்னிக்கவேண்டும். உங்கள் தங்கையை அவர் வீட்டுக்கு அனுப்பிவிடுங்கள்.

கௌரம்மாஜி கணவனிடம் பல சமயங்களில் கடுமையான பேச்சுக்களைக் கேட்டதுண்டு. குடிகாரனான அவள் கணவன் பிரக்ஞை இழந்தும் போதை தெளிந்தபொழுதும் சில சமயங்களில் அவளைக் கைதூக்கி அடித்ததும் உண்டு. ஆனால் அவள் ராணியின் பதவிக்குரிய பெருந்தன்மையை என்றும் மறந்ததில்லை. இன்றைக்கும் வழக்கமான அதே உறுதியுடன் கணவனை எதிர்த்துப் பேசினாள்.

வீர ராஜன் பல்லைக் கடித்துக்கொண்டு, "என்ன அவ்வளவு வாய் உனக்கு? எது செய்யவேண்டும், எது கூடாது என்பது எனக்குத் தெரியும். ஒரு வருடமாகச் சிறையில் கிடக்கும் உன் நாத்தி எப்படி கர்ப்பமானாள்? சொல், நாத்தியை இந்த நிலைக்கு வரச் செய்து கணவனின் வீட்டுக்கு அனுப்பப் போகிறாயா?" என்றான்.

இவ்வளவு நேரமும் தானாக ஒரு மூலையில் உட்கார்ந்து அழுது கொண்டிருந்த தேவம்மாஜி எழுந்து நின்றாள். பொறி பறக்கும் கண்களுடன் அண்ணனைப் பார்த்து, "என் மீது இப்படி அபாண்டம் சுமத்தும் நாக்கு அழுகிப் புழுத்துப் போகும். விவஸ்தை இல்லாமல் வாழ நானும் என் அண்ணாவை போன்றவள் அல்ல," என்றாள்.

"அண்ணாவைப் பற்றிய பேச்சை எடுக்காதே வேசி நாயே. எப்படி உனக்கு இந்த கர்ப்பம் வந்தது சொல். சொல்லாவிட்டால் உன்னைப் புலையர்களிடம் தள்ளி விடுவேன்."

ராணி கணவனை நோக்கி, "தகாத வார்த்தைகளைப் பேசவேண்டாம். மகளென்ன? தங்கையென்ன? இருவரும் நம் வீட்டுப் பெண்கள். அவர்களின் மரியாதையை நாம் காப்பாற்ற வேண்டும். தனியாகச் சிறையில் வாடுகிறாளே என்று நான் தான் மைத்துனரை ஒருநாள் இங்கே வரவழைத்தேன். அதில் என்ன தவறு? பெரியவர்கள் இந்த வீட்டில் சோபனம் நடத்தி வைக்கவில்லையா? அப்பொழுது அவர்கள் செய்த ஆசீர்வாதம் இப்பொழுது பலித்திருக்கிறது. சிறை என்று ஏன் சொல்லவேண்டும்? படுக்கையறை என்று நினைத்துக் கொள்ளுங்கள். நல்ல வார்த்தை சொல்லுங்கள். தங்கையை அவள் கணவன் வீட்டிற்கு அனுப்பிக் கொடுங்கள்" என்றாள்.

தன் கட்டளை இவ்வளவு தூரம் அலட்சியப்படுத்தப் பட்டிருக்கிறது என்று தெரிந்த வீர ராஜனின் கோபம் மண்டைக் கேறியது. அவன், "ஐயோ மூதேவி, என்னைக் கேட்காமல் அந்தக் கோட்டானை இங்கே உள்ளே விட்டாயா நீ? உன்னை என்ன செய்கிறேன் பார்," என்று கையை ஓங்கியவாறு அவளை நோக்கிப் பாய்ந்தான்.

அவனை அப்படியே விட்டிருந்தால் அவன் ராணியை என்ன செய்திருப்பானோ சொல்லமுடியாது; கொன்றிருந்தாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை. ஆனால் புண்ணிய வசமாக மகள் முழங்காவிட்டு அவன் தொடைகளைக் கட்டிக்கொண்டாள். அவன் தொடைகளில் தன் முகத்தைப் புதைத்துக் கொண்டு, "அப்பாஜி, வேண்டாம். அத்திம்பேரை உள்ளே விட்டவள் நான் தான்," என்று கூவினாள்.

இதை எதிர்பார்க்காத அவள் தந்தை கீழே விழுந்துவிட இருந்தான். எதிரே இருந்த ராணி ஓடி வந்து அவனைப் பிடித்துக் கொண்டாள். அவன் சமாளித்துக்கொண்டு நேராக நின்ற பிறகு அவள் விலகி நின்றாள்.

வீர ராஜனுக்கு மகள் மீதும் மிகுந்த கோபம். இருந்தாலும் அவன் அவளை ஒன்றும் செய்யவில்லை. மிகுந்த கடுமை, மிகுந்த குரூரம், நிர்த்தாட்சண்ணியம் நிரம்பிய அவன் சுபாவத்தில் ஒரு இழை மிருதுத் தன்மை இருந்தது. அது மகள் மீது அவனுக்கிருந்த ஒரு ஒட்டுதல்தான். மண்டியிட்டு உட்கார்ந்திருந்த மகளைப் பிடித்து எழுப்பி நிற்கவைத்து, "நீ ஏன் இந்தக் காரியத்தி

லெல்லாம் தலையிட்டாய், உன் பாட்டுக்கு நீ விளையாடிக் கொண்டிருப்பதைவிட்டு?'' என்று கேட்டான்.

மகள், ''அத்தையை அவர்கள் வீட்டுக்கு அனுப்பினால்தான் நான் சாப்பிடுவேன். இல்லாவிட்டால் சாப்பிடமாட்டேன்'' என்றாள்.

''என்ன பேச்சு இது மகளே! இவளா உன் அத்தை? அந்தக் கோட்டானா உன் அத்திம்பேர்? முடியுமானால் இந்த உன் அத்தை நாளைக்கே என்னைக் கொன்றுவிட்டு உன்னையும் தீர்த்துக் கட்டிவிட்டு, தானே ராணி ஆகிவிடுவாள். இந்தப் பாம்புக்குப் பால் வார்க்கிறேன் என்கிறாயே?''

மூலையிலிருந்த தேவம்மராஜி, ''ஏன் கூடாது? நீ அரசனாக இருக்கலாமென்றால் நான் ராணியாக இருக்கக் கூடாது? ஊர்க் கோடியிலிருக்கும் புலையர் பையன் உன்னைவிட நன்றாக அரசாள்வான். நான் ராணியானால் என்ன கெட்டுப் போய்விடும்?'' என்றாள்.

பேச்சு ஒன்றைவிட இன்னொன்று கடுமையானது. வீர ராஜன் தங்கையை அடிக்கப் போனான். ராணியும் மகளும் அவனைத் தடுத்தனர். ராணி, ''கர்ப்ப ஸ்திரீ, வீட்டுப் பெண் குழந்தை. என்ன வேணுமானால் சொல்லிக்கொண்டு போகட்டும். நாம் கேட்டுக் கொள்வோம். நமது தலைவிதி, பொறுத்துக் கொள்வோம். இந்த வீட்டில் அவளுக்கு எதாவது ஆயிற்று என்கிற கெட்ட பெயர் மாத்திரம் வேண்டாம்,'' என்று வேண்டினாள்.

மகள், ''அத்தே, நீங்கள் பேசாமலிருங்கள். ஒன்றுமே சொல்லாதீர்கள்,'' என்றாள்.

தேவம்மராஜி, ''பின் என்னைப் பற்றி ஏன் அபாண்டமாகப் பேச வேண்டும்? அண்ணனைக் கொன்று மருமகனைத் தின்று ராணியாக வேண்டும் என்று நான் என்றைக்குச் சொன்னேன்? ஊரையெல்லாம் பகைத்துக்கொண்டார், மகளுக்காவது பட்டம் கட்டுங்கள் என்று ஊரெல்லாம் சொல்லிற்று; நாங்களும் சொன்னோம். ஊர்ப் பகை உண்டா இல்லையா?'' என்றாள்.

வீர ராஜன், ''ஊர்ப் பகையைக் கண்டுவிட்டாள். கோட்டானின் மனைவியான இந்தக் கோட்டான், மருமகளுக்குப் பட்டம் கட்டவேண்டுமென்றுதான் பெங்களூருக்குக் கடிதம் எழுதினாயோ?'' என்றான்.

இந்தப் பேச்சு எங்கும் சென்று முடிவதாகத் தெரியவில்லை. எப்படியாவது அரசனை அவனது அறைக்கு அழைத்துச் சென்று

விட்டால் நல்லது என்று ராணிக்குத் தோன்றியது. மகளுக்கு அவ்வளவு விவரம் இல்லையென்றாலும் அவளும் அவ்வாறே யோசித்துக் கொண்டிருந்தாள். அவள் தந்தையை அணைத்துக் கொண்டு, "அப்பாஜி, உங்களுக்கு இப்பொழுது களைப்பாக இருக்கிறது. என்னோடு வாருங்கள். இந்தப் பேச்செல்லாம் அப்புறம் பேசலாம்" என்றாள்.

வீர ராஜனுக்கு என்ன தோன்றியதோ என்னவோ, மறுப்புக் கூறாமல் அவளுடன் அந்த அறையை விட்டு வெளியேறினான்.

4

ராணி கௌரம்மாஜி சேவகனை அழைத்து, "சாப்பாடு ஆறிப் போய்விட்டது, வேறு கொண்டு வா போ," என்று கூறி சூடான சாப்பாட்டைக் கொண்டு வரச் சொல்லி அவனை அனுப்பிவிட்டு தேவம்மாஜியிடம், 'அக்கய்யா, இனி இதை யெல்லாம் மறந்து விடு. இன்று உன்னை உன் வீட்டுக்கு அனுப்பிவிடுவார். உங்கள் பாட்டுக்கு நீங்கள் சுகமாக இருப்பீர்களாம்," என்றாள்.

தேவம்மாஜி, "நேற்று கேட்ட பேச்சு போதும் ஒரு ஜன்மத் துக்கு. இனி நான் சாவது தான் மேல்," என்றாள்.

ராணி: உடன் பிறந்தவர் பேச்சு. ஒரு நாள் கெட்ட பேச்சு பேசினதால் என்ன ஆகிவிட்டது? இன்னொரு நாள் நல்ல பேச்சு பேசுகிறார்.

தேவம்மாஜி: இனிமேல் நல்ல பேச்சு ஏது? அப்பாஜி இறந்ததுமே வீட்டில் நல்ல தெல்லாம் போய்விட்டது. பதினான்கு வருஷங்களில் ஒரு நாள் நல்ல பேச்சுக் கேட்கவில்லை.

ராணி: இப்பொழுது அப்படித் தோன்றுகிறது. நன்றாக இருந்த காலம் இல்லையா என்ன? அப்பாஜியவர்கள் இறந்ததும் நீயும் மைத்துனரும் உங்கள் அரண்மனைக்குப் போகிறோம் என்று சொன்னபோது உங்கள் அண்ணா, இது உங்கள் வீடுதான், இங்கேயே இருந்து விடுங்கள், என்று சொல்லவில்லையா?

தேவம்மாஜி: அப்பாஜி கொடுத்திருந்த நகை நட்டுக்கள் போய்விடுமோ என்பதற்காகத் தடுத்தார். நாங்கள் போய் விடப் போகிறோமே என்கிற துக்கத்தினால் அல்ல.

ராணி: இன்றைக்கு இப்படிச் சொல்லுகிறாய். உங்கள் இரு வருக்கும் இடையே இருந்த அன்பை நான் அறியமாட்டேனா? உன் அப்பாவின் தொடை மீது உட்காருவதைப் போலவே உன் அண்ணய்யாவின் தொடை மீது நீ உட்காருவாய்.

தேவம்மாஜி: அது தான் உங்களுக்கு ஆகவில்லையே மன்னி? அன்று நீங்கள் கோபித்துக் கொண்டீர்களே!

ராணி: அப்பொழுது தெரியாது. இப்பொழுது அதைப் பற்றி என்ன? என் வயிற்றிலும் ஒரு மகன் பிறந்திருந்து புட்டவ்வா அவன் மடிமீது உட்கார்ந் திருந்தால் வேண்டாம் என்று சொல்லி யிருக்கப் போகிறேன்? அவளாயிற்று அவளண்ணனாயிற்று. என்று பேசாமலிருப்பேன். உன் விஷயமும் அப்படியே.

தேவம்மாஜி: நீங்கள் நல்லவர். இதைப் புரிந்து கொண்டீர்கள். அண்ணய்யா உங்களைப் போல அல்ல. அவர் அன்பு கரைந்து போய்விட்டது; அவர் எங்களை வாழவிடமாட்டார்:

ராணி: வாழவிடமாட்டார் என்று கையை உதறிவிடக் கூடா தம்மா. சரிசெய்து விடுவோம் என்றே நடந்து கொள்ள வேண்டும்.

தேவம்மாஜி: நொண்டியின் தொடைமேல் உட்கார வைத் தாலும் சரி என்று பேசாமலிருக்கவேண்டும்?

ராணி இதற்குப் பதில் சொல்லுவதற்கு முன்னால் சேவகன் வேறு சாப்பாடு எடுத்து வந்தான். ராணி அவனை அதை அருகில் கொண்டு வரச் சொல்லி, பலகையைப் போட்டு தேவம்மாஜி யைப் பார்த்து, "வா அக்கய்யா, சாப்பாடு மறுபடியும் ஆறிப் போகப் போகிறது," என்றாள்.

தேவம்மாஜீ, "நீங்கள் எஜமானி, நான் உங்கள் பேச்சைத் தட்டுவதில்லை. ஆனால் நீங்கள் நொண்டியைத் தண்டிக்கத்தான் வேண்டும்," என்றாள்.

ராணி, "சரி" என்று சொல்லி அவளை எழுப்பி, கை அலம்பத் தண்ணீர் கொடுக்கச் செய்து தட்டின் முன்னால் அவளை உட்கார வைத்தாள். தேவம்மாஜி சாப்பிட்டு முடிந்ததும் சேவகன் தட்டை எடுத்துக்கொண்டு சென்றான்.

தேவம்மாஜி ராணியிடம், "நொண்டியிடம் மறுபடியும் ஒரு வார்த்தை சொல்லுங்கள். இல்லாவிட்டால் இன்று இரவு மறு படியும் உயிரை எடுத்து விடுவார்கள்," என்றாள்.

ராணி ஜாடையாலேயே தன் சம்மதத்தைத் தெரிவித்துவிட்டு நொண்டியைப் பார்த்து, "பசவய்யா, கொஞ்சம் இப்படி வா,' என்றாள்.

இது வரையில் வெளியே நின்றிருந்த நொண்டி உள்ளே வந்து கதவருகே நின்றான். ராணி அவனிடம், "நேற்று ராத்திரி அக்கய்யாவுக்குத் தொந்தரவு கொடுத்தாயாம். மறுபடியும் அப்படிச் செய்யப் போகிறாய் ஜாக்கிரதை," என்று கூறினாள்.

நொண்டி, "நேற்று மன்னர் ரொம்பவும் குஷியில் இருந்தாரம்மா. அதுவுமல்லாமல் தங்கையின் நடத்தையில் தவறு இருப்பதாக அவர் நினைத்தார். அதனால் அப்படிச் செய்தார்," என்றான்.

தேவம்மாஜி: அவர் குஷியில் இருந்தார். நான் நடத்தை கெட்டவள் என்று நினைத்தார். உனக்கென்ன வந்தது? அவர் சொன்னதே போதும் என்று 'தொடைமேல் உட்கார்' என்று என்னைக் கூப்பிட?

நொண்டி: எனக்கும் புத்தி நிலையில் இருக்கவில்லையம்மா. நான் என்ன செய்கிறேன் என்றே எனக்குத் தெரியாமல் இருந்தது.

தேவம்மாஜி: நீயும் குடித்திருந்தாய் என்பது உண்மையே. ஆனால் நீ நினைவை இழந்திருக்கவில்லை. அண்ணய்யனின் பேச்சையே சாக்காக வைத்துக்கொண்டு என்னோடு சரஸமாடினாய்.

என்று சொல்லி தேவம்மாஜி ராணியின் காதருகே சென்று எதையோ ரகஸ்யமாகச் சொன்னாள்.

அதைக் கேட்டு ராணியின் முகம் சிவந்தது. அவள் நொண்டியிடம், "மன்னர் தம் மனம்போல் நடக்கலாம்; அவருடைய ஆட்களும் அவரைப் போலவே நடக்க ஆரம்பிக்கக் கூடாது. பசவய்யா, மறுபடியும் இது போன்ற பேச்சு ஏன் காதில் விழுந்தால் உனக்கு நல்லதல்ல, உஷார்," என்று எச்சரித்தாள்.

நொண்டி: உத்தரவு, அம்மாஜி.

இரண்டு நிமிடங்கள் கழித்து ராணி தேவம்மாஜியிடம், "இன்றைக்கு நீ உங்கள் ஊருக்குப் போகலாம். அக்கய்யா, கவலைப்படாதே," என்று கூறி தன் அறையை நோக்கிச் சென்றாள். அவள் சென்ற பிறகு நொண்டி தேவம்மாஜியிடம், "மன்னர் உத்தரவம்மா. கதவைப்பூட்டி வைக்கிறேன். பூட்டி வைக்காவிட்டால் என் உயிர் என்னுடையதல்ல," என்று கூறி அறையின்

கதவைச் சாத்தி வெளியே பூட்டுப் போட்டான். ஒரு ஆளை அழைத்து கதவருகே காவலிருக்கச் செய்துவிட்டு தனது மற்ற வேலைகளைக் கவனிக்கச் சென்றான்.

5

அரண்மனையில் இவ்வளவும் நடைபெற்றுக் கொண்டிருந்த பொழுது சோமவார்ப்பேட்டை—மடிகேரி மார்க்கத்தில் இரண்டு வழிப் போக்கர்கள் மெதுவாக மடிகேரியை நோக்கி நடந்து கொண்டிருந்தனர். அவர்களில் ஒருவன் பெரியவன்; சுமார் அறுபது வருடங்கள் நிரம்பியது. மற்றவனுக்கு முப்பது வயதிற்கு ஒன்று அல்லது இரண்டு அதிகமாக இருக்கலாம். பெரியவனின் தலை மயிரின் பெரும்பாகம் நரைத்துப் போயிருந்தால் அவன் வயது தெரியும்படி இருந்தது. மற்றபடி அவன் முகத்தில் வயதின் அறிகுறிகள் ஏதும் காணப்படவில்லை. ஆனால் பிரகாசமான அவன் கண்கள் வாழ்க்கையில் அவன் எவ்வளவோ துன்பங்களை அனுபவித்தவன் என்பதைக் காட்டியது. சிறியவனின் ஜாடை பெரியவனைப் போலவே இருந்தது. இவர்களைப் பார்த்த உடன் இவர்களிருவரும் தந்தையும் மகனும் இருக்கவேண்டு மென்பதை யாரும் ஊகித்து விடலாம்.

இன்னொரு குன்று ஏறினால் மடிகேரி. சிறியவன் பெரியவனிடம், "இந்தக் குன்று ஏறிவிட்டால் மடிகேரி அப்பாஜி," என்றான்.

பெரியவன்: ஆமாம், அப்பய்யா. நினைவிருக்கிறது.

சிறியவன்: மடிகேரி சமீபத்தில் வரவர நீங்கள் அதற்குள் வர வேண்டாம் எனத் தோன்றுகிறது!

பெரியவன்: எனக்கும் அப்படியேதான் அப்பா. ஆனால் நமது சென்ன வீரன் என்ன ஆனான் என்று தெரிந்து கொள்ளவேண்டும். இந்த நிலத்தை நம்முடையதாக ஆக்கிக் கொள்ளவேண்டும் என்பதற்காகத்தான் இவ்வளவும்.

சிறியவன்: நம்முடையதல்லாமல் என்னவாகும் அப்பாஜி? இவனுடையதல்லாவிட்டால் இவன் தங்கையுடையது இல்லாவிட்டால் இவன் மகளுடையது. இதல்லாமல் வேறு என்ன ஆக முடியும்?

பெரியவன்: என்ன வேண்டுமானாலும் ஆகும், அப்பய்யா. மைசூர் என்னவாயிற்று பார்த்தாயா? வெள்ளையர்கள் கைக்குப் போய்விடவில்லையா?

சிறியவன்: மக்களைச் சமாதானப் படுத்தி மறுபடியும் அரசர் கையில் ஒப்படைத்துவிடுவதாகச் சொல்லுகிறார்களே.

பெரியவன்: மூன்று வருஷங்கள் ஆயிற்று, இன்னும் கொடுக்கவில்லை. எப்பொழுது கொடுப்பது? கொடுக்கிறோம் என்று ஒருவன். கொடுத்தால் மக்களுக்குத் துன்பம் என்று இன்னொருவன். இவர்களில் யார் பேச்சை நம்புவது? அரசரின் சொத்து வெள்ளையர்களின் கையில். திரும்பி வந்த பிறகு தானே இவருடையது என்று சொல்லமுடியும்?

சிறியவன்: அங்கே மன்னருக்குக் குழந்தைகளில்லையல்லவா அப்பாஜி?

பெரியவன்: இருந்தால் அவர்களுக்குக் கொடுத்துவிடப் போகிறார்களா? கொடுத்தாலும் பெயருக்குக் கொடுப்பார்கள், உண்மையில் அவர்களிடம்தான் நாடு இருக்கும். வேலைக்காரன் சோறு நாய் வாயில், அதை அவனுடையதென்றால் என்ன, அதனுடையது என்றால் என்ன?

சிறியவன்: என்னவோ இந்த வெள்ளையர்களுடையது எல்லாமே தந்திரம் அப்பாஜி.

பெரியவன்: அது சரி. தந்திரசாலிகள் என்றால் அவர்கள்தான். தந்திரம் கற்கவேண்டுமென்றால் வெள்ளையர்களிடம்தான்.

சிறியவன் இதற்கு உடனே பதில் சொல்லவில்லை. நாக்கு நுனி வரையில் வந்துவிட்ட பதிலை அடக்கிக்கொண்டு ஏதோ யோசித்தபடி நடந்துகொண்டிருந்தான்.

இந்தச் சம்பாஷணையிலிருந்து இவர்கள் குடகின் அரச வம்சத்தைச் சேர்ந்தவர்கள் என்பதை ஊகித்திருக்கலாம். ஆங்கிலேயர்கள் இரண்டு வருடங்களுக்கு முன்னர் மைசூர் மன்னர் மூன்றாவது கிருஷ்ணராஜ உடையாரிடமிருந்து சமஸ்தானத்தின் அரசாட்சியைக் கைப்பற்றி யிருந்தார்கள். கிருஷ்ணராஜனுக்கு நேர்ந்த கதி வீர ராஜனுக்கும் நேரக்கூடும் என்பது பெரியவனின் பயம்.

நான்கு அடிகள் நடந்த பிறகு சிறியவன், "அப்படியானால் இந்த வெள்ளையர்களை நாம் எப்படி நம்புவது, அப்பாஜி?" என்றான்.

பெரியவன்: பாம்புக்கும் பாம்பாட்டிக்குமுள்ள உறவுதான் நமக்கும் அவர்களுக்கும் உள்ள உறவு. எச்சரிக்கையாகவே இருக்கவேண்டும்.

சிறியவன்: நாம் அவர்களைப் பாம்பாக நினைப்பதுபோல அவர்கள் நம்மைப் பாம்பாக நினைத்தால், அப்பாஜி?

பெரியவன்: நினைத்தால் என்று ஏன் சொல்கிறாய்? அப்படித்தான் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். நம்மையும் அரசரையும் வெவ்வேறு கட்சிகளாக்கி தாங்கள் வாழவேண்டுமென்று பார்க்கிறார்கள். நாம் அந்த வலையில் மாட்டிக்கொள்ளக் கூடாது. நாட்டை அவர்களுக்கு விட்டுக்கொடுத்து விடக் கூடாது.

சிறியவன்: நம்மை எதிர்க்கட்சியாக அவர்களா செய்யவேண்டும் அப்பாஜி? நாமே எதிர்க் கட்சிக்காரர்கள் தானே?

பெரியவன்: எதிர்க்கட்சி அல்ல அப்பய்யா. நாம் தான் கட்சி; இவர்கள் எதிர்க்கட்சி. அண்ணாஜி போவதற்கு முன்னால் மிகவும் காய்ச்சலாகப் படுத்திருந்தபோது என்னையும் லிங்கப்பாஜியையும் அழைத்து கைமேல் கையடித்து ஆணை பெற்றுக் கொண்டார். தேவம்மாஜி ராணி, நீங்கள் பிரதம மந்திரி ஆக இருக்க வேண்டும், சத்தியம் செய்யுங்கள், என்றார். அண்ணன் நானும் தம்பி லிங்கப்பாஜியும் இருவரும் சத்தியம் செய்தோம். சத்தியம் செய்த அன்றே இந்த என் தம்பி அதை நிறைவேற்றப் போவதில்லை என்றான். சத்தியத்தை நிறைவேற்றாமல் இருப்பதானால் யார் அரசராக வேண்டியது? அண்ணனா, தம்பியா? லிங்கப்பாஜிதான் அரசனாக வேண்டுமென்றான். இது சரியா என்று நான் கேட்டேன். உனக்கு ஆளக்கூடிய திறமை இல்லை என்றான். ஏன் அப்படிச் சொல்லுகிறாய் என்று கேட்டேன். கொடுத்த வாக்கை மீற மாட்டேனென்கிறவன் நீ எப்படி ராஜ்யத்தை ஆளப் போகிறாய் என்றான். சத்தியமாக நடந்துகொள்பவர்களுக்கு சிம்மாசனம் வேண்டாததல்ல என்றேன். கடைசியில் நீயே அரசனாக இரு என்று சொன்னான். ஆனால் எனக்கு வேண்டியிருக்கவில்லை அப்பய்யா. அண்ணாஜி நம்மிருவரையும் வளர்த்துப் பெரியவராக்கினார். வாக்குக் கேட்டிருக்கக் கூடாது; கேட்டுவிட்டார். இஷ்டமில்லாவிட்டால் வாக்குக் கொடுத்திருக்கக் கூடாது. கொடுத்த பிறகு அவர் இறந்ததும் ராஜ்யத்துக்கு ஆசைப்பட்டால் பெற்றவர்களுக்குப் புகழா, மக்களுக்கு நல்லதா? இவன் ஆசைக்கு நான் குறுக்கே நின்றேன் என்பதற்காக அண்

ணுஜி பேரில் பழியைப்போட்டு, என்னைக் கொல்ல முயன்றான். அதை எப்படியோ சமாளித்துக் கொள்ளலாம் என்றால், பின்னால் உன்னால் தொந்தரவு ஏற்படக் கூடுமென்று பயந்து உன்மேல் பார்வையைத் திருப்பினான். ஊரைவிட்டே ஓடினேன். ஊரில் இவன் ஒருவனேதான். அதுவே சரி என்று சிம்மாசனம் ஏறினான். அப்படி அரசனாகி என்னத்தை அநுபவித்தான்? பத்து நாள் பறந்துவிட்டு இறக்கை ஒடிந்து விழுந்தான். இந்த மகன் அரசனானான்; அப்பாவை நல்லவனாக்கிவிட்டான். பெரியப்பாவின் மகனைக் கொன்றான்; அப்பாவின் மகனைச் சிறையில்டைத்தான். இவர்களும் வாழ்ந்து நாட்டையும் வாழ வைத்திருந்தால் நாம் இங்கு வந்திருக்க வேண்டாமென்று வைத்துக்கொள். மரியாதையாக வாழ்ந்து முன்னோர்களின் பெயருக்குச் சிறப்பளித்திருக்கலாம். இவர்களும் வாழவில்லை; மக்களையும் வாழவிடவில்லை. வம்சத்தின் பொறுப்பல்லவா? சுமக்கவேண்டிய முதுகு இருக்கும்பொழுது அதை இன்னொருவர்மேல் ஏற்றலாமா? சென்னவீரன் வந்து இப்படி என்று சொன்னான்; எனக்கும் சரி என்று பட்டது. அதற்காகத்தான் எட்டு மாதங்களுக்கு முன்னால் உன்னை இங்கே அனுப்பியது.

சிறியவன்: நீங்கள் வேண்டாம் என்ற பதவி எனக்கெதற்கு அப்பாஜி?

பெரியவன்: நான் அண்ணா அவர்களுக்கு வாக்குக் கொடுத்துவிட்டேன். ஆகையால் எனக்கு அது வேண்டாததாயிற்று. வம்சத்து மகன் நீ. உன்னை அந்த வாக்கு கட்டுப்படுத்தாது.

"ஆனால் சென்ன வீரய்யா வருவதற்கு முன்னால் உங்களுக்கு இது தோன்றவில்லை."

"அப்படியா அப்பாஜி? இருக்கட்டும் இதைப்பற்றி இப்பொழுது என்ன என்று இருந்தேன். சென்ன வீரன் வந்து, மக்கள் மிகவும் நொந்து போயிருக்கிறார்கள்; வெள்ளையர்கள் ஏதோ தந்திரம் செய்து கொண்டிருக்கிறார்கள் என்று சொன்ன பிறகு இனி சும்மா இருக்கக்கூடாது என்று முடிவு செய்தேன்."

"அப்படியா சொல்லுகிறீர்கள்?"

"ஆமாம். ஜனங்களைச் சேர்க்கிறேன் என்று போய் சென்ன வீரன் அஜாக்கிரதையாக அரசனிடம் அகப்பட்டுக் கொண்டுவிட்டான். பெங்களூருக்கு ஓடி வந்தவனை அரசன் வெள்ளையர்களிடம் சொல்லி பிடிவாதம் செய்து வரவழைத்துக் கொண்டான்

அதன் பிறகு அவனைப் பற்றிய செய்தியே கிடையாது. என்ன ஆனான் என்று தெரிந்து கொள்ளாமல் மனத்திற்கு நிம்மதி கிடையாது."

"அது சரிதான் அப்பாஜி."

"நமக்காக அவன் உயிரையே இழந்திருந்தாலும் இழந்திருக்கக் கூடும். நமது அதிருஷ்டம் அவனுக்கும் தட்டியதோ என்னவோ?"

"பாவம்."

"அவன் என்ன ஆனான் என்று வெள்ளையர்கள் பத்து முறை கேட்டிருக்கிறார்கள். அரசன் அவர்களுக்கு ஒரு வார்த்தை பதில் சொல்லவில்லை. இவர்கள் அவனை என்னதான் பண்ணியிருக்கக் கூடாது?"

இதைச் சொல்லும்போது பெரியவனின் குரல் மிகவும் கம்பீரமாக ஒலித்தது. அது சிறியவனின் மனத்திலும் ஏதோ கம்பீரமான எண்ணத்தைத் தோற்றுவித்தது. எதையாவது பேசிப் பேச்சை வளர்க்கவேண்டும் என்று அவன் நினைக்கவில்லை; பேசாமலிருந்தான்.

நடந்துகொண்டே சிறியவன் தன் கைப் பையிலிருந்து இரண்டு காவி வஸ்திரங்களை எடுத்தான். ஓரிடத்தில் நின்று அந்த வஸ்திரங்களை அணிந்துகொண்டு சிவனடியாராக மாறினான். தந்தையும் மகனும் மௌனமாக வழி நடந்தனர்.

6

அதே நாள் சுமார் அதே பொழுதில் மடிகேரி பார்ப்பன அக்கிரகார்த்தில் மந்திரி லக்ஷ்மீ நாராயணய்யாவின் வீட்டுக்கு முன்னால் ஒரு பிராம்மணன் இளைஞன் வந்து நின்றான். அவனைக் கண்டதும் சேவகன் ஒருவன் உள்ளேயிருந்து வந்து, "வெளியூர்க்காரரா? சாப்பிட வருகிறீர்களா?" என்று கேட்டான்.

வந்தவன், "இல்லை: ஐயாவைக் கொஞ்சம் பார்க்கவேண்டியிருக்கிறது" என்றான்

சேவகன், "ஐயா குளிக்கிறார். சாப்பாட்டு நேரம். நீங்களும் சாப்பிட உட்காருங்கள். சாப்பிடும்போது நீங்கள் சொல்ல வேண்டியதைச் சொல்லலாம்," என்றான்.

புதியவன் சிறிது நேரம் யோசித்துவிட்டு, "சரி, அப்படியே செய்கிறேன்" என்று கூறி, சேவகனுடன் உள்ளே சென்றான்.

மந்திரியின் வீடானாலும் அது அவ்வளவொன்றும் செல்வச் செழிப்புள்ளதாகக் காணப்படவில்லை. வீடென்னமோ பெரியது தான். பெரிய முற்றம் இருந்தது. அதன் ஒரு புறத்தில் இருந்த திண்ணையில் ஐந்தாறு பிராம்மணர்கள் உட்கார்ந்திருந்தார்கள். ஒருவன் இலை தைத்துக் கொண்டிருந்தான்; ஒருவன் பூணூல் திரித்துக் கொண்டிருந்தான்; ஒருவன் நன்றாக உட்கார்ந்து ஜபத்தில் மூழ்கியிருந்தான். மற்றவர்கள் ஓரிடத்தில் உட்கார்ந்து கொண்டு மெதுவான குரலில் பேசிக் கொண்டிருந்தார்கள்.

புதியவன் வந்ததுமே பேசிக் கொண்டிருந்தவர்களில் ஒருவன், "வாருங்கள் சுவாமி, வாருங்கள்" என்று கூறி, எழுந்திருந்து அவனை வரவேற்றபடி அருகில் வந்தான்.

புதியவன், "ஐயாவிடம் கொஞ்சம் பேசவேண்டிய விஷயம் இருக்கிறது. அதற்காக வந்தேன். இவன் சாப்பிட வாருங்கள், சாப்பிடும்பொழுது பேசலாம் என்றான். சரி என்று வந்தேன்" என்றான்.

"தாராளமாக, எது வேண்டுமானாலும் பேசுவதற்கு அதே சமயம். குளித்தாயிற்று, இங்கே குளிக்கிறீர்களா?"

"குளித்துவிட்டே வந்திருக்கிறேன். ஜப தபங்களும் முடிந்து விட்டன."

சேவகன் ஒருவன் அங்கேயே இருந்த ஒரு பெரிய தவலையி லிருந்து ஒரு செம்பில் நீர் மொண்டு கொண்டு வந்து அவனிடம் கொடுத்தான். அவன் அதை வாங்கிக்கொண்டு தொட்டியில் இறங்கி, கால்களை அலம்பிக்கொண்டு செம்பைத் திருப்பிக் கொடுத்தான். பிறகு மேலே வந்து திண்ணையில் மற்றவர்கள் உட்கார்ந்திருந்த இடத்தில் உட்கார்ந்து கொண்டான்.

ஒரு நாழிகை கழிந்தது. ஜபம், பூணூல் எல்லாம் முடிந்தன. அப்பொழுது உள்ளேயிருந்து, "ராமகிருஷ்ணா, பிராம்மணர் களுக்கு இலைபோடச் செய்தாயா?" என்று கேட்டுக்கொண்டே ஒரு நடு வயது மனிதர் வந்தார்.

அவர்தான் மந்திரி லக்ஷ்மீ நாராயணய்யா. அவர் ஹல்யக பிராம்மணர். லக்ஷ்மீ நாராயணய்யா தேஜஸ் நிறைந்தவர். அவர் வந்ததுமே அங்கே இருந்தவர்கள் எல்லோரும் எழுந்து நின்றார்கள்; அவருக்குக் கைகூப்பி வணக்கம் தெரிவித்தார்கள்.

ராமகிருஷ்ணயயா வேற்றூரிலிருந்து வந்த மனிதனைச் சந்தித்துப் பேசியவன். அவன் எஜமானரிடம், "இலை போட்டிருக்கிறது சுவாமி" என்று பதில் சொல்லிவிட்டு பிராம்மணர்களிடம், "எல்லாரும் தயவுசெய்து உள்ளே வரவேண்டும்" என்ருன்.

எல்லாரும் உள்ளே சென்றனர். லக்ஷ்மீ நாராயணய்யா உள்ளே போவதற்கு முன்னுல், "வேறு யாரும் இல்லையே?" என்று கேட்டார். "இல்லை, பார்த்து விட்டேன்" என்ருன் ராமகிருஷ்ணய்யா.

உள்ளே சாப்பாட்டுக் கூடம், விசாலமானதாக இருந்தது. சுமார் நாற்பது பேர் உட்கார்ந்து சாப்பிடப் போதுமானதாக இருந்தது. ஏற்கனவே இரண்டு பந்தி சாப்பிட்டாயிற்று. மூன்ருவது பந்தியில்தான் வீட்டு எஜமானர் உட்கார்ந்து சாப்பிடுவார். நாழி கழித்து வந்தவர்கள் அந்தப் பந்தியில் சேர்ந்து கொள்ளலாம்.

இலை போட்டிருந்த இடத்தில் ஒரு கிழவி நின்றிருந்தாள். அவள் லக்ஷ்மீ நாராயணய்யாவை, "அந்தப் பக்கம் வேறு யாரும் இல்லையாப்பா?" என்று கேட்டாள்.

அவர் பதில் சொல்வதற்கு முன்னரே ராமகிருஷ்ணய்யா, "யாரும் இல்லையம்மா, நான் பார்த்துவிட்டேன்" என்ருன்.

கிழவி, "பார்த்துவிட்டாயா? நல்லது" என்று கூறி உள்ளே யாரையோ பார்த்து, "லக்ஷ்மி, வாசலில் போய் இன்னெரு தடவை பார்த்துவிட்டு வந்து விடு, யாராவது இருக்கிருர்களோ என்னவோ," என்ருள்.

உள்ளே இருந்து ஒரு சுமங்கலி வெளியே வந்து "பார்க்கிறேன்" என்று சொல்லி வாசல் பக்கம் சென்ருள். திரும்பி வந்து, "யாரும் இல்லை" என்ருள்.

கிழவி லக்ஷ்மீ நாராயணய்யாவின் தாய். லக்ஷ்மி அவருடைய மனைவி. சாப்பாட்டிற்கு இன்னும் யாராவது காத்துக்கொண்டிருக்கிருர்களா என்று இவ்வாறு ஒன்றுக்கு மூன்று தடவை பார்ப்பது அவர்களது நித்திய வழக்கம்.

எல்லாரும் சாப்பிட உட்கார்ந்தார்கள். ராமகிருஷ்ணய்யா, மந்திரியிடம் ஏதோ பேசவேண்டியிருக்கிறது என்று சொல்லிக் கொண்டு வந்திருந்த இளைஞனிடம், "ஏதோ சொல்லவேண்டியிருக்கிறது என்றீர்களே, சொல்லிக் கொள்ளுங்கள்" என்ருன்.

இளைஞன், "சாப்பிட்ட பிறகு சொல்கிறேன்" என்றான்.

ராமகிருஷ்ணய்யா, "இங்கே நாங்கள் எல்லாம் ஒரு குடும்பம் மாதிரி. யாரும் எதையும் சொல்வதற்கு சங்கோசப்படவேண்டியதில்லை. ரொம்பவும் ரகசியமான விஷயம் என்றால் உங்கள் இஷ்டம். அப்படியில்லாவிட்டால் இப்பொழுதே சொல்லலாம்," என்றான்.

கிழவி அங்கேயே நின்று எல்லாரையும் கவனித்துக் கொண்டிருந்தாள். "இவருக்கு மோர்க்குழம்பு கொண்டுவா, இங்கே கோசும்பரி கேள்" என்று பரிசாரகனுக்கு சொல்லிக்கொண்டிருந்தாள். ராமகிருஷ்ணய்யாவின் பேச்சைக் கேட்டு அந்த இளைஞனிடம், "ஏதோ பெரிய கவலையாக இருப்பதைப் போலிருக்கிறதே, எந்த ஊரப்பா நீங்கள்?" என்று கேட்டாள்.

இளைஞன்: எங்கள் ஊர் பாணே அம்மா. நான் அந்த ஊர் புரோகிதரின் இரண்டாவது மகன். சூரியநாராணன் என் பெயர்.

கிழவி: பாணே புரோகிதரின் இரண்டாவது பிள்ளையா? அதென்னவோ ஒரு செய்தி எங்கள் காதில் விழுந்தது.....

சூரியநாராயணன்: ஆமாம் அம்மா. இன்றைக்குச் சரியாக ஆறு நாட்கள் ஆயிற்று. என் மனைவி கிணற்றடிக்குச் சென்றவள் திரும்பி வரவில்லை. கிணற்றில் விழுந்து விட்டாளோ என்று தேடினோம். இல்லை யென்று தெரிந்தது. பல இடங்களுக்கு ஆட்களை அனுப்பியிருக்கிறோம். நான் இந்தப் பக்கம் வந்தேன். வழியிலெல்லாம் விசாரித்துக் கொண்டே வந்தேன். அதைத் தான் யாரோ தங்களிடம் சொல்லியிருக்கவேண்டும்.

கிழவி: ஆமாம், "கணவன் தேடிக் கொண்டிருக்கிறான், பவசன் கடத்திக்கொண்டு வந்திருக்கவேண்டும் என்று ஜனங்கள் பேசிக் கொள்கிறார்கள்" என்றார்கள்.

சூரியநாராயணன்: ஆமாம் அம்மா. என்னிடமும் அப்படியே சொன்னார்கள். இங்கே மெதுவாக விசாரித்தேன். இங்கே தான் கொண்டு வந்திருக்கிறார்களாம். காவலில் வைத்திருக்கிறார்களாம். எஜமானரிடம் சொன்னால் எல்லாம் சரி செய்து கொடுப்பார் என்று சொன்னார்கள். அதனால்தான் தங்கள் காலில் விழலாம் என்று வந்தேன் தாயே.

"நல்லதப்பா, நல்லது. கண்டிப்பாக உங்களுக்கு வேண்டியதைச் செய்து கொடுப்பார். ஒரு குடும்பத்தைக் காப்பாற்று

வதைவிட புண்ணியம் தரக்கூடிய வேலை என்ன இருக்கிறது ஒரு மந்திரியாக இருப்பவனுக்கு? நிம்மதியாகச் சாப்பிடுங்கள். பிறகு எல்லா விவரங்களையும் சொல்லுங்கள். உதவி செய்வார். கவலைப் படாதீர்கள்."

இவ்வாறு கூறிவிட்டு கிழவி பரிசாரகனிடம், "பார், சாம்பு, இவருக்கு பச்சடி கேளு," என்றாள்.

விஷயம் மிகவும் துயரத்தை அளிப்பது, அவமானம் நிறைந்தது. எல்லாருடைய மனமும் கசப்புற்றிருந்தது. யாரும் பேசவில்லை. மௌனமாக சாப்பாடு நடந்து கொண்டிருந்தது.

7

பானே சூரியநாராயணன் மந்திரி லக்ஷ்மீ நாராயணய்யாவின் வீட்டு வாசலில் வந்து நின்ற அதே சமயத்தில் மந்திரி போபண்ணாவின் வீட்டு வாசலில் ஒரு குடகக் கிழவன் நின்றுகொண்டு சேவகனைப் பார்த்து, "ஏ அப்பய்யா, ஐயா இருக்கிறாரா?" என்று கேட்டான்.

போபண்ணா உள்ளேதான் இருந்தார். கிழவனின் பேச்சு அவர் காதில் விழுந்தது. வாசலுக்கு வந்து, "வாருங்கள் தாத்தா, உள்ளே வாருங்கள். எப்போது வந்தீர்கள்? எல்லாரும் சௌக்கியம் தானே?" என்றான்.

கிழவன், "கும்பிடுகிறேன் ஐயா. நீங்களெல்லாம் சௌக்கியமா?" என்று கேட்டுக்கொண்டே போபண்ணாவுடன் உள்ளே சென்றான்.

கிழவனின் பெயர் உத்தய்யதக்கன். இவனை குடகுநாடு முழுவதும் அறியும். இதற்குக் காரணம் திப்புவின் ஆட்கள் பாக மண்டலம் பகுதியை ஆக்கிரமித்துக் கொண்டிருந்த நாட்களில் இவன் ஒரு பிராம்மணச் சிறுவனை தினமும் அழைத்துக்கொண்டு வந்து பாக மண்டலத்து சுவாமிக்கு தவறாமல் பூஜை நடக்கும்படி பார்த்துக் கொண்டதுதான். இது நடந்தது நாற்பது வருஷங்களுக்கு முன்னால், தொட்ட வீர ராஜன் காலத்தில். எதிரிகள் தொலைந்த பிறகு இந்தச் சங்கதியை அறிந்த வீரராஜன் இவனுக்கு மரியாதையாக அரண்மனையிலிருந்து மானியம் அளிக்க ஏற்பாடு செய்தான்.

தொட்ட வீரராஜன் நவராத்திரி விழாவில் பெரிய சபை நடுவே இவனைப் புகழ்ந்து பேசியபோது இவனது பெருமைக்கு அளவே இல்லை; குடகர்களின் சந்தோஷத்திற்கும் எல்லையே இல்லை. அந்த நாட்களில் லிங்கராஜன் இவன் முதுகில் தட்டிக்கொடுத்துப் பாராட்டினான்; இவனோடு நட்புப் பூண்டான். உத்தய்யன் தனது இளமையில் மூன்று புலிகளைக் கொன்ற தீரன். குடகர்களில் புலியைக் கொன்றவர்கள் மீசையை ஒரு விதமாக வளர்த்துக் கொள்வது வழக்கம்; மற்றவர்கள் அந்த மாதிரி வளர்க்கக் கூடாது. பெரிய அரசரின் நாட்களில் நவராத்திரி விழாவில் இந்த மீசையால் முகத்தை அலங்கரித்துக் கொண்டு விளங்கிய நால்வரில் உத்தய்யனும் ஒருவன். ஓரிரு சமயங்களில் லிங்கராஜன் இவனுடன் வேட்டைக்குப் போனதுண்டு. இவன் லிங்கராஜனுடன் மற்ற விஷயங்களிலும் மிகவும் சலுகையோடு நடந்து கொள்வதாக அப்பொழுதே சொல்வார்கள்; இக்காரணங்களினால் இவன் லிங்கராஜனின் மகனை சிறு வயதிலிருந்தே பார்த்தவன்; உரிமையோடு அவனை புட்டப்பாஜி என்றழைத்தவன். லிங்கராஜன் அரசனாவதற்கு இவன் உதவி புரிந்திருந்தான். அவனது மகன் அரசனானதும் இவனுக்குச் சம்மதம். போபண்ணாவுக்கு இவனைக் கண்டால் மிகுந்த கௌரவம், மிகுந்த மரியாதை.

உள்ளே சென்று கொண்டிருந்தபொழுது போபண்ணா, "சாப்பிட்டாயிற்ரு, சாப்பிட வருகிறீர்களா? நான் இன்னும் சாப்பிடவில்லை" என்ருன்.

கிழவன், "ஐயா வீட்டுக்கு வரும்போது சாப்பிட்டு விட்டா வருவேன்? வாங்க சாப்பிடலாம்" என்ருன்.

வீடு லக்ஷ்மீநாராயணய்யாவின் வீட்டைப் போன்றதேதான். உள்ளே முற்றம். அங்கே போலவே இங்கேயும் நான்கு பேர் உட்கார்ந்திருந்தனர். போபண்ணா ஆளை அழைத்து, தாத்தாவுக்கு தண்ணீர் கொண்டுவா, கை அலம்பிக் கொள்வதற்கு" என்ருன். ஆள் தண்ணீர் கொண்டு வந்தபொழுது, "இன்னும் ஒரு இலை போடச் சொல்லு" என்ருன்.

கிழவன் உத்தய்யன் கைகால் அலம்பிக்கொண்ட பிறகு எல்லோரும் உள்ளே சென்று சாப்பாட்டுக்கு அமர்ந்தனர்.

சாப்பிடும்பொழுது போபண்ணா உத்தய்யாவைப் பார்த்து, "ஊரிலிருந்து இப்பொழுதுதான் வந்தீர்களா? என்ன விசேஷம்?" என்று கேட்டான்.

"அரண்மனையில் எனக்குப் படி கொடுத்து வந்தார்களில்லையா? அதை வாங்கி வரச் சொல்லி ஆளை அனுப்பினேன். இனிமேல் கொடுக்க முடியாது, படியை நிறுத்திவிட்டோம் என்றானும் பசவய்யன்."

"அட!"

"ஊம். அப்படியே சொன்னானும்; 'உங்க தக்கன் அரசருக்குக் குறுக்கே கை நீட்டுகிறான், அவனுக்கு எதற்கு அரிசி கொடுப்பது? இந்தப் பக்கம் மூஞ்சியைக் காட்டாதே என்று சொல், மீசையை எடுத்து விடுவோம்' என்றானும்."

"அட கொழுப்பே! அவ்வளவு துணிச்சலா அவனுக்கு!"

"பாருங்கய்யா, எவ்வளவு தைரியம் என்று எங்க ஆள் சொன்னானும், 'பெரிய அரசர் தோள்மீது கை வைத்து அவராகக் கொடுத்த மரியாதை; அதை யார் நிறுத்த முடியும்?' என்று பசவய்யன் சொன்னானும், 'ஒரு அரசர் கொடுத்ததை இன்னொரு அரசர் நிறுத்திவிட்டார்' என்று. ஏன் என்று கேட்டால். 'அரசருக்குக் குறுக்கே கை நீட்டுகிறான்' என்றானும்."

"என்ன அப்படி அரசருக்குக் குறுக்கே கைநீட்டியது?"

"அதைக் கேட்கத்தான் ஐயா வந்திருக்கிறேன். கேட்கிறேன். நாடு முஸ்லிம்களின் கையில் அகப்பட்டிருந்தது. பாக மண்டலத்துப் பிராம்மணர்கள் ஊரைவிட்டு ஓடி விட்டனர். சுவாமி தலையில் இரண்டு செம்பு தண்ணீர் ஊற்றுபவர்கள் இல்லை. மற்றவர்கள் சண்டையிட்டுக் கொண்டிருந்தபொழுது நான் நான்கு மாத காலம் ஒருநாள் விடாமல் காடபாலையத்திலிருந்து பிராம்மணச் சிறுவன் ஒருவனைத் தோள்மேல் தூக்கிக் கொண்டு வந்து, குளிப்பாட்டி அவன் கையால் பூஜை செய்வித்து சுவாமியின் எதிரிலுள்ள விளக்கு அணையாமல் பார்த்துக் கொண்டேன். பெரிய அரசர்—அவர் ஆத்மா எங்கிருந்தாலும் சாந்தியோடு இருக்கட்டும்—இதைக் கேள்விப்பட்டதும் ஆச்சரியப்பட்டுப் போய்விட்டார்; 'போர்க்களத்தில் சண்டையிட்டது பெரிதல்ல; கோவிலைக் காத்தது சிறிதல்ல; இந்தா தம்பி, இந்த மரியாதையைப் பெற்றுக்கொள்' என்று கொடுத்தார். அதை நிறுத்துவதற்கு இவர்கள் யார்?"

"அரசர் கொடுத்ததை அரசர் நிறுத்துவதாகச் சொல்லுகிறானே. ஏன் என்பதுதான் தெரிந்து கொள்ளவேண்டும்."

"அப்படி யொன்றும் இல்லை விடுங்கள். மறைக்காமல் சொல்வதானால் நடந்தது இதுதான். என் மருமகளின் மகள் கல்யாணத்திற்கு இருக்கிறாள். பார்ப்பதற்கு அழகாக இருக்கிறாள். மருமகள் அவளைத் தன் அண்ணன் மகனுக்குக் கொடுக்கவேண்டும் என்று நிச்சயித்திருக்கிறாள். கல்யாணம் நடக்கவேண்டும்; நடுவே அரண்மனை ஆள் வந்தான். ராணியின் ஊழியத்துக்கு இந்தப் பெண்ணை அழைத்துவரச் சொன்னார்கள், கல்யாணத்தை நிறுத்துங்கள், என்றான். மருமகளுக்கு ஒன்றும் புரியவில்லை, பயந்துவிட்டாள். 'என்ன செய்வது மாமா?' என்று கேட்டாள். நான் அரண்மனை ஆளிடம் சென்று, 'கல்யாணம் செய்துவிட்டு மகள், மருமகன் இருவரையும் அனுப்புவாள், அழைத்துக் கொண்டு செல்லுங்கள்' என்றேன். அதெல்லாம் முடியாது என்றான். நானும் இதெல்லாம் முடியாது என்றேன். இது அரசருடைய உத்தரவு என்று சொல்லுகிறார்களா? சொல்லட்டும், அதையும் பார்த்து விடுவோம்."

"சரிதான். பார்த்து விடவேண்டியதுதான். இது யாருடைய வேலை என்று தெரிந்து கொள்ளவேண்டும். அரசருக்குத் தெரியாதபடி பசவன் செய்ததாக இருந்தால் அவருடைய இன்னொரு காலையும் முறித்து விடவேண்டும். அரசர் விருப்பப்படியே அவன் செய்ததாக இருக்கும் பட்சத்தில் அவருடைய புத்தியையே சரி செய்யவேண்டும். ராணியின் ஊழியத்துக்கு என்று சாக்குச் சொல்லி குடகுப் பெண்ணை வேட்டையாடுகிறார்களா இவர்கள்?"

போபண்ணாவுக்கு மிகவும் கோபம். அவனுடைய குரல் கூட மிகக் கடுமையாக இருந்தது. கிழவன் பதிலே பேசவில்லை; பேச வேண்டிய தேவையும் இருக்கவில்லை. மௌனமாக மூன்று வாய் சாப்பிட்ட பிறகு போபண்ணா சேவகனை அழைத்து, "ஏய் பித்தய்யா, சாப்பிட்டானதும் ஐயா வீட்டுக்குப் போய் நான் சாயங்காலம் அங்கே வருகிறேனென்று சொல்லிவிட்டு வா," என்றான்.

சேவகன் பித்தய்யா, "சரி ஐயா" என்றான்.

8

இவையெல்லாம் நடந்த அதேநாள் மாலை மடிகேரி ஓங்காரேஸ்வரன் கோவிலுக்கடுத்த அக்கிரகாரத்தின் மத்தியிலிருந்த

பெரிய வீட்டின் முன்புறமுள்ள திண்ணையின் மீது அந்த வீட்டு எஜமானர் தீட்சிதர் உட்கார்ந்து கொண்டு சில ஓலை சுவடிகளைப் புரட்டிப் பார்த்துக் கொண்டிருந்தார். இவர் ஓங்காரேஸ்வரர் கோவிலின் முக்கிய அர்ச்சகர்; அரண்மனை சோதிடர். அரசனின் ஜாதகத்தில் அவனுக்கும் தங்கைக்கும் இடையே விரோதம் அதிகமாக வளர்வதற்கான அறிகுறிகள் இருப்பதாக ராணியிடம் சொன்னவர். இவர், இரண்டு நிமிடங்கள் சுவடிகளைப் பார்த்தும் இரண்டு நிமிடங்கள் படிப்பதைப் பற்றி யோசிப்பதுமாக உட்கார்ந்திருந்தார். யோசித்த பிறகு மறுசடியும் படிப்பு. இந்தப் படிப்பு, இந்த யோசனையில் அவர் தன்னைச் சுற்றிலும் என்ன நடக்கிறது என்பதையே அறியாதவராக மெய்மறந்திருந்தார்.

இவ்வாறு படிப்பில் முழுகியிருந்த கிழவரின் எதிரில் தூய்மையான வெள்ளைப் புடவை மலையாள ரீதியில் உடுத்தியிருந்த ஒரு ஸ்திரீ வந்து நின்றாள். அவள் வந்து எதிரே நிற்கும் வரையில் தீட்சதருக்குத் தன் ஓலைச் சுவடிகளைத் தவிர வேறு எதிலும் கவனம் இருக்கவில்லை. முன் பின் தெரியாத மனுஷி, அசாதாரண வேடம், இவைகளைக் கண்டு தீட்சதர் சிறிது திகைப்படைந்தார்; படிப்பதை நிறுத்தி விட்டு அந்த ஸ்திரீயைப் பார்த்தார்.

முதலில் அவள் யாரோ சோதிடம் கேட்க வந்த பெண்ணாக இருக்க வேண்டுமென்று அவருக்குத் தோன்றியது.

அந்த ஸ்திரீ தீட்சதரை கைகூப்பினாள். "சரணம், அண்ணய்யா, அடையாளம் தெரிந்ததா?" என்றாள்.

தன்னை 'அண்ணயா' என்று அழைக்கக் கூடிய இந்த ஸ்திரீ யாராக இருக்கக்கூடும் என்று தீட்சதருக்குச் சட்டென்று புரியவில்லை. அவர் அப்பெண்மணியைப் நன்றாக கவனித்துப் பார்த்தார். வயதாகிக் கொண்டிருந்த பெண்மணி; முகத்தில் மூப்பின் அறிகுறிகள் இல்லை; ஆனால் லளிதமும் இல்லை. கடுமையான முகபாவம். உற்றுப் பார்த்தபோது அந்த முகம் தான் எங்கேயோ பார்த்த முகம் போல் அவருக்குத் தோன்றியது. 'இருக்க முடியாது' என்று சந்தேகம். 'அடையாளம் தெரியவில்லை' என்று சொல்ல முடியாமல் தாட்சண்ணியம், இவைகளோடு அவர், "யாரு நம்ம பாப்பாவா?" என்று கேட்டார்.

"அடையாளம் தெரிந்து விட்டது. ஆமாம். நான் உங்கள் பாப்பா, நான் உங்கள் பாப்பாவானால்* நீங்கள் என் புண்ணிய

* 'பாப' என்றால் பாவம் என்று பொருள்.

மாக இருங்கள்'' என்று கூறி அந்த ஸ்திரீ சிரித்தாள். தீட்சதரும் சிரித்தார்.

''என்ன பாப்பா இது? எப்பொழுது வந்தாய்? எங்கிருந்து வந்தாய்? முப்பது வருஷமாக இருக்கிற இடம் தெரியாமல் இருந்தவள் இருந்தாற்போலிருந்து எதிரே வந்து நிற்கிறாயே. வருகிறேன் என்று ஒரு அறிவிப்பு கூட இல்லையே? இப்படி வந்து விட்டு, நேற்று போய் இன்று திரும்பி வந்தவள் மாதிரி, பாப்பா என்று நான் அழைத்ததற்காக என்னைக் கிண்டல் செய்கிறாய். எப்பவுமே உனக்கு இந்தக் கெட்டிக்காரத்தனம்''

''பரதேசியாக இருந்த மகள் இன்று திரும்பி வந்திருக்கிறேன். தண்டோரா போட்டு விட்டு வர வேண்டுமா? 'நீ' என்று சொல்வதற்கு உங்கள் ஒருவரைத் தவிர வேறு யாரும் இல்லை. யாரை அழைத்து என்னவென்று சொல்லி அனுப்புவது? நானே வந்தேன்.''

''சந்தோஷம் அம்மா. வா, உட்கார். மடிகேரிக்கு எப்பொழுது வந்தாய்?''

அந்த ஸ்திரீ திண்ணையின் ஓர் ஓரத்தில் உட்கார்ந்து கொண்டாள்.

''இன்றைக்கு வந்தது இப்பொழுது தான். ஊருக்கு வந்து ஆறுமாதம் ஆயிற்று. உங்களைப் பார்க்க வேண்டிய சமயம் வரட்டுமென்று காத்திருந்தேன்?''

''இந்த ஊருக்கு வந்து ஆறு மாதம் ஆயிற்றா?''

''திரும்பி வந்து ஆறு மாதம் ஆயிற்று. ஊரில் பகவதி உபாசனை செய்கிறவள் என்று சொல்லுகிறார்கள் அரண்மனைக்கும் பேயிருந்தேன். உங்கள் காதிலும் விழுந்திருக்கிறதே.''

''ஆஹா! நீ பகவதியா? காதில் விழாமல் என்ன? வேண்டிய அளவு விழுந்திருக்கிறது. ராணி கூட சாந்தி பூஜை செய்வித்தார்களே.''

''இன்னும் சில பூஜைகள் செய்விக்கிறீர்களா என்று கேட்டேன். நீங்கள் வேண்டாம் என்று சொன்னதாகச் சொன்னார்கள்.''

''சுவாமிக்கு பூஜை செய்கிறேன் என்றால் வேண்டாம் என்று ஏன் சொல்லப் போகிறேன்? பொறுங்கள் என்று சொல்லியிருப்பேன்.''

"சரிதான். அரண்மனை சோதிடர் அரண்மனையைப் பார்த்துக் கொள்ளுகிறீர்கள். அதைப் பற்றி எனக்கென்ன? இப்பொழுது என்னையும் கொஞ்சம் கவனித்துக் கொள்ளவேண்டும் என்பதற்காக வந்தேன் அண்ணய்யா."

"நான் என்ன செய்ய வேண்டும் அம்மா?"

"சொல்லுகிறேன். ஆனால் அதையெல்லாம் இங்கே தெருவில் பேச வேண்டாம். கோவிலில் பூஜைக்கு முன்னாலோ, பூஜை முடிந்த பிறகோ சிறிது நேரம் உட்கார்ந்தால் மற்றவர்கள் கேட்காதபடி பேசலாம்."

"அப்படிப் பட்ட பேச்சு என்னம்மா? நீ யார், என்ன என்பதைப் பற்றி இப்போது ஊரில் யாருக்கும் தெரியாது. அந்த நாள் மனுஷர்கள் இருப்பது என்னைப் போன்ற கிழவர்கள் இங்கொருவர், அங்கொருவர். உனக்கென்ன பயம்?"

"எனக்கு பயம் ஏது? மலையாள பகவதி என்று ஜனங்கள் தான் எனக்குப் பயப்படுகிறார்கள். நான் உங்களைக் கேட்க விரும்புவது என் மரியாதையைக் காப்பாற்றும் பேச்சு; என் மகனைக் காப்பாற்ற வேண்டியதைப் பற்றிப் பேச்சு."

"உன் மகன்! இன்னும் இருக்கிறானா? எங்கே இருக்கிறான்?"

"எல்லாவற்றையும் சாயங்காலம் கோவிலில் சொல்லுகிறேன்."

"இன்றைக்கா?"

"இன்றைக்கு வரட்டுமா, இன்னொரு நாள் ஆகட்டுமா?"

"இன்னொரு நாள் வா என்று சொன்னால் நீ மந்திருக்குப் போக வேண்டுமோ என்னவோ?"

"ஆமாம்."

"இனி இதற்காக மறுபடியும் ஏன் வருகிறாய்? இன்றைக்கே வா, பேசுவோம்."

அந்த ஸ்திரீ எழுந்து விட்டாள்; "சரி" என்றாள். "வீட்டில் குழந்தை குட்டிகள் எல்லோரும் சௌக்கியம் தானே? இன்னொரு நாள் வந்தால் பார்க்கிறேன்" என்று கூறி விட்டு தெருவில் இறங்கி நடந்தாள்.

9

பாப்பா நடந்து போவதையே பார்த்தபடி தீட்சிதர் உட்கார்ந்திருந்தார். அவள் பார்வையினின்றும் மறைந்த பிறகு மீண்டும் ஓலைச்சுவடியில் கவனத்தைத் திருப்பினார். ஆனால் படிப்பில் மனம் லயிக்கவில்லை; ஓலைச்சுவடிகளைக் கட்டி வைத்து விட்டு, 'அண்ணய்யா' என்று தன்னை அழைத்த அப்பெண்மணியின் சரித்திரத்தை நினைவுக்குக் கொண்டு வந்தார்.

ஐம்பது வருடங்களுக்கு முன்பு நடந்த கதை. தீட்சிதருக்கு ஒரு தம்பி இருந்தான். வயதுப் பையன். நல்ல அழகன். அவனை அண்ணனை விட அறிவாளி என்றே சொல்வார்கள். அவனுக்கு சங்கீதம், வைத்தியம், ஜோதிடம் எல்லாவற்றிலும் தேர்ச்சி உண்டு; அவன் தந்தைக்கும் அவன் பேரில் ரொம்பப் பெருமை. வயதுப் பையனான அவனுக்கு விவாகம் ஆகியிருந்தது. அவன் மனைவி தலைச்சன் பிரசவத்திலேயே இறந்து விட்டாள். இளைஞன் மறுபடியும் கல்யாணம் செய்து கொள்வதில்லை யென்று சொல்லி விட்டான்.

தொட்டராஜர் காலத்தில் அரண்மனையில் சங்கீதக் கச்சேரிகள் நடந்து கொண்டே இருக்கும். ஒரு பாடகி மிக நன்றாகப் பாடுவாள். நல்ல அழகியும் கூட. அவளோடு இவனுக்கும் தொடர்பு ஏற்பட்டது.

கல்யாணம் ஆகா விட்டாலும் இந்த தொடர்பு கல்யாணத்தை விட உறுதியான தொடர்பாகி விட்டது. பாடகி ஒரு குழந்தையைப் பெற்றெடுத்தாள். அவளை தந்தை 'பாப்பா' என்று அருமையாக அழைத்தான். அதுவே அவள் பெயராகி விட்டது. தாயும் குழந்தையும் அவ்வப்போது வீட்டுக்கு வருவார்கள். மடியாக இல்லாத நேரங்களில் வந்தால் தீட்சிதர் குழந்தையைத் தூக்கி, முத்தமிட்டுக் கொஞ்சுவார். இந்த வீட்டில் பிறக்கவில்லை என்பதற்காகக் குழந்தையை இவர்கள் நிராகரிக்கவில்லை. தந்தையின் அண்ணாவுக்கும் அந்தக் குழந்தை "பாப்பா" ஆயிற்று. தந்தை அண்ணாவை "அண்ணய்யா" என்று கூப்பிடுவான்; பாப்பாவும் அவரை "அண்ணையய்யா" என்றே கூப்பிடத் தொடங்கினாள்.

சிறுமி பதினாறு வருடங்கள் வளர்ந்தாள்; மிக்க அழகியாக விளங்கினாள்; தந்தையிடம் சமஸ்கிருதம் பயின்றாள்; தந்தையிட

மும் தாயிடமும் சங்கீதம் பயின்றாள். அரண்மனைப் பரிவாரத்தில் ஒருத்தியானாள். லிங்கராஜன் அப்பொழுது இளைஞன்; இவளைப் பார்த்தான்; மோகம் கொண்டான். அவனுக்கு ராணி இருந்தாள், குழந்தைகள் இருக்கவில்லை ஒரு குழந்தை பிறந்து இறந்து போய் விட்டது. அந்த நாட்களில் அவன் இந்த யுவதியின் பேரில் அன்பைச் சொரிந்து, ஆசையை வளர்த்து அவளைத் தன்னவளாக்கிக் கொண்டான்.

இப்படி ஏதாவது நடக்குமென்று இவர்கள் எல்லோருக்கும் சந்தேகம் இருந்ததுதான். ஆனால் விஷயம் தெரிந்தது அந்த பெண் கர்ப்பமான பிறகு. தீட்சிதரின் தம்பிக்கு தனது ஸ்திரீ பாடகியாகவும் தாசியாகவும் இருந்தது இழிவாகப் படவில்லை. ஆனால் தனது மகளும் அவ்வாறு இருப்பது அவனுக்குப் பிடிக்கவில்லை. அவன் லிங்கராஜனை வற்புறுத்தி அப்பெண்ணை அவனது இரண்டாவது மனைவியாக்க முயற்சித்தான். லிங்கராஜன் சம்மதிக்கவில்லை. தந்தையான தொட்டராஜரிடம் குற்றம் சாட்டுவதாக பயமுறுத்திப் பார்த்தான். லிங்கராஜன் ஏதோ யுக்தி செய்து அவ்வாறு நிகழாமல் பார்த்துக் கொண்டான். இது நடந்த ஒன்றிரண்டு மாதங்களில் தீட்சிதரின் தம்பி ஏதோ ஜுரத்தில் படுத்து இறந்து போனான். லிங்கராஜன்தான் இவனுக்கு விஷம் வைத்துக் கொன்று விட்டதாகக் கூடப் பேசிக் கொண்டார்கள், அவனை நெருங்கி யிருந்தவர்கள்.

அதன் பிறகு ஒரு வருடம் கூட செல்லவில்லை. என்ன நடந்ததென்றே தீட்சிதருக்குத் தெரியாது. அரண்மனைப் பரிவாரத்திலிருந்து இந்த பெண்ணும் இவள் தாயும் எங்கோ சென்று விட்டார்கள். என்ன ஆனார்கள், எங்கே போனார்கள் என்று தீட்சிதர் விசாரிக்கவும் முடிவதில்லை. தாயின் அக்காக்காரி ஒருத்தி அரண்மனையில் இருந்தாள். தீட்சிதர் விசாரிப்பதானால் அவளை விசாரிக்க வேண்டும். என்னவென்று விசாரிப்பது? விசாரித்து என்ன செய்வது? அந்தத் தம்பியே போய்விட்டான்; அவனுடைய இந்தக் குடும்பத்தைத் தாம் செய்யப் போவதுதான் என்ன? சில நாட்களுக்குப் பிறகு தீட்சிதர் இந்த விஷயத்தையே மறந்து விட்டார். பாப்பா என்னவானாளோ, அவளுடைய குழந்தை என்னவாயிற்றோ, தீட்சிதருக்கு ஒன்றும் தெரியாது.

தொட்டராஜன் இறந்து, அவரது மகள் ராணியாகி, லிங்கராஜன் அவளைத் தள்ளி விட்டுத் தானே அரசனாகி, லிங்கராஜன்

இறந்து இப்பொழுது இருக்கும் அவர் மகன் அரசனாகி—இவ்வாறு குடகின் சரித்திரத்தில் கிட்டத்தட்ட நாற்பது வருடங்கள் ஓடிவிட்டன. தீட்சிதரின் தம்பியின் மகளாகிய இவளின் நிழல் இந்த நீண்ட காலத்தில் ஒருமுறைகூட குடகின் மீது விழுந்திருக்கவில்லை

அந்தப் பெண் இப்போது இந்த முதியவளாக வந்திருக்கிறாள்; தன் மகனைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பைப் பற்றிப் பேசுகிறாள். இந்தப் பேச்சு எதில் கொண்டு விடுமோ? என்ன ஆகுமோ?

அன்று அரண்மனை வாழ்க்கையிலிருந்து மறைந்து போன பாப்பா இன்றைய பகவதியாக வந்திருக்கிறாள் என்பது உண்மை. அதே முகம்; தம்பியின் ஜாடை. ஆனால் முதிர்ந்து, கடுமையாக மாறியிருக்கிறது. அன்றைக்கு லிங்கராஜனின் எந்தச் செய்கைக்காகப் பயந்து ஓடியிருந்தாளோ, இன்று திரும்பி வந்திருக்கும் இவள் யாருக்கும் பயப்படுபவளாக இல்லை.

இவள் தன்னிடம் எதை எதிர்பார்க்கிறாள்? இவள் அரசனுக்கு நன்மை செய்யப் போவதில்லை. கெடுதல் செய்வதானால் தான் அதைத் தடுத்து விட வேண்டும். தடுக்க முடியும்; ஆனால் இதென்ன இந்த வம்சத்தின் கர்மம்! தந்தை செய்த தவறு பெரிதாக வளர்ந்து இந்த கடுமையான பெண்மணியாக இன்று அவனது மகனுக்கு ஆபத்தாக வந்திருக்கிறதே! தான் கெடுத்த பெண்ணை நாற்பது வருடங்களுக்கு முன் ஊரை விட்டு ஓட்டிய பொழுது லிங்கராஜன் இந்த நாற்பது வருடங்களுக்குப் பிறகு தனது பாதகச் செயல் தன் மகனை இவ்வாறு வந்து சூழ்ந்து கொள்ளும் என்று அவன் அறிந்திருப்பானா? அறிந்திருந்தால் அவ்வாறு செய்திருப்பானா?

எப்படிச் சொல்ல முடியும்? தவறு செய்தால் கெடுதல் விளையும் என்பதை மனிதர்கள் அறிய மாட்டார்களா? "அதகேன பிரயுக்தேன பாபம் சரதிபூருஷ: அனிச்சன்னிவ வார்ஷ்ணேய பலாதிவ நியோஜித:" என்று அர்ஜுனன் கேட்கவில்லையா? மனிதன் எந்த வேளையில் ஏன் தவறி நடந்து கொள்கிறான் என்பதை அவனே சொல்ல முடியாது.

இவ்வளவு தூரம் நினைத்த தீட்சிதர் கீதாசாரியனின் உபதேசத்தை நினைக்கத் தொடங்கினார்.

அந்த நினைவின் ஊடே அவரது தம்பியின் முகம் தெரிந்தது. அது லேசாக மறைந்து அவனது இந்த மகளின் முகம் தெரிந்தது. தம்பிக்காக, தம்பியின் இந்த மகளுக்காக தீட்சிதர் இரங்கினார்.

10

அன்று மத்தியானம் வீரராஜனுக்கு மங்களூரிலிருந்து ஒரு கடிதம் வந்தது. அதை எழுதியவர் மங்களூரில் ஆங்கில கிழக்கிந்தியக் கம்பெனியின் பிரதிநிதியாக வீற்றிருந்த கலெக்டர். கடிதத்தில் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது; "குடகு நாட்டு அரசர் ஸ்ரீ சிக்கவீர ராஜேந்திர உடையார் அவர்கள் சமுகத்தில் மங்களூரிலிருக்கும் கிழக்கிந்தியக் கம்பெனியின் பிரதிநிதி செலுத்தும் வணக்கங்கள். சமுகத்திற்கு உடனே தெரிவிக்க வேண்டிய சங்கதி ஒன்று நடை பெற்றிருப்பதால் நானே இந்தக் கடிதத்தை எழுதும் உரிமையை எடுத்துக் கொண்டிருக்கிறேன். விஷயத்தை மரியாதைக்குரிய சென்னை கவர்னர் பெருமகனுக்கும் தெரியப் படுத்தியுள்ளேன். அவரிடமிருந்தும் தங்களுக்குக் கடிதம் வரலாம். மங்களூரின் நமது வட்டாரத்தின் பாணே கிராமத்திலுள்ள நமது பிரஜை ஒருவரின் வீட்டு மருமகளை இந்த வாரம் யாரோ கடத்திக் கொண்டு சென்று விட்டதாக புகார் வந்தது. விசாரித்ததில் இதைச் செய்தவர்கள் குடகின் ஜனங்கள் என்று தெரிய வந்தது; அந்தப் பெண்ணை மடிகேரிக்கு எடுத்துச் சென்று விட்டார்கள் என்றும் தெரிய வந்தது. இந்த விஷயங்களைத் தெரியப் படுத்தியவர்கள் இன்னும் சில விஷயங்களையும் தெரியப் படுத்தியுள்ளார்கள். அவைகள் எவ்வளவு வரையில் உண்மை என்பதை உறுதி படுத்திக் கொண்டு மீண்டும் சமுகத்திற்கு எழுதுகிறேன். தற்சமயம் நான் சமுகத்தில் செய்து கொள்ளும் விண்ணப்பம் என்னவென்றால் இந்தக் கடத்தலைச் செய்த உங்கள் நாட்டு ஜனங்கள் தங்களது மந்திரியாக இருக்கும் ஸ்ரீ பசவய்யா அவர்களின் பெயரைச் சொன்னதாக நமது காதுக்கு எட்டியுள்ளது. இதை நான் நம்பவில்லை. ஆனால் இந்தப் பேச்சு எங்கள் வரையில் வந்து விட்டதால், ஆங்கில சக்கரவர்த்தியின் நண்பரும், கனம் பொருந்திய கம்பெனியாரின் நிரந்தர நண்பரும் ஆன தங்களுக்குத் தெரியாமல் இருக்கக்கூடாது. ஆகையால் இதை சமுகத்திற்குத் தெரியப் படுத்தியுள்ளேன். சென்னையிலிருந்து கடிதம் வருவதற்குள்ளாகவே இந்த விஷயம் விசாரிக்கப்பட்டு இதில் தமது மந்திரி அவர்களுக்கு ஏதும் சம்பந்தம் இல்லை என்று முடிவு ஏற்படுமென நம்புகிறேன். இது தமக்கும் எங்கள் மன்னருக்கும் இடையே

உள்ள நட்புக்குச் சாதகமாகும். எனவே இது விஷயமாகத் தகுந்த நடவடிக்கை எடுத்துக் கொள்வீர்கள் என்பது என் நம்பிக்கை. விசுவாசம் எப்போதும் போல இருக்கட்டும். இப்படிக்கு, எப்போதும் சமுகத்தின் வணக்கமுள்ள சேவகன்."

கடிதத்தின் கீழே பிரதிநிதியின் கையொப்பம் இருந்தது.

3. பூர்வ கதை

11

மாலை வேளையில் சுற்றிலும் இருள் சூழ்ந்து வருவதைப்போல வீரராஜனைச் சூழ்ந்து வந்து கொண்டிருந்த இந்த அபாயங்களின் சொரூபம் நன்ருக விளங்க வேண்டுமானல் இதன் பின்னணியாக உள்ள கதையைச் சிறிது தெரிந்து கொள்ளவேண்டும்.

வீரராஜன் பிறவி துஷ்டன் அல்ல. ஆனல் அவன் வாழ்ந்த முப்பத்து மூன்று வருடங்களில் தன்னைவிட துஷ்டன் இன்னெருவன் இருக்கமுடியாது என்ற அபிப்ராயத்தைப் பல பேர்களுக்கு உண்டாக்கி விட்டான். அப்படி ஒருவன் இருப்பானல் அவன் இந்த அரசனுக்கு அவனது எல்லாக் கெட்ட காரியங்களிலும் மந்திரியாக இருந்து உதவி செய்து வந்த நொண்டி பசவன்தான்.

முக்கியமாக, வீரராஜனின் அதிருஷ்டம் நல்லதல்ல. அரச வம்சத்தில் பிறந்த அவன் மூத்த மகனின் குழந்தையாகப் பிறந்திருந்தால் அரசனுகக் கூடியவன் என்ற எண்ணத்தோடு வளர்ந்திருப்பான். வீரராஜன் ஆண்டு கொண்டிருந்த காலம்: அவன் தம்பி லிங்கராஜன் அண்ணனின் கருணையால் ஒரு மனிதனுகியிருந்தான். இவன் தம்பியின் மகனுகப் பிறந்தான். அண்ணு இந்த மகனை சுவீகாரம் எடுத்துக் கொள்வாரோ என்று தம்பிக்கு ஓர் ஆசை. அவர் அப்படி ஒன்றும் செய்யவில்லை. அப்பொழுது வீரராஜன் பராக்கிரமசாலியான அரசன். அவனது வீரம், தர்ம பரிபாலனம், நல்லாட்சி இவை அவனுக்கு மக்களின் பிரியத்தையும் மரியாதையையும் சம்பாதித்துக் கொடுத்திருந்தது; வேற்றரசர்களின் மதிப்பையும் அவன் பெற்றிருந்தான். ஆங்கிலக் கம்பெனி அதிகாரிகளின் கௌரவத்தையும் பெற்றிருந்தான். அவனுக்கு அப்பொழுது ஒரு மகள் இருந்தாள். மகன் பிறக்க மாட்டான் என்று சொல்லக்கூடிய வயதும் அல்ல. அவன் எதற்காக சுவீகாரம் எடுத்துக் கொள்ளவேண்டும்? அப்படி எடுத்துக் கொள்வதானலும் அவனுக்கு இன்னெரு தம்பி இருந்தான்; அவன் லிங்கராஜனுக்கு மூத்தவன்; அவனுக்கு ஒரு மகன் இருந்தான்; அந்தப் பையனை எடுத்துக் கொள்ளலாம். எனவே ஐந்தாறு வயதுச் சிறுவனுக இருந்தபோதே இந்தப் பையனின் காதில் விழுந்தவை தந்தை பெரியப்பாவைப் பற்றிப் பேசிய

பொறுமை நிறைந்த வார்த்தைகளும், இந்தச் சகோதரர்களின் கூட்டாளிகள் பேசிக்கொண்ட போட்டியும், குரோதமும் நிறைந்த பேச்சுக்களும்தான். இவ்வாறு ராஜகுமாரனின் மனம் குரூர மாக வளர சந்தர்ப்பம் சேர்ந்தது.

இதற்குத் தகுந்தவாறு இவன் ஆறு வயதுப் பையனாக மற்ற பையன்களோடு சேர்ந்து விளையாடும்படி ஆனபொழுது இவ னுக்கு லாயத்து வீட்டு பசவன் கூட்டாளியானான். பசவன் யார், என்ன என்று ஒருவருக்கும் தெரியாது. அவன் வீரராஜனை விடக் கொஞ்சம் பெரியவன்; கண்களிலே ஒரு பளபளப்பு; நல்ல சுறு சுறுப்பு. இள வயதில் காலில் ஏதோ அடிபட்டு கால் முறுக் கிக் கொண்டிருந்தது. அது எப்பொழுது நேர்ந்ததென்று அவ னுக்கே தெரியாது. இதனால் அவன் கொஞ்சம் நொண்டியபடி தான் நடப்பான். திக்கற்ற சிறுவன் நொண்டியபடி நடந்தால் ஊரெல்லாம் அவனை நொண்டி என்றே அழைத்தது. இவ்வாறு பசவனின் பெயரே நொண்டி என்றாகிவிட்டது. பெரியவர்கள், "டேய் நொண்டி" என்று அழைத்தால் இவன் எதிர்த்துச் சொல் கிறாற்போல இல்லை. மற்றவர்கள் அப்படி அழைத்தால் அவனுக் குக் கோபம் வரும். "உங்கப்பா எனக்குப் பேர் வைத்தாரா, நீ இப்படிக் கூப்பிடுவதற்கு?" என்பான். லாயத்துச் சிறுவனின் கோபத்தை யார் பொருட்படுத்தவேண்டும்? எப்படியோ அவ னுக்கு இணக்கமில்லாமலே அவன் பெயர் நொண்டி என்றே ஸ்திரமாகிவிட்டது. தெரியாதவர்கள் அவன் பெயரே நொண்டி தானோ என நினைத்து மிகுந்த மரியாதையுடன் கூப்பிடுவதாக நினைத்துக்கொண்டு, "ஐயா, நொண்டியப்பரே" என்று அழைப் பார்கள். இன்னும் சிலர் கிண்டலா இல்லையா என்று தெரியாத வகையில் கூப்பிடுவார்கள். இவைகளினால் சிறு வயதிலேயே பசவனின் மனத்தில் கசப்பு மண்டிவிட்டது.

இப்படிப்பட்ட பையன் சுமார் எட்டு வயதில் வீரராஜனின் நண்பனானான். சிறுவனுக்கு சாதாரணமாக நாய், குதிரை, யானை என்றால் பார்க்கவேண்டு மென்ற ஆசை. பசவன் ராஜ குமாரனை லாயத்திற்கும் கொட்டிலுக்கும் அழைத்துச் செல் வான். தான் பழகியிருந்த மிருகங்களோடு அவனையும் பழக்கப் படுத்தி வைப்பான். இவ்வாறு பசவன் வீரராஜனுக்கு மிகவும் வேண்டிய நெருங்கிய நண்பனானான். வீரராஜனின் தாய் ஆரோக் கியமுள்ளவள் அல்ல. எனவே அவன் தாதியர்களின் கையில் வளரவேண்டியதாயிற்று. அவன் தந்தை லிங்கராஜனோ எப்

போதும் விவகாரத்திலேயே முழுகியிருந்தான். இல்லாவிட்டாலும் அவன் ஒன்றும் வீரராஜனைக் கவனித்திருக்கப் போவதில்லை; ஆனால் வியவகாரத்தின் நெருக்கலால் அவன் மகன் விஷயமாகச் சிறிது கூட கவனம் செலுத்த முடியாமற் போய்விட்டது. பசவன் சிறு வயதிலிருந்து மாடுகள், நாய்கள் இவைகளின் அருகில் வளர்ந்தவன். அப்படிப்பட்ட ஜீவன் அந்தப் பிராணிகளின் கொட்டில் வாழ்க்கையைக் கண்டு கண்டு சில ருசிகளை வளர்த்துக்கொள்கிறது; சில வெட்கங்களை இழந்து விடுகிறது. இவனது நண்பனான வீரராஜனுக்கு மாடுகள், நாய்கள் இவைகளின் காம நுகர்ச்சி அனுபவத்தைப் பார்ப்பது ஒரு வேடிக்கையான விளையாட்டாயிற்று. இதற்குள்ளாக தொட்ட வீரராஜன் இறந்து தேவம்மாஜி ராணியாகி, தேவம்மாஜி பட்டத்தை இழந்து லிங்கராஜன் அரசனாகி, வீரராஜன் யுவராஜா ஆனான்; அரண்மனை வைபவத்தோடு கூடிய புதுவாழ்வில் இளவரசனுக்குரிய வசதிகளுக்கும், அந்தஸ்தானத்தின் அபாயங்களுக்கும் வீரராஜன் ஆளானான்.

இப்போதுதான் லிங்கராஜனுக்குத் தன் மகனைக் கவனிக்க முடிந்தது. அவன் தானே தனக்குப்பின் மன்னனாக வேண்டியவன்? அவனுக்காகத் தானே தான் நியாய அநியாயத்தையும் லட்சியம் செய்யாமல் அரச பதவியைக் கைப்பற்றியது? இவனுக்காகவும், இவன் தங்கைக்காகவும், லிங்கராஜன் இதுவரை குழந்தைகளைக் கவனிக்காமலிருந்தது அவர்களின் மீது பிரியம் இல்லாததால் அல்ல. சீட்டாட்டத்தில் அமர்ந்தவர்கள் அம்மா இறந்த செய்தி வந்தாலும் எழுந்திருக்கமாட்டார்கள். சிம்மாசனத்தைக் கைப்பற்ற முயலும் வியவகார விளையாட்டு, சீட்டாட்டத்தைவிட அதிகமாக மெய்மறக்கச் செய்யும் விளையாட்டு. சீட்டாட்டத்தில் பணம் தான் போகும். இந்த விளையாட்டில் உயிரே போய்விடும். சிறிது கவனம் பிசகினாலும் வம்சமே நிர்மூலமாகிவிடும்; மற்றவர்களுக்குத் தான் செய்ய நினைத்திருந்த கேட்டை தனக்கே மற்றவர்கள் செய்து விடுவார்கள். அரச பதவி கைக்குக் கிட்டிய பிறகு மகன் பேரில் கவனத்தைத் திருப்பியபொழுது அவன் நொண்டி பசவனின் நட்புப் பிடியில் சிக்கியிருப்பதை அறிந்தான். இது நல்லதல்ல என்று யாருக்கும் தோன்றுவதுபோல அந்தத் தந்தைக்கும் தோன்றியிருக்கவேண்டும். ஆனால் அவன் அந்த நட்புக்குக் குறுக்கே நிற்கவில்லை. ஒருமுறை மகனையும் ஒரு முறை நொண்டியையும் விளையாட்டு அதிகமாகப் போகிறது

ஜாக்கிரதை என்று கண்டிப்பான்; மற்றபடி அவர்களை அவர்கள் பாட்டிற்கு விட்டுவிட்டான்.

அப்படி கண்டிக்கும் வேளையில் லிங்கராஜன் தன்னிடம் ஏதோ ஒரு தாட்சண்ணியத்துடன் நடந்துகொள்வதாக நொண்டிக்குத் தோன்றியது; இதற்கு முன்னர் இவன் தன்னை ஏதோ ஒரு கருணையுடன் பார்ப்பதுபோலத் தோன்றியது. இக்காரணத்தினால் அவன் பெரும்பாலும் லிங்கராஜனின் மனசுப்படியே நடந்து கொள்ளவேண்டுமென்று முயற்சித்து வந்தான். ஆனால் அவர்கள் சென்றுகொண்டிருந்த வழியில் எப்பொழுதும் அந்த எல்லையைக் கவனத்தில் வைத்துக் கொள்வது முடியாமற்போய் விடும். வீரராஜனின் மனம் இருந்த நிலை, வளர்ந்த நிலையில், இப்படி ஆனால் எப்படி இருக்கும், அப்படி ஆனால் இன்னும் எப்படி இருக்கும் என்று பரீட்சித்துப் பார்க்கும் ஒரு தன்மை அதிகமாக இருந்தது. சிறு குழந்தை ஒன்றை ஒரு நாய் துரத்தும் பொழுது அது பயப்படுவதைப் பார்ப்பதில் அவனுக்கு ஒரு சந்தோஷம். பெண்கள் பேசிக் கொண்டிருக்கும் இடத்தில் அவர்கள் மத்தியில் ஒரு பாம்பைத் தூக்கி எறிந்து அவர்கள் பயந்து அலறுவதைக் கேட்பதில் ஒரு ஆனந்தம். தோட்டத்திலிருந்து ஊருக்குள் வருபவர்களுக்கு எதிராக முகத்தில் கரியைப் பூசிக் கொண்டு போய் பிசாசுபோல் கத்தி அவர்கள் பயந்து ஓடுவதைப் பார்ப்பதில் ஒரு குதூகலம். இப்படிப்பட்ட சமயங்களில் பத்து பேர் பயந்தால் ஒருவன் பிசாசானாலும் சரி, எதுவானாலும் சரி என்று தைரியமாக எதிர்ப்பதும் உண்டு. உத்தய்யதக்கன் ஒருமுறை அப்படிச் செய்தான்; அப்பொழுது இவர்கள் அகப்பட்டுக் கொண்டார்கள். லிங்கராஜனிடம் புகார் வந்தது; அவன் மகனையும் அவன் நண்பனையும் தண்டித்தான். இதுவல்லாமல் இவர்கள் இரவில் ஜோடியாக பெண்கள் படுத்திருக்கும் இடங்களுக்குச் சென்று சேட்டைகள் செய்வார்கள்; அல்லது பெண்களைப் பிடித்துத் தங்கள் இருப்பிடத்திற்குக் கொண்டு வந்து குறும்புகள் செய்வார்கள். இவைகளெல்லாம் எப்போதும் புகார் வருவதில்லை. மேலும் ராஜகுமாரன் ஊரின் காலிப்பையன்களுடன் சூதாட்டம் ஆடுவதும் உண்டு. ராஜகுமாரன் என்பதற்காக இவனுக்கு அங்கேயும் சில சலுகைகள், அதிகாரங்கள்; மற்றவர்களுக்கு ஏற்படுவது போன்ற நஷ்டங்கள் இல்லை. இதனால் சண்டை, கூப்பாடு, சில வேளைகளில் அடிதடி. இவ்

வாறு தந்தை இறந்தது, தாயும் உடன்கட்டை ஏறி, தான் அரசனாகும்போது வீரராஜன் காலிகளின் கும்பலில் ஒருவனாக இருந்தான்.

12

இவன் முழுவதும் கெட்டுக் குட்டிச்சுவராகப் போகாமல் காப்பாற்றக் கூடிய ஒரே ஒரு சக்தி இவனுக்கு ராணியாக லிங்கராஜன் ஏற்பாடு செய்திருந்த கௌரம்மா தான்.

கௌரம்மா குடகப் பெண், அவள் தந்தை பெப்ப நாட்டின் குஞ்சலகேரி கிராமத்து முக்காடிர புட்டய்யா. தனது பிராந்தியத்தில் பிரபலமாக இருந்தவனாதலால் இவன் அரசரின் கவனத்துக்கு ஆளானான். தொட்டவீர ராஜேந்திரனுக்கு வேண்டியவனாக இருந்து, லிங்கராஜன் பட்டத்திற்கு வருவதற்கு சாதகமாக இருந்ததனால் அவனுக்கும் வேண்டியவனாகி விட்டான். லிங்கராஜன் தனது மகனுக்குப் பட்டம் கட்டுவதற்கும் இவன் சம்மதம் இருந்தது. இவ்வாறிருக்கும் பொழுது லிங்கராஜன் மகனுக்காக ஒரு பெண்ணைத் தேடும் பொழுது புட்டய்யாவின் மகளைக் கொள்வது சகஜமே.

கௌரம்மா ராணியாவதற்குத் தகுந்தவளே; அவளுக்கும் அவள் கணவனுக்கும் வயதில் வித்தியாசம் இருக்கவில்லை. அவள் அழகியும் கூட. ஆனால் அழகைவிட அதிகமாக அவளைப் பார்ப்பவர்களின் மனத்தைக் கவர்ந்தது அவளுடைய கம்பீரமான நடத்தை, பெண்ணிக்கு சிறிது அதிகமோ என்று சொல்லக் கூடிய உயரம்; நேராக நிற்பாள், நேராகப் பார்ப்பாள், பேச்சு அதிகமில்லை, அவள் மனத்தில் என்னென்ன எண்ணங்கள் ஓடிக் கொண்டிருக்கின்றன என்பதை சுலபத்தில் கண்டு கொள்ள முடியாது. மிகவும் தீவிரமான சந்தர்ப்பங்களில் மட்டும் அவளது கண்கள் ஒரு புது ஒளியால், மகிழ்ச்சியையோ, அலுப்பையோ கோபத்தையோ காட்டும்; அடுத்த கணம் மீண்டும் கம்பீரம் அதை மறைத்து விடும். கௌரம்மாவின் சுபாவம் சகஜமாக ஆளும் சுபாவம்.

கலியாணத்தின் போது இவளுக்குப் பதினாறு வயது. பிறந்த வீட்டில் தாராளமாக ஓடி ஆடிக் கொண்டிருந்த பெண் அரண்

மனைக்கு வந்தாள்; சுமார் தன் வயதே ஆன கணவனுக்குத் துணையானாள். கணவன் அப்பொழுது தன் பெயரை மாசு படுத்திக் கொண்டிருந்ததை அவள் அப்பொழுது தான் அறிந்தாள். முதலே தெரிந்திருந்தால் தான் அவள் என்ன பண்ணமுடியும்? 'இவன் நல்லவனல்ல. இவனை நான் கலியாணம் செய்து கொள்ள முடியாது' என்று சொல்லியிருக்க முடியுமா? குடகின் அன்றைய வாழ்க்கை முறையில் இது முடியாத காரியம். லிங்கராஜன் பிடிவாதக்காரன்; கல்மனம் படைத்தவன். அண்ணனின் விருப்பத்துக்கு விரோதமாக அந்த அண்ணன் மகளைச் சிம்மாசனத்திலிருந்து இறக்கி, தான் அரசனாகி, அரச பதவி நிலைக்க வேண்டுமானால் தன்னை எதிர்ப்பவர்களை நாச மாக்குவதே வழி என்று தீர்மானித்திருந்த குரூர மனம் படைத் தவன். 'உன் மகள் என் மகனுக்கு ராணியாக வேண்டும்' என்று அவன் விரும்பிய பொழுது அந்த மகள் முடியாது என்று சொன்னால் அவளுக்கும், அந்தத் தந்தை முடியாது என்றால் அவனுக்கும், தன்னிஷ்டப்படி தண்டனை விதிக்க அவன் பின் வாங்குபவனல்ல. எப்படியும் மனைவியராகி வாழ வேண்டியது எல்லாப் பெண்களுக்கும் தலையில் எழுதியது தான். சம்சாரம் நல்லபடியாக அமைந்து விட்டால் புண்ணியம். அமையவில்லை, தலைவிதி என்பது இருந்தே இருக்கிறது; பொறுத்துக் கொள்ள வேண்டியது தான்.

வந்த புதிதில் வீரராஜன் மனைவியை ஒருவித ஆசையுடன் நடத்தி வந்தான். அவனுக்குப் பெண் என்பது புதிதல்ல. ஆனால் இத்தகைய கம்பீரமான நடை, பார்வை, பேச்சு கொண்ட பெண்ணை அவன் இதற்கு முன் அவ்வளவாகப் பார்த்ததில்லை. அரண்மனைப் பெண்களில் ஒரிருவர் இந்தத் தன் மனைவியைப் போல நின்றது, நடந்தது உண்டு. ஆனால் இவளிடம் அவர் களிடம் காணாத ஏதோ ஓர் அழகு காணப்பட்டது. வீரராஜன் அதன் ரகசியம் என்ன என்பதை ஆராயப் புகவில்லை; ஆராய வேண்டிய காரணமும் இல்லை. ஆனால் அந்த அழகுடன் வாழ்க்கை நடத்துவதில் ஒரு இன்பம் இருக்கிறது என்பதைக் கண்டு கொண்டான்; தன் மனைவியைக் குறித்து ஒரு வகையான பெருமையை அநுபவித்து வந்தான்.

ஆனால் இது வெகு நாட்கள் நடக்கவில்லை. பதம் தவறிய வாழ்க்கை வாழ்ந்து வாழ்வின் ருசியைக் கெடுத்துக் கொண்டு

விட்ட அவனின் சுபாவத்திற்கு கௌரம்மாவின் தூய்மையான சுபாவம், சம்பிரதாயம், ருசிகள் இவைகள் திருப்தியை அளிக்க வில்லை. தப்பட்டை, தமுக்கு, டமாரம் இவைகளின் சப்தத்தைக் கேட்டு இன்பம் துய்க்கும் காதுகள் குழல், வீணை இவைகளின் நுட்பமான ஒலியைக் கேட்டு இன்புறும் பண்பை இழந்து விடுகின்றன. சேர் சேராக அரிசியை வாயில் அடைத்துக் கொண்டு தின்னும் யானை ஓர் எறும்பு சர்க்கரையை மெல்லுகிற மாதிரி தீனியை மெல்லாது. பசவனின் சகவாசத்தால் பாதை தவறுவதற்கு முன்னர் அவன் கௌரம்மாவை அடைந்திருந்தால் அவன் வாழ்க்கை எவ்வளவு மட்டத்தை அடைந்திருக்குமோ யார் சொல்ல முடியும்? ஆனால் துரதிருஷ்டவசமாக கணவனும் மனைவி யும் ஒன்றாகச் சேர்ந்து வாழ்க்கையை ஆரம்பிக்கும் போதே அவன் சேற்றில் புரள்வதே இன்பம் என நினைக்கும் எருமை யைப் போன்று வழி தவறியிருந்தான், ருசியைக் கெடுத்துக் கொண்டிருந்தான்.

இரவில் நேரங்கழித்து வீட்டுக்கு வருவதற்கும், வந்ததும் குடி போதையில் நினைவிழந்து நடப்பதற்கும், தன் நடத்தையை ஏற்காத மனைவியைத் திட்டுவதற்கும், அடிப்பதற்கும் அவனுக்கு வெகு நாட்கள் ஆகவில்லை. கௌரம்மா முதலில் இவனது இந்த நடத்தையைக் கண்டு வெறுப்புற்றாள்; கோபமடைந்தாள். கணவனுடன் சண்டையிடவில்லை. அவனது அறையை விட்டு வெளியே சென்றாள்; பக்கத்து அறைக்குச் சென்று கதவை மூடிக்கொண்டு படுத்து விட்டாள். கணவன் கதவைத் தட்டி னான்; கூவி ஆர்பாட்டம் செய்தான். பணியாட்களெல்லாம் கூடி விட்டனர். என்ன சமாசாரம் என்று தெரிந்து கொள்வதற்காக லிங்கராஜனே அங்கே வந்தான். மருமகள் வெறுப்புற்று அறைக்குள் சென்று தாளிட்டுக் கொண்டு விட்டாள் என்பதை அறிந்து, அவன் மகனை அதட்டி, "காலையில் பேசிக் கொள்வாயாம். இப்பொழுது பேசாமல் போய் படுத்துக் கொள், அமர்க்களம். பண்ணாதே" என்றான்.

மறுநாள் லிங்கராஜன் மருமகளிடம் வந்து, "நீ இந்த வீட்டின் லக்ஷ்மியாக விளங்க வேண்டுமென்று நானே உன்னைத் தேடிப் பிடித்துக் கொண்டு வந்திருக்கிறேன். உன் புருஷனுக்குப் புத்தி இல்லை. இருவருக்குமான புத்தியை நீ ஒருத்தியே உபயோகிக்க வேண்டும். நீயும் வாழ வேண்டும், அவனையும் வாழ வைக்க

வேண்டும். கணவன் நல்லவனல்ல என்பதற்காக மனைவியும் நல்லவளல்லாதவளானால் அரண்மனை என்ன, வெறும் மனையும் வாழாது. அரண்மனை நிர்வாகம் உன்னுடையது என்று நினைத்துக் கொள். அது உன்னுடையதாக இருக்க வேண்டுமானால் இவனைக் கணவனாக வாழ வை. மரத்தை காப்பாற்றிப் பழம் சாப்பிடுவது கெட்டிக்காரத்தனம்," என்றான்.

மாமியார் தேவக்காவும் மருமகளுக்கு சமாதானம் சொன்னாள். "அரண்மனைக்கு வரும் பெண்ணுக்கு இந்த அவமானம் கட்டி வைத்த ஆஸ்தியம்மா. நான் அநுபவித்ததுதான் இதெல்லாம். உன் மாமனார் என் கண்ணெதிரிலேயே இன்னொருத்தியுடன் கூத்தடித்தார். அவர் மகனே தேவலை. கண் மறைவாக அக்கிரமம் செய்கிறான். பொறுத்துக் கொள் அம்மா; இரண்டு குழந்தைகளைப் பெற்றுக் கொள்; அதுவே உலகம் என்று நினைத்துக் கொள். பெண் என்று பிறந்த பிறகு இதற்கு மேல் வேறு சுகம் இல்லை. இவன் இன்னொருத்தியையோ இரண்டு பேரையோ ராணி என்று சொல்லி அரண்மனைக்கு அழைத்து வரக் கூடாது என்று சொல்லியிருக்கிறேன். ஆணை வைத்திருக்கிறேன். அதன்படி நடந்து கொண்டானால் அதுவே போதும்"

கௌரம்மா தைரியத்தோடு கெட்டிக்காரத்தனமும் உடையவள். அவள் மாமனாரின் பேச்சையும் கேட்டாள்; மாமியாரின் அறிவுரைக்கும் செவிமடுத்தாள். அவர்கள் சொன்னதில் உள்ள உண்மையை உணர்ந்தாள். முதல் இரவு நிகழ்ச்சியை மறந்து கணவனுடன் சமாதானத்தோடு வாழத் தொடங்கினாள். முடியுமானால் கணவனை அவன் செல்லும் தவறான வழியிலிருந்து திருத்திக் காப்பாற்ற வேண்டும் என உறுதி பூண்டாள்.

மூன்று வருடங்களில் அவர்களுக்கு ஒரு குழந்தை பிறந்தது. பெண் குழந்தை, எல்லாக் குழந்தைகளையும் போல அக்குழந்தையின் முகத்திலும் தாய் தந்தையர்களின் முகங்களின் ஜாடை சொல்ல முடியாதவாறு கலந்திருந்தது. குழந்தை ஆணாக இருந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும் என எண்ணினான். இருந்தாலும் பெண் குழந்தையை ஏற்றுக் கொண்டான். அக்கறையோடு வளர்த்தான். வீரராஜனும் குழந்தையின் அருகில் வரும்போது நல்லவனாக மாறிவிடுவான். எவ்வளவு கோபமாக இருக்கும் பொழுதும் கூட அக்குழந்தையைக் கண்டால் சாந்த

மடைவான். அந்தக் குழந்தையைப் பெற்றவள் என்ற காரணத்திற்காகத்தானே என்னவோ கௌரம்மாவிடமும் அவன் சிறிது தாட்சண்ணியத்துடன் நடந்து கொள்ள ஆரம்பித்தான்.

லிங்கராஜன் இன்னும் சில வருடங்கள் வாழ்ந்திருந்தால் வீரராஜன் ஆட வேண்டிய ஆட்டங்களையெல்லாம் ஆடித்தீர்த்து விட்டு நல்லவனாக மாறியிருப்பானோ என்னவோ. ஆனால் கௌரம்மா அந்தப் புண்ணியம் செய்திருக்கவில்லை. அந்த வருடம் தந்தை இறந்து இந்த மகன் அரசனானான். கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்று என்றைக்கும் விட அதிக அக்கிரமங்கள் புரியத் தொடங்கினான்.

13

லிங்கராஜனின் காலத்தில் சிறிது பயத்தோடு நடந்து கொண்டு வந்த நொண்டி தனது நண்பனே அரசனான பிறகு மிக்க தைரியத்துடன் நடந்து கொள்ள ஆரம்பித்தான். நான்கு வருடங்களுக்குள்ளாக அவன் அரண்மனையின் முக்கிய உத்தியோகஸ்தனாகி விட்டான். மூன்று வருடங்களில் வீரராஜன் அவனை மந்திரியாக நியமித்துக் கொண்டான்.

வீரராஜன் அரசனான பொழுது போபண்ணா, லக்ஷ்மீ நாராயணப்பா இவர்களோடு பொன்னப்பா என்பவர் மூன்றாவது மந்திரியாக இருந்தார். அரசனின் அட்டூழியங்களைப் பொறுக்கும் வரையில் பொறுத்துப் பார்த்து விட்டு மூன்று வருடங்களில் தம் பதவியை விட்டு விலகி நின்றுவிட்டார். தாம் உடல்நிலை சரியாக இல்லையென்றும் தனக்கு பதிலாக தன் ஸ்தானத்தில் வேறு யாரையாவது நியமித்துக் கொள்ளலாம் என்றும் சொன்னார். இவ்வாறு மூன்றாவது மந்திரி ஸ்தானம் காலியாக இருக்கவே பசவனை இந்த ஸ்தானத்தில் நியமிப்பது அரசனுக்கு சுலபமாகப் போய்விட்டது. இந்த சந்தர்ப்பம் ஏற்படாவிட்டால் அவன் நான்காவது மந்திரியாகியிருப்பானோ என்னவோ? பொன்னப்பாவின் வைராக்கியத்தினால் அதற்குத் தேவை இல்லாது போயிற்று.

நாய்களின் நாயகனாக இருந்தவன் தங்களுக்கு இணையாக மந்திரியாக வந்து உட்கார்ந்தது மற்ற மந்திரிகளுக்குப் பிடிக்கவில்லை. ஆனால் அது பற்றித் தாங்கள் என்ன செய்ய முடியும் என்று அவர்களுக்குத் தெரியவில்லை. போபண்ணாவும் லக்ஷ்மீ நாராயணய்யாவும் தத்தமக்குள் பேசிக் கொண்டனர். சரியான சமயம் பார்த்து போபண்ணா அரசனிடம் தமது அசமாதானத்தை எடுத்துச் சொல்ல வேண்டியது என்று நிச்சயித்தனர்.

பசவனை மந்திரி என அழைக்க இவர்கள் ஒப்பவாட்டார்கள் என்பதை வீரராஜன் அறிவான். பசவனும் இதை அறிவான். ஆனால் அவனுக்கு ஒரு மந்திரியின் அதிகாரங்களைக் கொடுப்பது அவர்களுடைய பல வேலைகளுக்கு அநுகூலமாக இருக்கும். ஆகையால் இவனும் ஒரு மந்திரி, நாடுகளின் அதிகாரிகள் இவனது உத்தரவுகளை நிறைவேற்ற வேண்டும் என்று சொல்லிச் சொல்லி பசவனின் மந்திரி பதவியை வீரராஜன் ஸ்தாபித்து விட்டான். சபைக் கூட்டங்களில் அவன் மந்திரிகளோடு மந்திரியாக உட்காரும் விஷயத்தில் மாத்திரம் அவசரப் படவில்லை. பசவய்யா மந்திரி உத்தரவிட்டார் என்றும், போபண்ணா மந்திரி கூறாமல் நாங்கள் இதைச் செய்ய மாட்டோம் என்றும் பல இடங்களில் வாதப் பிரதிவாதங்கள் நடந்தன.

ஒரு வருடத்திற்குப் பிறகு நவராத்திரி பிரதமையன்று அரண்மனையில் கூடிய சபையில் மந்திரிகளின் வரிசையில் புதிதாக ஒரு ஆசனம் போடப்பட்டிருந்தது. இந்த ஏற்பாடு பசவனதாகையால் இதை லக்ஷ்மீ நாராயணய்யாவும், போபண்ணாவும் சபைக்கு வந்தபிறகு தான் கவனித்தனர். இரண்டு நிமிடங்களுக்கு முன்னதாக வந்த போபண்ணா இதைப் பார்த்தவுடனேயே அதன் நோக்கம் என்ன என்பதைப் புரிந்து கொண்டார். லக்ஷ்மீ நாராயணய்யா வந்ததும் அவரோடு இதைப் பற்றிப் பேசி, "இன்றைக்கு இந்த விஷயத்துக்கு ஒரு முடிவு கட்டி விட வேண்டும்" என்றார். லக்ஷ்மீ நாராயணய்யா, "எல்லோர் எதிரிலும் வேண்டாமே" என்றார். போபண்ணா, "இது எல்லாருடைய மரியாதையையும் பொறுத்த விஷயம். எல்லாரெதிரிலுமே பேசுவோம், தவறல்ல" என்றார்.

ஒரு நிமிடம் கழித்து போபண்ணா லக்ஷ்மீ நாராயணய்யாவிடம், "ஆமாம் ஐயா, இதற்கு ஒரு உபாயம் செய்கிறேன்" என்று கூறி ஒரு சேவகனை அழைத்து, "ஏய் இங்கே உட்காரப் போவது

யார்?'' என்று கேட்டார். சேவகன், "எனக்குத் தெரியாது, ஐயா. காரியஸ்தர் சொன்னார், போட்டிருக்கிறோம்'' என்றான். போபண்ணா, "சம்பந்தப் பட்ட சிப்பந்தியைக் கொஞ்சம் இங்கே வரச்சொல்'' என்றார்.

சிப்பந்தி வந்து கைகூப்பி எட்ட நின்றான். போபண்ணா, "இந்த ஆசனம் புதியது. இதை எடுத்து விடச் செய்'' என்றார். சிப்பந்தி, "சரி ஐயா'' என்று கூறி அரண்மனைக்குள் சென்றான். ஆசனத்தை யாரும் அகற்ற வில்லை. இரண்டு நிமிடங்களில் உள்ளேயிருந்து நொண்டி வந்தான்; மந்திரிகளின் அருகே சென்று கைகூப்புவது போல் ஒப்புக்குச் செய்தபடி "மன்னர்தான் இந்த ஆசனத்தை இங்கே போடச் செய்தார். அதை அகற்ற முடியாது'' என்றான்,

போபண்ணாவுக்குக் கோபம் வந்தது. "இந்த ஆசனத்தை இங்கிருந்தது எடுக்கவில்லையானால் நாங்கள் இங்கே உட்காரப் போவதில்லை. மன்னர் வந்த பிறகு இங்கே சச்சரவு கூடாது. இப்படி நாங்கள் சொல்வதாக இப்பொழுதே போய்த் தெரிவி'' என்றார்.

நொண்டி உள்ளே சென்று சீக்கிரமே திரும்பி வந்து அந்த மூன்றாவது ஆசனத்தை எடுத்துவிடச் செய்தான்.

சபை வழக்கம் போல நடந்து முடிந்தது. சபையிலிருந்து உள்ளே செல்லும் போது வீரராஜன் மந்திரிகள் உள்ளே வந்து தன்னுடன் பேசி விட்டுப் போக வேண்டுமென்று உத்தரவு அனுப்பினான். லக்ஷ்மீ நாராயணய்யாவும் போபண்ணாவும் உள்ளே சென்றார்கள்.

14

வீரராஜன் கூடத்திலேயே நின்றிருந்தான். மந்திரிகள் வந்ததும் அவர்களையும் அங்கேயே நிறுத்திக் கொண்டான். கோபத்தால் கரகரத்த குரலில் போபண்ணாவைப் பார்த்து, "எமது ஆஸ்தானத்தில் யார் எங்கே உட்காரவேண்டும் என்று தீர்மானம் செய்யவேண்டியவர் நீர்தானா, போபண்ணா?'' என்று கேட்டான்.

போபண்ணா ஏதோ சொல்ல வாய் திறந்தார். அவரைப் பேச விடாமல் லக்ஷ்மீநாராயணய்யா, "மன்னருக்கு ஆட்சேபமில்லா

விட்டால் இது பற்றி மாலையில் பேசுவோம். இப்பொழுது சமூகம் மிகவும் ஆயாசமடைந்திருக்கிறீர்கள்" என்றார்.

வீரராஜன், "எமது ஆயாசம் கீயாசம் பற்றி நீங்கள் யாரும் கவலைப்படவேண்டாம். இப்பொழுதே சொல்லுங்கள். குடகின் மன்னர் யார்? நானா, நீங்களா?" என்றான்.

லக்ஷ்மீநாராயணய்யா, "இது நானோ, போபண்ணாவோ ஏற்றுக் கொள்ளவோ, நிராகரிக்கவோ செய்யக்கூடிய காரியமல்ல. நாட்டுப் பிரமுகர்களும் வர்த்தகர்களும் சம்மதிக்கவேண்டிய விஷயம். அவர்களை விரோதித்துக்கொள்ள வேண்டாமென்பதற்காக போபண்ணா இவ்வாறு செய்தார்."

வீரராஜன்: நீங்கள்? வேண்டாமென்று சொன்னீர்களா?

லக்ஷ்மீநாராயணய்யா: போபண்ணா இதுபோன்ற காரியங்களில் என் மனத்தை அறிந்தே நடப்பவர். குடிமக்களை விரோதிக்துக் கொள்ளக்கூடாது என்பதற்காக நானும் சம்மதித்தேன்.

போபண்ணா வீரராஜனுக்கும் பேச சந்தர்ப்பம் அளிக்காமல், "நாவிதன் ஒருவன் நமது அருகில் உட்காருவதற்கு நாட்டின் குடகன் ஒருவன் கூட ஒப்பமாட்டான்," என்றார்.

வீரராஜன்: உங்கள் வீட்டில் சம்மதிக்க வேண்டாம். அரண்மனையில்? அது யாருடையது?

லக்ஷ்மீநாராயணய்யா ஏதோ பதில் சொல்லப் போனார். போபண்ணா அவரைத் தடுத்து, "நானே சொல்லுகிறேன் ஐயா" என்று கூறி மன்னனிடம், "சபை மன்னரின் வீடல்ல. பிரமுகர்கள், பெரியவர்கள், வர்த்தகர்கள் முதலியோர் சேரும் இடம். யார் எங்கே உட்காரவேண்டும் என்பதைப் பெரியோர்கள் நிர்ணயித்து வைத்திருக்கிறார்கள். அது நாடு முழுவதும் சம்பந்தப்பட்ட விஷயம். அதை மாற்றவேண்டுமென்றால் அரசர் முதலில் ஜனங்களின் சம்மதத்தைப் பெறவேண்டும்," என்றார்.

வீரராஜன்: வேண்டும்! என்ன வேண்டும்? யார் எங்கே உட்காரவேண்டும் என்று தீர்மானிப்பதற்கு அரசர் உங்களைக் கேட்க வேண்டும்!

போபண்ணா, "மெய்காப்பாளன், காரியஸ்தன் இவர்கள் அரசரின் வீட்டைச் சேர்ந்தவர்கள். நொண்டி உமது மெய்காப்பாளனாக இருக்கலாம், அந்தரங்க மந்திரியாக இருக்கலாம். நாட்டின் மந்திரியாவது எங்களுக்குச் சம்மதமில்லை. மன்னருக்கு எது

பிடிக்கிறதோ அதைச் செய்யலாம். நொண்டி மந்திரியானால் நாங்கள் மந்திரியாக இருக்க முடியாது. நாங்கள் மந்திரியாக இருக்கவேண்டு மென்று நீங்கள் விரும்பினால் நொண்டி எங்கள் துணைவனாக இருக்கக் கூடாது. மன்னர் அவனைப் படுக்கை யறைக்கு அழைத்துச் செல்லட்டும் அல்லது பூஜையறைக்கு அழைத்துச் செல்லட்டும்; எங்களுக்கு ஆட்சேபனை இல்லை. சபையில் எங்களுக்குச் சமமாக அவன் உட்காருவதை மக்கள் ஒப்பமாட்டார்கள்,'' என்றார்.

பேச்சு எல்லையை மீறிவிட்டது என்பதை அரசன், லக்ஷ்மீநாரா யணய்யா, போபண்ணா மூவரும் உணர்ந்தனர். லக்ஷ்மீ நாராய ணய்யா போபண்ணாவிடம், "போபண்ணா, இந்தப் பேச்சு இத் துடன் போதும்'' என்று கூறி அரசனிடம், "நான் முதலிலேயே தெரிவித்துக் கொண்டேன்; இந்த விஷயங்களை யெல்லாம் மாலையில் பேசுவோம் என்று. மறுபடியும் அதே வேண்டுகோள் விடுக்கிறேன்; இப்பொழுது யாரும் இந்தப் பேச்சைத் தொடக் கூடாது. அரசரிடமும் நான் பிரார்த்தித்துக் கொள்கிறேன்,'' என்றார்.

வீரராஜன், "சரி. நீங்கள் பெரியவர்கள், மந்திரிகள், எல்லாம் சரிதான். ஆனால் நம்மை ஆளும் மன்னர்கள் அல்ல. சாயங் காலமே பேசுவோம் வாருங்கள்'' என்றான்.

லக்ஷ்மீநாராயணய்யா, "உத்தரவு'' என்று சொல்லி குனிந்து கை கூப்பினான்; வீரராஜன் பதில் வணக்கம் செய்தான். போபண்ணா அரை மனத்துடன் சிறிது கை கூப்பியபடி செய்து முகத்தில் கோபம் மறையாமலேயே பின் திரும்பினார்.

உள்ளேயிருந்து சபை மண்டபத்தின் கதவருகே இவர்கள் வந்த போது பசவன் இவர்கள் அருகே வந்தான்; "என்ன போபண்ணா அவர்களே, என்னை நாவிதனுக்கு விட்டீர்கள்'' என்று இடக்காகக் கேட்டான். போபண்ணாவும் இடக்காகவே, "டேய் நொண்டி, நீ யார் என்பதையே மறந்து சும்மா படியேறிக் கொண்டே இருக் கிறாய். படிகளுக்கு மேலே மாடி இல்லை, ஜாக்கிரதை. நீ அம்பட் டன் இல்லையா? உன் தாய் அம்பட்டச்சி. நீ வேறு என்னவாக முடியும்?'' என்றார்.

"சரி, என்னைப் பற்றிப் பேசினீர்கள். வாய்க்குக் கடிவாளம் இல்லாமல் இன்னும் என்னென்ன பேசப் போகிறீர்களோ உங்க ளுக்குத்தான் தெரியும். ஆனால் உங்கள் மிரட்டலுக்கெல்லாம்

பயப்படுபவனல்ல நான். அதைத் தெரிந்து கொள்ளுங்கள். என் கால் நொண்டிதான். ஆனால் புத்தி நொண்டி அல்ல.''

"போடா, நாய் மேய்ப்பவனே. என்னோடு பேசுகிறாயா? போ, போய் நாய்களை யெல்லாம் பார்த்துக்கொள். சபையில் வந்து உட்காருவதற்கு நீ யார்? போய் நாய்களைக் கவனித்துக்கொள்," என்று போபண்ணா அரண்மனைப் பக்கம் கையைக் காட்டிவிட்டு சபை மண்டபத்தை நோக்கி நடந்தார்; லக்ஷ்மீநாராயணய்யாவும் அவருடன் நடந்தார்.

அங்கிருந்த ஊழியர்களும் மற்றும் சிலரும் இவர்களுக்குக் கை கூப்பினார்கள். இருவரும் எல்லோருக்கும் வணக்கம் தெரிவித்து விட்டு சபையிலிருந்து வெளியேறினர்.

15

வீரராஜனுக்கு ஒரே தங்கை லிங்கராஜன் தான் இறந்து போவதற்கு முன்னால் குடக இளைஞன் ஒருவனுக்கு லிங்கம் கட்டுவித்து, அந்த மகளை அவனுக்குக் கொடுத்து, கல்யாணம் செய்வித்தான். இது அந்த அரண்மனையின் வழக்கம். கல்யாணத்திற்கு முன்னாள் மணமகனுக்கும் "சென்னபசவன்" என்ற நாமகரணமும் நடந்தேறியது. தங்கை, மகளுக்காக அரண்மனைகொளத்து அரண்மனையைக் கொண்டுத்தான். அந்த அரண்மனையில் ஏராளமான நகை நட்டுக்களையும், பாத்திரம் பண்டங்களையும் சேர்த்து வைத்திருந்தான். மகளையும், மருமகனையும் அந்த அரண்மனையில் சுகமாக இருக்கச் செய்து வாரத்திற்கு மூன்று முறை அங்கே சென்றோ அல்லது அவர்களைத் தன்னிடம் வரவழைத்தோ பார்த்து சந்தோஷமடைவான். இறக்கும் போது மகனிடம், "தங்கையைப் பிரியத்துடன் பார்த்துக் கொள்ளப்பா" என்று கூறியிருந்தான்; மருமகளை அருகே அழைத்து, "நான் உனக்கு ஒரு குறைவும் வைக்கவில்லை. உன் நாத்தனாருக்குக் கொடுத்திருக்கும் எந்த ஒரு துரும்பையும் நீ எடுத்துக் கொள்ளவேண்டாம். அவளுக்கு கொடுத்தது அவளுடையதாகவே இருக்கட்டும்," என்று கூறியிருந்தான். அந்த மருமகள், "நீங்கள் கவலைப்பட வேண்டாம். உங்கள் மகள் நன்றாக இருந்தால் எனக்கு வயிற்றெரிச்சல் கிடையாது" என்று பதிலளித்திருந்தாள்

அரண்மனையின் மருமகனாகாமல் இருந்திருந்தால் சென்ன பசவன் ஒரு சாமானிய கௌரவமுள்ள கிருகஸ்தனாக வாழ்ந்திருப்பானோ என்னவோ. ஆனால் துரதிர்ஷ்ட வசமாக லிங்கராஜனின் கண்கள் இவனை மருமகனாகத் தேடிப் பிடித்தன. இதனால் இவன் தன்னிடம் ஏதோ ஒரு விசேஷம் இருக்கிறது என்று பிரமை கொண்டான். மற்றவர்களிடமெல்லாம் எவ்வளவோ கடுமையாக நடந்து கொள்ளும் லிங்கராஜன் மகளுக்காக இந்த மருமகனிடம் சிறிது அதிகமான தாட்சண்ணியத்துடனேயே நடந்து கொண்டான். அதே சமயத்தில் மகன் வீரராஜனை அயோக்கியன், துஷ்டன், முரடன் என்றெல்லாம் திட்டுவான். ஒவ்வொரு சமயம் வீரராஜனிடம், "பார் அவரை. அரண்மனையில் பிறந்தவரல்ல மருமகப் பிள்ளை. ஆனாலும் எவ்வளவு கம்பீரமாக நடந்து கொள்கிறார். அவர் காலடியில் நுழைந்து பார். அப்பொழுதாவது உனக்குச் சிறிது புத்தி வருகிறதா பார்," என்பான். இப்படிப்பட்ட பேச்சுக்கள் சென்னபசவய்யனுக்குத் தன் குணாதிசயங்களைக் கண்டு திருப்தியடைந்த ஒரு பெரிய மனிதனின் புகழ்ச்சிச் சொற்களாகத் தோன்றின. ஒவ்வொரு சமயங்களில் அவனுக்குத் தன் மாமனார் மகனுக்குப் பதிலாக தன்னையே மன்னனாக்கி விடுவாரோ என்ற பிரமை கூட ஏற்படுவதுண்டு.

அப்படியொன்றும் நடக்கவில்லை. வீரராஜனே தான் பட்டத்திற்கு வந்தான். பட்டத்திற்கு வருவதற்கு அவனைவிடத் தனக்கே தகுதி அதிகம், உரிமையும் அவ்வளவொன்றும் குறைவில்லை என்கிற மனோரதத்தில் வாழ்ந்து வந்த சென்னபசவய்யன் ராஜதுரோகம் என்கிற விஷ வாயுவை சுவாசித்துக் கொண்டு இன்றைக்கில்லா விட்டாலும் கூடிய சீக்கிரம் தான் அரசனாக வந்தே ஆக வேண்டும் என்று தனக்குள்ளாகவே முடிவுகட்டியிருந்தான். இந்த எண்ணத்தின் பிரதிபலிப்பாகவே இருந்தன அவனது பேச்சும் நடத்தையும். லிங்கராஜன் இறந்த ஒரு வருடத்திற் குள்ளாக அரசனுக்கும் மருமகப் பிள்ளைக்கும் மனஸ்தாபம் ஏற்பட்டு விட்டது. சிறிது சிறிதாக இந்த மனஸ்தாபம் வளர்ந்து பெரிதாகி, கடைசியில் நான்கு வருஷங்களுக்கு முன்னால் வீரராஜன் தன் தங்கையைத் தன் அரண்மனைக்கு அழைத்துக் கொண்டு வந்து திருப்பி அனுப்பாமல் அங்கேயே நிறுத்திக் கொண்டு விட்டான். மருமகப் பிள்ளை சென்னபசவன் வந்து காலில் விழுந்து கேட்டுக் கொண்டதாலும், ராணி மிகவும் வேண்டிக் கொண்டதாலும்,

அவன் மகள் அத்தை விஷயமாக மிகவும் பரிந்து கெஞ்சிக் கேட்டுக் கொண்டதாலும் அவளை அப்பொழுது திருப்பி அனுப்பினான். மைசூர் ஆங்கிலேயர்களின் கைவசமாகி, பெங்களூரில் ராஜப் பிரதிநிதியும் ஆங்கில அதிகாரிகளும் நிலையூன்றிய பிறகு சென்ன பசவன் தனது மைத்துனன் மீது பல புகார்களைச் செய்து, மைசூர் அரசரைப் பட்டத்திலிருந்து நீக்கியது போல அவனையும் விலக்கி ராஜ்யத்தைத் தனது மனைவி தேவம்மாஜிக்குக் கொடுக்க வேண்டுமென்று ஒரு கடிதத்தை எழுதியதாக வீரராஜனுக்குத் தெரியவந்தது. அப்பொழுது அவன் தானே அப்பங்கொளத் திற்குச் சென்று சென்னபசவனைத் தாக்கி அடித்து கலகம் விளை வித்து. தங்கையைப் பலாத்காரமாகப் பிடித்து இழுத்து வந்து அரண்மனையிலேயே சிறை வைத்து விட்டான். இது நடந்து இப்போதைக்கு கிட்டத்தட்ட இரண்டு வருடங்கள் சென்று விட்டன. ராணியும், மகளும் எவ்வளவோ வேண்டிக்கொண்டார் கள். அரசன் அவர்களின் வேண்டுகோளுக்குச் செவி சாய்க்க வில்லை. சென்ன பசவன் மீண்டும் ஆங்கிலேயர்களிடம் புகார் செய்தான். இது அரசனின் மனத்தை இன்னும் சிறிது கல்லாக் கியது. தேவாம்மாஜியின் சிறைவாசம் முடிவில்லாததாயிற்று.

16

அரங்கிலே பசவனுக்கு மரியாதை ஸ்தானம் கொடுக்கும் விஷய மாக மந்திரிகளுடன் சண்டையிட்ட வீரராஜன் காம வாசனையால் இன்னோரிடத்திலும், காசின் ஆசையால் மற்றோரிடத்திலும் ஜனங்களின் விரோதத்தைச் சம்பாதித்துக் கொண்டான். மித மற்ற பெண் சேர்க்கையால் இளைஞனை அவன் மேக நோய்களை சீக்கிரமே வரவழைத்துக் கொண்டது வியப்பில்லை. நோய் வந்தது; கூடவே வைத்தியனும் வந்தான். குளிகையும், பஸ்ம மும் கஷாயமும் அவன் வயிற்றில் நிறைந்தன. சாஸ்திரீயமான வைத்தியம் உபயோகப் படாமற்போகவே வேறு சம்பிரதாய வைத்திய முறைகள் நடைபெற்றன. ஆணின் உடலின் நோய்க்கு புதுப் பெண், இளைய பெண் இவர்களின உடலின் சேர்க்கையே மருந்து என்பது அந்த சம்பிரதாயங்களில் ஒன்று. அரசனாக இருப்பவனுக்கு இந்த வைத்தியம் செய்து கொள்வது கஷ்ட

மல்ல; வேண்டிய அளவு அது நடந்தது. வைத்தியத்துடன் உடலின் அபத்தியமும் அதிகமாக இருந்தது. இவைகளின் பயனாக முப்பதே வயதான அரசனின் உடல் வெம்பிப் போய்விட்டது.

முதலில் அரசனுக்கு மது, மாமிசம், மங்கை இவைகளை அளித்து அவனது நட்பை சம்பாதித்துக் கொண்ட நொண்டியே இப்பொழுது அவனுக்கு எச்சரிக்கை சொல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது. ஆனால் கெட்டுப் போவதற்கு இந்த நண்பனின் சகாயத்தைச் சம்மதத்தோடு ஏற்றுக்கொண்ட வீரராஜன் பிழைப்பதற்கு அவனுடைய எச்சரிக்கைச் சொற்களை அவ்வளவாக ஏற்றுக் கொள்ளவில்லை.

மன்னர் சருக்குமரத்தில் சருக்கிக்கொண்டிருக்கிறான், தன் ஸ்தானத்தைப் பலவீனமாக்கிக் கொண்டிருக்கிறான் என்று பசவனுக்குப் பல முறைகள் தோன்றியது. கூடவே, அதே சருக்குமரத்தின்மீது அவனது கால்களோடு தன்னுடைய இடுப்பையும் கட்டிக்கொண்டு தானும் சருக்கிக் கொண்டிருப்பதை அவன் உணர்ந்தான். இதன் முடிவு ஒன்றே. அது சருக்குமரத்தின் அடியில் வந்து விழவேண்டியதுதான். இடையில் தடுத்துக் கொண்டு நிற்க முடியாது என்பதை அறிந்து அவன் பல முறைகளில் நிராசையடைந்தான்.

17

அரசாட்சியின் அவியவஸ்தை அதிகமாக ஆக நாட்டு மக்கள் அநேகர் இயற்கையாக வீரராஜனின் விஷயத்தில் கசப்படைந்தனர். கொடுத்த நிலவரியையே மறுபடியும் கொடுக்கவேண்டிய தொந்தரவுக்காளானவர்கள், விருப்பமின்றித் தங்கள் வீட்டுப் பெண்களை அரண்மனைக்கு அனுப்பவேண்டி வந்தவர்கள், ஒன்றில்லாவிட்டால் ஒரு சந்தர்ப்பத்தில் அரசனிடமோ, பசவனிடமோ வசவு வாங்கியவர்கள் இவர்கள் கசப்படைந்தவர்களில் முக்கியமானவர்கள். இப்படிப்பட்டவர்கள் நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் இருப்பார்கள்.

பசவன் மந்திரியானபொழுது இப்படிப்பட்ட ஜனங்களின் எண்ணிக்கை பெரிதாகவே இருந்தது. மந்திரிகளும் மற்றப் பெரி

யவர்களும் அப்பொழுதாவது அரசனை எதிர்த்து, கண்டித்துப் பேசி நிலைமையைச் சீர்படுத்துவார்கள் என்று இந்த மக்கள் எதிர்பார்த்திருந்தனர். அப்படி ஏதும் நடைபெறாமல் பசவனும் ஒரு மந்திரி என்றே சர்வ சாதாரணமாக நடந்துவருவதைப் பார்த்தபொழுது இந்த ஜனங்களில் சிலர் அந்தக் காரியத்தை நாமே செய்து விடுவோம் என்று நினைத்துக் கொண்டனர்.

இப்படிப் பட்டவர்களில் பாகமண்டலத்து சென்ன வீரய்யன் என்பவன் ஒருவன். இவனுடைய முன்னோர்கள் அரண்மனையில் சேவகத்தில் இருந்தவர்கள். அப்பாஜி அரசனாகியிருக்க வேண்டும். அவனை விலக்கிவிட்டு லிங்கராஜன் அரசனாகிவிட்டான் என்பதைக் குறித்து இவன் வீட்டாருக்கு அதிருப்தி தொட்டவீரராஜன் அப்பாஜியைக் கொல்வித்தான் என்று நாட்டு மக்களுக்குச் சந்தேகம். அப்பாஜி மைசூர் நாட்டில் இருக்கிறானென்றும், அவருடைய மகனும் அங்கேயே இருக்கிறானென்றும், இன்றில்லாவிட்டால் நாளை மக்கள் இந்த துஷ்ட அரசனை விலக்கிவிட்டு அப்பாஜியின் மகனை அழைத்துவர வேண்டுமென்றும், அப்படி இல்லாவிட்டால் நாட்டுக்கு க்ஷேமம் இல்லையென்னும் இவர்கள் வீட்டார் எண்ணி வந்தனர். இதற்கு இதுதான் சமயமென்று சென்னவீரனுக்குத் தோன்றியது. பெங்களூருக்குச் சென்று அங்கே அப்பாஜி பெயரை மாற்றிக்கொண்டு வாழ்கிறானென்பதைத் தெரிந்துகொண்டு ரகசியத்தில் அவனது மகனின் பெயரை உபயோகப்படுத்த அநுமதி பெற்றுக் கொண்டான். மிகவும் ரகசியமாக தனக்கு மிகவும் ஆப்தர்களான சிலரிடத்தில் இந்தப் பேச்சை எடுத்தான்.

இப்படி எண்ணங்கொண்ட ஜனங்களெல்லாம் அவனுடைய திட்டத்திற்கு ஆதரவு தந்தனர். இன்னும் சிறிது முயற்சி இவ்வாறே சூடாக நடந்திருந்தால் சென்னவீரனின் நோக்கம் நிறைவேறியிருக்குமோ என்னமோ! ஆனால் நடுவே இந்தப் பேச்சு யாருடைய அஜாக்கிரதையினாலோ பாக மண்டலத்துப் பெரியவரின் காதில் விழுந்தது. "அவன் இப்படிச் செய்வதென்றால் என்ன அர்த்தம்? நாட்டில் பெரியவர்கள் யாரும் இல்லையா? சிறியவர்களுக்கு ஏன் இந்த அதிகப் பிரசங்கம்?" என்று அவர் கோபித்துக் கொண்டார்.

ரகசியம் அம்பலமாகிவிட்டது சென்னவீரனின் ஏற்பாட்டுக்குத் தடையாயிற்று. அது மாத்திரம் அல்ல. அவனது முயற்சியைப்

பற்றிய சங்கதி பசவனின் செவிகளில் விழுந்து அவன் அதை அரசனுக்குத் தெரியப்படுத்தினான்.

அரசன், "இந்தப் பயல்கள் யார்? அவர்களைப் பிடித்துக் கொண்டு வா" என்றான். இதையறிந்த சென்னவீரன் மைசூருக்கு ஓடினான்.

பசவன் அவன் கண் மறைவாகப் போகாதபடி அவனைக் கண் காணிக்கச் செய்து, அரசரின் அநுமதி பெற்று மைசூரின் சீப்-கமிஷனருக்கு ஒரு கடிதம் எழுதினான். அதில், "நம் தேசத்தில் துரோகம் செய்துவிட்டு அபராதியான சென்னவீரன் என்பவன் தப்பித்துக் கொண்டு சென்று உங்கள் நாட்டில் புகுந்திருக்கிறான். அவனைப் பிடித்து எங்களிடம் அனுப்பித் தரவேண்டும்" என்று அந்த அதிகாரியைக் கேட்டிருந்தான்.

மைசூரில் குற்றம் செய்தவர்கள் குடகுக்கு ஓடுவதும் குடகில் குற்றம் புரிந்தவர்கள் மைசூருக்கு ஓடுவதும் புதிதல்ல. அப்படிப் பட்ட சமயங்களில் இந்த அரசாங்கங்கள் ஒன்றை யொன்று இத்தகைய உதவி செய்யும்படி கோருவதும் புதிதல்ல. சீப்-கமிஷனர் சென்னவீரனைப் பிடித்து பசவனின் ஆட்களுடன் அவனைக் குடகுக்கு அனுப்பி வைத்தார். அனுப்பும்போது வழக்கம்போல, "இவன் செய்த குற்றம் என்ன? இவனுக்கு என்ன தண்டனை விதிக்கப்பட்டது என்பதை இந்த விவகாரம் முடிந்ததும் தெரியப்படுத்தவும்" என்று கேட்டுக் கொண்டான்.

பசவன் சென்னவீரனை அரசனுக்கு எதிரே நிறுத்தி வைத்தான். அரசன், "குடகுக்கு வேறு அரசனைக் கொண்டு வரக்கூடிய வீரன் நீ தானா?" என்று அவனைக் கேட்டான்.

சென்னவீரன், "நான் ஒன்றும் பேசப் போவதில்லை" என்றான்.

அரசன், "உன் அப்பாஜி எங்கிருக்கிறான், அவருடைய மகன் எங்கிருக்கிறான் சொல். உன்னை விட்டு விடுகிறோம்" என்றான்.

சென்னவீரன், "நான் உங்களிடம் எதையும் சொல்லமாட்டேன்," என்றான்.

அரசன், "போகட்டும். இந்தக் காரியத்தில் யார் யார் உனக்கு உதவுவதாகச் சொன்னார்கள் என்பதையாவது சொல்லு. உன்னை விட்டுவிடுகிறோம்," என்று ஆசை காட்டினான்.

சென்னவீரன், "நான் அப்படிப்பட்ட நாய் அல்ல," என்று பதிலளித்தான்.

அரசன் உடனே அருகே இருந்த கைத் துப்பாக்கியை எடுத்து அவனை நோக்கிச் சுட்டான். சென்னவீரன் அங்கேயே பிணமாக விழுந்தான்.

இது நடந்தது நால்கு நாடு அரண்மனையை யடுத்த காட்டில். சென்னவீரனின் இந்தச் சாவைப் பற்றி ஜனங்கள் ஊகித்துத் தெரித்து கொண்டார்களே ஒழிய அங்கிருந்த யாருடைய வாயிலிருந்தும் மற்றவர்கள் யாருக்கும் செய்தி போகவில்லை. இருந்த இரண்டு ஆட்களிடம் பசவன், "இந்த விஷயத்தை யாராவது வெளியே விட்டால் அவர்களுக்கும் இதே தான் கதி. ஜாக்கிரதை" என்று பயமுறுத்தியிருந்தான். அரசன், "இந்தப் பிணத்தை நாய்களுக்குப் போடு" என்று பசவனுக்கு உத்தரவிட்டான்.

சில மாதங்களுக்குப் பிறகு சீப் கமிஷனர் ஒரு கடிதத்தில் பல விஷயங்களுக்கிடையே இதையும் பிரஸ்தாபித்து, "குற்றவாளி சென்ன வீரனின் விசாரணை முடிந்ததா? அதன் முடிவு என்ன?" என்று கேட்டிருந்தார். பசவன் எழுதிய பதிலில் மற்ற விஷயங்களுக்கெல்லாம் பதில் எழுதியிருந்தான். இந்த சமாச்சாரத்திற்கு மட்டும் ஏதும் பதில் எழுதவில்லை.

சீப்-கமிஷனர், "இந்த விஷயமாக பதில் வரவில்லை, எழுதும் போது மறந்திருக்கலாம். இப்பொழுதாவது தயவுசெய்து தெரியப்படுத்த வேண்டும்," என்று மீண்டும் கடிதம் எழுதினார். அதற்குப் பதில் எழுதவேண்டாம் என்று அரசன் கூறி விட்டான். அதை நினைவு படுத்தி மேலும் நான்கு கடிதங்கள் வந்தன. ஒன்றிற்கும் பதில் இல்லை.

கடைசியில் சீப்-கமிஷனர், "எமது கடிதங்களை இவ்வாறு அலட்சியப் படுத்துவது நம்மிடையே உள்ள மரியாதைக்குப் பாதகம் விளைவிப்பதாக இருக்கிறது. கனம் கவர்னர் துரை அவர்கள் இது விஷயத்தில் மிகவும் மன வருத்தம் அடைந்துள்ளார். இந்தச் சிறிய விஷயத்தில் மனஸ்தாபம் ஏற்படுவது தங்களுக்குப் பிடிக்காது என்பதை நாங்கள் அறிவோம். நிலைமையைச் சரிபடுத்துவது தங்கள் மனதைப் பொறுத்தது," என்று எழுதினார்.

வீரராஜன் இதற்கும் பதில் எழுதவில்லை. ஆங்கிலேயருக்கும் அவனுக்கும் இடையே இது ஒரு கடனாகவே நின்று விட்டது.

18

சென்ன வீரன் இவ்வாறு அரசனின் கோபத்திற்கு பலியாகி விட்ட போதிலும் அவன் ஆரம்பித்து வைத்த வேலை அத்துடன் நின்றுவிட வில்லை. சென்ற காவேரித் திருவிழாவின் போது அவன் அரசனின் விஷயத்தில் வெறுப்புற்றிருந்த பல இளைஞர்களை நேரில் கண்டு இது விஷயமாகக் கச்சை கட்டிக் கொண்டு நிற்கவேண்டுமென்று வேண்டிக் கொண்டிருந்தான். அதற்கு முன்னதாகவே இவர்களும் இவர்களைப் போன்ற இன்னும் சில யுவர்களும் தேசத்தின் நிலைமையைக் குறித்து யோசித்து "காவேரி மக்கள்" என்ற சங்கம் ஒன்றை அமைத்துக் கொள்ள வேண்டும் என்றும் அவரவர்கள் இருக்குமிடத்திலேயே இருந்து கொண்டு ரகசியமாக சங்கதிகளைத் தெரிந்துகொண்டு அரசனாலும், பசவனாலும் மக்களுக்கு விளையும் துன்பங்களை நிவர்த்திக்க வேண்டும் என்று தீர்மானித்திருந்தார்கள். சென்ன வீரனின் முயற்சியால் அது காரியாம்சத்திற்குக் கொண்டு வரப்பட்டது.

சங்கத்தை ஏற்படுத்தும் பொறுப்பை ஏற்றுக் கொண்டவன் போபண்ணாவின் சகோதரி மகன் உத்தய்யா, இவன் குடகின் சேனையில் ஒரு படைவீரன். இது விஷயமாக அவன் ஏற்கனவே ஒரு முடிவுக்கு வந்திருந்தான்: நண்பர்கள் அவசரப் பட வேணாம் என்று சொல்லியிருந்ததால் பொறுத்திருந்தான். இனிப் பொறுப்பது அனர்த்தம் என்று இப்போது மனத்திற்குத் தோன்றியதால் சங்கத்தை ஏற்படுத்தினான். அந்த வருடம் அவனை மடிகேரிக்குக் காவலாக நியமித்தார்கள்; இது அவனுடைய நோக்கத்திற்கு உதவுவதாயிற்று. மடிகேரிக்கு வந்த இரண்டொரு தினங்களுக்குள்ளாக அவன் சங்கத்தில் சேருவதாக இருந்த இளைஞர்களுக்கு வெவ்வேறு இடங்களுக்கு வருமாறு சொல்லியனுப்பி, ஒவ்வொருவனுக்கும் நாட்டில் நிலவும் அபாயமான நிலைமையை விளக்கி இதை ஒழிப்பதற்குச் சங்கம் அவசியமல்லவா என்று கேட்டான். எல்லோரும் ஆம் என்று ஒப்புக் கொண்டார்கள். "நீ முன்னால் நில், நானும் காவேரியின் மகன் உன் பின்னால் நிற்பேன். சொன்னதைச் செய்வேன். உயிரைக் கொடுக்கச் சொன்னாலும் கொடுப்பேன்" என்று ஒவ்வொருவனும் சொன்னான். உத்தய்யன் இவர்களுக்கு "காவேரி மக்கள்" "மக்களின் தாய்"

என்ற இரண்டும் தமது கூட்டத்தாரின் சங்கேதச் சொற்கள் என்று கூறி அவர்கள் இனி எப்படி நடந்து கொள்ளவேண்டும் என்பதைப் பற்றிப் பின்னால் சொல்வதாகத் தெரிவித்தான்.

இவ்வாறு உத்தய்யனோடு இணையாக ஆணை வைத்து நின்றவர்கள் வர்த்தகர் தலைவன் சிக்கண்ண செட்டியின் அண்ணாவின் மகன் ராம செட்டி, தீட்சிதரின் தம்பி மகன் நாராயணன், லக்ஷ்மீ நாராயணய்யாவின் தம்பி மகன் சூரி, திவான் பொன்னப்பாவின் மாப்பிள்ளை முத்தன், அரண்மனை வைத்தியனின் மகன் விசுவம், அரண்மனை சிப்பந்தி ஒருவரின் மகன் மாசன். ஒவ்வொருவரும் தங்களுக்குள் மிகவும் நெருங்கிய ஒருவரைத் துணை சேர்த்துக் கொள்ளலாம், தங்களுக்குள் ஒருவருக்கொருவர் பேசிக்கொள்ளக்கூடாது, எந்த விஷயமாக இருந்தாலும் உத்தய்யனுக்குத் தெரியப்படுத்தி எவ்வாறு நடந்து கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ள வேண்டும். எந்த வேலையானாலும் உத்தய்யன் சொன்ன பிறகு தான் மேற்கொண்டு நடக்கவேண்டும்.

இவர்களில் மாசனுக்கு அரண்மனையில் ஒரு சிப்பந்தி வேலை. மற்றவர்களுக்கு அந்த வேலைத் தொந்தரவெல்லாம் கிடையாது. சென்னவீரன் அஜாக்கிரதையினால் அரசனிடம் சிறைப்பட்டு விட்டபோது சங்கப் பிரமுகர்கள் அவன் எவ்வாறு நடந்து கொள்வானோ என்று கவலைக்கு ஆளானார்கள். அவன் இவர்களில் யாருடைய பெயரையாவது சொல்லி அரசன் இவர்களில் யாரைப் பிடித்திருந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஆனால் அப்படி யொன்றும் நடக்கவில்லை. அவன் மாத்திரம் பிறகு காணப்படவே இல்லை. அரசன் அவனைத் தொலைத்துவிட்டிருக்க வேண்டும் என்பதை இவர்கள் தெரிந்து கொண்டார்கள்; சென்னவீரனின் மரணத்திற்குப் பழி தீர்க்க வேண்டியது தங்கள் கடமை என நிச்சயித்துக் கொண்டனர்.

சென்னவீரன் எப்படியோ மறைந்துபோன சில மாதங்களுக்கெல்லாம் மடிகேரிக்கு ஒரு வீர சைவச் சாமியார் வந்தார். அவர் தன் பெயர் அபரம்பரர் என்று சொல்லிக் கொண்டார். அவர் ஊரிலும் சுடுகாட்டிலும் இருந்து கொண்டு தன்னிடம் வருபவர்களுக்கு இரண்டு நல்ல வார்த்தைகள் சொல்வது, சிறிது வைத்தியம் செய்வது, ஆகிய காரியங்களில் ஈடுபட்டார். வந்த சில நாட்களுக்கெல்லாம் சாமியார் பிட்சைக்காக வீடு வீடாகச் சென்றலையும்போது காவேரி மக்கள் சங்கத்தார் ஒவ்வொருவரையாக அறிமுகம் செய்து கொண்டார். அவர்களுடன் பழக்கம்

முற்றிய பிறகு நாட்டு நிலைமையைப் பற்றி அவர்களோடு பேசி, தானும் ஒரு காவேரி மகன் என்ற நம்பிக்கையை அவர்களுக்கு ஊட்டினார். உத்தய்யன், சின்ன தீட்சிதன், குரி, ராமசெட்டி, ஆகியோர் சந்தோஷத்துடன் சாமியாரைத் தமது தலைவராக ஏற்றுக் கொண்டார்கள்.

சாமியாரின் உதவியால் சங்கத்தாரின் நோக்கம் வர வர தெளிவாக உருப்பெற்றது. முதல் நோக்கம் அரசனும் பசவனும் துன்புறுத்தும் மக்களை உபாயமாக அத்துன்பத்தினின்றும் விடுவிப்பது. இரண்டாவது அரசாங்கத்தின் பேரில் வெறுப்பும் கசப்பும் கொண்டிருக்கும் பிரமுகர்களைச் சந்தித்து தமது நோக்கம் கைகூடுவதற்கு அவர்களிடமிருந்து கூடுமான உதவியைப் பெறுவது. மூன்றாவது இவ்வாறு கசப்படைந்தவர்களுள் பெரியவர்களாகச் சிலரைத் திரட்டி முடியுமானால் அரசன், பசவன் இவர்களுக்கு விரோதமான ஒரு கட்சியை அமைப்பது. அரசனுக்கு விரோதிகள் இருப்பது தெரிந்து ஆங்கிலேயரகள் மைசூரைப் போலவே குடகையும் முழுங்கத் தருணம் பார்த்துக் கொண்டிருந்தார்கள்; அதைத் தடுத்து அரசாட்சி குடகின் ராஜவம்சத்தாரிடமே இருக்குமாறு பார்த்துக் கொள்வது.

இடையே ஒரு சமயத்தில் உத்தய்யன் சாமியாரிடம், "சாமி, மாமா அவர்களிடம் சொல்லிவிட்டு என் வேலையை விட்டு விடுகிறேன். சங்க வேலைகளிலேயே ஈடுபடுகிறேன்" என்றான். சாமியார், "நீ உன் வேலையை விடவேண்டாம். நீ அதில் இருந்தால் தான் பல பேர் உன் கையில் இருப்பார்கள் அதனால் உங்கள் வேலைக்கு அனுகூலம். அப்படியே இரு பார்ப்போம்" என்றார்.

19

இந்தச் சமயத்தில் தெய்வ இச்சையால் உத்தய்யனின் வாழ்க்கையில் நாடு, அரண்மனை இவைகளையும் பாதிக்கக் கூடியதான ஒரு நிகழ்ச்சி நடந்தது.

மடிகேரியின் காவல் படைவீரனுக்கு அரண்மனைக் காவல் பொறுப்பும் உண்டு. ஆகையால் உத்தய்யன் அரண்மனை உள் வட்டாரங்களில் நடமாடுவது, வேலை பார்ப்பது அவசியமாயிற்று.

உத்தய்யன் அழகான வாலிபன். அவன் ராணிக்கு உறவும் கூட. அண்ணன் மகன் வாலி.

அரண்மனையிலும் அதைச் சுற்றியும் இருந்து கொண்டு ராணியும், ராஜகுமாரியும் எங்கே யாவது போகவேண்டுமானால் அவர்களோடு காப்பாளராக யாரையாவது அனுப்பியோ அல்லது தானே போயோ இவன் ராணிக்கும் ராஜகுமாரிக்கும் உண்மையான விசுவாசததுடன் சேவை செயது வந்தான். குடகப்பையன், மேலும் போபண்ணவின் உறவினன்; இக்காரணங்களினால் அவனுக்குத் தன்னைப் பற்றியே மிகுந்த பெருமை உண்டு. குடும்பத்திற்கு நல்ல பெயர் வருமாறு நடந்து கொள்ள வேண்டுமென்ற சகஜ சுபாவம் அவனுடையது.

இந்த இளைஞன் ராஜகுமாரியைப் பலமுறை பார்த்திருக்கிறான். அவள் அரசகுமாரியாக இல்லாமலிருந்தால் அவன் அவளை மணந்து கொள்ள ஆசைப்படலாம். இந்த சந்தர்ப்பத்தில் அது சரியல்ல. சரியல்ல என்றால் முடியாதது என்றல்ல; அரசன் மகளை எங்கள் வீட்டிற்குக் கொடுங்கள் என்று இன்னொரு அரசர் வந்து கேட்கலாம், மற்றவர்கள் எவ்வளவு பெரிய மனிதர்களாக இருந்தாலும் அப்படிக் கேட்பது தவறு. முதலில் பேச்சு அரண்மனையிலிருந்து ஆரம்பிக்க வேணடியது முறை.

மேலும் அரண்மனை வாசிகள் சைவ மதத்தினர். உத்தய்யன் ராஜகுமாரியை மணந்து கொள்ள வேண்டுமானால் முதலில் லிங்கம் கட்டிக்கொண்டு வீர சைவனாக வேண்டும். இது விஷயத்தில் குடகர்களிடையே விருப்பம் அதிகம் கிடையாது. தான் "காவேரி மக்கள்" கூட்டத்தில் சேர்ந்திருப்பது இந்த ஆசைக்குக் குறுக்கே நிற்பதாக அவனுக்குத் தோன்றவில்லை. அந்த விரோதம் அரசனின் மேல், அரண்மனையின் மீது அல்ல. ராணி, ராஜகுமாரி இவர்களின் பேரில் இவனுக்கு இயற்கையான பக்தி விசுவாசம் இருந்தது.

கல்யாணம் செய்து கொள்ளக் கூடிய சந்தர்ப்பம் குறைவானாலும், இல்லவே இல்லை யென்றாலும் அந்த வயதில் ஆணும் பெண்ணும் ஒருவர் விஷயமாக மற்றவர் ஒரு தாட்சண்ணியத்துடன் நடந்து கொள்ளுவது இயற்கை, வேறு விதமாக அவர்கள் நடக்க முடியாது. அரண்மனைக் காவல் படை வீரனாக முதலில் உத்தய்யன் வந்தபொழுது ராணியைப் பார்த்தான். அப்பொழுது ராணி அவனைப் பற்றிய விவரங்களை யெல்லாம் விசாரித்தாள். போபண்

ணுவின் சகோதரியின் மகனான அவன் தனக்கு எட்டிய உறவு என்று அவள் அறிந்த பொழுது நம் புட்டவ்வாவை இவனுக்குக் கொடுத்தால் நன்றாக இருக்கும் என்று நினைத்துக் கொண்டாள்.

ராணி இவனுடன் பேசிக்கொண்டிருந்த பொழுது மகள் அவளருகே நின்றுகொண்டு வலது கையால் அவளை அணைத்துக் கொண்டு தன் தலையைச் சாய்த்து, தாயின் தோள் மீது வைத்தபடி பார்த்துக் கொண்டிருந்தாள். உத்தய்யன் அழகன், அவனைப் பார்க்கும்போது அவளுக்கு மகிழ்ச்சி ஏற்பட்டது. உத்தய்யன் அதை அறிந்து கொண்டான். அவனுக்கும் மகிழ்ச்சியே.

அன்று இரவு மகள் தூங்கப்போகும் பொழுது ராணி அவள் அருகே அமர்ந்து கொண்டு மெதுவாக அவள் காதில் சொன்னாள்: "புட்டவ்வா, உத்தய்யனை நீ கல்யாணம் செய்து கொள்கிறாயா?"

மகள் மகிழ்ச்சியோடு தாயின் கழுத்தைச் சுற்றித் தன் கைகளை வீசி அவளை இழுத்தணைத்துக் கொண்டு, "அப்பாஜி ஒத்துக் கொள்வாரா அம்மா? அவர் ஒப்பவேண்டுமே?" என்று கேட்டாள்.

அரண்மனையில் செல்லப் பெண்ணாகப் பதினான்கு வருஷங்கள் வளர்ந்த இந்தப் பெண் இன்னும் ஏதும் அறியாச் சிறுமியாக சில விஷயங்களில் நடந்து கொண்டாலும் தந்தையின் வாழ்க்கை முறை, பசவனின் அடிமைத்தனம், போபண்ணாவின் நிர்த்தாட்சண்ணிய சுபாவம், தாயின் விவகாரத் திறமை இவைகளின் காரணமாக, தானும் உலக விவகாரங்களில் சூட்சும மதி படைத்தவளாக இருந்தாள். அவளுக்குத் தன் தந்தையின் மீது உயிர். தன் தாய் ஒருத்தியைத் தவிர வேறு யார் மீதும் அவள் அவ்வளவு அன்பு வைத்திருக்கவில்லை. தன் அப்பா அநியாயமாக ஊர்மக்கள், மந்திரிகள், தன் மனைவி இவர்களை யெல்லாம் விரோதித்துக் கொண்டிருக்கிறாரே என்று அவளுக்கு மிகவும் பச்சாத்தாபமும் துயரமும் உண்டு. அதே சமயத்தில் தன் தாய் மிகவும் பெருந்தன்மையானவள், அவள் இவ்வளவு கஷ்டங்களை அநுபவிக்க வேண்டியிருக்கிறதே என்று வருந்துவாள். அதனாலேயே தன் தாயின் பேரில் அவளுக்கு ஒரு கௌரவம். தன் தகப்பனாருக்குத் தன் மீது மிகுந்த பிரியம் என்பதை ராஜகுமாரி நன்கு அறிவாள், ஆனால் தாய் எதைச் சொன்னாலும் அதற்கு நேர் எதிராகச் செய்யவேண்டியது தன் தந்தையின் சுபாவமாக இருக்கிறது என்பதையும் அவள் அறிந்திருந்தாள். இதை தவிர இந்தப்

பையன் போபண்ணுவின் சகோதரியின் மகன். அரசனுக்கு போபண்ணு, அவன் உறவு, அவனைப் பற்றிய பேச்சு ஒன்றுமே வேண்டாதவை.

சிறுமியான அவள் இவ்வளவையும் இழை இழையாக அந்த நிமிடத்தில் யோசித்தாள் என்று சொல்ல முடியாது; ஆனால் இந்த எண்ணங்களெல்லாம் அவள் மனத்தில் இருந்தவை. இந்த சம்பந்தம் சுலபமானதல்ல என்பதை அவள் கண்டு கொண்டிருந்தாள். அதிகம் யோசிக்காமலே இந்த முடிவு அவளுக்குத் தெளிவாகத் தெரிந்தது.

மகள் அறிந்திருந்ததை ராணி அறியாமற் போகவில்லை. அவளுக்கு வேண்டிய தெல்லாம் மகளுக்கு அந்த இளைஞனைப் பிடித்திருக்கிறது என்பது தான். அது தெரிந்து விட்டால் மேற்கொண்டு பார்க்கலாம். கடவுள் தயவு இருந்து நடந்தால் நடக்கட்டும். மகள் சொன்னதற்குத் தாய், "ஆமாம் அது சரி" என்றாள். ராஜகுமாரியின் தலை மயிரைக் கோதிவிட்டு, தட்டிக் கொடுத்து, "தூங்கம்மா" என்று கூறி அருகிலிருந்த தன் படுக்கையில் அவள் படுத்துக் கொண்டாள்.

இது நடந்த சில நாட்களுக்குப் பிறகு மந்திரி லக்ஷ்மீநாராயணய்யா வேறு ஏதோ வேலையாக அரண்மனைக்கு வந்த பொழுது ராணி அவரை வரவழைத்து, "அரண்மனைக்குத் தங்களால் ஒரு உதவி தேவையாக இருக்கிறது ஐயா," என்றாள். "உத்தரவிடுங்கள் அம்மாஜி. சிரமேற்கொண்டு நடத்துகிறேன்" என்றார்.

ராணி உத்தய்யனைப் பற்றிய தனது ஆவலை வெளியிட்டு, "இது அவசரத்தில் செய்யக்கூடிய காரியமல்ல. முதலில் எல்லாருடைய விருப்பத்தையும் தெரிந்து கொண்டு கடைசியில் அரசரைக் கேட்கவேண்டும். முதலில் போபண்ணு ஒப்பவேண்டும். நான் கேட்டதாகக் கேட்காமல் நீங்களாகவே கேட்பதாக அவரிடம் ஒரு வார்த்தை கேட்டு என்ன சொல்கிறார் என்று எனக்குத் தெரியவேண்டுமே," என்றாள்.

லக்ஷ்மீநாராயணய்யா, "உத்தரவு அம்மாஜி" என்றார். பிறகு போபண்ணுவைக் கண்ட பொழுது, "உங்கள் மருமகன் உத்தய்யாவுக்குக் கல்யாண வயதாகி விட்டதே. மன்னரின் மகளை அவனுக்குக் கேட்டு சம்பந்தம் செய்து கொள்ளலாமே, போபண்ணு?" என்று கேட்டார்.

"இது நாமாக ஆரம்பிக்கக் கூடிய பேச்சா?" என்று போபண்ணு கேட்டார்.

"அவர்களாகவே கேட்கிறதாக வைத்துக் கொள்வோமே. அப்போது உங்கள் பதில் என்ன?"

போபண்ணுவுக்கும் லக்ஷ்மீநாராயணய்யாவுக்கும் ஒரே மனது. அவர் லக்ஷ்மீநாராயணய்யாவின் கருத்தைப் புரிந்து கொண்டு விட்டார். "ராணியவர்கள் கேட்டார்களா?" என்று கேட்டார்.

லக்ஷ்மீநாராயணய்யா, "அப்படித்தான் வைத்துக் கொள்ளுங்களேன்" என்றார்.

"வைத்துக் கொள்ளுங்கள்" என்று சொல்லுவது இவர்கள் சம்பாஷணையில் ஒரு சங்கேதம். ரகசியத்தைச் சொல்லவேண்டும். ஆனால் பிரத்யட்சமாகச் சொல்லக் கூடாது. இது உபாயம்.

போபண்ணு, "இதற்கு எங்கள் ஜனங்கள் சம்மதிக்க மாட்டார்கள் ஐயா. மகன் லிங்காயத்தாவதற்கு என் தங்கையும் மைத்துனரும் ஒப்பமாட்டார்கள். அரண்மனை மாப்பிள்ளை என்றாலே வேண்டாத வஸ்துவாகி விட்டது. மல்லப்பன் பாடு அப்படியாயிற்று. சென்னபசவன் பாடு இப்படி இருக்கிறது. இனி இந்த மூன்றாமவனின் பாடு எப்படி இருக்குமோ யாருக்கு வேண்டும் இந்த அவஸ்தை?" என்றார்

லக்ஷ்மீநாராயணய்யா, "அப்படியா?" என்று அத்துடன் அந்தப் பேச்சை விட்டு விட்டார். மறுநாள் நடந்தவற்றை ராணியிடம் சொல்லிவிட்டார். ராணி இந்தக் கல்யாண விஷயத்தை அப்போதைக்குத் தள்ளிப் போட்டாள்.

20

மடிகேரியின் வர்த்தகத் தலைவன் சிக்கண்ணசெட்டி அரண்மனைக்கு அரிசி பருப்பு முதற்கொண்டு முத்து, ரத்தினம் வரை சகல சாமான்களையும் வாங்கிக் கொடுக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டுள்ளவன். இவன் குடும்பம் நான்கு தலைமுறைகளாக இந்த வேலையைச் செய்து வருகிறது. பத்து வருடங்களுக்கு முன்னால் சிக்கண்ணசெட்டி குடும்ப எஜமானனாக வந்து அரண்மனைக்கு இந்தச் சேவை செய்வதில் ஈடுபட்டான்.

அரண்மனைக்குச் சாமான்கள் வாங்கித்தரும் இந்த வேலை மிகவும் லாபகரமானது; அல்லாமல் அந்தஸ்தையும் தரக்கூடியது. பல

சமயங்களில் அரண்மனையில் பணத்தட்டு ஏற்படக் கூடும். அப்படிப்பட்ட சமயங்களில் செட்டி அரண்மனைக்குக் கடன் கொடுத்துதவ வேண்டும். இந்தப் பணம் பத்திரமாகத் திரும்பி வரக் கூடியது தான். தொட்ட வீர ராஜன் காலத்தில் கூட வர்த்தகத் தலைவன் இவ்வாறு கடன் கொடுத்து உதவியது உண்டு. அதை வட்டியோடு திருப்பி வாங்கிக் கொண்டதுண்டு. லிங்கராஜனின் காலத்தில் இப்படிப்பட்ட சந்தர்ப்பங்கள் அதிகமாக இருக்கவில்லை; இருந்தாலும் ஒரிரண்டு சந்தர்ப்பங்கள் வந்தன. அரண்மனையிலிருந்து பணம் வருவதற்குத் தாமதமானாலும் சிக்கண்ண செட்டி அரண்மனையில் சாப்பாட்டிற்கும் மற்ற வசதிகளுக்கும் வேண்டிய சாமான்களை மாதக் கணக்கில் அனுப்பி வந்தான்; சிக்கவீர ராஜனின் காலத்தில் இப்படிப்பட்ட சந்தர்ப்பங்கள் அதிகமாகிவிட்டன.

இதற்குப் பல காரணங்கள். நாட்டின் பொக்கிஷம் வேறு, அரண்மனைப் பொக்கிஷம் வேறு, நாட்டுப் பொக்கிஷத்திற்குத் தலைவனான போபண்ணா அரண்மனை வியவகாரங்களைக் கவனித்துக் கொண்டு அதற்கு வேண்டிய பணத்தை அவ்வப் பொழுது அனுப்புவது வாடிக்கையாக இருந்தது. பசவன் அரண்மனைக் காரியஸ்தனாக வந்த பிறகு போபண்ணா அனுப்பும் பணம் போதாதென்று கூறி அரசரின் பெயரில் குடி மக்களிடமிருந்து நேரில் அரண்மனைப் பொக்கிஷத்திற்கு வேண்டிய பணத்தை வசூலித்துக் கொண்டான், போபண்ணாவின் கீழ் அதிகாரிகள் குடிமக்களிடம் சென்று கந்தாயம் கேட்ட பொழுது அவர்கள் "அரண்மனைக்குக் கொடுத்து விட்டோம்" என்றார்கள். அவர்கள் அப்படிக் கொடுத்தது எவ்வளவு என்று தெரிந்து கொள்வதற்காக போபண்ணாவின் கணக்குப் பிள்ளை அரண்மனையில் கணக்குக் கேட்டார். சரியான கணக்கு வரவில்லை. நூறு ரூபாய் வரவேண்டிய இடத்தில் இருபது வந்து நாட்டின் பொக்கிஷம், அரண்மனை பொக்கிஷம் இரண்டும் வரண்டன. இந்த நிலைமையைச் சீர்படுத்த போபண்ணா இரண்டு வருடங்கள் சிரமப்பட வேண்டியதாயிற்று. கடைசியில் அரண்மனைக்கு என்ன பணம் வேண்டியிருந்தாலும் போபண்ணாவின் அநுமதி பெற்று வாங்கிக்கொள்ள வேண்டும் என்று முடிவாயிற்று.

அரண்மனை ஒரு அளவோடு மிதமாக நடந்து கொண்டால் இந்த ஏற்பாடு நன்றாகவே நடைபெறக் கூடும். ஆனால் அரண்மனையில்

அரசனின் செலவே எல்லை மீறி வளர்ந்து கொண்டிருந்தது. அவனுடைய நாய்களின் எண்ணிக்கை குதிரைகள் ஒன்றுக்கு நான்காகப் பெருகின. அவனது தவறான வாழ்க்கைக்குச் சகாயமான பெண்கள் மற்றும் அவர்களின் பரிவாரங்கள் இவர்களின் செலவே மிகுதியாக இருந்தது. மேலும் இவன் பெண்கள் குதிரைப்படை ஒன்றை ஏற்படுத்தினான். இவையல்லாமல் அரசன் ஆங்கிலேயர்களின் சகவாசத்தால் பிரெஞ்சு மது வகைகளின் ருசியை அறிந்து வளர்த்துக் கொண்டான். ஆங்கிலேயர்களை மடிகேரிக்கு வரவழைப்பது, அவர்களுக்கு விருந்து வைப்பது. அவர்களோடு சேர்ந்து கொண்டு விலையுயர்ந்த மது வகைகளை அருந்துவது, அவர்களைப் போல ஆடை யணிகள் அணிந்து கொள்வது, அவர்களின் மகிழ்ச்சிக்காகவும் தனது சபலத்திற்காகவும் ஆணும் பெண்ணும் சேர்ந்து ஆடும் நடனங்களுக்கு ஏற்பாடு செய்வது — இவை யெல்லாம் செலவின் பெரும் பாகத்தை ஆக்கிரமித்துக் கொண்டன. இப்படி வருகிற ஆங்கிலேயர்களில் சிலர் பெருந்தன்மை யானவர்கள் தான். ஆனால் இன்னும் சிலர் அப்பப்பட்ட யோக்கியர்கள் அல்ல. அதிலும் சில ஆங்கிலப் பெண்கள் இவனது சபல புத்தியை அறிந்து கொண்டு இவனோடு நெருங்கிப் பழகி மோதிரம், தோடுகள், மாலை முதலிய ஆபரணங்களைப் பரிசாகப் பெறுவார்கள்.

அரசனின் ஆடம்பரச் செலவுகளுக்குப் பணம் போதாமல் போனதற்கு சமீபத்தில் இன்னொரு காரணம் சேர்ந்து கொண்டது. தொட்ட வீர ராஜன் தனது மகளின் பேரில் கும்பினியாரிடம் சுமார் ஏழு லட்சம் ரூபாய் கொடுத்து வைத்திருந்தான். தேவம்மாஜியைப் பட்டத்திலிருந்து இறக்கிய லிங்கராஜன் இந்தப் பணத்தின் வழிக்கும் போகவில்லை. சிக்கவீர ராஜன் சிறிது காலம் பேசாமலிருந்து பிறகு அந்தப் பணத்தின் வட்டியை தான் உபயோகித்துக் கொள்ளத் தொடங்கினான். தேவம்மாஜி அதைத் தடுக்கக் கூடிய நிலையில் இல்லை. இருந்தாலும் முயன்று பார்த்தாள்; ஓரிரண்டு வருடங்களில் அம்மை நோய் கண்டு இறந்து போனாள். அவளை அரசனே கொன்று விட்டானென்று ஜனங்கள் நம்பினர். எப்படியோ பணத்தின் வட்டி தங்கு தடையில்லாமல் இவனுக்கே வந்து கொண்டிருந்தது; இரண்டு வருடங்கள் அதை இவன் அநுபவித்தான். மூன்றாவது வருடம் கும்பினி அதிகாரிகள் ஏதோ ஆட்சேபணையைக் கிளப்பி அரசனுக்கு அந்தப் பணத்தின் மீது எந்த உரிமையும் கிடை

யாது என்று கூறி வட்டி கொடுக்க மறுத்தனர். அரசன் "பெரியவனின் மகளின் பணம் சின்னவனின் மகனுக்கு, அவன் தம்பிக்கு, இல்லாமல் வழியில் போகும் உங்களுக்கு எப்படிச் சேரும்" என்று வாதித்தான்; தூற்றினான்; சீறினான். கெஞ்சினான்; குழைந்தான். கும்பினியார் அசைந்து கொடுக்கவில்லை; "உங்கள் உரிமையை நியாயஸ்தலத்தில் நிரூபியுங்கள், பணம் உங்களுடையதென்று சம்மதிக்கிறோம்" என்றார்கள். வழக்குப் போடலாமா என்று யோசிப்பதிலேயே நாட்கள் கழிந்தன: பணத்திற்கான வட்டி கும்பினியாரிடமே நின்றுவிட்டது. இவன் கைக்கு வந்து கொண்டிருந்த பணம் குறைந்து விட்டது.

சிக்கண்ணசெட்டி பல முறை அரசனின் விருப்பம் போலப் பணம் கொடுத்து உதவி அது வழக்கம் போல் திரும்பி வராமற் போகவே, பசவய்யன் மறுபடியும் பணத்திற்காக வந்தபொழுது, "எப்படி பசவய்யா நான் பணம் கொடுக்க முடியும்? என்னுடையது என்று சொல்லக் கூடிய பணத்தை யெல்லாம் அரசருக்குக் கொடுத்து விட்டேன். இனி என்ன செய்யட்டும்?" என்றான்.

பசவய்யன், "உன் பாடு அரசர் பாடு. நான் என்ன சொல்லட்டும்?" என்றான்.

சிக்கண்ண செட்டி, "மன்னரிடம் நான் வேண்டிக் கொண்டதாகச் சொல்லுங்கள். அவரிடமே வந்து பேசுகிறேன். என்ன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு வந்து செய்கிறேன்," என்றான்.

அரசன் கோபம் கொண்டானே யொழிய இவனை வர அநுமதிக்கவில்லை.

சிக்கண்ண செட்டிக்குக் கவலை பிடித்துக் கொண்டது. அரண்மனை, குருமனை இவர்களுடன் சண்டை பிடித்துக் கொள்ளக் கூடாது என்பது அவர்கள் வம்சத்தில் பரம்பரையாக வந்துள்ள சம்பிரதாயம். அதைத் தான் மீற வேண்டி வந்திருக்கிறதே என்று அவனுக்குக் கலக்கம்; போபண்ணாவிடம் சொல்லி அனுப்பினான்.

போபண்ணா, "அரண்மனைக்கு வழக்கமாகக் கொடுக்க வேண்டிய பணத்தைப் பொக்கிஷத்திலிருந்து கொடுத்தாயிற்று. நான் பணம் கொடுக்கவில்லை யென்றல்ல அவர் உன்னிடமிருந்து பணம் வாங்கிக் கொண்டது. நான் கொடுத்த பணமெல்லாம் செலவழித்துவிட்டு மேற் கொண்டு வேண்டியதை உன்னிடமிருந்து வாங்கிக் கொண்டிருக்கிறார். நீ அதை அரண்மனையிலிருந்து தான் திருப்பி வாங்கிக் கொள்ள வேண்டும்" என்றார்.

செட்டி வர்த்தகப் பிரமுகர்களான பார்சண்ணு, ராமப்பா சூரப்பா இவர்களை அழைத்து, "இந்தத் தடவை ஏதாவது செய்து பணம் அனுப்பி விடுவோம். இன்னொரு தடவை கேட்டால் நம்மால் முடியாது என்று சொல்லி விடலாம். என்ன சொல்கிறீர்கள்?" என்று கேட்டான்.

இவர்களெல்லாம் பணக்காரர்கள். மடிகேரியில் இருந்து கொண்டு மங்களூர், ஹாசன் முதலிய பகுதிகளில் வியாபாரம் செய்து பணம் சம்பாதிப்பவர்கள். தலைமுறை தலைமுறையாக மடிகேரியில் வாழ்ந்து வேரூன்றியவர்கள். அரசனோடு விரோதித்துக் கொள்ள முடியுமா? அல்லாமல் வர்த்தகத் தலைவனின் பேச்சைத் தான் தட்ட முடியுமா? சரி என்றார்கள்; பணம் கொடுத்தார்கள். சிக்கண்ண செட்டி அதை அரண்மனைக்குக் கொண்டு போய்க் கொடுத்து தற்சமயத்திற்கு மனச் சமாதானம் அடைந்தான்.

21

அவனுடைய கிரகசாரம் அரண்மனைக்கு சாமான்கள் அனுப்புவது, பணம் சேகரித்துக் கொடுப்பது இவைகளோடு விட்டுவிடவில்லை. இந்த வருடம் இன்னொரு திசையிலிருந்து தொந்தரவு வந்தது.

செட்டியின் சம்சாரம் பெரியது. இறந்து போன இவனது அண்ணன் மகள் ராம செட்டியைப் பற்றி ஏற்கனவே சொல்லப் பட்டிருக்கிறது. எல்லாரும் அவிபக்த குடும்பமாக ஒரே வீட்டில் வாழ்ந்து வந்தனர். தன் தங்கையின் மகளை செட்டி இந்த அண்ணன் மகனுக்கு மணம் முடித்து வைத்திருந்தான். இந்த முறை அவர்கள் தலைக்காவேரிக்கு கங்கா ஸ்நாநத்திற்குப் போயிருந்தபோது அந்தப் பெண்ணும் கூடப் போயிருந்தாள்.

அரசன் அவளை அங்கே கண்டானாம். பெண் பதினெட்டு வயதுப் பருவ மங்கை; பொற்சிலை போல இருந்தாள். அரசனுக்கு அவள் பேரில் மோகம் தோன்றி விட்டது. அவள் யார் என்ன சங்கதி என்று விசாரிக்கும்படி அவன் பசவனுக்குச் சொன்னான். பசவன் இது போன்ற விஷயங்களில் முன்னைச்

சரிக்கை யுள்ளவன் ; அரசனுக்கும் முன்பே அவன் அந்தப் பெண்ணைப் பார்த்து விட்டான். இவள் அரசனின் பார்வையில் படாமல் இருந்தாள் தேவலை என்று கூட அவனுக்குத் தோன்றியது. செட்டிக்கு மெதுவாக அதை உணர்த்தி விடலாமா என்று அவன் யோசித்துக் கொண்டிருந்த பொழுதே கிரகசாரம் போல் அரசன் அவளைப் பார்த்து விட்டான்.

அரசன் சொன்னதும் பசவன், "விசாரிக்கிறேன் எஜமான். நான்கு நாள் பொறுத்தால் நல்லது" என்றான்.

அரசன், "நல்லது கெட்டதைப் பற்றி உனக்கு என்ன? சொன்ன பேச்சைக் கேள். அதிகப் பிரசங்கித்தனம் செய்யாதே." என்றான்.

"அவள் செட்டியாரின் மருமகள். அவளிடம் ஏற்கனவே கடன் நின்று போய் அவன் அலுத்துக் கொள்கிறான். இந்தப் பேச்சையும் எடுத்தால் தொந்தரவாக இருக்கும்."

"அரண்மனையில் ராணியின் ஊழியத்திற்குப் பெண்ணை அனுப்பு என்றால் என்ன தப்பு?"

"ஊழியம் கீழியம் என்று எதைச் சென்னாலும் அவர்களுக்கு ஒன்றே, எஜமான் இந்த சரக்கை அரசர் விரும்புகிறார் என்று தெரிந்து கொண்டு விடுவார்கள். செட்டி சம்மதித்தாலும் மகன் சம்மதிக்க மாட்டான்; மகன் சம்மதித்தால் தாய் சம்மதிக்க மாட்டாள். கலகம்தான்."

"பணம் கேட்ட பொழுது செட்டி ரொம்பவும் பண்ணிக் கொண்டான்; தன் முதலாளித்தனத்தையும் பெரிய மனுஷத் தனத்தையும் நம் மீதே காட்டினான். அப்பொழுது பிகு பண்ணிய தற்கு இப்போது தண்டனை அநுபவிக்கட்டும். இதைச் சொல் லிக்காட்டி அவன் முகத்தைச் சிறிதாக்கு."

அதற்கு மேல் புத்தி சொல்லவோ எச்சரிக்கை செய்யவோ பசவனுக்கு அந்தஸ்து போதாது. "உத்தரவு அரசே" என்றான்; செட்டியைத் தேடிக்கொண்டு புறப்பட்டான்.

இவன் மறுபடியும் பணம் கேட்கத்தான் வந்திருக்கிறான் என்று நினைத்து செட்டி கவலைப்பட்டான். இந்த முறை எப்படித் தப்பு வது என்று யோசிக்கத் தொடங்கினான். உள்ளத்தின் அதிருப் தியை மறைத்துக் கொண்டு ஆனால் கம்பிய குரலில், "வாருங்கள் பசவய்யா, அரசர் ஆரோக்கியமாக இருக்கிறார்?" என்று கேட்டான்.

பசவய்யன், "ஆரோக்கியமாக இருக்கிறார். ஆனால் நான் இப்பொழுது அரசரிடமிருந்து வரவில்லை. ராணியம்மா அனுப்பினார். வந்தேன்" என்றான்.

"ராணியம்மாவா? என்ன அவருடைய உத்தரவு?"

"உங்கள் வீட்டு மருமகள் அரண்மனைக்கு வந்து நான்கு நாள் ராஜகுமாரியோடு பழகட்டும் என்று விரும்புகிறார்."

செட்டிக்கு இதயம் 'திக்' கென்றது. இந்தப் பேச்சுக்கு என்ன பொருள் என்று அவனுக்குத் தெரியும். இந்த அரசனும் அவனுடைய இந்த துர்மந்திரியும் ஊரிலுள்ள அல்லது வெளியிலுள்ள எந்தப் பெண் விஷயமாகவும் அக்கிரமமாக நடப்பதற்குக் கூசமாட்டார்கள் என்பதை ஊரெல்லாம் அறிந்திருந்தது போல செட்டியும் அறிந்திருந்தான். ஆனால் இது வரையில் அரசன் அரண்மனையோடு தொடர்பு வைத்துக் கொண்டிருந்த பெரிய மனிதர்களின் வீட்டில் தலையிடவில்லை. செட்டியின் வீடும் அப்படிப்பட்ட பெரிய மனிதர்களின் வீடுகளில் ஒன்று. அந்த வழக்கமும், பெரியமனிதத் தனமும் இப்போது தன்னைக் காப்பாற்றப் போவதில்லை என்று செட்டி அறிந்து கொண்டான். இந்த ஆபத்து தன்னைக் கூட விடவில்லையே என்று அவனுக்கு சிறிது ஆச்சரியமாகவே இருந்தது.

பயம், ஆச்சரியம் இவைகளை மறைத்துக் கொண்டு அவன் சட்டென்று, "ஆஹா, நல்லது ஆகட்டும். நான் வந்து சொல்லுகிறேன்," என்றான்.

பசவன்: நாளைக்கு அனுப்புவதாகச் சொல்லட்டுமா?

செட்டி: என்னத்துக்கு? வேண்டாம் நான் தெரிவிக்கிறேன்.

பசவன் புறப்பட்டுச் சென்றான். செட்டி உடனே மனைவியை அழைத்து மகன், மருமகள் இருவரும் உடனே அரகல கூடுக்குப் புறப்பட வேண்டும் என்று தெரிவித்தான். இரண்டு நாழிகைகளுக்குள்ளாக அந்தக் கணவன்-மனைவி, இரண்டு சேவகர்கள். குதிரை மீதேறி மடிகேரியை விட்டுச் சென்றனர்.

22

அன்று மாலை சிக்கண்ண செட்டி அரண்மனைக்குச் சேர்ப்பிக்க வேண்டிய சில சாமான்களை எடுத்துக் கொண்டு ராணி கௌரம்

மாஜியைக் காணப் புறப்பட்டான்; ராணியவர்களுடன் பேச வேண்டும் என்று சொல்லி அனுப்பினான். ராணி அவனை வரவேற்று, உட்காரச் சொல்லி "என்ன சங்கதி செட்டியாரே?" என்று கேட்டாள்.

"பெங்களூர் பரங்கியர்களுக்கு ஒரு விருந்து சீக்கிரமே நடத்தப் போவதாகவும் அதற்குச் சாமான்கள் வேண்டு மென்றும் கேள்விப்பட்டேன். பரங்கியர்களின் விருந்துக்கு வேண்டிய சாமான்கள் வெளியிலிருந்து வரவேண்டும். சிறிது முன்னதாகவே தகவல் தெரிவித்தால் வாங்கி வருவதற்குச் சௌகரியமாக இருக்கும் என்று சொல்லிப் போக வந்தேன்."

இவன் வந்திருப்பதன் நோக்கம் இது வல்ல என்பதை அவன் பேசும் முறையிலிருந்தே ராணி கண்டு கொண்டாள். நேக்கத்தை நேரடியாக எடுத்த எடுப்பில் தெரிவிப்பது மரியாதை அல்ல என்பது அந்த மக்களின் எண்ணம். ஒரு காரியத்திற்காக வந்தவர்கள் வேறு நான்கு விஷயங்களைப் பற்றிப் பேசி, மத்தியில் அல்லது கடைசியில் தமது விருப்பத்தை லோகாபிராமமாகப் பேசுவது போலத் தெரிவிக்க வேண்டும். ராணி, "ஆகட்டும், பசவய்யனுக்குச் சொல்லியனுப்புவோம்" என்றாள்.

"சரி அம்மாஜி. மேலும் தங்கள் ஊழியத்திற்கு எங்கள் வீட்டுப் பெண்களில் யாரையாவது அனுப்ப வேண்டுமென்று உத்தரவாயிற்றும். என்ன வேலை, யாரை அனுப்பட்டும் என்பதைக் கேட்டுக்கொண்டு போகலாம் என்று வந்தேன்."

ராணி இதன் பொருளையும் அறிந்து கொண்டாள். இது அரண்மனைச்குக் களங்கும் கற்பிக்கும் சங்கதி. தன் மனத்திலுள்ள சந்தேகத்தை வெளி விடாமல் கணவனின் மரியாதையையும் காப்பாற்றி இதைச் சமாளிக்க வேண்டும்.

"புட்டம்மாஜியுடன் விளையாடுவதற்கு யாராவது குழந்தைகள் வேண்டுமென்று சொல்லியிருந்தேன். அதுவரையிலும் யாரையும் அனுப்ப வேண்டாம்."

"உத்தரவு அம்மாஜி" என்று கூறி தான் கொண்டு வந்திருந்த சாமான்களின் விவரங்களைக் கூறுவது போல ஒரு நாடகமாடிவிட்டு செட்டி எழுந்து கைகூப்பிவிட்டு விடை பெற்றுக் கொண்டான்.

மறுநாள் செட்டி யாரையும் அனுப்பாமலிருக்கவே பசவய்யன் அவன் வீட்டிற்கு வந்தான். செட்டி அவனை வரவேற்று ஒன்றுமே

ஞாபகமில்லாதவன் போல விருந்தைப் பற்றிய பேச்சைத் துவங்கினான். பசவய்யன் அவன் பேச்சுக்கு பதில் சொல்லிவிட்டு "மருமகளை எப்பொழுது அனுப்புகிறீர்கள்?" என்று கேட்டான்.

"அவள் ஊரிலிருந்து வந்ததும் அனுப்பிக் கொடுக்கிறேன்."

"எந்த ஊரிலிருந்து? நேற்று இங்கேயே இருந்தாற் போலிருக்கே!"

"வீட்டில் எந்தப் பெண்கள் இருக்கிறார்கள் யார் இல்லை என்பதைப் பற்றி யெல்லாம் எல்லாரோடும் பேச முடியுமா பசவய்யா? ராணியம்மா அனுப்பச் சொன்னார்கள். நான் அனுப்புகிறேன். எப்பொழுது என்றால் ஊரிலிருந்து வந்ததும் என்கிறேன். இதை அவர்களிடம் தெரிவியுங்கள்."

"அப்படியென்றால் நான் வெளிப்படையாகச் சொல்ல வேண்டியதுதானா? அந்தப் பெண் தன் அந்தப்புரத்தில் இருக்கட்டும் என்று அரசர் உத்தரவிட்டிருக்கிறார்."

"அடடா! இது இன்னும் அதிக சந்தோஷமான சமாசாரம். அனுப்புவோம். போய்ச் சொல்லுங்கள்."

"இது ராணியவர்கள் விஷயம் அல்ல செட்டியாரே, இதை நன்றாகத் தெரிந்து கொள்ளுங்கள். அவரோடு இதைப் பற்றிப் பேசக்கூடாது."

"ஐயோ, பசவய்யா, இந்தப் பேச்சை நேற்று சொல்லக் கூடாதா? நான் அம்மாஜியவர்களுடன் இதைப் பற்றிப் பேசி விட்டேனே."

"அப்படியானால் இது அரசருடைய கட்டளை என்று உமக்குத் தெரியவே இல்லையா?"

"பசவய்யா, எனக்குச் சில சங்கதிகள் தெரிகின்றன, சில சங்கதிகள் தெரிவதில்லை, இதுவெல்லாம் எனக்குத் தெரிந்தது, இதுவெல்லாம் எனக்குத் தெரியாது என்று சொல்லிக் கொண்டு உட்கார்ந்தால் அதைக் கேட்பதற்கு உங்களுக்குத் தான் பொழுதெங்கே? உங்களுக்கு வேலை இருக்கும். அரசரின் சேவை செய்யும் உங்களைப் போன்றவர்களுக்கு உடம்பைச் சொரிந்து கொள்வதற்குக் கூட நேரமிருக்காது. அரசரின் உத்தரவு என் தலைமீது இருக்கிறது. அதை நடத்த வேண்டியது என் பொறுப்பு."

செட்டி பெண்ணை அனுப்பவில்லை யென்று பசவனை அரசன் காலையில் கோபித்துக் கொண்டான். "நீ என்னடா மந்திரி

நொண்டி? உன் மந்திரிப் பதவியே நொண்டுகிறது'' என்றான். செட்டி நடந்துகொண்ட விதம் இப்பொழுது பசவனுக்கும் ஆச்சரியத்தை விளைவித்தது. அவன், ''என்ன தைரியம் இவனுக்கு? மன்னரின் வாக்குக்குக் கீழ்ப்படியாமல் மடிகேரி கடைத் தெருவில் என்ன, குடகின் ஒரு முலையில் பிழைத்திருப்பதும் முடியாத காரியம். இதைச் செட்டி அறிவான். இருந்தும் ஆணையை நிறைவேற்ற வில்லை. செட்டி துணிச்சல்காரன் தான்; சந்தேகமே இல்லை'' என்று நினைத்துக் கொண்டான்.

கூடவே பசவனுக்கு இன்னொரு யோசனையும் தோன்றியது. சாமான்னியமாக எதிர்க்காத இந்த மனிதனே எதிர்க்க ஆரம்பித்து விட்டானென்றால் அது தமது துஷ்டத்தனத்திற்கே எல்லை வந்து விட்டது என்று அர்த்தம். பொறுப்பவர்கள் முடிந்த வரையிலும் பொறுத்துவிட்டு, இனி பொறுக்க முடியாது என்னும் போது இப்படி எதிர்ப்பார்கள். அப்படிப்பட்ட வேளைகளில் நாம் பொறுத்துக் கொள்வதுதான் க்ஷேமம். இல்லா விட்டால் கலகத்துக்குத் தயாராக வேண்டும். வருவது வரட்டும் என்று முன்னேற வேண்டும்.

அரசன் வருவது வரட்டும் என்பானோ, தற்போதைக்கும் பொறுத்துக்கொள் என்பானோ, பசவனுக்கு நிச்சயமாக முடிவு கட்ட முடியவில்லை. இதையெல்லாம் சொன்னால் அவனுக்கு கோபம் வரும் என்று நினைத்துக் கொண்டே அவன் அரண்மனைக்குத் திரும்பினான்.

23

பசவன் வந்து செட்டி சொன்ன பேச்சை யெல்லாம் தெரிவித்த போது வீரராஜனுக்கு எல்லை மீறிய கோபம் வந்தது. அவன் கூச்சல் போட்டான். ''ஏய் கழுதை! அரண்மனை ஊழியத்துக்கு வேண்டும் என்று கேட்ட பெண் ஊரிலிருக்கிறாளா இல்லையா என்று கண்டுபிடிக்க உனக்கு யோக்யதை இல்லை?'' என்றான்.

''இருக்கிறது அரசே. செட்டி மருமகளை வேற்றூருக்கு அனுப்பியிருக்க வேண்டும். நான் கேட்டதுமே பயந்துபோய் துரத்தி விட்டான்.''

"அந்தக் கோட்டான் அனுப்பினான்; நீ ஏன் விட்டாய் கோட்டானே!"

"கோட்டான் என்கிறீர்களே, அரசே, அவன் இப்படிச் செய்வான் என்று எனக்குத் தோன்றவில்லை."

"தோன்றவில்லை? நீ ஒரு மந்திரி வேறு கேடா? செட்டி கொடுக்கும் புடலங்காய் சாப்பிடும் மந்திரி? பன்றியைக் கொண்டு வந்து யானை என்றால் மூஞ்சி துதிக்கையாகி விடுமா? அப்படித்தானிருக்கிறது. மத்திரியாகச் செய்துவிட்டால் அறிவு வந்து விடுமா? அரண்மனைச் சோறு இன்று உன் அறிவு மந்தமாகப் போய் விட்டது."

"ஆமாம் அரசே. செட்டி விட்டுச் சோறே புத்தியைக் கெடுத்து விட்டது."

"டேய் நொண்டி. நான் திட்டினேன் என்பதற்காக நீயும் திட்டி என்னோடு வாழ்ந்துவிடலாம் என்று நினைக்காதே. வேலையைக் கெடுத்திருக்கிறாய். அதை எப்படிச் சரிப்படுத்த முடியுமென்று பார்."

"பார்க்கிறேன் அரசே!"

"ஊம். இந்த செட்டி மிகவும் அதிகப்பிரசங்கி ஆகிவிட்டான் போலிருக்கிறது. நாளைக்கு அவனை வரச் சொல். அவனுக்கு இரண்டு வார்த்தை சொல்லி அனுப்புவோம்."

"அதற்கு இரண்டு நாள் பொறுக்கலாம் அரசே. நாளைக்கே முடித்து விட்டால் வேலை கெட்டுவிடும்."

"சொன்னதைச் செய்யடா பதில் பேசாமல். உன் அறிவு எவ்வளவு நீளம் அகலம் என்று பார்த்தாய் விட்டது. பெண் என்னமோ தப்பிவிட்டாள். கிழவனும் தப்பிவிடப் போகிறான் ஜாக்ரதை."

"உத்தரவு அரசே."

பசவன் அப்பொழுதே செட்டிக்குச் சொல்லி அனுப்பினான். "பரங்கியர்களுக்கு விருந்து நடத்தும் விஷயமாக அரசர் உடனே தங்களைக் காண விரும்புகிறார். தவறாமல் நாளைக்குவரவும்," என்று அரண்மனைச் சேவகன் தெரிவித்தபோது செட்டி தன் மருமகளைப் பற்றிய விஷயம் தான் இது என்று அறிந்து கொண்டான். இனி அரண்மனையுடன் உபாயமாக நடந்து கொள்வதென்பது முடியாது; தெளிவாகத்தான் பேசியாகவேண்டும்.

"முடிந்தால் சமாளிக்கவேண்டும்; இல்லாவிட்டால் மடிகேரியிலிருந்தே வேரோடு கிளம்பிச் சென்று விடவேண்டும்" என்று அவன் தீர்மானித்துக் கொண்டான்.

24

செட்டி ஊரைவிட்டு ஓடிவிடப் போகிறானென்றே பசவன் அவன் வீட்டைச் சுற்றிலும் அவனுக்குத் தெரியாதபடி ஆட்களை நிறுத்தி வைத்திருந்தான். இந்த ஏற்பாடு அநாவசியமாகி விட்டது; செட்டி தப்பித்துச் செல்லும் யோசனை செய்யவில்லை.

அன்று இரவு பார்சண்ணா, ராமப்பா, சூரப்பா இவர்களோடு ரகசியமாகப் பேசி, வந்திருக்கும் ஆபத்தைப் பற்றிச் சொல்லி, தன் மனைவிக்கும் மேலாக விஷயத்தைத் தெரிவித்து வீட்டு சுவாமியின் முன்னர், "நீ தான் காப்பாற்றவேண்டும்" என்று பிரார்த்தனை செய்துகொண்டு மறுநாள் காலையில் அரசனைக் காணச் சென்றான்.

அரசன் வழக்கம் போல குடி போதையில் அரை நினைவோடு கிடந்தான். செட்டி வந்து கை கூப்பி, "கும்பிடுகிறேன் அரசே" என்றான். பதிலுக்குக் கை கூப்பாமல் "செட்டியாரா? உட்கார்" என்றான்.

"ஆமாம் அரசே. பரங்கியவர்கள் விருந்துக்கு ஏதோ சாமான்கள் வாங்கவேண்டுமென்று உத்தரவாயிற்றும். என்ன வென்று தெரிந்துகொண்டு போகலாமென்று வந்தேன்."

"டேய் செட்டி! என்னிடமே கோமுட்டிக் குறும்பு செய்கிறாயா? நான் உன்னை ஏன் வரவழைத்திருக்கிறேனென்று உனக்குத் தெரியாதா?"

"தெரிந்திருக்கலாம் அரசே. இருந்தாலும் நான் அதைப் பற்றிப் பேசக்கூடாது. பெரியவர்கள் மனத்திலிருப்பதைப் பெரியவர்களே பேசவேண்டும். மற்றவர்கள் பேசுவது தவறு."

"அப்படியானால் சொல், உன் மருமகள் எங்கே?"

"அரகல கூடுக்குப் போயிருக்கிறாள் அரசே."

"எப்பொழுது போனாள்?"

"மூந்தா நாள்"

"இங்கே அனுப்பு என்று சொன்னதற்குப் பிறகு?"

"ஆமாம்."

"எவ்வளவு தைரியம் உனக்கு நான் அனுப்பு என்று கேட்ட பிறகு அவளை ஊருக்கு விரட்டியிருக்கிறாய்?"

"விரட்டுதென்ன அரசே? அரண்மனைக்கு வந்துவிட்டால் இங்கே எவ்வளவு நாள் இருக்கவேண்டி வருமோ என்னவோ, உறவினர்களைப் பார்த்துவிட்டு வருகிறேன் என்றாள். சரி என்றேன்."

"இந்தக் கட்டுக் கதையெல்லாம் எனக்குத் தெரியாதென்று நினைக்கிறாயா செட்டி?"

"அரசருக்குத் தெரியாததும் உண்டா? விற்கிற தானியத்தில் நூறு மணிகள் நல்லது, இரண்டு சொத்தை, பேசுகிற பேச்சிலும் அப்படியே, இரண்டு உபயோகமற்ற வார்த்தைகள் இருக்கலாம். வாங்குகிறவர்கள் அதையும் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்."

"அப்படியானால் உன் மருமகளைத் திருப்பி வரவழைக்கிறாயா?"

"அதிலென்ன தவறு அரசே. அரசரின் மகள் புட்டம்மாஜி அரண்மனையில் ஒருவராக இருக்கிறார். அவளுக்கு ஒரு அக்கா. உங்கள் மகளாக இருந்துவிட்டுப் போகிறாள். அரண்மனையில் புட்டம்மாஜி இல்லையா? அவளை நீங்கள் என்ன செய்து விடப் போகிறீர்களோ என்று பயப்படுகிறேனா? அவள் அக்காவை இங்கே கொண்டு வந்து விடுகிறேன், தைரியமாக இருப்பேன்."

"இந்தப் பேச்சு நிஜம் தானா?"

"இந்தப் பேச்சு உண்மையானால் தான் நான் செட்டி. தாங்கள் அரசர். இல்லாவிட்டால் நான் செட்டியுமல்ல, தாங்கள் அரசரும் அல்ல."

"ஆ! நான் அரசனல்லவா?"

"ஆம் பிரபு. அரண்மனைக்கு வருகிற பருவத்துப் பெண் அரசரின் மகளாக வாழ முடியுமானால் தான் ஊர் ஊராகும், அரண்மனை அரண்மனையாகும்; செட்டி செட்டியாக இருப்பான், அரசர் அரசராக இருப்பார். அப்படி இல்லையென்றால் எதுவும் இல்லை."

"ரொம்பவும் துடுக்குத்தனமாய் பேசுகிறாய் செட்டி, என்னோடு இப்படிப் பேசிவிட்டு வர்த்தகத் தலைவன் செட்டி பிழைத்திருக்கலாம் என்கிறாயா?"

"தாய் மடியிலிருக்கும் குழந்தை அரசே. மார்பில் அணைத்துக் கொண்டு பாலூட்டினால் குடிக்கிறது, வாழ்கிறது. கழுத்தைத் திருகிக் கீழே போட்டால் அழுகிறது, மடிகிறது. எவ்வளவோ தலைமுறைகளாக அரண்மனை நிழலில் வாழ்ந்து வளர்ந்தாயிற்று. இன்றைக்கு அரண்மனை நிழல் கொடுக்கவில்லை. வெயில் கொளுத்துகிறது. அதில் சுட்டுப் பொசுங்கித்தான் போகவேண்டும். வேறென்ன செய்ய முடியும்'"

"சரி, அப்படியானால் சுட்டுப் பொசுங்கிப் போவதற்குத் தயாராயிரு."

"சரி அரசே, நானும் தயாராக இருப்பேன். மற்றவர்களுக்கும் தெரியப்படுத்துகிறேன்."

"என்ன? எனக்கு எதிராக ஜனங்களைத் தூண்டி விடப்போகிறேன் என்கிறாயா?"

"நான் என்னத்தைத் தூண்டிவிடவேண்டும் அரசே. அதைத் தாங்களே செய்து கொண்டிருக்கிறீர்கள். என் வாயிலிருந்தே இப்படிப் பட்ட வார்த்தைகளை வர வழைத்து விட்ட நீங்கள் இனி யாரை வாழவைத்து விடப்போகிறீர்கள்? நூறு பேர் செத்துக் கொண்டிருந்தபொழுது நான் ஒருவன் வாழ்ந்து விடலாம் என்று நினைத்தேன். என் நலத்தையே பெரிதாக நினைத்து நூறு பேரின் அவஸ்தையை மறந்தேன், 'உன் உடம்புக்கும் சூடு பட்டாலொழிய உனக்கு வெப்பம் தெரியாது' என்று தெய்வம் என் வீட்டிலேயே நெருப்பைக் கொட்டிவிட்டது. இன்று வாழவையுங்கள், நான் தங்களுடையவன்; வதையுங்கள், நான் தங்களுடையவன்; வந்தது வரட்டும் அனுபவிக்கிறேன்."

பசவன் அரசனின் அருகில் வந்து, "செட்டி அப்புறம வரட்டும். இப்பொழுது அரசருக்கு மிகவும் களைப்பு" என்றான்.

வீரராஜனுக்கும் இவ்வளவு பேசி போதும் என்றாகியிருந்தது. செட்டியைப் போன்ற அப்பாவி மனிதனும் எதிர்த்துக் கொண்டதைப் பார்த்து அவன் தைரியமும் குன்றியிருக்கவேண்டும். பசவன் அப்படிச் சொன்னதும் அது சரியென்றே அவனுக்குப் பட்டது. "அப்படியே ஆகட்டும்" என்று கூறி விட்டு தன் இடக்கையின் மீது தலையைச் சாய்த்துக்கொண்டு அப்படியே உட்கார்ந்து விட்டான்.

பசவன் செட்டியைப் போகச் சொல்லி சைகை காட்டினான். செட்டி எழுந்திருந்து கை கூப்பி விட்டு வாசலை நோக்கிப் புறப்

பட்டான். அரசன் அவன் பக்கம் திரும்பிக் கூடப் பார்க்க வில்லை.

25

அரசனுடன் இவ்வளவு தூரம் பேசும் பொழுது செட்டி இனி தான் அவன் கீழ் வாழ முடியும் என்ற ஆசையையும் விட்டு விட்டான் என்று சொல்லத் தேவையில்லை. கொடுத்த பணம் திரும்பி வருவதில்லை, வரும் என்கிற அறிகுறிகளும் இல்லை, மீண்டும் மீண்டும் பணமும் சாமான்களும் கொடுக்காமல் தொடர்பு நீடிக்க முடியாது; கஷ்டமோ நிஷ்டுரமோ பட்டுக் கொண்டு எல்லாவற்றையும் பொறுத்துக் கொண்டு தொடர்பை நீடித்துக் கொண்டு வந்தாலும் தன் மரியாதை யாவது மிஞ்சும் என்ற நம்பிக்கை இல்லை. இனி இந்த அரண்மனைத் தொடர்பால் என்ன பயன்?

சிக்கண்ண செட்டியின் முப்பாட்டன் அறுபது வருஷங்களுக்கு முன்னால் அரகல கூடிலிருந்து மடிகேரிக்கு வந்து குடியேறினான். அந்த நாட்களில் மைசூரின் நிலை ஸ்திரமில்லாமல் இருந்தது. மடிகேரி பயமில்லாத இடமாக இருந்தது. கெட்டிக்காரனான அந்த முப்பாட்டன் ஜனங்களுடன் நல்லபடியாக நடந்து கொண்டு நன்றாகப் பேசக் கற்றுக்கொண்டான்; விநயத்தோடு வாழ்ந்து அரண்மனையோடு தொடர்பேற்படுத்திக் கொண்டான். மகனுக்கு சிறிதளவு ஆஸ்தியையும் நல்ல செல்வாக்கையும் கொடுத்து விட்டுக் கண் மூடினான். மகன் தந்தையின் வழியிலேயே சென்று லிங்கராஜனின் காலத்தில் வர்த்தகத் தலைவன் ஆனான். விவ காரத்தை யெல்லாம் அவன் மகனே கவனித்துக் கொண்டான். வீரராஜன் அரசனான பொழுது அந்தத் தந்தை—மகன் இருவரும் மடிந்துபோய் சிக்கண்ண செட்டியும் அவன் அண்ணனும் வர்த்த கப் பிரமுகர்களாக இருந்தார்கள். சமீபத்தில் அண்ணனும் இறந்து போகவே குடும்பத்தின் செல்வாக்கைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு சிக்கண்ண செட்டியின் தலையில் சுமந்தது.

செட்டியின் குடும்பம் மடிகேரியில் நிலை பெற்று விட்டிருந்த போதிலும் அரகல கூடின் தொடர்பை அறுத்துக் கொண்டிருக்க

வில்லை. வியாபார நிமித்தமாக மட்டும் அல்லாமல் கொடுப்பது, வருவது, போவது முதலிய பந்தங்களினால் இந்தக் குடும்பத்தவர்களுக்கு அரகல்கூடு இன்னொரு வீடாக இருந்தது. தான் என்றைக்காவது ஒரு நாள் எந்தக் காரணத்திற்காகவாவது மடிகேரியை விட்டுச் செல்லவேண்டியிருக்கும் என்று சென்ற மூன்று நாட்களுக்கு முன் வரையில் செட்டி நினைத்திருக்கவில்லை. மருமகளையும் மகனையும் அரகல கூடுக்கு அனுப்பிய அன்று தானும் மடிகேரியை விட்டுச் செல்ல வேண்டி வருமோ என்ற சந்தேகம் மீண்டும் தோன்றி கடைசியில் நிச்சயமே ஆயிற்று.

ஆனால் இவ்வளவு பேச் செல்லாம் நடந்த பிறகு அரசன் தன்னை உயிரோடு விடுவானா? அரசனின் மனம் எப்படியானாலும் அவனது கெட்ட எண்ணங்களே ஒரு வடிவமானது போல அருகில் நின்றிருக்கும் இந்த நொண்டி தன்னை விட்டுவிடுவானா? பேச்சு நடுவே தடை செய்ய முடியாததாகப் போயிற்று. அப்பொழுது பேசவேண்டியிருந்தது. பேசியாயிற்று. தெய்வம் அறிவு கொடுத்தபடி தான் பேசியாகிவிட்டது. இனி அதன் பயனாக ஏற்படக் கூடியவைகளிலிருந்து எப்படித் தப்பித்துக் கொள்ள முடியும்? இது தான் தற்போதைக்கு யோசனை. இக்கட்டில் சிக்கவைத்த தெய்வமே தான் இக்கட்டிலிருந்து காப்பாற்ற வேண்டும்.

இவ்வாறெல்லாம் யோசித்த செட்டி, உடனே போபண்ணாவைச் சந்தித்து இந்தச் சங்கதிகளையெல்லாம் சொல்லி தான் மேலே என்ன செய்யவேண்டும் என்பதை நிச்சயித்துக் கொள்ள வேண்டும் என முடிவுசெய்தான். வீட்டை நோக்கிப் புறப்பட்டவன் அப்படியே இன்னும் சிறிது தூரம் சென்று வேண்டுமென்றே தவறான வழியில் நடந்து போபண்ணாவின் வீட்டை யடைந்தான்.

போபண்ணாவுக்கும் செட்டிக்கும் அதிகப் பழக்கம் உண்டு. போபண்ணா நல்ல சொத்துக்காரர். அவரது நிலத்தின் விளைச்சலெல்லாம் செட்டியின் மூலமாகத் தான் விற்கப்படுவது வழக்கம். போபண்ணாவுக்கு உறவினர்கள், தெரிந்தவர்கள் ஏராளம். அவர்களின் நகை, நட்டு வியாபாரமெல்லாம் கூட செட்டியின் மூலமாகத்தான் நடைபெறும். செட்டி, போபண்ணா இருவரும் சத்தியத்தைக் கடைப்பிடித்து நடப்பவர்கள்; அந்த மார்க்கத்திலேயே அவர்கள் வேண்டிய அளவு சுகத்தை அநுபவித்திருந்தனர். இக்காரணங்களினால் இருவருக்கும் பரஸ்பரம் கௌரவமும் மரியாதையும் இருந்தன.

செட்டி வந்திருக்கும் செய்தியறிந்து போபண்ணு வாசலுக்கு வந்தார். மகிழ்ச்சியுடன் அவனை அழைத்துக் கொண்டு உள்ளே சென்று, அருகில் அமர்த்திக் கொண்டு பேசத் தொடங்கினார். சிறிது நேரம் வேடிக்கையாக வேறு விஷயங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்து விட்டு பிறகு செட்டி விஷயத்திற்கு வந்தான்.

"வீட்டை விட்டு தலைமேல் துணியைப் போட்டுக்கொண்டு போகும் நாள் வந்துவிட்டது. ஆபத்பாந்தவனிடம் சென்று சொல்லிக் கொள்வோம், அவர் உருவத்தில் கடவுள் என்னைக் காப்பாற்றட்டும் என்று இங்கே புறப்பட்டு வந்து விட்டேன்" என்றான்.

"ஐயையோ! என்ன சங்கதி? அரசர் ஏதாவது செய்துவிட்டாரா? இல்லை, நொண்டியா?"

"அரசரே செய்தது தான். நொண்டி அவர் கைக்கரண்டி. நூறு வீட்டுக்கு அவமானத்தைப் பரிமாறியிருந்தார்கள். முந்தா நாள் எனக்கும் பரிமாற வந்தார்கள். நான் இதைச் சாப்பிடமாட்டேன் என்றேன். தன்னை வந்து காண வேண்டுமென்றார்; இப்பொழுது அங்கே போய் விட்டுத்தான் வருகிறேன். வாடா போடா என்று ஒரு நாயை விட அலட்சியமாக நடத்தினார். மடிகேரியிலிருக்கவே வேண்டாம் எனத் தோன்றிவிட்டது. உயிரோடு விடப்போகிறாரோ இல்லையோ என்கிற பயம் தோன்றி எனக்கும் அறிவு கெட்டுப் போய் கன்னா பின்னா வென்று பேசி விட்டேன்."

"உங்கள் வீட்டு மரியாதையையே கெடுக்கிறேனென்றால்?"

செட்டிக்கு விஷயத்தைச் சொல்ல சங்கோசம் ஏற்படவில்லை. நடந்த சங்கதிகளை யெல்லாம் ஒரு இழை விடாமல் எடுத்துச் சொன்னான். தன் பேச்சு கடுமையாகப் போனதையும் தெரிவித்தான். "நான் சரியாக நடந்து கொண்டேனா இல்லையா என்பதை நானே சொல்லக் கூடாது. சரியாக நடந்துகொண்டிருந்தால் சந்தோஷம்; இல்லை, தவறாக நடந்திருந்தால் மன்னித்து விடுங்கள். என் சொந்த விஷயம் பெரிதல்ல. வீட்டுக் குழந்தைகளுக்குக் கேடு வரக்கூடாது. நிலம், வீடு இவைகளை விட்டு விட்டுப் போகவேண்டி வரலாம். சரி என்று விட்டு விட்டு நகை நாணயங்களையாவது எடுத்துக் கொண்டு வீட்டிலுள்ளவர்கள் அரகல கூடுக்குப் போக ஏற்பாடு செய்து விடலாமா? யோசித்துச் சொல்லுங்கள்" என்றான்.

சிக்கண்ண செட்டியின் கதையைக் கேட்டு போபண்ணவின் வயிறு எரிந்தது. அரசரின் பேரில் அவருக்கு வெகு நாட்களாகவே அசமாதானம். உண்மையில் அவன் அரசனாக வந்ததே போபண்ணவுக்கு விருப்பமில்லை. ஆனால் பன்னிரண்டு வருடங்களுக்கு முன்னால் லிங்கராஜன் தான் இறப்பதற்கு முன்னால் பெரியவர்களை யெல்லாம் கலந்து யோசித்து மகன் அரசனாவதற்குப் பல பேரை உடன்பட வைத்திருந்தான். பல பேரின் அபிப்ராயத்தை எதிர்க்க முடியாமல் போபண்ண அந்த ஏற்பாட்டிற்குச் சம்மதிக்க வேண்டியதாயிற்று. அரசனின் அக்கிரமம் அதிகரிக்க அதிகரிக்க போபண்ண மீண்டும் மீண்டும் அவனை எதிர்த்து மந்திரி அரசனுக்கு விரோதி என்ற பெயரை வாங்கிக் கட்டிக் கொண்டார். செட்டி சொன்ன கதையைக் கேட்டு இனி இந்த அரசன் அரசனாக இருக்க கூடாது என்று போபண்ணவுக்குத் தோன்றியது.

ஒரு கணம் மௌனமாக இருந்த அவர் செட்டியிடம், "நான் சொல்ல வேண்டியதை சில நிமிடங்கள் கழித்துச் சொல்லுகிறேன். உங்களுக்கு என்ன தோன்றுகிறது என்பதையும் சொல்லுங்கள். தோன்றியதைச் சொல்லப் பின் வாங்காதீர்கள். நான் உயிரையே கொடுக்க வேண்டி வந்தாலும் சரி. உம்மை அபாயத்தில் இழுத்துவிட மாட்டேன். இதோ சத்தியம் செய்கிறேன்" என்று கையை நீட்டினார்.

செட்டி கையை நீட்டி தன் கையை அவர் கையில் வைத்தான். "நான் இங்கே வரும்போது மனக் கலக்கத்தால் என்ன நினைத்துக் கொண்டேன் என்பதை வேண்டுமானாலும் சொல்லுகிறேன். நீங்கள் தைரியம் அளித்த பிறகு நான் ஏன் சங்கோசப்பட வேண்டும்?" என்றான்.

"சொல்லுங்கள்."

"நானென்னமோ நாசமாகப் போய்விட்டேன். பேட்டையில் நான்கு பேர் பெரிய வியாபாரிகளிடம் பணம் வாங்கி அரண்மனையின் சேவையை நடத்தி யிருக்கிறேன். பார்சண்ண, ராமப்பா, சூரப்பா இவர்கள் லட்ச ரூபாய்க்கு மேற்பட்டு கொடுத்திருக்

கிறார்கள். அரண்மனைக்காகத்தான் இந்தப் பணம் என்பதை யும் அவர்கள் அறிவார்கள். இருந்தாலும் அது என்மீது கொண் டுள்ள நம்பிக்கையால் கொடுக்கப்பட்ட பணம். அதை நான் அவர்களுக்குத் திருப்பிக் கொடுக்கவேண்டும். வீட்டிற்குப் போகிறேன். அவர்களை யெல்லாம் வரவழைக்கிறேன். இருக் கும் சங்கதியைச் சொல்லி எவ்வளவு இப்பொழுது முடியுமோ அதைத் திருப்பிக் கொடுத்து விடுகிறேன். மீதியைப் பிறகு திருப்பிக் கொடுத்துக் கடனைத் தீர்க்கிறேன் என்று சொல்லி அனுப்புகிறேன். வீட்டிலுள்ளவர்கள் அரகல கூடுக்குப் போவ தற்கு ஏற்பாடு செய்கிறேன். இது தான் இப்பொழுது என் யோசனை."

"நீங்கள் :"

"நானும் போகவேண்டும். ஆனால் அரசர் விடமாட்டார். நான் இங்கேயே இருந்து கொண்டு வருவதை அநுபவிக்க வேண்டியது தான்."

"உங்கள் பேச்சு நியாயமா செட்டியாரே? நீங்கள் எப்படியோ போகிறீர்கள், உங்கள் வீட்டாரைக் காப்பாற்றி விடுகிறீர்கள். கடைத்தெருவிலுள்ள ஆயிரம் வியாபாரிகளின் கதி என்ன? தலைவராக இருப்பவர் அவர்களுக்கு ஒரு வழி காண்பிக்க வேண்டாமா?"

"என்ன வழி போபண்ணா? வேலியே பயிரை மேய ஆரம்பித்த பிறகு பயிர் எப்படித் தப்புவது?"

"பயிர் வேலியை வேண்டாம் என்று கூறித் தடுக்க வேண்டும்."

"அப்படிப்பட்ட பேச்சை நீங்கள் பேசலாம். நாங்கள் பேச முடியுமா போபண்ணா?"

"பேசாவிட்டால் பிழைத்து விடப் போகிறீர்களா? செட்டிப் பிள்ளைகள், கடைத் தெரு ஜனங்கள் என்ன சொல்கிறார்களென் பதைக் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள். இந்த அரசர் வேண் டாமென்று அவர்கள் கருதினால் அதைத் தெரிவியுங்கள்."

"தெரிவித்து?"

"பேட்டை தன் கருத்தைத் தெரிவித்தால் அரசர் யோசனை செய்தாக வேண்டும், அப்பொழுது பேட்டைக்குக் கோட்டை உதவ முன்வரும். இந்தச் சங்கதிகளை யெல்லாம் கவனிக்காமல் நீர் மூட்டை கட்டிக்கொண்டு அரகல கூடுக்கு ஓடுவது எனக்குச்

சம்மதமில்லை. வீட்டிற்குள் பாம்பு வந்து விட்டது என்பதற்காக வேறு வீடு பார்க்கப் புறப்பட்டு விடுவதா? பாம்பை விரட்டவோ, கொல்லவோ, மந்திரத்தால் கட்டவோ, பார்க்க வேண்டும். உமக்கு அரகல கூடு இருக்கிறது போய்விடுகிறீர்? எனக்கு எந்த ஊர் இருக்கிறது செட்டியாரே?"

"உங்களைத் தொடுகிற தைரியம் யாருக்கு இருக்கிறது? என்னிடம் சொன்னபடி உங்களிடம் சொல்லுவாரா அரசர்?"

"இதயம் வரையில் ஏறிய நஞ்சு கழுத்து வரையிலும் ஏன் ஏறக்கூடாது செட்டியாரே? இல்லை. கழுத்து வரையில் ஏறியது நெற்றிக்கு ஏறக்கூடாதா? உடலில் நினைவிருந்தால் தான் இந்தப் பெண், அந்தப் பெண், மற்றொரு பெண், வெவ்வேறு என்கிற அறிவு. நினைவு தவறி போதை தலைக்கேறியிருக்கும் பொழுது பெற்ற தாயும் ஒன்றுதான், தெருத் தேவடியாளும் ஒன்றுதான், அறிவு கெட்டுப்போன அரசனுக்குச் செட்டியாராக இருந்தால் என்ன, மந்திரியாக இருந்தால் என்ன? இன்றைக்கு உமக்கு நேர்ந்தது நாளைக்கு எனக்கு, நான் ஊரை விட்டுப் போகும்படி இல்லை. மடிகேரி அரசரின் ஊர் எப்படியோ அப்படியே என் ஊரும் ஆகும். நான் என்ன செய்வது? என் ஊரில் தான் வாழ்ந்தாக வேண்டும். எனக்கு வேறு வழி இல்லை."

"நீங்கள் அப்படிச் சொன்னால் விஷயத்தை எல்லோருக்கும் தெரியப்படுத்துகிறேன். அவர்கள் என்ன சொல்கிறார்களோ தெரியப்படுத்துகிறேன்"

"அப்படிச் செய்யுங்கள். கூட்டாளிகளை அழைத்து யோசனை செய்யுங்கள். அவர்கள் யோசனை என்ன வென்று வந்து சொல்லுங்கள். மேற்கொண்டு என்ன செய்வதென்று ஆலோசிப்போம்."

செட்டி ஒரு கணம் யோசித்துவிட்டு, "சரி போபண்ணா, அப்படியே செய்கிறேன். நாளைக்கு இதே நேரத்திற்கு வருகிறேன்" என்றான்.

போபண்ணாவுக்கு தேசத்தின் வாழ்க்கையில் இது ஒரு திருப்பம் என்று தோன்றியது. அவர் கம்பீரமாக, "சரி செட்டியாரே" என்று எழுந்திருந்தார். செட்டி விடை பெற்றுக்கொண்டு வீட்டுக்குப் புறப்பட்டான்.

27

வீட்டுக்கு வந்ததும் செட்டி பார்சண்ணுவுக்குச் சொல்லியனுப்பி எல்லாச் சங்கதிகளையும் சொல்லி "இனி செய்யவேண்டியது என்ன?" என்று கேட்டான். ராமப்பா, சூரப்பா இவர்களையும் உடனே அழைத்து விஷயத்தைத் தெரிவிக்க வேண்டும் என்று நிச்சயமாயிற்று.

அவர்களும் வந்தார்கள், நான்கு பேரும் உட்காந்து கொண்டு ஊரின் நிலைமை, மக்களின் மனம், அரசனின் பலம், போபண்ணுவின் பலம், அடுத்த அடி, அதன் க்ஷேமம், அபாயம், ஆகிய எல்லாவற்றையும் ஆலோசித்துப் பார்த்தார்கள். இந்த நான்கு நண்பர்களும் ஒருவரிடம் ஒருவர் ஒளித்து மறைத்துப் பேசும் சுபாவம் உடையவர்களல்லர். நான்கு பேரின் மனமும் ஒரு மனம் போல. நிலைமையை நன்ருக யோசித்த பிறகு பார்சண்ணு, "போபண்ணு மந்திரி அரசரைப் பதவியிலிருந்து நீக்குவதைத் தவிர வேறு வழி இல்லை என்று சொல்வதாகத் தோன்றுகிறது. பேட்டைவாசிகள் இதற்கு சம்மதித்தால் அவர் முன்னடி எடுத்து வைப்பார். நாம் சங்கதியை நமது ஜனங்களுக்குத் தெரியப் படுத்தி அவர்கள் சம்மதத்தைப் பெறவேண்டும். நீங்களெல்லாம் சரி என்று சொல்வதானுல் சாயங்காலம் என் வீட்டில் ஆராதனை என்று சொல்லி எல்லோரையும் வரவழைக்கிறேன். ஒவ்வொரு வருக்கும் வரும்போதே சங்கதியைத் தெரிவித்து சம்மதம் பெற்றுக் கொண்டுவிட்டால் போச்சு. எஜமான செட்டியார், தாங்கள் கொஞ்சம் முன்னதாகவே வந்து விடுங்கள்", என்ருன்.

ராமப்பாவும் சூரப்பாவும் "இது சரி" என்ருர்கள். சிக்கண்ண செட்டி "ஆகட்டும்" என்ருன்.

அரசனின் ஆட்கள் எப்பொழுதும் தங்கள் மீது ஒரு கண் வைத்திருப்பதை இவர்கள் எல்லோரும் அறிவார்கள். அதுவும் அரண்மனையில் பேச்சு கொஞ்சம் காரசாரமாகப் போனபிறகு செட்டியின் மீது எல்லாக் கண்களும் திரும்பியிருப்பதில் சந்தேக மில்லை. ஆகையால் மற்ற ஜனங்களுடன் ஆலோசனை செய் வதற்கு அவர்களை பார்சண்ணு வீட்டுக்கு வாவழைப்பது தான் நல்லது: அதனுல் தான் பார்சண்ணு எல்லோரையும் தன்

வீட்டிற்கு வரவழைப்பதாகக் சொன்னான். மற்ற மூவரும் அவன் நோக்கத்தை அறிந்து கொண்டனர்.

மாலையில் பேட்டை வியாபாரிகள், பிரமுகர்கள், சாதாரண மக்கள் ஆகியோர் மூன்று பேர் நான்கு பேர்களாக பார்சண்ணுவின் வீட்டிற்கு வந்தனர். சமாச்சாரத்தைக் கேட்டு அறிந்து தங்கள் சம்மதத்தைத் தெரிவித்தனர். பார்சுவநாதரின் பிரசாதத்தைப் பெற்றுக்கொண்டு வேறு ஏதும் பேசாமல் தத்தம் இடங்களுக்குத் திரும்பிச் சென்றனர். இப்படியொரு மகத்தான தீர்மானம் செய்திருப்பதை அவர்கள் பேச்சோ நடவடிக்கையோ வெளியிடவில்லை. ஒரிருவர் முகத்தில் சிறிது கவலை சூழ்ந்து கொண்டிருந்து; ஆனால் பெரும்பாலோர் அமைதியாகவே இருந்தனர். சந்தைக்கு வருபவர்கள் கூச்சலைப் பற்றிப் புகார் செய்ய முடியுமா? அரசன் அக்கிரமக்காரனானால் ஊர் மக்களின் நிலை இப்படித்தான். வந்ததை அநுபவிக்கவேண்டும். வருவதற்கு முன் பயப்படக்கூடாது.

செட்டியே இரண்டு தடவை போனதாக இருக்கவேண்டாமென்பதற்காக இரவு போபண்ணு வீட்டிற்கு பார்சண்ணு போனான். "தாங்கள் காலையில் எங்கள் தலைவரிடம் சொன்ன விஷயத்திற்கு பேட்டை மக்கள் சம்மதிக்கிறார்கள்" என்றான்.

போபண்ணு, "நல்லது. என்னென்ன விஷயத்திற்கு உங்கள் சம்மதம் இருக்கிறது சொல்லுங்கள்" என்றார்.

"அரசர் பட்டத்தை விட்டு இறங்கிவிடுவது நல்லது என்கிற எண்ணத்திற்கு பேட்டைவாசிகள் சம்மதிக்கிறார்கள்."

"அப்படியானால் யார் பட்டத்திற்கு வரவேண்டும்?"

"அதைப் பற்றி நாங்கள் யோசிக்கவில்லை. எங்களுக்கு அது தெரியவும் தெரியாது. மந்திரி ஐயா நீங்கள் பார்த்து எது சொன்னாலும் எங்களுக்குச் சம்மதம்."

"நல்லது பார்சண்ணு, நான் பெரியவர்களைக் கலந்து யோசிக்க வேண்டும். பிறகு சந்தர்ப்பம் பார்த்து மேற்கொண்டு தீர்மானிக்கவேண்டும். தீர்மானம் செய்து தெரிவிக்கிறேன்."

பார்சணணு புறப்பட்டுச் சென்ற பிறகு போபண்ணு லக்ஷ்மீ நாராயணய்யாவுக்கு, தான் மறு நாள் காலை அவரைக் காண வருவதாகச் சொல்லி அனுப்பினார்.

காலையில் லக்ஷ்மீ நாராயணய்யா தமது ஜபதபங்களை முடிப்பதற்குள்ளாக போபண்ணு அவர் வீட்டுக்கு வந்து விட்டார். முதல் நாள் தானும் செட்டியும் பெசிய பேச்சு, பார்சண்ணு இரவில் கொண்டுவந்த செய்தி எல்லாவற்றையும் அவருக்குத் தெரிவித்தார்.

இவர்களிடையே இப்படிப்பட்ட பேச்சுவார்த்தைகள் நடப்பது புதிதல்ல. லக்ஷ்மீ நாராயணய்யா, "இதெல்லாம் சரிதான். ஆனால் இதில் ராஜதுரோகம் இருக்கிறது. அது பெரிய தவறு" என்றார்.

"ராஜதுரோகம் தவறுதான். அப்படி நினைத்துத்தான் இது வரையிலும் பொறுத்துக்கொண்டே காலத்தைத் தள்ளிவிட்டோம். அரசன் வரையில் அபயம் என்று பழமொழி. அரசனே தவறு செய்தால் யாரிடம் போய் அபயம் என்று கேட்கமுடியும்? ஏதோ பெண்களை இழுத்து வருகிறார்கள், கெடுக்கிறார்கள் என்ற பொழுது எந்தப் பெண்ணோ என்னவோ, இவர்களே இழுத்து வந்தார்களோ அதுவே வந்ததோ, நமக்கு எதற்கு இந்த வம்பெல்லாம் என்று பேசாமலிருந்து வந்தோம். இன்றைக்கு செட்டியின் வீட்டு மருமகளுக்காகக் கையை நீட்டி விட்டார்கள்; நாளைக்கு நம் வீட்டிற்கு வரலாம்; அதற்கடுத்த நாள் உங்கள் வீடு. இதைத் தடுப்பது துரோகமா?"

"குடகப் பெண்களையும், பிராம்மணப் பெண்களையும் இவர்கள் இன்றைக்குத்தானா பிடித்து வருகிறார்கள்? ஆனால் இதற்கு என்ன வழி என்றுதான் தெரியவில்லை."

"புராணங்களில் படித்ததில்லையா, ஐயா? ஊர்க் குழந்தைகளை நீரில் மூழ்கடித்தான் என்பதற்காக அரசனின் மகனைக் காட்டுக்கு விரட்டி விட்டார்கள் என்று? நாட்டு மக்களைத் துன்புறுத்தியதற்காக மற்றொரு அரசனின் தலையைச் சீவி விடவில்லையா? நல்ல அரசனாக இருந்தால் தலை வணங்குவோம். இல்லாவிட்டால், இப்படி வா, பட்டத்திலிருந்து விலகு என்போம்."

"பட்டத்திற்கு யார் வருவது?"

"அதை யோசிக்கவேண்டும்."

"அரசரின் பேரில் ராணியம்மா அரசாட்சியை நடத்தலாம்."

"அதனால் என்ன பிரயோஜனம், கணவன் இதைச் செய் என்று வற்புறுத்தினால் மனைவி செய்தாகவேண்டும். அரச பதவி மாறினதாகவே இருக்காது."

"இல்லாவிட்டால் மகளை அரசியாக்கவேண்டும்."

"இது இன்னும் மோசம்."

"இரண்டும் இல்லாவிட்டால் அரசரின் தங்கை."

"என்ன ஐயா? உங்கள் கண்களுக்குப் பெண்களே தோன்றுகிறார் போலிருக்கிறது. இவர்களெல்லாம் உண்மையாக ஆட்சி நடத்தமுடியுமா?"

"இவர்கள் யாரும் வேண்டாமெனால் அரசரின் பந்துக்கள் யாரையாவது தயார் செய்யவேண்டும்."

"பந்துக்களே வேண்டுமென்றால் ,அப்பாஜி எங்கோ தலைமறைவாக இருக்கிறாராமே, அவரையோ, அவர் மகன் அங்கேயே இருக்கவேணடும், அவனையோ வரவழைக்கவேண்டும்."

"எங்கோ இருப்பதாகச் சொல்லுகிறார்கள். இருக்கிறாரா பார்க்கவேண்டும். வருகிறீர்களா என்று கேட்கவேண்டும். சம்மதித்தால் நாட்டு மக்களுக்குத் தெரியப் படுத்தவேண்டும். எவ்வளவு வேலைகள் இருக்கின்றன? இவையெலலாம் ரகசியமாக நடைபெற முடியுமா? வெளியே தெரிந்துவிட்டால் நமது தலைகள் மிஞ்சுமா? இதையெல்லாம் யோசிக்கவேண்டும்."

"ஆமாம்."

இவ்வளவும் பேசி கடைசியில் அவர்கள் எல்லா விஷயங்களையும் ராணியிடம் விளக்கிச்சொல்லி தற்சமயத்திற்கு அவள் அரசாட்சியை ஏற்று நடத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்வதென்றும் அவள் சம்மதிக்காவிட்டால் என்ன செய்வதென்பதைப் பற்றிப் பிறகு யோசிப்பதென்றும் முடிவு செய்தார்கள். விஷயத்தை லக்ஷ்மீ நாராயணய்யாவும் சிக்கண்ண செட்டியும் ராணியிடம் தெரிவிக்கவேண்டுமென்று நிச்சயித்தார்கள். இதற்குக் காரணம் சொல்லும் பொழுது, 'அரண்மனையிலிருந்து பேட்டைக்குச் சேரவேண்டிய கடன் ஏராளமாக இருக்கிறது, நாட்டின் பொக்கிஷத்திலிருந்து அரண்மனைப் பொக்கிஷத்திற்குச் சேரவேண்டிய பணமெல்லாம் ஏற்கனவே கொடுபட்டு விட்டதால் இனி பணம் கொடுப்பது முடியாது; அரசாட்சி மாறினால் ஒழிய வேறு வழியே இல்லை' என்றுதான் சொல்லவேண்டும் என்று இருவரும் முடிவு செய்து கொண்டார்கள்.

லக்ஷ்மீ நாராயணய்யாவுக்கு ராணியுடன் இந்த விஷயம் பற்றிப் பேசுவதில் விருப்பமில்லை. ஆனால் போபண்ணா அவளுடன் எந்த விஷயமாகவும் பேசுவதற்கு சம்மதிக்கமாட்டார். காரணம், இருவரும் குடகர்கள் என்பது தான். போபண்ணா கௌரம்மாவுடன் பேசினால் வீரராஜன் அவர்கள் இருவரும் தனக்கு எதிராக ஏதோ சதி செய்வதாக நினைப்பானென்று அவருக்கும் பயம். வெகு நாட்களுக்கு முன்னர் நடந்த ஒரு சம்பவத்திலிருந்து தான் அரசியோடு பேசுவது அரசனுக்கு விருப்பமில்லையென்று போபண்ணா தெரிந்துகொண்டான். அதுவுமல்லாமல் ராணிக்கே தம் மீது ஏதோ ஒரு வகையில் அவிசுவாசம் என்று அவருடைய எண்ணம். வீரராஜனுக்குப் பெண் பார்த்துக்கொண்டிருந்த நாட்களில் போபண்ணாவின் தங்கை ஒருத்தியை அவனுக்குக் கொடுக்கும் பேச்சு வந்ததாகவும், அவளை விட்டு விட்டு அரசர் கௌரம்மாவை ஏற்றுக்கொண்டதால் தன் தங்கை ராணியாவதைக் கெடுத்தவள் என்று ராணியின் மீது போபண்ணாவுக்கு வருத்தமென்றும் உறவினர்களிடையே ஒரு சந்தேகம் இருந்து வந்தது. இதுவுமன்றி கௌரம்மாவின் மகள் போபண்ணாவின் சகோதரி மகனை மணக்கும் பேச்சை போபண்ணா நிராகரித்து விட்டதும் ஏற்கனவே கூறப்பட்டுள்ளது.

ஒன்றில்லாவிட்டால் மற்றொரு காரணம் சொல்லி லக்ஷ்மீ நாராயணய்யாவும் ராணியுடன் பேசுவதைத் தாமதப் படுத்திக் கொண்டே வந்தார். இனியும் தாமதிக்க முடியாது என்று தோன்றிய பொழுது அரண்மனைச் செலவு விஷயமாகப் பேச வேண்டியிருக்கிறது என்று சொல்லியனுப்பி ஒரு நாள் மத்தியான்னம் சிக்கண்ண செட்டியுடன் அவளைப் பார்க்கச் சென்றார்.

"அரண்மனைச் செலவு எதைப் பற்றிப் பேசவேண்டும் ஐயா? ராணிவாசத்தின் செலவு அதிகமாக ஆகியிருக்கிறதா?"

"ராணி வாசத்தின் செலவு மாத்திரம் அல்ல அம்மாஜி. அரண்மனையின் மொத்தச் செலவேதான். இதைப் பற்றி அரசரிடம் பேசுவதைவிட அம்மாஜியவர்களிடம் பேசினால் அதிக பிரயோஜனமாக இருக்கும் என்று தோன்றியது. போபண்ணாவும் நானும் கலந்தாலோசித்து தங்களுக்குச் சொல்வியனுப்பினோம்."

"நல்லது. நான் செய்யவேண்டியது என்னவென்று சொல்லுங்கள்."

"அரண்மனை இப்பொழுதே லட்ச ரூபாய்க்குமேல் பேட்டைக்குக் கடன் கொடுக்கவேண்டியிருக்கிறது. சிக்கண்ண செட்டி சொல்லுகிறார், நாலு இடத்திலிருந்து வரவேண்டிய பணம் இப்படி வராமல் இவ்வளவு தாமதமாகி பேட்டை வியாபாரிகளின் கைகளைக் கட்டி விட்டாற்போல இருக்கிறது; நாட்டின் பொக்கிஷத்திலிருந்து இந்தப் பணத்தை எங்களுக்குக் கொடுத்தால் நாங்கள் பிழைத்துக் கொள்வோம் என்கிறார். பொக்கிஷத்தின் கணக்கில் அரண்மனைக்குக் கொடுக்கவேண்டிய பணம் பாக்கி இல்லை. இப்பொழுது இருப்பது ஒரே வழி அரண்மனைச் செலவை மிதப்படுத்தி ஒவ்வொரு வருடமும் அரண்மனைக் செலவுப் பணத்தில் ஒரு இருபத்தையாயிரத்தை மீத்து அதைக் கொண்டு பேட்டைக் கடனைத் தீர்க்கவேண்டும். இந்த ஏற்பாடு உடனே தொடங்கவேண்டும். இதைத் தாங்களே செய்யவேண்டியிருக்கிறது."

"ராணி வாசத்தைப் பொறுத்தவரையில் என்ன செய்ய முடியுமோ அதை நான் செய்வேன். மற்றபடி அரண்மனையின் முழுச் செலவும் என்றால் நீங்கள் அரசரிடம் தான் பேச வேண்டும்."

"அரசரிடம் செலவைப் பற்றிப் பேசி பிரயோஜனம் இல்லை, அம்மாஜி. அவரது மனமும் கையும் மிகவும் தாராளம். கஷ்டமாக இருக்கிறதென்கிறபோது செலவைக் குறையுங்கள் என்கிறார். செலவு செய்யவேண்டிய சந்தர்ப்பம் வரும்போது எப்பொழுதும் போலத்தான் நடக்கிறார்."

"இருக்கலாம். இதில் நானென்ன செய்யமுடியும்?"

"அரண்மனை நிர்வாகத்தைத் தாங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும்."

"நீங்கள் சொல்லுவது எனக்குப் புரியவில்லை, ஐயா. அரண்மனை நிர்வாகத்தையெல்லாம் நான் ஏற்றுக்கொள்வது என்றால் என்ன? அரசரை விலக்கிவிடுவது என்றா?"

"விலக்குவது என்று அல்ல, என்ன செலவு செய்யவேண்டும் எதுவேண்டாம் என்பதை இப்பொழுது அரசர் உத்தரவிடுகிறார். இனிமேல் அந்தப் பொறுப்பைத் தாங்கள் ஏற்றுக்கொள்ள ஏற்பாடு செய்யவேண்டும்."

"இந்த ஏற்பாட்டை யார் செய்வது? நீங்கள் செய்கிறீர்களா?"

"இந்தப் பொறுப்பை ஏறறுக்கொள்ள நீங்கள் சம்மதித்தால் நாங்கள் மந்திரிகளே அரசரிடம் இதைப் பற்றி விண்ணப்பம் செய்து கொள்கிறோம்."

ராணி சிறிது நேரம் தலை குனிந்து யோசித்தபடி இருந்தாள். பிறகு சிக்கண்ண செட்டியின் பக்கம் திரும்பி, "லட்ச ரூபாய்க்குமேல் கடன் நிற்கும்படிச் செய்திருக்கிறீரே, செட்டியார்; எட்டு, பத்து அல்லது பதினையாயிரம் கணக்கு ஆனதுமே ஏன் அரசருக்குத் தெரியப்படுத்தவில்லை? கடனை இப்படிப் பூதாகாரமாகும் வரை விட்டு அரண்மனைக்குப் பெரிய சங்கடத்தை விளைவித்து விட்டீர்களே," என்றாள்.

சிக்கண்ண செட்டி, "கடன் பாக்கி இருக்கிறது என்று விண்ணப்பம் செய்துகொண்டேன் அம்மா. எங்கேடா போகப் போகிறது, பொறுத்துக்கொள் என்றார். மேலே பேசினால் கோபித்துக் கொள்வாரோ என்று எனக்குப் பயம், எப்படியோ நடந்து விட்டது. மேலே என்ன செய்வதென்று தெரியவில்லை. மந்திரிகளிடம் போய் முறையிட்டேன்."

"என்னை அடிக்கடி சந்தித்து வந்தீர்களே, என்னிடம் ஏன் சொல்லவில்லை?"

சிக்கண்ண செட்டியால் இதற்குச் சரியான பதில் தர முடியவில்லை.

ஒரு கணம் நிதானித்து கௌரம்மாஜி, "சரி, இது வெறும் பண விஷயம் அல்ல என்று தோன்றுகிறது. என்ன விஷயம் என்று இன்னும் சிறிது பார்க்கவேண்டும். நாளைக்கு போபண்ணா இங்கே வரமுடியுமா, ஐயா? நீங்களும் அவரும் வாருங்கள். பேசுவோம். செட்டியார் வரவேண்டியதில்லை."

அரசனை ஆட்சி பீடத்திலிருந்தே அகற்றி அதை ராணியிடம் ஒப்படைப்பது தான் தங்கள் நோக்கம் என்பதை ராணி புரிந்து கொண்டுவிட்டாள் என்பதை லக்ஷ்மீ நாராயணய்யா அறிந்து கொண்டார். அவர், "உத்தரவு அம்மாஜி, நாளைக்கு நானும் போபண்ணாவும் வருகிறோம்" என்று கூறி அவளிடம் விடை பெற்றுக்கொண்டு புறப்பட்டார்.

30

மறு நாள் ராணிக்குச் சொல்லியனுப்பி சௌகரியத்தை அறிந்து கொண்டு லக்ஷ்மீ நாராயணய்யவும் போபண்ணுவும் அரண்மனைக்குச் சென்றனர்.

தான் ராணியிடம் கூறியவை, தன்னிடம் ராணி கூறியவை எல்லாவற்றையும் லக்ஷ்மீ நாராயணய்யா போபண்ணுவுக்குத் தெரிவித்திருந்தார். இருந்தும் ராணி தன்னைப் பார்க்கவேண்டும் என்றதன் நோக்கம் என்னவாக இருக்கும் என்று போபண்ணுவுக்குச் சிறிது கவலை, 'கௌரம்மா சுயமரியாதை அதிகமாக உள்ளவள். நானும் அப்படியே. இப்படிப்பட்ட இரண்டுபேரும் எதிரெதிராக நின்று பேசும்போது பேச்சு சுலபமாக எல்லை மீறி விடும். ராஜகுமாரியைத் தன் சகோதரியின் மகனுக்கு ஏற்றுக் கொள்ளாமல் ராணியின் விருப்பத்தை வேறு நிராகரித்திருக்கிறோம். எப்படியிருந்தாலும் சிறிது முன்னெச்சரிக்கையுடனேயே பேசினால் தவறாக ஒன்றும் நேர்ந்துவிடாது' என்று அவர் எண்ணிக்கொண்டார்.

இவர்கள் அரண்மனைக்கு வந்து சேருவதற்குச் சரியாக ராணி, ராணி வாசத்தின் முன் அறையில் இவர்களுக்காகக் காத்திருந்தாள். இவர்களை வரவேற்று உட்காரச் சொல்லி தானும் எதிரே சிறிது தூரம் தள்ளி உட்கார்ந்துகொண்டாள்.

கௌரம்மா உருவத்தால் அழகோ இல்லையோ, எப்படியானாலும் அவள் நடந்துகொள்ளும் முறை, நடை, கம்பீரம் இவைவெகு அழகானவை என்று ஏற்கனவே சொல்லப்பட்டது. சுபாவமாகவே அவள் ஆழ்ந்து சிந்திக்கக் கூடியவள். ஏதோ பிரச்னை தோன்றியிருக்கிறது என்ற எண்ணத்தினால் இப்பொழுது சிந்தனை சுமையாகிவிட்டது. இதனால் அவளது கம்பீரத்தின் அழகு சிறிது கூடிக் காணப்பட்டது.

மந்திரிகள் உட்கார்ந்த பிறகு ராணி போபண்ணுவை நோக்கி, "வீட்டில் எல்லோரும் சௌக்கியமா, போபண்ணு மாமா?" என்று கேட்டாள்.

அவள் குரல் இனிமையாக இருந்தது; கருணையை வேண்டுவதாக இருந்தது. போபண்ணு அவைகளிலேயே தன் மனத்தின்

பாதியைத் தோற்றுவிட்டார். அவளது கேள்வி அவரை முழுதும் தோற்கடித்துவிட்டது.

"தங்கள் நிழலில் எல்லாரும் சௌக்கியம், அவ்வாஜி" என்று பதிலளித்தார்.

"அரண்மனையின் செலவு மிதமிஞ்சிப்போய் விட்டது, இனிப் பணம் கொடுப்பது கஷ்டம், ஆட்சிப் பொறுப்பை நான் ஏற்றுக் கொள்ளவேண்டும், என்று நீங்கள் விரும்புவதாக ஐயா அவர்கள் தெரிவித்தார்கள். இதன் விவரம் என்னவென்று சரியாகத் தெரிந்து கொள்ளலாமென்று தான் உங்கள் இருவரையும் பார்க்கவேண்டுமென விரும்பினேன்."

"ஐயா அவர்கள் அப்படியென்று சொன்னார்கள் அவ்வாஜி; சரி என்று வந்திருக்கிறோம்."

"நான் உங்கள் வீட்டு மகள் என்று நினைத்து நீங்கள் வழி காட்டவேண்டும். எங்கள் குடும்ப விஷயங்களெல்லாம் நீங்கள் அறிந்தவையே. அதில் ஒன்றும் புதிது இல்லை. நீங்கள் சொல்கிறபடி நான் செய்தால் அரசர் தம்மைத் தள்ளிவிட்டு தம் மனைவி பட்டத்திற்கு வந்துவிட்டாள் என்று எண்ணக்கூடும். பிறகு குடும்பம் எப்படி வாழமுடியும்? எங்களுக்கிருப்பது ஒரு மகள்; அவளுக்கு இப்பொழுது தான் உலக விவகாரம் தெரிந்துகொண்டு வருகிறது. அவள் தன் தாயாரைப் பற்றி என்ன நினைப்பாள்? தாய், தந்தை இருவரிடையே அவள் யாரோடு சேர்வாள்? இதையெல்லாம் யோசிக்கவேண்டுமே?"

"யோசிக்கவேண்டியது தான் அம்மாஜி."

"அரண்மனைக்கு இப்போது ஏற்பட்டிருக்கும் கடனை எப்படியாவது தீர்த்துவிட்டு இனிமேல் செலவைக் கட்டுப்படுத்தி வைத்துக்கொண்டால் இந்த இக்கட்டு தீர்ந்து விடுமல்லவா? குடும்பமும் சீர்கெடாமல் இருக்கும் அல்லவா?"

"அது சரிதான் அம்மாஜி. ஆனால் இந்தக் கடனை அடைப்பது தான் கஷ்டம். அதன் பிறகு செலவைக் கட்டுப்படுத்தும் வழி என்னவென்றும் புரியவில்லை."

"மாமனார் அவர் காலத்தில் எனக்கு வருடத்திற்குப் பத்தாயிரம் பொன் ரொக்கமாகக் கொடுத்து வந்தார்கள். ஏற்கனவே இருந்த நகைபோக வருடம் பத்துப் பதினையாயிரம் முத்து, வைரம், தங்கம் என்று வாங்கி நகைகளாகச் செய்துவைத்தார் வீட்டு மருமகளுக்காக என்று. அதன் பிறகும் நான் கைந்து

வருடம் இவ்வாறு நடந்தது. அவையெல்லாம் சேர்த்து இந்தக் கடன் தொகை அளவு வரக்கூடும். சிறிது அதிகமாகவே கூட இருக்கலாம். அந்த நகை நட்டுக்கள் இதைவிட அதிகமாக எப்போது பயன்படப் போகின்றன. நானென்னமோ அவைகளை தினசரி உபயோகிப்பவளல்ல. லக்ஷ்மி என்று வைத்துப் பூஜித்து வருகிறேன். பூஜையை ஏற்றுக்கொண்ட அந்தத் தாயே இன்று காப்பாற்றட்டும். நகைகளை உங்கள் கையில் ஒப்படைத்து விடுகிறேன். கடனைத் தீர்த்து விடுங்கள். இனிமேல் செலவைக் கட்டுப் படுத்துவதைப் பற்றி ஏற்பாடு செய்வோம்."

போபண்ணுவுக்கு ராணியின் பேச்சைக் கேட்டு ஒருபுறம் ஆச்சரியம், ஒரு புறம் பெருமை, ஒருபுறம் பச்சாத்தாபம். பிரமித்துப் போய் ஒரு நிமிடம் அவர் வாயடைத்துப் போய்விட்டார். பிறகு லக்ஷ்மீ நாராயணய்யாவின் பக்கம் திரும்பி, "கேட்டீர்களா, ஐயா?" என்றார்.

லக்ஷ்மீநாராயணய்யாவின் மனமும் ராணியின் பேச்சால் கரைந்திருந்தது. அவர் கண்களில் நீர் துளிர்த்து விட்டது. மெல்லிய குரலில், "ஊம். கேட்டேன்" என்றார்.

"என்ன சொல்லுகிறீர்கள்?"

"இருவர் சொல்வதும் ஒன்றே ,நான் போபண்ணு."

போபண்ணு இன்னும் சில நிமிடங்கள் பேசாமலிருந்து பிறகு, "தங்கள் யோசனை மிகப் பெரியது, அவ்வாஜி, அரண்மனைப் பெண்களாகட்டும் வேறு எந்தப் பெண்களே ஆகட்டும், தங்கள் நகைகளை விட்டுக் கொடுப்பதற்கு முன்னால் தங்கள் உயிரையே விட்டு விடுவார்கள் என்று உலகம் நினைக்கிறது. அது உண்மையும் கூட. அப்படியிருக்க நீங்கள் இவ்வளவு நகைகளையும் கொடுத்து விடுகிறேன் என்கிறீர்கள். இது பெண் பேசுகிற பேச்சல்ல; தேவதையின் பேச்சு," என்றார்.

"என்ன வானாலும் நான் சிறியவள். இவ்வாறு என்னைப் புகழாதீர்கள். அது தகாது" என்று ராணி அவரைத் தடுத்தாள்.

"அது சரி அவ்வாஜி. ஆனால் உண்மையைச் சொல்லத்தானே வேண்டும். அது புகழ்ச்சி யல்ல."

லக்ஷ்மீநாராயணய்யா, "ஆமாம் அம்மாஜி, போபண்ணு சொல்வது சரி" என்றார்.

ராணி, "நகைகளெல்லாம் நமது பொக்கிஷ அறையில் பெரிய பெட்டியில் இருக்கின்றன. காலையில் எழுந்து அதை நான்கு சின்ன பெட்டிகளில் நிரப்பி நீங்கள் சம்மதித்தால்....."

ராணி வாக்கியத்தை முடிப்பதற்கு முன்னால், போபண்ணா லக்ஷ்மீநாராயணய்யவை ஒரு முறை நோக்கிவிட்டு மீண்டும் ராணியைப் பார்த்து, "இந்த ஏற்பாட்டிற்கும் அரசருடைய சம்மதம் வேண்டுமே," என்றார்.

ராணி, "நானும் அதைத்தான் சொல்ல வந்தேன். நீங்கள் சரி என்று சொன்னவுடன் நான் விஷயத்தை அரசருக்குத் தெரிவித்து விட்டு நகைகளை உங்கள் பொக்கிஷத்திற்கு அனுப்பி வைக்கிறேன்," என்றார்.

போண்ணா, "நல்லது அவ்வாஜி, ஆனால் நாங்கள் இதற்குச் சம்மதிக்கவில்லை."

"சம்மதிக்கவில்லையா?"

"பெரியவர்கள் வீட்டு மருமகளுக்குக் கொடுத்த நகை நட்டுக்கள் மருமகளுக்கே சொந்தம். நெற்றிக் குங்குமம், கழுத்து மாங்கலியம் இவைகளோடு அவைகளும் மங்களச் சின்னங்கள். அதன் மீது கைவைப்பது வீட்டைப் பாழ்படுத்தும் வேலை. நாட்டின் லக்ஷ்மி நீங்கள். இவைகளை நாங்கள் எடுத்துக்கொள்வது தகாது!"

31

இவர்கள் பேச்சு இந்தக் கட்டத்தை அடைந்தபொழுது பக்கத்துக் கதவருகே யாரோ அசைவது போல ராணிக்குத் தோன்றியது. அவள், "யார் அங்கே கதவருகில்?" என்று கேட்டாள். ஒரு கணம் யாரும் வரவில்லை. ராணி மறுபடியும் அதிகாரக் குரலில், "யாரங்கே கதவுக்குப் பக்கத்தில்? உள்ளே வா!" என்றாள். முகத்தில் அசடு வழிய பசவன் கதவருகே அவர்களுக்குத் தெரியும்படி வந்து நின்றான். ராணி, "கதவுக்கருகில் என்ன செய்து கொண்டிருந்தாய் பசவய்ய? ஒட்டுக் கேட்டுக் கொண்டிருக்கவில்லையே?" என்றாள்.

"அரசர் 'பார்த்துக் கொண்டு வா' என்றார். அதற்காக வந்தேன்."

நடந்தது இது தான்- முதல் நாள் லக்ஷ்மிநாராயணய்யா, வந்துவிட்டுப் போனதும், இன்று லக்ஷ்மிநாராயணய்யா,

போபண்ணு இருவரும் வந்திருப்பதும் பசவனின் ஆட்கள் மூல மாக அரசனுக்குத் தெரிவிக்கப்பட்டது. மனைவியின் பேரில் அரசனுக்கு அவநம்பிக்கை இல்லை யென்றாலும் பூர்ண நம்பிக்கை கிடையாது. என்ன விஷயம் நடந்து கொண்டிருக்கிறது என்று அவன் யோசிக்கத் தொடங்கினான். எதுவாக இருந்தாலும் அது தனக்கு விரோதமானதாகத் தான் இருக்க வேண்டுமென்று நிச்ச யித்துக் கொண்டான். என்ன பேசுகிறார்கள் என்று தந்திர மாகத் தெரிந்து வா என்று கூறி பசவனை அனுப்பினான்.

காலையிலிருந்து மது அருந்தி அவனுக்கு இப்பொழுது சுய நினைவு குறைந்திருந்தது. பசவன் வருவதற்குச் சிறிது தாமத மாயிற்று. அவன் தானே வந்தான்.

பசவனின் பேச்சால் திருப்தியடையாத ராணி, "அரசர் பார்த் துக் கொண்டு வா என்றால் நேராக வர வேண்டும், என்னைப் பார்க்க வேண்டும். கதவருகில் ஏன் ஒட்டுக் கேட்டுக்கொண்டு நின்றாய்?" என்றார். அந்த வேளைக்குச் சரியாக அரசனே அங்கே வந்து விட்டான்; "ஆமாம், என்ன விபசாரம் செய்து கொண் டிருக்கிறாள், பார்த்துவா என்றேன். என்ன செய்து கொண்டி ருக்கிறாயடி வேசி, பார்ப்பானுடனும் உன் உறவுக்கார மனுஷ னுடனும்?" என்று கூறியபடி முன்னுக்கு வந்தான்.

ராணி மந்திரிகளின் பக்கம் திரும்பி, "இந்தப் பேச்சு எதையும் நீங்கள் காதில் போட்டுக் கொள்ளக் கூடாது போபண்ணா மாமா, ஐயா, இது எங்கள் குடும்ப விஷயம்," என்று கூறி விட்டு அரச னிடம், "எல்லா விஷயத்தையும் நான் தெரிவிக்கிறேன். தவ றென்றும் நடக்கவில்லை" என்று பதிலளித்தாள்.

"தவறு நடக்கவில்லையா? எல்லாவற்றையும் தெரிவிக்கப் போகிறாயா? வேசி, வேசி! நீ தெரிவிப்பாய்: அதை நான் கேட்க வேண்டுமே. இரு உன்னைச் சேரிக்கு விரட்டுகிறேன். போபண்ண மாமா! கௌரம்மா மருமகள்! ஹஹ்ஹா. என்ன கொஞ்சல், என்ன அந்நியோன்னியம்! மருமகளுடன் சரசம் புரிய வந்தாயாடா இங்கே போபண்ண மாமா? ஏண்டா வந்தாய் இங்கே?" என்று சீறிக் கொண்டே அரசன் போபண்ணாவை நோக்கிப் பாய்ந்தான்.

அரசனுக்கு மது போதை இறங்கவில்லை என்பது அவன் பேச் சிலிருந்து விளங்கிக் கொண்டிருந்தது. கோபத்தால் அவன் உதட்டோரங்களில் நுரை தோன்றி யிருந்தது. போபண்ணாவுக் கும் கோபம். என்னவோ சொல்லவிருந்தார். அதற்குள்ளாக

லக்ஷ்மீநாராயணய்யா அவரைத் தொட்டு "சும்மா இருங்கள். வாயைத் திறக்காதீர்கள்" என்று அவரைத் தடுத்தார். போபண்ணு கோபத்துடன் லக்ஷ்மீநாராயணய்யாவைப் பார்த்தார்; கோபத்தை அடக்கிக் கொண்டார்.

ராணியின் முகம் சிறிதும் விகாரமடையவில்லை. அவள் கணவனின் அருகே வந்தாள்; "மந்திரிகளை நானே வரவழைத்தேன். கொஞ்சம் வேலை இருந்தது. என்ன வென்று பிறகு சொல்லுகிறேன். இப்பொழுது உங்கள் உடம்பு சரியாக இல்லை. கொஞ்சம் உட்கார்ந்து கொள்ளுங்கள். அப்புறம் பேசுவீர்களாம்." என்று கூறியபடி அரசனுக்கும் போபண்ணுவுக்கும் இடையே நின்றாள்.

"அடி விபசாரி, ஆசை நாயகனுக்குப் பரிந்து கொண்டு வருகிறாயா?" என்று கூறி ராணியை அடிக்கக் கையை ஓங்கினான். போபண்ணு அரசனைத் தடுக்கக் கையை நீட்டினார். லக்ஷ்மீநாராயணய்யா அவரைத் தடுத்து பின்னுக் கிழுத்துக் கொண்டார்.

அரசனின் கை ராணியின் தலைமீது தாழ்ந்தது. ராணி அதைத் தன் இரு கைகளாலும் தடுத்துப் பிடித்துக் கொண்டாள்.

இந்த நேரத்திற்கு கோபத்தினால வசமிழந்த அரசன் ஒரு புறமாகச் சாய்ந்தான், அவன் வாய் 'தத்த' என்று ஏதோ குழறியது.

ராணி கையை நீட்டி அவனைப் பிடித்துக் கொண்டாள். "இங்கே வா பசவய்யா, அரசருக்கு உடல் நிலை சரியாக இல்லை. அவரைக் கொஞ்சம் அழைத்துக் கொண்டு போய்ப் படுக்கவை" என்றாள்.

ராணி கௌரம்மாவின் அமைதியைக் கண்டு பசவன் கூட பிரமித்துப் போய் விட்டான். அவன் அவள் உத்தரவுப்படி அருகில் வந்து அவளிடமிருந்து அரசனை ஏற்றுக் கொண்டான். அரசனுக்கு நினைவு தவறி விட்டிருந்தது.

ராணி மந்திரிகளின் பக்கம் திரும்பி, "ஒரு கணம் இருங்கள், வருகிறேன்" என்று கூறி பசவனிடம், "விடு பசவய்யா, தாதியைக் கூப்பிடு" என்று சொல்லி அரசனைப் பக்கத்துக் கட்டிலில் சாய்வாக உட்கார வைத்தாள். பசவன் கதவருகே சென்று தாதியைக் கூப்பிட்டாள். அவள் வந்த உடன் ராணி அவளிடம் அரசனது இடது தோளைப் பிடித்துக் கொள்ளச் சொல்லி அவளது உதவியோடு அவனை மெதுவாகத் தூக்கிக் கொண்டு உள்ளே சென்றாள்.

ராணி அரசனைத் தூக்கிய பொழுது நொண்டி உதவிக்கு வந்தான். ராணி 'வேண்டாம்' என்று சைகை காட்டினாள். போபண்ணவும் ஒரு அடி முன் வைத்து உதவிக்கு வந்தார். ராணி, "வேண்டாம், வேண்டாம்" என்றாள்.

அவள் பாவனை, 'இந்த வேலை, எனக்குக் கஷ்டமானதும் அல்ல, என் யோக்கியதைக்குக் குறைவு மல்ல' என்கிறாற்போல இருந்ததை யாரும் அறியும்படியாக இருந்தது.

ராணி அரசனை அழைத்துக் கொண்டு உட்புறம் சென்றதுமே போபண்ண லக்ஷ்மீநாராயணய்யாவிடம், "அம்மாஜியவர்கள் பாடு கஷ்டம். இனி இப்போதைக்கு இந்தப் பேச்சு வேண்டாம் இல்லையா?" என்றால். லக்ஷ்மீநாராயணய்யா. "வேண்டாமென்று தான் தோன்றுகிறது" என்று கூறி பசவனை அழைத்து, "பசவய்யா, அம்மாஜி மறுபடியும் எங்களைத் தேடிக் கொண்டு வந்தால் இப்பொழுது அரசரைப் பார்த்துக் கொள்ளும்படியும், மறுபடியும் நாளைக்குப் பேசலாமென்றும் சொல்லு" என்றார்.

பசவன், "சரி ஐயா" என்றான். லக்ஷ்மீநாராயணய்யாவும் போபண்ணவும் அரண்மனையை விட்டுப் புறப்பட்டுச் சென்றனர்.

32

கோப வெறியால் மூர்ச்சை யடைந்த வீரராஜன் பதினைந்து நாள் படுக்கையில் கிடந்தான். முதல் மூன்று நாட்கள் அரைகுறை நினைவில் இருந்தான்.

ராணி அவனருகிலேயே இருந்து சிசுரூஷை செய்து வந்தாள். வைத்தியரை அழைத்து 'என்ன வாகியிருக்கிறது. சரியாகப் பாருங்கள்' என்று கூறி அவன் செய்த பரீக்ஷைகளை யெல்லாம் தானும் நன்றாகக் கவனித்து முடிந்த வரையில் நல்ல சிகிச்சைக்கு ஏற்பாடு செய்தாள். அதோடு தீட்சிதரை வரவழைத்து அரசனுக்குக் குணமாகும்படி சுவாமி சந்நிதியில் பூஜைகள் செய்ய ஏற்பாடு செய்தாள். தீட்சிதர் ஜோசியரும் கூட. ராணி அவரிடம், "கிரக கதி யெல்லாம் எப்படி யிருக்கிறதென்று பாருங்கள். சாந்தி ஏதாவது செய்ய வேண்டுமானால் செய்யுங்கள்," என்றாள்.

அரசனின் பிதற்றலில் லூசி என்கிற ஒரு ஆங்கிலப் பெண்ணின் பெயரும், ஹாகர் என்கிற ஆங்கில அதிகாரி ஒருவனின் பெயரும் அடிக்கடி வந்தன. அவர்களுக்கு அளிக்க வேண்டிய விருந்து தடைப்பட்டு விட்டது என்று அவனுக்குக் கலக்கம். ராணி அவர்களைப் பார்த்திருக்கிருள். அரசனின் உடல் நிலை சரியானதும் அந்த ஆங்கிலேயர்களை வரவழைத்து அந்த விருந்தை நடத்திவிட வேண்டுமென்று நிச்சயித்துக் கொண்டாள்.

வைத்தியன், "முன்பு ஒரு முறை அரசருக்கு இப்படியான பொழுது மேகலிங்கம் பாதிரி ஒரு மருந்தைக் கொடுத்தார். அதனுல் ரொம்பவும் குணம் கண்டது," என்று சொன்னுன். மேகலிங்கம் என்பது மேக்லிங் என்ற ஆங்கிலப் பெயரின் தேசிய உருவம். பாதர் மேக்லிங் மங்களூரின் கிறிஸ்தவப் பாதிரி. கிறிஸ்தவ மதத்தைப் பிரசாரம் செய்வதற்காக வந்த கிறிஸ்தவ மதத்தினர். சிறிது வைத்தியமும் தெரியும். ராணி மங்ளூருக்கு ஆட்களை அனுப்பி பாதிரியை வரவழைத்தாள்.

வைத்தியன் எந்த மருந்தைக் கொடுத்தாலும் அதை முதலில் வேறொருவர் குடித்து விட்டோ, அல்லது சிறிதை நாய்க்குப் போட்டு விட்டோ பிறகு தான் அரசருக்குக் கொடுப்ப தென்பது அரண்மனையில் வெகு காலமாக இருந்து வரும் பழக்கம். இந்த முறை இந்தக் காரியத்தை ராணி தானே ஏற்றுக் கொண்டாள். தான் கொடுத்த மருந்தை ராணி அருந்துவதைக் கண்ட பாதிரி, "இந்த முன்னெச்சரிக்கை என் விஷயத்தில் தேவையில்லை" என்ருள். ராணி சிரித்துக் கொண்டே, "எனக்கும் உடல் ஆரோக்கிய மடையட்டும் என்பதற்காகச் சாப்பிடுகிறேன்," என்ருள்.

அரசன் ராணியைச் சரியானபடி நடத்தவில்லை என்பது பாதிரிக்கும் தெரிந்த விஷயம். பாதிரி மட்டுமென்ன, குடகுக்கு வந்துள்ள ஆங்கிலேயர் அனைவரும் அறிந்த விஷயம். இது அப்படியிருந்தும் இந்த ஸ்திரீ தன் கணவன் விஷயத்தில் இவ்வளவு அன்புடன் நடந்துகொள்கிருளே என்று பாதிரிக்குச் சிறிது ஆச்சரியம். கூடவே, 'ஹிந்து தர்மத்தில் பெண்ணுக்கு மரியாதை கிடையாது, கணவன் எப்படிப்பட்ட வனுனாலும் மனைவி அவனைக் கடவுள் போலப் பாவிக்க வேண்டும் என்று விதித்து இந்த தர்மம் பெண்களைப் படுகுழியில் இறக்கிவிட்டது, ராணியாக இருந்தும் தான் ஒரு சுயமரியாதையுள்ள ஜீவன் என்று இவளுக்குத் தோன்றவில்லையே' என்று சிறிது திரஸ்காரமும் உண்டு.

ராணி பாதிரியிடம், "அரசரின் உடல் நிலை சரியானதுமே ஒரிரு மாதங்களுக்குள் உங்கள் ஆங்கிலேய நண்பர்களுக்கு இங்கே ஒரு விருந்து நடத்த வேண்டும். ஹாகர் துரை, லூசி துரைசானி, மற்ற உங்கள் பெரிய மனிதர்கள் எல்லோரும் வர வேண்டுமென்பது என் விருப்பம். மங்களூரிலுள்ள உங்கள் தலைவரும் வரும்படி ஏற்பாடு செய்யுங்கள். எல்லோருக்கும் சௌகரியமான ஒரு நாளைப் பார்த்து ஏற்பாடு செய்யுங்கள்" என்றாள். "பாதிரி, ரொம்ப சந்தோஷம். செய்கிறேன்" என்றார்; இந்த விஷயத்தைத் தெரிவித்து பெங்களூருக்கும், மங்களூருக்கும் கடிதங்கள் எழுதுவித்தார்.

33

நோயாளிகளாகப் படுத்திருக்கும் ஜனங்களுக்குப் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு அவர்களது ஆத்மாவின் நன்மையின் பொருட்டுப் பேசுவது கிறிஸ்தவப் பாதிரிகளின் ஒரு வழக்கம். மற்ற மதத்தவர்களின் அருகில் உட்காரும் போது இது அவர்களை கிறிஸ்துவ மதத்தில் சேர்த்துக் கொள்வதற்குச் செய்யும் முயற்சி ஆகிறது. "ஏசுவே ரட்சகர், கிறிஸ்துவர் களுக்கு மாத்திரம் கர்த்தர் கருணை காட்டுவார்" என்பது இவர்களின் அசைக்க முடியாத நம்பிக்கை. நோயாளியாக இருப்பவன் மனது பலஹீனமாக இருக்கும்; நரகத்தின் வர்ணனையால் அந்த மனத்தில் பீதியை உண்டாக்குவது சுலபம். கிறிஸ்துவப் பாதிரியானவன் இத்தகைய பேச்சை எடுத்து ரோகியைப் பயப்படுத்துவதற்குப் பின்வாங்குவதில்லை. அது மாத்திரம் அல்ல; அவனது ஆத்மாவை ரட்சித்து கிறிஸ்துவின ஆஸ்தியாக்குவதற்கு அது தக்க தருணம், கடவுள் மனிதனுக்கு நோய்களை அளிப்பது இவ்வாறு பயமுறுத்தி ஜீவன் கடவுள் பால் திரும்பட்டும் என்பதற்காகவே தான் என்று இவர்கள் நம்பிக்கை; மேக்லிங் பாதிரி இந்த மனோதர்மத்தைக் கொண்ட கிறிஸ்துவ ஊழியர்.

அரசனுக்கு மருந்துகொடுக்கும் இத்தருணத்தில் அவர் ராணிக்கும் அரசனுக்கும் ஏசுவின் விஷயமாக வேண்டிய அளவு ஏடுத்துக் கூறினார். அவர்கள் கிறிஸ்தவர்களாக மாறினால் கடவுள் அவர்களைக் காப்பாற்றுவார் என்று நம்பிக்கை யூட்டினார். ஆங்கில

அதிகாரிகள் இவர்களைச் சகோதரர்கள், பந்துக்கள்போல நடத்துவார்கள் என்றார்.

சிறிது குணமடைந்த பிறகு அரசன் ஒரு நாள் "நான் கிறிஸ்தவனானால் எனக்கு என்ன கொடுப்பீர்கள்?" என்று ஹாஸ்யமாகக் கேட்டான். பாதிரி, "உங்கள் ஆத்மா இப்பொழுது சைத்தானின் வசமாகியிருக்கிறது. அதை உங்களுக்கு விடுவித்துக் கொடுப்பேன்" என்றார். அரசனுக்குக் கோபம் வந்தது. அவன், "உங்கள் அப்பன் சைத்தானின் பிடியிலிருக்கிறான். விதவை பெற்ற மகனே, அவனை முதலில் விடுவித்துக்கொள்" என்றான். பாதிரி, "இந்தப் பேச்சைப் பேசுவது சைத்தான் என்று எங்கள் மதத்தில் சொல்லியிருக்கிறது. கடவுள் அவனை விரட்டி விட்டு உங்களுக்கு நன்மை செய்யட்டும் என்று நான் பிரார்த்திக்கிறேன்" என்றார்.

அவரது பொறுமையைக் கண்டு ராணி ஆச்சரியப் பட்டாள் இந்தப் பாதிரியார் ஓங்காரேசுவரர் தேவஸ்தானத்தின் தீட்சிதரைப் போலவே பொறுமைசாலி என்று அவளுக்குத் தோன்றியது. எனவே அவள் பாதிரியாரை மிகவும் மெச்சிக் கொண்டாள். பாதிரியார் ராணியின் அனுமதி பெற்று அவளுக்கும் அவள் மகளுக்கும் கிறிஸ்துவ மதத்தின் சிறப்பைப் பற்றி வர்ணித்தார். "நீங்கள் கிறிஸ்தவர்களாக மாறுவதைப் பற்றி யோசிக்க வேண்டும்" என்று ராணிக்கு யோசனை சொன்னார். ராணி, "எங்கள் மதம் எங்களுக்குப் பிடித்திருக்கிறது; உங்கள் மதம் உங்களுக்குப் பிடித்திருக்கும். நீங்கள் அந்த வழியில் சென்று மோட்சத்தை அடையுங்கள். நாங்கள் எங்கள் வழியில் சென்று அடைகிறோம். இப்பொழுது நீங்கள் வந்திருப்பது மருந்து கொடுப்பதற்கு; அந்த வேலையைச் சரியாகச் செய்யுங்கள். உங்களுக்கு ஏராளமாக சன்மானம் கொடுப்போம்" என்றாள்.

"கிறிஸ்தவ மதம் ஹிந்து மதத்தைவிட உயர்ந்தது என்பதை நான் உங்களுக்கு நிரூபிக்கிறேன். உங்கள் மத குருக்களை ஒரு நாள் வரவழையுங்கள்; என்னோடு வாதம் புரியட்டும்; நான் அவர்களைத் தோற்கடிக்கிறேன்," என்று பாதிரி பதிலளித்தார்.

ராணி, "நமது தர்மத்தைப் பற்றி அவ்வாறு வாதம் செய்ய நமது பெரியவர்கள் உடன்படமாட்டார்கள். இருந்தாலும் நீங்கள் இவ்வாறு கேட்டதாக ஐயா அவர்களிடம் தெரிவிக்கிறேன். தீட்சிதர் சம்மதித்தால் உங்களிருவருக்கும் சௌகரியமான ஒரு நாளில் சர்ச்சை நடக்கட்டும்" என்றாள்.

தீட்சிதர் கோவிலில் கிரக சாந்தியையும், பூஜைகளையும் நடத்தினர்; அரசனுக்கு ஆரோக்கியம் உண்டாகட்டும் என்று அன்னதானமும் வஸ்திர தானமும் செய்வித்தார். இது சம்பந்தமான சகல செலவுகளையும் ராணி தானே சொந்தமாக ஏற்றுக் கொண்டாள்.

ஒரு மாதத்தில் அரசனின் உடல்நிலை வெகுவாக குணம் பெற்றது. கணவன் மூர்ச்சை யடைந்தபொழுது எங்கே தன் மாங்கல்யத்துக்குக் கேடு வந்துவிடுமோ என்று அஞ்சிய ராணி தற்போதைக்கு அந்த பயம் நீங்கியது என்று சந்தோஷப் பட்டாள். வைத்தியன், தீட்சிதர், பாதிரி இவர்களுக்கு சன்மானம் கொடுத்து "கடவுள் இந்த முறை உங்கள் மூலமாக எங்களைக் காப்பாற்றினர்" என்று கூறினள்.

34

சிக்கண்ண செட்டியின் அண்ணன் மகன் சிக்கராம செட்டி மனைவியுடன் அரகலகூடிற்கு ஓடியவன் மடிகேரியில் தன் சிற்றப்பாவின் கதி என்னவாயிற்று என்று யோசித்தான். அவன் வந்த சங்கதி என்ன என்று கேட்ட நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் எல்லா விவரங்களையும் சொல்லி சிற்றப்பாவைக் காப்பாற்றுவது எப்படி என்று அவர்களுடன் ஆலோசனை செய்யத் தொடங்கினன்.

இரண்டு வருடங்களுக்கு முன்னால் மைசூரின் அரசன் நாட்டைச் சரியாக ஆளவில்லை என்ற குற்றம்சாட்டி ஆங்கிலேயர்கள் அவனைப் பட்டத்திலிருந்து நீக்கி தாங்களே அரசாட்சியை ஏற்றுக்கொண்டனர். "குடகின் அரசன் அயோக்கியனாக இருக்கிறான். அவனையும் பட்டத்திலிருந்து நீக்கிவிட்டு குடகை மைசூரோடு சேர்த்து ஆட்சி பீடத்தை நீங்களே ஏற்றுகொள்ளுங்கள்" என்று ஏன் எழுதக் கூடாது? தாங்களென்னமோ மைசூர் வாசிகள்; இப்பொழுது ஆங்கிலேயர்கள் தான் தங்களுடைய ஆட்சியாளர்கள். சிக்கண்ண செட்டி மடிகேரியிலிருந்தாலும் அரகலகூடைச் சேர்ந்தவன். குடகு மன்னன் மைசூர் வர்த்தகருக்குத் தொல்லை கொடுக்கிறான், இதை விசாரிக்கவும் என்று மக்கள் ஆட்சியாளரிடம் புகார் செய்வது சரியானதே. இவ்வாறு முடிவு

செய்தார்கள். அரகலகூடின் பிரமுகர்களிடமிருந்து ஒரு வேண்டு கோள், சிக்கண்ண செட்டியின் உறவினர்களிடமிருந்து ஒரு வேண்டுகோள், சிக்கராம செட்டியிடமிருந்து ஒரு பிரார்த்தனை இவ்வாறு ஒரு வாரத்தில் மூன்று வேண்டுகோள்கள் பெங்களூரி லுள்ள ஆங்கில அதிகாரியிடம் வந்து சேர்ந்தன.

அரகல கூடிலிருந்து இவ்வாறு பிரார்த்தனை போயிருப்பதாக சிக்கராம் செட்டி சிக்கண்ண செட்டிக்கு ரகசியமாக செய்தி அனுப்பினான். சிக்கண்ண செட்டி எந்தப் புகாரோ விண்ணப் பமோ அனுப்பத் தயாராக இருக்கவில்லை. ஆனால் மற்றவர்கள் அனுப்புவதைப்பற்றி அவனுக்கு ஆட்சேபணை இல்லை. நல்ல தாயிற்று என்றே அவன் நினைத்துக் கொண்டான். இந்தப் பேச்சு அரண்மனைக்குத் தெரிந்து அவர்கள் தனக்கு ஏதும் கேடு செய்யாமலிருக்க வேண்டுமென்று மட்டும் விரும்பினான்.

35

அரகல கூடிலிருந்து வந்தது போன்ற பிரார்த்தனைகள் ஆங்கி லேயருக்கு மிகவும் பிடித்தமானவை. அந்த நாட்களில் அவர்கள் பாரத பூமியை விழுங்கும் மலைப்பாம்பின் அவதாரமாக இருந்தனர்.

ஹைதரோடு போரிட்டபோது மைசூரில் சஞ்சரித்தும், தொட்ட வீரராஜனோடு நட்புக்கொண்டு குடகில் சஞ்சரித்தும் ஆங்கி லேயர்கள், "மைசூராகட்டும் குடகாகட்டும் இரண்டும் தங்க வயல்கள். இப்படிப்பட்ட நிலம் நம் கைக்குக் கிடைப்பது மிகவும் அரிது," என்று கண்டு கொண்டிருந்தனர்.

திப்பு கடைசியாகத் தோற்று மைசூர் ராஜ்யத்தின் புன ரமைப்பு ஆலோசனைக்கு வந்தபோது, ஆங்கிலேயர்களிலேயே இரண்டு கட்சிகள் ஏற்பட்டுவிடடன. "நாட்டை மீட்டும் எங்களுக்குக் கொடுத்து விடுங்கள் என்று கேட்டு அது விஷய மாக ராஜமாதா நமக்கு மிகவும் உதவியிருக்கிறார். அவருக்கு நம்பிக்கைத் துரோகம் செய்யக் உடாது. அவர்களுடைய ராஜ் யத்தை அவர்களுக்கே திருப்பிக் கொடுப்பது தான் நியாயம்" என்று ஒரு சாராரின் வாதம். "நியாயத்தைப் பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்தால் நாட்டைப் பெறுவது எப்படி?

இந்த ஜனங்களுக்கு ஆட்சிப் பொறுப்பை நிர்வகிக்கக்கூடிய திறமை இருக்கிறதா? இவர்களிடம் ஆட்சி பீடத்தைக் கொடுத்து விட்டால் இவர்களை நாமே தான் பார்த்துக் கொள்ளவேண்டும். இப்படிச் சுற்றி வளைப்பதனால் என்ன பிரயோஜனம்? அவர்கள் சகாயம் செய்ததற்காக வருஷம் சில லட்சங்கள் பணம் கொடுத்து விடுவோம். நாட்டை நாம் வசப்படுத்திக் கொள்வது தான் சரி," என்பது இன்னொரு சாரார் கட்சி. இந்த இரு தரப்பினரிடையே ஒரு முடிவு ஏற்படுவதே கஷ்டமாக இருந்தது.

கடைசியில் முடிவு ஏற்பட்டது. தர்மம், நியாயம் ஆகிய அடிப் படைகளின் பேரில் அல்ல. "திப்புவைத் தோற்கடிப்பதில் ஆங்கி லேயர்களுக்கு நிஜாமும், மராட்டியர்களும் உதவி புரிந்திருந்தார கள். மைசூரை அரசரிடம் ஒப்புவிக்காமலிருந்தால் திப்புவின் வசமிருந்த அந்த விசாலமான பிரதேசத்தை ஆங்கிலேயர்கள் மாத்திரமே விழுங்கமுடியாது. நிஜாமுக்குப் பங்கு கொடுக்க வேண்டும்; மராட்டியர்களுக்குப் பங்கு கொடுக்கவேண்டும். திப்புவைத் தோற்கடிக்க உங்களுக்கு நாங்கள் சகாயம் செய்ய வில்லையா என்று அவர்கள் கேட்பார்கள். ஆனால் அவர்கள் ஏற் கனவே பராக்கிரமசாலிகளாக இருக்கிறார்கள். அவர்களுக்கு இன்னும் சிறிது நிலத்தைக் கொடுத்தால் பிறகு அவர்களைக் கட்டிப் பிடிப்பது யார்? ஒரு திப்புவைத் தோற்கடித்து இரண்டு திப்புக்களை உற்பத்தி செய்தது போலாகும். மைசூரை ஹிந்து அரசனுக்குக் கொடுத்தால் அவன் ஆங்கிலேயர் உபகாரம் செய் தார்கள் என்ற நன்றியோடு இருப்பான்; நிஜாமுக்கும், மராட்டி யர்களுக்கும் எதிராக மூன்றாவது சக்தியாக அவசியம் நேரிட்டால் தமக்குச் சாதகமாக இருப்பான்," என்று இவ்வாறு யோசித்து ஆங்கிலேயர்கள் மைசூரை ஹிந்து அரசனுக்குத் திருப்பிக் கொடுத்தார்கள்.

முப்பது வருஷங்கள் கழித்து அங்கே வசிக்க வந்த அதிகாரி, அவனது சகாக்கள் முதலியோர், "ஐயோ, இப்படிப்பட்ட நிலத்தை நாம் சொந்தமாக்கிக் கொள்ளாமல் திருப்பிக் கொடுத்துவிட்டோமே" என்று துயரப்பட்டார்கள். பிறகு இரு பது வருடங்கள் கழித்து திப்புவின் தோல்வியினால் ஏற்பட்ட சூடு ஆறி ஆங்கிலேயர்களின் மனோபாவமே மாறிவிட்டிருந்தது. அப் பொழுது அவர்களுக்கு விரோதியாக இருந்த மராட்டியர்கள் இப் பொழுது மூலையில் கிடந்தனர். தனியாக விடப்பட்ட நிஜாம் மராட்டியர்களின் கதி தனக்கும் ஏற்பட்டுவிடுமோ என்ற பீதியில்

இருந்தான். மலைப்பாம்பு மனப்பான்மை கொண்ட ஆங்கில அதிகாரிகள் சமயம் வாய்க்குமா என்று காத்திருந்தார்கள். மைசூர் அரசரின் அதிகாரிகள் முட்டாள் தனத்தால் கலகம் விளைந்தபொழுது அதையே சாக்காக வைத்துக்கொண்டு அரசனைப் பட்டத்திலிருந்து நீக்கினார்கள்; மைசூரை விழுங்கினார்கள்.

குடகு ஒரு வகையில் இவர்களுக்கு மைசூரைவிட கவர்ச்சிகரமான நாடு: குடகின் மலை, காடு, நதி, கணவாய், வயல், தோட்டம் இவை அகை அவர்களது பைபிளில் சொல்லப்பட்டுள்ள ஈடன் தோட்டத்திற்குச் சமமாக விளங்கச் செய்தன. தமது நாட்டின் ஸ்காட்லாந்துப் பகுதியிலுள்ள மலைப் பிரதேசங்கள் மிகவும் அழகானவை என்பது அவர்கள் எண்ணம். குடகின் அழகு ஸ்காட்லாந்தின் மலைப் பிரதேச அழகைவிட ஒரு படி மேல் என்று சொல்லும்படியாக இருந்தது. மைசூரை விழுங்கியதைப் போல குடகையும் விழுங்குவதற்குப் பல ஆங்கிலேயர்களின் வாயில் நீரூறிக்கொண்டிருந்தது அரசனோடு விவாதம் வளரட்டும் என்பதே அவர்களுடைய ஆசை. இதற்கு முன் ஏற்பட்ட பல விவாதங்கள் சமைக்கப்படும் சர்க்கரைப் பொங்கலின் மணத்தைப் போல இவர்களுடைய ஆசையைத் தூண்டிவிட்டிருந்தன; அரகல கூடிலிருந்து வந்த புகார்க் கடிதங்களினால் இவர்களுக்கு மிகுந்த சந்தோஷம் ஏற்பட்டது.

அப்பொழுது மைசூரின் ஆட்சி ஆங்கில அதிகாரி மண்டலத்தின் கைகளில் இருந்தது. மாக்லிமாட் என்பவன் முக்கிய அதிகாரியாக இருந்தான்; காஸா மேஜர் ஸ்தல அதிகாரி (ரெஸிடெண்ட்) ஹாகர் அவனுக்கு உதவி அதிகாரி. காஸாமேஜர் குடகை கபளீகரம் செய்யவேண்டு மென்ற எண்ணம் கொண்டவன்; சமீப காலமாக இந்தத் திசையின் விவகாரங்களை யெல்லாம் ரெஸிடெண்ட் பார்த்துக் கொள்ளவேண்டு மென்று ஏற்பாடாகியிருந்தது.

அரகல கூடிலிருந்து வேண்டுகோள் வந்த ஒரு வாரத்திற்குள்ளாக மடிகேரியிலிருந்து, "அரசருக்குத் தற்போது உடல் நிலை சரியா இல்லை. குணமான உடனே நீங்கள் எல்லாரும் வந்து அவரது விருந்தாளிகளாக இருக்கவேண்டு மென்று விரும்புகிறார்" என்று மேக்லிங் பாதிரி எழுதிய கடிதம் வந்தது. காஸா மேஜர், "அழைப்பை ஏற்றுக் கொள்கிறோம். கடவுள் கிருபையால் அரசருக்கு விரைவில் குணமாகட்டும். பிறகு நாங்கள் வருவதற்குச் சௌகரியமான நாளைத் தெரிவிக்கிறோம்," என்று பதில் எழுதினான்.

திரும்பி வருகிறேன் என்று மந்திரிகளிடம் சொல்லிவிட்டு உள்ளே சென்ற ராணி அரசனைப் படுக்கையில் படுக்கவைத்து, பணிப் பெண்ணை அழைத்து காற்று வீசச் செய்து, தன் கையினாலேயே அவனது நெற்றி, கன்னம், தாடை, இவைகளின் மீது பன்னீர் தெளித்து லேசாகப் பூசி, பணிப் பெண்ணிடம், "ஒரு நிமிடம் பார்த்துக்கொள், வருகிறேன்" என்று கூறி மந்திரிகள் இருந்த இடம் வந்தாள். வந்து பார்த்தால் மந்திரிகள் புறப்பட்டுப் போயிருந்தார்கள். அங்கிருந்த பசவன், "மந்திரிகள் மறுபடியும் நாளைக்கு வருகிறேன் என்றார்கள் அம்மாஜி" என்று தெரிவித்தான். ராணி மீண்டும் அரசனிடம் சென்றாள்.

அரண்மனையிலிருந்து வெளியே காலடி எடுத்துவைத்தது தான் தாமதம். போபண்ணாவுக்குக் கோபம் கிளம்பிவிட்டது. "பார்த்தீர்களா ஐயா, இந்தப் பிச்சைக்கார வம்ச அரசன், என்ன பேச்சுப் பேசி விட்டான்? குடகத்தியின் வயிற்றில் பிறந்து, குடகத்தியை மணந்துகொண்டும் கூட இவனுக்கு இன்னும் குடகர்களின் குணம் தெரியவில்லை. நான் கடவுளல்ல, சரி தான்; இருந்தால் என்னவோ சொல்லிக்கொண்டுபோ என்றிருந்திருப்பேன். மனைவியான தன் வீட்டு லக்ஷ்மியை இப்படி ஒரு வார்த்தை சொல்லிவிட்டானே. இவன் அரசனா. அரசனாக இருக்கவேண்டுமா? இந்த வார்த்தை சொன்னவனுக்கு நான் மந்திரியாக இருக்கவேண்டுமா?" என்றார்.

லக்ஷ்மீ நாராயணய்யா, "அரசருக்குத் தெரிந்தது அவ்வளவு தான் போபண்ணா. கட்டுப் பாடில்லாமல் வளர்ந்து விட்டார். நடத்தையிலும் கட்டுப்பாடு இல்லை. பேசி என்ன பிரயோஜனம்? ஆனால் இது அரசரோடோ, நம்மோடோ முடியக்கூடிய விஷயமல்ல, அரண்மனையைப் போலவே ஊர், சேரி, நாடு, வீடு எல்லாவற்றிற்கும் சம்பந்தப்பட்ட சங்கதி. நாம் கோபித்துக்கொண்டு நிலை தவறிவிட்டால் தேசத்தின் கதி என்ன?" என்றார்.

"தேசத்தின் கதி வேறு ஐயா. இவருடைய கதை இனி முடிந்தது. பிச்சைக்கார வம்சம் என்று சொன்னேனே, பிச்சைக்காரன் எப்படிப் பெருந்தன்மை உடையவனாவான்? அந்த வம்சத்திற்கு அந்த நாக்குத்தான்."

"நீங்கள் கோபிப்பது நியாயம் போபண்ணு. ஆனால் கோபத்தில் பேசுகிற பேச்சு சரியாகாது."

"சரி ஐயா இனி நான் அந்தப் பேச்சு பேசுவதில்லை. ஆனால் இன்று முதல் நானும் பொன்னப் பாவிற்குத் துணை. எனக்கு இவன் அரசனல்ல; இவனுக்கு நான் மந்திரி அல்ல. மூன்று பேர் இருந்தோம்; இருவரானோம். இப்பொழுது நீங்கள் ஒருவரே."

"நான் ஒருவன் தான் நீங்களில்லாமல் எவ்வளவு நாள் இருக்க முடியும்? இருக்கவேண்டுமென்றாலும் முடியாது."

"அப்படியே நடக்கட்டுமே, முஸ்லிம்கள் வந்து அட்டகாசம் செய்தபோது அரசன் யார், மந்திரி யார்? இந்த பிச்சைக்காரனின் வம்சம் அழிந்தே போயிருந்தது. நாடு எதில் குறைந்து விட்டிருந்தது? பெரிய அரசர் சிறையிலிருந்து விடுவித்துக் கொண்டு வந்து பெரியோர்களைக் கலந்து ஒரு வியலஸ்தை செய்து நாட்டை உருவாக்கினார் மறுபடியும் குடகு அரசருடையதாயிற்று. அவர் பெரியவர்; பெரியவராக வாழ்ந்து, குடகு நாட்டைப் பெரியதாக்கினார். புழு பிறந்திருக்கிறது, புழுவாக வாழ்கிறது, குடகு நாட்டைப் புற்றாக்கிவிட்டது. ஆக்கட்டும்; யாராவது இவன் மண்டையிலடிப்பார்கள். இதன் கதை முடிந்து விடும். மறுபடியும் பழையபடி நாடு இருக்கும், பெரியவர்கள் இருப்பார்கள்."

வீரராஜன் போபண்ணுவைப் பற்றிப் பேசியது எவ்வளவு தவறானது என்பது குறித்து லக்ஷ்மீ நாராயணய்யாவுக்குச் சிறிதும் சந்தேகம் இல்லை. அதனால் போபண்ணுவின் மனம் ஆக்ரோஷம் கொண்டிருப்பது நியாயமே. ஆனால் எந்தக் காரணத்தினாலோ அரசன் இப்படிப் பேசி மந்திரி அவனுக்கு விரோதமாகக் கிளம்பிவிட்டால் நாட்டின் வேலை மேற்கொண்டு எப்படி நடைபெறும்? மற்றொரு மந்திரியான தனது நிலை என்ன?

அரசனும் மந்திரியும் விரோதித்துக்கொண்ட சந்தர்ப்பம் குடகின் சரித்திரத்தில் இருந்திருக்கிறது; அப்பொழுது நடந்தது என்ன என்பதும் ஜனங்களின் நினைவில் உள்ளது. வெகு நாட்களுக்கு முந்தின விஷயமல்ல அது. லிங்கராஜன் அரசனானதும் தனது மந்திரியான காரியப்பாவைக் கழுவிலேற்றிவிட்டான். தொட்டராஜன் இறந்து தேவம்மாஜி ராணியானாள்; சோதைய நாயக்கன் அவளுடைய மந்திரியானான். தான் அரசனாகாவிட்டால் போகட்டும், மந்திரியாகக் கூடவா கூடாது என்று லிங்க

ராஜனுக்குக் கோபம். அப்போது இவன் மீது கருணை கொண்ட காரியப்பா மற்ற பெரியவர்களையெல்லாம் கூட்டி, "வெளியாள் எவ்வளவு பெரியவர்களாக வேண்டுமானால் இருக்கட்டும், நம் நாட்டுக்கு ஏன் மந்திரியாகவேண்டும்? நம் நாட்டில் பெரியவர்கள் இல்லையா? லிங்கராஜர் மந்திரியாவது தான் சரி. இது நமது விருப்பம்" என்று தீர்மானம் செய்வித்தான். சோனைய நாயக்கன் மந்திரி வேலையை விடவேண்டியதாயிற்று; லிங்கராஜன் மந்திரியானான். மந்திரியான ஒரு வருடத்தில் அவன் அரசனே ஆகவேண்டுமென்று சொன்னபொழுது காரியப்பா சம்மதிக்கவில்லை. தேவமமாஜி அரசியாக இருக்கவேண்டுமென்பது பெரிய அரசரின் விருப்பம், அப்படியே இருக்கட்டும் என்றான். காரியப்பா தனக்கு மந்திரிப் பதவியைச் சம்பாதித்துக்கொடுத்தவன் என்பதையும் மறந்து லிங்கராஜன் அவனைத் தன் விரோதியாகக் கருதினான். தான் பலாத்காரத்தால் ஆட்சிபீடத்தைக் கைப்பற்றிய பிறகு காரியப்பாவின் மேல் ஒரு பொய்க் குற்றச்சாட்டைக் கொண்டுவந்தான். இவனும் இவன் மனைவியும் தன்னைக் கொல்ல முயன்றார்கள் என்று அபவாதம் சூட்டி காரியப்பனைக் கழுவிலேற்றி அவன் மனைவியை நாட்டின் எல்லைப் புற கிராமத்திற்குத் துரத்தினான். அரசனுக்கு விவேகமில்லாவிட்டால் கிராம ஜனங்களுக்கும் விவேகமில்லாமல் போகுமா? காரியப்பா போன்ற பெரியமனிதனின் மனைவியைத் தங்களோடு சேர்த்துக்கொள்ளும் துணிச்சல் யாருக்கும் இருக்கவில்லை. காரியப்பா கழுவில் இறந்தான்; அவன் மனைவி கிராம எல்லையில் எழு நாட்கள் அன்ன ஆகாரமின்றிக் கிடந்து எட்டாவது நாள் உயிரைவிட்டாள். இது நடந்த இருபத்தைந்து வருடங்கள் இன்னும் ஆகவில்லை. அப்பொழுது காரியப்பா ஒரு திவான். இப்பொழுது அரசனாக இருப்பவனின் நிலை லிங்கராஜனைப் போன்ற பத்திரமான நிலை அல்ல. ஆனாலும் அவன் விரும்பினால் பசவன் போபண்ணாவின் உயிரை வாங்கத் தயங்கமாட்டான்: அதன் பிறகு ஜனங்கள் கலகம் செய்யலாம், புரட்சி செய்யலாம். ஆனால் போபண்ணா மீண்டும் உயிர் பெற்று வரமுடியாது. நிலைமை அந்த கட்டம் வரையிலும் போவது லக்ஷ்மீநாராயணய்யாவுக்கு விருப்பமில்லை.

இப்படியெல்லாம் ஆகக்கூடும் என்று சொன்னால் அரசனும் பயப்படக்கூடியவனல்ல, போபண்ணாவும் பயப்படக்கூடியவரல்ல. இருவருடைய சுபாவமும் வருவது வரட்டும் என்ற

முரட்டு சுபாவம். இந்த அரசனுக்கு அறிவுரை கூறி கெடுதலைத் தவிர்க்க முடியாது. போபண்ணாவைத்தான் சமாதானப் படுத்தவேண்டும்; பொறுமையாக இருக்கச் செய்யவேண்டும். இவ்வாறு யோசித்து லக்ஷ்மீநாராயணய்யா தற்சமயத்திற்கு மௌனமாக இருந்தார்.

37

மறுபடியும் லக்ஷ்மீநாராயணய்யா போபண்ணாவைக் கண்ட பொழுது வேலை சம்பந்தமாக என்ன பேச்சு உண்டோ அதைப் பேசி முடித்துவிட்டு, "அரசருக்கு உடல்நிலை சரியாகும் வரையில் அவர் கோபித்துக் கொண்ட விஷயமாக நாம் ஏதும் பேசக் கூடாது போபண்ணா" என்றார்.

"அது சரி ஐயா. நான் ஒன்றும் செய்யப் போவதில்லை. இனி எதுவாக இருந்தாலும் அவரே செய்யவேண்டும். உடல் நிலை சரியான பிறகு தாம் பேசியது தவறு சொன்னாரானால் 'நல்லது அரசே' என்று கூறிவிட்டு 'மந்திரி வேலை இத்துடன் போதும்' என்று தெரிவிப்பேன். அவர் மகாராஜனாக ஆளட்டும், நான் என் பாட்டில் இருக்கிறேன். தான் செய்தது தவறு என்று சொல்லாவிட்டால் அவரை அந்தப் பேச்சை சொல்லவைக்க வேண்டும். இல்லாவிட்டால் என் மரியாதை என்ன ஆவது? இவரைக் கல்யாணம் செய்து கொண்ட அந்தப் பேதைக் குடகப் பெண் அவள் மரியாதை என்ன ஆவது? ஆனால் இவை யெல்லாம் நீங்கள் சொல்கிறபடி அரசரின் ஆரோக்கியம் நன்றாக ஆன பிறகுதான்."

"அது போதும். அவ்வளவு பொறுத்துக்கொண்டால் போதும் இருந்தாலும் தான் செய்தது தவறு என்று அரசர் தாம் வாயால் சொல்லவேண்டு மென்று நாம் பிடிவாதமாக இருக்கக் கூடாதல்லவா?"

"அவர் பேசிய பேச்சு அரசர் என்று பேசியதல்ல சொந்த விஷயமான பேச்சு. செய்தது தவறு என்று கூறுவதால் அவரது பதவிக்கு இழுக்கு ஏதும் இல்லை."

"அது சரி. எப்படியோ நான்கு நாட்கள் சமாதானமாகவே இருந்து அவரும் சிறிது உணரும்படிச் செய்து அவரை இந்தப்

புதரிலிருந்து விடுவிக்கவேண்டும். அம்மாஜி ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளமாட்டார். எனவே நாம் அரசரையே வைத்துக்கொண்டு தான் தள்ளியாகவேண்டும்.''

''இனி இவர் எனக்கு அரசரல்ல ஐபா அவர்களே! நான் மந்திரியாக என்னவோ இருக்கிறேன். அவர் இன்னும் 'போ' என்று சொல்லவில்லை, நானும் 'விட்டேன்' என்று சொல்லவில்லை.''

''சரி.''

''இன்னொரு பேச்சு, தவறு செய்துவிட்டேன் என்று சொன்னாலும் சரி, சொல்லாவிட்டாலும் சரி, இதுபோல் இன்னும் மூன்று தடவை நான் பொறுத்துக்கொள்வேன். அதன் பிறகு இவரை ஆட்சி பீடத்தில் இருக்கவிடப் போவதில்லை. நல்ல பேச்சுக்கு மசிந்தால் சந்தோஷம். இல்லாவிட்டால் விரோதியாகப் போரிட்டு இறக்குவேன். அப்படி அவரைப் பட்டத்திலிருந்து இறக்கவில்லை, நானே ஒழிந்து போய்விடுவேன். யோசித்து யோசித்து இந்த முடிவுக்கு வந்து விட்டேன்.

''இப்பொழுது ஒன்றையும் முடிவு செய்யாதீர்கள் போபண்ணா. சாவகாசமாக யோசிப்போம். நிலைமையைச் சீராக்குவோம். அபாயம் இப்படி இருக்கிறது என்றால் அவர் புரிந்துகொள்ளமாட்டாரா என்ன? அவர் பொறுத்துக் கொள்ளவில்லை என்பதனால் நீங்களும் பொறுத்துக் கொள்ளாமல் போனதாக வேண்டாம்.''

''உங்கள் பேச்சு உங்களுக்குத் தான் அழகு. பொறுத்துக் கொள்வது உங்கள் குணம். நீங்கள் பொறுக்க வேண்டும், பொறுங்கள். உங்களுக்கு அழகாக இருப்பது என்னில் தவறாகலாம். ஜனங்கள் இந்த போபன் கோழை, திட்டினால் கேட்டுக் கொண்டு இன்னும் அரண்மனை எச்சிலைத் தின்று கொண்டிருக்கிறான் என்று சொல்லுவார்கள். வேறு யாராவது சொன்னாலும் 'போங்கடா' என்று சொல்லலாம் எனக்குச் சமமான பெரியவர்களே சொல்லுவார்கள். குடகன் அதைப் பொறுத்துக் கொள்ள முடியுமா? பொறுத்துக் கொண்டால் மரியாதை நிலைக்குமா? இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் உங்கள் வழியும் என் வழியும் ஒன்றல்ல.''

''நீங்கள் சொல்வதெல்லாம் எனக்குச் சம்மதம் போபண்ணா ஆனால் நீங்கள் மந்திரி வேலையை விட்டால் நான் மந்திரியாக இருக்கக் கூடியவன் அல்ல. இருவரும் விட்டு விட்டால் அரசர்

பாடு அதோகதி தான். நாட்டுக்குக் கேடு நிச்சயம். அதற்கு வேறு ஏதாவது ஏற்பாடு செய்து விட்டு பிறகு நாம் விலக வேண்டும். இல்லாவிட்டால் நாட்டுக்கு நல்லதல்ல."

"இதை நான் ஒப்புக்கொள்கிறேன், ஐயா, நீங்கள் யோசனை செய்யுங்கள். என்ன செய்யவேண்டுமென்று சொல்லுங்கள். முடியுமானால் அப்படியே செய்வோம்."

38

வீரராஜனுக்கு இந்த முறை நோய் வந்ததற்குக் காரணம் உடலில் ஏதோ 'அதி'யாகிவிட்டது தான் என்று வைத்தியர் சொன்னார். எது 'அதி'யாகிவிட்டது, அப்படியென்றால் என்ன என்பதைப் பற்றியெல்லாம் யாரும் அதிகமாக அக்கறை காட்டவில்லை. எல்லோருக்கும் தெரிந்த உண்மையை மரியாதை காரணமாக மறைப்பதன் பொருட்டு வைத்தியர்கள் இப்படி ஒரு வார்த்தை ஜாலம் புரிவார்கள். இதை ஜனங்கள் அறிவார்கள். அரண்மனை வைத்தியருடைய இந்த சப்தப் பிரயோகமும் அந்த வகையைச் சேர்ந்தது தான் என்று எல்லோருக்கும் தெரியும்.

எல்லோருக்கும் தெரிந்த இந்த விஷயத்தை அந்தரங்கமாகக் கூட வாய்விட்டு யாரும் பேசவில்லை. அப்படிச் சொன்னவளென்றால் அரண்மனைப் பெண்கள் பகுதியின் தாதிக் கிழவி தொட்டவ்வா தான். இவள் லிங்கராஜனின் காலத்திலிருந்து அரண்மனையில் இருந்து வருகிறாள். அரசனையும் பசவனையும் இளமையிலிருந்தே அறிந்தவள். பசவனை வளர்த்தவள் இவளே, இக்காரணங்களினால் கிழவிக்கு அரசனிடமும் பசவனிடமும் எந்த விஷயத்தைப் பற்றியும் பேசுவதற்குச் சலுகை உண்டு.

அரண்மனைப் பெண்களின் வாசத்திற்காகக் கட்டப்பட்டிருந்த இந்தப் பெண்கள் பகுதி அரசனுக்காகக் கொண்டு வரப்பட்ட பெண்களை இருக்கச் செய்யவும் உபயோகப்பட்டது. அப்படிக் கொண்டுவரப்பட்ட பெண் தனது புது வாழ்க்கை முறையை ஒப்புக் கொள்வதானால் அவளை வேறு ஒரு வீட்டில் குடிவைப்பதற்கான ஏற்பாடு இருந்தது. இவைகளுக்கெல்லாம் ஏஜமானன் பசவன். அவன் கீழ் அதிகாரி தொட்டவ்வா.

வீரராஜன் நினைவிழந்து படுத்துவிட்ட அன்று தொட்டவ்வா அரண்மனைக்கு வந்து அரசனைப் பார்த்தாள். பசவனைத் தனியாக அழைத்து, "அரசருக்கு உடம்பில் சக்தியே இல்லை. அது சரியாக வேண்டுமானால் இந்த வைத்தியரின் மருந்தினால் பிரயோஜன மில்லை. மலையாளமருந்து தான் மருந்து. மலையடிவாரத்திற்குச் சொல்லியனுப்பினாலும் சரியே. பகவதி ஒருத்தி சமீபத்தில் இங்கே வந்திருக்கிறாள். மலையடிவாரத்தில் ஆற்றுக் கருகே கோவில் கட்டிக்கொண்டு அங்கேயே இருப்பதாகச் சொல்லு கிறார்கள். அவளை அழைத்துக் காண்பிப்பது நல்லது," என்றாள்.

பசவன், "பார்க்கலாம் பொறு" என்றான். அவனுக்கும் அதே எண்ணம் தான். ஆனால் இந்த விஷயத்தில் முதலில் வைத்தி யரைக் கேட்கவேண்டும் பிறகு ராணியின் அநுமதியைப் பெற வேண்டும். ஒரிரண்டு நாட்களில் அரசனுக்கு பிரக்ஞை வந்த பிறகு அவன் வைத்தியரிடம் இந்தப் பேச்சை எடுத்தான்.

வைத்தியன் மலையாள பகவதியைப் பற்றிக் கேள்விப் பட்டிருந் தான். அவள் மடிகேரியில் பெரிய மனிதர் ஒருவர் வீட்டிற்கு மருந்து கொடுக்க வந்தபொழுது அவளைப் பார்த்திருந்தான பேசியும் இருந்தான். அவள் பேச்சிலிருந்தும், முறையிலிருந்தும் அவள் மிகவும் கெட்டிக்காரியான வைத்தியராக இருக்கவேண்டு மென்று அவனுக்குத் தோன்றியது. அவளோடு நட்பை வளர்த் துக்கொண்டால் அவளிடமிருந்து அமூல்யமான சில மருந்துகளைக் கற்றுக் கொள்ளலாமென்று அவனுக்கு ஆசை அரண்மனைக்கு அவள் வரச் சம்மதித்தால் அவளோடு நட்புவளர அவகாசம் கிடைக்கும். வைத்தியன், "பகவதி ரொம்பவும் கெட்டிக்காரி. அவளை அழைத்துப் பார்க்கச் செய்வது மிகவும் நல்லது" என்றான். "ஆனால் பகவதிக்கு எந்த வகையிலும் அதிருப்தியை உண்டாக்கக்கூடாது. இந்த உபாசனை மருந்துகள் விஷயமே இப்படித்தான் மருந்தின் யோக்கியதை சாதாரணமாக எல்லா மருந்துகளைப் போலத்தான் ஆனால் பகவதியின் உபாசனையி னால் அவைகளின் சக்தி அதிகரிக்கிறது. இந்த உபாசனைக்கு வேண்டிய சகல வசதிகளையும் நாம் செய்து கொடுக்கவேண்டும்" என்று எச்சரிக்கை செய்தான்.

பசவன், "ஆஹா! அம்மாஜி சரி என்றால் எல்லாவற்றையும் செய்வோம்," என்று பதிலளித்தான். மறு நாள் ராணிக்கு இந்தச் சங்கதியைத் தெரிவித்தான்

ராணி அன்று தீட்சிதர் சுவாமி பிரசாதத்தைக் கொண்டு வந்த போது இந்தச் சமாசாரத்தை அவரிடம் சொன்னாள். "பகவதி அழைத்துவரச் செய்யலாம் என்று தோன்றுகிறது. வேண்டுமா வேண்டாமா என்று நீங்கள் சொல்லவேண்டும்" என்றாள்.

தீட்சிதரும் இந்த பகவதியைப் பற்றிக் கேள்விப் பட்டிருந்தார். அவளைப் பார்த்திருக்கவில்லை. அவள் வந்து சில மாதங்களே ஆகியிருந்தபோதிலும் மடிகேரியிலும் சுற்றுப் பிரதேசங்களிலும் அவளுடைய புகழ் மிகவும் பரவியிருந்ததை அவர் கேள்விப் பட்டிருந்தார். அவள் மிகவும் சக்தி கொண்டவள் என்றும் ஜனங்கள் பேசிக் கொண்டார்கள்,

ராணியின் கேள்விக்கு தீட்சிதர், "அழைத்துவரச் சொல்லலாம். தடை இல்லை, ஆனால் அழைத்து வந்த பிறகு எச்சரிக்கையுடன் நடந்துகொள்ளவேண்டும்" என்றார்.

"ஏதாவது தவறு நடந்து விட்டால் மிகவும் கெடுதல் இல்லையா?"

"எல்லாமே தெய்வீக சக்திதான். இங்கே ஓங்காரேஸ்வரன். அங்கே காளி, இது வேறு அது வேறேயா? தெய்வம் இங்கே மலர்ந்த முகத்தோடும் அங்கே உக்ர ரூபத்தோடும் இருக்கிறது. இங்கே நாம் நயத்தோடு பூஜிக்கிறோம். அங்கே உபாசகர்கள் லோகமாதாவை பிடிவாதத்துடன் பூஜிக்கிறார்கள். இங்கே பகவானின் கிருபை மெதுவாகக் கிட்டுகிறது; உடலுக்குப் பிரயாசை இல்லாதவாறு குணம் ஏற்படுகிறது. அங்கே அதன் வேகம் அதிகம். அதன் பலனும் தீவிரமானது. முக்கியமாக அபசாரம் ஏற்படாமல் சொல்வதானால் ஈஸ்வரனின் பிரசாதம் சாவகாசமாகக் கிடைக்கவேண்டிய வஸ்து, பகவதியின் பிரசாதம் தீவிரம்."

"ஜனங்கள் இவளையே பகவதி என்கிறார்களே ஐயா?"

"பகவதி என்பது மகா காளி. இந்த ஸ்திரீ தேவியை உபாசிப்பவள். உபாசனை சித்திக்கவேண்டுமானால் மிகவும் நிஷ்டையோடு வாழவேண்டும். வெளியிலிருப்பவர்களுக்கு கடவுளானால் என்ன, உபாசகளானால் என்ன? பகவதியின் உபாசகள் என்று சொல்லாமல் பகவதி என்றே சொல்லுகிறார்கள்."

"கொஞ்சம் ஏறக்குறைய ஆனாலும் கெடுதல் என்கிறபோது அழைப்பதே வேண்டாமோ என்று தோன்றுகிறது."

"அரசருக்கு நினைவு திரும்பியிருக்கிறது. குணம் காணப்படுகிறது. மிகவும் ஆழ்ந்த சிகிச்சை அவசியம் இல்லையென்று

தோன்றுகிறது. இரண்டு மூன்று நாள் பொறுப்பதில் தவறில்லை. பார்த்துக்கொண்டு பிறகு யோசிக்கலாம்."

ராணி இந்த விஷயத்தைப் பற்றி இன்னும் யோசித்து அரசனின் உடல் நாளுக்கு நாள் தேறி வருவதைப் பார்த்து பகவதியை அழைப்பது வேண்டாம் என்று தீர்மானித்தாள்; இதை பசவனிடம் சொன்னாள். இருந்தாலும் மனத்தில், "பகவதியை அழைத்து அரசனின் க்ஷேமத்திற்காக தேவியின் சந்நிதியில் சேவை நடத்து" என்று சொல்லவேண்டும் என முடிவு செய்துகொண்டாள்.

39

ஒரு வாரம் கழித்து ராணி தீட்சிதரிட்ம், "இந்த முறை அவரது நோய் உங்கள் ஆசீர்வாதத்தால் குணமாயிற்று. பகவதியை வரவழைக்க வேண்டியதில்லை. இருந்தாலும் அவளுடைய பூஜையின் பலன் விரைவில் கிடைக்கும் என்கிறார்களே, ஏதாவது சேவை நடத்துவோமா? உங்களுக்கு என்ன தோன்றுகிறது?" என்று கேட்டாள்.

தீட்சிதர், "நாம் தெய்வத்தை இனியவை, உக்ரமானவை என்று சொல்லுகிறோம். தாட்சன்னியம் இல்லாதவர்கள் சாந்தமானவை, குரூரமானவை என்றே சொல்லுவார்கள். சிறப்புள்ளவை, இல்லாதவை; நல்லவை, கெட்டவை என்றும் சொல்லுவார்கள். உபாசனை சரியானபடி நடந்தால் உபாசகனும் பிழைத்தான்; அவனைப் பிரேரேபித்தவனும் பிழைத்தான். அது சரியானபடி நடக்காவிட்டால் உபாசகனுக்கும் கேடு, பிரேரேபித்தவனுக்கும் கேடு. இவர்கள் தவறி நடந்து கொண்டு வேலையைக் கெடுத்து விட்டு கடவுளைக் குரூரி என்றும் கெட்டவன் என்றும் அழைக்கிறார்கள். உபாசனை கெடுவதே இல்லை என்று நாம் தைரியமாகச் சொல்ல முடியாது. இனி அதைத் தேடிக்கொண்டு போவானேன்? விரும்பிய நன்மையை அளிக்க பெரியவர்கள் நிர்மாணித்திருக்கும் தேவாலயத்தில் ஓங்காரேஸ்வரன் பிரததியட்சமாக இருக்கிறான். நாம் சரியானபடி நடந்து கொண்டால் வியாதி என்பதே அண்டாது. வைத்தியமும் வேண்டாம். அம்மாஜி யோசனை செய்யுங்கள்," என்றார்.

தீட்சிதரின் பேச்சு மொத்தத்தில் ராணிக்குச் சம்மதமே. இருந்தாலும் அவள், இதென்ன இந்தக் கிழவர் சுவாமி பூஜை நடத்தலாம் என்றால் வேண்டா மென்கிறார், என்று மனத்தில் நினைத்துக் கொண்டாள். ஊரில் ஜனங்கள் பகவதியை மிகவும் கொண்டாடுகிறார்கள். அவள் அரண்மனைக்குள்ளும் வந்து விட்டால் தனது பிரபாவத்திற்குக் குறைவு ஏற்பட்டு விடுமோ என்று கிழவர் பயப்படுகிறாரோ? தீட்சிதர் சாதாரணமாக இப்படிப் பட்ட அற்ப எண்ணங்களை உடையவரல்ல. இருந்தாலும் இத்தகைய பொறாமை யாருக்கும் இல்லவே இல்லை என்று சொல்லமுடியாது. ராணி பசவனிடம், "பகவதி தற்போதைக்கு அரண்மனைக்கு வர வேண்டிய அவசியம் இல்லை. இருந்தாலும் உக்ரமான தெய்வத்தைக் கொண்டு வந்து நம் நாட்டில் பூஜை செய்து கொண்டிருக்கும்போது நாம் கவனிக்கவே இல்லை என்ற தவறு நடைபெற வேண்டாம். அரண்மனை சார்பில் ஒரு நாள் பூஜைக்கு ஏற்பாடு செய். ஆனால் இதற்கு நீயே போகவேண்டும்" என்றாள்.

பசவனுக்கு வேண்டியிருந்ததும் அதுவே. ராணி சம்மதிக்காவிட்டாலும் அவன் பகவதியால் அரசனுக்கு ஏதாவது நன்மை ஏறபடுமா என்று பார்க்க நினைத்திருந்தவன் தான். நன்மை என்றால் ராணியின் அர்த்தத்திலோ சாதாரணமாக மற்றவர்கள் நினைக்கக் கூடிய அர்த்தத்திலோ, அல்ல: அரசனின் காமுக திருஷ்டியில், பசவனின் விரோதமான நட்பின் திருஷ்டியில் நன்மை. ராணியின் சம்மதம் கிடைத்து விட்டதாக அவன் தொட்டவ்வாவுக்குச் சொன்னான்.

தொட்டவ்வா, "அவ்வாஜி சம்மதித்தது நல்லதாயிற்று. இல்லாவிட்டால் நாம் ஒளிவு மறைவாகப் போகவேண்டியிருந்திருக்கும். பகவதி அதற்கு உடன்படக் கூடியவளல்ல" என்றாள்.

தொட்டவ்வா சொன்னதிலிருந்து, அவள் ஏற்கனவே பகவதியுடன் பேசியிருக்கிறாளென்றும், அரண்மனையிலிருந்து சரியான படி அழைப்பு அனுப்பினாலல்லாமல் வரமாட்டாள் என்று பகவதியே சொல்லியிருப்பாளென்றும் தோன்றியது. பசவன், "அப்படியானால் நீ பகவதியை முதலிலேயே பார்த்துப் பேசி விட்டாயா?" என்று கேட்டான்.

"பார்க்காவிட்டால் அரசர் பிழைக்க வேண்டுமே. நான் செய்ய வேண்டிய பூஜையை செய்வித்து விட்டேன். இல்லாவிட்டால் அரசருக்கு இவ்வளவு சீக்கிரம் குணமாகியிருக்குமா?"

"அப்படி யென்றால் வைத்தியரின் மருந்து, தீட்சிதரின் பூஜை, பாதிரியின் மருந்து இவை யெல்லாம் உபயோகமில்லை, பகவதி செய்த மாயம் தான் பெரியது என்கிறாயா?"

"ஐயா, என் ராசா. வைத்தியரின் விஷயம் வேறு, அவர் அப்படியும் சரி, இப்படியும் சரி. ஆனால் தீட்சிதரும், பாதிரியும் வலதுசாரி. இடதுசாரி நோய்க்கு வலது சாரி பூஜையினால் என்ன பிரயோஜனம்? பேயை ஓட்டுவதற்கு ஊதுவத்தியால் முடியுமா? துடைப்பக்கட்டை வேண்டும். அரசருக்கு வந்தது சாமான்னிய நோயா? இங்கே நீங்களெல் லாம் இந்த மருந்து, பூஜையில் இருந்த போது நான் பகவதியின் பூஜை செய்வித்தேன். இல்லாவிட்டால் அவருக்கு வந்த நோயிலிருந்து அவர் பிழைத்திருக்க முடியுமா?"

"இந்த விஷயத்தில் நீயாக சுதந்திரமாக இப்படி ஏன் செய்தாய் தொட்டவ்வா?"

"சுதந்திரம் என்னடா மகனே? அரசர் என்னுடையவரல்லவா? அவ்வாஜி பங்கு ஒன்று, என் பங்கு பதினைந்து."

பசவன் சிரித்தான். ஒரு கணம் கழித்து, "அப்படியானால் உனக்கு இந்த ஸ்திரீயைத் தெரியும்?" என்றான்.

"ஓ தெரியும். எனக்குத் தெரியாத பகவதியா?"

"யார் இந்த அம்மா? மலையாளத்திலிருந்து வந்து ஐந்தாறு மாதமாயிற்று என்கிறார்கள்."

"மலையாளத்திலிருந்து வந்து ஆறு மாதமாயிற்று, சரிதான். மலையாளத்திற்குப் போய் எவ்வளவு வருஷமாயிற்று என்பது யாருக்கும் தெரியாது."

"அப்படியானால் பகவதி இந்தப் பிரதேசத்து ஸ்திரீயா?"

"இனி என்னை ஒன்றும் கேட்காதே அப்பா; நான் வாய் திறந்தால் ஒழிந்தேன். திறக்கமாட்டேன் என்று ஆணையிட்டிருக்கிறேன். வீட்டின் மீதும், உயிரின் மீதும், குழந்தைகளின மீதும் வைத்த ஆணை மீறக்கூடாது. எல்லாம் உனக்கே தெரியவரும். பிறகு என்னைக் கேள்."

தொட்டவ்வாவின் பேச்சு பசவனின் ஆவலைத் தூண்டிவிட்டது. ஆனால் இவ்வளவு தூரம் சொன்ன பிறகு இனி அவள் மேற்கொண்டு ஏதும் சொல்ல மாட்டாள் என்பதை அவன் அறிவான். எனவே அவன் அந்தப் பேச்சை அத்தோடு விட்டுவிட்டு; "ஏய்,

நாளை பூஜை செய்விக்க வருகிறோம் என்று பகவதியவர்களின் கோவிலுக்குப் போய் சொல்லி விட்டு வா" என்றான்.

40

மறுநாள் பசவன் அரசனிடம் தான் பகவதியின் சந்நிதிக்கு பூஜை செய்விப்பதற்காகப் போய் வருவதாகச் சொன்னான். அரசன், "எங்காவது நாசமாய்ப் போ. இனி உன்னால் எனக்கு என்ன ஆகவேண்டும்?" என்றான்.

பசவன், "அதைத்தான் சரிப்படுத்திக்கொண்டு வரப்போகிறேன் அரசே. பகவதி மனசு வைத்தால் இழந்துபோன வாலிபம் திரும்பி வருமாம்" என்றான்.

"வருகிறது உன் தலை. இனி என்ன இருக்கிறது இந்த உடம்பில்? உன்னோடு துணை சேர்ந்ததற்கு என்னை நடமாடும் பிணமாக்கிவிட்டாய்"

"உடல் இருப்பதே பிணமாவதற்குத்தான் அரசே. இன்றைக்குப் பிணம், நாளைக்குக் குணம். நான் சரிப்படுத்துகிறேன் பாருங்கள்."

"யார் வேண்டாமென்றார்கள் போடா. என்னென்ன செய்கிறாயோ செய் போ. எல்லாருக்கும் நான் அரசன், எனக்கு அரசன் நீ."

அரசன் சந்தோஷமாக இருந்தான். பசவன் அவனுக்குக் கை கூப்பிவிட்டுப் புறப்பட்டான்.

அதற்கு முன்னதாகவே பூஜை சாமான்கள் பத்து ஆட்கள் தலையில் வைத்து அனுப்பப் பட்டு விட்டன. பகவதியின் ஆணைப்படி பூஜை நடக்கும்போது பசவன் ஒருவன் தான் கோவிலில் இருக்கவேண்டும், வேறு யாராவது இருந்து பார்த்துவிட்டால் பலனில்லாமல் போய்விடும். எனவே பூஜை சாமான்களை எடுத்துக்கொண்டு சென்ற ஆட்கள் திரும்பி வந்து விட்டனர். பசவன் ஒரு குதிரையின் மீதேறிக்கொண்டு ஆசிரமம் இருந்த அடிவாரத்திற்குச் சென்று ஆற்றின் அருகே இறங்கி அங்கிருந்து கோவில் வரையில் நடந்து சென்றான்.

கோவிலைச் சுற்றி பசுங்கொடிகளின் வேலி அமைக்கப்பட்டிருந்தது. உள்ளே செல்வதற்கு ஒரு சிறு வழி விட்டு வைக்கப்

பட்டிருந்தது. அங்கே ஒரு ஸ்திரீ நின்று கொண்டிருந்தாள். அவள் நொண்டியைச் சைகை காட்டி அழைத்து உள்ளே போகச் சொன்னாள்.

கோவில் என்பது மலையடிவாரத்திலிருந்த ஒரு பழங்காலத்துக் குகை. அந்தக் குகையில் பூர்வகாலத்தில் மதங்கரோ, கௌதமரோ யாரோ ரிஷி தவம் செய்ததாக ஐதீகம். பகவதி குகையின் முன்புறம் விறகுக் கட்டைகளால் நான்கு சுவர்களைப்போல அமைத்திருந்தாள்; குகையின் முன்புறம் ஒரு கதவை வைத்திருந்தாள். கதவுக்கும் முன்னால் ஒரு கொட்டகை; அதன் மீது கொடிகளைப் படர விட்டிருந்தது. கோவிலுக்கு அருகில் வர வர அது ஏதோ ஒரு விசேஷமான இடம் என்கிற எண்ணம் தோன்வது போலிருந்தது.

பசவனுக்கு மனத்தில் ஒரு விதமான பயம். இந்த பகவதி மிகவும் கர்வம் பிடித்தவள் என்று ஜனங்கள் பேசிக் கொண்டார்கள். அவள் என்ன கேட்பாளோ தான் என்ன சொல்லவேண்டியிருக்குமோ? எதைச் சொல்வது எதை விடுவது? அரசனின் உடலில் சத்தே இல்லை; அவனுக்கு சக்தி வருமாறு செய் என்று கேட்கவேண்டுமே. இதை எப்படிக் கேட்பது. என்றிவ்வாறு யோசித்தபடி அவன் கதவருகே வந்தான். ஒரு நிமிடம் அவனுக்குத்தான் அங்கே வந்தது தவறு, திரும்பிப் போய்விடுவோம் என்று கூடத்தோன்றியது. அதே சமயத்தில் கோவில் வாசலில் பகவதியின் உருவத்தை அவன் கண்டான். தூரத்திலிருந்தே கைகூப்பி விட்டு அவன் முன்னால் நடந்தான்.

பசவன் நொண்டி நொண்டி, கதவருகே வந்து கொண்டிருந்த பொழுது பகவதி வைத்த கண் வாங்காமல் அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள். அவளைப் பார்த்த பசவனுக்கு சிறிது பயம் தோன்றினாலும். அதைவிட அதிக தீவிரமாக அவளைப் பாராட்டுகிற எண்ணமும் அவன் மனத்தில் உதித்தது. ஆஹா! எவ்வளவு கம்பீரம் பொருந்திய உருவம்! வயதான முகம் தான், ஆனாலும் அதிலே எவ்வளவு பிரகாசம்!

ஒரேயடியாக அப்படிப் பார்க்கவேண்டாமென்பதற்காக பசவன் ஒரு முறை தலை குனிந்தான். மறுபடியும் அவன் தலை தூக்கியபொழுது பகவதி தனது வலக்கையால் கண் அருகே எதையோ துடைத்துக் கொண்டாற்போலிருந்தது. அதற்குள்ளாக அவன் அவளுக்கு வெகு சமீபத்தில் வந்து விட்டான். அப்

பொழுது அவள் கண்களில் நீர் நிறைந்திருந்தது என்பதை அவன் கண்டு கொண்டான்.

பகவதி அவனை உள்ளே வரச்சொல்லி சைகை காட்டிவிட்டு உள் பக்கம் திரும்பினாள். முன் பக்கம் அவள் உருவம் எவ்வவவு கம்பீரமாக இருந்ததோ அதே போல பின் பக்கமும அதே அளவு கம்பீரத்தோடு கூடியிருந்தது. நிமிர்ந்து நெடிதுயர்ந்த உருவம். பசவன், "பகவதியென்றால் சும்மாவா? இவள் மிகவும் விஷயம் உள்ளவள்" என்று நினைத்துக்கொண்டான்.

பகவதி பசவனைக் குகைக்குள் அழைத்துச் சென்றாள். குகையில் மூன்று அறைகள் இருந்தன. மத்திய அறையின் பின் பக்கத்துச் சுவரோடு ஒட்டினாற்போலிருந்த இரண்டு கதவுகள் மற்ற இரண்டு அறைகளுக்குப் போகும் வழிகள். வலப்புறத்து அறையில் பெரிய விளக்கொன்று காணப்பட்டது. இடது அறையில் வெளிச்சம் குறைவு. மத்திய அறையின் பின் புறத்து சுவரிலிருந்த ஒரு சிறு மாடத்தில் ஒரு படம், அதன் எதிரே எரிந்துகொண்டிருந்த ஒரு அகல் விளக்கு இவை தாம்.

41

பகவதி பசவனை சுவாமி அறையின் கதவுக்கு வெளியே தரையின் மீது உட்காரும்படி சைகை காட்டிவிட்டு தான் உள்ளே சென்றாள். சுவாமி அறையில் கதவைப் பார்த்தபடி அறையின் மத்தியில் தேவியின் சிலை இருந்தது. அது உலோகத்தால் செய்யப்பட்ட விக்கிரகம். தாமிரமா, பொன்னா என்று சந்தேகப் படுமளவு அழகான வர்ணம் கொண்ட விக்கிரகம். அநேகமாக அது ஆகமரீதியாக சுவாமியின் விக்கிரகங்களைச் செய்வதற்காக பூர்விகர்கள் நியமித்திருந்த பஞ்ச உலோகமாகத்தான் இருக்க வேண்டும். அந்த விக்கிரகம் சாதாரணமாகக் கோவில்களில் காணப்படும் விக்கிரகங்களைவிடப் பெரியதாக இருந்தது. மூக்கும் முகமும் அழகாக அமைந்திருந்தன. உலகை ஆளும் சக்தி சாமான்னியமானதல்ல என்று சொல்லும்படி அதனுடைய பாவம் கர்வம் நிறைந்ததாகவும் பயபக்தியை உண்டு பண்ணக் கூடியதாகவும் இருந்தது. விக்கிரகத்தின் கையில் ஒரு கத்தி. அந்த வடிவத்தின் கம்பீரம், கர்வம் இவைகளை எடுத்துக் காட்டு

வதற்காகவே போன்று அது பூவால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. அதில் சிவப்பு வர்ணம் விசேஷம். பயம் உண்டாவதற்குக் காரணம், இந்த சிவப்பு வர்ணம் அறை முழுவதும் நிரம்பியிருக்கிறதோ என்னும்படி கண்ணைப் பறித்துக் கொண்டிருந்தது தான். விக்கிரகத்துக்கு எதிரே புஷ்பக் கோட்டையின் மத்தியில் குங்குமம் ஒரு ராசியாக, கோபுரமாக நின்றிருந்தது.

பசவன் அதிகமாகக் கோவில்களுக்குப் போனவனல்ல. இது போன்ற சான்னித்தியத்தின் கற்பனையே அவனுக்குச் சிறிதும் கிடையாது. மொத்தத்தில் தான் அங்கே வந்ததே தவறோ என்று அவனுக்கு முதலில் தோன்றிய பயம் குகையின் இருட்டு, பகவதியின் மௌனம், ரத்த வர்ணப் பூ ராசி இவைகளினால் அதிகரித்தது. என்றும் இல்லாத ஒரு பக்தியை அநுபவித்து அவன் உட்கார்ந்த இடத்திலேயே கை கூப்பிக்கொண்டு தேவியையே கண் இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தான். அவன் இதயம் படபடவென அடித்துக்கொண்டிருந்தது.

பகவதி தேவியின் சிலையின் எதிரே அமர்ந்து ஒரு புத்தகத்தை எதிரில் வைத்துக்கொண்டாள். விக்கிரகத்தின் இரு புறங்களிலும் இருந்த விளக்குகளைத் தூண்டிவிட்டுப் பெரிதாக எரியச் செய்தாள். பசவனின் பக்கம் திரும்பி "வாயைத் திறக்காதே" என்று சைகை காட்டிவிட்டு புஸ்தகத்தைப் பார்த்து மந்திரங்களைப் படிக்கத் தொடங்கினாள்.

பகவதியின் குரலைக் கேட்டதும் பசவன் திடுக்கிட்டான். அக் குரல் அவ்வளவு கனமாகவும், கம்பீரமாகவும் இருந்தது. அவளுடைய உருவம் எப்படி அசாதாரணமானதோ அப்படியே அவள் குரலும் அசாதாரணமானது என்று அவனுக்குத் தோன்றியது.

எவ்வளவு நேரம் அவள் மந்திரம் படித்துக் கொண்டிருந்தாளோ பசவனால் நிதானிக்கமுடியவில்லை. வெகு நேரம் படித்தாள் என்பது மட்டும் தெரிந்தது. படித்துக்கொண்டே இடையிடையே ஐந்து பத்து நிமிடங்களுக்கு ஒரு முறை சிறிது குங்குமம், சிறிது புஷ்பம் இவைகளை எடுத்து தேவியின் பாதங்களின் அருகில் வைத்தாள். தேவியை கூர்ந்து நோக்கிக் கை கூப்பினாள். இவையெல்லாம் பசவனின் மனத்தில் இந்த இடம் சாமான்னியமானதல்ல, இந்த விக்கிரகம் சாமான்னியமானதல்ல, இந்த பகவதி சாமான்னியமானவளல்ல என்ற எண்ணத்தை உண்டாக்கின.

சாவகாசமாக நடந்த இந்த அர்ச்சனை முடிந்தவுடன் பகவதி எழுந்து நின்று கொண்டாள். பசவனையும் எழுந்து நில் என்று

சைகை காட்டினாள். முதலிலே தயார் செய்து வைக்கப்பட்டிருந்த கற்பூரத்தட்டை எடுத்து கற்பூரத்தைக் கொளுத்தி ஆரத்தி எடுத்தாள். அப்பொழுது அவள் சொன்ன மந்திரம் தான் முன்பு கோவிலில் தீட்சிதர் சொல்லிக்கேட்ட மந்திரம் போல் பசவனுக்குத் தோன்றியது.

ஆரத்தியை முடித்துவிட்டு பகவதி தேவியின் பாதங்களிலிருந்து ஐந்து பிடி புஷ்பமும் ஐந்து பிடி குங்குமமும் எடுத்து அரண்மனையிலிருந்து வந்திருந்த தட்டுக்களில் வைத்து அவைகளைக்கொண்டு வந்து பசவனின் முன்னால் வைத்தாள். "இன்றைய பூஜை முடிந்தது. இது ஐந்து நாட்களுக்குக் குறையாமல் நடக்கவேண்டிய பூஜை. உங்கள் சௌகரியம்போல வாரத்திற்கு ஒன்றோ இரண்டு வாரத்திற்கு ஒன்றோ இன்னும் நான்கு பூஜை நடத்துங்கள்," என்றாள்.

பசவன், "சரியம்மா" என்றான்.

"நான் ராணியவர்களிடம் பேசவேண்டிய விஷயம் இருக்கிறது, அரண்மனைக்கு வருகிறேன். இதை அங்கே தெரியப்படுத்து."

"சரியம்மா."

இவ்வாறு பதில் சொல்லிக் கொண்டிருக்கும் போதே பசவனின் உள் மனத்தில் பகவதி தன்னை ஏகவசனத்தில் அழைத்ததன் காரணம் என்ன என்ற எண்ணம் உண்டாயிற்று. தான் ஒரு மந்திரி என்பது அவளுக்குத் தெரியதோ? இல்லை, தெரிந்திருந்தும் தான் நொண்டியாக இருப்பதனால் தன் பேரில் அலட்சியமா? இல்லை, அவள் எல்லோரையுமே அப்படித்தான் அழைப்பது வழக்கமோ?

எது எப்படியாக இருந்தாலும் தான் அங்கிருந்து உடனே புறப்பட்டு விடவேண்டுமென்று அவன் நினைத்துக்கொண்டான். பிரசாதத்தட்டுக்கள் இரண்டை எடுத்துக்கொண்டு "இதை அப்புறமாக வரவழைத்துக் கொள்ளட்டுமா?" என்று கேட்டான்.

"நீ குதிரையின்மீது வந்திருக்கிறாயா?"

"ஆமாம்."

"அது ஆற்றின் பக்கத்தில் இருக்கிறதா?"

"ஆமாம்."

"நல்லது. நமது ஆள் இதை அங்கே கொண்டு வந்து கொடுப்பாள்."

பசவன், "சரியம்மா" என்றான்; கொண்டிக்கொண்டு கதவை நோக்கி முன்னேறினான்.

அப்பொழுது என்ன நடந்தது என்று அவனுக்குப் புரியவில்லை. பகவதியின் கைகள் இரண்டும் அவனை இழுத்து அணைத்துக் கொண்டன; அவன் தலையைத் தன் மார்பகத்திலே புதைத்துக் கொண்டு தன் கன்னத்தை அவன் தலை மீது பதித்தாள். அவள் விம்முவதைப்போல அவனுக்குத் தோன்றியது. அடுத்த கணம் அவள் அவனை விட்டுவிட்டாள்; அத்தோடல்லாமல் அவனைச் சிறிது தள்ளி தூர நிறுத்தினாள். "இனி இங்கே நிற்காதே, போ. இங்கே நடந்ததை யாருக்கும் சொல்லாதே, ஜாக்கிரதை," என்றாள், என்று சொல்லிவிட்டு பசவனுக்கும் முன்னதாக வெளியே சென்று வெளி வாசலில் நின்றிருந்த பணியாளை அழைத்துவிட்டு மறுபடியும் உள்ளே வந்து சுவாமியறைக்குள் சென்றாள்.

பசவனுக்கு அவளுடைய வெறிகொண்ட நடத்தை பிரமிப்பை உண்டாக்கியது. ஆனால் அந்த வேளையில் அவன் அதைப் பற்றி ஒன்றும் யோசிக்கும் நிலையில் இருக்கவில்லை. தலையில் என்னமோ மாதிரி இருக்கவே அதைத் தொட்டுப் பார்த்துக் கொண்டான். அவனது கூந்தல் நனைந்திருந்தது.

அவள் ஏன் அப்படிச் செய்தாள் என்று அவன் சிந்திக்கத் தொடங்கினான். அங்கே நின்று யோசிப்பது தவறாகும் என்று அவனுக்குப் பயம். அங்கே இருப்பதே தவறு என்று அவன் கொண்டிக்கொண்டே முடிந்த அளவு வேகமாக வெளியே நடந்தான். ஆற்றுப் பக்கம் வரையில் பெருமூச்சு வாங்க வந்து வந்து குதிரை மீதமர்ந்தான். அதற்குள்ளாக பணிப்பெண் பிரசாதத் தட்டுக்களைக் கொண்டு வந்தாள். அவைகளைத் தன்னோடு வந்திருந்த ஆளை வாங்கிக்கொள்ளச் சொல்லி பசவன் அரண்மனைக் திரும்பினான்.

42

குதிரையின்மீது அமர்ந்து வந்து கொண்டிருந்த பசவன் மாலையில் நடந்தவைகளைப்பற்றி நிதானமாக யோசிக்கத் தொடங்கினான். கோவிலில் மனத்தில் ஏற்றுக்கொள்ளாமல் தடுத்துக்

கொண்ட ஒரு எண்ணம் இப்பொழுது நன்ருக அவனைப் பற்றிக் கொண்டது. அது பகவதி நல்ல அழகான ஸ்திரீ என்பது.

மற்ற அரண்மனைகளிலும் அப்படியே. மடிகேரி அரண்மனை என்ன, எந்தப் பணக்காரனின் வீட்டிலும் அப்படித்தான். 'என்னை நீ வாங்கிக் கொள்கிருயா?' என்று கேட்டுக் கொண்டு பெண்ணழகு வியாபாரம் செய்ய வருகிறது. வீட்டுக்குடையவன் இந்த சபலம் உடையவன் என்று தெரிந்தால் போதும், அரண்மனை வாழ்க்கை அழகை விலை கூறும் சந்தையாகி விடுகிறது. வீரராஜன் அரசனுனது முதற்கொண்டு அவன் பார்வையை இழுப்பதற்கு பல வகை அழகுகள் அரண்மனைக்கு வந்தன; அரசனின் கவனம் தன் பக்கம் திரும்பினுல் தான் அதிருஷ்டசாலி என்று எண்ணியது. இப்படி சுலபமாகக் கிடைத்த அழகு மலிவானதால் அரசனின் ஆசை புது திசைகளில் திரும்பியது. அதைத் தணிக்க பசவனே முயற்சிசெய்து இன்னும் அதிகமான ஒய்யாரம், வனப்பு இவைகளுடன் கூடிய பெண்களைக் கொண்டு வந்து சேர்த்தான். தரனுக வந்தது, முயற்சிசெய்து கொண்டு வந்தது ஆகிய எந்த அழகிலும், மிடுக்கிலும், பசப்பிலும் காணுத ஒரு ஒய்யாரம் வயதான இந்த பகவதியிடம் இருப்பதாக பசவனுக்குத் தோனறியது.

பிறகு, "இந்த ஸ்திரீ உண்மையுள்ளவளா?" என்ற சந்தேகம் பசவனுக்குத் தோன்றியது. அவள் ஏன் தன்னை அவ்வாறு அணைத்துக் கொண்டாள்? பரிசயமில்லாத ஒரு ஆண் பிள்ளையின் தலையைத் தன் மார்பிலே புதைத்துக் கொண்டாளே. அவள் விரும்பியது என்ன? வருகிற ஆண் பிள்ளைகளை யெல்லாம் அப்படித்தான் கட்டிக் கொள்வாளோ? இருக்காது: தன்னை மாத்திரம் ஏன் கட்டிக் கொண்டாள்? காமுகனுன அரசனுடன் பழகி பசவன் காமுக வாழ்க்கையின் சேற்றில் இன்பத்தைக் கண்டவன். ஆனுல் அவனை ஏற்றுக்கொண்ட பெண்கள் அவனது அழகில் மயங்கி அவனைச் சேரவில்லை என்பதை அவன் அறிவான். இந்த ஸ்திரீ காரணமில்லாமல் ஏன் இப்படித் தன்னை இழுத்து அணைத்துக் கொண்டாள்?

யோசித்தபொழுது அவனுக்கு ஒன்று நினைவுக்கு வந்தது; மந்திர வாதிகள் நோயாளிகளுக்குக் குணமாகவேண்டு மென்பதற்காக மந்திரத்தைச் சொல்லி நோயாளிகளைத் தொடுவதும் தழுவிக்கொள்வதும் ஒரு வழக்கம். அரசனுக்கு சக்தி வரவேண்டு மன்றல்லவா இந்த பூஜையை நடத்தியது? பூஜைக்கு

அரசன் வரவில்லை. அவனது பிரதிநிதியாகத் தான் போனான். பகவதி தன்னை அணைத்துக் கொண்டது அரசனுக்கு சக்தி வரட்டும் என்பதற்காக இருக்கக் கூடும்.

ஆனால் பகவதி தன்னைத் தழுவிக்கொண்டு அழுதாளல்லவா? அழுது விம்மும் சப்தம் கேட்டது. அவளுடைய கண்ணீரால் தன் தலைமயிர் நனைந்திருந்தது. அந்த அழுகையும் விம்மலும் எதற்காக? இது ஏதாவது இந்த முறை சிகிச்சையின் ஒரு சம்பிரதாயமோ?

அப்படி ஏதாவது இருந்தால் அவள் முதலிலேயே தன்னை எச்சரித்திருக்க வேண்டாமோ? அப்படி ஒன்றும் செய்யாமல் திடீரென்று இப்படி நடந்துகொண்டு தன்னை பிரமிப்பில் ஆழ்த்திவிட்டாளே!

முதல் நாளே இப்படி ஆகிவிட்டதே. இன்னும் நான்கு பூஜைகள் நடக்கவேண்டும். இடையே அவள் அரண்மனைக்கு வரவேண்டும். பூஜையின் பலன் என்னவாகும்? அரண்மனைக்கு வந்து இவள் என்ன சொல்லுவாளோ, என்ன செய்வாளோ, பின்னால் என்னென்ன நடக்குமோ? அரசன் எப்படி நடந்துகொள்வான்? ஊரார் இதைப் பற்றியெல்லாம் என்ன நினைப்பார்கள்?

இவை ஒன்றுக்கும் விடை கொடுக்காமல் பசவன் அரண்மனையை அடைந்து பிரசாதத் தட்டுகளை ராணியிடம் சேர்ப்பித்தான். "பகவதி அரண்மனைக்கு வருகிறாராம்; இன்னும் நான்கு நாட்கள் பூஜை நடக்கவேண்டுமாம்," என்றான்.

ராணி, "நல்லது பசவய்யா," என்றாள்.

அப்பொழுது அரசன் குடித்துவிட்டு பிரக்ஞை இல்லாமல் தன் அறையில் படுத்திருந்தான். பிரதாதம் கிசாதம் என்பதெல்லாம் அவனுக்குப் பழக்கமில்லாதவை. அவைகளைப் புரிந்துகொள்ளும் நிலையிலும் அவன் அப்போது இல்லை. இருந்தாலும் ராணி சிறிது குங்குமத்தையும் இரண்டு புஷ்பங்களையும் எடுத்துக்கொண்டு அங்கே சென்று அவன் நெற்றியில் குங்குமத்தை இட்டு, புஷ்பத்தைக் கண்களில் ஒற்றி அவன் அருகில் வைத்தாள். தானும், குங்குமத்தை நெற்றியிலிட்டுக்கொண்டு பூவை முடிந்துகொண்டாள். தனதறைக்குச் சென்று மகளுக்குக் குங்குமத்தை இட்டு சிறிது பிரசாதத்தைக் கொடுத்தாள்.

"மீதி பூஜைகள் வாரத்துக்கு ஒன்ருக நடைபெறட்டும்" என்று ராணி உத்தரவிட்டாள். அதே போல பூஜைகள் நடைபெற்றன. இரண்டாவது மூன்ருவது பூஜைகளுக்கு பசவன் போகவில்லை. நான்காவது பூஜைக்கு பசவன் வரட்டும் என்று பகவதி சொல்லியனுப்பியதனுல் அவன் போனுன். அன்றைக்கு அவள் முதல் நாள் நடந்து கொண்டதைப் போன்று விசித்திரமாக நடந்து கொள்ளவில்லை. "ஐந்தாவது பூஜை அடுத்த வாரம் வேண்டாம். அதற்கு சில விசேஷ ஏற்பாடுகள் செய்யவேண்டும். எல்லாவற்றையும் தயார் செய்து கொண்டு நான் சொல்லியனுப்புகிறேன்," என்று கூறி பகவதி அவனை அனுப்பினுள். "ஒரு வாரத்திற்குள்ளாக அரண்மனைக்கு வருகிறேன்" என்ருள்.

நான்கு நாட்களுக்குப் பிறகு பகவதி ஊருக்குள் வந்திருப்பதாக யாரோ அரண்மனைக்குச் செய்தி கொண்டு வந்தார்கள். சிறிது நேரத்திற்குப் பிறகு அவளை அனுப்பிய ஆள் வந்து, "பகவதி இங்கே வந்து கொண்டிருக்கிருர். அரண்மனைக்குப் போய்ச் சொல் என்று என்னை அனுப்பினுர்" என்ருன்.

ராணி, 'இவள் வருவது கொஞ்சம் முன்பாகவே தெரிந்திருந்தால் நன்ருக இருந்திருக்கும், இப்பொழுது இவளுக்குத் தகுந்த மரியாதை காட்ட முடிகிறதோ இல்லையோ' என்று நினைத்தாள். ஆனுல் என்ன செய்வது' வருகிறேன் என்று சொல்லியனுப்பிய பிறகு வரவேற்கத்தான் வேண்டும், முடிந்த அளவு மரியாதை காட்டவேண்டியது என்று நினைத்துக் கொண்டு, சேவகனிடம், "இங்கே மணையைப் போடு. தட்டில் வெற்றிலை, பாக்கு, பழம் வை" என்று கூறி பகவதியை வரவேற்பதற்காக அவள் முகப்புக்கு வந்தாள்.

அவள் முகப்புக்கு வந்து அப்படியும் இப்படியும் பார்ப்பதற்குள்ளாக பகவதி வந்தே விட்டாள். அவளுக்குப் பின்னுல் ஒரே ஒரு சேவகி. பகவதி பணிப்பெண்ணை கதவருகே நிற்கச் சொல்லிவிட்டு முன்னுல் வந்தாள். ராணி வாசத்தின் காவல் பெண் அவளுக்குக் கைகூப்பி, "அவ்வாஜி காத்துக்கொண்டிருக்கிருர்" என்ருள்; பகவதி "சரி" என்று சைகையால் பதில் கூறிவிட்டு முகப்புக்கு வந்தாள்.

பகவதியின் வரவு, நிற்பது, சைகை காட்டுவது இவைகளி லிருந்து ராணி இவள் ரொம்பவும் கெட்டிக்காரி என்பதை கிரகித் தாள். அந்த வயதான ஸ்திரீயின் உடல் இச்சிறியவளின் கண் களுக்கு மிகவும் அழகான உடல் என்று தோன்றியது. மொத்தத் தில் பகவதிக்குக் கைகூப்பும்போது ராணியின் மனதில் மிகவும் பக்தி தோன்றியது.

பகவதியும் ராணியைக் கண்டு அவ்வாறே அன்பு கொண்டாள். ஜனங்கள் ராணியைப் புகழ்ந்து பேசுவதை அவள் கேட்டிருக் கிறாள். ஆனால், நடு வாலிப வயதுடைய இப்பெண் முகத்தில் இவ்வளவு இளமையையும் இவ்வளவு பெருந்தன்மையையும் பெற்றிருப்பாள் என்று அவள் ஊகித்திருக்கவில்லை. பகவதி தன்னைவிட மிகவும் உயர்ந்தவர்களைத் தவிர மற்றவர்களை யெல் லாம் ஏக வசனத்தில் தான் பேசுவாள். அரண்மனைக்கு வரும் போது அவள் ராணியை 'வா, போ' என்று சொல்லுவதா 'வாருங் கள், போங்கள்' என்று சொல்லுவதா என்பதைப் பற்றியே யோசித்திருக்கவில்லை. அதற்குக் காரணம் ஏக வசனம்தான் தகுந்தது என்று அவள் முதலிலேயே முடிவு பண்ணி வைத்திருந் ததுதான். ஆனால் எதிரே கைகூப்பி நின்ற அந்த உருவத்தைக் கண்டதும் அவள் நாவில் ஏக வசனம் வரவில்லை. அவள் தேவி யின் எதிரில், குருவின் எதிரில் அல்லாமல் வேறெங்கும் கைகூப் பக்கூடியவள் அல்ல. ஆனால் கைகூப்பிய ராணியைக் கண்ட தும் அவளும் சகஜமாகக் கைகூப்பினாள். "வாசலுக்கு ஏன் வந்தீர்கள்? நானே உள்ளே வந்திருப்பேனே" என்றாள்.

ராணி, "தாங்கள் வருவது சிறிது முன்னதாகத் தெரிந்திருந் தால் தக்க மரியாதையுடன் வரவேற்றிருக்க முடிந்திருக்கும். இப் பொழுது ஏதாவது குறை இருந்தால் பொறுத்துக்கொள்ள வேண்டும்," என்றாள்.

இவ்வாறு கூறி ராணி பகவதியைக் கூடத்திற்கு அழைத்துச் சென்றாள். அங்கே அவளுக்காகத் தயாராக இருந்த பீடத்தில் உட்காரவைத்து தான் வந்து அருகே நின்று கொண்டாள். சுற்றி லும் பணிப்பெண்கள் நின்றிருந்தார்கள். ராணி அவர்களில் ஒருத்தியை அழைத்து, "புட்டவ்வாவை அழை. பகவதியவர்களை நமஸ்கரிக்கட்டும்" என்றாள்.

பகவதி, "உங்கள் மகள், இல்லையா?" என்றாள்.

ராணி: "ஆமாம்."

பகவதி: "கல்யாண வயது ஆகியிருக்கவேண்டும்."

"இன்னும் சிறுமி. ஆனால் இந்த வயதுக்குக் குழந்தைகளைப் பெற்றுவிட்ட பெண்களும் உண்டு. அரண்மனைப் பெண்கள் கல்யாணம் செய்து கொள்வது கொஞ்சம் தாமதம்தான்."

"உங்களுக்கு ஒரு நாத்தனார் இருக்கவேண்டுமே?"

"இருக்கிறார்."

பகவதி இந்தக் கேள்வியைக் கேட்டபோது அவளுக்கு அரசனுக்கும் அவன் தங்கைக்கும் உள்ள மனஸ்தாப விஷயமெல்லாம் தெரியும். இருந்தாலும் ஒன்றும் தெரியாததுபோல அவள் கேட்டாள். ராணி சகஜமாக நாத்தனார் ஒருவர் இருப்பதாக ஒப்புக்கொண்டு, மறுகணம் "இதென்ன இவளுக்கு, நிஜ சங்கதியெல்லாம் ஒன்றும் தெரியாதா? அல்லது வேஷம் போடுகிறாளா?" என்று சந்தேகப்பட்டாள். ஆனால் தன் சந்தேகத்தை வெளிக்காட்டிக் கொள்ளவில்லை.

பகவதி, "பந்துக்களிடையே ஒத்துக்கொள்ளாமல் இருந்தால் அதைச் சரிப்படுத்துவதற்கு பகவதியிடம் சேவைகள் நடத்தலாம். அவை நல்ல பலனை விரைவிலே கொடுக்கும். நீங்கள் இப்பொழுது செய்வித்து வரும் பூஜை ஆகம முறைப்படி செய்யப்படுவது. அந்த பூஜைகள் தந்திர பூஜைகள். அவைகளுக்கு நியம நிஷ்டை அதிகம். செலவும் சிறிது அதிகம். ஆனால் அரண்மனை செலவுக்குப் பயப்பட வேண்டியதில்லை," என்றாள்.

அண்ணனுக்கும் தங்கைக்கும் மனஸ்தாபம் இருக்கும் விஷயம் இவளுக்குத் தெரிந்திருக்கவேண்டும் என்று அவள் பேச்சிலிருந்தே வெளிப்பட்டது. ராணி, "சம்சாரம் என்ற பிறகு எவ்வளவோ ஏறத்தாழ தான் இருக்கும். எல்லாம் சரியாகப் போகட்டும் என்று நீங்கள் பகவதியிடம் பிரார்த்தனை செய்யுங்கள். தந்திர பூஜைகள் தற்போதைக்கு வேண்டாம்," என்றாள்.

"வேண்டும், வேண்டாம் என்பதை இப்பொழுதே சொல்ல வேண்டுமென்ற அவசரமில்லை, யோசனை செய்யலாம். உடன் பிறந்தவர்கள் மாத்திரம் அல்ல கணவன்-மனைவி, தாய்-மகள், எஜமானன்-சேவகன், ஆகிய எந்த உறவிலும் மனஸ்தாபத்தை நீக்கி உறவைப் பிணைக்க தந்திரத்தில் சாதனைகள் இருக்கின்றன.

"சரி அம்மா."

பகவதி மேற்கொண்டு பேசுவதற்கு சந்தர்ப்பம் இல்லை என்பதைக் கண்டு மௌனமானாள். இரண்டு நிமிடங்கள் பேசாம

லிருந்து, "பூஜைகளைச் செய்விக்கும் பக்தர்களைப் பார்க்கவேண்டியது சம்பிரதாயம். அதற்காகத்தான் வந்தேன். பார்த்தாய் விட்டது. பிறகு வருகிறேன்" என்று கூறி எழுந்தாள். ராணி எழுந்திருந்து சேவகிக்கு ஜாடை காட்டி வெற்றிலை பாக்குத் தட்டைக் கொண்டு வரச்செய்து தானே அதைக் கையிலெடுத்துக் கொண்டு பகவதியின் முன் நீட்டினாள். பகவதி வெற்றிலை பாக்கு வாங்கிக் கொண்டு விடை பெற்றுக் கொண்டாள்.

44

பகவதி தானாகவே அரண்மனையோடு உறவை வளர்த்துக் கொள்ள முயற்சிக்கிறாள் என்பது இப்போது பசவனுக்கு நிச்சயமாயிற்று. அவளைப் பற்றிய பேச்சை முதலில் எடுத்தவள் தொட்டவ்வா. அந்தக் கிழவி சொன்னதிலிருந்து பார்த்தால் பகவதி அவளுக்குத் தெரிந்தவள், பூர்விகத்தில் குடகில் இருந்தவள், என்கிற விஷயம் வெளிப்பட்டது. இந்த ஸ்திரீயின் நோக்கம் தான் என்ன? மருந்து கொடுத்து அரசனைக் குணப்படுத்த வேண்டும் என்பதா, வேறு ஏதாவதா? அவன் மனத்தில் சந்தேகம் உதித்தது.

இவள் ஒரு சாதாரண ஸ்திரீயாக இருந்தால் பசவன் ஒரு கணமும் தயங்காமல் தன் ஆட்களை விட்டு அவளைக் கண்காணிக்கச் செய்வான். பகவதி பிரபலமான உபாசகள். தான் அவ்வாறு அவளைப் பற்றி உளவு பார்க்கச் செய்தால் அவளது தெய்வம் தன் கழுத்தை நெரித்துவிடுமோ என்னவோ, என்றிவ்வாறு யோசித்து கடைசியில் அவளைக் கண்காணித்து தண்டிப்பதற்கென்றல்ல, விஷயம் என்ன என்று தெரிந்துகொள்வதற்காக என்று தன் மனத்திலேயே விளக்கம் செய்துகொண்டு அவளது நடமாட்டங்களைக் கவனிக்க ஆட்களை ஏற்பாடு செய்தான். ஒரிரண்டு மாதங்களில் அவனுக்குத் தெரியவந்தது, பகவதி மடிகேரியிலுள்ள மற்றும் சுற்று முற்றிலும் உள்ள எல்லாப் பெரிய மனிதர்களின் வீடுகளுக்கும் ஏதோ ஒரு காரணம் கூறிக்கொண்டு சென்றாள் என்று. அவர்களில் பலர் அரசனின் விரோதிகள், பலர் என்ன பெரும்பான்மையோர் அப்படிப் பட்டவர்களே. பசவனின் ஒற்றர்கள் எல்லா இடங்களிலும் நடந்த

எல்லா விஷயங்களையும் தெரிந்துகொள்ள முடியவில்லை. ஆனால் பல சமயங்களில் இந்தப் பேச்சுவார்த்தைகள் ரகசியமாக நடந்தன என்பதைக் கண்டார்கள்.

பகவதி இப்படிச் சென்ற இடங்களில் அப்பங்கொளத்து அரண்மனையும் ஒன்று. அங்கு நடந்த சங்கதிகள் பசவனுக்கு விவரமாகவே தெரியவந்தன.

சென்ன பசவய்யனுக்கு ஆரோக்கியம் சிறிது சீர்கேடடைந்த போது சுற்றிலுமுள்ளவர்கள் "பகவதியை வரவழையுங்கள்" என்றார்கள். இப்படி அவர்கள் அபிப்ராயம் தெரிவித்ததற்கும் பகவதியே காரணமாக இருந்திருக்கவேண்டும். சென்னபசவய்யன் அவளை வரவழைத்தான். அவள் வந்து பார்த்து விட்டு பூஜை செய்வியுங்கள் என்று சொன்னாள். பூஜைகள் நடந்தன. உடல் நிலை தேறிய பிறகு அவனைப் பார்ப்பதற்காகவென்றும், பிரசாதத்தைத் தானே கொடுப்பதற்காகவும் அவள் மீண்டும் இரண்டு முறைகள் அரண்மனைக்குச் சென்றாள்.

முதல் முறையே அவள் சென்னபசவனுக்கும் அரண்மனைக்கும் இருக்கும் மனஸ்தாபத்தைப் பற்றிப் பிரஸ்தாபித்து அதைச் சரிப்படுத்துவதற்காக பூஜைகளை நடத்துவதாகச் சொன்னாள். சென்னபசவன் கோபத்தோடு, "இதைச் சரிப்படுத்தவா பூஜை செய்வேன்? அவனைச் சரிப்படுத்து என்று நான் கடவுளை வேண்டப்போவதில்லை. அவனை முடித்து விடு என்று பிசாசை அழைப்பேன்" என்றான்.

பகவதி சமாதானம் செய்வதுபோல நடித்து அவனிடமிருந்து எல்லா விஷயங்களையும் தெரிந்துகொண்டாள். அவன் அரண்மனை தனக்கு விளைவித்துள்ள கஷ்டங்களையெல்லாம் நினைத்துக் கொதிக்கச் செய்தாள். அவன் ஆங்கிலேயர்களுக்குப் புகார் செய்ததை அவனே சொல்லக் கேட்டுத் தெரிந்துகொண்டாள். அவன் செய்தது சரி என்று அவள் சொல்லாவிட்டாலும் சரியல்ல என்று அழுத்தமாகச் சொல்லவில்லை. கடைசி கடைசியாக சென்னபசவன் மறுபடியும் ஒரு புகாரை அனுப்பினாலும் தவறில்லை என்றே அவள் சம்மதித்ததுபோல இருந்தது பேச்சு. சென்னபசவன் விரும்பினால் அரசனின் தங்கை தேவம்மாஜி பட்டத்திற்கு வருவதற்காக தேவியின் சந்நிதியில் பூஜைகள் நடத்தவும் அவள் தயாராக இருப்பதாகத் தோன்றியது.

அப்பங்கொளத்தில் நடந்த விஷயங்கள் இவ்வளவு விவரமாகத் தெரியவரவே பகவன் இந்த ஸ்திரீ அரசனின் இதர விரோதி

களிடமும் இப்படிப்பட்ட பேச்சைத்தான் பேசிக்கொண்டிருப்பாளோ என்று சந்தேகம் கொண்டான். அரசனுக்குக் கேடு உண்டாகுமாறு இவள் நடந்து கொள்பவளானால் தான் பேசாமலிருக்கமுடியாது. அவளைத் தடை செய்யவேண்டும். அதைத் தான் ஒருவனாக எப்படிச் செய்ய முடியும்? யாரிடமாவது உதவி கேட்கலாமென்றால் அரசன் விஷயத்தில் களங்கமில்லாத அன்பும், பொறுமையும் உள்ளவள் ராணி ஒருத்தி தான். வேறு யாரையும் அவன் கேட்கும்படியாக இல்லை. ராணியோ இவனுடைய யோக்கியதைக்கு எட்டாத உயரத்திலிருப்பவள். அரசனுடன் இது பற்றிப் பேசுவதால் ஒரு காசுக்குப் பிரயோஜனமில்லை. "உன் பகவதியின் தலையைச் சீவு" என்பான்; இல்லாவிட்டால் "அவளைப் புலையர்களிடம் தள்ளு" என்பான். என்ன செய்வது?

நீண்ட யோசனைக்குப் பிறகு பசவன் கடைசியில் தொட்டவ்வாவைக் கலந்து யோசிப்போம் என்று முடிவு செய்து ஒரு நாள் அவளைப் பார்த்து, "என்ன தொட்டவ்வா? உன்னோடு ஒரு வார்த்தை பேசவேண்டுமே?" என்றான்.

தொட்டவ்வா, "ஒரு வார்த்தை என்னடா, பத்து வார்த்தை தான் பேசேன். உன் வார்த்தை என்ன முத்தா, மணியா?" என்றாள்.

தொட்டவ்வாவின் பேச்சு எப்பொழுதுமே இப்படித்தான். பெரிய மனிதர்களோடு நெருக்கமாக இருந்து சேவை புரிந்து வந்ததனால் யாரோடும் சலுகையோடு பேசும் அதிகாரத்தைப் பழக்கப் படுத்திக்கொண்டிருந்தாள், மேலும் பசவன் அவள் வளர்த்த பிள்ளை. இந்தக் காரணங்களினால் அவள் பசவனோடு பேசும்பொழுது வார்த்தைகளை அளந்தோ நிறுத்தோ பேச வேண்டியதில்லை. "பத்து வார்த்தை அப்புறம் பேசலாம். இப்போது ஒரு வார்த்தை சொல் போதும். இந்த பகவதியம்மா இருக்கிறாளே, இவள் முன்பு இங்கே எப்படியிருந்தாள், என்ன செய்து கொண்டிருந்தாள்? அதைச் சொல்."

"இதைப் பாருடா, இந்த ஒரு விஷயத்தை மாத்திரம் என்னிடம் கேட்காதே. நான் சொல்லமாட்டேன். அப்படி உனக்குத் தெரிந்துதான் ஆகவேண்டுமென்றால் அவளையே போய்க்கேளு."

"அவள் கோபித்துக்கொண்டு சாபம் கொடுத்துவிட்டால்?"

"உன் மேல் அவள் கோபித்துக்கொள்ளவும் மாட்டாள். சாபமிடவும் மாட்டாள். பயப்படாமல் போ. கேள்."

பசவனுக்கு தான் கோவிலுக்குப் போயிருந்தபொழுது பகவதி தன்னை அணைத்துக்கொண்டது ஞாபகத்திற்கு வந்தது. தொட்டவ்வாவின் பேச்சில் உண்மை இருப்பதாக அவனுக்குப் பட்டது. ஆனால் பகவதி தன் விஷயத்தில் அவ்வளவு மகிழ்ச்சியோடு இருப்பதை இவள் எப்படி அறிவாள்? பகவதி தன்னிடம் நடந்து கொண்ட விதத்தைச் சொல்லி அதற்குக் காரணம் என்னவென்று இவளையே கேட்போமா? கேள்வி நாக்கு நுனி வரையில் வந்து விட்டது. ஆனால் பசவன் அத்தோடு நிறுத்திவிட்டான். "இங்கே நடந்ததையெல்லாம் யாருக்காவது சொன்னாயோ, ஜாக்கிரதை" என்று பகவதி எச்சரித்திருந்தது அவன் நினைவுக்கு வந்து அவனை தடுத்தது.

45

விஷயம் என்ன வென்று தொட்டவ்வா விடமிருந்து தெரிந்து கொள்ள முடியாமற் போகவே பசவன் கிழவி சொன்னபடி பகவதியிடமே போவதென்று நிச்சயித்துக் கொண்டான். பகவதியின் தேவி பிரபலமானவள், அவளைப் பகைத்துக் கொள்ளக் கூடாது என்கிற பயம் அவனுக்கு இருந்தாலும், கோவிலுக்குப் போக வேண்டும், பகவதியோடு பேசவேண்டும் என்பதிலெல்லாம் அவனுக்கு விருப்பம் இருந்தது. இதற்கு முக்கிய காரணம் பசவன் அநாதையாக அரண்மனை வட்டாரங்களில் யாருக்கும் வேண்டாதவனாக நாய்களோடு ஒரு நாயாக வளர்ந்தவன். தன் தாய் யாரென்று அவனுக்குத் தெரியாது. அவனைச் சீராட்டிய வர்களில் முதல்வள் தொட்டவ்வா. உண்மையில் தொட்டவ்வா அவனைப் பார்த்துக் கொண்ட முறையை சீராட்டுதல் என்று சொல்வது சிறிது கஷ்டம் தான். திக்கற்ற அச்சிறுவனை சுற்றிலுமுள்ளவர்கள் பையா என்பதை விட நாயே என்று தான் அதிகமாக அழைத்து வந்தார்கள். கால் முறுக்கிக் கொண்டிருந்ததால நொண்டினாற் போல நடந்து கொண்டிருந்த அவனை யாரோ நொண்டி என்று கூப்பிட ஆரம்பித்தனர். யாருக்கும் வேண்டாத அனாதைச் சிறுவனை முதன் முதலில் பிரியத்தோடு பார்த்த ஜீவன் ராஜகுமாரனாகயிருந்த வீரராஜன். இரண்டு வருடங்கள் சிறியவனான அரச குமாரன் தன்னை விடச் சிறிது

பெரியவனான நொண்டிப் பையனோடு சேர்ந்து கொண்டான். பசவனும் அவனிடம் மிக்க அக்கறை காட்டினான். இவ்வாறு வீரராஜனும் நொண்டி பசவனும் சிறுபிள்ளைப் பிராயத்தில் ஈருடல் ஒருயிர் என்கிறாற் போன்ற அத்தியந்த நண்பர்களானார்கள். இந்த நட்பு வளர்ந்த வகை ஏற்கனவே கூறப்பட்டுள்ளது. இவ்வளவும் சொன்னதன் நோக்கம், பசவனுக்கு கடந்த ஆறு மாதங்களுக்கு முன் வரையில் பிரியம் காட்டிய ஒரே பிராணி என்றால் அரசன் தான். இப்படியிருந்த இவனது பாலைவன வாழ்க்கையில் அன்று பகவதி நடந்து கொண்ட விதத்தால் ஏற்பட்ட புதுமையான ஒரு சுகம் பசுமையாக இருந்தது. அரசனின் காம வாழ்க்கைக்கு மந்திரியாக இருந்த இவனுக்கு பெண்களைப் பற்றிய விஷயம் புதிதல்ல. மிகப் பழைய சமாசாரம். பழையது மட்டுமல்ல, புளித்துப் போனது கூட. ஆனால் வயதான வளானாலும் அழகியான பகவதி இருந்தாற் போலிருந்து அவனைக் கட்டியணைத்து முத்தமிட்ட பொழுது பயம், ஆச்சரியம் இவைகளோடு இனமறியாத ஒரு ஆனந்தத்தையும் அநுபவித்தான். இந்த ஜன்மத்தில் அப்படிப் பட்ட சுகத்தை அவன் கண்டது அது தான் முதல் தடவை. எனவே பகவதியிடம் செல்வது அவனுக்கு மிகவும் பிடித்தமான காரியம். அவ்வாறு தன்னை அணைத்துக் கொண்டவள் தனக்கு ஒரு கெடுதலும் செய்ய மாட்டாள். இந்த நம்பிக்கையோடு பசவனுக்கு அவனை யறியாமல் ஒரு ஆசையும் இருந்தது. அன்றைக்குப் போல இன்றைக்கும் அணைத்துக் கொள்வாளோ? ஆண் பெண்ணை இழுத்தணைத்து முத்தமிடுவதில் ஒரு இன்பம் காண்கிறான். பெண் தன்னை இழுத்தணைத்து முத்தமிடும் பொழுது மற்றொரு வகையான இன்பம் தோன்றுகிறது. முதல் வகை இரண்டாவதைப் போன்ற உயர்ந்த இன்பம் அல்ல, இதன் உச்சத்தை அது அடைய முடியாது.

பசவனுக்கு பகவதி இந்த இன்பத்தை ஈந்து அவனுக்கு வெகு பிரியமானவளாகி விட்டிருந்தாள்.

46

இவ்வாறாக ஒரு நாள் பசவன் மற்ற வேலைகளை யெல்லாம் முடித்துக் கொண்டு தனியாக ஒரு ஆளை மாத்திரம் அழைத்துக் கொண்டு பகவதியின் ஆசிரமத்திற்குச் சென்றான். போகும்

வழியில் அவன் முன்பே ஆசிரமத்துக்குச் சென்ற ஒவ்வொரு முறையும் செய்யவேண்டுமென்று நினைத்துச் செய்ய முடியாமற் போய்விட்ட ஒரு காரியத்தை இந்த முறையாவது செய்ய வேண்டுமென்று நினைத்துக் கொண்டான். அரசனுக்கு உடலில் பலம் வருவதற்கு வேண்டிய மருந்தைக் கொடு என்று பகவதியைக் கேட்க வேண்டும். முதல் முறையைப் போலவே குதிரையை ஆற்றின் அருகே விட்டு விட்டு கோவிலின் வாசலுக்கு வந்து "அம்மா" என்று கூப்பிட்டான். பணிப் பெண் வந்தாள்; அவன் விருப்பப்படி அவன் வந்திருப்பதை பகவதிக்குத் தெரிவித்தாள். பகவதி பசவனை உள்ளே வந்து முகப்பில் உட்காரச் சொன்னாள். பணிப் பெண்ணை வாசலண்டை போய் இருக்கச் சொன்னாள். அவள் வாசலுக்குச் சென்ற பிறகு பசவனைப் பார்த்து, "எதற்காக வந்திருக்கிறாய்?" என்று கேட்டாள்.

பசவனின் இதயம் உடைந்து போய் விட்டது. அவள் குரலில் பிரியமோ, பாசமோ இருக்கவில்லை. அவள் பார்வையில் தன்னை அணைத்துக் கொள்ளக்கூடிய ஆசையின் அறிகுறி சிறிதளவு கூட இல்லை.

"உங்களிடம் சொல்லவேண்டிய விஷயம் ஒன்றிருக்கிறதம்மா. அதற்காக வந்தேன். தவறாக இருந்தாலும் கோபித்துக் கொள்ளக்கூடாது."

"என்ன விஷயம்? ராணியவர்கள் விஷயமா?"

"இல்லையம்மா, என் விஷயம் தான்."

"உன்னுடையது என்றால்? அரசர் அனுப்பியிருக்கிறாரா?"

"இல்லையம்மா, என்னைப் பற்றிய விஷயம் தான்."

"என்ன சொல்."

"சொல்கிறேனம்மா, கோபித்துக் கொள்ளாதீர்கள். இந்த இரண்டு மாதங்களாக நீங்கள் பல இடங்களுக்குச் சென்று பலரைப் பார்த்துப் பேசியிருக்கிறீர்கள். அப்பங் கொளத்துக்குச் சென்று மாப்பிள்ளையவர்களையும் பார்த்து வந்திருக்கிறீர்கள். இவர்களில் பலர் அரசனுக்கு ஆகாதவர்கள். இவர்களிடம் தாங்கள் போய் வருவதனால் அரசருக்கு ஏதாவது ஆபத்து நேருமோ என்று பயமுண்டாயிற்று. அதற்காகத் தான் உங்களிடம் வேண்டிக் கொள்ளலாம் என்று வந்தேன்."

"என்ன வேண்டப் போகிறாய்?"—பகவதியின் குரல் கடுமையாகவே இருந்தது.

"அரசரைக் காப்பாற்ற வேண்டும்."

"உனக்கென்ன வேண்டும்?"

"நான் வேறு அல்ல; அரசரின் காலடியில் கிடக்கும் நாய்."

"காலடியில் கிடக்கும் நாய்! உனக்கு வெட்கமாயில்லை இந்த மாதிரிப் பேசுவதற்கு? மனிதனாகப் பிறந்து நாயாக வாழ்வதற்கு? நீ நாயாக வாழத்தான் உன் அம்மா உன்னைப் பெற்றெடுத்தாளா? நான் எங்கே போகவேண்டும். என்ன செய்ய வேண்டும், எப்படி நடந்து கொள்ளவேண்டும் என்பதெல்லாம் என் இஷ்டம். இதை வேறு யாரும் எனக்குச் சொல்ல வேண்டியதில்லை. இனிமேல் நான் எங்கே போகிறேன், என்ன செய்கிறேன் என்பதை வேவு பார்க்காதே, ஜாக்கிரதை. நீயும் பார்க்காதே, வேறு யாரும் பார்க்கவும் கூடாது. பார்த்தீர்கள், தீர்த்துக் கட்டிவிடுவேன், தெரிந்ததா?"

பகவதியின் ஒவ்வொரு வார்த்தையும் கத்தியைப் போல பசவனின் மனத்தை அறுத்தன. அவன் தைரியத்தை இழந்தான். மனிதர்கள் எதிரில் அவன் பயப்படக் கூடியவனல்ல. ஆனால் இது மனிதர் பேச்சல்ல; தெய்வத்தின் பிரதிநிதி பேசும் பேச்சு. அவன் எழுந்து நின்று பகவதிக்குக் கைகூப்பினான். பயத்தால் அவன் கால்கள் நடுங்கிக் கொண்டிருந்தன. "தவறு அம்மா. கோபித்துக் கொள்ளாதீர்கள். உத்தரவு கொடுத்தால் புறப்படுகிறேன்" என்றான்.

தன் பேச்சு அவசியமில்லாமல் கடுமையாகி விட்டதை பகவதி உணர்ந்தாள். அவனுக்கும் சிறிது தைரியமூட்ட நினைத்து பேச்சைத் தொடர்வது போல, "அரசனை அவ்வளவு பெரியவனாக்கி உன்னை நீயே தாழ்த்திக் கொண்டதால் கோபம் வந்தது, இவ்வாறு செய்யக்கூடாது. அரசன் உனக்கு அப்படி என்ன செய்து விட்டான்?" என்றாள்.

பசவனுக்கு சிறிது தைரியம் வந்தது; அல்லாமல் அவன் அரசனை விட்டுக்கொடுக்கத் தயாராக இருக்கவில்லை. அவன் "என்ன செய்யவில்லை, அம்மா? நானும் ஒரு ஜீவன் என்று நேசத்தோடு என்னைக் கண்டவர் இந்த உலகில் அவர் ஒருவரே. அப்படிப்பட்டவரிடம் நாய்போல வாழ்வது மானத்திற்கு இழுக்கல்ல," என்றான்.

"மறுபடியும் அந்தப் பேச்சையே பேசாதே. நீ அரசனாக இருந்து அவன் நாயாக இருந்திருந்தால்....."

"சிவசிவ, அப்படிப்பட்ட பேச்சு வேண்டாம்."

"என் பேச்சுக்குக் குறுக்கே பேசாதே. உனக்கு வேண்டா மென்றால் வேறு யாருக்கும் வேண்டாமா? நான் உன் அரசனைப் பற்றிக் கவலைப்படவில்லை. இந்த நாட்டு மக்களுக்கு எது நல்லதோ அதைப் பார்க்கவேண்டும். என் வேலைக்கு இடையூறாக நின்றாயோ, ஜாக்கிரதை."

"ஜாக்கிரதையாகவே இருப்பேன் அம்மா. ஆனால் அரசருக்குக் கேடு வரக்கூடாது. அதைக் கொஞ்சம் பார்த்துக் கொள்ளுங்கள்."

"நல்லது. நீ இவ்வளவு சொல்லுவதால் உனக்காக இந்த வாக்குக் கொடுக்கிறேன். உன் அரசனின் உயிருக்கு ஆபத்து நேராது. அதை நான் பார்த்துக் கொள்கிறேன்."

"அதைப் பார்த்துக் கொள்ளுங்கள் அம்மா போதும். இனி என் மனம் நிம்மதியாயிற்று. உத்தரவா? இனி நான் போய் வருகிறேன்."

"நல்லது, புறப்படு."

அரசனின் க்ஷேமத்தைக் காப்பாற்றிவிட்டோம் என்ற சந்தோஷத்துடன் பசவன் வெளியே புறப்பட்டான். முன்பு போல அவன் புறப்படும்பொழுது பகவதி அவனை இழுத்துத் தழுவிக் கொள்ளவில்லை. கிடைத்தாலும் கிடைக்குமோ என்று விரும்பிய சுகம் கிடைக்காமல் இனமறியாத வேதனையுடன் பசவன் ஆசிரமத்தை விட்டுப் புறப்பட்டான். அரசனுக்குப் பலத்தைக் கொடுக்கக்கூடிய நார், வேர் இவைகளைப் பற்றி இந்த முறையும் பேச முடியாமற் போயிற்று.

47

இச்சமயத்தில் ஒருநாள் அபரம்பரஸ்வாமி ஓங்காரேஸ்வரன் கோவிலுக்கு முன்னாலுள்ள புஷ்கரிணியின் மேல்படியில் தியானம் செய்தபடி உட்கார்ந்திருந்தார். அப்பொழுது வழக்கம்போல பெரியவர் தீட்சிதர் புஷ்கரிணிக்கு வந்து நீரில் இறங்கி ஆசமனம், புரோட்சணம் முடித்துவிட்டு கோவிலுக்குப் போவதற்காக படி யேறி வந்தார். எதிரே படியின்மீது வாலிப சந்நியாசி உட்கார்ந்

திருந்தார். யாரோ சந்நியாசி ஆஸ்ரமத்துக்கு வந்திருக்க வேண்டு மென்று நினைத்துக்கொண்டு தீட்சிதர் முன்னுக்கு நடந்தார். அருகில் வந்ததும் சுவாமி, "சரணம் ஐயா" என்றார்.

தீட்சிதர் திடுக்கிட்டுப் போனார். எதிர்பாராதபடி பேசினதால் மாத்திரமல்ல; வேறு காரணமும் இருக்கவேண்டும். அவர் பதிலுக்கு, "சரணம் ஐயா, எங்கேயிருந்து வந்திருக்கிறீர்கள்?" என்று கேட்டார்.

"நாம் சகலேசபுரம், இங்கே அடிக்கடி வருவதுண்டு."

"அப்படியா? சந்தோஷம். கோவிலுக்கு வந்ததைப் பார்த்ததில்லை. இங்கே வெளியூர்க்காரர்களுக்கு கட்டளை உண்டு. பூஜைக்கு வந்தால் பிரசாதமும் பெற்றுக் கொள்ளலாம். தினமும் வந்தாலும் சந்தோஷமே. எங்களுக்கும் தரிசனமும் கிடைத்த மாதிரி ஆயிற்று. தங்களுக்கும் பிட்சை நடந்தபடி ஆயிற்று."

"சரி, ஐயா. இன்றைக்கு இருப்போம். ஊம், உங்களை ஒரு பேச்சு கேட்கவேண்டுமே."

"ஒன்றும் கேட்கவேண்டிய அவசியமில்லை. ஒரு நாளைக்குப் பத்து சந்நியாசிகள் வந்தாலும் இங்கே பிரசாதத்துக்குக் குறைவில்லை."

"அது சரி அது சரி ஐயா. ஆனால் நாம் கேட்க நினைத்தது அதுவல்ல."

"என்ன, கேளுங்கள்."

"நாம் பேசியபோது நீங்கள் திடுக்கிட்டாற்போலக் காணப்பட்டது. அது ஏன் என்று கேட்கத் தோன்றியது."

இந்தப் பேச்சுக்குள்ளாக தீட்சிதர் மேல்படிக்கு வந்துவிட்டார். சுவாமி எழுந்து அவரெதிரில் நின்றிருந்தார். இருவரும் தேவாலயத்தை நோக்கி நடந்தார்கள். தீட்சிதர் ஒரு கணம் சந்நியாசியை உற்றுப் பார்த்துவிட்டு, ஏதோ யோசித்தபடி, "உங்கள் குரல் எனக்கு வேண்டியவர் ஒருவருடைய குரலைப்போல இருந்தது. அதனால் நான் திடுக்கிட்டிருக்கவேண்டும்" என்றார்.

"ஆமாம், திடுக்கிட்டீர்கள். யார் அவர் தங்களுக்கு வேண்டியவர்?"

"அதை யெல்லாம் இப்பொழுது சொல்லி என்ன பிரயோஜனம்?"

"அரண்மனை அப்பாஜியின் குரலைப்போல இருந்ததா ஐயா?"

நடந்துகொண்டிருந்த தீட்சிதர் சட்டென்று நின்றார்; சுவாமியைப் பார்த்தார்; "நீ வீரண்ணா?" என்றார்.

"ஆமாம் ஐயா."

"பின்னே அதை முதலில் சொல்லாமல் பயமுறுத்திவிட்டாயே வீரண்ணா! சௌக்கியமாக இருக்கிறாயா? அப்பாஜி சுகமா? எங்கே இருக்கிறார்?"

"பட்டணத்தில் மூன்று நாள், மைசூரில் மூன்று நாள், அரகலகூடில் மூன்று நாள், சமீபத்தில் பெங்களூரில் ஆறு நாள், வீட்டை விட்டு அலைபவர்கள் எவ்வளவு சௌக்கியமாக இருக்க முடியுமோ அவ்வளவு சௌக்கியமாக இருக்கிறார். நானும் கூடவே இருக்கிறேன்."

"ஜீவன் பத்ராணி பஸ்யதி சுகமாக இருக்கவேண்டியது அவசியம். மற்ற வசதிகளெல்லாம் தானாக ஏற்படும். ஏன் இங்கே திரும்புவதைப்பற்றி இதற்கு முன்னரே யோசிக்கவில்லை?"

"உங்களுக்குத் தெரியாத சங்கதியா? திரும்பி வந்தால் எனக்கு ஏதாவது அபாயம் நேரக்கூடுமென்று அப்பாஜி தாமும் இங்கு வரவில்லை, என்னையும் இங்கே அடி எடுத்து வைக்கவிடவில்லை, அரகலகூடு சிக்கராம செட்டி அப்பாஜியவர்களிடம் சொன்னான். 'மடகேரியிலிருப்பவர்களெல்லாம் உங்கள் தம்பி மகனை எதிர்பார்ப்பவர்களாக இருக்கிறார்கள். இப்பொழுது நீங்கள் போய் முயற்சி செய்தால் வீரண்ணனை அரசனாக ஏற்றுக்கொள்ள எல்லோரும் சம்மதிப்பார்கள்' என்று. எனக்கும் செய்தி வந்திருந்தது; அரண்மனையின் உபத்திரவம் அதிகமாகி ஜனங்கள் வெறுப்புற்றிருக்கிறார்கள், என்று. அதன் பிறகு தான் நான் இங்கே வருவதற்கு அப்பாஜி சம்மதித்தார். முதலில் இங்கே வந்து ஏழு மாதம் ஆயிற்று. ஒருவாரம் இருந்துவிட்டுப் போனேன். மறுபடியும் திரும்பி வந்தேன்."

"முன்னொரு தடவை வந்திருந்தாயா? நான் பார்க்கவில்லையே."

"அபரம்பரசுவாமி என்று ஜனங்கள் பேசிக்கொண்டிருப்பார்களே. அது நான்தான்."

"ஓ!"

"இங்கே சூழ்நிலை, சந்தர்ப்பம் எல்லாம் பார்த்துக்கொண்டு போய் அப்பாஜியவர்களிடம் தெரிவித்தேன். அவர் ஜோதிடம் பார்த்து நல்லது ஆகக் கூடும் என்று தோன்றியதால், 'போ,

போய் தீட்சிதரைப் பார். என்ன ஏது என்று தெரிந்துகொண்டு மேலே என்ன செய்யவேண்டு மென்று முடிவு செய்துகொள்' என்றார். அதற்காக வந்தேன்."

"நீ யார் என்பது ஒருவருக்கும் தெரியாதே?"

"சூரப்பா ஒருவருக்கு மட்டும் தெரியும்."

"அதனால் ஒன்றும் தொந்தரவு இல்லை. அவன் நம்ம மனுஷன். எந்தப் பேச்சுக்கும் போகக் கூடியவனல்ல."

சூரப்பா லக்ஷ்மீநாராயணய்யாவின் தம்பி. முன்பு அப்பாஜியின் வீட்டில் காரியஸ்தனாக இருந்தவன்; இவர்களுக்கெல்லாம் மிகவும் வேண்டியவன். இப்பொழுது அவன் அரண்மனை சங்கீத நாடக நிர்வாகியாக இருந்தான்.

பேசிக் கொண்டே அவர்கள் கோவிலருகே வந்து விட்டனர். தீட்சிதர், "நல்லதப்பா. நாளைக்கு இந்த நேரத்திற்கு இங்கேயே இரு. இன்றைக்கு எல்லாவற்றையும் பார்த்துவிட்டு நாளைக்குச் சொல்லுகிறேன்" என்றார். வீரண்ணா கைகூப்பிவிட்டுத் திரும்பிச் சென்றான். தீட்சிதர் கோவிலை வலம் வரத் தொடங்கினார்.

48

மறு நாள் வீரண்ணா மறுபடியும் குளத்தருகே அமர்ந்திருந்தான். தீட்சிதர் ஜோதிடம் கணித்துப் பார்த்து அறிந்துகொண்ட பலனை அவனுக்குச் சொன்னார். "கிரகங்களென்னமோ அநுகூலமாகத் தான் இருக்கின்றன; ஆனால் அவ்வளவொன்றும் மேன்மையாக இருப்பதாகத் தோன்றவில்லை. பிராணபாயம் இல்லை. சிறிது நல்ல பலன் காணப்படுகிறது. ஆனால் அது எந்த வகையில் என்று தான் தெரியவில்லை. அப்பாஜி ஊருக்கு வந்து வசிக்க வேண்டுமென்று நிச்சயம் செய்தாலும் அரசனுக்குத் தெரிவித்து விட்டு வந்து இருக்கலாம்; ஆனால் மொத்தத்தில் வெளியே இருப்பதே தான் க்ஷேமம். அரண்மனையின் மற்ற ஜாதகங்களின் பலனும் இருக்கின்றன அல்லவா? அதை ஜோதிடன் மற்றவர்களுக்குச் சொல்லக்கூடாது. இன்னும் ஒரு வருடமாவது வெளியே இருந்துகொண்டு ரகசியமாக இங்கே வந்து போவது நல்லது. மறைவாக இருந்துகொண்டு எல்லாருக்கும் நன்மையானதைச் செய்யலாம்."

வீரண்ணு, "எல்லாருக்கும் நன்மையானது எது?" என்று கேட்டான்.

"உன் பெரியோர்கள் ஒருவரோடொருவர் அன்போடு நடந்து கொள்ளவில்லை வீரண்ணு. அதிகார ஆசையால் பல பேர் தவறான வழியிலேயே சென்றார்கள். அண்ணன் தம்பிக்கும், மகன் தந்தைக்கும், சிற்றப்பா அண்ணன் மகளுக்கும், தம்பிக்கும் அண்ணனும் அக்காவுக்கும் தங்கைக்கும் கேடு விளைவித்தே தாம் வாழ்ந்தார்கள். உன் தந்தை அப்பாஜி ஒருவர் தான் இதற்கு விதிவிலக்கு. தலைமேல் துணியைப் போட்டுக்கொண்டு நாட்டை விட்டுப் போனாலும் போவேன், அநியாயம் செய்யமாட்டேன் என்றார். என்னப்பன் சத்திய வந்தன். அப்படிப் பட்டவர்களுக்கு நான் சொல்வதற்கு என்ன இருக்கிறது? எல்லாருக்கும் நன்மை செய்யக்கூடியது என்ன என்பதை அப்பாஜியே அறிவார்."

"அது சரி. இப்பொழுது அவர் தான் அரசனாகவேண்டுமென்று விரும்பவில்லை; மகன் அரசனாகவேண்டுமென்று விரும்புகிறார்."

"நியாயமாக அது கிடைக்குமானால் சரிதான். அப்படியில்லா விட்டால் அப்பாஜி அதற்குச் சம்மதிக்கமாட்டார்."

"உங்கள் பேச்சு சரி என்றே தோன்றுகிறது ஐயா. அரசனையோ அவன் மகனையோ கெடுத்துத் தாம் வாழ அப்பாஜி சம்மதிக்கமாட்டார்."

"அது தான் எனக்கும் தோன்றியது."

இன்னும் சிறிது யோசனை செய்து விட்டு வீரண்ணு, தீட்சிதரின் சம்மதத்துடன், தான் (சந்நியாசி) வேடத்தில் மடிகேரியிலும், சுற்றுப் பிரதேசங்களிலும் பிரயாணம் செய்து நிலைமையைப் புரிந்துகொண்டு திரும்பிப்போய் தந்தைக்கு எல்லாச் சங்கதிகளையும் தெரிவிப்பதென்றும் அவருக்கு நியாயம், க்ஷேமம் என்று தோன்றிய முறையில் நடந்து கொள்வதென்றும் தீர்மானம் செய்துகொண்டான். அவன் விடைபெற்றுக்கொள்ளும் போது தீட்சிதர், "வீரண்ணு, அரண்மனை ஜோதிடன் பாடு நல்லதல்ல. நான் உன்னோடு இந்தப் பேச்சு எதுவும் பேசுவது உண்மையில் ராஜதுரோகம், உன் தந்தை தர்மத்தை விடமாட்டார் என்ற தைரியத்தில் நான் உன்னுடன் இந்தப் பேச்சைப் பேசினேன். இதையும் அவருக்குத் தெரியப்படுத்து," என்றார்.

வீரண்ணு, "சரி ஐயா" என்றான்.

ஓங்காரேஸ்வரன் கோவிலின் முக்கிய அதிகார பதவியும், அரண்மனை ஜோதிடனின் பதவியும் தீட்சிதருக்கு பரம்பரையாக வந்தவை. பெரிய அரசர் ஓங்காரேஸ்வரன் கோவிலைக் கட்டிய பொழுது அதன் முக்கிய அதிகாரியாக இவருடைய தந்தையை நியமித்தார். அப்பொழுது தீட்சிதர் இளைஞர், தந்தையுடன் கோவில் சேவைகளில் ஈடுபட்டுப், அரண்மனைக்கு அடிக்கடிபோய் வந்தும், விவகாரத்தில் மிகவும் கெட்டிக்காரராக இருந்தார். ஜோதிடத்தில் தந்தைக்குத் தேவையான கணக்குகளைச் செய்து கொடுத்து எல்லா விவரங்களிலும் அவரைப் போலவே திறமை சாலியானார். முப்பது வருடங்களுக்கு முன்னால் தகப்பனார் இறந்ததும் இவர் கோவிலின் முக்கிய அதிகாரியாகவும், அரண்மனை ஜோதிடராகவும் பதவியேற்றார்.

ஜோதிடர் என்ற பிறகு, அதுவும் கெட்டிக்காரர் என்ற பெயரைப் பெற்ற பிறகு, ஊர் ஜனங்கள் மட்டுமல்ல, நாட்டு மக்களும் சுற்றுப்புற நாட்டு மக்களும் கூட வந்து அவரிடமிருந்து அதிருஷ்டத்தைத் தெரிந்துகொள்ள முயல்கின்றனர். இவ்வாறு தீட்சிதர் சுற்றுப்புறங்களிலெல்லாம் பிரசித்தியடைந்தார்.

தந்தையிடமிருந்த கற்ற மூன்று நியமங்களை விடாமல் நடத்தி இவர் மக்களின் பிரியத்தையும், மதிப்பையும் பெற்றார். முதல் நியமம், ஜோதிடம் சொல்லிப் பணம சம்பாதிப்பதில்லை என்பது. இதற்கு வேறு ஏது காரணமாக இருந்தாலும் பணம் வாங்கிக் கொண்டால் கிரகங்கள் சரியான பலனைக் காட்டாது என்பது அவர்களின் நம்பிக்கை. பணம் வாங்கிக்கொண்டு ஜோசியம் சொல்லுகிறவனின் ஜோசியம் சரியாக இருக்க முடியாது. அப்படிச் செய்பவன் பணக்காரனாகக் கூடும். ஆனால் ஜோசியனாக முடியாது. இரண்டாவது நியமம்: கிரகங்கள் காட்டுவது சம்பவங்கள் நடக்கக்கூடிய மார்க்கத்தையே ஒழிய அந்த மார்க்கத்தில் அவை இடக்கூடிய அடிகளையல்ல, எனவே ஜோதிடனானவன அதிருஷ்டத்தின் திசை இப்படியிருக்கிறது என்று சொல்லலாமே ஒழிய இப்படித்தான் ஆகும், இப்படி ஆகாது என்று சொல்லுவது தவறு. வாழ்க்கையில் கிரக கதியோடு மனிதனின் முயற்சியும் இருக்கிறது; அதற்கும் மேலாக ஆண்டவனின் அருள் இருக்கிறது. மனித முயற்சி, கடவுளின் அருள் இவைகளையும் மீறி

கிரககதி வாழ்க்கையை நடத்துவதில்லை. இவைகளோடு அதுவும் கலக்கிறது. திறமைசாலியான ஜோதிடனுக்கு அவை கலக்கும் வகையும் கூட கிரககதியில் அடங்கியிருப்பது தெரிய வரும்; ஆனால் சாதாரணமாக மனிதனின் திருஷ்டி அவ்வளவு குட்சுமமாக இருப்பது இயலாது. மூன்றாவது நியமம்: ஜோதிடனாகப் பட்டவன் யார் வந்து அதிருஷ்டத்தைப் பற்றிக் கேட்டாலும் அவர்களுக்கு உதவி புரிய முயலவேண்டும். அவன் கிரகங்களின் பிரதிநிதி, சூரிய சந்திரர்கள் நல்லவர்களுக்கு மாத்திரம் உதவுவதில்லை, எல்லோருக்கும் தங்கள் உஷ்ணத்தையும் குளிர்ச்சியையும் சமமாகவே அளிக்கிறார்கள். ஜோதிடனும் அவ்வாறே நல்லவர்கள், கெட்டவர்கள், உண்மை சொல்பவர்கள், பொய்யர்கள், உயர்ந்தவர், தாழ்ந்தவர், நண்பர்கள், விரோதிகள், என்ற ஏற்றத் தாழ்வில்லாமல் முடிந்தவரையில் அதிருஷ்டத்தைப் பரிசீலனை செய்து ஜோசியம் கேட்டுக்கொண்டு வந்தவர்களுக்கு வழி காட்டவேண்டும்.

தந்தை இருந்த காலத்தில் இந்த நியமங்களை நடத்தவேண்டிய பொறுப்பு தீட்சிதரைச் சேர்ந்ததாக இருக்கவில்லை. தந்தை இறந்த பிறகு அவர் இந்த முப்பது வருடங்களில் ஒரு முறை கூட இந்த நியமங்களை மறக்கவில்லை.

50

வீரண்ணன் வந்து அவரை யோசனை கேட்டபோது தீட்சிதர் ஒரு நாள் அவகாசம் பெற்றுக்கொண்டு அவனுடையதும், ராணி, அரசன் இவர்களுடையதும் ஜாதகங்களை எடுத்து அவை என்ன குறிப்பிடுகின்றன என்று பார்த்தார். ஸ்தூலமாகப் பார்த்ததில் அவருக்கு 'அரசன் தன் உடன் பிறப்புக்குக் கெடுதல் விளைப்பான்' என்று கண்டது. உடன் பிறப்பால் அவனுக்கும் கெடுதல் என்று கண்டது ஆனால் அரசன் செய்யக்கூடிய கெடுதலே அதிகம். இது கிரகங்களிலிருந்து தெரிந்து கொள்ளவேண்டிய ரகஸ்யம் ஒன்றும் இல்லை. அரசன் தங்கையைச் சிறையில் வைத்திருந்தான். அந்தத் தங்கையின் கணவன் அரசனின் மீது துவேஷம் பாராட்டிவந்தான். ஆகையால் வீரண்ணன் மடிகேரிக்கு வருவதனால் அரசனுக்கு ஏதாவது விபரீதமான கெடு

தல் விளைந்து விடும் என்று சொல்வதற்கில்லை. இவ்வாறு இருந்ததனால் தான் தீட்சிதர் வீரண்ணனுக்கு அவ்வாறு அறிவுரை கூறினார். இதன் பிறகு அரசன் செய்யக் கூடிய கெடுதல் என்னவாக இருக்குமென்று தீட்சிதர் மறுபடியும் கணக்குப் போட்டுப் பார்த்தார். அவ்வாறு பார்த்ததில் அரசனின் ஜாதகப்படி கிரக நிலை தான் இதற்கு முன்னரே பார்த்திருந்த பிரசித்தமான நிலை என்று அவருக்குப் பளிச்சென விளங்கியது. முப்பாட்டனார் காலத்திலிருந்து இவர்கள் வீட்டில் பழைய காலத்தவை என்ற பெயரில் கிரக நிலைகளைக் காட்டும் சில சித்திரங்கள் இருந்தன. தீட்சிதர் அடிக்கடி அவைகளை எடுத்துப் பார்ப்பதுண்டு இன்றைக்கு அவர் அந்தச் சித்திரங்களை எடுத்துப் பார்த்தார். அவைகளில சகோதர துவேஷம் சம்பந்தப்பட்ட சித்திரங்களை எடுத்துப்பார்த்தால் கம்சனின் கடைசி வருடத்திய கிரக நிலையும், வீரராஜேந்திரனின் அந்த வருடத்திய கிரக நிலையும் ஒரே மாதிரியாக இருந்தன. தங்கையைக் கொண்டு வந்து சிறையிலடைத்திருப்பதால் சகோதரது துவேஷம் குறிக்கப்பட்டது என்று சந்தேகம் கொள்ளலாம். ஆனால் அந்த சந்தேகம் இப்படி எதிர்பாராத வகையில் உறுதிப்படும் என்று அவருக்குத் தோன்றியிருக்க முடியாது

இப்பொழுது இப்படி ஆகிவிட்டதே. அரசனை இந்த அபாயத்திலிருந்து காப்பாற்றவேண்டியது தன் பொறுப்பு. அரசன் தன் தங்கையைச் சிறையிலிருந்து விடுதலை செய்யும்படி செய்து விட்டால் இந்த அபாயம் ஓரளவுக்கு நீங்கலாம். இதை எப்படிச் சாதிப்பது? எதிர்காலம் இவ்வாறு இருக்கிறதென்று ராணியிடம் எடுத்துச் சொல்லி அவள் தன் கணவனை வேண்டிக்கொள்ளும்படி ஏற்பாடு செய்யவேண்டும்; எப்படியாகிலும் செய்து அரசன் தன் தங்கையை அப்பங் கொளத்துக்கு அனுப்புமாறு செய்ய வேண்டும்.

வாரத்திற்கு இரண்டு முறை மூன்று முறை சுவாமி பிரசாதத்தை தானே எடுத்துக் கொண்டு போய் அரண்மனையில் கொடுத்து வருவது தீட்சிதரின் வழக்கம். அடுத்த முறை அரண்மனைக்குப் போகும்பொழுது ராணி இதைப்பற்றிப் பேச்செடுக்கும்படிச் செய்து, தான் இந்த எச்சரிக்கையை அவளுக்குக் கொடுக்கவேண்டும் என்று நிச்சயித்துக் கொண்டார். ஆனால் எதிர்பாராத விதமாக அன்றைக்கே ராணி அவருக்குச் சொல்லியனுப்பினாள். தீட்சிதர் அரண்மனைக்குச் சென்றார்.

ராணி சொல்லியனுப்பியது அரசன் ஆங்கிலேயர்களுக்குக் கொடுக்கவேண்டுமென்றிருந்த விருந்தைப்பற்றிப் பேசுவதற்காக அடுத்த ஒரு மாதம் அல்லது ஒன்றரை மாதங்களுக்குள்ளாக, மழை காலம் ஆரம்பிப்பதற்கு முன்னால் கோவிலில் விசேஷமான பூஜையோ உத்சவமோ இலலாத, அரண்மனைச் சேவகர்களுக்கு பண்டிகை, திருவிழா என்று ஒன்றுமில்லாத ஒருநாளைக் குறித்துக் கொடுக்கச் சொன்னாள். தீட்சிதர் பஞ்சாங்கத்தைப் பார்த்து அநுகூலமான இரண்டு மூன்று நாட்களை வைத்துக் கொடுப்பதாகச் சொன்னார்.

இதன் பிறகு ராணி தானாகவே, "ஓரிரண்டு மாதங்களுக்கு அரசரின் ஆரோக்கியம் மற்றவை எல்லாம் நன்றாக இருக்கின்றனவா என்று பார்க்கவேண்டுமே ஐயா" என்றாள்.

ராணி இந்தப் பேச்சை எடுக்குமாறு ஈஸ்வரனே அருளியதாக தீட்சிதருக்குத் தோன்றியது. தன் எண்ணமும் அவள் கேள்வியும் இவ்வாறு தோதாக அமைந்ததற்கு வேறு என்னதான் காரணம் சொல்லமுடியும்? அவர், "அதையெல்லாம் பார்த்து வைத்திருக்கிறேன், அம்மாஜி; இன்றைக்கோ நாளைக்கோ உங்களுக்குத் தெரிவிக்கலாமென்றிருந்தேன்," என்றார்.

"அபாயமொன்றும் இல்லையே?"

"அரசருக்கும் அவருக்கும் மிகவும் நெருங்கிய உறவினர்களுக்கும் அபாயமில்லை. ஆனால் வேறு வகையில் கிரககதி மிகவும் குரூரமாக இருக்கிறது."

ராணிக்கு 'திக்' கென்றது. இருந்தாலும் பயத்தைச் சமாளித்துக் கொண்டு அவள், "என்ன அபாயம்? என்ன சாந்தி செய்யவேண்டும், சொல்லுங்கள்; செய்வோம்," என்றார்.

"சாந்தி செய்வதனால் நிவர்த்திக்கக்கூடிய அபாயமல்ல இது, அரசர் மூலமாக ஒரு காரியத்தைச் செய்யவேண்டும்," என்று கூறி தீட்சிதர் ராணிக்கு கிரக கதியின் நிலைமையை விளக்கினார். "கூடிய சீக்கிரம் நாத்தனாரை சிறையிலிருந்து விடுவித்து அப்பங்கொளத்துக்கு அனுப்பிவிடவேண்டும்," என்றார்.

"ஐயோ சுவாமி! இதற்கு அரசர் சம்மதிப்பாரா? உங்களுக்குத் தெரியாததா?"

"ஆமாம் அம்மாஜி. நீங்கள் சொல்வதெல்லாம் உண்மையே. இருந்தாலும் எனக்குத் தோன்றுவது இது ஒன்றே வழி."

"கம்சனின் தசை என்கிறீர்கள். நாத்தனுருக்குக் குழந்தைகளில்லையே, ஏன் பயப்படவேண்டும்?" என்ருள்.

"கிரகங்கள் இப்படிப்பட்ட விஷயங்களைக் குறிப்பிடும்போது அந்தக் குறிப்பை நாம் நம்பத்தான் வேண்டும். அந்தக் குறிப்பின் விவரம், பொருள் என்ன என்று நாம் ஆராய முடியாது. இந்த கிரக கதி ஜாதகனின் சகோதரியை அவனிடமிருந்து தூர வை என்று சொல்கிறது. அதைச் செய்வதனுல் அரசருக்கு க்ஷேமம். அரசரின் நன்மையை விரும்புகிறவர்களுக்கு இதை விடப் பெரிய கடமை எதுவும் கிடையாது."

"சரி ஐயா. என் கையாலானதைச் செய்கிறேன். அரசரே இந்த தசையிலிருந்து காப்பாற்றும்படி சந்நிதியில் சேவை நடத்த வேண்டுமே?"

"நடத்துகிறேன் அம்மாஜி. அதைப் பற்றிக் கவலைப்படவேண்டாம். இங்கே தாங்கள் அரசரின் மனத்தைத திருப்பி நாத்தனுரை அப்பங்கொளத்துக்கு அனுப்புவதற்கான முயற்சிகளைச் செய்யுங்கள்."

என்று கூறிவிட்டு தீட்சிதர் ராணியிடம் விடை பெற்றுக் கொண்டு புறப்பட்டார். ராணி கவலையில் மூழ்கினுள். மேலே செய்யவேண்டியது என்ன என்று சிந்திக்கத் தொடங்கினுள். கவலைக்கு அவள் நினைக்காத ஒரு காரணம் இருந்ததை அன்று மாலை தான் அவள் அறிந்தாள்.

51

பெங்களூரில் இருந்த ஆங்கிலேய ராஜ பிரதிநிதியான அதிகாரியிடமிருந்தும் அவனது துணைவனுன இன்னெரு ஆங்கிலேயனிடமிருந்தும் மடிகேரிக்கு வந்திருந்த கடிதங்களைப் பற்றிய விவரங்களை இப்போது கூறலாம்.

பிரதிநிதி எழுதிய கடிதம் வருமாறு: "குடகின் மகாராஜாவான ஸ்ரீமன் மகாராஜா ஸ்ரீ சிக்கவீர ராஜேந்திர உடையார் அவர்களின் ஸ்ரீமத் சமூகத்தில் மகாராஜாவின் நிரந்தர நண்பர்களான ஆங்கிலச் சக்கரவர்த்தியின் கம்பெனி சர்க்காரின் மைசூர் தேச ரெஸிடெண்ட் பிரபு செய்யும் பணிவும் மரியாதை

யும் உள்ள வணக்கங்கள் மற்றும் யுகாதி நல்வாழ்த்துக்கள். இப்பவும் தங்களது உடல் நிலையைக் குறித்துத் தெரிவித்து தங்கள் காரியஸ்தர் எழுதியனுப்பிய மரியாதைக் கடிதம் சரியானபடி வந்து சேர்ந்தது. அது குறித்து நமது வணக்கங்கள் பலப்பல. சக்கரவர்த்தியின் நண்பரான அரசரின் உடல்நிலை குணமடைந்து இப்போது அரசர் ஆரோக்கியத்துடன் இருப்பது கேட்டு மிகவும் மகிழ்ச்சியடைந்துள்ளோம். அரசரின் உடல்நிலை பற்றிய இந்தச் செய்தியை வைசிராய மகாப் பிரபுவுக்குத் தெரிவித்துள்ளோம். கவனிக்கவேண்டுமாகக் கோருகிறோம். மேலும், அரசர் ஏற்கனவே நம்மை நமது பரிவாரங்களுடன் மடிகேரிக்கு விருந்துண்ண வரவேண்டு மென்று அழைத்தது, இப்பொழுது அதை ஞாபகததில் வைத்துக்கொண்டு மீண்டும் எங்களைக் கட்டாயப்படுத்தி வரவேண்டுமென்று கடிதம் எழுதியிருப்பது இவை இங்கே எல்லோருக்கும் ஆனந்தத்தை உண்டாக்கியிருக்கிறது. அரசரின் கௌரவ விருந்தை அங்கீகரிப்பது சந்தோஷம் மட்டுமல்ல, பெருமைகூட. ஆகையால் இந்த அழைப்பை மிக்க நன்றியோடு ஏற்றுக்கொண்டுள்ளோம் என்று என் சார்பாகவும் எனது பரிவாரங்களின் சார்பாகவும் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன். யுகாதியின் பொழுது நாங்கள் அங்கே வர அநுகூலம் இருந்தது. ஆனால் சந்தர்ப்பம் ஏற்படவில்லை. அரசருக்கு அநுகூலமான நாள் மழை காலத்துக்கு முன்பாக இந்த ஒரிரண்டு மாதங்களில் எது என்று தெரிந்தால் அன்றைக்கு எல்லோரும் அரசரின் சன்னிதானத்துக்கு வருகிறோம். வேறு சௌகரியமான நாள் இல்லை யென்றால் நவராத்திரிக்கு வருகிறோம். முக்கியமாக இது அரசரின் தரிசனத்தைப் பெறுவதற்காகக் கைக்கொள்ளும் பிரயாணமானாலும், எப்படியும் அங்கே வருவதால் அந்த சந்தர்ப்பத்தில் சக்கரவர்த்தியின் பிரதிநிதிக்கும் அரசருக்கும இடையே பேசவேண்டி யிருக்கும் சில விஷயங்களைக் குறித்து தங்களுக்கு நினைவுட்டி ஒரு முடிவு செய்ய வேண்டுமென விரும்புகிறோம். அது விஷயமாக மற்றொரு கடிதம் தங்கள் சமுகத்திற்கு, ஸ்ரீமத் சமுகத்தில் விண்ணப்பித்துக் கொள்ளும்.

காசா மேஜர்

மைசூர் ரெஸிடெண்ட்

இத்துடன் இணைத்திருந்த மற்றொரு கடிதம் ரெஸிடெண்டின் அந்தரங்கக் காரியதரிசி பார்க்கர் துரை மந்திரி ஸ்ரீ பசவய்யன

வர்களுக்கு எழுதிய அந்தரங்கக் கடிதம். அது பின்வருமாறு இருந்தது.

"பிரியமுள்ள நண்பரே,

'சௌ' மகாராணியவர்கள் ஸ்ரீமத் ராஜேந்திரரின் சார்பில் அனுப்பிய அழைப்புக்கு ரெஸிடெண்ட் துரையவர்கள் மரியாதை யுடன் பதில் எழுதியுள்ளார்கள். அந்தக் கடிதத்துடன் இதை அனுப்புகிறேன்.

"அரசருக்குப் பிடித்தமானதாக இருக்கக் கூடிய சில வஸ்துக் களை, அங்கே வருவோம் என்ற நம்பிக்கையால், வாங்கி வைத் திருக்கிறோம். வரும்பொழுது அவைகளைக்கொண்டு வருகிறேன். ரெஸிடெண்ட் அவர்கள், அவரது உதவியாளர்கள், தளபதி, நான் இவ்வளவு பேர் வருகிறோம். ஸ்ரீமதி லூஸியும் அவளது தோழி ஸ்ரீமதி ஹேலனும் எங்களோடு வருகிறார்கள்.

"எப்படியும் வருகிறோம் ஓரிரண்டு நாட்கள் காட்டுக்குள் சென்று வேட்டையாடி விட்டு வந்தால் நன்றாக இருக்குமென்று பெரியவர்கள் அபிப்ராயம்; முடியுமானால் இதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமாய்க் கோருகிறேன்.

"ஸ்ரீமதி லூஸி அரசருக்கும் தமக்கும் தன் வணக்கத்தைத் தெரிவிக்கச் சொன்னார். என் வணக்கத்தையும் இருவரும் அங்கீ கரிக்கவேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். இந்த விவரங்களை யெல்லாம் அரசருக்கும் தெரிவிக்கவேண்டுகிறேன்.

இப்படிக்கு
தங்கள்

பின் குறிப்பு: நாங்கள் இதற்கு முன்னர் உங்கள் ஊருக்கு பல முறை வந்திருந்தபோதிலும் தங்கள் நாட்டு அழகான பெண் களின் சௌந்தரியத்தைக் கண்டுகளிக்கும் சந்தர்ப்பம் கிடைக்க வில்லை. இது விஷயமாக நான் சென்ற முறை தங்களுக்கு குறிப் பாக உணர்த்தினேன். அது ஞாபகமிருக்கலாம். இந்த முறை அந்த மகிழ்ச்சியை எங்களுக்களித்தால் நாங்களெல்லாரும் மிகவும் கடமைப் பட்டவர்களாவோம். உயர் குலத்துப் பெண் களின் அறிமுகம் செய்து கொள்ளவேண்டுமென்று ஸ்ரீமதி லூஸிக்கு மிகவும் ஆசை. இது விஷயத்தை பிரத்தியேகமாக இப்படி எழுதியிருப்பதை தாங்கள் தவறாக எண்ணமாட்டீர் களென்று நம்புகிறேன்.

இந்த இரண்டு கடிதங்களல்லாமல் ராணிக்கு வேறு ஒரு கடிதம்; சன்னிதானத்தின் கௌரவ அழைப்பைக் குறித்து அரசருக்குக் கடிதம், எழுதியுள்ளோம்.

இப்படிக்கு தங்கள்
வணக்கமுள்ள சேவகன்"

52

ராணி தீட்சிதருக்குச் சொல்லியனுப்புவதற்கு அவளுக்கென்று வந்த இந்த மூன்றாவது கடிதம் காரணம். அரசருக்கென்று வந்திருந்த கடிதத்தை பசவன் அரசருக்குப் படித்துக் காட்டி விட்டு மந்திரிகளிடம் அனுப்பிவைத்தான். தனக்கு வந்த கடிதத்தைத் தனியாகப் படித்துப் பார்த்து விட்டு யாரும் இல்லாத சமயத்தில் அரசனுக்குப் படித்துச் சொன்னான்.

அரசனுக்குப் பிடித்தமான வஸ்து என்பது நல்ல ருசியுள்ள மது வகைகளாக இருக்கவேண்டுமென்று இருவரும் ஊகித்துக்கொண்டார்கள். லூசி மிகவும் சரஸ சுபாவமுள்ள யுவதி. அவள் வருவதைப் பற்றி அரசனுக்கு மிகவும் சந்தோஷம். வேட்டைக்கு ஏற்பாடு செய்வது ஒன்றும் கஷ்டமில்லை. கடைசியில் பின் குறிப்பு என்று எழுதியிருந்த விஷயம் ஒன்று தான் பாக்கி. அரசன் பசவனை, "இந்த பார்க்கர் போன தடவை என்ன வேண்டுமென்று கேட்டான்?" என்று விசாரித்தான்.

"அவன் கிடக்கிறான் அரசே. அவர்களுக்குத் துணையாக என்று தொட்டவ்வா அனுப்பிய பெண்கள் மேல் ஜாதியார் இல்லையாம். பேச்சு வார்த்தையில் நயம் இல்லை என்றான்."

"அதற்காக?"

"குலப் பெண்கள், பார்ப்பனர்கள், குடகர்கள் இப்படி வர வழைத்தால் நல்லது என்றான்."

"அட வேசி மகனே, தர்மம் கொடுத்த மாட்டைப் பல்லைப் பிடித்துப் பார்த்தானா"

"ஆமாம் அரசே."

"வேறு ஏதாவது சமயமாக இருந்தால் மூஞ்சியில் காறித் துப்பலாம். இப்பொழுது இன்னும் ஏதோ சமாச்சாரங்கள் இருப்பதாகச் சொல்கிறார்களே."

"ஆமாம் அரசே."

"போக்கிரி ராஸ்கல் சென்னப்பசவன் புகார் எழுதியனுப்புகிறான். சூரிய சந்திரர் இருக்கும் வரையில் நண்பர்களாக இருக்கப்போகிறவர்கள் விசாரிக்க வருகிறார்கள் என்று தோன்றுகிறது."

"ஆமாம் அரசே."

"இப்பொழுது இவர்களோடு சண்டை வேண்டாம். பார்ப்பனப் பெண்கள், குடகப் பெண்கள் இரண்டையும் வர வழைத்து அவர்கள் முகத்தில் விசிறி அடி."

"இன்னும் புகார் அதிகமாகப் போகுமே அரசே."

"போகட்டும் போ- என்ன ஆகிவிடும்? ஏன் இப்படி என்று கேட்டால் உங்களுக்காகச் செய்தது தான் என்று சொல்ல வேண்டியது."

"அதற்கெல்லாம் இவர்கள் மசிபவர்களல்ல அரசே. கொண்டு வந்தது உன் பொறுப்பு; விசாரிக்கவேண்டியது என் பொறுப்பு என்கிறார்கள்."

"என்ன செய்கிறாயோ பார். மாரியை அழைத்த பிறகு ஆட்டைப் பலி கொடுத்துத் தானாகவேண்டும்."

"சரி அரசே."

"முடியுமானால் இப்பொழுதே வரச்சொல்லி எழுது. இல்லாவிட்டால் நவராத்திரிக்கே வரட்டும். நான்கு நாள் கழித்து எழுது."

"சரி அரசே."

53

நாத்தனார் விஷயமாக ராணி பட்டகவலைக்கு அவள் அப்பொழுது நினைக்காத ஒரு காரணம் அன்று மாலையில் தெரிந்ததாச் சொல்லப்பட்டது. அதன் விவரத்தை இப்போது கூறலாம்.

உத்தய்யன் காவல் படைத்தலைவனாக வந்து சுமார் இரண்டு மாதங்கள் ஆகியிருந்தன. அப்பொழுது ஒரு நாள் ராஜகுமாரி தாயிடம் வந்து, "அம்மாஜி, அத்தை எப்பொழுதும் அழுது கொண்டே இருக்கிறார். மாமா இங்கே வந்து விட்டுப்போகும்படி ஏற்பாடு செய்யலாமா, அம்மாஜி" என்றாள்.

ராணி, "உங்கள் அப்பாஜி சம்மதிக்க மாட்டாரம்மா" என்ருள்.

"இது அப்பாஜிக்குத் தெரியவேண்டாம்."

"ரகசியமாக இப்படிச் செய்வது தவறம்மா. எக்கச்சக்கமாக ஏதாவது நடந்து உங்கள் அப்பாஜி. தங்கைக்கோ மைத்துனருக்கோ ஏதாவது செய்துவிட்டால் கஷ்டம்."

"என்னமோ அம்மாஜி. அத்தை இப்படி பிறந்த வீட்டில் வந்து உட்கார்ந்துகொண்டு அழுதுகொண்டிருப்பது எனக்குக் கஷ்டமாக இருக்கிறது. நாளைக்கு எனக்கும் இதே கதி தானே என்று தோன்றுகிறது."

இந்தக் கடைசிச் சொல்லால் ராணியின் பிடிவாதம் தளர்ந்தது. "ஐயோ, விட்டது என்று சொல். வீட்டு மகள் ஏன் அழவேண்டும்? அது சரி, மைத்துனர் எப்படி வரமுடியும்?"

"அவர் வரும் வேளைக்கு நான் தலைவாசலில் நின்று கொண்டு எங்களுக்கு வேண்டியவர் என்று சொல்லி உள்ளே அழைத்து வருகிறேன். யார் தடுக்க முடியும்?"

"யாரென்று அடையாளம் தெரியாமல் யாரையும் உள்ளே விட மாட்டார்களம்மா."

"நான் விடவைக்கிறேன் அம்மாஜி. உத்தய்யா அவர்களிடம் சொல்கிறேன்."

"உத்தய்யா சம்மதிக்க வேண்டுமே."

"சம்மதிப்பார் அம்மாஜி."

ராணிக்கு தன் மகளின் இந்த நம்பிக்கையைக் கண்டு சிரிப்பு வந்தது அவள், "நாளைக்கு இது உத்தய்யாவுக்கே அபாயத்தில் முடியலாம்" என்ருள்.

"என்ன அபாயம் அம்மாஜி, ராத்திரி அழைத்துக் கொண்டு போய் விட்டுவிடுவது. இது யாருக்கு ஏன் தெரியவேண்டும்?"

ராணி மிகவும் யோசித்தாள். இங்கே தன் மகளின் ஆசை; இங்கே நாத்தனரின் துயரம்; வெளியே வீட்டு மகன் அரண்மனை மீது விஷம் கக்கிக்கொடிருக்கிருன். அரண்மனைக்குக் கேடு வரக்கூடா தென்றே கடவுள் மகளுக்கு இந்த எண்ணத்தைக் கொடுத்தானே, என்னவோ. மீண்டும் மீண்டும் யோசித்து அவள், "சரி, பட்டவ்வா, உனக்குத் தோன்றியபடி செய்; ஒரு தடவை தான்" என்ருள்.

உத்தய்யாவைச் சம்மதிக்கச் செய்வது ராஜகுமாரிக்குக் கஷ்டமாக இருக்கவில்லை.

எட்டு பத்து நாட்களுக்குள்ளாக ஒரு நாள் இரவு சென்ன பசவய்யன் அரண்மனைக்கு வந்தான். மனைவியைக் கண்டு விட்டு காலையில் எழுந்து சென்று விட்டான்.

ஒரு முறை இவ்வாறு செய்து விட்டுப் பேசாமலிருக்க அவனாலும் முடியவில்லை; தேவம்மாஜீயாலும் முடியவில்லை. அரசனின் மகள் அபாயத்திற்கு ஈடாகக் கூடும் என்று தெரிந்தும் இவர்கள் பத்து நாட்கள் விட்டு இன்னொரு முறை, ஒரு மாதம் கழித்து மற்றொரு தடவை சேர்ந்து களித்தார்கள். மூன்று மாதங்கள் கழித்து மறுபடியும் அவர்கள் சந்தித்த போது தேவம்மாஜி கர்ப்பிணியாகி யிருந்தாள். இருவரும் பயந்தார்கள். சென்ன பசவன் வருவதை நிறுத்தி விட்டாள்.

தேவம்மாஜி கர்ப்பமுற்றிருக்கும் செய்தி ஆறு மாதங்கள் வரையில் ராணிக்குத் தெரியவில்லை. பல மாதங்களானாலும் மாப்பிள்ளை மீண்டும் வர முயற்சி செய்யாமலிருந்தது குறித்து அவளுக்கு மனச் சமாதானம். ஆனால் இந்த அமைதி சீக்கிரமே சிதறிவிட்டது. அத்தையுடன் பகடையாடப் போன மகள் திரும்பி வந்து அத்தை கர்ப்பமாகி யிருக்கிறார் என்று தெரிவித்தாள். தீட்சிதர் ராணிக்கு அரசனின் கம்சயோகத்தைப் பற்றி அன்று மத்தியானம் தான் சொல்லியிருந்தார். இரகசிய விஷயம் இவ்வளவு கொடுமையாக உண்மையானது கண்டு அவள் பயந்தாள். சென்ன பசவனை அழைத்து வருவதற்குத் தான் சம்மதித்ததால் என்னென்ன அனர்த்தங்கள் விளையப் போகின்றனவோ என்று அவள் கவலைப்பட்டாள்.

அவள் கவலை மிகவும் நியாயமானதென்பது பதினைந்து நாட்களுக்குள் வெளிப்பட்டது. அரசன் என்றாவது ஒரு நாள் போய் தங்கை தேவம்மாஜியைக் கடுமையாகப் பேசிவிட்டு வருவது உண்டு. இந்த முறை அவன் போனபோது அவள் கர்ப்பிணியாக இருப்பதாக அவனோடு போன பசவன் அவன் காதில் மெதுவாகத் தெரிவித்தான். அரசன் தங்கையைப் பார்த்தான்; நிஜமா என்று கேட்டான். தேவம்மாஜி அவனுக்குப் பதில் சொல்லவில்லை. அரசன் வெகுண்டான்; 'யாருக்கு நீ கர்ப்பமானாய் சொல், இல்லாவிட்டால் புலையர்களிடம் தள்ளுவேன்', என்றான். அப்பொழுதும் அவள் பேசாமலிருக்கவே

அரசன் பசவனிடம், "இவளை உன் தொடை மீது உட்காரவைத்துக் கொள்ளடா, பசவா" என்றான்; பசவனும் அரசனைப் போலவே குடித்திருந்தான். அவனுக்கும் அறிவு சரியான நிலையில் இருக்கவில்லை. அவன் தேவம்மாஜியைப் பிடித்து இழுத்து தன் தொடை மீது உட்காரவைத்துக் கொண்டான். அரசன் மகிழட்டும் என்பதற்காக அவளிடம் இன்னும் ஏதோ சில சேட்டைகள் புரிந்தான். பிறகு இருவரும் திரும்பிச் செல்லும் பொழுது அரசன், "ஏய் பசவா, இவள் யாருக்கு கர்ப்பமானாள் என்பதை விசாரிக்கவேண்டும். இப்பொழுது இந்த அறைக்குப் பூட்டுப் போட்டு வை. நான் சொல்லாமல் யாரையும் உள்ளே விடாதே," என்றான்.

இதற்கு மறுநாள் தான் கதையின் ஆரம்பத்தில் கூறியபடி குமாரியும் ராணியும் சிறைக்கு வந்து தேவம்மாஜியைக் காப்பாற்ற முயற்சி செய்தார்கள்.

4. கதையின் கர்ப்பம்

54

கர்ப்பிணியான தங்கையை அடிக்கும் யோசனையை விட்டு விட்டு மகளுடன் வெளியே வந்த வீரராஜன் வேகமாக நடந்து தன தறைக்குச் சென்றான். தான் நடந்து கொள்ளும் முறை சரியானது தான் என்ற மயக்கத்தில் அவன் இருக்கவில்லை; ஆனால் எந்த விஷயத்தையும் சரிப்படுத்தும் வழியைப் பற்றுவது அவனுக்கு சுலபமாக இருக்கவில்லை. தனதறைக்கு வந்து கொண்டிருந்த பொழுது முக்கியமாக அவன் மனத்தில் நிறைந்திருந்தவை மூன்று விஷயங்கள், தன் மகள் தங்களுக்கு எது நன்மை என்பதை யறியாமல் ராஜத் துரோகியான தனது அத்தை தேவம்மாவின் கட்சியை ஆதரிப்பது. அது போலவே ராணி கௌரம்மாஜி தன் கணவனை எதிர்த்து அந்த நாத்தனாரின் கட்சியில் நின்றிருந்தாள். இதற்கு முக்கியமான காரணம் தீட்சிதர் அரசனின் ஜாதகத்தைப் பார்த்து கம்சதேவகி யோகம் இருப்பதாகச் சொன்னார் என்பது. "அந்தப் பார்ப்பான் தின்று விட்டு சும்மா இருக்கமாட்டான், இவளுக்கு ஏன் இந்த அதிகப் பிரசங்கித்தனம்?"

இவ்வாறு யோசித்து வீரராஜன் சேவகன் ஒருவனை அழைத்து, "டேய் அந்தக் கோவில் ஐயாவை இங்கே வரச் செல்!" என்றான். தான் வழக்கமாக உட்காரு மிடத்திற்குச் சென்று உட்கார்ந்தான்.

தந்தை மேலே என்ன செய்வாரோ என்று யோசித்தபடி ராஜகுமாரி அருகே சிறிது நேரம் உட்கார்ந்து கொண்டாள். இரண்டு நிமிடங்கள் கழித்து அவனது கோபத்தைச் சற்று தணிக்கலாம் என்று நினைத்து, "ஐயர் தாத்தா நாளைக்கு மத்தியானம் அரண்மனையில் புராணம் சொல்லப் போகிறார் அப்பாஜி," என்றாள்.

இது அரசனின் செவிகளில் விழுந்ததாகவே தெரியவில்லை. அவன் மனம் கோபத்தால் கொந்தளித்துக் கொண்டிருந்தது. மகள் தந்தையை நோக்கினாள்; அவன் கவனம் எங்கோ இருப்பதை உணர்ந்து பேசாமலிருந்தாள்.

இன்னும் சிறிது நேரம் அங்கே உட்கார்ந்திருந்துவிட்டு ராஜகுமாரி பிறகு எழுந்திருந்தது ராணி வாசத்தை நோக்கிப் புறப்

பட்டாள். கதவருகில் நின்றிருந்த சேவகனிடம், "ஐயர் தாத்தா அங்கே வந்தால் இங்கே அழைத்துக் கொண்டு வருகிறோம். இங்கே வந்தால் அம்மாஜியவர்களிடம் வந்து தெரிவி" என்றாள்.

அரசன் தன் கோபத்தை அசைபோட்டுக் கொண்டு வெகு நேரம் அப்படியே உட்கார்ந்திருந்தான். அப்பொழுது சேவகன் தீட்சிதர் ராணி வாசத்தை நோக்கிச் செல்வதைக் கண்டான்.

சிறிது நேரத்திற்கெல்லாம் ராஜகுமாரி தந்தையிடம் வந்தாள்; "அப்பாஜி, ஐயர் தாத்தா வந்திருக்கிறார். இங்கே வரச் சொல்லட்டுமா?" என்றாள்.

வீரராஜன் 'உம்' என்றான். அப்பொழுது அவனுக்கு தன் அதிருஷ்டத்தின் மீது இருந்த எல்லாக் கோபமும் தீட்சிதர் மீது திரும்பியது. அதை வாங்கிக்கொள்வதற்கு தீட்சிதர் எதிரே இல்லாததால் யார் எதிரே வந்தாலும் அவர்கள் மீது அது பாய்ந்து கொண்டிருந்தது.

ராஜகுமாரி தானே ராணிவாசத்திற்குச் சென்று தீட்சிதரை அழைத்து வந்தாள். அவர் பின்னாலேயே ராணியும் வந்தாள்.

55

தீட்சிதரைப் பார்த்ததுமே அரசனின் கோபம் தலைக்கேறியது. அவன், "இங்கே வாருங்கள், ஐயரே, உங்களை யாரும் கேட்பவர் பிடிப்பவர் இல்லையா? என்ன சொன்னீர்கள் நீங்கள், கம்சனென்றும் தேவகியென்றும்? பெண்களைப் பயமுறுத்துவது தான் உங்கள் வேலையா? வாய்க்குப் பூட்டுப் போடுங்கள்" என்றான்.

தீட்சிதர் முதலில் திடுக்கிட்டுப்போனார். கம்சனைப் பற்றியும் தேவகியைப் பற்றியும் அவன் சொன்னதனால் தான் ஜோதிடம் சொன்ன விஷயமாகப் பேசுகிறான் என்று புரிந்து கொண்டார். அரசனிடம் வருவதற்கு முன்னால் அவருக்கு ராணி அரசர் அவரை அழைத்திருப்பது தன் தங்கையைப் பற்றிப் பேசுவதற்காக வென்றும், தங்கை கர்ப்பிணியாக விருப்பதையும் தெரிவித்திருந்தாள்.

தீட்சிதருக்கு அரசனின் தங்கையைப் பற்றிய இந்தச் செய்தி ஆச்சரியத்தை அளித்தது. அவர் ஜாதகத்தைப் பார்த்து அரச

னின் யோகம் கம்சனின் யோகமாக இருக்கிறது என்று சொன்ன போது, அரசனின் தங்கைக்குக் குழந்தைகளில்லாமலிருப்பதும், அவள் சிறையிலிருப்பதால் தற்சமயத்திற்கு கர்ப்பம் தரிப்பதற்குச் சந்தர்ப்பம் இல்லாமலிருப்பதும் நல்ல லட்சணங்களாக இருந்தன. தங்கைக்கு மகன் பிறந்தாலல்லவா அது இந்த மாமனைக் கொல்லும்? மகன் பிறக்கும் சந்தர்ப்பம் இல்லை. அதுவே க்ஷேமம். ஆனால் தெய்வ சங்கல்பம் இப்படியா இருக்கிறது! சிறையிலிருந்தும் தங்கை கர்ப்ப முற்றிருக்கிறாள்! கிரகங்கள் தங்கள் கதையை நடத்த நிச்சயித்திருப்பது போலக் காண்கிறது.

தனது சாஸ்திரத்தின் உண்மையைக் கண்டு பெருமைப்பட்டுக் கொண்டிருந்த தீட்சிதரின் மீது அரசனின் பேச்சுக்கள் எச்சில் தெறிப்பதுபோல வந்து விழுந்தன. தீட்சிதர் ஒரு கணம் பொங்கி எழுந்தார்; ஆனால் கோபத்தைத் தன் பிடியில் அடக்கிக் கொண்டார். அரசனைப் பார்த்து, "அரசர் பேசுவது எதைப் பற்றி என்பதை சமாதானமாகச் சொன்னால் பார்த்து பதில் சொல்கிறேன்" என்றார்.

"இன்னென்ன ஐயா சொல்வது? என்னது, கம்சனின் யோகம் தேவகியின் யோகம் என்று சொன்னீர்களாமே, அது என்ன விஷயம்? வரப்போவதை யெல்லாம் வல்லவரே, சொல்லும் கேட்போம்."

தீட்சிதர் ராணியின் பக்கம் திரும்பி, "மன்னருக்குத் தாங்கள் சொன்னீர்களா தாயே?" என்று கேட்டார்.

ராணி: "ஆமாம். ஆனால் நீங்கள் எல்லாவற்றையும் விவரமாகச் சொல்லுங்கள். அரசர் தங்கையை அப்பங்கொளத்துக்கு அனுப்புவதென்று முடிவு செய்திருக்கிறார். அதற்கு நாள் நட்சத்திரம் பார்த்துச் சொல்வதற்காகத்தான் உங்களை வரவழைத்தது" என்றாள்.

அரசனின் அவிவேகத்தை ராணி மறைத்துத் திருத்தினாள். அரசனும் இதை அறிந்து கொண்டான். அவன் ராணியைக் கூர்ந்து ஒரு முறை பார்த்துவிட்டுப் பிறகு தீட்சிதரின் பக்கம் திரும்பினான்.

தீட்சிதர்: நான் எல்லா விஷயங்களையும் சொல்ல முடியும். ஆனால் இப்பொழுதே சொல்லவேண்டுமா, இல்லாவிட்டால் பிறகு வரட்டுமா, யோசனை செய்யவேண்டு மென்று கேட்டுக்

கொள்கிறேன். என் பேச்சைக் கேட்டுக் கோபம் கொள்ளக் கூடாது. கோபப்படுவதானால் என்னை ஏதும் கேட்கக்கூடாது. மனம் அமைதியோடு இருக்கும்போது அரசர் எதைக் கேட்டாலும் எனக்குத் தெரிந்த வரையில் இருக்கிற சங்கதியை எடுத்துச் சொல்லுகிறேன்.

இந்த சாந்தமான வார்த்தைகள் அரசனின் கோபத்தை அதிகரித்தனவே ஒழிய வேறொன்றும் பயன்தரவில்லை. முதலில் இருந்த அதே கடுமையான குரலில், "சொம்பத்தான் பூசி மெழுக வேண்டாம். யோகததைப் பற்றிய விஷயம் என்ன அது? நாளைக்கு சொல்வதை இன்றே சொல்லுங்கள், கேட்போம்; சொல்லிவிட்டுத் தொலையுங்கள்" என்றான்.

தீட்சிதர் சொன்னார்: என் பேச்சு ருசிக்கவில்லை யென்று மன்னர் கோபம் கொள்ளக்கூடாது. நமது பெரியவர்களிடமிருந்து கற்ற சாஸ்திரம் எதைக் காட்டுகிறதோ அதைச் சொல்லுகிறேன். மன்னரின் இப்போதைய யோகம் நம்மிடம் எழுதி வைக்கப்பட்டிருக்கும் ஒரு யோகத்தின் தத்ரூபமாக உள்ளது. அதன்படி சகோதரன் சகோதரிக்கும் அவளுடைய குழந்தைகளுக்கும் கஷ்டம் விளைவிக்கிறான் என்பது இப்பொழுதைய சூசனை. பெரியவர்கள் இதைச் சொல்லியிருக்கிறார்கள். சூசனை என்று தெரிந்து கொள்வதன் பயன், அந்த சந்தர்ப்பத்திலிருந்து தப்பித்துக் கொள்ளவேண்டிய முயற்சிகளைச் செய்யவேண்டும் என்பதுதான். இப்போது மன்னர் தமது தங்கையைக் கணவரிடமிருந்து பிரித்து அரண்மனையில் வைத்துக் கொண்டிருக்கிறீர்கள். கிரக நிலை எச்சரிக்கிறது. தங்கையை மாப்பிள்ளையிடம் அனுப்பிவிடவேண்டும். இந்த யோகத்தை நான் முதலில் பார்த்தபோது தங்கையவர்கள் கர்ப்பிணியாக இருந்தது தெரியாது. இதிலிருந்தே தெரிந்து கொள்ளலாம். கிரகங்களின் சூசனையில் உண்மை இருக்கிறதென்பதை. தங்கையவர்களை அப்பங்கொளத்திற்கு அனுப்பிவிட்டு பிரசவமான பிறகு ஒரு வருட காலம் மன்னர் அந்தப் பக்கம் போகாமலிருக்கவேண்டும். தங்கையோ அவர் குழந்தையோ இங்கே வராதபடி பார்த்துக் கொள்ளவேண்டும். இடையே நம்மை மீறி ஏதும் அனர்த்தம் நடக்காமலிருக்கும்படி ஆண்டவனிடம் பிரார்த்தித்தபடி இருக்க வேண்டும். ஒரு வருடம் அபாயம் நேராமல் காத்துக்கொண்டு விட்டால் பிறகு பயமில்லை.

அரசன்: எனக்கு எப்பொழுதுமே பயமில்லை. நீங்கள் பய முறுத்துவதற்கெல்லாம் பயந்துவிட நான் புடவை உடுத்திக் கொண்டிருக்கவில்லை. உங்களுக்கும் உங்கள் கிரகங்களுக்கும் நான் சொல்லுகிறேன்: நீங்கள் எதை வேண்டுமானாலும் குறிப் பிடுங்கள், நான் அதைப்போல நடக்கப் போவதில்லை. உங்கள் சாஸ்திரத்தைப் பொய்யாக்குகிறேன், பாருங்கள். என் தங்கை அரண்மனையிலேயே தான் இருக்கப் போகிறாள்.

தீட்சிதர்: அரசரின் சித்தம். அவருக்கு எது சரி என்று தோன்றுகிறதோ அப்படிச் செய்யலாம்.

ராஜகுமாரி தந்தையின் அருகே சென்று அவளது மோவாயைப் பிடித்துக் கொண்டு, "அப்பாஜி, அத்தை இங்கே இருந்தால் சாப் பிடுவதே இல்லை. அவரை அவர்கள் அரண்மனைக்கு அனுப்பி விடுங்கள்," என்றாள்.

அரசன், "ஏய், பைத்தியக்காரப் பெண்ணே, உன்னை வாழ வைப்பதற்காக அவள் என் தங்கையாக இல்லை. நீ ஏன் அவளைக் காப்பாற்றப் பார்க்கிறாய்?" என்றான்.

ராணி, "தங்கையம்மாஜி அரண்மனையிலேயே இருந்தாலும் ஏதும் தவறில்லை. நாமே பிள்ளைப்பேறும் பார்த்துக் கொள்ள லாம்; தாயையும் குழந்தையையும் பிறகு சுகமாக அவர்கள் இல்லத்திற்கு அனுப்பலாம். இருந்தாலும் மாப்பிள்ளைக்கு இது சரிப்படாது. இப்பொழுது அனுப்பிவிட்டால் அவருக்கும் சந்தோ ஷம். தங்கைக்கும் சந்தோஷம். ஊரிலும் நல்ல பெயர். சாஸ் திரத்தையும் நடத்தின மாதிரி இருக்கும். புட்டம்மாஜி வேண்டு மென்கிறபோது போய்ப் பார்த்துக் கொண்டு வருவாள். இப் போது அனுப்பிவிடுவது நல்லது என்று தோன்றுகிறது," என்றாள்.

ராஜகுமாரி தந்தையின் கழுத்தைத் தன் கைகளால் கட்டிக் கொண்டு அவன் கன்னத்தோடு தன் கன்னத்தைப் பதிய வைத்து, "ஆமாம் அப்பாஜி, அனுப்பிவிடுங்கள்" என்றாள்.

எதற்கும் பணியாத வீரராஜன் தனது மகளின் இந்த அன் பிற்கு மயங்கிப் பணிந்தான். "சரி அப்படியானால், போ, அனுப்பி விடு போ. இன்றைக்கே தொலையட்டும். ஐயரே ஜெயித்த தாக இருக்கட்டும். பூஜை, பூஜை என்கிறான். பொன்னும், தானியமும், மணியும் எது வேண்டுமோ கொடுத்தனுப்புங்கள்" என்றான்.

தீட்சிதரைப் பற்றிய இந்த கேலிப் பேச்சுக்கு அவர் ஏதாவது பதில் சொல்வாரோ என்று ராணி பயந்தாள். தீட்சிதர் ஒன்றும் சொல்லவில்லை. எழுந்திருந்து, "ஸ்வஸ்த்யஸ்து, உத்தரவானால் நான் புறப்படுகிறேன்," என்றார்.

அரசன் அவருக்குப் பதிலும் சொல்லவில்லை; அவர் பக்கம் கண்ணெடுத்துப் பார்க்கவும் இல்லை

ராஜகுமாரி இதற்குள்ளாக வெளியே சென்றுவிட்டாள்; இரண்டு நிமிடங்களில் பசவனை அழைத்துக் கொண்டு திரும்பி வந்தாள். அரசனைப் பார்த்து, "அப்பாஜி, பசவய்யாவிடம் சொல்லுங்கள்" என்றாள்.

அரசன் பசவனிடம், "தேவம்மாவை அப்பங்கொளத்துக்கு அனுப்பித் தொலைத்துவிடடா, நொண்டி. அப்படியே யாரவன் இந்த ஊர் காவல் படைத் தலைவன், அந்த சென்ன பசவனை உள்ளே விட்டவன், அந்த தாசி மகனை இழுத்து வா. எப்படி அவனை உள்ளே விட்டான் என்று கேட்போம். சவுக்கடி கொடுப்போம்," என்றான்.

அரசனின் இந்த உத்தரவைக் கேட்டு ராஜகுமாரி திடுக்கிட்டு, தாயின் முகத்தைப் பார்த்தாள். ராணி அதைக் கண்டு கொள்ளாமல், தீட்சிதரைப் பார்த்து, "வாருங்கள் ஐயா, பூஜைக்கு வேண்டிய சாமான்களெல்லாம் கொடுக்கிறோம்," என்று கூறி ராணி வாசத்தை நோக்கி நடந்தாள். தீட்சிதரும் அரசனுக்கு வணக்கம் தெரிவித்துவிட்டு அவள் பின்னால் சென்றார்.

உள்ளே போகும்போது ராணி, தலையை ஆட்டி மகளைத் தன்னோடு வரும்படி அழைத்தாள். ராஜகுமாரி தாயின் பின்னால் சென்றாள்.

56

வீரராஜன் தங்கையைச் சிறையிலிருந்து விடுவிக்கச் சம்மதித்தது குறித்து ராணிக்கு எவ்வளவு மகிழ்ச்சியோ அவ்வளவே ஆச்சரியமும் கூட; மகிழ்ச்சியை விட ஆச்சரியமே அதிகம். அவளுக்கு அப்பொழுதிருந்ததெல்லாம் ஒரே கவலை தான்; வேறு ஏதாவது காரணம் காட்டி வீரராஜன் தனது உத்தரவை மாற்று

வதற்கு முன் தேவம்மாஜிமை அப்பங்கொளத்துக்கு அனுப்பி விடவேண்டும்.

ராணிவாசத்தின் கூடத்தை அடைந்ததுமே ராணி தீட்சிதரை ஓர் ஆசனத்தில் உட்காரச் செய்து, "தங்கை பிறந்த வீட்டை விட்டுப் புறப்படுவதற்கு இன்றைக்கு நாள் நன்ருக இருக்கிற தல்லவா ஐயா?" என்று கேட்டாள்.

தீட்சிதர், "அதைப் பார்க்கவேண்டாம், நல்லது ஏற்படுகிற வேளையில் வேறு பரீட்சைகள் எதுவும் தேவையில்லை, இன்னெரு நாழிகைக்குள்ளாக இந்த சுபமான பிரயாணத்தை அவர் தொடங் கட்டும்; கடவுள் காப்பாற்றட்டும்" என்ருர். ராணி மகளிடம், "புட்டம்மாஜி, அத்தையிடம் போய் இப்பொழுதே ஊருக்குப் புறப்படவேண்டுமாம், அப்பாஜி சொன்னுர், என்று தெரிவித்து அவரை இங்கே அழைத்து வரவேண்டுமே. நான் இங்கே அவருக் குக் கொடுக்கவேண்டிய சீர் எல்லாம் தயார் செய்து வைக்கி றேன். எங்கே, சீக்கிரம்" என்ருள். ராஜகுமாரி உடனே அத்தை யிடம் புறப்பட்டாள்.

நாத்தனுர் வருவதற்கு முன்னர் எல்லாவற்றையும் தயார் செய்து வைப்பதற்காக ராணி மூன்று பணிப் பெண்களை ஒருவர் பின் ஒருவராக அழைத்தாள். ஒருவளிடம், "நீ சம்பந்தப்பட்ட அரண்மனைச் சிப்பந்தியிடம் சென்று வாசலில் ஒரு பல்லக்கு தயாராக இருக்கவேண்டுமென்று சொல். இரண்டு போயிகள் அதிகமாகவே இருக்கட்டும். கூட துப்பாக்கி வீரர்கள் இரண்டு பேர் இருக்கட்டும், எல்லாம் தயார் செய்துவிட்டு, இங்கே வந்து தெரிவிக்கவேண்டும் என்று சொல்." என்ருள். மற்ருெருத்தியை அழைத்து, "சமையல் சாலைக்குப் போய்ச் சொல், அவ்வாஜி இப் பொழுது இங்கே வருவார், கொஞ்சம் பால், பழம், தின்பண்டங் கள் தட்டில் வைத்துக்கொண்டு வரவேண்டும் என்று" என்ருள். மூன்ருவது பணிப் பெண்ணிடம், "இரண்டு தாம்பாளங்களில் வெற்றிலை, பாக்கு புஷ்பம், சந்தனம், அட்சதை இவைகளைத் தயார் செய் சீக்கிரம்" என்ருள். நாதினிக்குச் சீர் கொடுப்பதற் காக துணிமணிகள் கொண்டுவர தானே தான் போகவேண்டும். தீட்சிதரிடம், "சிறிது இங்கேயே இருங்கள் ஐயா, வீட்டுப் பெண் மகளை ஆசீர்வதித்து விட்டுப் போவீர்களாம்" என்று கூறி உள் அறைக்குச் சென்ருள்.

நினைத்த அளவு வேகமாக வேலை செய்யும் பொருட்டு ராணி இரண்டு வளையல்கள், இரண்டு புடவை, இரண்டு ரவிக்கை

இவைகளை எடுத்துக்கொண்டு திரும்பி வந்தாள்; அவைகளை ஒரு புறம் வைத்துவிட்டு தீட்சிதரிடம், "உங்களிடம் ஒரு விஷயம் சொல்லவேண்டும் ஐயா," என்றாள்.

தீட்சிதர், "சொல்லுங்கள் அம்மாஜி, உபசார வார்த்தைகளே வேண்டாம்" என்றார்.

ராணி, "அரசர் கோபத்தால் உங்களை அலட்சியமாகப் பேசி விட்டார். அதற்காக வருத்தப்படாதீர்கள். அவர் பேசியவைகளை மறந்து விடுங்கள்."

"அம்மாஜி, இது பற்றி நீங்கள் கவலையே படவேண்டாம். அரசர் எனக்குப் புதியவரா? எனக்கும் அவருக்கும் சமமாகுமா? உங்கள் மாமனாரே எனக்குச் சிறியவர். அவர் மகனை நான் சீரஞ்சீவி என்று நினைப்பதைத் தவிர வேறு எவ்வாறு நினைக்க முடியும்?"

"நாங்கள் கைபிடித்தவள், உடன் பிறந்தவள், வயிற்றில் உதித்தவள்; பொறுத்துக்கொள்கிறோம். மற்றவர்கள் மனம் வருந்தத் தானே செய்யும்? நீங்கள் அரசரை மன்னித்தால் மாத்திரம் போதாது. அவர் அப்படிப் பேசியதனால் அவருக்குக் கெடுதல் உண்டாகாதபடி செய்யவேண்டும்."

"அதைக் கடவுள் அருள் புரியட்டும், தாயே. நீங்களும் பிரார்த்தனை செய்யுங்கள். ஒரு கணம் எனக்குத் திடுக்கிட்டாற்போல இருந்தது. உடனே கடவுளை நினைத்துக்கொண்டேன். 'ஓங்காரா நீ காப்பாற்று; என்னைப் பரீட்சிக்காதே' என்று மனத்திலேயே ஆண்டவனின் அடிபணிந்தேன். உடனே என் அறிவு ஸ்திரமாயிற்று."

"நீங்கள் புண்யாத்மா ஐயா."

"பெரியவர்களின் அநுக்ரகம், அம்மாஜி, கூடவே, உங்கள் வம்சம் என்னைக் காப்பாற்றி வந்திருக்கிறது என்பதையும் நினைத்துக்கொள்கிறேன். மூன்று தலைமுறைகளாக இந்த அரண்மனை எங்கள் குடும்பத்தைக் காப்பாற்றி வந்திருக்கிறது. அறுபது வருடங்களாகச் செய்த உபகாரம் எங்கே போகும் அம்மா? இலை நிறைய சோறுண்டவனுக்கு அதில் ஒரு கல் இருந்தால் என்ன கெட்டுப்போயிற்று? இலைச் சோறு உண்ணவில்லையா? அதை மறக்க முடியுமா? அரசர் மீது கோபித்துக்கொண்டால் எனக்கு நல்லதாகுமா? ஐயாவுக்கு அப்படி புத்தி போகவேண்டாமென்று நீங்களும் ஆண்டவனை வேண்டிக்கொள்ளுங்கள்."

தீட்சிதரின் இந்தச் சமாதானமான பேச்சினால் ராணியின் மனக் கவலை மறைந்தது.

இச் சமயத்தில் வாசலில் இருந்த பணிப்பெண் வந்து பல்லக்கு வந்திருக்கிறது என்று தெரிவித்தாள். ஒரு நிமிடத்திற்குள்ளாக ராஜகுமாரி, தேவம்மாஜி, பின்னால் பசவன், வந்தார்கள். பசவன் ராணிக்குக் கைகூப்பி, "பல்லக்கை வரவழைக்கட்டுமா அவ்வாஜி" என்று கேட்டான்.

ராணி, "சொல்லியிருக்கிறேன் பசவய்யா. அம்மாஜியவர்களை எல்லோரும் சேர்ந்து வழியனுப்புவோம். ஆட்கள் வாசலில் இருக்கட்டும். பார்த்துக்கொள்" என்றாள்.

பசவன் கதவருகில் சென்றான். மறுபடியும் அவர்கள் பக்கம் திரும்பி, "அம்மாஜியவர்கள் மனத்தில் என்மீது கோபம் வைத்துக் கொள்ளக்கூடாது," என்றான். ராஜகுமாரி 'பக்'கென்று சிரித்து விட்டாள். ராணி, தேவம்மாஜி இவர்களின் முகங்களிலும் சிறு நகை அரும்பியது. தீட்சிதரும் லேசாகச் சிரித்துக்கொண்டார். பசவன் பதிலேதும் எதிர்பார்க்காமல் வெளியே நடந்தான்.

சமையலறை ஆட்கள் கொண்டு வந்த பழம், பால் முதலியவைகளை ராணி தேவம்மாஜீக்குக் கொடுத்து விட்டு, விபூதி குங்குமம் அவள் நெற்றியில் இட்டு, பூ முடித்து, கைகளில் வளையல்களை அணிவித்து சீர் வரிசைகளை ஒப்புவித்து, "இனி நீங்கள் ஊருக்குப் புறப்படுங்கள், கடவுள் உங்களைக் காப்பாற்றட்டும்; உங்கள் அண்ணனின் வம்சத்தைக் காக்குமபடி ஆண்டவனை வேண்டிக் கொள்ளுங்கள்; போவதற்கு முன்னால் ஐயாவுக்கு நமஸ்கரித்து ஆசீர்வாதம் பெற்றுக்கொள்ளுங்கள்" என்றாள்.

தேவம்மாஜியால் பேச முடியவில்லை அவள் எண்ணியிருக்காத சௌபாக்கியம் இன்று அவள் மீது மழையாகச் சொரிந்து கொண்டிருந்தது. நீர் நிறைந்த கண்களோடு சீர் வரிசைகளை மடியில் வைத்துக்கொண்டு தீட்சிதரை நமஸ்கரித்தாள்; ஒரு வார்த்தையும் பேசாமல் அண்ணியின் மார்பில் முகத்தைப் பதித்துக் கொண்டு விம்மினாள்; ராஜகுமாரியை இழுத்தணைத்துக்கொண்டு உச்சி முகந்து முத்தமழை பொழிந்தாள்; தெய்வமே, நீயே காப்பாற்றினாய் என்று மனத்தில் நினைத்துக்கொண்டு அரண்மனையிலிருந்து புறப்பட்டாள்; தீட்சிதர் நான்கு அட்சதையை எடுத்துக்கொண்டு அவள் பின்னே சென்றார். 'ஸ்வஸ்த்யஸ்து' என்று கூறி அதை அவள் புறப்படும்போது அவள் தலை மீது போட்டார்.

அரசனின் தங்கையை ஏற்றிக்கொண்டு பல்லக்கு அப்பங் கொளத்தை நோக்கிப் புறப்பட்டது. வருடக்கணக்காக அரண் மனையில் சூழ்ந்திருந்த இருள் இன்று அகன்றது என்று ராணி முதல் தூசி துடைக்கும் ஆள் வரையில் எல்லோரும் சந்தோஷப் பட்டனர்.

57

நிரித்தனுரைக் காப்பாற்றியாகி விட்டது. இப்பொழுது ராணிக்கு அதே அளவு கஷ்டமான மற்றொரு காரியம் பாக்கியிருந்தது தங்கள் பேச்சைக் கேட்டு அதன்படி நடந்து கொண்டு தன்னை அபாயத்தில் ஈடுபடுத்திக் கொண்டுள்ள உத்தய்யனைக் காப் பாற்ற வேண்டும். இந்த மாதிரி அபாயம் வருபென்று அவள் முன்னமேயே எதிர்பார்த்திருந்தாள். ஆனால் அப்பொழுது அவளுக்கு இப்பேதைய நிலைமை ஏற்படுத்தியுள்ள பயம் ஏற்பட வில்லை. அரசனின் மனம் இப்பொழுது இருக்கும் நிலைமையில் உத்தய்யனை என்ன செய்தாலும் செய்து விடுவான். அவன் கதி என்ன? தன் மகளின் கதி என்ன? போபண்ணா என்ன சொல் வார்? நாட்டின் நன்மை என்னவாகும்? அபாயத்தை நினைக்க நினைக்க ராணியின் கலவரம் அதிகமாயிற்று. எப்படியாவது அரசன் இந்த விஷயத்தை மறந்துவிட்டு உத்தயனை அழைக்கா மலே இருந்துவிடக் கூடாதா என்று அவள் விரும்பினாள். எப்படி யாவது என்ன, சிறிது அதிகமாகவே குடித்து விட்டு இதை மறந்து விடட்டும் என்றே அவள் உள்மனம் விரும்பியது. அரசன் குடித் துக் கெட்டுப் போகிறானே என்று சாதாரணமாகத் துயரப்படக் கூடிய ராணி இப்போது அவன் சிறிது அதிகமாகவே குடித்து தன்னையே மறந்து விட்டால் நல்லது என்று நினைத்தாள்.

ஆனால் அவள் விருப்பம் நிறைவேறவில்லை. குடிப்பதைப் போலவே பழி வாங்குவதிலும் அரசனுக்கு சிரத்தை அதிகம். அன்று மாலை அவன் குடிக்கத்தான் செய்தான். ஆனாலும், "எங் கேடா அந்த உத்தன்!" என்று பசவனை நான்கு முறை கேட்டு விட்டான்.

உத்தய்யனுக்கு அரண்மனைக் காவலோடு ஊர்காவல் பொறுப் பும் உண்டு. அவன் அன்று மத்தியான்னம் ஊர்க்காவல் விஷய

மாக எங்கோ சென்றிருந்தான். அரண்மனைக்கு இரவுக் காவலுக்குத்தான் வரமுடிந்தது.

அரண்மனையின் தலைவாசலில் வரும்போதே காவலாளி, "மன்னர் மத்தியான்னம் தமக்குச் சொல்லியனுப்பியிருந்தார்" என்றான். எதற்காக இருக்குமென்று அவன் யோசித்துக் கொண்டிருந்த போதே அவனைத் தேடிக்கொண்டு சென்றிருந்த ஆள் அவன் பின்னாலேயே வந்து சேர்ந்தான்; அரசர் அழைத்த காரணத்தை அந்த ஆள் தெரிவித்தான். அத்தோடு அரசரின் தங்கையை அன்று மாலை அப்பங் கொளத்துக்கு அனுப்பிவிட்ட செய்தியையும் தெரிவித்தான். உத்தய்யனுக்கு ஒரே யோசனை, அரசன் வாய்க்கு வந்ததைப் பேசுவான். தான் கோபிததுக் கொண்டு அவனுக்குப் பதில் சொன்னால் அவிவேகமாகிவிடும். எது எப்படியானாலும் தான் சென்னபசவய்யனை உள்ளே விட்டதற்குப் பொறுப்பு ராஜகுமாரியுடையது என்பதை மாத்திரம் வெளிவிடக் கூடாது. இதை மனத்தில் உறுதிப்படுத்திக் கொண்டு அவன் அரசன் இருந்த இடத்திற்கு வந்தான். வாயில் காப்போன், "சிறிது இருங்கள்" என்று கூறிவிட்டு அவன் வந்திருக்கும் செய்தியை பசவனுக்குத் தெரிவிக்க தன் கூட்டாளியான இன்னொரு சேவகனை அனுப்பினான். இரண்டு நிமிடங்களில் பசவன் வந்தான்; அரசனின் அறைக்குள் சென்று அவன் தூங்குவதைப் போல இருந்ததால் நிசப்தமாக வெளியே வந்துவிட்டான். ஆனால் அரசன் உடனே விழித்தெழுந்து, "யாருடா அது, நொண்டியா? உத்தனை இன்னுமா அழைத்து வரவில்லை? ஏன் இவ்வளவு நேரம்?" என்று கூச்சல் போட்டான்.

"படைத்தலைவர் வந்திருக்கிறார் அரசே."

"இங்கே வரச்சொல் அந்த வேசியின் மகனை."

பசவன் வாசலுக்குத் திரும்பி வந்து, "அரசர் மிகவும் கோபமாக இருக்கிறார். எதாவது வேலை யிருப்பதாகச் சொல்லிப் போவதானால் போய்விடுங்கள். என்னைத் தான் திட்டுவார். திட்டு வாங்கிக் கொள்கிறேன். என்ன சொல்கிறீர்?" என்று கேட்டான்.

உத்தய்யனுக்கு அது பிடிக்கவில்லை. முதலாவது தான் போபண்ணாவின் உறவினன் என்ற காரணத்தால் பசவனுக்குத் தன் மீது துவேஷம் உண்டு என்பது அவன் எண்ணம். அது உண்மையும் கூட. வேறு சந்தர்ப்பமாக இருந்தால் பசவன்

போபண்ணுவுடைய இந்த உறவினனுக்குச் சிறிது அவமான மாகும்படி ஏதாவது செய்யப் பின்வாங்கமாட்டான். ஆனால், இப் போது போபண்ணுவை அவமானப்படுத்துவதனால் அரசனின் பகைவர்களுக்கு பலம் கூட்டியது போலாகும் என்ற பயம் அவ னுக்கு உண்டு. உத்தய்யனுக்கு அது தெரியாது. அவன் பசவன் தனக்கு எச்சரிக்கை செய்வது தன்னுடைய கெடுதலை உத்தே சித்து என்று எண்ணினான். மேலும் தைரியத்தோடு கூடவே சகஜமாகக் கலந்திருக்கும் எதிர்ப்பு மனோபாவம் அவனுடைய சுபாவத்திலும் கலந்திருந்தது. எங்கேயாவது அபாயம் இருக் கிறது என்றால் "எப்படிப்பட்ட அபாயம்? கொஞ்சம் பார்ப் போமே," என்பது அவனுடைய முதல் எண்ணமாக இருக்கும். பசவனின் சூசனையைக் கேட்டு ஒரு நிமிடம் யோசித்துவிட்டு, "என்ன கேட்கவேண்டுமோ கேட்டு முடிக்கட்டும். நடங்கள் உள்ளே" என்றான். பசவன் அவனை உள்ளே அழைத்துக் கொண்டு போய் வாசலின் ஒருபுறம் நிறுத்தி வைத்துவிட்டு தான் மற்றொருபுறம் நின்று கொண்டு, "உத்தய்யா வந்திருக் கிறார் அரசே" என்றான்.

58

அந்த சமயத்தில் கௌரம்மாஜி, ராஜகுமாரி இருவரும் ராணி வாசத்திலிருந்து வந்து அரசரின் அறைக்கு வெளியே ஒருபுற மாக ஒதுங்கி நின்றார்கள். அரசன் பார்வையில் படும்படியாக இருக்கவில்லை. பசவன் அந்த திசையில் பார்த்த பார்வையி லிருந்து அங்கே யாரோ இருக்கவேண்டுமென்று நினைத்து திரும் பிப் பார்த்தான். ராணியும் ராஜகுமாரியும் நின்றிருப்பது எதிர்ப் புறம் இருந்த கண்ணாடியில் தெரிந்துகொண்டிருந்தது. தான் என்ன செய்யவேண்டுமென்று தீர்மானித்திருந்தானோ அத் தீர்மானம் அவர்களின் முகத்தில் காணப்பட்ட கவலையைக் கண்டதும் இன்னும் உறுதியாயிற்று.

பசவனின் பேச்சைக் கேட்ட அரசன், "யாருடா அது? உத்தய் யன் வந்திருக்கிறாயாடா?" என்றான். உத்தய்யன், "ஆமாம் அரசே" என்றான்.

"டேய் உத்தா, அரண்மனைக் காவலுக்காக உன்னைப் படைத் தலைவனாக நிறுத்தினால் சென்னபசவனை ஏன் உள்ளே விட்டாய்?" என்று கத்தினான்.

உத்தய்யன் பதில் சொல்லவில்லை.

அரசன், "ஏண்டா, வேசி மகனே, கேட்டதற்குப் பதிலில்லை?" என்றான்.

உத்தய்யன், "மகனே கிகனே என்றால் நான் கேட்டுக் கொள்ள மாட்டேன் அரசே, தவறு செய்திருந்தால் விசாரியுங்கள். தக்க தண்டனையை அளியுங்கள். ஆனால் நான் வேசி மகனல்ல" என்றான்.

"தண்டிக்கிறேன், விட்டுவிடப் போகிறேன் என்று நினைத் தாயா? தண்டிக்கிறேன் சொல். ஏன் விட்டாய்?"

"விட்டது உண்மை அரசே. ஏன் என்று கேட்காதீர்கள் தண்டனை அளியுங்கள். ஏற்றுக்கொள்கிறேன்."

"ஏற்றுக் கொள்கிறாயா? முட்டாளே. இத்தோடு நீ முடிந்தே போனாய். உன் தலையைச் சீவப் போகிறேன். இல்லாவிட்டால் கழுவிலேற்றப் போகிறேன்."

ராணிக்கு, இனி அந்த இளைஞனை அவ்வாறே நாதியற்றவனாக விட்டுவிடக்கூடாது என்று தோன்றியது. ஆனால் தான் இதில் எப்படிப் பிரவேசிக்க முடியும் என்று அவள் யோசித்துக் கொண் டிருந்தாள். ராஜகுமாரி என்ன நினைத்தாளோ, தாயாருக்குக் கூடத் தெரியாமல் சட்டென்று அறைக்குள் பாய்ந்து சென்று மண்டியிட்டு உட்கார்ந்து கொண்டு அவன் கழுத்தைக் கட்டிக் கொண்டு, "அப்பாஜி, நீங்கள் உத்தய்யனை ஒன்றும் செய்யா தீர்கள். அத்திம்பேரைக் கள்ளத்தனமாக உள்ளே வரவழைத்த வள் நான் தான். அத்தை அழுதுகொண்டே இருந்ததை என் னால் பார்த்துச் சகிக்க முடியவில்லை. தவறு எதுவாக இருந் தாலும் என்னுடையதுதான்."

"போ அந்தண்டை புட்டவ்வா. நீ ஏன் இங்கே வந்தாய்? நீ திருட்டுத்தனமாக வர வழைத்தாய். இவன் ஏன் அதற்கு இடங் கொடுத்தான்? உன் அழகில் மயங்கிவிட்டானா?"

"ஆமாம் அப்பாஜி, அரசரின் மகள் சொல்கிறாள். அரசரென்ன, மகளென்ன, என்று என் முகத்தைக் கண்டு தான் அவர் அறு மதித்தார்."

அப்பொழுது ராணியும் உள்ளே வந்தாள். மகளை அழைத்து "இங்கே வா புட்டவ்வா. அப்பாஜியைத் தொந்தரவு செய்யாதே, படைத்தலைவரின் தவறென்ன? ராணியும் ராஜகுமாரியும் அரசரின் தங்கையின் துயரத்தைக் காணச் சகிக்காமல் மாப்பிள்ளையை உள்ளே வரவிட்டார்கள். காவல் தலைவர் அரசரிடம் கோள் சொல்ல முடியுமா?" என்றாள்.

ராணி இன்னும் ஏதாவது சொல்லியிருப்பாளோ என்னவோ அதற்குள் அரசன் வெகுண்டெழுந்தான். "ஓஹோ, நீயும் வந்து விட்டாயா குடகின் ராணி! உன் போபண்ணாவின் மருமகனைக் காப்பாற்றுவதற்கு? போ அப்பால், என்ன புட்டவ்வா? நான் எது செய்யப்போனாலும் நீ வந்து காலைக் கட்டிக்கொள்கிறாயே? அப்படியானால் இனிமேல் நான் எது செய்யவேண்டுமென்றாலும் உன்னைக் கேட்டுக்கொண்டுதான் செய்யவேண்டும் போலிருக்கிறது?" என்றான்.

ராஜகுமாரி, "இந்த ஒரு முறை என் பேச்சைக் கேட்டு விடுங்கள் அப்பாஜி, இனிமேல் நான் உங்களைத் தொந்தரவு செய்யமாட்டேன்," என்றாள்.

அரசன், "இவன் முகத்தைப் பார்த்து மயங்கி விட்டாயா மகளே? இவனையே கல்யாணம் செய்து கொள்ளப்போகிறேன் என்று நாளைக்குச் சொல்வாயா என்ன?" என்று கேட்டான்.

ராஜகுமாரி, "அவருக்குச் சம்மதமா என்று கேளுங்கள் அப்பாஜி" என்றாள்.

அரசனுக்கு மனத்தில் எந்த மூலையில் அது என்ன தோன்றியதோ; அவன், "ஆம் என் கண்ணே, நான் உனக்குத் தக்க ஒரு கணவனைத் தேடிக்கொண்டு வந்திருக்கவேண்டும். நான் நல்லவனாக இருந்திருந்தால் அப்படிச் செய்திருப்பேன். இவன் என்ன பெரிய மன்மதன்? நீ சம்மதிப்பாயானால் எப்படிப்பட்ட மாப்பிள்ளை கிடைக்கமாட்டான்?" என்று கூறி, உத்தய்யனைப் பார்த்து, "டேய் உத்தா, அரண்மனையைக் காவல்காக்கச் சொன்னால் காதல் விளையாட்டு விளையாடுகிறாயா? தொலைந்துபோ இங்கிருந்து. அறியாப் பெண்ணை அபகரிக்கப் பார்க்கிறாயா, மன்மத புருஷன்! போ கண் மறைவாக. மறுபடியும் இந்தப் பக்கம் கண்ணைச் சுழட்டினாயோ ஜாக்கிரதை!" என்று கூறி விட்டு, பசவனைப் பார்த்து, "டேய் பசவா, இந்த வேசி மகன் போபண்ணாவின் மருமகன் என்பதனால் பெரிய மனிதனாக நினைத்துக்கொண்டு விட்டான் போலிருக்கிறது. போபண்ணாவிடம்

சொல், இவனை நகர எல்லைக் காவலுக்குப் போடச் சொல். இந்த முறை மன்னித்திருக்கிறேன் சவுக்கடி இல்லாமல், தலையைச் சீவாமல். எல்லோரும் போங்கள் வெளியே. அப்பப்பா! என் தலை வெடித்து விடும் போலிருக்கிறது. டேய் பசவா, கொஞ்சம் தண்ணீர் கொண்டு வாடா பொட்டி மகனே'' என்று முனகிக் கொண்டே பேச்சை முடித்தான்.

வீரராஜன் மிகவும் களைத்துப் போய்விட்டான். சென்ற வருடம் கோப வெறியில் பிரக்ஞை இழந்த அன்றிலிருந்து அவனுக்கு உணர்ச்சி மிகுதியின் பொழுதெல்லாம் இவ்வாறு களைப்பேற்படுவது போலிருந்தது. எங்கே நினைவிழந்து விடு வோமோ என்று பயந்து அவன் அத்தோடு நிறுத்திக்கொள்வான். அவன் வேறொன்றும் பேசுவதாக இல்லை என்பதை அறிந்து கொண்ட ராணி உத்தயயனை போகும்படி சைகை காட்டினாள். அவன் ராணியையும் ராஜகுமாரியையும ஒரு முறை பார்த்து விட்டு வெளியே புறப்பட்டான். பசவனும் அவன் பின்னால் வெளியே சென்றான். சில நிமிடங்களில் அவன் ஒரு பஞ்சபாத் திரத்தில் நிறைய தண்ணீர் கொண்டுவந்தான். ராணி அதை வாங்கி அரசனிடம் பிடித்துக்கொண்டு, ''இந்தாருங்கள், தண் ணீர்'' என்றாள். அரசன் அதை வாங்கிக்கொண்டான். அவ் வளவு நீரையும் பருகினான் பிறகு கேலிக் குரலில், "குடகு ராணி, மகளை யாருக்கோ கட்டிக் கொடுத்துவிடாதீர்கள். சரியான மாப் பிள்ளையாகப் பார்த்து கல்யாணம் செய்து வையுங்கள்," என்றான். கண்களைத் திறந்து பார்த்து அருகில் இருந்த மகளின் தலைமயிரைக் கோதிவிட்டான்; மறுபடியும் கண்களை மூடித் தூக் கத்திலாழ்ந்து விட்டான்.

மலைபோல வந்த பயம் பனிபோல விலகி விட்டதென்று ராணி ஓங்காரேஸ்வரனை நினைத்துக்கொண்டாள். மகளைத் தொட்டு எழுப்பி ராணி வாசத்துக்கு அழைத்துச் சென்றாள்.

59

அன்று மாலை கோவிலுக்கு வந்து தீட்சிதரைக் காண்பதாகச் சொல்லியிருந்த பகவதி அதேபோல வந்து பெரியப்பாவிடம் தன் கதையைச் சொன்னாள்.

"பதினறு வருஷத்துப் பெண், அண்ணய்யா, நான்; அரண்மனையின் கபடத்தை நான் என்ன கண்டேன்? அரசரின் தம்பியார் என்னை அழைத்தார். முடியாது என்று ஏன் சொல்ல வேண்டும்? போனேன், அருகில் நின்றேன். 'கல்யாணம் செய்து கொண்டுவிட்டதாக நினைத்துக்கொள், என் கூட வா' என்ருர். 'அம்மாவைக் கேட்கிறேன்' என்றேன். 'அப்புறம் கேட்கலாம்' என்ருர். இழுத்துக்கொண்டே சென்றுவிட்டார்; தன்னவளாக்கிக் கொண்டுவிட்டார். பிறகு வந்தேன்; அம்மாவிடம் சொன்னேன். 'என் மகள் உனக்கு வேறு என்ன கதி கிடைக்கும்?' என்ருள்: அவரிடம் சென்ருள். 'இப்படிச் செய்யலாமா?' என்று கேட்டாள். 'ஒன்றும் செய்யவில்லை; கல்யாணம் செய்து கொண்டுவிட்டதாகவே வைத்துக்கொள்; நீ பேசாமலிரு' என்ருர். அம்மா பேசாமல் வந்து விட்டாள். 'நான்கு நாட்கள் பார்' என்று எனக்குச் சொன்ருள்.

"நான் என்ன கிழவியாகி விட்டேனு நான்கு நாட்களில், அண்ணய்யா? பார்க்கக் கூடிய வயதா அது? பார்க்கக் கூடிய குடும்பமா? பார்க்கிறேன் என்ருல் தடுக்கக் கூடிய மரியாதையா? நான்கு நாட்கள் பார்ப்பதற்ருள் நான்கு முறை ஒன்ருனேம். அப்பாவுக்குத் தெரிந்தது. அரசரிடம் சொல்கிறேன் என்ருர். அப்பாவையும் ஏதோ சொல்லி சமாதானப் படுத்திவிட்டார். 'இவள் என் மனைவி; ஆசை நாயகியல்ல' என்ருர். ஹாலேரியிலிருந்து நரல்கு நாடிற்கு அழைத்துச் சென்ருர்.

"எப்படியோ சமாசாரம் அரசரின் காதுகளுக் கெட்டிவிட்டது. அவர் குதிரை மீதமர்ந்து நால்கு நாடிற்கு வந்தார். நாங்கள் இணைந்திருந்த சமயம் அது. என்னை ரகசிய வழியாக வெளியே அனுப்பி விட்டு கதவைத் திறந்து அண்ணனைக் கண்டார். 'அப்படியாடா?' என்று கேட்டால் 'சே சே' என்ருர். அப்புறம் பாருங்களேன். ஒரே பிடிவாதம் தான். 'அரசரிடம் போய் கோள் சொன்னீர்களே? இப்போது என்ன செய்கிறீர்களோ செய்யுங்கள்' என்ருர்.

"மகனைப் பெற்றேன். அப்பாவும் அம்மாவும் மறுபடியும் போய்த் தொந்தரவு செய்தார்கள். 'உங்கள் மகளை அனுப்புங்கள், அவளிடம் சொல்லுகிறேன்' என்ருர் அந்த மகனின் தந்தை, போனேன், மறுபடியும் சேர்த்துக்கொண்டார். மறுபடியும் கல்யாணம் ஆகிவிட்டதென்றே வைத்துக்கொள் என்ருர். திருப்பி அனுப்பினுர். பேசாமலிருந்தால் கல்யாணம்; கோள் சொன்னுல்

இல்லை என்றார். சரி என்று பொறுத்திருந்தால் அப்பாவையே கொன்று விட்டார்கள்.

"சேர்ந்திருந்தபொழுது அவர் பேசின பேச்சின் அழகைக் கேட்கவேண்டும் அண்ணய்யா. அண்ணாவுக்குப் பிறகு அவர் தானே அரசன்? அவருக்குப் பிறகு அவர் மகன் (அதாவது என் மகன்) அரசன், உண்மையென்றே நம்பினேன் அண்ணய்யா. அவருக்குக் குழந்தைகள் இருக்கவில்லை, பாருங்கள்; அவர் மனைவி தேவக்கா ஒரு குழந்தையைப் பெற்றாள்; அது இறந்து விட்டது. எத்தனையோ வருஷங்கள் ஆகிவிட்டன, மறுபடி கர்ப்பம் தரிக்கவில்லை, கல்யாணம் ஆகிவிட்டது என்று வைத்துக் கொள்வதானால் அவருடைய ஆஸ்திக்கு இந்த மகன் தானே? சரி என்றேன், பேசாமலிருந்தேன்.

"சந்தோஷமாகவே இருந்தேன் என்று வைத்துக்கொள்ளுங்கள். கல்யாணம் ஆகவில்லை என்பதற்காக ஆண் குறைந்துவிடவில்லை, கல்யாணம் ஆகவில்லையென்று நான் வஞ்சனை செய்யவில்லை. கைகளுக்கு வளையல்கள போட்டுக்கொண்டு கழுத்தில் தாலி கட்டிக்கொண்டவளைப்போல உண்மையாக நடந்து கொண்டேன். உண்மையாக நடந்து கொண்டிருக்கிறேன்; சப்பளம் கொடு என்று கேட்கவில்லை; மணைமேல் உட்காராமலே மனைவியானேன். மனைவியென்றே நினைத்துக்கொண்டு சந்தோஷமாக இருந்தேன்.

"வருடம் சென்றது. தேவக்கா ஒரு மகனைப் பெற்றாள்; என் மகன் கல்யாணமாகாதவளின் மகன்; அவள் மகன் ஆனவளின் மகன். இவன் கதி என்ன என்று பயந்தேன்.

"மகனையும் எடுத்துக்கொண்டு தாயையும் கூட்டிக்கொண்டு போனேன். வேட்டைக்காகவென்று நால்கு நாடு அரண்மனையில் இவரும் கூட்டாளி ஒருவருமாக இரண்டேபேர் இருந்தனர். தேவக்கா ஹாலேரி அரண்மனையில் பிள்ளை பெற்றிருந்தாள். அம்மாவையும் என்னையும் இவர் உள்ளே வரவழைத்தார். தேவடியாள் என்றார். வைப்பாட்டி என்றார், கன்னா பின்னா வென்று திட்டினார். என் தாயார் குழந்தையை எடுத்துக்கொண்டு அவர் அருகில் சென்று, 'இது உன் மகனல்லவா? என் மகள் தேவடியாள் தான், ஒத்துக்கொள்கிறேன். தேவடியாள் பெற்றதானாலும் இது உன் குழந்தை தானே?' என்று கேட்டாள். குழந்தையைக் கண்டு அதன் தந்தைக்குக் கோபம் பொங்கியது அண்ணய்யா. 'வேசி, எனக்கா சொல்லுகிறாய்?' என்று கூறி குழந்தையின் காலைப் பிடித்து இழுத்து முறுக்கிவிட்டார்; 'என் மகன் தான்,

இங்கேயே வைத்து விட்டுப் போ' என்றார்; நோவால் குழந்தை வீரிட்டு அழுதது. என் வயிற்றிலிருந்து ரத்தம் கக்கியது அண்ணய்யா. நான் அவரை ஏசினேன். உன் வீடு உருப்படுமா என்றேன். உருப்படுத்திக் காண்பிக்கிறேன் பார் என்றார்; குழந்தையைக் கீழே விடுகிறாயா கொன்று விடட்டுமா என்று கேட்டார். அம்மா குழந்தையைக் கீழே விட்டு விட்டாள். அது அழுதுகொண்டே இருந்தது. மகனின் தந்தை சொன்னார்: 'என் மகனை பார்த்துக்கொள்கிறேன். அதற்கும் உங்களுக்கும் இனி சம்பந்தமில்லை. நீங்கள் இப்பொழுதே போகவேண்டும். குடகின் எல்லையைத் தாண்டிப்போய் விடுங்கள். என்னைக் கேட்காமல் திரும்பியும் இங்கே அடி எடுத்து வைத்தீர்களோ, மகனைக் கொன்று உங்கள் கைகளில் கொடுத்துவிடுவேன், ஜாக்கிரதை," என்றார். போங்கள் என்றார்; நான்கு ஆட்களை அழைத்து, காவலாக எங்களுடன் வரச் செய்து எல்லைக் கப்பால் விட்டு வரச் செய்தார். போனோம் அண்ணய்யா; தாயும் மகளும்; தலை கவிழ்ந்தபடி; கடவுளே இந்த என் மகனைக் காப்பாற்று என்று வேண்டிக் கொண்டேன். முப்பத்து நான்கு வருடங்கள் ஆகிவிட்டன. மகன் பிழைக்கவேண்டும் என்ற ஆசையால் இந்தப் பக்கம் திரும்பிப் பார்க்கவில்லை. அண்ணன் இறந்து தம்பி அரசரானார். வரலாமா என்று சொல்லியனுப்பினோம்; வந்தால் மகன் செத்தான் என்றார். 'சரி, மகன் நம்முடையவனல்ல; போய்ச் செய்வதென்ன? இருக்குமிடத்தில் அவன் வாழட்டும்; நாம் இங்கேயே கிடப்போம்' என்றேன். அம்மா இறந்து போனாள். நான் தனியளானேன். குரு சேவை செய்தேன், பகவதியின் பாதங்களைப் பிடித்துக் கொண்டேன்; இன்றில்லாவிட்டால் நாளை உன் கருணையால் நான் பெற்ற அந்த மகன் அப்பாவின் பட்டத்திற்கு வரவேண்டும், அருள் செய் என்று வேண்டினேன். அந்த மகனைக் கண்ணால் காணாமல் செய்தி மட்டும் கேட்டுக்கொண்டு சும்மா இருந்து வந்தேன்.

"குரு அவர்கள் உங்களைப்போல வெகு நல்லவர் அண்ணய்யா. அவரும் என்னைப் பாப்பா என்றே அழைப்பார். தமது மகளைப் போலவே பார்த்துக்கொண்டார், அப்பாவைப் போல அவருக்கும் வைத்தியமும் சங்கீதமும் வரும். உங்களைப்போல ஜோதிஷமும் தெரியும். 'என் சுயமா இருக்கிறாய், கற்றுக்கொள், எனக்குத் தெரிந்ததை உனக்கும் சொல்லிக் கொடுக்கிறேன்' என்றார், சரி என்றேன்; சொல்லித் தந்ததைக் கற்றுக்கொண்டேன், அது தான் நான் செய்யும் வைத்தியமும் ஜோதிடமும்.

"ஜோசியம் கற்றுக்கொண்டு மகனின் ஜாதகம் எப்படி இருக்கிறது என்று பார்த்தேன்; குறிப்புகள் எடுத்து வைத்துக் கொண்டு குரு அவர்களிடம் காட்டி சரியாக இருக்கிறதா என்று கேட்டேன். பத்து வரிகள் படித்துப் பார்த்துவிட்டு சரியாக இருக்கிறாற்போல இருக்கிறது என்றார். நீங்கள் சொல்லுவதைப் போல அவரும் ரொம்பவும் தள்ளி எதிர் காலத்தைப் பற்றி ஜோதிடம் பார்க்கக்கூடாது என்று சொல்வார். குரு அவர்கள் இரண்டு வருடங்களுக்கு முன்னால் காலமானார் அண்ணய்யா. இறக்கும் பொழுது 'உன் வனவாசம் முடிந்து விட்டாற்போலிருக்கிறது' என்றார். சுமார் ஆறு மாதங்கள் அங்கிருந்தேன். ஊருக்கு வரவேண்டும் போலிருந்தது. ஜாதகம் பார்த்தேன். 'மகனின் தசை நல்ல தசை, இழந்து விட்டிருந்த உறவினரைக் காண்பான். நல்ல பதவியை அடைவான்' என்று இருந்தது. வேறு யார் உறவினர்? நான் தானே? பக்கத்தில் இருக்கலாம் என்று வந்தேன். உங்கள் தம்பியின் பேரப்பிள்ளை, அவன் ஜாதகம் பார்த்து அவனுக்கு என்ன நல்லது செய்யமுடியுமோ செய்யுங்கள்; உங்கள் பாடுபா இருக்கிறேன், என் புண்ணியம் என்னவோ பாருங்கள்."

60

தம்பியின் மகளின் இந்த சுய சரிதத்தைக் கேட்டு தீட்சிதர் மிகவும் பச்சாததாபம் கொண்டார். ஐயோ பாவம்! அவள் எவ்வளவு கஷ்டப்பட்டிருக்கிறாள்! வீட்டில் பிறந்து எல்லோரையும் போல வளர்ந்திருந்தால் அவள் இப்படி யெலலாம் அவதிப் பட்டிருப்பாளா? அவதிப்பட வேண்டியிருந்திருக்குமோ என்னமோ யார் கண்டது? தம் வீட்டுப் பெண்கள் எலலோரும் பிறந்தது முதற்கொண்டு சாகும் வரையில் சுகமாகவே வாழ்ந்தார்களா என்ன? ஆனால் அந்தக் கஷ்டம் வேறு, இந்தக் கஷ்டம் வேறு. எல்லாம் ஆண்டவன் விருப்பம். ஏன், என்ன என்பதை நாம் அறிய முடியாது, ஆனால் அவன் பார்த்துக் கொள்வான் என்கிற நிச்சயம் ஒன்றிருந்தால் எந்தக் கஷ்டத்தையும சகித்துக் கொள்ளலாம்.

கதை முடிந்து இரண்டு நிமிடங்களாகியும் பெரியப்பா வாயைத் திறக்காமலிருக்கவே பாப்பா, "என்ன சொல்கிறீர்கள் அண்ணய்யா? பேசாமலிருக்கிறீர்களே?" என்றாள்.

தீட்சிதர், "மகன் எங்கே அம்மா? தந்தையிடம் விட்டுச் சென்றேன் என்கிறாய், இப்பொழுது எங்கே இருக்கிறான்?"

"அதை அப்புறம் சொல்லுகிறேன். அவன் அரசனாகக் கூடிய யோகம் இருக்கிறது. அதற்கு உதவி செய்கிறேன் என்று வாக்குக் கொடுங்கள்."

"பாப்பா, நான் உனக்குப் பெரியப்பா என்பது உண்மை. அதே போல அரண்மனைக்கும் ஜோசியன். உன் மகன் அரசனாக வேண்டும் என்றால் இப்பொழுது அரசராக இருப்பவர் என்ன ஆவது?"

"அப்படி யென்றால் உங்கள் பேரப்பிள்ளையை விட இந்த அயலார் தான் உங்களுக்கு முக்கியமாகி விட்டார்கள்?"

"அப்படிச் சொல்லாதே அம்மா, என் மகள் என் மகள் தான். என் பேரன் என் பேரன் தான். அயலார் அயலார் தான். இருந்தாலும் பாப்பா, உனக்குத் தெரியாதா? தர்மம் என்று ஒன்று இருக்கிறதே, பேரனுக்கு நன்மை செய்யவேண்டுமென்பதற்காக மற்றவர்களுக்குக் கெடுதல் செய்ய முடியுமா? நீயே அதற்குச் சம்மதிக்க மாட்டாய்."

"மற்றவர்களுக்குக் கெடுதல் செய்யவேண்டாம் அண்ணய்யா. பேரனுக்கு நியாயமாகச் சேரவேண்டிய சொத்து சேரும்படிச் செய்யுங்கள். அது தானே முதல் தர்மம்."

"உன் மகளை லிங்கராஜனின் மகன் என்பது உண்மை தான் பாப்பா. ஆனால் அவரது ராஜ்யத்தில் அவனுக்கு உரிமை கிடையாது."

"நீங்களும் அப்படியே சொல்கிறீர்களா?"

"பாரம்மா, நான் சொன்னால் நீ வருத்தப்படுவாய். இதையெல்லாம் பற்றி விவாதிப்பது எனக்கு இஷ்டமில்லை. ஆனால் நீ எல்லோரையும் போல சாமானிய ஸ்திரீ அல்ல. எந்த ஆண் மகனுக்கும் கூட இல்லாத கெட்டிக்காரத் தனத்தை ஆண்டவன் உனக்குக் கொடுத்திருக்கிறான். மேலும் நீ முப்பது வருடங்கள் தவம் செய்திருக்கிறாய்."

"தவம்?"

"ஆமாம், பாப்பா, அப்பேர்ப்பட்ட வேதனை நிறைந்த நாட்களில் கடவுள் முன்னால் அமர்ந்து, மனத்தைக் கட்டுப் படுத்தி 'என் குழந்தையைக் காப்பாற்று. எனக்கு வழிகாட்டு' என்று வேண்டிக கொண்டாயே, அது தான் தவம், உன் தாய் புண்ணியம் செய்தவள்; உன் தகப்பன் சத்தியம் உள்ளவன்; நீ நல்லவளாக இருப்பதில் என்ன ஆச்சரியம்? நான் என்ன சொல்லிக் கொண்டிருந்தேன்?"

"என் கெட்டிக்காரத்தனத்தைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தீர்கள்."

"ஊம் பார்த்தாயா? வேறு யாராகவாவது இருந்தால் நான் இப்படியெல்லாம் பேசவே மாட்டேன். நீ அறிவாளி ஆனதால் பேசுகிறேன். நீ எங்கள் வீட்டுப் பெண். இருந்தாலும் உன் தாயார் எங்கள் வீட்டுப் பெண்ணல்ல. அதனால் என்ன ஆயிற்று? நீ எங்கள் வீட்டைச் சேர்ந்தவள் இல்லை. இப்படியேதான், உன் மகன் அரசர் மகன்; ஆனால் நீ அரசரின் வீட்டு ஸ்திரீ அல்ல, மகன் அரசரின் வீட்டு மகனல்ல. என்ன செய்வதம்மா? கல்யாணம் ஆகவில்லை என்ற காரணத்தால் மகளின் உரிமை தப்பிவிட்டது."

"அரசர் நம்பிக்கை யூட்டினார். நான் நம்பிக் கெட்டேன். அந்த தண்டனை போதாதா அவனையா? பெற்ற மகனும் கஷ்டப்பட வேண்டுமா? அவனுக்கும் தண்டனையா?"

"இதுவும் உனக்குத் தெரிந்தது தான் பாப்பா; உன் அப்பா செய்த தவறினால் உனக்கு இந்த வீட்டில் உரிமை இல்லாது போயிற்று. கர்மம் விடாது. உன்னை ஒரிடத்தில் பிறப்பித்தது. உன் மகனை ஓர் இடத்தில் பிறப்பித்தது. நான் எதற்காக இங்கே பிறந்தேனோ' லிங்கராஜன் எதற்காக அங்கே பிறந்தாரோ? பெரியவர்கள் இதை கர்மம் என்றார்கள். பிறந்த இடத்தில் நியாயத்தோடு வாழவேண்டும், தர்மத்தோடு வாழ வேண்டும்."

"லிங்கராஜர் தர்மமாகத்தான் நடந்து கொண்டாரா? நான் தர்மத்தை விடாமல் நடந்து கொள்வதற்கு? அவர் செய்த அநியாயத்திற்குப் பதில் அநியாயம் நான் செய்கிறேன்."

"இதுவும் பழைய விஷயம் பாப்பா. லிங்கராஜர் அநியாயம் செய்தார். அது கடவுள் முன்னிலையில் விசாரிக்கப்படும். விட்டு விடுமா? நான் தவறு செய்து நரகத்திற்குப் போனால் நீயும் தவறு

செய்து விட்டு நரகத்திற்குப் போகிறேன் என்கிறாயா? ஏதோ வலையில சிக்கி அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறாய் நீ. அதிலிருந்து விடுவித்துக்கொண்டு சுவர்க்கத்துக்குச் செல்லும் வழியைப் பாரம்மா."

"அண்ணய்யா, என் புத்தி நிலையற்றதாக இருக்கிறது. என் மகனின் கதியை நினைத்தால் என் வயிற்றில் ஜுவாலை வீசுகிறது. சுவர்க்கத்திற்குச் சென்றாலும் கூட அந்த ஜுவாலை என்னை எரித்துக் கொண்டே இருக்கும் அண்ணய்யா. காமதேனு இந்திரன் வீட்டில் குழந்தைகளின் நிலை கண்டு கண்ணீர்விட்டது என்று கூறுவீர்களே. நானும் இந்திரன் வீட்டில் போய் உட்கார்ந்து கொண்டாலும் கண்ணீர் பெருக்க வேண்டியவளே."

"மகன் அவ்வளவு கஷ்டப்படுகிறானா. பாப்பா என் முழு விவரமும் சொல்ல மாட்டேனென்கிறாய்?"

"சமயம் வரும்போது சொல்லுகிறேன் அண்ணய்யா. இப்பொழுது சமயம் வரவில்லை. அவன் தம்பியை ஒழித்து அவனை அரசனாக்க வேண்டுமென்று நான் சொல்லவில்லை. அந்தத் தம்பியானவன் ராஜ்யத்தை இழந்து விடப்போகிறான். அப்பொழுது வேறொரு அரசன் வரவேண்டும். அந்த வேளையில் உங்கள் பேரன் அரசனாக வரட்டும் என்பது தான் என் எண்ணம். அந்த வேளை வரட்டும்; சொல்லுகிறேன்."

"ரொம்ப தூரம் பார்த்து வைத்திருக்கிறாயே அம்மா. அரசரின் ஜாதகம், மகனின் ஜாதகம் எல்லாவற்றையும் பார்த்து வைத்திருக்கிறாயா?"

"ஆமாம் அண்ணய்யா, பார்த்து வைத்திருக்கிறேன். கணக்குப் போட்டுகொண்டு வந்திருக்கிறேன். நீங்கள் பாருங்கள் சரியாக இருக்கிறதா என்று."

"நல்லதம்மா. பார்க்கலாம்."

"போன் அரசனாவது வேண்டாமென்றாலும் மகள் என்ற பாசத்தை வைத்துக் கொண்டிருக்கிறீர்களே அது சந்தோஷம். இவ்வளவு வருஷங்கள் ஆகிவிட்டனவே எப்படி வரவேற்பார்களோ என்னவோ என்று பயந்துகொண்டே வந்தேன். இறந்து போன தகப்பன் மீண்டும் வந்து அணைத்துக் கொண்டாற்போலாயிற்று. என் உயிருக்கு. துயரம் பெருகியபொழுது அதைச் சொல்லிக் கொள்வதற்கு எதிரே ஒரு ஆள் இருக்கவில்லை இவ்வளவு நாள். சாப்பாட்டை ஜீரணித்துக் கொள்வதைப்போல

அதையும் ஜீரணித்துக்கொண்டு காலம் தள்ளினேன் இவ்வளவு நாட்கள். இன்றைக்குத்தான் வாய் திறந்து எல்லாவற்றையும் சொல்லிக்கொண்டேன். இந்தாருங்கள் நான் எழுதிவைத்திருக்கும் குறிப்புகள், பாருங்கள், இனி நான் புறப்படுகிறேன்."

"கோவிலுக்கா பாப்பா? ரொம்பவும் தூரம் என்று சொன்னார்கள். இரவு வேளை, ஒருத்தியே போகிறாயா?"

"உங்கள் மகளுக்கு பகவதி இரவையும் பகலாக்கி விட்டாள். பகலை இரவாக்கினாள். எனக்குப் பயம் ஒன்றும் இல்லை. நான் வரட்டுமா?" என்று கூறி பகவதி எழுந்திருந்தாள். தந்தையின் பாதங்களில் நெற்றியைப் பதித்தாள். எழுந்து அவரிடமிருந்து பதிலுக்காகக் காத்திராமல் கை கூப்பி நின்ற இடத்திலேயே பிரதட்சிணம் செய்துவிட்டு கோவிலை நோக்கி புறப்பட்டாள்.

61

மனைவியை மீட்டுக் கொடுக்கவேண்டுமென்று மந்திரி லக்ஷ்மீ நாராயணய்யாவைக் கேட்டுக் கொள்ளவதற்கு முன்னால் பாணே சூர்யநாராயணன் அவள் பசவனின் ஆதீனத்தில் இருக்கிறாள் என்பதை நிச்சயப் படுத்திக் கொள்ளவேண்டியிருந்தது. மடிகேரியில் அவனுக்கு உறவினர்கள் உண்டு. ஊருக்கு வந்ததும் அவன் முதலில் தன் மனைவியின் சிற்றன்னையின் வீட்டுக்குச் சென்றான், மனைவியைத் தேடுவதற்கு யாருடைய உதவியை நாடவேண்டுமென்று விசாரித்தான். கோவில் தீட்சிதருடைய தம்பி மகன் நாராயண தீட்சிதர் இப்படிப் பட்ட காரியங்களில் ஜனங்களுக்கு உதவக்கூடியவர் என்று சொன்னார்கள். சூர்ய நாராயணன் நாராயண தீட்சிதரைத் தேடிக்கொண்டு புறப்பட்டான்.

சின்னதீட்சிதர் சூர்யநாராயணனின் கதை முழுவதையும் கேட்டுக்கொண்டார். "நீங்கள் இன்றும் நாளையும் இங்கேயே இருங்கள், விசாரித்துப் பார்ப்போம்" என்றார்.

அன்று மாலை நாராயண தீட்சிதர் காவல் படைத்தலைவன் உத்தய்யனைச் சந்தித்தார். சூர்யநாராயணனின் கதையை அவனிடம் சொன்னார். உத்தய்யன், "விசாரித்து நாளைக்குச் சொல்கிறேன்" என்றான்.

உதயய்யன் இரவு காவல் சுற்றும் பொழுது பெண்கள் விடுதிக் காவல்காரன் மாசனிடம், "மங்களூர் பக்கத்துப் பார்ப்பனப் பெண் யாரையாவது கொண்டு வந்து இங்கே வைத்திருக்கிறார்களா பார்த்துச் சொல்" என்றான். மாசன் "சரி" என்றான்.

மாசன் காவல் வேலையில் இருப்பவன். யார் வந்தார்கள், யார் போனார்கள் என்கிற விஷயமாக அநாவசியமான அக்கறை காட்டுவது அபாயம். அவன் மெதுவாக விசாரித்ததில் ஒரு ஸ்திரியைக் கொண்டு வந்திருக்கிறார்கள், அவளைச் சம்மதிக்க வைப்பது கஷ்டமாக இருக்கிறது, மற்ற விவரங்கள் தெரியவில்லை என்று அறிந்துகொண்டான். அவன் இந்த சமாசாரத்தை மறு நாள் உத்தய்யனுக்குத் தெரிவித்தான். உத்தய்யன் நாராயண தீட்சிதருக்கு இதைத் தெரிவித்த, "அவள் புருஷன் ஏதாவது வேஷம் போட்டுக்கொண்டு அந்த விடுதிக்குச் சென்று மனைவி அங்கே இருக்கிறாளா என்று பார்த்து வர முடியுமா என்று விசாரியுங்கள்" என்றாள். தீட்சிதர் சூர்யநாராயணனைக் கேட்ட போது அவன், "நான் இதிலெல்லாம் அவ்வளவு தேர்ந்தவனல்ல; இருந்தாலும் யட்சகானம்* முதலியவைகளில் கலந்துகொண்ட துண்டு. நீங்கள் சொன்னால் அந்த வேஷம் போட்டுக்கொண்டு, எப்படி நடந்து கொள்ளவேண்டுமென்று சொல்லிக் கொடுத்தால் அப்படியே நடந்துகொள்வேன்," என்றான்.

பலாத்காரமாகக் கொண்டுவரப்பட்ட பெண்களை பெண்கள் விடுதியில் பின் பாகத்தில் இருந்த ஒரு கட்டிடத்தில் வைத்திருப் பார்கள். அங்கே சாதாரணமாக யாருக்கும் பிரவேசம் கிடை யாது. குறி சொல்பவர்கள், பச்சை குத்துபவர்கள், மணி, சரம், கயிறு, வளையல் விற்பவர்கள், பாம்பாட்டி முதலிய வேடிக்கை காட்டுவோர் இவர்களை மாத்திரம் உள்ளே விடுவார்கள். இவை களில் சூர்யநாராயணன் போட்டுக் கொள்ளக்கூடிய வேஷம் ஒன்றே. அது மணி சரம் விற்பவன் வேஷம்.

உத்தய்யனும் நாராயண தீட்சிதரும் பேசி சூர்யநாராயணன் மறு நாள் மணி விற்பவன் வேஷத்தில் பெண்கள் விடுதிக்குச் செல்லவேண்டியது என்று முடிவு செய்தார்கள், மாசன் அவனை முதலில் பெண்கள் விடுதிக்குள் அழைத்துச் சென்று வியாபாரம் செய்வதைப் போன்ற ஒரு நாடகம் ஆடச் செய்து பிறகு சகஜ மாக அழைத்துக்கொண்டு போவதுபோல பின் கட்டிடத்துக்கு

* தென் கன்னடம் ஜில்லாவில் வழக்கத்தில் இருக்கும் ஒருவகைத் தெருக் கூத்து.

அழைத்துச் செல்லவேண்டுமென்று ஏற்பாடு. அங்கே தன் மனைவி இருக்கிறாளா என்று உபாயமாக சூர்யநாராயணன் தெரிந்து கொள்ளவேண்டும். பேச்சிலோ நடத்தையிலோ அவன் தான் வேஷதாரி என்பதைக் காட்டிக் கொடுத்துவிடக்கூடாது. சந்தர்ப்பத்தை அநுசரித்து என்ன செய்தால் மனைவி அங்கே யிருப்பது தெரியவருமோ அதை எச்சரிக்கையுடன் செய்து முடித்துத் திரும்பிவரவேண்டும், அவன் மனைவி அங்கே இல்லா மலும் இருக்கக் கூடும். எனவே எதையும் மிகைப்படச் செய்யக் கூடாது. இந்த விவகாரத்தின் எந்த கட்டத்திலாகட்டும் ஏதாவது குறுக்கிட்டால் மிகவும் சகஜமாகப் பின்வாங்கி விடவேண்டும்.

சூர்யநாராயணனுக்கு நாராயண தீட்சிதர் இந்த விவரங்களை யெல்லாம் பல முறை எடுத்துச் சொல்லி அவன் மனத்தில் பதியும்படிச் செய்தார். மறுநாள் சூர்யநாராயணன் கடைவீதி யில் இவர்கள் ஏற்பாடு செய்திருந்த ஒரு கடையிலிருந்து மணி விற்பவன் வேஷத்தில் பெண்கள் விடுதிக்குப் புறப்பட்டான்.

ஏற்பாட்டின்படி எல்லாம் நடந்தன, மாசன் மிகவும் கெட்டிக் காரத்தனமாக அவனை அழைத்துக்கொண்டு சென்று விடுதிக் குள் பெரிய கட்டிடத்தில் விட்டான். நான்கு பெண்கள் வந்து தங்களுக்கு வேண்டியவைகளை வாங்கிக்கொண்டார்கள். மாசன், "பின் கட்டிடத்தில் இருப்பவர்களும் வாங்குவார்களில்லையா அம்மா?" என்று கேட்டான். "கொண்டுபோய்க் காட்டு" என்றாள் அவர்களில் முக்கியமானவளாக இருந்தவள்.

அங்கே மூன்று பெண்கள் வந்தார்கள். ஒருத்தி மணி வாங் கினாள்; ஒருத்தி சரம் வாங்கினாள்; ஒருத்தி கயிறு வாங்கினாள். மாசன், "இனி இவன் போகட்டுமா?" என்றான். உள்ளே யாரோ ஒருத்தி இன்னொருத்தியிடம், "நீயும் போய்ப் பாரேன்" என்றாள். அவள், "நான் கெட்ட கேட்டிற்கு மணிச் சரம் தான் குறை கிறதோ?" என்று கேட்டு அழுத குரல் கேட்டது.

பேசியது தன் மனைவி தான் என்பதை சூர்யநாராயணன் புரிந்து கொண்டான்.

அவளைப் பெயர் சொல்லிக் கூப்பிடாமலிருக்க அவன் மிகவும் கஷ்டப்பட்டான். எப்படியோ அடக்கிக்கொண்டான். அந்தச் சமயத்தில் அவனுக்கு ஏதோ தோன்றவே, உள்ளே தன் குரல் கேட்கும்படியாக, "நான் மறுபடியும் வருகிறேனம்மா" என்று கூறி தன் மூட்டையைத் தூக்கிக்கொண்டு எழுந்தான். அவன்

குரலை அவன் மனைவி கண்டு கொண்டுவிட்டாள்; சட்டென்று எழுந்து வாசலுக்கு வந்தாள். சூர்யநாராயணன் அவளைப் பார்த்தான். இனி அங்கே நின்றால் ஆபத்து என்று தெரிந்துகொண்டு "நாளைக்கு வருகிறேன்" என்று கூறிப் புறப்பட்டு விட்டான்.

இவ்வளவும் இவர்கள் நினைத்ததை விட சுலபமாகவே முடிந்து விட்டது. இனி பாக்கியிருந்தது அவளை இங்கிருந்து மீட்டுக் கொள்வது எப்படி என்பது தான். உத்தயயனும் நாராயண தீட்சிதரும் யோசித்து சூர்யநாராயணன் மந்திரி லக்ஷ்மீநாராயணய்யாவின் உதவியால் அவளை மீட்க முயற்சிக்க வேண்டுமென்றும் அப்படி மீட்டுக்கொள்ள முடியாமற்போனால், அவளை மீட்க தாங்களே ஏதாவது வழி செய்ய வேண்டுமென்றும் நிச்சயித்துக்கொண்டார்கள்.

இதன் பிறகு தான் சூர்யநாராயணன் லக்ஷ்மீநாராயணய்யாவைத் தேடிப் போய் அவர் உதவியை நாடினான்.

62

உத்தயய தக்கனின் படி நிறுத்தப்பட்ட விஷயத்தை விவாதிப்பதற்காக போபண்ணா அன்று மாலை லக்ஷ்மீநாராயணய்யாவின் வீட்டிற்கு தக்கனையும் கூட்டிக்கொண்டு வந்தார். லக்ஷ்மீநாராயணய்யா அவர்கள் இருவரையும் பிரியத்துடன் வரவேற்றார் போபண்ணா, அவரிடம், "நீங்கள் எனக்குச் சொல்லியனுப்பிய அதே நேரத்திற்கு உங்களைப் பார்க்கவேண்டிய ஒரு விஷயத்துடன் தக்கர் வந்து சேர்ந்தார். அதற்காகத்தான் இங்கேயே வருவதாகச் சொல்லியனுப்பினேன். உங்கள் விஷயத்தை முதலில் சொல்லுகிறீர்களா அல்லது என் விஷயத்தை முதலில் சொல்லிவிடட்டுமா?" என்றார்.

லக்ஷ்மீநாராயணய்யா, "அதைப் பார்ப்போம். முதலில் கொஞ்சம் இப்படி வாருங்கள்" என்று கூறி அவரை உள் அறை ஒன்றுக்கு அழைத்துச் சென்று பாணே சூர்யநாராயணனின் கதையைச் சொன்னார். போபண்ணா உத்தயயனின் கதையைச் சொன்னார்: "இன்னும் இந்த உங்கள் அரசன் ஆட்சி செய்ய வேண்டுமென்று சொல்லுகிறீர்களா ஐயா?" என்றார்.

"போபண்ணா, நானென்ன செய்யட்டும்? என் சுபாவம் அப்படி. இது எனக்கு தர்மசங்கடமான வேலை. மந்திரியாக

இருந்தால் அரசனைத் திருத்துவதற்கு முயலவேண்டும். அது முடியாதென்று தோன்றினால் மந்திரி வேலையை விட்டுவிட வேண்டும். அதன் பிறகு அரசருக்கு எதிராகப் புரட்சி செய்ய லாம். அவரைக் கவிழ்க்கலாம். மந்திரியாகவும் இருந்து கொண்டு இப்படிச் செய்வது ராஜதுரோகம் என்று எனக்குத் தோன்று கிறது. உங்களைவிட எனக்கு அந்தரங்கமானவர்களில்லை. சொல்லுங்கள், இந்த வேலையை விட்டு விடுகிறேன். அரசரை என்ன செய்ய வேண்டுமென்று சொல்லுங்கள், உங்களுக்கு உதவியாக நிற்கிறேன். மந்திரியாக இருந்துகொண்டு அவரை எடை போடமாட்டேன்."

"நல்லது ஐயா, உங்களுக்குச் சரி என்று தோன்றியதை நீங்கள் செய்யுங்கள். எனக்குச் சரி என்று தோன்றியதை நான் செய் கிறேன். மூன்று தவறுகளைப் பொறுத்துக் கொள்வேன். அதற்குமேல் முடியாது என்றேன். பாருங்கள் மூன்று தவறுகள் நடந்துவிட்டன. பிராம்மணப் பெண்ணைக் கடத்திக்கொண்டு வந்திருக்கிறார்கள்; குடகனின் வீட்டில் வாலாட்டியிருக்கிறார்கள்; தக்கரின் படியை நிறுத்தியிருக்கிறார்கள். உங்கள் எதிரில் இப் போது ஆணையிடுகிறேன். முடிந்த அளவு சீக்கிரத்தில் இவனை ஆட்சி பீடத்திலிருந்து அகற்றவேண்டும். நீங்கள் சொல்வது போல் இவன் மனைவி அரசியாகட்டும், நாட்டை ஆளட்டும்: எனக்குச் சம்மதம். இவன் அரசனாக இருப்பது இனி எனக்குச் சம்மதம் இல்லை."

"நாம் இருவரும் வெவ்வேறு வழியில் போனால் எப்படி போபண்ணா? நான் வேலையை விடட்டுமா, சொல்லுங்கள்; விட்டு விடுகிறேன்."

"இவன் அரசனாக இருப்பது வேண்டாம் என்று சொல்லுகிற நானே மந்திரி வேலையை விடவில்லை. இவன் இருக்கட்டும் என்று சொல்லுகிற நீங்கள் எதற்காக விடவேண்டும்? இருங்கள். நடந்த வரையில் ஒரு வழி. பிறகு வேறு."

"முடிந்த வரையில் ஒரு வழியில் நடப்போம் என்பதே என் ஆசை போபண்ணா. சாத்தியமான வரையில் நான் நீங்கள் சொல்கிறபடி கேட்கிறேன். நீங்களும் இயன்றவரையில் என் பேச்சுப்படி நடந்துகொள்ளுங்கள்."

லக்ஷ்மீநாராயணய்யா இந்த வேண்டுகோளை மிகவும் பணி வுடன் விடுத்தார். போபண்ணாவுக்கு அவர் மீது கருணை தோன்றி

யது. அவர், "ஆகட்டும் ஐயா, நீங்கள் பெரியவர். எது நல்லது என்று நீங்கள் சொல்லுங்கள்; என் கையாலானதைச் செய்கிறேன்," என்றார்.

உள்ளே இந்தப் பேச்சை முடித்துக்கொண்டு இருவரும் வெளியே வந்தார்கள்.

63

வெளியே வந்து உத்தய்ய தக்கனுடன் முதலில் சூர்யநாராயணனின் மனைவியை மீட்க என்ன செய்யவேண்டும் என்று விவாதித்தார்கள்.

போபண்ணா, "உன் மனைவி அந்த விடுதியில் இருக்கிறாளென்பது உனக்கு நிச்சயமாகத் தெரியுமல்லவா, சூர்யநாராயணப்பா?" என்று கேட்டார்.

சூர்யநாராயணன், "கண்ணால் கண்டேன் ஐயா. சந்தேகமே இல்லை. குரல் கேட்டே நான் தெரிந்து கொண்டுவிட்டேன். என் குரல் அவளுக்குக் கேட்கட்டும், அவளுக்குச் சிறிது தைரியம் வரட்டுமென்று 'நான் பிறகு வருகிறேன்' என்று உரக்கவே குரல் கொடுத்தேன். என் குரலை அவள் தெரிந்து கொண்டிருக்கவேண்டும்; சட்டென்று வாசலுக்கு வந்தாள்; எதிரெதிரே இப்பொழுது நாம் பார்த்துக் கொள்வதுபோல பார்த்துக் கொண்டோம். அவளால் என்னை அடையாளம் கண்டுகொண்டிருக்க முடியாது. என்னுடையது வேஷம் என்று அவள் தெரிந்து கொள்ளவேண்டுமென்று, 'மறுபடியும் நாளைக்கு வருகிறேன்' என்று கூறிவிட்டுப் புறப்பட்டு வந்தேன்," என்றான். ஒரு கணம் கழித்து, "என்ன பாவம் செய்தேனோ, இந்தக் கஷ்டத்தை அநுபவிக்கவேண்டியிருக்கிறது. அவள் தலையெழுத்து இப்படி இருக்கிறது. பெரியவர்கள் ஐயோ பாவம் என்று கருணைகாட்டிக் காப்பாற்றவேண்டும்" என்று கண்ணீர் பெருக்கினான்.

லக்ஷ்மீநாராயணய்யா, போபண்ணா, உத்தய்யதக்கன் மூன்று பேரும் பேசி, மறுநாள் லக்ஷ்மீநாராயணய்யா அரசனைக் கண்டு சூர்யநாராயணன் வந்திருக்கும் விஷயத்தைச் சொல்லி, அவன் மனைவியை ஸ்திரீகள் விடுதியிலிருந்து மீட்டு அவன் வசம் ஒப்பு

வித்து விடுமாறு கேட்டுக் கொள்ளவேண்டும் என்று நிச்சயித்தார்கள்.

இது முடிந்ததும் சூர்யநாராயணனை அனுப்பிவிட்டு உத்தய்ய தக்கனின் புகாரைக் குறித்து போசித்தார்கள்.

அவனது மருமகளின் மகளை அரண்மனைக்கு அனுப்புகிற விஷயம் அப்படியே நின்றுவிட்டிருந்தது. அதை மீண்டும் அவர்கள் கிளப்பவேண்டியதில்லை. படி விஷயம் மாத்திரம் மிகவும் அவசியமாக முடிவு செய்யவேண்டிய விஷயம். அரசனே உத்தரவிட்டிருந்தாலும் சரியே, பசவனே தானாகச் செய்ததாக இருந்தாலும் சரியே, இவர்கள் மறுபடியும் இதுபோன்ற, படியை நிறுத்துவது போன்ற, அதிகபிரசங்கித்தனத்தை செய்யாமல் செய்யவேண்டும். முதலில் தக்கன் போய் அரசனைப் பார்த்து விஷயத்தைச் சொல்லி படியை மீண்டும் தரச் செய்யும்படி கேட்கவேண்டும். அவன் அதற்குச் சம்மதிக்காவிட்டால் மந்திரிகள் மேற்கொண்டு செய்யவேண்டியதைச் செய்ய வேண்டும்.

இவ்வாறு முடிவு செய்துகொண்டு போபண்ணவும் உத்தய்ய தக்கனும் லக்ஷ்மீநாராயணய்யாவிடம் விடை பெற்றுக்கொண்டு சென்றனர்.

64

அன்று மத்தியான்னம் மடிகேரி சாலையில் வந்து கொண்டிருந்த அப்பாஜியும் வீரண்ணவும் வேண்டுமென்றே மெதுவாக நடந்து வந்து விளக்கு வைக்கும் நேரத்திற்கு ஊரை அடைந்தனர். வீரண்ண அபரம்பரசுவாமியாக காவல்காரர்களுக்கு ஏற்கனவே அறிமுகமானவன். அவனோடு வருபவர்கள் அவனது சிஷ்யர்கள் அல்லது பக்தர்கள். ஆகையால் காவலாளிகள் அப்பாஜி யார் என்று கவனிக்க முன்வரவில்லை.

ஊருக்கு அருகில் வந்து நின்ற உடன் அப்பாஜி, "அதென்னதான் மனதின் மயக்கமோ பார் அப்பய்யா, இங்கு வந்து நின்றதுமே எனக்குக் குழந்தையாக இருந்தபோது தாயின் மடியில் ஏறி அமர்ந்து கொண்டிருந்த இனிய நினைவுகள் உண்டாகின்றன."

"அப்படியா அப்பாஜி?"

"ஆமப்பா. உண்மையில் நான் வந்த வேலை இத்துடன் முடிவடைந்துவிட்டது. மற்றவைகளெல்லாம் வந்து விட்டோமே என்பதனால் பேசுகிற பேச்சு, இந்த மண் பொம்மை இங்கே சிறிது நடமாடவேண்டும் என்று விரும்பியது. அந்த விருப்பம் ஈடேறிவிட்டது."

"நல்லதாயிற்று அப்பாஜி."

"இனி நான் வீட்டுக்குப் போகிறேன். நீ சூரப்பாவை அழைத்துக் கொண்டு வருகிறாயா?"

"நீங்கள் ஒருவரே போகவேண்டாம், அப்பாஜி. நானும் கூட இருந்தால் யாரும் உங்களைத் தடை செய்யமாட்டார்கள். உங்களோடு பேசமாட்டார்கள். போகும்போது வழியில் சூரப்பாவை அழைத்து வருகிறேன். கூடவே வந்து விடுங்கள்."

"அதுவும் சரி, அப்பய்யா. வா, போவோம்."

என்றிவ்வாறு பேசிக்கொண்டே இருவரும் வழி நடந்து அக்கிரகாரத்துக்குச் சென்றனர். லக்ஷ்மீநாராயணய்யாவின் வீட்டுக்குச் சிறிது தொலைவில் தந்தையை நிறுத்திவிட்டு வீரண்ணு ஒருவனே போய் சூரப்பாவை அழைத்து 'சமாதி அருகில் வாருங்கள்' என்று சொல்லிவிட்டு வந்தான். இருவரும் சமாதி அருகே வந்து சேரும் நேரத்திற்குச் சரியாக சூரப்பாவும் அங்கே வந்தடைந்தான்.

சூரப்பாவும் அப்பாஜியும் க்ஷேம சமாசாரங்கள் விசாரித்துக் கொண்ட பிறகு வீரண்ணு, "என்ன சொன்னாலும் கேட்காமல் அப்பாஜி இங்கே வந்தேவிட்டார் சூரப்பா" என்றான்.

சூரப்பா : "பெற்று வளர்த்த ஊர். பார்க்க வேண்டுமென்று தோன்றுவது நியாயமே. ஆனால் நீங்கள் நாளைக்கு இங்கே தங்கும் யோசனையைச் செய்யாதீர்கள். உத்தய்யதக்கன் வந்திருக்கிறார். எங்கள் வீட்டில் அண்ணாவும், அவரும், லக்ஷ்மீநாராயணய்யாவும் கலந்து ஏதோ இரண்டு மூன்று விஷயங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். கிழவன் வெகு கெட்டிக்காரன். வேட்டை நாயைப்போல மோப்பம் பிடிக்கிறான்"

"சரி, புறப்பட்டுவிட்டால் போயிற்று."

"ஆமாம், இப்பொழுது சாப்பாடு?"

வீரண்ணு, "நீங்கள் பேசிக்கொண்டிருங்கள். நான் போய் சாப்பாடு வாங்கிக்கொண்டு வருகிறேன்" என்றான்.

அது தான் சரி என்று முடிவாயிற்று. வீரண்ணு ஊருக்குள் சென்றான். அப்பாஜி, "மூன்று விஷயங்கள் கேட்கவேண்டும் சூரப்பா. கடிதம் எழுதுவதும் செய்தி சொல்லியனுப்புவதும் பிரயோஜனப்படாது, நேரில் பேசுவதே நல்லது, போய்ப் பார்ப்போம் என்று நினைத்துத்தான் வந்தேன்" என்றான்.

சூரப்பா; "நல்லது. பிறந்த ஊரையும் பார்த்தாற்போல ஆயிற்று."

"ஆமாம், நமது சென்னவீரனின் சமாசாரம் என்ன ஆயிற்று? தெரியவே இல்லையே?"

"சென்னவீரனை இவர்கள் ஒழித்துவிட்டிருக்கவேண்டும். வெள்ளையர்கள் அவனை அனுப்பிவைத்தபோது அரசர் நால்கு நாடு காட்டுக்கு வேட்டைக்குப் போயிருந்தார். இவனையும் அங்கே அழைத்துக்கொண்டுபோனார்கள் என்று தெரிந்தது. அதற்கப்புறம் அவனை ஆளையே காணோம், மறுபடியும் தப்பித்துக்கொண்டு மலையாளத்துக்கு ஓடிப்போய்விட்டான் என்று செய்திவந்தது. வேண்டுமென்று அவர்களே கட்டிவிட்ட செய்தியாக இருக்க வேண்டும் அது. பசவன் அப்படிச் செய்யக் கூடியவன் தான். பொய் பேசுவது தான் அவனுக்கு அன்ன ஆகாரம்."

"என்ன படுபாவிகளாகி விட்டார்கள்?"

"பாவிகளா? பிசாசுகள் என்று சொல்லுங்கள். யமன் இவர்களுக்கென்றே ஒரு தனி நரகம் அமைந்துக் கொண்டிருக்க வேண்டும்."

"சரி, இனி நம்முடைய ஆட்கள் எப்படி?"

"நீங்கள் தீர்மானம் செய்தீர்களானால் நாளைக்கே அவர்கள் உங்களோடு சேர்ந்துகொள்ளத் தயார். நீங்கள் காலத்தை நிச்சயம் செய்து கொள்ள வேண்டியதுதான்."

"யோசிக்கவேண்டிய விஷயம் சூரப்பா, இவனோடு சண்டை போடவேண்டுமென்றால் இவ்வளவு நாட்கள் ஏன் சும்மா இருந்திருக்கவேண்டும்? நாடு அந்நியர் கைக்குப் போய்விடக்கூடாது. அது ஒன்றுதான் என் கவலை."

"நீங்கள் எப்பொழுதும் இப்படியே இருந்து விட்டீர்கள். மகனையும் அப்படியே செய்துவிட்டீர்கள். நாங்கள் என்ன செய்யமுடியும்? கொஞ்சம் அவசரப்பட்டுவிட்டவன் சென்னவீரன் தான். அவசரப்பட்டதற்கு தண்டனையும் ஆயிற்று. அதற்காகத்தான்

நான் சொல்லி அனுப்பினேன், இந்த விவகாரத்தில் தலையிடுவதானால் மனத்தைக் கல்லாக்கிக் கொள்ளவேண்டும் என்று."

"அப்படியே ஆகட்டும் சூரப்பா. இந்த வெள்ளையர்கள் வந்து என்ன செய்கிறார்கள் பார்ப்போம், இவன் பதவிக்கு மோசம் என்று கண்டால் உடனே நாம் முன்னடி எடுத்துவைக்கவேண்டியது தான்."

"முன்னடியோ பின்னடியோ அது அப்போது தீர்மானிக்க வேண்டிய விஷயம்."

"ஆமாம், அது சரி, இந்த 'காவேரி மக்கள்' சங்கதி என்ன?"

"சில இளைஞர்கள் அதில் சேர்ந்திருப்பதாகக் கேள்வி, எனக்கு எல்லா விவரமும் தெரியாது, அதில் யார் யார் இருக்கிறார்களென்றும் தெரியாது. ஆனால் வெளியே யாருக்கும் ஒன்றும் தெரியாதபடி காரியம் நடத்துகிறார்கள்."

"நல்லது. வேறென்ன செய்தி? தாயார் சௌக்கியமாக இருக்கிறார்களா? அண்ணா? வீட்டிலுள்ளவர்கள், குழந்தைகள் எல்லோருடைய சங்கதியும் தெரியவேண்டும்."

"எல்லாரும் சௌக்கியமாக இருக்கிறார்கள், ஆண்டவன் கிருபையால். மந்திரியாக இருந்துகொண்டு அண்ணாவின் பாடுதான் மிகவும் திண்டாட்டமாக இருக்கிறது."

மந்திரிக்குக் கஷ்டம் என்று சொல்வது செருப்புக்கு முள் என்று சொல்வதுபோல், அதனதன் தலையெழுத்து அது."

"மற்ற கஷ்டங்கள் இருக்கட்டும். அரசரே முள்ளாக இருக்கிறார். அந்த முள் ஜனங்களின் மீது குத்தாமலிருக்கட்டும் என்று இந்த செருப்பு மத்தியில் நின்று கொண்டிருக்கிறது."

"அதுவும் நல்ல காரியமே, ஜனங்களை முடிந்தவரையில் காப்பாற்றட்டும், ஆண்டவன் அவரைக் காப்பார."

65

அப்பொழுது வீரண்ணா ஒரு ஆளின் கையில் அவர்களுக்கு சாப்பாடு எடுத்துக்கொண்டு வந்தான். சூரப்பா, "நீங்கள் சாப்பிட்டு முடியுங்கள். நான் இங்கேயே இருக்கிறேன்," என்றான்.

தந்தையும் மகனும் சாப்பாட்டை முடித்துக்கொண்டார்கள். அப்பாஜி, "காளைக்கு இங்கிருப்பது வேண்டாமென்றால், இப்பொழுது போய் தீட்சிதரைப் பார்த்துவிட்டு, கோவில் வாசலிலேயே படுத்திருந்துவிட்டு, காலையில் எழுந்து புறப்படலாம்," என்றார்.

அப்படிச் செய்தால் களைப்பு அதிகமாகுமே என்ற எண்ணம் தோன்றியது. இருந்தாலும் தீட்சிதரைப் பார்க்காமல் போகக் கூடாது என்பதனால் அப்படியே செய்ய வேண்டியது தான் என்ற முடிவு ஏற்பட்டது.

வழியில் லக்ஷ்மீ நாராயணய்யாவின் வீடு. அங்கிருந்து சிறிது தூரம் தள்ளி இறக்கத்தில் தீட்சிதர் வீடு. அதற்கும் அப்பால் மேட்டில் போபண்ணாவின் வீடு. எல்லாரும் போக வேண்டாமென்று நிச்சயித்து சூரப்பா மட்டும் முன்னால் நடந்து சென்றான். இவர்கள் லக்ஷ்மீநாராயணய்யாவின் வீடடருகில் வரும்போது போபண்ணாவும், உத்தய்யதக்கனும் பேச்சை முடித்துக்கொண்டு வெளியே வந்திருந்தார்கள்.

அப்பாஜி சூரப்பாவிடம், "நாங்கள் வருகிறோமப்பா" என்றான். சூரப்பா, "நல்லது" என்று வீட்டின் முன்னால் வந்தான்.

அப்பாஜியின் குரல் அங்கே கேட்டதும் உத்தய்யதக்கன் இங்கே திடுக்கிட்டான். "குரல் யாருடையது ஐயா?" என்றான்.

போபண்ணா, "தெரியவில்லை" என்றார்.

அதற்குள்ளாக சூரப்பா அங்கே வந்து சேர்ந்தான். உத்தய்யன் அவனை, "யாரப்பா அது உன்னுடன் பேசியது?" என்று கேட்டான்.

சூரப்பன் யோசிப்பதற்குக் கொஞ்சம் நேரம் எடுத்துக் கொண்டு, "யாரைச் சொல்லுகிறீர்கள்?" என்று பதிலுக்குக் கேட்டான்.

"நாங்கள் வருகிறோம் என்றார்கள், நீங்கள் நல்லது என்றீர்கள்."

இதற்குள்ளாக என்ன பதில் சொல்வது என்று சூரப்பா முடிவு செய்து கொண்டுவிட்டான். "ஓ அவரா? யாரோ தெரியவில்லை. உங்களைத்தான் பார்க்கவேண்டும் என்றார். போபண்ணா மந்திரி வீட்டில் இருக்கிறாராம், அங்கே போகவேண்டும் என்று சொன்னார், நீங்கள் இங்கே நம் வீட்டில் பேசிக் கொண்டிருப்பதாகச் சொன்னேன். அங்கே போய்க் காத்திருக்கிறேன் என்றார்."

உதயய்யதக்கன்: "என்னைப் பார்க்கவேண்டுமென்றாரா? அப்படியானால் அது நான் நினைத்தவரின் குரல் அல்ல" என்றான்.

"இங்கேயே வாருங்கள் என்று அழைத்திருக்கக் கூடாதோ?" என்றார் போபண்ணா.

சூரப்பா, "நீங்கள் பேச்சை முடித்திருப்பீர்களென்று எனக்கென்ன தெரியும்? இப்போது வேண்டுமானால் போய் அழைத்து வருகிறேன்," என்றான்; வேகமாகப் போய் அப்பாஜி, வீரண்ணா இருவரிடமும் மெதுவான குரலில், "நான் சொன்னபடியே ஆயிற்று. உதயய்யதக்கன் வாசலிலேயே இருந்து உங்கள் குரலைக் கேட்டு நீங்கள் யார் என்று என்னைக் கேட்டார். நீங்கள் தீட்சிதரைப் பார்க்கவும் வேண்டாம், காலை வரையில் தங்கவும் வேண்டாம்; இப்பொழுதே ஊரைவிட்டுப் புறப்பட்டுவிடுவது நல்லது," என்றான்.

மூன்று பேரும் பேசி அது தான் சரி என்று முடிவு செய்தனர். சூரப்பா திரும்பி வந்து போபண்ணாவிடம், "அவர் வீட்டுக்கே வந்து பார்க்கிறேன் என்று சொல்லிவிட்டார்" என்று கூறி உள்ளே சென்றான். வீரண்ணா தந்தையை குசால நகரத்து வாசல் வழியாக ஒரு கணப்பொழுதில் ஊருக்கு வெளியே அழைத்துச் சென்றான்.

66

இவர்களெல்லாம் இங்கே பேசிக் கொண்டிருக்கும்போதே அன்று மாலை போபண்ணாவின் கணக்கப்பிள்ளை அரண்மனைக்குச் சென்று, "உதயய்யதக்கன் வந்திருக்கிறார், காலையில் வந்து அரசரைப் பார்க்க முடியுமா" என்று பசவனை விசாரித்தான். உதயய்யன் எதற்காக வந்திருக்கிறான் என்பதை பசவன் அறிவான். அவன் அரசனிடம் சென்று விஷயத்தைச் சொல்லி, "போபண்ணா சொல்லியனுப்பியிருக்கிறார். அக்கனைப் பார்க்கலாம்" என்றான்.

அரசன், "எதற்காகப் படியை நிறுத்தினாய்?" என்று கேட்டான். பசவன், "அரசரிடம் சொல்லி சரி என்ற பிறகே நிறுத்தினேன்" என்றான்.

"இல்லை என்று யாரடா சொன்னார்கள், விதவையின் மகனே! நீ நிறுத்தவேண்டும் என்று சொன்னாய், நான் சரி என்றேன். நிறுத்தவேண்டும் என்று நீ ஏன் சொன்னாய், அதைச் சொல."

உண்மையில் படியை நிறுத்தும் பேச்சை முதலில் ஆரம்பித்தவன் அரசன்தான். ஆனால் இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் அரசனின் தவறைத் தன் மேல் ஏற்றுக்கொள்ள பசவன் எப்பொதும் தயார். அவன் அரசனுக்கு, அந்தரங்கமானது இவ்வாறுதான்.

"அதையும் அப்பொழுதே தெரிவித்துக்கொண்டேன், அரசே. பெங்களூர் வெள்ளையர்கள் வருகிறார்களில்லையா? அவர்களில் பெண்களுக்குத் துணையாக இருக்க இரண்டு பெண்கள் ஏற்பாடு செய்யவேண்டுமென்று சொன்னீர்கள். அதை ஆளிடம் சொன்னேன். இந்தப் பெண் நன்றாக இருக்கிறது என்றார்கள். சொல்லி அனுப்பினேன். இவர் முடியாது என்றார். முடியாதென்று சொன்னார் என்று சும்மா இருப்பேனா? எல்லா இடங்களிலும் எல்லாரும் முடியாதென்று தான் சொல்லுகிறார்கள். தலைமேல் குட்டாமலிருந்தால் இவர்களுக்குப் பயம் இருக்காது. இந்தப் படியை நிறுத்திவிடுவோமா என்று கேட்டேன். அரசர் சரி என்றீர்கள்."

"ஊம். உன் பாடு குஷி தாண்டா நொண்டி! எப்பொழுதும் உன் வாயில் பெண்களின் பேச்சுத்தான். எனக்காக நான்கு நாட்கள், இப்பொழுது வெள்ளையர்களுக்காக."

"அரசர் சிரித்தால் எனக்கென்ன குற்றம்? உடல் ஆடுவது போல நிழலும் ஆடுகிறது. உங்களுக்கு வேண்டியது எனக்கும் வேண்டும். உங்களுக்கு வேண்டாமென்றபோது எனக்கும் வேண்டாம்."

"அப்படியென்றால் இதையெல்லாம் நீ எனக்காகவே செய்கிறாயென்று சொல்?"

"சந்தேகமில்லாமல் அரசே; இல்லாவிட்டால் நான் என்றைக்கோ தலைமீது துணியைப் போட்டுக்கொண்டு போயிருப்பேன்."

"கோபித்துக் கொள்ளாதேடா, கம்மனாட்டி; சும்மா வேடிக்கைக்குச் சொன்னேன்."

"என்னை வளர்த்த எஜமானன் சும்மா இல்லாமல் நிஜமாகவா என்னைத் திட்டப் போகிறீர்கள்? நீங்கள் காலால் காட்டியதை நான் தலைமீது சுமந்திருக்கிறேன். இதை நீங்கள் அறிவீர்கள்."

"இப்படிப்பட்ட சேவகன் எனக்கு இருந்தும் என் உடல்நிலை இப்படி ஆய்விட்டதேடா நொண்டி? மருந்தும் மாயமும் ஒன்றும் பலனளிக்கவில்லையே? இந்தப் பரங்கியர்களிடம் ஏதாவது இருக்குமோ என்னவோ. வந்தபோது கேள்."

"கேட்காமல் இருப்பேனா அரசே, கேட்கிறேன். எப்படியும் வரப் போகிறார்கள்."

"எப்படியாவது ஏதாவது செய்யவேண்டும். நெருப்பில்லை, ஜ்வாலையில்லை; வெறும் கரியாகிவிட்டதேடா."

"கெட்ட வார்த்தை சொல்லாதீர்கள் அரசே. எல்லாம் சரியாகப் போய்விடும். இந்தத் தக்கனை நாளைக்கு வரச் சொல்லுவோமா?"

"வரச்சொல். இரண்டு வார்த்தைகள் அதட்டி படியைக் கொடுத்துவிட்டால் போச்சு. அப்பாஜியவர்களுக்கு மிகவும் வேண்டியவனாக இருந்தான்."

"உத்தரவு அரசே. ஆனால் இரண்டு வார்த்தைகள் மிரட்டிப் பேசத்தான் வேண்டும். இல்லாவிட்டால் பழைய சலுகையை வைத்துக்கொண்டு நாட்டில் நமது பேச்சு எடுபடாதபடி செய்துவிடுவான்."

"அதட்டினால் போச்சு. வரச்சொல்."

67

மறுநாள் காலையில் உத்தயயதக்கன் வந்தான். பசவன் அவனை வரவேற்று அரசனிடம் அழைத்துக்கொண்டு போனான். கிழவன் அரசனிடம் வந்து கைகூப்பி, "கும்பிடுகிறேன் புட்டப்பாஜி, சௌக்கியமாக இருக்கிறீர்களா" என்று மிகவும் பிரியத்துடன் விசாரித்தான்.

அரசனுக்கு உடனே சிறு வயதின் நினைவு வந்தது. அவன், "வாருங்கள், தக்கரே, உட்காருங்கள். நீங்கள் சௌக்கியமா?" என்றான்.

தக்கன் கைகூப்பியவாறே அரசனின் எதிரில் ஜமுக்காளத்தின் மீதமர்ந்தான்.

அரசன், "என்ன விஷயம் தக்கரே? ஏதோ படி விஷயமாக வந்திருக்கவேண்டும் என்று பசவன் சொன்னான்," என்றான்.

தக்கன் : "ஆமாம். தொட்டராஜ அரசர் கொடுத்தது படி. நான் பார்ப்பனப் பையனை மூன்று மாதங்கள் தோளில் சுமந்து கொண்டு வந்து பூஜை நிற்காமல் பார்த்துக் கொண்டபொழுது அரசரிடமிருந்து படி பெறவேண்டுமென்ற ஆசையால் அதைச் செய்யவில்லை. ஆண்டவனின் திருப்பணி என்று எண்ணியே செய்தேன். அரசர் வாய்விட்டுச் சொன்னார்: 'உத்தய்யா, நம் உயிரைக் காப்பாற்றிக்கொள்ளும் வகையில் நாம் சுவாமியின் கதி என்ன என்று யோசிக்கவில்லை. நீ உண்மையில் ஆண் பிள்ளை. கடவுளின் பக்தன். உயிரைத் திருணமாக மதித்து பூஜையை விடாமல் நடத்திவிட்டாய். பத்து பேருக்குப் பொதுவான கடவுளுக்கு நீ ஒருத்தனே இவ்வளவும் செய்திருக்கிறாய். இப்படிப்பட்ட பக்தனைக் கடவுள் கைவிடமாட்டார். ஆனால் கடவுள் பார்த்துக் கொள்கிறார் என்று நாம் சும்மா இருந்துவிட்டால் நாம் அரசரே அல்ல. இந்தா எடுத்துக்கொள் அரண்மனை மரியாதையை. சுவாமிக்கு எப்படிப் படி நடக்கிறதோ அதேபோல அவர் பக்தனுக்கும் தினமும் ஒரு படி நெல் உனக்கு. உனக்கு வீட்டில் வேண்டிய அளவு தானியங்கள் இருக்கின்றன. அது கடவுள் கொடுத்தது. இது கடவுள் கொடுக்க வைத்தது' என்றார். அப்பொழுது நீங்கள் பிறந்திருக்கவில்லை புட்டப்பாஜி. அரசரின் பேச்சைக் கேட்டு எனக்கு நான்கு கைகள் வந்தாற்போல ஆயிற்று. தோள்கள் தினவு கொண்டன. அந்தச் சமயத்தில் எதிரே ஒரு புலி இருந்திருந்தால் இடது கையால் அதன் உயிரைப் பிழிந்தெடுத்திருப்பேன். வாலிபப் பருவம் பாருங்கள். பூரித்துப் போனேன்."

"சரி, இப்பொழுது வந்த விஷயத்தைச் சொல்லுங்கள்."

அரசனுக்கு ஆரம்பத்தில் இருந்த பொறுமை குறைந்துவிட்டது. அந்தக் கணத்தில் தூண்டிவிடப்பட்டிருந்த அன்பு மறுபடியும் மங்கிவிட்டது.

"சொல்லுகிறேன், கொஞ்சம் கேட்டுக் கொள்ளுங்கள். உங்கள் தந்தை என்னை அவருக்கு இணையாக மதித்து நண்பனாக ஏற்றுக் கொண்டார்கள். உங்களுக்கு மட்டும் சொல்லுகிறேன், இன்னொருவருக்குச் சொல்லக்கூடிய பேச்சல்ல இது. அவருடைய படுக்கையிலே படுத்துக்கொள்ளச் சொல்லிக்கூட ஒருமுறை என்னைக் கூப்பிட்டிருக்கிறார். நான் தான் 'அரசே, உங்களோடு அவ்வளவு சலுகையுடன் நடந்துகொள்வது தவறு; நான் மாட்டேன்' என்று கூறிவிட்டேன். அப்பொழுது தான் நீங்கள் பிறந்கீர்கள். உங்களை உங்கள் கந்கை எவ்வளவோ முறை என்

னிடம் கொடுத்திருக்கிறார். நான் உங்களைத் தூக்கியும் முத்தமிட்டும் விளையாட்டுக் காண்பித்துக் இருக்கிறேன்."

அரசன் ஏதாவது சொல்லட்டுமென்றே கிழவன் பேச்சைக் கொஞ்சம் நிறுத்தினான். அரசன் ஒன்றும் சொல்லவில்லை. உத்தப்பன் பேச்சைத் தொடர்ந்தான் "தொட்டராஜர் காலத்தில் இந்தப் படியை மகா நவமியன்று கொடுத்து வந்தார்கள். உங்கள் தந்தை நான்கு வருடம் அவ்வாறு நடத்தி பிறகு 'பிச்சை வாங்குவதற்குப் போர்வையை விரித்தாற்போல இந்தப் படிக்காக மடிகேரிக்கு ஏன் வருகிறாய். அங்கேயே வாங்கிக் கொண்டுவிடு' என்றார். கொடுக்கச் சொல்லி கணக்கப்பிள்ளைக்குச் சொல்லுகிறேன் என்றார். நீங்களும் அதேபோல நடத்தி வந்தீர்கள் இந்த வருஷம் வரையில். இந்த வருஷம் கணக்கப்பிள்ளை படியை நிறுத்திவிட்டார்கள் என்று சொன்னார். 'ஏனப்பா?' 'எனக்குத் தெரியாது.' 'யாரப்பா?' 'அரண்மனை.' 'அரண்மனையில் யாரப்பா?' 'எங்களுக்குத் தெரியாது.' 'நிறுத்தச் சொல்லி சொன்னது யார்?' 'மந்திரி.' 'எந்த மந்திரி?' 'எனக்குத் தெரியாது.' ஆயிற்றப்பா, தொட்டராஜரின் நாட்களில் பண்டிகையின் போது அரசரிடம் வரியாக கிடைத்து வந்ததுபோல கிடைக்கட்டும்; அதற்காகவேதான் இப்படி என்னை வரவழைத்தார்களோ என்று கேட்டுத் தெரிந்து கொண்டு போகலாமென்று வந்தேன்."

இது கபடமான பேச்சு; அரசனுக்குக் களைப்போடு கோபமும் சேர்ந்து கொண்டது. இந்தக் கிழவன் என்னைக் கிண்டல் செய்கிறான். இருந்தாலும் அரசன் ஒன்றும் சொல்லவில்லை. கிழவனைப் பேச விட்டான்.

"நேற்று வந்து போயண்ணா அவர்களையும் ஐயா அவர்களையும் பார்த்தேன். 'இது தங்கள் வட்டாரமல்ல, எல்லாம் பசவனின் அதிகாரம்' என்றார்கள். பசவய்யனை நான் என்ன போய்க் கேட்பது? சரிதான் என்று உங்களையே பார்த்துவிட்டுப் போகலாம் என்று வந்தேன். வந்தாயிற்று, சொல்லியாயிற்று. நியாயம் வழங்குங்கள், எனக்குத் தெரிவியுங்கள்."

68

அரசன், "அங்கே இருக்கிறயாடா பசவா" என்று கூப்பிட்டான். கதவுக்கருகில் நின்றுகொண்டிருந்த பசவன் உள்ளே வந்தான்.

அரசன் அவனிடம், "இவருடைய படியை ஏன் நிறுத்தினேம் என்று இவருக்குச் சொல" என்றான்.

பசவன், "புட்டம்மாஜிக்குத் துணையாக இருக்கட்டுமென்று இவர் ஊரில் ஒரு பெண்ணை அனுப்பச் சொன்னீர்கள். வாயில் வந்தபடி பேசினார்கள். முடியாது என்றார்கள். என்னய்யா இப்படிச் சொல்லுகிறீர்கள் என்று கேட்டதற்கு, எங்கள் தக்கர் இருக்கிறார் அவர் பார்த்துக் கொள்வார் என்றார்கள். தக்கரோடு அங்கே ஏன் சண்டை போடவேண்டும், அவரையே இங்கே வருமாறு செய்வோம் என்பதற்காக, அரசருக்குச் சொல்லி விட்டுப் படியை நிறுத்தினேன்," என்றான்.

ஒரு கணம் கழித்து அரசன், "என்ன தக்கரே?" என்றான்.

உத்தய்யனுக்குக் கோபம் வந்து விட்டது.

"தப்பு என்ன? தண்டனை என்ன? கால் நொண்டுகிறது என்பதற்காகத் தலையைச் சீவுவதா? இப்படிச் செய்யலாமா என்று மந்திரி அவர்களையோ, போபண்ணா அவர்களையோ கேளுங்கள் புட்டப்பாஜி."

"இதில் அவர்களைக் கேட்பதற்கு ஒன்றும் இல்லை."

"இது பசவய்யன் பேசுகிற பேச்சு; நானும் மந்திரி, அவர்களும் மந்திரிகள், நான் அவர்களுக்கு என்ன குறைச்சல் என்று. அவன் பாஷை உங்கள் வாயிலிருந்து வரக்கூடாதே. உங்களுக்குத் தெரியாதா, பெரியவர்கள் யார் சின்னவர்கள் யார் என்பது?"

பசவன் மிகக் கோபத்தோடு ஆனால் குரலை அடக்கிக்கொண்டு, "அரசர் என்னை மந்திரியாக்கிய பிறகும் நான் தக்கருக்கு இன்னும் பசவன், நொண்டி, நீ, அவன்," என்றான்.

உத்தய்யன், "தவறு பசவய்யா. நீ பெரியவன். உண்மைதான். எவ்வளவு பெரியவன் என்று உனக்கே தெரியாது. ஆனால் முப்பது வருடங்களாக வா போ என்று சொன்ன நா திடீரென்று வாருங்கள் என்று சொல்லமுடியாமல் திணறுகிறது," என்று கூறிவிட்டு அரசனிடம், "அறுபது வருஷங்களாகத் தக்கனாக இருப்பவன் இந்த மூன்று வருட மந்திரிக்கு மரியாதை கொடுக்க வேண்டுமாமே. அரசரையே புட்டப்பாஜி என்று அழைக்கும் நான் இதற்கு என்ன சொல்ல?" என்றான்.

அரசன், "அதை அப்புறம் பார்ப்போம், புட்டம்மாஜிக்குத் துணையாக அந்தப் பெண்ணை அனுப்புவதற்குக் குறுக்கே நின்றீர்கள் என்கிறானே, அதற்கு என்ன சொல்கிறீர்கள்?" என்று கேட்டான்.

"ஆஹா, அப்படியானால் அது தங்களுக்கும் சம்மதம் தானா? சொல்லுகிறேன்," என்று கூறி பசவனின் பக்கம் திரும்பி கிண்டலாக, "பசவய்யனவர்களே, இரண்டு நிமிடங்கள் சிறிது வெளியே சென்று நில்லுங்கள். நான் அரசரிடம் ஒரு வார்த்தை சொல்லிக் கொள்ளவேண்டும்," என்றான்.

அரசன், "அவனிருந்தால் பரவாயில்லை, தக்கரே, நீங்கள் சொல்லவேண்டியதைச் சொல்லுங்கள்", என்றான். இப்படிப் பட்ட சமயங்களில் அவனுடைய இந்த முரட்டுப் பிடிவாதம் அவனது பண்பற்ற வாழ்க்கைக்கு சகஜமானது.

"தங்களிஷ்டம் புட்டப்பாஜி. பெண்ணை புட்டம்மாஜிக்குத் துணையாக இருக்கட்டுமென்று தானே அழைத்தது? அதில் மோசம் இல்லையே?"

"என்ன மோசத்தைக் கண்டீர்கள்?"

"நான் கண்டிருந்தால் மோசம் என்று சொல்லியிருப்பேன். நீங்கள் கண்டதால் இல்லையா என்று கேட்கிறேன்."

"அப்படியானால் நம்மை இப்படிக் கேள்வி கேட்கக்கூடிய தைரியம் வந்து விட்டது உங்களுக்கு!"

"என் தைரியம் ரொம்பப் பழையது புட்டப்பாஜி. சாவதானால் இது வரையில் நூறு முறை நான் செத்திருக்கவேண்டும். என் புட்டப்பாஜி இப்பொழுது என் தலையை வாங்குவதானால் இது நூற்று ஒன்றாவது முறை நடக்கட்டும்."

பசவன் இடையே குறுக்கிட்டான். "அரசர் அப்படி என்ன சொல்லிவிட்டார், தக்கரே?"

உத்தய்யன் "ஒருவன் மனதை மற்றவன் அறிய முடியாது. ஆனால் எல்லோர் மனத்தையும் கடவுள் அறிவான். உங்கள் மனம் சுத்தமாக இருக்கிறதா என்று கேட்டேன். இருக்கிறது என்று சொல்லுங்களேன்."

பசவன், "சுத்தம் இல்லையென்று நீங்கள் ஏன் நினைக்க வேண்டும்?"

உத்தய்யன் "இதற்காகத்தான், புட்டப்பாஜி, இவர் வெளியே இருக்கட்டுமென்று சொன்னது. நானும் பசவய்யனும் பேசுவது கூடாது. நான் வந்தது அரசருடன் பேசுவதற்காக. பசவய்யனுடன் பேசுவதற்கு நான் தயாராக இல்லை," என்றான்.

அரசன், "சரி, சொல்லவேண்டியதைச் சொல்லி முடியுங்கள்" என்றான்.

உத்தய்யன்; "பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்கள். 'கரையில்லாத குளத்திலே வேரில்லாத தாமரை; உலகம் ஆடுகிற ஆட்டத்தையெல்லாம் பார்த்துக் கொண்டிருக்கிறான் சுவாமி, கதவை மூடினால் மறைக்க முடியுமா? விளக்கை அணைத்தால் இருளாகி விடுமா? மனத்தில் எண்ணம் தோன்றுமுன்னர் அவனெதிரில் உள்ளம் அம்மணம்.' என்னிடம் சொல்லலாம், புட்டம் ஜிக்குத் துணையாக என்று. உள்ளிருக்கும் ஆண்டவன்முன் என்ன சொல்வீர்கள்? கிழவன் எப்படியும் வந்துவிட்டேன். படியைத் திரும்பவும் அளித்தீர்கள், சந்தோஷம். அளிக்கவில்லை, பெரியவர்கள் தந்ததைச் சின்னவர்கள் பிடுங்கிக் கொண்டார்கள் என்று சிரித்துக் கொண்டே வீட்டுக்குப் போகிறேன். ஊரார் என்ன சொல்கிறார்கள் என்று பார்க்க வேண்டும். பெரியவரின் பிடியில் நாடு அடங்கியிருந்தது; சின்னவர் பிடியில் அவர்களுடைய விரல் கூட அடங்கவில்லையே! இதைப் பார்த்து கிழவன் நான் அழவேண்டியதாயிற்றே. தொட்ட ராஜர் சொல்ல வேண்டிய பேச்சு, உங்கள் தந்தை சொல்லவேண்டிய பேச்சு, அவர்களிருவரும் இல்லாததால் நான் சொல்லுகிறேன். மந்திரி ஐயா அவர்களையோ, போபண்ணா அவர்களையோ யாரைக் கேட்டாலும் சொல்வார்கள் வாழும் வகையை. கேட்கவேண்டியது ஏன், உங்களுக்கே தெரியும். ஒரு கணம் யோசித்தால் உங்களுக்கே விளங்கும். நல்ல வழியில் செல்லுங்கள், நீங்களும் வாழ்ந்து நாட்டையும் வாழ வையுங்கள். உத்தரவானால் நான் வருகிறேன்," என்று உத்தய்யன் எழுந்தான். அரசனுக்கு ஏகக் கோபம். அவனால் பேசக்கூட முடியவில்லை

உத்தய்யன் ஒரு அடி எடுத்து வைத்தான்; மறுபடியும் திரும்பி, "நாட்டின் விஷயம் அப்படி இருக்கட்டும், புட்டப்பாஜி: முதலில் இந்த உடம்பைப் பார்த்துக் கொள்ளுங்கள். அறுபது வருஷக் கிழவனானாலும் இன்னும் என்னால் ஒரு பெண்ணைக் கட்டியணைக்க முடியும். உடலின் சக்தியை விரயம் செய்தால் நிரம்பிய பாத்திரத்தைக் கவிழ்த்த மாதிரி தான், வயதும் பையன் கிழவனை விடக் கேவலமாகி விடக்கூடாது. கசப்பாகப் பேசுகிறேனென்று கோபம் வேண்டாம். அப்பாவின் நண்பன் நல்லதுக்குத்தான் சொல்கிறான் என்று எடுத்துக் கொள்ளுங்கள். நான் வருகிறேன். கும்பிடுகிறேன்," என்றான். கதவருகே நின்றிருந்த பசவனைத் திரும்பிக்கூடப் பார்க்காமல் வாசலைத் தாண்டிச் சென்றான்.

உத்தய்யதக்கன் அரசரின் அறையை விட்டு வெளியே பத்தடி நடப்பதற்குள்ளாக பணிப் பெண் ஒருத்தி அவனருகில் வந்து, "அம்மாஜி உங்களைக் கொஞ்சம் வந்து விட்டுப் போகச் சொல்கிறார்கள்" என்றாள்.

உத்தய்யன், "அப்படியா? இதோ வருகிறேன்" என்றான். அவள் அவனை ராணிவாசத்தின் வரவேற்புக் கூடத்துக்கு அழைத்துக் சென்றாள்.

அவனுக்காகவே ராணி அங்கே காத்துக்கொண்டிருந்தாள். அவளாகவே முதலில், "வணக்கம், தாத்தா, வாருங்கள், உட்காருங்கள், அரண்மனைக்கு வந்தவர் சிறிது பால் சாப்பிட்டு விட்டுப் போங்கள்" என்றாள்.

கிழவனின் கோபம் எங்கோ ஓடிவிட்டது; எதிரே நின்றிருந்த கம்பீரம் வாய்ந்த மலர்ந்த முகத்தோடு கூடிய உருவம் அவன் மனத்தில் நிறைந்தது; அவள் பேச்சிலே அவன் மெய் மறந்தான். அவன், "அம்மாஜி, தாங்கள் ராணி, கை கூப்பக்கூடாது. நான் மக்களின் தலைவன், கும்பிடுகிறேன்," என்றான்.

"மக்களின் தலைவனும் ஆம், பெரிய அரசரின் நண்பனும் ஆம் நமஸ்கரிக்கும் இந்தச் சிறியவளை ஆசீர்வதியுங்கள், உட்காருங்கள்."

தக்கன் அவள் காட்டிய இடத்திலே உட்கார்ந்துகொண்டான். எதிரே சிறிது எட்டி தன் ஆசனத்தில் உட்கார்ந்துகொண்ட ராணி, பணிப் பெண்ணிடம், "புட்டம்மாஜியை வரச் சொல், பாட்டனுக்கு வணக்கம் தெரிவிக்கட்டும்" என்றாள்.

ராஜகுமாரி உள்ளறையில் இருந்தாள், செய்தி கேட்டு அங்கே வந்தாள். "வணங்குகிறேன், தாத்தா" என்று உத்தய்யனுக்குக் கை கூப்பிவிட்டு தாயின் அருகில் வந்து அமர்ந்தாள்.

உத்தய்யன், "துரை மகள், நன்றாயிருக்கிறீர்களா தங்கச்சி? இப்படி வாருங்கள். மலரும் தாழை, பக்கத்தில் வந்து நின்று என் கண்களை நிரப்புங்கள்" என்றான்.

ராணி சிரித்துக்கொண்டாள்; மகளிடம், "பக்கத்தில் போய் நில், புட்டம்மாஜி, தாத்தா பார்க்கட்டும்" என்றாள்.

ராஜகுமாரி சிறிது வெட்கத்துடன் கிழவனின் எதிரில் வந்து நின்றாள்.

உத்தய்யன் தன் சிறு வயதில் நல்ல ரசிகன் என்று பெயர் வாங்கியவன். ஆனால் அவன் வாழ்க்கை எப்போதும் பாதை தவறியதாக யாரும் சொன்னதில்லை, அழகான முகத்தைக் கண்டால் கூச்சமில்லாமல் பார்த்து சந்தோஷப்படுவது அவன் சுபாவம். அதேபோல சமூகம் விதித்திருக்கும் எந்த நியமங்களையும் மீறாதபடி நடந்துகொள்வதும் அவன் இயற்கை. சமூகம் தடை செய்யாமலிருந்தாலும் கூட பல சமயங்களில் ஒரு விதமான தர்ம திருஷ்டியுடன் தனக்குத்தானே அவன் கட்டுப்பாடுகளை வகுத்துக் கொண்டதுண்டு. இவன் அரசனோடு பேசும் பொழுது லிங்கராஜன் தன்னை அவன் படுக்கையில் படுத்துக் கொள்ளுமாறு அழைத்தான் என்று சொன்னான். அது உண்மை. நடந்தது இது தான்; லிங்கராஜனும் பாப்பாவும் தொடர்பு கொண்டிருந்த நாட்களில் ஒரு நாள் இவன் பாப்பாவை மிகவும் மகிழ்ச்சியோடு பார்த்தான். இதைக் கவனித்த லிங்கராஜன் பிறகு இவன் காதில், "இன்றைக்கு அவளை உன்னிடம் அனுப்பட்டுமா?" என்று கேட்டான். உண்மையாகக் கேட்கிறானா, பரீட்சை செய்து பார்க்கிறானா என்று அவனுக்குப் புரியவில்லை. ஆனால் இவர்களிடையே கபடமோ, நடிப்போ அதுவரை இருந்ததில்லை, எனவே லிங்கராஜனின் பேச்சை உத்தய்யன் உண்மையென்றே எடுத்துக் கொண்டான். ஆனால் இப்படி ஒரு பெண்ணை இன்னொருவனுடன் பகிர்ந்துகொண்டு அநுபவிப்பதென்பது அவனுக்கு அசுசியாகப் பட்டது. மேலும் உதார குணம் பொங்குகிற அந்த நேரத்தில் இப்படி ஒரு தியாகம் செய்யத் தயாராக இருப்பவன், அந்த குணம் சிறிது குறைந்த உடன் இப்படிச் செய்து விட்டோமே என்று வருந்தக்கூடும்; சொன்ன உடன் சரி என்று விட்டானே என்று நண்பனின் மீது கோபமும் வரலாம். அவன் லிங்கராஜனிடம், "உங்கள் பெருந்தன்மையால் சுலபமாக இப்படிச் சொல்லிவிட்டீர்கள். ஆனால் இதை நான் ஏற்றுக்கொண்டு உங்கள் துணைவனாக வாழுவது இயலாது" என்றான். லிங்கராஜக்கு இவனது மன உறுதியைக் கண்டு, சந்தோஷமும் ஆச்சரியமும் ஏற்பட்டது. அவன், "நீங்கள் மிகவும் பண்பட்டவர், தக்கரே" என்றான். அப்படிப் பண்புள்ளவனாகையால் தான் சங்கோஜமில்லாமல் ராஜகுமாரியை நன்றாகப் பார்ப்பதற்காக பக்கத்தில் வந்து நில் என்று சொன்னான்.

அவள் வந்து எதிரே நின்றதும், உத்தய்யன் அவளைத் தலை முதல் கால் வரையில் பார்த்தான்; "காவேரித் தாயே எதிரே வந்து நின்றாற்போல இருக்கிறீர்கள், தங்கம்" என்றான்.

ராஜகுமாரி மகிழ்ச்சியுடன் நகைத்தாள்; வெட்கப் பட்டு கொண்டு திரும்பிச் சென்று தாயின் அருகே நின்றுகொண்டாள்.

ராணி உத்தய்யனிடம், "பெரியவர்கள் பார்த்து சந்தோஷப் படுவதே ஓர் அழகு, வளர்ந்த பேத்தியை தாத்தா பார்க்கவில்லை. தாத்தாவின் நண்பர் பார்த்து விட்டீர்கள்," என்றாள்.

"ஆமாம் அம்மாஜி, உங்கள் மாமனார் இருக்கவேண்டும் இப்பொழுது, எவ்வளவோ விஷயங்களுக்கு நன்றாக இருக்கும்."

"கடவுளுக்கு அது விருப்பமில்லையே, எப்படியோ எல்லாம் நல்லபடி ஆகுமாறு பெரியவர்கள் பார்த்துக் கொள்ளவேண்டும்."

"அதற்காகவே வந்தேன் அம்மாஜி. பெரிய அரசர் கொடுத்த படியை அரசர் நிறுத்திவிட்டதாகச் சொன்னார்கள். வேண்டாம் அரசே, ஊரில் கிளர்ச்சி ஏற்படும் என்று சொல்ல வந்தேன்."

"யார் செய்த தவறோ அது, அரசர் செய்ததாக நினைக்காதீர்கள் தாத்தா. படி நிற்காது. பெரியவர் ஏற்படுத்தியதை மகன் நிறுத்துவாரா? அரசரே செய்திருந்தாலும் உண்மையாகச் செய்ததல்ல, சும்மா சொன்னது என்றே நினைத்துக் கொள்ளுங்கள்."

"நல்ல தம்மாஜி. அரண்மனையில் இப்போது நம்மை ஆதரிப்பவர்கள் இல்லை யென்று நினைத்து வந்தேன். இருக்கிறேன் என்று ராணியே முன் வருகிறீர்கள். நீங்கள் சொன்னபடியே ஆகட்டும்."

அவன் இதைச் சொல்லிக் கொண்டிருக்கும்போதே ராணி மகளின் காதில், "தாத்தாவுக்குக் கிண்ணத்தில் பால் கொண்டு வந்து கொடு" என்றாள். ராஜகுமாரி உள்ளே சென்று தானே ஒரு தட்டில் பால் கிண்ணத்தை வைத்துக்கொண்டு வந்தாள். அவளுக்குப் பின்னால் பணிப்பெண் வெற்றிலை, பாக்கு, திராட்சை பேரீச்சை, சந்தனம் முதலியவைகள் வைக்கப்பட்டிருந்த ஒரு தாம்பாளத்தை எடுத்துக்கொண்டு வந்தாள்.

ராஜகுமாரி தன் முன் நீட்டிய கிண்ணத்தை எடுத்துக் கொண்டே தக்கன், "ஒரு குப்பியில் இரண்டு எண்ணை இருக்குமா? தாய் எப்படியோ மகளும் அப்படியே. தாத்தாவின் சிநேகிதனைக் கவனித்துக்கொள், தாயே" என்றான். பாலைக் குடித்து விட்டு கிண்ணத்தை மீண்டும் தட்டில் வைத்தான்.

பிறகு பணிப்பெண் கொண்டுவந்த தட்டிலிருந்து கை நிறைய வெற்றிலை, பாக்கு, திராட்சை, பேரீச்சைக்காய் முதலியவை களை எடுத்துக்கொண்டு, "நான் இனி வருகிறேன் அம்மாஜி" என்று எழுந்தான். ராணி, "பெரியவர்கள் போய்விட்டார்கள்; அவர்கள் ஸ்தானத்தில் இப்பொழுது நீங்கள் தான் இருக்கிறீர் கள். உங்கள் மகன் என்றே நினைத்துப் பார்த்துக் கொள்ளுங் கள். போய் வாருங்கள் தாத்தா" என்றாள். கை கூப்பினாள்.

ராஜகுமாரியும் கை கூப்பினாள். அவள் தன் முகத்தையே கூர்ந்து பார்ப்பதை அவன் முதலிலேயே கவனித்திருந்தான். இப்பொழுது மறுபடியும் அதைக் கவனித்தான். அவள் அப்படிப் பார்ப்பது தன்னுடைய மீசையைத்தான் என்று அவன் தெரிந்து கொண்டான். "புலியைக் கொன்று வளர்த்துக் கொண்ட மீசை தங்கச்சி. இப்பொழுது இருப்பவர்களைப்போல சுமமா பொய் அல்ல," என்று கூறிச் சிரித்தான். ராஜகுமாரியும் சிரித்தாள். கிழவனின் பெருமையைப் பார்த்து ராணிக்கும் சிரிப்பு வந்தது.

உத்தய்யன் மறுபடியும் ராணிக்குக் கை கூப்பிவிட்டு வெளியே புறப்பட்டான்.

70

உத்தய்யதக்கன் புறப்பட்டுச் சென்ற சிறிது நேரத்திற்கெல் லாம் அரசன், "டேய் நொண்டி, அங்கிருக்கிறாயாடா?" என்று அழைத்தான்.

பசவன் அங்கேயே இருந்தான்; "இருக்கிறேன், அரசே," என்றான்.

அரசன்: டேய், இந்தத் தடவை நான் படுத்தது முதல் அடிக் கடி எனக்கு தலைக்குள் குய்ஞ் என்று ஏதோ முறையிடுகிறாற் போல இருக்கிறது. குயவனின் சக்கரம்போல தலை சுற்றுகிறது.

பசவன்: ஆமாம் அரசே. உடம்பு இன்னும் தேறவேண்டும்.

அரசன்: உடம்பு தேறுவதா? கிழவன் சொல்லிவிட்டுப் போன தைக் கேட்டாயா?

பசவன்: அப்பாஜியவர்களின் சிநேகிதன் என்று அவருக்கு அவ்வளவு கர்வம் அரசே.

அரசன்: ஊம். பாரேன் அவன் திமிரை. கிழவன் அவனால் முடியும். மற்றவர்களால் முடியாதாமே! இவன் கொழுப்பைச் சிறிது அடக்கவேண்டுமடா.

பசவன்: சரி அரசே.

அரசன்: ஆனால் அவன் பேசிக் கொண்டிருந்தபொழுது அப்பாஜியே எதிரில் வந்து நின்றாற்போலிருந்ததடா எனக்கு.

பசவன்: பொய்யும் தானே.

அரசன்: இவனால் ஆகக்கூடியது ஒன்றுமில்லை. இருந்தாலும் அப்பாஜியவர்களுக்கு வேண்டியவன். இவனோடு மனஸ்தாபம் வேண்டாமடா.

பசவன்: சரி அரசே.

அரசன்: இவன் உறவினர்களில் போய்ப் பெண்ணைப் பிடிக்கப் பார்த்தது தப்பு.

பசவன்: உறவு என்பது பிறகு தான் தெரிந்தது அரசே. இவர்களில் எல்லாரும் எல்லாருக்கும் உறவுதான்.

அரசன்: போகட்டும் விடு. நான் செய்யச் சொன்னேன், நீ செய்தாய் இருந்தாலும் படியை நிறுத்தியது அவ்வளவு சரியல்ல.

பசவன்: ஆமாம் அரசே.

அரசன்: நிறுத்து என்று நான் சொன்னதுதான் தாமதம், உடனே நிறுத்திவிட்டாய்.

பசவன்: ஆம் அரசே.

அரசன்: இவன் மீசைக் கொழுப்பு மிகவும் அதிகமாகிவிட்டது. அதை அடக்கு. படியை மறுபடியும் கொடுத்துவிட்டதாகச் சொல்; போகட்டும், காட்டுப்பூனை.

பசவன்: சரி அரசே.

அரசன்: நேற்று விஷயம், இன்று விஷயம் எல்லாமாகச் சேர்ந்து தலை சுற்றுகிறதடா, நொண்டி. அந்தப் பாட்டிலை எடு.

பசவன் பாட்டிலை அரசனின் கையிலே வைத்தான். அவனுக்கு உத்தயயனின் பேச்சு ஒரே ஆச்சரியத்தை உண்டாக்கியது. எவ்வளவு உறுதியான பேச்சு. இவனை நேருக்கு நேர் விரோதித்துக் கொண்டது நல்லதல்ல, ரொம்பவும் கர்விஷ்டன் என்பது உண்மை. அதற்கு மறைமுகமாகப் பாடம் கற்பிக்கவேண்டும். வெள்ளையர்கள் வேறு வருகிறார்கள். அந்தச் சமயத்தில் இவன்

தம் பக்கமிருப்பது நல்லது. இப்படி யோசித்த அவன் ஒரு கணம் கழித்து அரசனிடம், "அப்படியானால் தக்கருக்கு இதை உடனே தெரிவிக்கிறேன்" என்றான்.

அரசன், "தெரிவி" என்றான்.

தக்கன் ராணியிடம் விடை பெற்றுக்கொண்டு வெளியே வந்த பொழுது பசவன் வாசலிலேயே அவனைப் பார்த்து, "அரசர் உமது படியைத் திரும்பவும் தரச் சொல்லிவிட்டார், தக்கரே" என்றான்.

தக்கனுக்கு மிகவும் மகிழ்ச்சி. "அப்படியா சொன்னார்? நல்லது பசவய்யா. என் வணக்கத்தை அவரிடம் சொல்," என்றான்.

தக்கனிடம் சொன்ன வார்த்தைகள் ராணியின் செவிகளிலும் விழுந்திருந்தன. அவளுக்கும் சமாதானம் ஏற்பட்டது.

71

உத்தய்யதக்கன் அரண்மனையிலிருந்து திரும்பி நடந்தவைகளை யெல்லாம் தெரிவித்தபொழுது லக்ஷ்மீநாராயணய்யா, "இந்த வேலை நல்லபடியாக முடிந்துவிட்டது போலிருக்கிறது" என்றார். போபண்ணா, "இது சரி. இனிமேலாவது இவர்கள் நமது பெண்களைச் சீண்டாமல் இருக்கவேண்டும். அவ்வளவுதான்," என்றார்.

உத்தய்யன்: ஐயோ போதும், இனி அந்தக் கவலையே வேண்டாம. பக்கத்திலிருந்து இதுவரை பார்த்திருக்கவில்லை. இனி இவன் பெண்களைச் சீண்டி ஏதும் செய்கிறாற்போலில்லை, ஐயா.

போபண்ணா: எல்லோரும் அப்படித்தான் நினைத்துகொண்டிருக்கிறோம். இருந்தாலும் இவர் சீண்டிக் கொண்டேதான் இருக்கிறார். விரும்பி வருகிற பெண்களே எவ்வளவோ பேர். விரும்பாத பெண்களை பாணேயிலிருந்து இழுத்து வருகிறார்கள்!

உத்தய்யன்; வேறு ஏதாவது பைத்தியமாக இருக்கவேண்டும். அலலது பசவனின் திருவிளையாடல் ஏதாவது இருக்கும்.

போபண்ணா: அதுவும் இருக்கலாம் தக்கரே. இருந்தாலும் அரசரோடு சேர்ந்து பெரிய மனிதன் ஆனேன் என்று சொல்வது போல பசவனோடு சேர்ந்து பெரிய மனிதன் ஆனேன் என்று சொல்வாரும் உண்டோ உலகில்?

உத்தய்யன்: உலகத்தைப் பற்றி இப்போது எதற்கு, நமக்கு எட்டாத சிகரம், அதன் ஆழத்தில் முழுக முடியாது, மேலேயும் இருக்க முடியாது. இவர் பேச்சு எப்படிப்போனாலும் ராணியம்மா வீட்டைக் காப்பாற்றிவிடுவார். நொண்டி வந்து சொல்வதற்கு முன்னாலேயே 'உங்கள் படி உங்களுக்கு மீண்டும் கிடைக்கும்' என்றாள். என் தாய், எதிரே வந்து நின்றால் காவேரித்தாயே வந்து நின்றாற்போல இருக்கிறது.

போபண்ணா: உங்கள் கண்ணும் அப்படி தக்கரே, அழகில்லாத பெண்களை நீங்கள் பார்த்ததே இல்லை.

இவர்களின் பேச்சு இங்கே நின்றது. பிறகு போபண்ணா லக்ஷ்மீநாராயணய்யாவிடம், "இனி ஐயா அவர்கள் போய் பாணே அவர்களின் விஷயம் தெரிந்து வரவேண்டும்" என்றார்.

லக்ஷ்மீநாராயணய்யா, "படி விஷயமாகப் பேசி அரசர் களைத் திருப்பாரானால் நான் நாளைக்கு அவரைப் பார்ப்பது தான் சரி" என்றார்.

போபண்ணா: இன்றைக்கு ஆயாசம் என்பதனால் நாளைக்குப் பார்க்கலாம்; நாளைக்கும் அலுப்பு என்றால் அதற்கு மறு நாள் பார்க்கலாம், எனக்கு எல்லாம் ஒன்றே. ஆனால் கூண்டுக்குள் விழுந்திருக்கும் அந்த எலியின் கதை வேறு, அதை இந்தப் பூனைகள் விழுங்காதிருக்கவேண்டும்.

உத்தய்யன்: ஆமாம் ஐயா, தாமதம் வேண்டாம், இன்றைக்கே போய்ப் பார்த்துப் பேசி முடித்துக் கொண்டே வாருங்கள்.

லக்ஷ்மீநாராயணய்யாவுக்கு இந்த வேலை பிடிக்கவில்லை, ஒரு நாள் தள்ளிப்போட்டால் அது வரையிலும் நல்லதாயிற்று என்பது அவர் எண்ணம். ஆபத்தில் சிக்கிக்கொண்டிருக்கும் அந்தப் பெண் விஷயமாக அவருக்குக் கருணை இல்லாமல் இல்லை, கருணையும் உண்டு. அவளை விடுவித்துக்கொண்டு வரவேண்டும் என்ற ஆத்திரமும் உண்டு. ஆனால் அப்படிச் செய்ய முற்படும் பொழுது அவ்வளவாக யோக்கியனல்லாத தன் அரசனுடன் எந்தக் கடுமையான வார்த்தையைப் பேசவேண்டி வந்து விடுமோ என்ற பயமும் உண்டு. அவர், "சரி, இன்றைக்கே போய்ப் பார்க்கிறேன்" என்றார்.

அன்று மாலை லக்ஷ்மீநாராயணய்யா இருட்டும் வேளையில் அரை மனத்தோடு அரசனைப் பார்ப்பதற்காகச் சென்று, தான் வந்திருக்கும் செய்தியைச் சொல்லி அனுப்பினார். வீரராஜன் என்றைக்கும் விட சிறிது அதிகமாகக் குடித்துவிட்டுப் படுத்திருந்தான். அப்பொழுது பசவன் அவன் அருகிலேயே இருந்தான். அரசன் அவனிடம், "ஐயா வந்திருப்பது எதற்காக என்று கேள்" என்றான். பசவன் வந்து, "என்ன விஷயம் என்று அரசர் கேட்கிறார்" என்றான். லக்ஷ்மீநாராயணய்யாவுக்கு விஷயத்தை அவனிடம் சொல்ல விருப்பமில்லை, நேரில் அரசரிடம் சொல்ல வேண்டும். அவர், "இப்பொழுது பார்க்க முடிந்தால் பார்க்கிறேன், நாளைக்கு வரச்சொன்னால் வருகிறேன்" என்றார். அரசனின் சௌகரியத்திற்குத் தக்கபடி அநுசரித்துக் கொள்வது போன்ற இந்தப் பேச்சில் தன் பேரிலுள்ள அவநம்பிக்கையும் இருந்தை பசவன் கண்டுகொண்டான். இப்படிப்பட்ட சூட்சுமத்தில் அவன் யாருக்கும் குறைந்தவனல்ல. அவன், "கேட்டுக் கொண்டு வந்து சொல்லுகிறேன் ஐயா" என்றான். உள்ளே சென்று இரண்டு நிமிஷங்களில் திரும்பிவந்து, "நாளைக்கு வருவதற்கு உங்களுக்கும் சௌகரியம் என்று சொன்னதற்கு அப்படியானால் நாளைக்கே வரட்டும் என்று உத்தரவிட்டார்" என்றான். லக்ஷ்மீநாராயணய்யா போனபடி திரும்பிவந்தார்.

லக்ஷ்மீநாராயணய்யாவின் தாயார் சாவித்ரம்மா இந்த விவகாரத்தைப் பற்றி அவ்வப்பொழுது விசாரித்துக் கொண்டிருந்தாள். அன்று மாலை மகன் அரசனைப் பார்க்கப்போவதை அறிந்து, "ஆண்டவன் அரசனுக்கு நல்ல புத்தியைக் கொடுத்து எல்லோரையும் காப்பாற்றட்டும்" என்று நினைத்துக்கொண்டாள். மகன் திரும்பி வந்ததைப் பார்த்தபொழுது அவர் அரசனைப் பார்த்திருக்கக்கூடும் என்றே அவளுக்குத் தோன்றவில்லை. லக்ஷ்மீநாராயணய்யா உள்ளே வந்து கொண்டிருக்கும் பொழுதே, "என்னடப்பா, புட்டப்பாஜியைப் பார்க்க முடியவில்லையா?" என்றாள். லக்ஷ்மீநாராயணய்யா, "இல்லையம்மா; நாளைக்கு வரச் சொல்லி பசவனிடம் சொல்லியனுப்பிவிட்டார்," என்றார்.

"நாளைவரையில் காக்கமுடியாது. அவசரமான சமாசாரம் என்று சொல்லவில்லையா?"

"எல்லாமே அவசரமான சமாசாரம் தான். இன்றைக்கு இது நாளைக்கு இன்னொன்று. அவருக்கு ஒன்றும் வேண்டாம். நாளைக்கு வரட்டும் என்றார். அவசரமான சமாசாரம் என்று சொல்லியிருந்தால் நாளை நின்று வரட்டும் என்று சொல்லியிருப்பார்."

"அவர் சொல்வதற்கு வெறுத்துக்கொண்டு நீ திரும்பி வந்துவிட்டாய். அந்தப் பெண்ணின் கதி என்ன ஆவது அப்பய்யா?"

"ஒரு நாள் தானே அம்மா?"

"உனக்கு ஒரு நாள். அவளைக் கொண்டுவந்து பத்து நாள் ஆயிற்று. பத்து நாள் பட்ட அவஸ்தையை இன்னொரு நாள் படட்டும் என்று சொல்வதா? என்னையோ உன் பெண்டாட்டியையோ இழுத்துக் கொண்டு போயிருந்தால் இப்படி இருப்போமா?"

"நல்ல வேளை அவ்வளவு தூரத்திற்கு இன்னும் வரவில்லை. அப்படி ஏதாவது நடக்க ஆரம்பித்தால் இந்த நாட்டின் கதி அவ்வளவு தான்."

"அப்பய்யா, ஜனங்களின் சேவைக் கென்று இருப்பவர்களுக்கு இன்னும் சிறிது உறுதி வேண்டும். நீர் ஆழம் என்று மீன் பயந்தால் எப்படி? உன் அப்பா இப்படி இருக்க மாட்டார். இப்பொழுது என்ன செய்யலாம் சொல். நான் போய்க் கேட்கட்டுமா, புட்டப்பாஜியை?"

"நீ அவரைச் செல்லமாக புட்டப்பாஜி என்கிறாய், அம்மா. பார்ப்பதானால் போய்ப் பார்; என்ன தப்பு? நீ புட்டப்பாஜி என்று கூப்பிடுகிறாற் போல அவர் சாதம்மாஜி என்று கூப்பிட வேண்டும். அவ்வளவு தான்."

"கூப்பிடுவார். கூப்பிடாமல் என்ன? அப்படிக் கூப்பிடாவிட்டால் என்ன, நான் அவரை விட்டுவிடுவேனா? எனக்கு உத்தியோகம் ஒன்றும் இல்லையே, அவர் பிடுங்கிக் கொள்வதற்கு? மந்திரியின் தாய் நான், மகனின் பேச்சை மீறிக்கொண்டு அரசனைப் பார்க்கப் போகிறேன்; என்னை என்ன செய்ய முடியும்? போய்ப் பார்க்கிறேன்."

இவ்வாறு சொல்லி சாவித்ரம்மா உள்ளே போய் மருமகளிடம் சொல்லிவிட்டு அரசனைப் பார்க்க அரண்மனையை நோக்கிப் புறப்பட்டே விட்டாள்.

அரண்மனைக்கு வந்து சாவித்ரம்மா ராணியைக் கண்டாள்; மெல்லிய குரலில் விஷயத்தையெல்லாம் ராணியிடம் சொன்னாள்; "நீங்களும் கூட வாருங்கள், அரசரை ஒரு பேச்சுக் கேட்கிறேன்" என்றாள்.

கௌரம்மாஜி, "நீங்கள் அரசரைப் பார்க்க நான் ஏன் கூட வர வேண்டும் அம்மா. நீங்கள் எடுத்து வளர்த்த பிள்ளை. யார் என்ன சொல்ல முடியும்?" என்றாள்.

"சரி தான். இருந்தாலும் அக்கிரகாரத்திலிருந்து வந்தவள் நேராக அரசரின் அறைக்குப் போக முடியுமா? புட்டம்மாஜியாவது கூட வரட்டும்; சாதம்மாஜி வந்திருக்கிறார் என்று போய்ச் சொல்லட்டும்."

ராணி மகளை அழைத்து, "புட்டம்மாஜி, சாதம்மாஜி வந்திருக்கிறார். அப்பாஜியவர்களைப் பார்க்கவேண்டுமாம். அவரிடம் அழைத்துக் கொண்டு போ," என்றாள்.

ராஜகுமாரி வந்து சாவித்ரம்மாவின் கையைப் பிடித்துக் கொண்டு அரசரின் அறைக்கு அழைத்துச் சென்றாள்: அவளை வாசலில் நிறுத்திவிட்டு தான் உள்ளே சென்று, "அப்பாஜி, சாதம்மாஜி வந்திருக்கிறார்; உங்களைப் பார்க்க வேண்டுமாம்," என்றாள்.

எந்த நிலையில் இருந்தாலும் வீரராஜனுக்கு மகளின் குரல் அமிர்தம் போல் செவிகளில் விழும். அல்லாமல் அப்பொழுது அவனுக்குக் குடிபோதை நன்றாக நீங்கியிருந்தது. அவன், "என்னவாம்?" என்று கேட்டான். அதற்குள்ளாக சாவித்ரம்மா உள்ளே நுழைந்துவிட்டாள். "ஒன்றுமில்லை, புட்டப்பாஜி. சின்ன விஷயம் தான். அதைச் சொல்லி சரி என்று உன்னிடம் கேட்டுக்கொண்டு போய் விடுகிறேன்," என்றாள். அரசனின் அருகில் வந்து நின்றாள்.

"என்ன அது, சின்ன விஷயம்?"

சாவித்ரம்மா ராஜகுமாரியிடம், "நீ அம்மாஜியிடம் போம்மா, நான் வந்துவிடுகிறேன்" என்று கூறி அவளை அனுப்பிவிட்டு வீரராஜனிடம் தாழ்ந்த குரலில், "பச்சைக் குழந்தை, அதன் காதில்

இந்த விஷயம் விழவேண்டாமென்று தான் அனுப்பி விட்டேன்," என்றாள்.

வீரராஜன், "அப்படியானால் ஏதோ பெண்கள் விஷயமாக இருக்க வேண்டும்" என்றான்.

"பெண் விஷயமாக இருப்பதனால்தான் அப்பாஜி பெண்ணே வந்திருக்கிறேன். ஆண் விஷயமாக இருந்தால் ஆண்களே வந்திருப்பார்கள்."

"எப்பொழுதும் அப்படி இல்லை பாட்டி. பெண் விஷயத்திற்கு ஆணும் ஆண் விஷயத்திற்குப் பெண்ணும் போவது தான் வழக்கம்," என்றான். இது அவனுடைய ஹாஸ்யம். இவ்வாறு சொல்லி அவன் தன் ஹாஸ்யத்தைக் கேட்டுத் தானே சிரித்துக் கொண்டான்.

"பெண்ணோடு இந்த சரசம் பேசலாம். கிழவி எனக்கு என்ன புரிகிறது? ராஜகுமாரன் பிறந்த பொழுது கையிலே எடுத்துக் கீழே படுக்க வைத்தவள் நான். இப்பொழுது ஒரு பெண் விஷயமாகவே வந்திருக்கிறேன். புட்டப்பாஜி அதை நடத்திக் கொடுக்க வேண்டும்."

"யார் அந்தப் பெண்?"

"பாணே பெண்; எங்கள் உறவு; இங்குள்ளவர்கள் கடத்திக் கொண்டு வந்திருக்கிறார்கள்; ஸ்திரீகள் விடுதியில் வைத்திருக்கிறார்கள்; அவள் புருஷன் வந்து முறையிட்டான்; மீட்டுக் கொடுங்கள் என்றான். எங்கள் புட்டப்பாஜியிடம் சொல்லி நான் மீட்டுத்தருகிறேன் என்று வாக்குக் கொடுத்துவிட்டு நானே புறப்பட்டு வந்தேன். ஆமாமப்பா. இந்தக் கிழவி பேச்சு நடக்கட்டும். அவளை வரவழைக்க வேண்டும்."

"பாணே பெண்! எனக்குத் தெரியாதே. விசாரித்து நாளைக்குச் சொல்லுகிறேன் அம்மா."

"விசாரிப்பதற்கும் சொல்வதற்கும் நேரமில்லை, புட்டப்பாஜி. இப்பொழுதே பசவனை அழைத்து அந்தப் பெண் இருந்தால் என்னோடு அனுப்பி விடும்படி சொல்லவேண்டும் ஒரு பெண்ணை விட்டுக் கொடுத்தால் மூன்று பெண்கள் வரும். ஒரு குடும்பத்தைக் கெடுப்பது நல்லதா என்ன? ஆள் ஜனங்களுக்கு அறிவு கிடையாது."

"அப்படியானால் என் கழுத்து மேலே உட்கார்ந்து வேலை செய்வதாக உங்கள் உத்தேசமா?"

"சே சே. அப்படிச் செய்வேனா புட்டப்பாஜி. என்ன வானாலும் அரசர் அரசரே. என் புட்டப்பாஜி என்னவரென்றாலும் அரசர் இல்லையா? நான் வேண்டிக் கொள்கிறேன் இந்த விஷயமாக. மடியில் தூக்கி வளர்த்த கிழவி வேண்டுகிறாளே என்பதற்காக அரசர் நடத்திக் கொடுக்க வேண்டிய விஷயம். இந்தக் கிழவியின் பேச்சைக் கேட்டு அந்தக் குடும்பத்தைக் காப்பாற்றினால் நாளைக்கு ராஜகுமாரியை ஆண்டவன் காப்பாற்றுவான். பெண் குழந்தைகள் எல்லாரும் ஒன்றே. நம்மவர்களானால் என்ன, பிறருடையவர்களானால் என்ன? நாளைக்கு புட்டம்மாஜிக்கு ஒரு கஷ்டமும் வரக்கூடாதல்லவா?"

தன் மகளைப் பற்றிய பிரஸ்தாபத்தை அவள் வேண்டுமென்றே எடுத்திருக்கிறாள் என்பதை வீரராஜன் அறிவான். கூடவே மகள் நன்றாக இருக்கவேண்டும் என்ற விருப்பத்தால் அவன் மனத்தில் சிறிது கலவரமும் தோன்றியது. அவன், "டேய் பசவா அங்கே இருக்கிறாயா? இதென்னடா இந்தக் கிழவியை என்மீது ஏற்றி விட்டிருக்கிறாயா? இங்கே வாடா, மண்டுகமே," என்று அழைத்தான்

உள்ளே நடக்கும் பேச்சையெல்லாம் பசவன் கதவருகே நின்று கேட்டுக் கொண்டு தானிருந்தான். அரசன் அழைத்தவுடன், "வந்தேன் அரசே" என்று சொல்லிக் கொண்டே உள்ளே வந்தான்.

வீரராஜன், "யாருடா அது பாணே பெண். பார்ப்பனப் பெண்ணாமே? இந்தக் கிழவி என் பிராணனை எடுத்துக் கொண்டிருக்கிறாள். என்னவாவது சொல்லி அனுப்பித் தொலை," என்றான்

"தொலை என்று திட்டினாலும் பரவாயில்லை, புட்டப்பாஜி. பெண்ணை மாத்திரம் அனுப்பி விடுங்கள். என்மீது உமிழ்ந்தாலும் தவறில்லை. உங்கள் தாயார் உங்கள் தங்கையைப் பெற்றிருந்தபொழுது நான் பிரசவ அறைக்கு வெளியே படுத்திருந்தேன், தங்களைப் பக்கத்தில் படுக்க விட்டுகொண்டு. நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்தவள் திடீரென்று ஏனோ விழித்துக் கொண்டேன்; காதில் என்னமோ தண்ணீர் விழுவதுபோல உணர்ச்சி ஏற்பட்டது. என்ன வென்று பார்த்தால் ராஜகுமாரன் மூத்திரம் விட்டிருந்தீர்கள். அன்றைக்கு மூத்திரம், இன்றைக்கு எச்சில்; அதனால் எனக்கொன்றுமில்லை. நான் வந்த காரியம் நடைபெற்றால் போதும்; சிரித்துக் கொண்டே போவேன்; உங்கள் குழந்தை நன்றாக இருக்க வேண்டுமென்று ஆசீர்வதிப்பேன்."

கிழவிக்கு மறுத்துச் சொல்வது எப்படி என்றே அரசனுக்கு விளங்கவில்லை. "சரி போ கிழவி, அழைத்துக் கொண்டுபோ. டேய் பசவா, சாதம்மாஜி கேட்கிற பெண்ணை அவரோடு அனுப்பி விடு," என்றான்.

பசவன், "யார் என்ன என்று பார்த்துக்கொண்டு வரட்டுமா அரசே?" என்றான்.

"போடா முட்டாளே. பார்த்து அழைத்துக் கொண்டுவர வேண்டுமா? இருந்தால் அழைத்துக்கொண்டுபோகட்டும் இல்லா விட்டால் அப்படியே போகட்டும். மறுபடியும் இந்த விஷயம் என் காதில் விழவேண்டாம். காலையிலெழுந்து அந்த கிழவன், மாலையில் இந்தக் கிழவி. இனி நீ வேறு பார்த்துவந்து சொல் கிறாயாக்கும். போ அப்பால், கிழவியை அழைத்துக்கொண்டு. கேயாச்சு, அவளாச்சு."

கிழவி வீரராஜனின் போவாயைத் தொட்டு, அசைத்து, "இப் பொழுதுதான் என் புட்டப்பாஜி. இதற்காகத் தான் நான் வந்தேன். என் ராஜகுமாரனுக்கு எல்லாம் நல்லதே ஆக வேண்டும்: அவன் குழந்தை நன்றாக வாழவேண்டும். நான் வருகிறேனப்பா," என்றாள். பசவனுடன் புறப்பட்டாள்.

அவள் நான்கு அடி போயிருப்பாள், கதவைத் தாண்ட வேண் டும். வீரராஜன் கிழவியை அழைத்து, "எந்தக் காதில் பாட்டி மூத்திரம் விழுந்தது? வலது காதா, இடது காதா?" என்று கேட்டான்.

"வலது காதப்பா. நன்றாக ஞாபகம் இருக்கிறது."

அரசன், "அதனால்தான் இருக்கவேண்டும், நீங்கள் இவ்வளவு நான் பிழைத்திருக்கிறீர்கள்," என்று கூறி 'கொல்' லென்று சிரித்தான். கிழவியும் சிரித்துக் கொண்டே பசவனுடன் சென்றாள்.

74

பசவனுடன் வெளியே வந்த கிழவி, "இதோ வந்துவிட்டேன், பசவய்யா, ஒரே நிமிடம்" என்று கூறி ராணி வாசத்துக்குச் சென்று, "புட்டப்பாஜி, அந்தப் பெண்ணை விட்டுவிடும்படி பசவய்

யனிடம் சொல்லிவிட்டார் அம்மாஜி. கடவுள் கிருபை," என்று தெரிவித்தாள். ராணி, "ரொம்பவும் நல்ல காரியம் செய்தீர்கள் பாட்டி. அரண்மனையின் மரியாதையைக் காப்பாற்றினீர்கள்" என்றாள்.

கிழவி, "நான் போய்வரட்டுமா? மறுபடியும் வந்து எல்லாவற்றையும் சொல்கிறேன். இப்பொழுது அந்தப் பெண்ணை வெளியே அழைத்துவரவேண்டியது முதல் வேலை," என்றாள்.

ராணி அருகிலிருந்த வெற்றிலை பாக்குத்தட்டை எடுத்து வெற்றிலை பாக்கை கிழவியின் கைகளில் கொடுத்தாள். "சரி பாட்டி, போய் வாருங்கள். இன்றைக்கே அந்தப் பெண்ணை வீட்டுக்கு அழைத்துக்கொண்டுபோய் விடுங்கள்," என்றாள். கிழவி தன் வயதுக்கு மீறிய சுறுசுறுப்புடன் வேகமாக பசவன் இருக்குமிடம் வந்து, "பசவய்யா, அந்தப் பெண்ணை அழைத்துக்கொண்டு வருகிறாயா?" என்று கேட்டாள்.

பசவன், "வாம்மா என்று கூப்பிட்டால் அந்தப் பெண் அங்கிருந்து வந்து விடுவாளா? நீங்கள் வந்து அழைத்துக்கொண்டு வந்தால் உண்டு. நான் போய் வெளியேவா என்று அழைத்தால் அவள் தற்கொலையே செய்து கொண்டு விடுவாள்," என்றான்.

"அதுவும் வாஸ்தவமே" என்று கூறி கிழவி "நட, நானே வருகிறேன்" என்றாள்.

இருவரும் ஸ்திரீகள் விடுதிக்குச் சென்றார்கள்.

"அரசர் உங்களை வீட்டுக் கனுப்பச் சொல்லிவிட்டார்; மந்திரி லக்ஷ்மீநாராயணய்யாவின் தாயார் உங்களை அழைத்துக் கொண்டு போவதற்காக வந்திருக்கிறார்" என்று சொன்னபொழுது பாணே நாகம்மாவுக்கு நம்பிக்கை பிறக்கவில்லை. அவள், "எனக்குத் தெரிந்தவர்கள் யாராவது வந்தால் நான் அவர்களோடு வருகிறேன், நீங்கள் என்னை வேறு எங்கோ இழுத்துச் செல்லப் பார்க்கிறீர்கள்," என்றாள். சாவித்ரம்மா அவள் அருகே சென்று, "பாரம்மா, உன் புருஷனே வரவேண்டுமென்றாலும் போய் அனுப்பிவைக்கிறேன். எனக்குக் கஷ்டமில்லை. அனால் எதற்காக வீண் தாமதம்? ஒரு நாழிகை முன்னதாகவே இந்த இடத்தை விட்டுப் புறப்படு. என்னைப் பார்த்தால் மோசம் செய்பவள் போலவா இருக்கிறது?" என்றாள்.

"பாட்டி, நீங்கள் மிகவும் பெரியவர் என்பது உண்மை. ஆனால் எனக்குப் பழக்கமில்லையே, இங்கே இருப்பவர்கள் மிகவும் நல்லவர்கள் மாதிரிப் பேசி ஏமாற்றப் பார்த்திருக்கிறார்கள்."

கிழவி "நல்லதம்மா, உன் பயம் உனக்கு. அதில் தவறில்லை. பசவய்யா, கொஞ்சம் எங்கள் வீட்டுக்குச் சொல்லி அனுப்பி பாணே சூர்யநாராயணன் வரவேண்டுமென்று தெரிவியப்பா, எனக்கும் ஆயாசமாக இருக்கிறது. நான் இங்கேயே இருக்கிறேன்."

பசவன் வெளியே சென்று ஒரு சேவகனை அழைத்து அவள் சொன்னபடி செய்தியனுப்பினான்.

ஆள் புறப்பட்டுச் சென்ற இரண்டு நிமிடங்களுக்கெல்லாம் நாகம்மா, "நீங்கள் என்னைக் காப்பாற்ற வந்திருக்கிறீர்கள் பாட்டி. வாருங்கள் போவோம், போகும்போது வழி தவறு, எங்கோ போகிறோம் என்று தோன்றினால் நான் கழுத்தை நெரித்துக்கொண்டு இறந்து போவேன்," என்றாள்.

"நீ செய்தாலும் செய்வாய், துணிச்சல்காரிதான். எதைப் பார்த்து முடிவு செய்து விடுவாயோ நானென்ன கண்டேன். இரு, உன் புருஷனே வரட்டும், சேர்ந்தே போவோம்," என்றாள்.

ஆள் சென்று சூர்யநாராயணனை அழைத்து வருவதற்கு மூன்று நாழிகைக்கு மேல் ஆயிற்று. கிழவி ராமஜெபம் செய்துகொண்டு உட்கார்ந்திருந்தாள். சூர்யநாராயணன் வந்த ஓசை கேட்டதும் எழுந்து, "வாப்பா, உன் பெண்டாட்டிக்கு தைரியம் சொல், அவளை அழைத்துக்கொள்" என்றாள்.

சூர்யநாராயணன் தரையில் விழுந்து தன் தலையைக் கிழவியின் பாதங்களில் பதிய வைத்தான். "என் வீட்டின் மானத்தைக் காத்த தேவி நீங்கள். பாட்டி, என் மானத்தையும், என் மனைவியின் உயிரையும் காப்பாற்றினீர்கள்," என்றான்.

"காப்பாற்றுவது கடவுளப்பா, மனிதர்கள் என்னத்தைக் காப்பாற்ற முடியும்? அப்படி யாராவது காப்பாற்றினார்கள் என்று சொல்வதானால் நமது புட்டப்பாஜி காப்பாற்றினார் என்று தான் சொல்லவேண்டும், கேட்டது தான் தாமதம், அழைத்துக் கொண்டு போ என்று சொல்லிவிட்டார்."

அப்பொழுது நாகம்மா உள்ளேயிருந்து வெளியே வந்து சாவித்ரம்மாவின் காலில் விழுந்தாள். "நான் அணுவளவும் தவறவில்லை, யாரும் என்னை ஏசாதபடி என் கணவர் பார்த்துக் கொள்ள வேண்டும். அவருக்கு இதைச் சொல்லுங்கள் பாட்டி" என்று வேண்டிக்கொண்டாள்.

சூர்யநாராயணன், "யார் உன்னை ஏசுபவர்கள்? ஏசினால் நான் பார்த்துக்கொள்கிறேன்," என்றான்.

சாவித்ரம்மா, "நீயே என்றைக்காவது கோபத்தில் ஏளனமாகப் பேசக்கூடுமல்லவா? எங்கே, என் கைமேல் கைவைத்துச் சொல், என்றைக்கும் அப்படிச் செய்யமாட்டேனென்று?" என்று கை நீட்டினாள்.

சூர்யநாராயணன் கிழவியின் கையைத் தன் கையால் பற்றி தன் கண்களில் ஒற்றிக்கொண்டான், "நான் இவளை அவதூறாகப் பேசினால் எனக்கு ரௌரவ நரகம் சித்திக்கட்டும்" என்றான்.

நாகம்மா இது வரையில் தடுத்துக் கொண்டிருந்த துக்கத்தை அதற்கு மேலும் அடக்கிக்கொள்ள முடியவில்லை. அவள், "ஐயோ உங்களுக்கு இப்படிப்பட்ட அவமானத்தைக் கொண்டுவரவேண்டுமென்று என் தலையில் எழுதியிருந்ததே," என்று கணவனின் தோள் மீது தலையைப் புதைத்துக்கொண்டு விம்மினாள். சூர்ய நாராயணன் எல்லோர் எதிரிலும் மனைவியைச் சமாதானப் படுத்துவதற்கு சங்கோசப்பட்டான்; ஆனால் அவளைச் சமாதானப் படுத்தவேண்டியது மிக அவசியம் என்பதை உணர்ந்தான். எனவே அவள் முதுகைத் தட்டிக்கொடுத்தபடி, "ஒன்றும் ஆகவில்லை; நீ சும்மா இரு; அம்பிகை இந்தப் பாட்டியின் உருவில் வந்து காப்பாற்றிவிட்டாள்! ஒரு நாழிகைக்கு முன்னால் நீ இதை நினைத்திருப்பாயா? இவ்வளவு செய்த கடவுள் மற்றவைகளையும் பார்த்துக்கொள்வார். சிரிக்கவேண்டிய சந்தர்ப்பம் இது; அழாதே" என்றான். தனது மேல் வஸ்திரத்தால் அவள் கண்களைத் துடைத்தான்.

தம்பதிகளிடையே நடந்த இந்தப் பேச்சு அங்கிருந்த எல்லோர் மனத்தையும் நெகிழவைத்தது. பசவனுக்கும் கூட மனத்தின் ஏதோ ஒரு மூலையில் சிறிது கலக்கம் ஏற்பட்டது.

கிழவி, "ஊம், இனி போகலாம், வாருங்கள்" என்றாள். எல்லோரும் அங்கிருந்து புறப்பட்டார்கள்.

75

அரசனின் தங்கை தேவம்மாஜி அரண்மனையிலிருந்து விடுதலை பெற்று அப்பங்கொளத்துக்கு வந்தபோது சென்ன பசவனுக்கு

மகிழ்ச்சியைவிட ஆச்சரியமே அதிகமாக இருந்தது. ஆச்சரியத்தையும் மீறி நின்றது ஒரு வகையான துணிச்சல், அவன் உள்ளத்திலே.

"அம்மாஜி வந்து கொண்டிருக்கிறார், பல்லக்கு இந்நேரத்திற்கு பாதிவழி வந்திருக்கவேண்டும்" என்று ஒரு ஆள் வந்து சொன்ன போது அப்பங்கொளத்து அரண்மனைப் பரிவாரம் அதை நம்பவில்லை, ஆனால் விளக்கு வைக்கும் நேரத்தில் தேவம்மாஜி வந்தே விட்டாள். அவள் கர்ப்பிணியாக இருக்கிறாள். சென்னபசவன் பெரிய அரண்மனைக்குப் போனதும், அங்கே மனைவியைச் சந்தித்ததும் அவர்களுக்குத் தெரியாது. ஆகையால் அவர்கள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக்கொண்டனர்; எஜமானியை வரவேற்று அரண்மனைக்குள் அழைத்துக்கொண்டு சென்றனர்.

முதிய பணிப் பெண் ஒருத்தி அருகில் வந்து "கொஞ்சம் பால் சாப்பிடுகிறீர்களா அம்மாஜி. வழி வந்த களைப்பு நீங்கும்" என்றாள். இன்னொரு பணிப் பெண் தட்டில் பால் கிண்ணத்தை வைத்து எடுத்துக்கொண்டு வந்து தந்தாள்.

சென்னபசவன் பல்லக்கு வந்தபோது வாசலிலேயே நின்று கொண்டு, "எப்படி இருக்கிறாய்?" என்று கேட்டு வரவேற்றான். அவள், "நீங்கள் எப்படி இருக்கிறீர்கள்? ரொம்பவும் இளைத்துப் போய் விட்டீர்களே?" என்று கேட்டு விட்டு உள்ளே சென்றாள். சென்னபசவன் இரண்டு நிமிடங்கள் தன் அறைக்குச் சென்று பணிப் பெண்கள் அவளை உபசரிப்பதற்கு அவகாசம் கொடுத்து விட்டு பிறகு அவள் அறைக்குச் சென்றான். அவள் பக்கலில் சென்று அமர்ந்தான். பணிப் பெண்கள் அவ்விடம் விட்டகன்றனர்.

"என்ன சமாசாரம், திடீரென்று உன்னை அனுப்பிவிட்டானே? பெங்களூரிலிருந்து உதை வாங்கிக் கொண்டிருக்கவேண்டும்."

"இதற்கும் பெங்களூருக்கும் சம்பந்தமில்லை, நீங்களாக நினைத்துக்கொள்வது தான்."

"உனக்குத் தெரியாது, ஒரு மாதத்திற்கு முன்னால் கடிதம் எழுதினேன். இந்தக் கொடியவன் தன் தங்கையைத் தன்னிச்சைப்படி நடக்குமாறு வற்புறுத்துகிறான், இவனுக்குத் தக்க தண்டனை அளிக்கவேண்டும் என்று. அவர்கள் ஜாக்கிரதை என்று கடிதம் எழுதியிருக்கவேண்டும், பயந்து விட்டான்."

"ஊம், அவனைத் திட்டுவதற்காக என் மரியாதையைத் தெருவில் இழுத்துக் கொண்டிருக்கிறீர்கள். அந்தப் பாழாய்ப் போன

வர்கள் உங்கள் கடிதத்தைப் படித்து விட்டு இவள் கணவனை விட்டு விட்டு அண்ணனோடு குலவுகிறாள் என்று பேசிக்கொள்ள வேண்டும். இப்படிப் பட்ட பெண் எப்படி இருப்பாளோ என்று இங்கே வரும்போது அவர்கள் என்னைப் பார்க்கவேண்டும். உங்கள் உள்ளம் குளிரவேண்டும்."

"உடன் பிறந்தவள் நீ. உன் அண்ணனுக்குப் பரிந்துகொண்டு பேசு. எனக்கென்ன தாட்சண்ணியம்? அண்ணனை சிம்மாசனத்தி லிருந்து இறக்கி தங்கையை அங்கே உட்காரவைக்காவிட்டால் என்னுடைய மீசையை எடுத்துவிட்டு நாய் மயிரை ஒட்டவைத் துக் கொள்கிறேன். என்னை என்னவென்று நினைத்திருக்கிறான் இந்த வேசி மகன்?"

"அவனை வேசி மகன் என்று கூறி நீங்கள் வேசி மருமகன் ஆகி றீர்கள். என்னைப் பெற்ற தேவக்காஜி நூறு வேசிகளை ஆண்டாள், ராணியாக இருந்தாள். உங்களுக்குள் இருக்கும் கலகத்தினால் என் தாய் தந்தையின் பெயர்களைக் களங்கப்படுத்த வேண்டாம்."

"தந்தை தாயை யார் என்ன சொன்னார்கள்? மகனின் முகத் தில் உமிழ்ந்தேன். அதில் ஒரு துளி அவர்கள்மேல் தெரித்தது. இப்படிப்பட்ட மகனைப் பெற்ற தாய் தந்தையரின் பெயர் எப்படி மாசுபடாமல் இருக்க முடியும்?"

"போகட்டும் விடுங்கள்; அவர்கள் கேட்டு வந்தது, அவர்களோடு நான், என்னோடு நீங்கள் கேட்டு வந்தது அவ்வளவுதான். நாம் அநுபவித்து மிகுந்த பாக்கியத்தை அநுபவிப்பதற்கென்று என் வயிற்றில் வேறு ஜனித்திருக்கிறது இன்னொரு ஜீவன்!"

சென்ன பசவன் தன் முகத்தை மனைவியின் முகத்தருகே கொண்டு சென்று, "வயிற்றெரிச்சலால் ஏதேதோ பேசிவிட் டேன். நீ தவறாக நினைத்துக் கொள்ளாதே. எத்தனை மாதம் இப்பொழுது?" என்று கேட்டான்.

"ஏழு மாதம் நிறைந்துவிட்டது. நான் அங்கே அநுபவித்த தொல்லைகளினால் எங்கே குறைப் பிரசவம் ஏற்பட்டுவிடுமோ என்று நினைத்தேன். நேற்றுகூட அப்படி ஏற்பட்டுவிட்டால் நல்லது என்று நினைத்தேன். நமக்குத் தான் சிறைவாசம் தலை யில் எழுதியிருந்தது. இது ஒன்று சிறையிலேயே பிறக்கவேண் டுமா என்று தோன்றியது. இன்று கடவுள் கண் திறந்தார். குழந்தை சிறையில் பிறக்காது. அதன் வீட்டிலேயே பிறக்கும். குழந்தையின் நல்ல தலையெழுத்து தான் என்னை இப்பொழுது இங்கே கொண்டு வந்திருக்கிறது. எப்படியோ, பிரிந்துபோன

கணவனை மறுபடியும் அடைந்தேன். கண் திறந்த கடவுள் திறந்தே இருக்கட்டும். உங்களையும் உங்கள் வம்சத்தையும் காப்பாற்றட்டும்."

கணவன் மனைவி இருவரும் ஒருவரை ஒருவர் விரும்பியதில் குறைவில்லை. அதே போல இருவருக்கும் அரசனின் மீது கோபமும் உண்டு. ஆனால் மைத்துனனான சென்ன பசவனின் கோபத்திற்கும், அந்த வீடடுப் பெண்மகளான தேவம்மாஜியின் கோபத்திற்கும் வித்தியாசம் உண்டு.

இருவரும் இன்னும் சிறிது நேரம் அப்படியே பேசிக்கொண்டிருந்தனர். தேவாம்மாஜி தான் விடுதலை பெற்று வந்ததன் காரணத்தைச் சொன்னாள். அப்படிச் சொல்லும்பொழுது பசவன் தன்னைத் தொடைமேல் உட்காரவைத்துக் கொண்டது, தன் மார்பின்மீது கை வைத்து அணைத்துக்கொண்டது இவைகளை மட்டும் சொல்லவில்லை. அது ஏன் என்று விவரிக்கவேண்டியதில்லை. இதுபோன்ற ஆபாசங்களை நினைப்பதே பெண் உள்ளத்திற்கு சம்மதமாகாது. நினைவு வந்தாலும் அதைக் கணவனிடம் சொல்வது ஆபத்து என்பதை அவள் மனத்தின் ஆழத்தின் ஆழத்தில் அறிந்துகொண்டாள். பலாத்காரமாக இவ்வளவு தூரம்செய்தமுடன் இன்னும் என்னவெல்லாம் செய்திருப்பானோ என்று கணவனைப்பட்டவன் சந்தேகம் கொள்வது இயற்கை. மொத்தத்தில் அவள் சொன்னதிலிருந்து மருமகள் கௌரம்மா மிகவும் நல்லவள், பிரியமுள்ளவள், தாட்சண்ணியம் உள்ளவள் என்பது தெரிய வந்தது. "தாயும் மகளும் சேர்ந்து என்னைக் காப்பாற்றினார்கள்" என்று கூறி தேவம்மாஜி அவர்களை வாயாரப் புகழ்ந்தாள்.

ஆள் வந்து சாப்பாடு தயாராயிருப்பதாகச் சொன்னதும் இருவரும் சாப்பிடச் சென்றார்கள்.

மறுநாள் சூர்யோதயத்திற்கு முன்னர் தேவம்மாஜி ஓர் ஆண் மகவை ஈன்றெடுத்தாள்.

76

குழந்தை பிறந்த சங்கதியை மடிகேரி அரண்மனைக்குச் சொல்லி அனுப்பினார்கள். அப்பங்கொளம் அரண்மனையில் எல்லோருக்கும் மிகவும் சந்தோஷம்.

அரண்மனையில் நிர்பந்தத்தாலும் கஷ்டங்களை அநுபவித்துக் கொண்டும் சிறையில் இருந்தபொழுது கர்ப்பம் தரித்ததனாலும், கர்ப்பமாக இருந்த நாட்களிலெல்லாம் தாய் துயரத்தால் வாடிக் கொண்டிருந்ததாலும், ஒன்பது மாதங்கள் நிரம்பாமல் ஏழு மாதம் நிரம்பியதுமே குழந்தை பிறந்துவிட்டதாலும் குழந்தை சாதாரண மாக இருக்கவேண்டியதைவிட மிகச் சிறியதாக இருந்தது. ஆனால் லட்சணமாக இருந்தது. கடைசி இரண்டு நாட்களின் கொடுமையைத் தாளாமல் பிரசவம் சீக்கிரம் ஆகியிருக்கவேண் டும். சிறையிலிருந்த தாயை விடுவித்துக்கொண்டு வந்து தன் அரண்மனையிலேயே பிறந்த இந்தக் குழந்தை மிகவும் புண்ணிய சாலி என்று பிரசவத்தின்போது அருகே இருந்த தாதி ஒருத்தி சொன்னாள். அதைக் கேட்ட எல்லோரும் அது நிஜம் என்றார்கள்

மடிகேரி அரண்மனையிலிருந்து குழந்தை, தாய் இருவருக்கும் மங்கள வஸ்துக்களும் பரிசுகளும் சீராக அனுப்பப்பட்டு வந்து சேர்ந்தன. ராணி நாத்தனாருக்குத் தன் சந்தோஷத்தைச் சொல்லி யனுப்பி "நீங்கள் பத்தியம், பானம் இவைகளைச் சரியானபடி பார்த்துக்கொண்டு சீக்கிரம் உடலைத் தேற்றிக்கொள்ள வேண் டும்" என்று வேண்டிக்கொண்டாள். ராஜகுமாரி, "நான் பாப்பா வைப் பார்க்கவேண்டும். இன்றைக்கு வரமுடியவில்லை. சீக்கிரம் வருகிறேன்" என்று சொல்லி அனுப்பினாள்.

அரசனிடமிருந்து எந்தச் செய்தியும் வரவில்லை. உண்மையில் அவன் சொன்ன வார்த்தைகள் மற்றவர்கள் காதில் விழத்தக்க தாக இருக்கவில்லை. செய்தி முதலில் ராணி வாசத்திற்கு எட்டி, ராஜகுமாரி அதைத் தன் தந்தையிடம் சென்று தெரிவித்த போது, "கலகக்கார நாய்களை முதலே பிடிக்கமுடியாது. இனி குழந்தை பிறந்த பிறகு எவ்வளவு திமிர் அதிகமாகிறதோ" என்றான். பசவனை அழைத்து, "டேய், நொண்டி, அந்தப் பன்றி மாதத்துக்கொரு முறை பெங்களூருக்கு புகார் எழுதி வந்தான். இனிமேல் வாரத்துக்கு ஒன்று எழுதுவானென்று நினைக்கிறேன். என்னென்ன ஆட்டம் ஆடப்போகிறானோ கொஞ்சம் பார்த்துக் கொள்ளடா, மடையா" என்றான். பசவன் "சரி, அரசே," என்றான்.

குழந்தை பிறந்த நேரத்தை முடிந்தவரையில் சரியாகத்தெரிந்து கொண்டு ராணி தீட்சிதரை வரவழைத்து தட்டில் மங்கள திரவியங்களை வைத்து அவருக்குக் கொடுத்து, "ஜாதகம் பார்த் துச்சொல்லவேண்டும்" என்றாள். தீட்சிதர், "சொல்லுகிறேன்

அம்மாஜி. அதற்கு ஒன்றும் தடையில்லை. ஆனால் அதைப் பார்ப்பதற்கு முன்னால் நான் ஒரு வார்த்தை சொல்லிக்கொள்ள வேண்டும். ஜாதகம் பார்த்த பிறகு சொன்னால் அதிலிருக்கும் சங்கதி என்று தாங்கள் சந்தேகப்படக்கூடும். அந்த சந்தேகம் வேண்டா மென்பதற்காகத்தான் இப்பொழுதே சொல்லிவிடு கிறேன்," என்றார்.

"அவசியமாகச் சொல்லுங்கள் ஐயா; இப்பொழுது சொன் னாலும் அப்புறம் சொன்னாலும் ஆண்டவன் காண்பிக்கும் சத்தி யத்தைச் சொல்லுகிறீர்கள் என்று அறிவேன். நீங்கள் கூடாது என்று சொல்லும் எந்த சந்தேகத்தையும் நான் கொள்ள மாட்டேன்."

"முன்பு பார்த்த விஷயத்தையே இப்பொழுது மறுபடியும் சொல்கிறேன். துஷ்டயோகம் இருப்பதைப் பற்றிச்சொல்லியிருக் கிறேன். அது நாம் நினைத்தபடி ஒரு அம்சம் நிஜமாகிவிட்டது. மாப்பிள்ளை அங்கும் மகள் இங்குமாக இருக்க இவள் கர்ப்ப மாகக்கூடிய சந்தர்ப்பம் இல்லையென்று நான் நினைத்திருந்தேன். நான் நினைக்காத வகையில் தெய்வம் அவர்களைச் சேர்த்து வைத்தது. கர்ப்பாதானம் நடக்கவைத்தது. யோகம் குறிப் பிடுகிற அடுத்த அனர்த்தம் கடவுள் கிருபையால் நிவர்த்திக்கப் படட்டும் என்று நாம் விசுவப்பிரயத்தனம் செய்யவேண்டும்.

"சரி ஐயா, என்ன செய்யவேண்டும் என்கிறீர்கள்?"

"இந்த வருடம் தாண்டிவிட்டால் பிறகு பயமில்லை. தாங்கள் முடிந்த வரையில் சீக்கிரமாக மருமகனை குடும்ப சகிதம் ஏதாவது க்ஷேத்திரத்திற்குச் சென்று வசிக்குமாறு செய்வது நல்லது."

பச்சைப் பாலகனை அரசனிடமிருந்து தொலைவில் வைப்பது தான் தீட்சிதரின் நோக்கம். ராணியும் அதைப் புரிந்துகொண் டாள். அவள், "நல்லது ஐயா, பிறந்த வருடத்தில் குழந்தையை திவ்ய க்ஷேத்திரத்தில் சுவாமியின் சந்நிதியில் வைத்தாற்போல வும் இருக்கும். ஒரு மாதம் போகட்டும், ஏற்பாடு செய்வோம்," என்றாள்.

ஜாதகத்தைப் பார்த்து வைத்துக்கொண்டு தீட்சிதர் மறு நாள் வந்தார். "ஜாதகத்தைப் பார்த்தேன் அம்மாஜி, இவ்வளவு சீக்கிரம் அதைக் கணிக்கவேண்டாம் என்று தோன்றுகிறது. உண்மையில் இந்த ஜாதகம் எழுதும் வேளையே மிகவும் தொந்தர வானது, ஜலோதயம், சிரோதயம், ஆன நேரத்திற்குச் சரியாக

எந்த கிரகம், எந்த நட்சத்திரம் எங்கே இருந்தது என்று தெரிந்து கொண்டாலும் கூட ஜோசியனின் கணக்கு தவறி விடுகிறது. இருக்கிற பலன் ஒன்றாகவும், சொல்கிற பலன் வேறொன்றாகவும் ஆகிவிடுகிறது. அப்படியிருக்கும்போது அப்பங்கொளத்தில் குழந்தை பிறந்து, அந்த வேளை, பொழுது இவைகளை நமக்குச் சொல்லி நாம் ஜாதகனின் அதிருஷ்டத்தைக் கணிப்பது என்றால் அது அவ்வளவு சாதுரியமல்ல, கொஞ்சம் வளர்ந்து விட்டவரின் ஜாதகத்தைப் பார்க்கிறபொழுது அவர் வாழ்க்கையில் நடந்து விட்ட சம்பவங்களையும் மனத்தில் கொண்டு இந்த வேளையில் பிறந்திருந்தால் இப்படி ஆகியிருக்கமுடியாது, இப்படி ஆக வேண்டுமென்றால் இந்த வேளையில் தான் பிறந்திருக்கவேண்டும், இப்படித் தெரிந்துகொண்ட வேளையில் பிறந்த ஜாதகனுக்கு விபத்து, சம்பத்து இப்படி இருக்கிறது என்று ஜோசியன் கணக்குப் போட்டுச் சொல்லமுடியும். பிறந்த இரண்டு நாட்களுக்கெல்லாம் ஜாதகத்தை இப்படித் தீர்மானித்துக் கொள்வதற்குச் சாதகமான சம்பவங்கள் நடந்திருக்கமுடியாது. கொஞ்சம் பொறுத்துக்கொள்வதே சரி."

தீட்சிதரின் இந்த நீண்ட பீடிகையைக் கேட்ட ராணி, ஜாதகம் ஏதோ கெடுதலைக் குறிப்பிடுகிறது, அதைச் சொல்லுவதற்கு தீட்சிதருக்கு விருப்பமில்லை என்பதைப் புரிந்துகொண்டாள். "அங்படியானால் இப்போதைக்கு ஜாதகம் எழுதவேண்டாமென்று சொல்லுகிறீர்களா?" என்றாள்.

"ஆம் அம்மாஜி."

"சரி, வேண்டாம் விடுங்கள்."

"ஜாதகம் கணிப்பதற்காகக் காத்திராமல், அம்மாஜி, நான் நேற்று சொன்னமாதிரி தந்தை, தாய், மகன் மூவரையும் ஒரு புண்ணிய க்ஷேத்திரத்திற்கு அனுப்பிவிடவேண்டும்."

"அதைச் செய்வோம் ஐயா."

ராணியின் சந்தேகம் உண்மையானதே, எவ்வளவு மேற் போக்காகப் பார்த்தாலும் இந்தக் குழந்தையின் ஆயுள் மிகவும் அற்பமானது என்பதை தீட்சிதர் கண்டு கொண்டார். கம்சயோகத்தைக் கொண்ட மாமாவின் அருகில் அற்ப ஆயுளுள்ள இந்த மருகன் இது மிகவும் அபாயகரம் என்று தீட்சிதருக்குத் தோன்றியது. கிரகங்கள் குறிப்பிடும் அபாயத்தை நிவர்த்திக்க முயற்சிப்பது தெய்வத் துரோகமாகாது. மனிதன் அமங்களத்தை

நிவர்த்திக்க முயல்வது அவனுடைய அவசியமான கடமை என்பது தீட்சிதருடைய நம்பிக்கை, தமக்குத் தெரிந்ததை அவர் ராணியிடம் சமர்ப்பித்துவிட்டார்.

மகனின் ஜாதகத்தைப் பார்க்கச் செய்யவேண்டுமென்று அவன் தாய்க்குத் தோன்றியது ஆச்சரியமல்ல, அவள் சென்னபசவனிடம். "அண்ணி தீட்சிதரிடம் கேட்டிருப்பார். அவர் என்ன சொன்னார் என்பதை ஆள் அனுப்பிக் கேட்டுவரச் செய்யுங்கள்" என்றாள்.

சென்னபசவன், "உங்கள் தீட்சிதன் ஒரு வழவழா. கெக்கெபிக்கே என்று உளறிக் கொண்டிருப்பான். இது தான் சரி என்று அடித்துச் சொல்ல அவனால் ஆகாது. நான் வேறு யாரிடமாவது கேட்கிறேன்," என்றான்.

"யாரிடம்?"

"அழைக்கிறேன் பார்."

சென்னபசவன் குறிப்பிட்டது பகவதியை. அவன் அன்றைக்கே அவளிடம் ஓர் ஆளை அனுப்பி அவள் வந்து தாயாருக்கும் குழந்தைக்கும் ரக்ஷை கட்டவேண்டுமென்றும், குழந்தையின் ஜாதகத்தைக் கணித்துச் சொல்லவேண்டும் என்றும் வேண்டிக் கொண்டான்.

77

ஆள் பகவதியின் ஆசிரமத்தைச் சென்றடைந்த பொழுது அவள் மடிகேரிக்குச் சென்றிருந்தாள். ஓங்காரேஸ்வரன் கோவிலில் தீட்சிதருடன் பேசிக்கொண்டிருந்தாள். அவர்கள் பேசிக்கொண்டிருந்ததும் பிறந்த குழந்தையின் ஜாதக விஷயமாகத்தான்.

"மாமாவின் ஜாதகமும் மருமகனின் ஜாதகமும் ஒன்றுக்கொன்று வெகு பொருத்தமாக இருக்கிறது அண்ணய்யா. மேல் பல், கீழ் பல் இவ்வளவு அழகாகப் பொருந்துவது சந்தேகம், இந்த மாமா கொல்லவேண்டும். அந்தக் குழந்தை சாகவேண்டும்."

"சரி பாப்பா இந்த விஷயம் உனக்கெதற்கு?"

"எனக்கு வேண்டாம் சரிதான். இது உண்மையானால் இந்த அரசனுக்கு ராஜ்யம் போவது நிச்சயம். என் மகன் அரசனாவதும் நிச்சயம்."

"அரசன் ஒழியட்டும் என்று நீ நினைக்கலாம் பாப்பா. அரண்மனைச் சோற்றைத் தின்ற நான் இந்த ஆபத்தைத் தவிர் என்று ஆண்டவனை வேண்டவேண்டும்."

"என் மகன் அரசனாகவேண்டாம் என்று கேட்கவேண்டும்?"

"விதியில்லாமல் அரசன் ஆட்சியை இழந்தால் வேறொருவன் அரசனாகவேண்டும். உன் மகன் என்று ஒருவன் இருந்து அவன் அரசனாக வரமுடியுமானால் நான் ஏன் வேண்டாமென்று சொல்கிறேன்? அதிருஷ்டம் சரியாக இல்லாமல் இவ்வளவு நாளும் கஷடப்பட்ட மகள் இப்பொழுதாவது ஒரு சுகத்தைக் கண்டாளே என்று சந்தோஷப்படுவேன்."

"அந்தச் சுகத்தைக் காண்பதில் சந்தேகம் இருக்கிறதா அண்ணய்யா?"

"வாக்கியத்தில் சந்தேகம் இல்லை பாப்பா, அதற்கு பத்துவிதமான அர்த்தங்கள் இருக்கும். எந்த வேளைக்கு எந்த அர்த்தம் என்று தெரிந்துகொள்வதில் தான் ஜோசியனின திறமை இருக்கிறது. தன் ஜாதகத்தைத் தானே பார்த்துக்கொண்டால் சுயகலம் உண்மையை மறைத்துவிடுகிறது; நடக்கப்போவதை தன் விச்சைப்படி மாற்றவேண்டுமென்று பிரேரேபிக்கும். அதனால் தான் ஜோசியர்கள் தங்கள் ஜாதகங்களைத் தாங்களே பார்த்துக் கொள்ளக்கூடாது என்று நியமம் இருக்கிறது."

இவர்கள் இவ்வாறு பேசிக்கொண்டிருக்கும்போது சென்ன பசவனின் ஆள் பகவதியைத் தேடிக்கொண்டு கோவிலுக்கு வந்தான்; அவன் சொல்லியனுப்பி யிருந்ததை அவருக்குத் தெரிவித்தான்.

அவன் எங்கிருந்து வந்திருக்கிறான் என்பதை அறிந்துகொண்ட தீட்சிதர், "நீ இவர்களுடன் அதிகமாகப் பழக்கம் வைத்துக் கொண்டிருக்கிறாயா பாப்பா?" என்றார்.

"ஆமாம். ஏன் அண்ணய்யா?"

"பாரம்மா, அரசருக்கும் அவருக்கும் ஆகாது. நீ அவரோடு சேர்ந்துகொண்டு, அரசருக்கு விரோதமாகப் புரட்சி செய்யும் படித் தூண்டி, உன் ஜோசியம் பலிக்கும்படிச் செய்ய முயற்சிக்கப்போனாயோ, ஜாக்கிரதை."

"அப்படியா சொல்லுகிறீர்கள் அண்ணய்யா?"

"அதை விடக் கெடுதல் வேறொன்றில்லை தெரியுமா பாப்பா? அவருக்கல்ல. உன் மகன் என்று சொல்லப் படுகிறவனுக்கு

இந்த ஆசையால் நீ இழைக்கும் தீங்கு ஒன்றுக்கு இரண்டாக உன் மீதே திரும்பும். எச்சரிக்கையாக இரு."

பகவதியின் முகம் பேயறைந்தாற் போல மாறிவிட்டது. அவள், "சரி, நான் போய்வரட்டுமா?" என்றாள்.

தீட்சிதர், "போய் வா, பாப்பா," என்றார். அவள் நான்கு அடி சென்ற பிறகு, "பெற்றவர்களுக்கு, பிறந்தவர்களுக்கு ஜோசியர்கள் என்ன சொல்லலாம், என்ன சொல்லக்கூடாது இது உனக்குத் தெரியுமல்லவா?" என்றார்.

"ஞாபகமிருக்கிறது அண்ணய்யா" என்று கூறி பகவதி புறப்பட்டாள். தந்தை, தாய், மகன் மூவரும் ஒரு புண்ணிய க்ஷேத்திரத்திற்குச் சென்று ஒரு வருஷம் அங்கே இருக்கவேண்டும் என்று அரண்மனையில் கூறிய பேச்சை அவளுக்கும் தீட்சிதர் சொன்னார். அவள் சென்னபசவனுக்கு வேறு ஒன்றும் சொல்லாமல் இதை மட்டும் சொன்னாள்

78

இந்தச் சமயத்தில் ஆங்கிலேயர்களை நவராத்திரிக்கு வரச் சொல்லி அழைப்பதென்றே முடிவாகி கடிதமும் எழுதப்பட்டிருந்தது. நவராத்திரித் திருவிழாவுக்கும், ஆங்கிலேயர்களின் விருந்துக்கும் ஏற்பாடு செய்யக்கூடிய சந்தர்ப்பத்தில் போபண்ணாவுக்கும் அரசனுக்கும் இடையே தோன்றியிருந்த மனத்தாங்கல் ஓர் ஆபத்தான கட்டத்தை அடைந்தது. நவராத்திரி முடிந்தவுடன் விளையாட்டுப் போட்டிகள் முதலியன நடப்பது வழக்கம். அவைகளில் குடகர்களின் ஆடல் பாடலும் ஒரு முக்கியமான நிகழ்ச்சியாக இருக்கும். வெளியாட்கள் வந்து பார்க்கப் போகிறார்கள் என்ற காரணத்தினால் வழக்கத்தைவிட சிறிது அதிகமாகவே இவைகளை நடத்த வேண்டுமென்று வீரராஜன் விரும்பினான். குடகர்களில் பெரிய மனிதனும் மந்திரியுமான போபண்ணா வழக்கமாக இவைகளின் மேல் விசாரணையைப் பார்த்துக்கொள்வார்.

இந்த முறை பசவய்யன் போபண்ணாவின் வீட்டிற்குச் சென்று இந்த விஷயமாகப் பேச்செடுத்தபோது போபண்ணா, "இந்த

வருஷம் திருவிழாவுக்கு வருவதற்கு எனக்கு அநுகூலமில்லை. வேறு யாரையாவது ஏற்பாடுகளைக் கவனித்துக் கொள்ளச் சொல்லுங்கள்" என்றார்.

போபண்ணா உற்சவத்திற்கு வராவிட்டால் அவருக்கும் அரசருக்கும் இடையே இருக்கும் விரோதம் ஊர் முழுதும் தெரிந்துவிடும்; மேலும் வெளியிலிருந்து வருபவர்களுக்கும் அது நன்கு புரிந்துவிடும் இதனாலேயே பசவனுக்குப் பயம் உண்டாயிற்று. மேலும் போபண்ணா இந்த ஏற்பாடுகளையெல்லாம் செய்யாவிட்டால் வேறு யார் இவைகளையெல்லாம் கவனித்துக் கொள்ளமுடியும் என்று கவலை. போபண்ணா அவர் ஜனங்களிடையே மிகவும் சாமர்த்தியசாலி. அவருடைய திறமை இன்னொருவருக்கு வராது. சிறிது திறமை குறைந்தவனையே இதற்கு ஏற்பாடு செய்யலாமென்றாலோ அவன், "போபண்ணா ஏன் இதற்கு வரவில்லை?" என்று விசாரிப்பான்; காரணம் தெரிந்தால், "அவர் வெறுப்படைந்து வேண்டாமென்று விட்டதை நான் செய்து அவர் விரோதத்தைக் கட்டிக் கொள்ளட்டுமா?" என்று கேட்பான். அதற்கென்ன செய்வது? பசவன் விஷயத்தை முதலில் ராணிக்குத் தெரிவித்தான். அவளுக்கு அரசனின் சிம்மாசனத்தின் ஒரு கால் ஒடிந்து விழுந்து விட்டாற்போன்ற கலவரம் ஏற்பட்டது. போபண்ணா இவ்வளவு வெளிப்படையாகத் தன் விரோதத்தைக் காட்டிக் கொள்ளத் தயாராக இருக்கிறாரென்றால் அவர் அரசருக்கு எதிராக போர்க்களத்தில் இறங்கி விட்டாரென்றுதான் அர்த்தம். இதை எப்படியாவது சரிப்படுத்த வேண்டும் என்று அவள் எண்ணினாள். "மந்திரி ஐயா அவர்களிடம் சொல். அவர் போபண்ணாவுடன் பேசி சமாதானம் செய்யட்டும்," என்றாள்.

பசவன் லக்ஷ்மீநாராயணய்யாவிடம் சென்று ராணியின் விருப்பத்தைத் தெரிவித்தபோது, போபண்ணாவின் கோபம் இவ்வளவு தூரத்திற்குப் போய்விட்டதா என்று அவருக்கும் ஆச்சரியம். ஏற்கனவே போபண்ணாவின் பேச்சில் அரசரைப் பற்றி அவருக்குப் பொறாமை இல்லாமலிருப்பதை லக்ஷ்மீநாராயணய்யா கவனித்திருந்தார். ஆனால் மந்திரியாக இருந்து கொண்டு தேசகாரியங்களில் ஈடுபடாமல் பிரிந்துநிற்பது முறையாகுமா? போபண்ணா இந்தத் தவறைச் செய்வார் என்று லக்ஷ்மீநாராயணய்யா நினைத்திருக்கவில்லை. அவர் பசவனிடம் ஒன்றும் சொல்லவில்லை. "போபண்ணாவைப் பார்த்துப்

பேசுகிறேன் என்று ராணியிடம் சொல்" என்றார். அன்றைக்கே போபண்ணாவைப் போய்ப் பார்த்தார்.

போபண்ணா, "பாருங்கள் ஐயா, உங்கள் அரசர் என்னை குடும்பத்தைக் கெடுப்பவன் என்று சொன்னார். அந்தப் பேச்சைக் கேட்டுக்கொண்டு மறுபடியும் என்னை அங்கே போகச் சொல்லுகிறீர்களா? அவர் என்னைப் பார்த்த உடன் மறுபடியும் இந்தப் பேச்சைப் பேசினால் கேட்டுக்கொண்டு சும்மா உட்கார்ந்திருக்கட்டுமா? இந்தப் பேச்சு வெளியே தெரிந்து அம்மாஜியின் பெயரும் என் பெயரும் ஊர் ஜனங்கள் நாவில் ஜோடியாகப் பேசப்படுவது நன்றாக இருக்குமா? நான் மறுபடியும் அரண்மனைக்குள் அடியெடுத்து வைக்கவேண்டுமானால் இரண்டு விஷயங்கள் நடக்கவேண்டும். முதலாவது, தான் பேசியது தவறு என்று அரசர் ஒத்துக்கொள்ளவேண்டும், இரண்டாவது, இனி இப்படிப் பேசமாட்டேன் என்று ஆணையிடவேண்டும்" என்றார்.

எவ்வளவு விவாதித்தாலும் போபண்ணா திருப்பித் திருப்பி இதையே தான் சொன்னார். "அன்றைக்கு மூஞ்சியில் காறி உமிழ்ந்து அனுப்பினேனே, வெட்கமில்லை மறுபடியும் இங்கே வருவதற்கு' என்று கேட்டார் என்று வைத்துக்கொள்ளுங்கள். அவருக்கு என்ன பதில் சொல்வது?" என்று கேட்டார்.

"அது ஏதோ விஷக்கடி வேளை. கோபத்தால் நிலையிழந்து பேசிய பேச்சு. இல்லாவிட்டால் சீதா தேவியைப்போன்ற பதிவிரதையான அம்மாஜியை அரசர் அப்படிப் பேசியிருப்பாரா? அது அவருடைய பேச்சல்ல என்று வைத்துக்கொள்ள வேண்டும்," என்று லக்ஷ்மீநாராயணய்யா சமாதானம் சொன்னார்.

போபண்ணா, "நீங்கள் பெரியவர் ஐயா, எனக்கு உங்கள் பேச்சை மீற விருப்பமில்லை, நான் கோபித்துக் கொண்டிருப்பதாக நினைக்காதீர்கள். சங்கோசப்படுகிறேன் என்று நினைத்துக் கொள்ளுங்கள், அரசரிடம் இதைச் சொல்லுங்கள். அவர் அன்று பேசிய பேச்சு தன் பேச்சல்ல என்று நினைத்துக் கொள்ளச் சொல்லி சொல்லிவிடட்டும். பேசியது தவறு என்றும் சொல்ல வேண்டாம், இனிமேல் பேசமாட்டேன் என்று ஆணையிடவும் வேண்டாம்."

"இதுவும் அப்படியே தானே போபண்ணா? அரசர் அவ்வாறு வாய்திறந்து சொல்லவேண்டும் என்று எதிர்பார்ப்பது சரியல்ல."

"நான் அதையும் அறிவேன் ஐயா, ஆனால் அவர் அவ்வளவுகூட சொல்லாமல் அவரருகில் வர அஞ்சுகிறேன், உங்கள் எதிரில் பேசிய அந்தக் கொடிய வார்த்தைகளை வேறு நான்கு பேர்களுக்கு எதிரில் பேசினாரானால் எனக்கும் அவருக்கும் உள்ள உறவு என்ன நிலைக்கு இறங்குமோ!"

இனி பேசிப் பயனில்லை என்று கண்டு கொண்ட லக்ஷ்மீநாராயணய்யா நடந்த பேச்சில் சாராம்சத்தை ராணிக்கு அறிவித்தார். ராணி, "அரசரின் பேச்சு போபண்ணா அவர்களுக்கு மிகவும் கஷ்டமாகத்தான் இருந்திருக்கவேண்டும், நான் கை பிடித்த மனைவி; கெட்டவேளையில் பேசிய பேச்சு, வேண்டுமென்று பேசியதல்ல என்று அதை மறந்துவிட்டேன், மற்றவர்களுக்கு வேதனை அதிகமாகத்தான் இருக்கவேண்டும்," என்றாள்.

என்ன செய்வதென்று சிறிது யோசித்து, அரசர் தாமே போபண்ணாவுக்கு திருவிழா நிகழ்ச்சிகளை நடத்த ஏற்பாடு செய்யுங்கள் என்று உத்தரவு பிறப்பிக்குமாறு செய்தால் அது பழைய பேச்சை மறந்து விடுமாறு கேட்டுக்கொண்டதாகும் என்ற முடிவுக்கு வந்தார்கள். லக்ஷ்மீநாராயணய்யா அரசனைக் கண்டு, உபாயமாக நிலைமையை அவனுக்கு விளக்கி போபண்ணாவுக்கு அழைப்பு செல்லுமாறு செய்யவேண்டியது என்று முடிவாயிற்று.

79

லக்ஷ்மீநாராயணய்யா பசவனை அழைத்து, "திருவிழா விஷயமாக அரசருடன் பேசவேண்டும். எப்பொழுது வரலாமென்று கேட்டுச் சொல்" என்றார். பசவன் அரசரின் அநுமதியைப் பெற்று லக்ஷ்மீநாராயணய்யாவுக்குத் தெரிவித்தான்.

லக்ஷ்மீநாராயணய்யா மிகவும் நயமாக போபண்ணாவின் மனநிலையை அரசனுக்குத் தெரிவித்தார். "அரசர் நூறு முறை மரியாதையாகப் பேசி ஒரு முறை அவமரியாதையாகப் பேசினால் அவருடைய சேவகர்கள் அதை மனத்தில் வைத்துக்கொள்வதில்லை, எஜமான் சேவகன் என்ற சம்பந்தமே அதில் தான் இருக்கிறது. போபண்ணாவும் இதை அறிவார். ஆனால் ஒரு விஷயம் அவருக்கு மிகவும் சங்கோசத்தை ஏற்படுத்தியுள்ளது.

அன்றைக்கு அரசர் பேசியது குடும்ப சம்பந்தப்பட்ட விஷயம். அதுபோன்ற எண்ணத்தின் சாயல் சிறிது தோன்றினாலும் அரண்மனையின் கௌரவத்திற்குக் குறைச்சல், மந்திரியின் பெருமைக்கும் இழுக்கு, எனவே அன்றைய பேச்சு எதையும் மனத்தில் வைத்துக்கொள்ளவேண்டாம் என்று போபண்ணா அவர்களுக்கு உத்தரவானால் உற்சவம் விமரிசையாக நடைபெறும்," என்றார்.

அரசன், "ஒவ்வொரு வருடமும் செய்கிற காரியம், இந்த வருடம் செய்யுங்கள் என்று பிரத்தியேகமாகச் சொல்லவேண்டிய தேவை என்ன?" என்றான்.

"தாம் செய்வது அரசருக்குச் சம்மதமோ இல்லையோ என்று அவருக்கு சங்கோசம்."

"பசவன் போய் அவருக்குச் சொல்லவில்லையா?"

"பசவய்யன் போய்ச் சொன்னபோது போபண்ணா இந்த சங்கோஜத்தை வெளிட்டதனால்தான் நான் அவரிடம் போய்ப் பேசிவிட்டு சமுகத்தில் அது பற்றி அறிவிக்க வந்தேன்."

"ஓகோ, நான் செய்தது தவறு என்று ஒத்துக் கொள்ளவேண்டுமென்று போபண்ணா அவர்களின் பிடிவாதம்? அதை எனக்குத் தெரிவிக்க நீங்கள் தூதர்?"

"இந்த விஷயத்தில் நான் போபண்ணா அவர்களின் துணை மந்திரி என்கிற முறையில் நடந்துகொள்வது உண்மை. ஆனால் உண்மைக் காரணம் அரசரின் பெருமைக்கு இழுக்கு நேராமல் காப்பாற்றும் கடமையை மேற்கொண்ட சேவகன் நான். தாங்கள் ஏற்படுத்தியிருக்கும் விருந்தும் திருவிழாவும் நல்ல முறையில் நடக்கவேண்டும். அது ஓர் அளவு போபண்ணாவைச் சார்ந்திருக்கிறது. அந்த அளவு பொறுப்பை ஏற்றுக்கொள்ள அவர் சங்கோசப்பட்டு பின்வாங்கப்பார்க்கிறார். அரசர் ஒரு வார்த்தை சொன்னால் அவருடைய கூச்சம் நீங்கிவிடும், நோக்கம் நிறைவேறத் தேவையான ஒரு வாக்கியம் சொல்லவேண்டுமென்று நான் யாசிக்கிறேன், நான் பேசும் முறை சில சமயங்களில் அரசருக்குக் கோபத்தை உண்டாக்கலாம். நான் இதை அறிவேன். ஆனால் பெரியவர்களிடம் பேசும்பொழுது பிரியமான சொற்களை நேரடியாகச் சொல்லலாம், பிரியமற்ற வார்த்தைகளை அவ்வாறு சொல்லக்கூடாது என்று என் தந்தையார் எனக்கு அறிவுரை கூறியிருக்கிறார். இது எக்காலத்துக்கும் பொருந்தக்கூடிய அறி

வுரை என்று சந்தேகத்துக் இடமில்லாமல் கூறினார். நான் அவரது அறிவுரைப்படி நடந்து வருகிறேன். இதனால் தமக்கு ஏற்படக்கூடிய வெறுப்பை அடக்கிக்கொண்டு, என் நோக்கம் நல்லது என்பதை மனத்தில் கொண்டு, ராஜ காரியத்தை நிறை வேற்றுவது அரசரின் விருப்பம்."

இவ்வளவு பேச்சைக் கேட்டதும் அரசன், "சரி, அவரையே வரச்சொல்லுங்கள். சொல்லவேண்டியதை அவரிடமே நேரில் சொல்லுவோம்," என்றான்.

80

லக்ஷ்மீநாராயணய்யா போபண்ணாவுக்கு ஆள் அனுப்பி "அரசர் வரச்சொல்லுகிறார். வந்து பேசிவிட்டுப் போங்கள்," என்று செய்தி தெரிவித்தார். சிறிதுநேரத்தில் போபண்ணா அரைமனத் தோடு வந்தார். இருவரும் அரசனின் அறைக்குள் சென்று அவனுக்கு வணக்கம் தெரிவித்துவிட்டு உட்கார்ந்து கொண்டனர். அரசன், "நான் பேசியது தவறு என்று உம்மிடம் ஒத்துக்கொள்ள வேண்டுமென்று நீர் ஐயா அவர்களிடம் சொல்லி அனுப்பினீரா?" என்று போபண்ணாவைக் கேட்டான்; அவர் மீது கோபமான பார்வையை வீசினான்.

லக்ஷ்மீநாராயணய்யா இதை எதிர்பார்க்கவில்லை. போபண் ணாவுக்குக் கோபம் வந்தது. அரசனின்மேல் மாத்திரம் அல்ல; தன் துணை மந்திரியின் மீதும் தன் மனநிலையை அரசனிடம் லக்ஷ்மீநாராயணய்யா இப்படிப் பச்சையாகவா எடுத்துச் சொன்னார்? அரசனின் பேச்சு தொடைதட்டிக் கொண்டு சண் டைக்குக் கிளம்புகிற பேச்சாக இருந்தது.

முன்பு போல இருந்தால் போபண்ணாவும் சண்டைக்கு கிளம்பி யிருப்பார். இப்பொழுது அவர் சண்டையில் காலம் கழிக்கத் தயாராக இல்லை. அவர் எண்ணப்படி தனக்கும் அரசனுக்கும் இடையே விவாதம் செய்யக்கூடிய தொடர்பு அறுந்துவிட்டது. அவர் லக்ஷ்மீநாராயணய்யாவைப் பார்த்து, "இந்தப் பேச்சைத் தொடரவேண்டுமா ஐயா?" என்று கேட்டார். லக்ஷ்மீ நாராயணய்யா அரசனுக்குத் தெரியும்படியாக, போபண்ணாவுக்குச்

சொல்வதுபோலச் சொன்னார்: "அன்றைக்கு அரசர் பேசிய பேச்சால் நீங்கள் அரண்மனைக்கு வருவதை அவர் விரும்ப மாட்டார் என்று நீங்கள் நினைத்துக் கொண்டிருப்பதாகவும், அரண்மனைக்கு வருவதற்குச் சங்கோசப்படுவதாகவும் சமூகத்தில் அறிவித்தேன். அரசர் என் பேச்சை இப்படி அர்த்தம் செய்து கொண்டு உங்களைக் கேட்கிறார். அரசர் மன்னிப்புக் கேட்க வேண்டுமென்று நீங்கள் விரும்புவதாக நான் சொல்லவில்லை."

போபண்ணா, "அதை மறுபடியும் அவருக்குச் சொல்லுங்கள். நான் பேசவேண்டாம். எனக்குப் பொறுமை இருக்காது," என்றார்.

லக்ஷ்மீநாராயணய்யா அரசனிடம், "போபண்ணா அவர்கள் அரசர் மன்னிப்புக்கேட்க வேண்டுமென்று விரும்பவில்லை. சேவகனானவன் அரசரிடம் அப்படி என்றும் விரும்பமாட்டான். போபண்ணா அவர்கள் அரண்மனைக்கு வருவது அரசருக்குப் பிடிக்காதோ என்று நினைத்து, அப்படி வந்து ஏன் வெறுப்பை உண்டாக்க வேண்டுமென்று விலகி நின்றிருக்கிறார். அவர் அரண்மனைக்கு வருவதில் அரசருக்கு வெறுப்பு இல்லை என்பதை நான் அறிவேன்; அவரிடமும் அதைச் சொல்லியிருக்கிறேன். அரசர் அதை உறுதிசெய்தால் போதும். நடந்தவைகளைப் பற்றி நினைக்கவே வேண்டாம்," என்றார்.

"உங்கள் துணை மந்திரியின் மரியாதையைக் காப்பாற்றிப் பார்க்கிற நீங்கள், உங்கள் அரசரின் மரியாதையை ஏன் காப்பாற்ற மாட்டேனென்கிறீர்கள்? அவர் செய்துகொண்டிருக்கும் மற்ற வேலைகளையெல்லாம் செய்யுங்கள் என்று நான் உத்தரவிட்டேனா? அதைச் செய்வதுபோல இதையும் செய்ய வேண்டியது தானே? தனியாக நான் சொல்லவேண்டுமா?"

போபண்ணா, மறுபடியும் லக்ஷ்மீநாராயணய்யாவிடம், "மற்ற வேலைகளையும் நான் விட்டுவிடும்படிச் சொல்கிறாரோ?" என்றார்.

லக்ஷ்மீநாராயணய்யா அவரிடம், "கொஞ்சம் பொறுங்கள்" என்று சொல்லிவிட்டு அரசனைப் பார்த்து, "நான் முதலிலேயே தெரிவித்துக் கொண்டேன். மற்ற வேலைகளைச் செய்வதற்கு அரண்மனைக்குள் வரவேண்டியதில்லை. இந்தத் திருவிழா வேலைக்கு வந்தாகவேண்டும். ஆகையால் பிரபு அவர்களின் உத்தரவு தேவை," என்றார்.

அரசன், "உங்கள் சாணக்கியம் எனக்குப் புரிகிறது, ஐயா. எனக்குப் பரிந்து பேசுவதுபோலப் பேசுகிறீர்கள்; ஆனால் உண்

மையில் உங்கள் துணை மந்திரிக்குப் பரிந்துகொண்டுதான் பேசுகிறீர்கள். கோடாலிக்காம்பு தன்னை மரமாக நினைத்துக்கொண்டு கோடாரிக்கு உதவியதாம், போகட்டும். உங்கள் இஷ்டம் போலவே நடக்கட்டும். மந்திரிகள் இருவரும் என் மீது தயை கூர்ந்து அரண்மனைக்கு எழுந்தருளி உங்கள் வேலையைக் கவனித்து என்னைக் காப்பாற்றி யருளவேண்டும்," என்றான்.

போபண்ணா 'சிவுக்' கென்று எழுந்து நின்றார். அவர் முகம் கோபத்தால் சிவந்திருந்தது. லக்ஷ்மீநாராயணய்யாவின் பக்கம் திரும்பி, "இப்படிக் கிண்டலாகப் பேசினால் இங்கு வந்து வாழ்ந்தாற்போலத்தான். நான் இங்கே வந்து உட்கார்ந்திருந்தால் பேச்சு இன்னும் விரசமாகிவிடும்" என்று கூறி அரசனுக்குக் கை கூப்புவதுபோலக் காண்பித்துவிட்டு வெளியே புறப்பட்டார். லக்ஷ்மீநாராயணய்யா எழுந்து அவர் தோள்மீது கை வைத்து அவரை அமர்த்தி, தானும் அமர்ந்துகொண்டு அரசனை நோக்கி "தங்கள் உத்தரவு; ஆனால் அதில் கோபம் கலந்திருக்கிறது. அதைக் கவனிக்கவேண்டாம் என்று ஆக்ஞை செய்தால் அநுக்கிரகமாக இருக்கும்," என்றார்.

அரசன், "நீங்கள் ஐயன்மார். உயிரை விட்டாலும் விடுவீர்களே ஒழிய சம்பிரதாயத்தை விடமாட்டீர்கள், இல்லையா ஐயா? நல்லது. ஆக்ஞை இடுகிறேன். அநுக்ரகத்தையும் கொண்டு சொல்லுங்கள்," என்றான்.

அதற்குமேல் அவனை இழுத்துச் செல்ல முடியுமென்று தோன்றவில்லை. இதுவே போதும் என்று நினைத்து லக்ஷ்மீநாராயணய்யா, "அரசரின் உத்தரவு" என்று கூறி போபண்ணாவுக்கு ஜாடை காட்டினார். போபண்ணாவும் எழுந்தார். இருவரும் அரசனுக்கு வணக்கம் தெரிவித்துவிட்டு வெளியே புறப்பட்டுச் சென்றனர்.

81

மஹா நவமிப் பண்டிகைக்கு ஆங்கிலேயர்கள் விருந்தினர்களாக வரும் விஷயத்தைக் குறித்து வீரராஜனும் ராணியும் சேர்ந்து யோசனை செய்யவில்லை யென்றாலும் இருவர் மனத்திலும் ஒரு ஆசை இருந்தது. ஊர்ப் பிரமுகர்கள் அரண்மனைக்கு விரோதிகளாகிக் கொண்டு வருகிறார்கள். மந்திரியான போபண்ணாவுக்கு

அரசனின் மீது நம்பிக்கையில்லை. வீட்டு மாப்பிள்ளையான சென்ன பசவன் அரசனுக்கு விரோதமாக புகார்களை அனுப்பியிருந்தான். திருவிழாவை முன்னிட்டு இந்த ஆங்கிலேயர்களை வரவேற்று உபசரித்து நல்ல வார்த்தைகள் பேசி அவர்களுடைய நட்பைச் சம்பாதித்துக்கொண்டால் அரண்மனைக்கு ஒரு பலம் வந்தாற்போல ஆகும். சென்ன பசவன் எழுதிய புகார்க் கடிதங்களைப் படித்த அதிகாரிகள் அவன் அவ்வளவாக மரியாதைப் பட்டவன் அல்ல என்பதை அறிந்துகொண்டிருப்பார்கள். எல்லா வகையிலும் அரசனின் ஸ்தானம் உறுதியாகக் கூடும்.

அரண்மனை மகளைச் சிறையிலிருந்து விடுவித்து அவள் கணவனிடம் அனுப்பிக் கொடுத்தது இதே நோக்கில் நல்லதாயிற்று என்று ராணிக்குத் தோன்றியது. அரசனுக்கு உண்மையில் தங்கையின்மீது விரோதம் எதுவும் இல்லை, ஏதோ சிறு மனஸ்தாபத்தின் காரணமாக இங்கே நிறுத்தி வைத்துக்கொள்ள வேண்டியிருந்தது என்று சமாதானம் சொல்லிக்கொள்ளலாம். கணவனுகப்பட்டவன் அவளைச் சரியாக நடத்தவில்லையாகையால் அவளை அரண்மனையிலேயே வைத்துக்கொண்டு பார்த்துக் கொள்ள வேண்டியதாயிற்று என்று யாராவது நினைத்துக்கொண்டால் அது அப்படித்தான் என்பது போலவே நடந்துகொண்டு விடலாம. ராணி இந்தப் பொய்யைச் சொல்ல ஒப்பமாட்டாளென்ருலும், அரசன் சொன்னுல் அதைப் பொய் என்று சாதிக்கவும் போகமாட்டாள்.

82

அரசன், ராணி இவர்களின் மனம் இப்படி இருந்தபொழுது இவர்கள் அழைத்திருந்த ஆங்கிலேயர்களின் நோக்கம் வேறு விதமாக இருந்தது. அதன் சொரூபம் இதற்குச் சிறிது முன்னர் சென்னை கவர்னர் பிரபு பெங்களூர் ரெஸிடெண்ட் துரைக்கு எழுதிய ஒரு கடிதம், ரெஸிடெண்ட் கவர்னருக்கு அனுப்பிய பதில் இவைகளிலிருந்து விளங்கும். சென்னை கவர்னரின் கடிதத்தின் செய்தி வருமாறு இருந்தது:

"மங்களூரிலிருந்து கலெக்டர் அனுப்பிய ஒரு செய்தி, குடகின் அரசரின் ஆட்கள் மங்களூருக்கு அருகில் உள்ள ஒரு கிராமத்தி

லிருந்து ஒரு பெண்ணைக் கடத்திக்கொண்டு போயிருப்பதாகக் கூறுகிறது. குடகின் அரசர் அவரது பெரிய தந்தை தொட்டவீர ராஜன், தந்தை லிங்கராஜன் இவர்களின் வழியில் நடந்து கொள்வதில்லை என்பது நமக்கு நன்றாகத் தெரிந்த விஷயம். இது இதற்கு முன்னர் நடந்த பல விஷயங்களிலிருந்து தெரிய வந்துள்ளது. ஆனால், அவருடைய துர்க்குணங்கள் எதுவாக இருந்தாலும் இதுவரையில் அவைகளைத் தமது ஆட்சிக் குட்பட்ட பிரதேசத்தில் தான் காட்டி வந்தார். இப்பொழுது அவருடைய துர்நடவடிக்கைகள் அவரது ராஜ்ய எல்லையை மீறி வெளியேயும் நடக்க ஆரம்பித்திருக்கின்றன. இதை நாம் பொறுத்துக்கொண்டிருக்க மாட்டோம் என்பதை அவருக்குத் தெளிவுபடுத்தி விட வேண்டும். அவருடைய ஆட்கள் கடத்திக்கொண்டு போன பெண்ணைத் தேடித் திருப்பி அனுப்பிவிட்டு அப்படிச் செய்ததாக அரசர் நமக்குத் தெரிவிக்கவேண்டும். அப்படிச் செய்யாவிடில் அப்பெண் பிள்ளையைத் தேடுவதற்காக நமது ஆட்கள் அங்கே செல்வார்கள். அவர்களுக்கு அரசர் எல்லா உதவிகளையும் செய்யவேண்டும். அவள் கிடைத்தால் அவளை அவர்களோடு அனுப்பிவிடவேண்டும். நடந்துவிட்ட தவறுக்காக வருத்தம் தெரிவித்துக் கொள்ளவேண்டும்.

"இதற்கு முன்னர் தெரியவந்த விஷயங்களிலிருந்தும் மற்றும் மேலே கூறப்பட்ட விஷயத்திலிருந்தும் நமக்குத் தோன்றுவது என்னவென்றால், இந்த நாட்டு மக்கள் தமது விவகாரத்தைத் தாமே நடத்திக்கொள்ள லாயக்கற்றவர்கள் என்பதுதான். சில விஷயங்களில் இவர்கள் நாகரிக மற்றவர்களாக, வனவிலங்குகளைப் போல நடந்துகொள்கிறார்கள்; ஒருவருக்கொருவர் அடித்துக் கொண்டும் உதைத்துக் கொண்டும் சண்டையிடுகிறார்கள். இன்னும் சில விஷயங்களில் இவர்கள் பச்சைக் குழந்தைகள்; பச்சைக் குழந்தைகளைப் போல தாங்களாகவே எதையும் செய்ய இயலாதவர்கள். அரசன் தவறி நடந்தால் அதிகாரிகள் அவனைக் கண்டிப்பதில்லை; அதிகாரிகள் தவறி நடந்தால் மக்கள் அவர்களை எதிர்ப்பதில்லை; இந்த நிலையில் இருக்கும் மக்கள் முன்னேறுவது இயலாத காரியம்.

"இந்த விஷயமாக யோசிக்க யோசிக்க நமக்கு ஒரு உண்மை மேலும் மேலும் தெளிவாகிக்கொண்டு வருகிறது. அரசியல் அறிவு இல்லாத இந்த மக்களை ஆங்கிலேயர்கள் தமது பாதுகாப்புக்குள் ஏற்றுகொண்டு ரட்சிக்கவேண்டும் என்பதும், அவர்

களை அறிவாளிகளாக்கவேண்டும் என்பதும் தெய்வ சங்கல்ப மாக இருக்கவேண்டும். இது வரையிலும் உள்ள சரித்திரத்தை எடுத்துக் கொண்டாலே இந்த உண்மை புலப்படுகிறது. இந்திய நாட்டின் மக்கள் எல்லாப் பிரதேசங்களிலும் கட்சி, எதிர்க்கட்சி களாகப் பிரிந்து சண்டையிட்டு ஒன்றன்பின் ஒன்ருக பிரதேசங் களை நம்மிடம் ஒப்படைத்து விட்டிருக்கிருர்கள். அரசாட்சியை நாம் ஏற்றுக்கொள்ளும் வரையில் எந்தப் பகுதியிலும் சுகமோ சமாதானமோ கிடையாது. நாம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட பின்னர் அந்தப் பகுதிகளில் மக்கள் சமாதானமாகவும் க்ஷேமமாகவும் வாழ்கிருர்கள்; ஆங்கிலேயர்களே அரசாள் வோராக இருக்க வேண்டுமென்று விரும்புகிருர்கள். இதற்கு வட இந்தியா முழுவதும் உதாரணமாக விளங்குகிறது. தென் னிந்தியாவில் கர்ணுடகம், மேற்குக் கடற்கரைப் பிரதேசம், மைசூர் இவைகளும் இந்த முடிவிற்கு உதாரணங்களாக விளங்கு கின்றன. மிகச் சமீபகாலத்து உதாரணம் மகாராஷ்டிரப. பரத கண்டம் முழுவதுமே நமது கைக்கு வந்து திறமையும் நீதி நிறைந் ததுமான அரசாட்சியை அநுபவித்து முன்னேற்றப் பாதையில் செல்லவேண்டும் என்பது நமது மனத்திற்கு நிச்சயமாகத் தோன்றும் உண்மை.

"மைசூரின் ஜனங்களை அராஜகப் பிடியிலிருந்து விடுவித்துக் காப்பதற்காக கம்பெனி சர்க்கார் இரண்டு வருஷங்களுக்கு முன் னர் அந்தப் பிரதேசத்தின் ஆட்சியை நடத்தும் பொறுப்பைத் தன் தோள்களின்மீது ஏற்றுக்கொண்டது. குடகின் அரசர் தமது கொடுஞ்செயல்களையெல்லாம் உடனே விடுத்து சரியான அரசாட்சியை ஏற்படுத்தினுல் மிகவும் சந்தோஷம். இது விஷய மாக அவர் நமக்கு திருப்திகரமான நம்பிக்கையை அளிக்காவிட் டால் மைசூர் அரசரைபபோல இந்த அரசரையும் தற்சமயத் திற்கு சில வருஷங்களுக்காவது ஆட்சிப் பொறுப்பிலிருந்து விடு வித்து குடகை அவர் சார்பில் ஆளும் பொறுப்பை கம்பெனி ஏற்றுக் கொள்ளவேண்டும்.

"இது என்னுடைய உறுதியான நம்பிக்கை என்பதாக இன்றே கவர்னர் ஜெனரல் பிரபு அவர்களுக்கு எழுதியுள்ளேன். நீங்க ளும் இந்த விஷயத்தை மனத்தில் வைத்துக்கொண்டு மேற் கொண்டு நடக்கவேண்டியவைகளை நிச்சயித்துக் கொள்ளவேண்டு மென்பது என்னுடைய சூசனை."

அதற்குப் பதிலாக மைசூரின் ரெஸிடெண்ட் எழுதிய கடிதத்தின் சாராம்சம் வருமாறு:

"தங்கள் கடிதத்தில் தாங்கள் குறிப்பிட்டிருக்கும் உண்மை எதுவோ அதே உண்மையை நானும் உணர்ந்து கொண்டிருப்பதை அறிந்து எனக்கு ஆச்சரியமேற்பட்டது; இந்த நாட்டு மக்களைக் குறித்த தங்கள் அபிப்ராயத்தை நான் முழு மனத்துடன் ஆதரிக்கிறேன். ஆதரவற்றவர்களும் அஞ்ஞானிகளுமான இந்த மக்களைக் காப்பாற்றவேண்டிய கடமையை கடவுள் நம்மீது சுமத்தியுள்ளார் என்ற தங்கள் முடிவை நானும் ஆமோதிக்கிறேன். அரசாட்சி மலர்ப் படுககை அல்ல; இருந்தாலும் பரத வர்ஷத்தின் ராஜ்யவிவஸ்தையை முழுவதும் நாம் ஏற்றுக் கொண்டாலல்லாது இந்த மக்களுக்கு சுகம் கிடையாது.

"இந்த முடிவு மற்ற பிரதேசங்களை விட அதிகமாகவும் தெளிவாகவும் குடகுக்குப் பொருந்தும். அரசர் சரியானபடி ஆட்சி புரிவதில்லை, மக்கள் அதிருப்தி அடைந்து புகார்கள் அனுப்பி அரசரைத் தண்டிக்கும்படி வேண்டிக் கொண்டிருக்கிறார்கள். அரண்மனையின் மருமகன் அனுப்பியுள்ள பல கடிதங்களைப் பற்றித் தாங்கள் அறிவீர்கள். அரசன் இவனுடைய மனைவியைச் சிறைபிலடைத்திருக்கிறான். அவன் அயோக்கியன், அவனை ஆட்சிபீடத்திலிருந்து அகற்றி அவன் தங்கையான தன் மனைவியை அதில் உட்காரவைக்கவேண்டுமென்பது அவன் பிரார்த்தனை. சமீபத்தில் இங்கே ஒரு கிழவன் புறப்பட்டிருக்கிறான். தான் இந்த அரசனின் பெரியப்பா என்றும், அரசனுக்கு ஏதாவது தொந்தரவு கொடுப்பதாக இருந்தால் தன் மகனை அரசனாக்க வேண்டுமென்றும் பிரார்த்தித்துக் கொண்டுள்ளான். இவனோ அல்லது இவன் சார்பில் வேறு யாரோ ஒரு அபிப்பிராயம் தெரிவித்திருக்கிறார்கள்; இந்த அரசனுக்கு ஒரு அண்ணன் இருக்கிறானும். அவன் தான் அரசனாக வந்திருக்கவேண்டியவன், இவன் அரசனானதே தவறு, மேலும் இவன் அரசாட்சியையும் சரியாக நடத்துவதில்லை, ஆகையால் இவனைப் பதவியிலிருந்து நீக்கி இவன் அண்ணனை அரசனாக்கவேண்டும் என்பது தான் அந்த அபிப்ராயம். இந்த அண்ணன் என்னப்பட்டவன் முதலில் மேலே

கூறப்பட்ட கிழவனின் மகனு அல்லது வேறு யாராகிலுமா என்பது நிச்சயமாகத் தெரியவில்லை, எப்படியானுலும் இந்த அரசனை அரசபதவியிலிருந்து நீக்குவது சரி என்பது மட்டும் சந்தேகமின்றி விளங்குகிறது. அதற்குப் பிறகு எழும் பிரச்னை, நான் நீ என்று அரச பதவிக்குப் போட்டியிடுபவர்களில் யாரை யாவது அரசராக்கலாமா என்பது. அப்படி நாம் யாரையாவது அரசனுக்கினுல் அவன், மைசூருக்கு அரசனுக நாம் நியமித்தவனை விட நல்லபடியாக நடந்துகொள்வான் என்று நம்புவதற்குத் தக்க ஆதாரமில்லை, அப்படி ஒருவனைப் பதவியில் உட்காரவைத் தாலும் நாடு மறுபடியும் துன்பத்தில் ஆழ்வதைப் பார்த்து நாம் கருணை காட்டி அதை நமது கைக்கீழ் கொண்டுவரவேண்டியதாக இருக்கும் என்று தோன்றுகிறது.

"எப்படியும் நான் கூடிய சீக்கிரம் அரசரின் விருந்தாளியாக மடிகேரிக்குச் செல்ல விருக்கிறேன். அப்போது இந்த எல்லா விஷயங்களைக் குறித்தும் அரசருக்கு எச்சரிக்கை செய்யப்போகிறேன். அதோடு கூட அந்தப் பிரதேசத்தின் நிலைமையைச் சாவதானமாகப் பரிசீலனை செய்து பார்த்து நாட்டை கம்பெனி அரசாட்சிக்கு உட்படுத்தவேண்டுமானுல் ஏற்படக்கூடிய சாதக பாதகங்கள், நமது பலம் அவர்களின் பலம், இவைகளையும் அறிய முயல்வேன். அந்தச் சமயத்தில் தாங்களும் ஒரு நாள் அங்கே வரமுடியுமானுல் நிலைமையைப் புரிந்துகொள்ள உதவியாக இருக்கும்.

"தங்கள் கடிதத்தில் காணப்படாத, ஆனுல் முக்கியமான தென்று என் மனத்திற்குத் தோன்றுகிற ஒரு விஷயம் இருக்கிறது. ஆங்கிலேயர்கள் பாரத நாட்டிற்கு வந்திருப்பது இந்நாட்டு மக்களுக்கு நல்ல முறையான நிலையான ஒரு அரசியல் வாழ்வைக் கொடுப்பதற்காக மட்டுமல்ல; ஏசு நாதரின் சுவிசேஷங்களை மக்களிடையே பரப்பி இவர்களை அறியாமை இருளிலிருந்து விலக்கிக் கடைத்தேறச் செய்யவேண்டியதும் நமது பொறுப்பாகும் அது தெய்வ சங்கல்பம் என்று எனக்குத் தோன்றுகிறது. மற்ற பிரதேசங்களில் நிலவி வரும் ஹிந்து மதம் அர்த்தமற்றது என்பதை நாம் அறிவோம். அது குட்கு நாட்டில் வழங்கிவரும் முறை இன்னும் அதிகமாக பண்பாடற்றதாக இருக்கிறதென்று தெரிந்தவர்கள் சொல்லுகிருர்கள். ரெவரண்ட் மேக்லிங் என்னும் நமது பாதிரியார் ஒருவர் அந்தப் பகுதிகளில் நன்கு பிரயாணம் செய்து நிலைமையை எனக்குச் சொல்லி

யுள்ளார். குடகு நாட்டில் கிறிஸ்துவ மதப்பிரசாரகனுக்கு நல்ல அறுவடை காத்திருக்கிறது என்பது அவரது அபிப்ராயம். தக்கபடி முயன்றால் சில வருடங்களுக்குள்ளாகவே குடகு நாடு முழுவதையும் கிறிஸ்தவர்களாக்கி விடலாம், அரண்மனையிலிருப்பவர்களும் தம் பக்கம் சார்ந்திருக்கிறார்கள் என்பதாக மேக்லிங் சொல்கிறார்.

"இந்த முறை குடகுக்குப் போகும்போது இதன் உண்மையை அறிய முயல்வேன்."

84

திருவிழா ஏற்பாடுகள் எல்லாம் நடந்து கொண்டிருந்தன, போபண்ணா தாம் பார்த்துக் கொள்ளவேண்டிய வேலைகளை வேண்டாமென்று விடவும் இல்லை, மிகவும் சிரமப்பட்டு செய்யவும் இல்லை. அவரது மருமகன் படைத்தலைவன் உத்தய்யன் ஊரிலில்லாதது வேறு சிறிது தொந்தரவுக்குக் காரணமாயிற்று. அரண்மனைக் காவல் வேலையைச் சரியாகச் செய்யவில்லை என்பதற்காக அவனை எல்லைக் காவலுக்குப் போகும்படி அரசன் ஆணையிட்டவாறு அவனை ஹெக்களத்து எல்லையில் காவலுக்குப் போட்டிருந்தார்கள். குடகர்களின் ஆடல் பாடல்களில் உத்தய்யன் மிகவும் தேர்ந்தவன்; உற்சாக முள்ளவன். அவனைச் சுற்றி நூறு பேர் இருந்துகொண்டே இருப்பார்கள். அவ்வளவு புகழ் வேறு யாருக்கும் இல்லை.

வீட்டு மருமகன் சென்ன பசவன் இப்பொழுது நட்புக் கொண்டிருந்ததால் அவனையும் உற்சவத்தில் பங்கு கொள்ளும்படி அழைத்திருந்தார்கள். அவனுக்கும் குடகர்களின் பாடல்கள், நடனம் முதலியவை தெரியும். உத்தய்யன் செய்யக் கூடியதாக இருந்த வேலையின் ஒரு பாகத்தை அவனுக்களித்தார்கள்.

வெளியிலிருந்து வருபவர்களுக்கு குடகின் சம்பிரதாயம், சரித்திரம் இவை தெரியட்டும் என்ற நோக்கத்தோடு எப்பொழுதோ யாரோ எழுதிவைத்துவிட்டுப்போன நாடகங்களை கிராம ஜனங்கள் இப்படிப்பட்ட சமயங்களில் நடத்துவதுண்டு. அது போல இப்பொழுதும் நடத்தவேண்டும் என்று நிச்சயிக்கப்

பட்டது. இந்தக் காரியம் லக்ஷ்மீநாராயணய்யாவின் தம்பி சூரப்பாவிடம் ஒப்படைக்கப்பட்டது.

விருந்தாளிகளாக வரும் வெள்ளையர்கள் வேட்டையை விரும்புகிறவர்கள் என்பது தெரிந்த விஷயமே. எனவே அவர்களுக்காக இரண்டு மூன்று நாள் வேட்டைக்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அரண்மனை ஆயுதசாலையிலிருந்து வேண்டிய ஆயுதங்களையும் வலை முதலியவைகளையும் எடுத்து வைத்தார்கள். வேட்டைக்குச் செல்லும் காடுகளின் அருகில் உள்ள கிராமங்களில் வேட்டைக்கு உதவுவதற்கு ஆட்களைத் தரவேண்டும் என்றும் உத்தரவிட்டிருந்தார்கள்.

அரண்மனை லாயத்தில் வேண்டிய அளவு குதிரைகள் இருந்தன. அரண்மனையின் நாய்ப்படை இருக்கவே இருந்தது; மந்திரியான பிறகும் பசவனே தான் அதைக் கவனித்துக் கொண்டு வந்தான். விருந்தாளிகளின் ஆகாரத்தைக் குறித்துத்தான் சிறிது யோசிக்க வேண்டியிருந்தது. தமது வெற்றியின் அடிப்படை மாட்டிறைச்சியிலும், கோதி உணவிலும் இருப்பதாகப் பெருமையுடன் நினைத்தார்கள் ஆங்கிலேயர்கள். குடிப்பதற்கு குடகில் குறைச்சல் இல்லை. அரச குலத்திற்கு அது பழக்கமில்லாதது. அரசனின் அப்பாவும் பெரியப்பாவும் பழைய ஆசாச அனுஷ்டானங்களை விட்டிருக்கவில்லை; ஆனால் மற்றவர்கள் குடிப்பதை அவர்கள் என்றுமே தடை செய்ததில்லை; ஆங்கிலேயர்கள் தம்மைக் காண வந்த பொழுதெல்லாம் அவர்களுக்கு மதுவை வழங்கி வந்தனர். அந்தக் காரணத்தினால்தான் சிக்கவீரராஜன் பசவனின் சகவாசத்தில் குடிப்பதைப் பழக்கப் படுத்திக் கொண்டான். அவன் சேர்த்து வைத்திருந்த மதுவகைகள் வருகிற விருந்தாளிகளுக்கு ஒரு வாரமல்ல, மூன்று மாதங்களுக்குப் போதுமானதாக இருந்தது. மதுவைப் பற்றிக் கவலையில்லை. இறைச்சியைப் பற்றியும் கவலை இல்லை. ஆனால் மாட்டிறைச்சி? குடகில் மாட்டைக் கொல்லக் கூடாது; இதுவரை கொன்றதில்லை.

வருபவர்களுக்கு அவர்கள் விரும்பும் ஆகாரத்தைக் கொடுக்க வேண்டும், மாட்டிறைச்சி வேண்டுமானாலும் கொடு என்று அரசர் உத்தரவிட்டிருப்பதாக பசவன் மந்திரிகளுக்குத் தெரிவித்தான். லக்ஷ்மீநாராயணய்யாவுக்கு இது சம்மதமில்லை. போபண்ணாவும் கூட, "நமது நாட்டில் இது வழக்கமில்லை. இதைச் செய்யக் கூடாது" என்றார். ராணியைக் கேட்டார்கள்; அவள், வழக்கமில்லாததைச் செய்யவேண்டாமென்றாள். பசவன், "நமது

நாட்டில் மாட்டைக் கொல்லவேண்டாம். பிரியா பட்டணத்தி லிருந்தோ பாணேயிலிருந்தோ வரவழைத்தால் என்ன?" என்றான். நாட்டு வழக்கத்தையும் கைவிடாதது போலாகும். விருந்தாளிகளுக்கும் திருப்தியை அளித்தாக இருக்கும். பசவனின் இஷ்டம் என்று அந்த விஷயத்தை அவனுக்கு விட்டுவிட்டனர்.

ஆங்கிலேயர்கள் ஆண்கள் பெண்கள் இருவரும் சேர்ந்து வருவதால் அவர்களின் வழக்கம் போல சௌகரியமான வேளையில் சாப்பாடு, ஆடல் பாடல், இவைகளுக்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று நிச்சயிக்கப்பட்டது.

இடையே மேக்லிங் பாதிரியார் குறிப்பிட்ட ஒரு நிகழ்ச்சியையும் சேர்ப்பதென்று முடிவாயிற்று. இந்தியாவில் வழக்கிலிருந்து வரும் மதங்கள் அவ்வளவு சிறப்புள்ளவை அல்ல, கிறிஸ்துவமதம் இவைகள் எல்லாவற்றையும்விட உயர்ந்தது என்று தான் வாதிப்பதாகவும், உங்கள் மதப்பிரமுகர்கள் யார் வந்தாலும் சரியே, அரசர், ஆங்கில அதிகாரிகள், குடகின் பிரமுகர்கள் கூடியுள்ள சபையில் தன் வாதம் வென்றால் குடகின் மக்கள் கிறிஸ்துவ மதத்தைத் தழுவுவதற்கும், கிறிஸ்துவப் பிரசாரகர்கள் தமது குருவின் சுவிசேஷத்தைப் பரப்புவதற்கும் உதவியாக இருக்கும் என்று அவர் பிரார்த்தித்துக் கொண்டார். போபண்ணாவுக்கோ லக்ஷ்மீநாராயணய்யாவுக்கோ இது பிடிக்கவில்லை. ஆனால் அரசன் "இது நடக்கட்டும்" என்றான். அவன் அப்படிச் சொன்னதற்குக் காரணம் முதலாவதாக மேக்லிங்கைத் திருப்தியுறச் செய்து தன் உடலில் சக்தி வரும்படியாக நல்ல மருந்தாகத் தரும்படிச் செய்யலாம் என்பது; இரண்டாவதாக மதவிஷயங்களில் தனக்கு பாரபட்சம் இல்லை என்பதைக் காட்டிக் கொண்டு ஆங்கில அதிகாரிகளைத் தன் வசமாக்கிக் கொள்ளவேண்டும் என்பது. மூன்றாவதாக ஒரு சிறு நோக்கமும் அவன் மனத்தின் பின்னணியிலிருந்தது; "இந்த கோவில் தீட்சிதன் தனக்கு சமம் எவரும் இல்லை என்று அகங்காரம் கொண்டிருக்கிறான். பண்டிகை நாளாக இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி. அரிசிக்காகத் துணியை விரிப்பதும், பொன்னுக்காகக் கையை நீட்டுவதும்தான் இவனுக்கு வேலை. மற்ற மதத்தினர் தமது மதத்துக்காக எவ்வளவு கஷ்டப்படுகிறார்கள் என்பது இவனுக்குத் தெரியட்டும். இவனுக்குத் தெரிந்த விஷயங்களைச் சிறிது வாய்திறந்து சொல்லட்டும்," என்பது அவன் எண்ணம். அதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டது. தீட்சிதருக்கும் விஷயம் தெரிவிக்கப்பட்டது.

திருவிழா நாளும் வந்தது. விருந்தினர்களும் வந்து சேர்ந்தார்கள். அரண்மனை விருந்தோம்பல் குறைவில்லாமல் நடந்தது.

ரெஸிடெண்டும் அவனது சகாக்களும் மடிகேரியை அடைந்த அடைந்த அன்று அரசனின் சார்பாக பசவய்யன் தலைவாசலுக்குச் சென்று அவர்களை வரவேற்றான். அவர்கள் அரண்மனை அருகில் வந்ததும் போபண்ணாவும் லக்ஷ்மீநாராயணய்யாவும் அவர்களை எதிர்கொண்டழைத்து அரண்மனைக்குள் அழைத்துச் சென்றனர். வீரராஜன் ஆங்கிலக் கர்னல் உடையைத் தரித்துக் கொண்டு தனது பெரிய தந்தை தொட்டவீர ராஜனுக்கு கம்பெனியார் கௌரவப் பரிசாகக் கொடுத்திருந்த கத்தியை இடையில் செருகிக்கொண்டு பெரிய வைரம் பதிந்திருந்த தலைப்பாகையை அணிந்துகொண்டு அவர்களைத் தனது மண்டபத்தில் வரவேற்றான்.

க்ஷேம சமாசாரங்கள் விசாரிக்கப்பட்ட பிறகு பெரிய அரசர் இவர்களுக்காகக் கட்டியிருந்த இரண்டு மாடிவீட்டு விடுதிகளுக்குச் சென்றனர்.

பெங்களூரிலிருந்து இவர்கள் வந்து சேர்ந்த சமயத்துக்குச் சரியாக மங்களூரிலிருந்து கலெக்டரும் வந்து சேர்ந்தான். வீரராஜனின் உத்தரவுப்படி பசவன் அன்று மத்தியானமே அவனைக் கண்டு, "பாணேயிலிருந்து ஒரு பெண்ணை யாரோ அரண்மனைக்கு அழைத்து வந்தார்கள். அவளைத் திருட்டுத் தனமாகக் கடத்திக்கொண்டு வந்திருக்கிறார்கள் என்கிற விஷயம் அரண்மனைக்குத் தெரியாது; விசாரித்ததில் அவளுக்கு இங்கே வந்தது இஷ்டமில்லை என்று தெரிந்தது. அவளை க்ஷேமமாக பாணேய்க்கு அனுப்பவேண்டுமென்று யோசித்துக் கொண்டிருந்தோம். இதற்குள்ளாக இந்த விஷயம் மந்திரி லக்ஷ்மீநாராயணய்யா வீட்டில் தெரிந்துவிட்டது. அந்தப் பெண் அவர்களுக்கு ஏதோ உறவானதால் மந்திரி அவர்களின் தாயார் இங்கே வந்து அந்தப் பெண்ணை அழைத்துக்கொண்டு போய்விட்டார்; பாணேயிலிருந்து அவளைத் தேடிக்கொண்டு வந்திருந்த அவள் கணவன் வசம் ஒப்படைத்துவிட்டார். நல்ல வேளையாக இது விஷயமாக எங்கள் மனத்திலிருந்த குறை நீங்கியது. இதை உங்களுக்கும்

அப்பொழுதே தெரிவித்திருக்கிறோம்" என்று தெரிவித்தான். கலெக்டர், "அதைக் கேட்டு மிகவும் சந்தோஷமாயிற்று. சென்னைக்கும் செய்தியைத் தெரிவித்து விட்டேன்," என்றான்.

இரண்டாவது நாளும் நான்காவது நாளும் வேட்டைக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. உடல் நிலை சரிசாக இல்லை என்ற காரணத்தால் வீரராஜன் வேட்டைக்குச் செல்லவில்லை சமாதானமாக இருந்திருந்தால் போபண்ணா சென்றிருக்கக்கூடும். அப்படி இல்லாததால் ஏதோ வேலை இருப்பதாகச் சாக்குப் போக்குச் சொல்லி அவரும் போகாமல் நின்றுவிட்டார். விருந்தாளிகளைக் காட்டுக்கு அழைத்துச் சென்று அங்கே அவர்களோடு இருந்து அவர்களைத் திருப்பி அழைத்து வரும் வேலை பசவனின் தலை மீது சார்ந்தது.

வலது பாதம் முறுக்கிக் கொண்டிருப்பதனால் அவனது நடை சிறிது விகாரமாக இருந்தாலும் குதிரையேறி அமர்ந்து விட்டால் அவனை எந்தக் குதிரை வீரனுக்கும் சளைத்தவனல்ல. அரசனைவிட அவன் உடல் நல்ல கட்டோடு இருந்தது. இவன் ஏஜமானனல்லாத காரணத்தால் இவனுடைய களியாட்டங்களுக்கு ஓர் எல்லை இருந்தது. எனவே அரசனைவிட இரண்டு வருடம் மூத்தவனானாலும் அவன் உடலை இன்னும் கட்டுத் தளராமல் இருந்தது. விருந்தாளிகள் ஒவ்வொருவரும் ஒரொரு நாள் ஒரொரு மிருகத்தைக் கொல்வதென்று ஏற்பாடாயிற்று, ஆண்களைப் போலப் பெண்களுக்கும் ஒவ்வொரு மிருகத்தை ஒதுக்கவேண்டும் என்று ஏற்பாடாயிற்று வேட்டையில் எல்லோரும் வென்று திரும்பவேண்டும். வேட்டையில்லாத மூன்று நாட்களில் ரெஸிடெண்ட் முதல் நாள் அரசருடனும், மறு நாள் அரசனின் அநுமதி பெற்று மந்திரிகளுடனும், மூன்றாவது நாள் சென்னபசவனுடனும் பேச்சுவார்த்தைகள் நடத்தினான்.

அதே நாட்களில் ஓய்வு கிடைத்தபோது விருந்தாளிகள் அரண்மனையின் ஆயுதசாலை, குதிரைலாயம், நாய்ப்படை இவைகளைப் பார்வையிட்டனர். விருந்தினர்களில் பெண்கள் ராணியைக் கண்டு அரண்மனையின் நகை, நாணயங்களைக் கண்டு சந்தோஷப் பட்டனர்.

திருவிழாக் காலங்களில் நாட்டின் சரித்திரத்தைக் குறித்த சிறு சிறு நாடகங்களை நடிக்கச் செய்வது அரண்மனையிலேயே பழைய காலத்திலிருந்து நடந்து வரும் சம்பிரதாயம். நண்பர்களான ஆங்கிலேயர்கள் வந்திருக்கும் பொழுது குடகின் அரசர் அவர்களது நட்பைச் சம்பாதித்த விதத்தைக் காட்டுவதும் இதன் நோக்கமாகும். இந்த முறை ஆங்கிலேயர்கள் ஊரிலிருந்த ஐந்து நாட்களிலும் மாலை சாப்பிட்டான பிறகு இப்படிப் பட்ட நாடகங்களை நடத்தினார்கள்.

லக்ஷ்மீநாராயண்ய்யாவின் தம்பி சூரப்பா, இந்த நாடகங்களை நடத்துபவர்கள் எங்கெங்கே இருக்கிறார்கள் என்பதை அறிவான். அவன் அவர்களையெல்லாம் வரவழைத்து கலந்தாலோசித்து யார் யார் என்னென்ன நாடகம் ஆடுவது என்று ஏற்பாடு செய்தான். தானே சூத்திரதாரியாக இருந்துகொண்டு நாடகத்தில் நடக்கும் சம்பவங்களை விளக்குவது, பாத்திரங்களுக்கு சம்பாஷணையை எடுத்துக்கொடுப்பது, அவர்கள் பேசும் வசனம் போதாதபோது தானே அதைப் பேசி முடிப்பது ஆகிய வேலைகளைக் கவனித்துக் கொண்டான்.

மங்களூர் பிரதேசத்தின் யட்சகானம், மலையாளத்தின் கதக்களி இவைகளின் சாரமெல்லாம் அடங்கியிருந்தன குடகு நாடகக் கலையில்.

முதல் நாள் குடகின் மூல புருஷனின் சரித்திரத்தை நாடகமாக ஆடிக் காண்பித்தார்கள். முன்னர் ஆண்டு கொண்டிருந்த வம்சத்தின் கடைசி அரசன் துஷ்டனாகையால் ஜனங்கள் அவனுக்கு எதிராகக் கிளம்பி அவனைக் கொலை செய்தது; இக்கேரியிலிருந்து வந்த சாது ஒருவர் அவர்களை இந்தப் புரட்சிக்குத் தூண்டிவிட்டு அவர்களில் ஒருவனையே அரசனாக்கப் பார்த்தது; அவர்களெல்லாம், 'எங்களில் யாருக்கும் வேண்டாம், சாதுவான தாங்களே எங்கள் அரசராக வேண்டும்' என்று கேட்டுக்கொண்டது; அவர் அதை ஏற்றுக்கொண்டு அரசரானது; இது அன்றைய நாடகத்தின் கருத்து. புது அரசன் ஆட்சி புரியும் எஜமானனாக அல்லாமல், மக்களுக்கு நல்வழியைக் காண்பிக்கும் குருவாகப் பட்டத்துக்கு வந்தவன்; மக்கள் அவனது சேவகர்களல்ல, குடும்

பத்தவர்கள். அவர்கள் அவனுக்குக் கொடுப்பது வரியல்ல, குரு தட்சிணை. இக்கருத்துக்கள் நாடகத்தில் நன்கு விளக்கப்பட்டன. கடைசியில் அரசன், "நானும் என் வம்சத்தாரும் உங்களை எங்கள் வீட்டுக் குழந்தைகளை போலப் பார்த்துக்கொள்வோம். இந்த வம்சத்தில் எந்த அரசனுவது இவ்வாறு நடக்கத் தவறினால் அவனுக்கு அவன் காலத்து ஜனங்கள் எனக்கு முன்னாலிருந்த அரசனுக்கு நீங்கள் கொடுத்த அதே தண்டனையைக் கொடுப்பார்களாக," என்றான்.

இந்த விஷயம் நாடகத்தைப் பார்த்துக் கொண்டிருந்த சிக்கவீர ராஜனுக்குப் பொருந்துகிறது என்பது அரசன், மந்திரிகள் மற்றும் நாடகத்தைப் பார்ததுக்கொண்டிருந்த எல்லோருக்குமே தோன்றியது. ஆனால் சூரப்பா இதை வேண்டுமென்றே இப்படி நடத்தியதாகத் தெரியவில்லை. ஆட்டத்தின் வேகத்தில் அது அவ்வாறு அமைந்துவிட்டது.

வேண்டுமென்றே செய்ததல்ல என்பதனாலேயே யாரும் அதைப் பற்றிப் பிரஸ்தாபிக்கவில்லை. புதைந்திருக்கும் சங்கதியை வெளியே கிளறுவானேன்?

மறுநாள் தொட்டவீர ராஜன் திப்புவுக்கு விரோதமாக ஆங்கிலேயர்களுக்கு உதவிய கதை. திப்புவின் முஸல்மான் வீரர்கள் குடகு நாட்டு ஜனங்களை ஹிம்சித்தது; தொட்டவீரராஜன் சிறையிலிருந்து தப்பி ஓடிவந்து ஜனங்களைத் திரட்டி திப்புவின் வீரர்களை விரட்டி, குடகைக் கைப்பற்றிக்கொண்டது. தலைச்சேரி, மங்களூர் இவைகளிலிருந்து ஆங்கிலேயர்கள் படையெடுத்துச் சென்ற பொழுது அவர்களுக்கு உதவியது; 'நீ நம் நாட்டான்; ஆங்கிலேயர்கள் வெளிநாட்டவர்கள்; நாமிருவரும் சேர்ந்து அவர்களை விரட்டியடிக்கவேண்டும். வென்ற நாட்டில் பாதியை உனக்குத் தருகிறேன், வா' என்று திப்பு வீரராஜனை அழைத்தது; அவன், "ஆங்கிலேயர்கள் என்னுடைய நன்பர்களாக இருக்கிறார்கள்; மேலும் நீ முன்பு என் நாட்டைச் சூறையாடித் துன்புறுத்தியவன்" என்று கூறி அவன் அழைப்பை நிராகரித்தது; ஆங்கிலேயர்கள் அதைப் பாராட்டி அவனுக்கு ஒரு கத்தியைப் பரிசாக அளித்தது; இந்தக் கதையை ஆடினார்கள். ஒரு ஆங்கில அதிகாரி டெயிலர், ஒரு வீரராஜன், ஒரு வீரன், குடகு ஜனங்கள் இரண்டு பேர். இவர்களுக்குப் பின்னணி சூரப்பா. நடிகர்கள் விஷயம் அறிந்தவர்கள். 'அதிகாரி என்ன சொன்னாரென்றால்' என்று சொல்லி முடிப்பதற்குள்ளாக அதிகாரியாக

நடிக்கும் நடிகன் உற்சாகத்தோடு அந்த சந்தர்ப்பத்தில் அதிகாரி சொல்லியிருக்கக்கூடிய வார்த்தைகளை மனப்பாடம் செய்தது. கொஞ்சமும், தானாக சேர்த்துக்கொண்டது கொஞ்சமுமாக கடகட வென்று பேசித் தீர்த்துவிட்டான். அதோடு சூரப்பா சேர்த்துக் கொண்ட வசனம் வேறு. சபையோர் பலே பலே என்று ஆரவாரம் செய்தார்கள். ஆங்கிலேயர்கள் துபாஷிடமிருந்து இதன் அர்த்தத்தைப் புரிந்துகொண்டு பாராட்டினார்கள். கடைசியில், நமது தொட்டவீரராஜேந்திர உடையாரின் பெயரைச் சொன்னால் பரங்கியர்கள் தொப்பியை எடுத்து மரியாதை காண்பிப்பார்கள் என்று சொன்ன போது, ஆம் காண்பிப்பார்கள் என்று சபையோர் ஆமோதித்தார்கள். துபாஷ் இதன் பொருளை ரெஸிடெண்டுக்குச் சொன்னபோது அவன், "So We do, Saheb" (ஆம் சுவாம், அது நிஜம்) என்று கூறி எழுந்து நின்று தன் தலை மீதிருந்த தொப்பியைக் கையிலெடுத்துகொண்டு வணக்கம் செய்தான். கூட இருந்த ஆங்கிலேயர்களும் அவ்வாறே மரியாதை தெரிவித்தனர். ஜனங்களின் சந்தோஷத்திற்கு எல்லையே இல்லை: ஆட்டம் மிகவும் மகிழ்ச்சிகரமாக முடிவடைந்தது.

மூன்றாவது நாள் மலபாரின் முஸல்மான் ராணியை திப்பு அவள் ராஜ்யத்திலிருந்து விரட்டி அடித்தது; அவள் வீரராஜனிடம் சரணாகதி என்று கூறி தூதுவனை அனுப்பியது; வீரராஜன் தலைச்சேரியிலிருந்த டெயிலர் துரைக்குச் சொல்லி அனுப்பி ஆங்கிலேயர்களின் உதவியைப் பெற்று திப்புவின் சேனையைத் தோற்கடித்தது மலையாளத்திலிருந்து விரட்டி, பீபிக்கு அவளுடைய ராஜ்யத்தை மீட்டுத் தந்தது இது கதை. இதில், "தடகின் அரசர்கள் பிற பெண்களைச் சகோதரிகளாகக் கருதுகிறார்கள், சரணம் அடைந்தவர்களைத் தங்கள் உயிரைக் கொடுத்தாகிலும் காப்பாற்றுகிறார்கள், ஒருமுறை நட்புக் கொண்டால் பிறகு துரோகம் இழைக்கமாட்டார்கள்," என்கிற பெருமை வெகு நன்றாகக் கொண்டு வரப்பட்டிருந்தது. இதன் பொருளையும் ஆங்கிலேய விருந்தாளிகள் வெகுவாகப் பாராட்டினார்கள்.

நான்காவது நாள் லிங்கராஜனின் நிலவரிச் சீர்திருத்தத்தைக் குறித்த நாடகம். வெகு காலமாக வழக்கத்தில் இருந்துவரும் வரியைச் செலுத்துவதற்காகக் குடியானவன் வந்தபொழுது அரசன், "விளைச்சல எவ்வளவு?" என்று கேட்டுத் தெரிந்து கொண்டு விளைச்சலில் பத்தில ஒரு பாகத்தை மட்டும் வைத்துக் கொண்டு மீதியைக் குடியானவனே எடுத்துக் கொண்டு போகும்

படி விட்டுவிட்டது; இனிமேல் நம் நாட்டில் இதுவே நிலவரி முறை என்று பிரகடனம் செய்தது; கிராம மணியகாரர் தன்னிட மிருந்து அதிகமாக வரி வாங்கிவிட்டதாக குடியானவன் அரச னிடம் வந்து புகார் செய்தபோது, அரசன் மணியகாரனை அழைத்து விசாரித்து அது நிஜமென்று தெரிந்ததும் அவன் குடியானவனிடமிருந்து எவ்வளவு அதிகமாகப் பெற்றுக்கொண் டானோ அதைப்போல இரு மடங்கு அவனுக்குத் திருப்பிக் கொடுக்கச் செய்தது; ஒரு வருடம் விளைச்சல் இல்லாமல் சாவி யாகப் போக, குடியானவன் வரியாகக் கொடுத்த தானியத்தை மணியகாரன் ஏற்றுக்கொள்ளாமலிருக்க, குடியானவன் அரச னிடம் வந்து முறையிட்டது; அரசன் நிலம் சாவியாகப் போனது உண்மைதானா என்று விசாரித்து, உண்மைதான் என்று தெரிந்த தும் குடியானவன் அந்த முறை கந்தாயம் கொடுக்கவேண்டிய தில்லை, என்றும் விளைச்சல் அவன் சாப்பாட்டுக்கே காணுமலிருப் பதால் அரண்மனைக் குதிரிலிருந்து அவனுக்குத் தானியம் கொடுக்கவேண்டும் என்றும் உத்தரவிட்டது; குடியானவன் அவ் வாறு தர்மம் பெற்றுக்கொள்ள மறுத்தது; அடுத்த விளைச்சலில் நூற்றுக்கு ஒன்ருக வட்டி சேர்த்து இந்த தானியத்தைத் திருப்பிக் கொடுத்துவிடு என்று அரசன் அவனுக்குக் கூறியது; இது கதை.

இது வெல்லாம் குடகர்கள் அறிந்தவை. இவ்வளவு விரிவாக ஆங்கிலேயர்கள் அறியமாட்டார்கள். இதன் பொருளை விளக்கிய போது இந்த நாட்டின் அரசியல் தர்மம் எவ்வளவு உயர்வானது என்று அவர்கள் ஆச்சரியப்பட்டார்கள்.

87

முதல் நாள் வேட்டைக்கு விருந்தாளிகளோடு பசவன் மாத்திரம் போனுன். போபண்ணு வேட்டைக்குப் போவது உண்டென்ருலும் இந்த முறை இந்த விருந்தோம்பலின் பொறுப்பு இருந்த தனுல் வேட்டையில் பங்கெடுத்துக் கொள்ளவில்லை விருந்தாளி களின் எண்ணிக்கை அதிகம்; எல்லோருக்கும் தேவையான வசதி களைப் பார்த்துக்கொள்ள அவன் ஒருவனுல் முடியவில்லை. லூஸி பார்க்கர் வேட்டையில் திறமைசாலி; அவள் பசவனை, "நல்ல

திறமைசாலிகளான வேறு வேட்டைக்காரர்கள் உங்களிடையே இருக்கவேண்டுமே" என்று கேட்டாள்.

பசவன், இவளுக்கு நம்முடையவர்கள் யாராவது துணைவேண்டும் போலிருக்கிறது, என்று நினைத்துக் கொண்டான், "இருக்கிறார்கள்" என்றான். அரண்மனைக்கு வந்ததும் அரசனிடம் இந்தச் சங்கதியைச் சொல்லி, "உத்தய்யதக்கனையும், படைத்தலைவன் உத்தய்யனையும் வரவழைக்கிறேன் அரசே," என்றான்.

அரசன், பசவனைப் போலவே பெண்கள் விஷயமாக மிகவும் அற்பத்தனமான எண்ணங்கள் கொண்டவன் "கிழவனை வைத்துக்கொண்டு அவள் என்ன செய்வாள்டா? இது கூடத் தெரியாதா உனக்கு?" என்றான். பசவன் சிரித்துக்கொண்டே, "அதற்காகத்தான் பையனையும் வரவழைக்கிறேன்" என்றான்.

"இங்கே காவலுக்கு இருந்தானே, அவனைத் தானேடா சொல்லுகிறாய்?"

"ஆமாம் அரசே."

"அவன் வந்துவிட்டால் இவள் உன்னைச் சீண்டமாட்டாள்."

"ருசி கண்ட மூக்குக்கு ஒரு வாசனை போதாது அரசே."

"அப்படியாடா நொண்டி? இந்த விஷயங்களில் நீ ரொம்பவும் கெட்டிக்காரண்டா."

"இருவரையும் துணையாக அழைத்துக்கொண்டு போனால் கிழவன் பேச்சுத் துணைக்கும், இளைஞன் வேட்டைத் துணைக்கும் சரியாக இருக்கும் அரசே."

"இஷ்டப்பட்டதைச் செய் போடா, கம்மனாட்டி. குடகுக்கு நீ தான் ராஜா."

"விட்டது என்று சொல்லுங்கள் அரசே. இப்படிப்பட்ட பேச்சு பேசக்கூடாது."

பசவன் அந்த இரு வேட்டைக்காரர்களுக்கும் உடனே சொல்லியனுப்பினான். கிழவன் உத்தய்யன் திருவிழாவை முன்னிட்டு எப்படியும் மடிகேரிக்கு வந்து கொண்டிருந்தான்; இளைஞன் அழைப்பு வந்ததுமே மறுநாள் வந்து சேர்ந்தான்.

இரண்டாவது நாள் வேட்டை வெகு நன்றாக நடந்தது. கிழவன் தக்கன் பெரியவர்களுடன் கலந்து பழகி தனது பராக்கிரமத்தைக் குறித்த கதைகளைச் சொல்லி, தானும் சந்தோஷப்பட்டு அவர்களையும் திருப்திப்படுத்தினான். இளைஞன் சிறியவர்களோடு

கலந்துகொண்டு லூஸி பார்க்கர் மெச்சும்படியான சாதுரியத்தை வெளிப்படுத்தினான்.

லூஸி பார்க்கர் அவனை "My Robin Hood" என்று புகழ்ந்தாள். அன்றைய வேட்டையில் இவர்கள் விரட்டிய ஒரு மிருகம் இவர்களின் கைகளுக்கு அகப்படாமல் ஓர் அடர்ந்த காட்டுக்குள் ஓடி மறைந்துவிட்டது. லூஸி, ஹாகர் இருவரும் அதைத் துரத்திக் கொண்டு காட்டுக்குள் புகுந்தனர். பசவன் அவர்களைக் கூப்பிட்டு நிறுத்தினான். தன் குதிரையைச் செலுத்தி அவர்களோடு சேர்ந்துகொண்டு, "இதற்குமேல் நாம் வேட்டையாடப்போவது தவறு. இது பகவதியின் காடு" என்றான்.

வேட்டை முடிந்து இவர்கள் திரும்பும்பொழுது பகவதியின் ஆசிரமத்துக்கு எதிரே இருந்த வழியாகச் செல்லவேண்டியதாயிற்று பகவதி கதவருகில் நின்றிருந்தாள். அவளைச் சிறிது தூரத்திலிருந்து பார்த்தவுடன் பசவன் குதிரையினின்றும் கீழே இறங்கி கொண்டியபடியே குதிரையையும் நடத்திக்கொண்டு ஆசிரமத்து வாசல் வரையில் வந்தான்.

பெரிய அதிகாரி, "இந்த அம்மா யார்?" என்று விசாரித்தான். பசவன், "இவர் இங்கே ஆசிரமம் ஏற்படுத்திக்கொண்டிருக்கிறார். பகவதியின் உபாசகர். அந்தக் கடவுளுக்காக நாங்கள் இந்தக் காட்டை ஒதுக்கியிருக்கிறோம். இங்கே யாரும் வேட்டையாடுவதில்லை," என்றான்.

அதிகாரி, "இந்த ஆசிரமத்துக்கு எதிரில் குதிரையின்மீது செல்லக்கூடாதோ?" என்று கேட்டான். பசவன், "அது உங்கள் இஷ்டம். எங்கள் கோவிலாலகையால் நாங்கள் இறங்கிறோம்" என்றான்.

அதிகாரி, "நீங்கள் மரியாதை செலுத்தும் எல்லா இடங்களுக்கும் நாங்களும் மரியாதை செலுத்துவோம் எல்லாத் தெய்வங்களும் ஒன்றே," என்று கூறி குதிரையினின்றும் இறங்கி தொப்பியைக் கையிலெடுத்துக் கொண்டு தலை குனிந்தபடியே ஆசிரமத்தின் வாசலைத் தாண்டினான். அவன் சகாக்களும் அவ்வாறே செய்தார்கள். பகவதி ஒன்றுமே பேசாமல் மிக லேசான ஒரு புன்னகையுடன் அவர்களைப் பார்த்துக்கொண்டிருந்தாள். ஆசிரமத்தின் வாயிலைத் தாண்டிய பிறகு பெரிய அதிகாரி குதிரையின் மீது ஏறினான். பசவன், "தேவியின் காட்டில் அடியெடுத்து வைக்கவில்லை அம்மா" என்றான். பகவதி

"நல்லது" என்றாள். பசவன் இன்னும் நான்கு அடி நடந்து சென்று குதிரை ஏறி விருந்தாளிகளோடு சேர்ந்துகொண்டான்.

எல்லாரையும் போல உத்தய்யதக்கனும் குதிரையினின்றும் இறங்கி பகவதியைப் பார்த்தான்; இந்த முகம் வெகு காலத்திற்கு முன்பு பார்த்த ஒரு முகம்போலக் காண்கிற்து; இருக்குமோ இருக்காதோ, இருக்காதென்று தான் தோன்றுகிறது; நாற்பது வருஷங்களுக்கு முன்பு பார்த்த முகம் இப்பொழுது எங்கே யாவது அடையாளம் தெரியுமா? என்று நினைத்துக்கொண்டான்.

பெரிய அதிகாரி, "What a magnificient creature! If the Goddes is anything like her votary she deservers her place" என்றான்.

லூஸி ஹாஸ்யமாக, "In the wilderness, you mean?" என்றாள். "In parnassus, my dear" என்று அவன் பதிலளித்தான்.

விடுதியை அடைந்த பிறகும் ஆங்கிலேய அதிகாரிகள் பகவதியின் உருவம், பார்வை, அழகு இவைகளைப் பல முறை நினைந்து புகழ்ந்தனர்.

உத்தய்ய தக்கன் நடந்த சங்கதியை யெல்லாம் போபண்ணவுக்கு எடுத்துச் சொல்லி, "இந்த வெள்ளைக்காரர்கள் மிகவும் நல்லவர்கள் ஐயா. பூஜை செய்யும் இடம் என்று பசவன் சொன்னான். பெரிய அதிகாரி உடனே 'டக்'கென்று குதிரையிலிருந்து இறங்கிவிட்டான் பார்த்துகொள்ளுங்களேன். உங்கள் தெய்வம் எங்கள் தெய்வம் என்ற வித்தியாசமே கிடையாது. 'எங்கள் தெய்வம் பெரியது' என்ற அகங்காரம் கிடையாது. கீழே குதித்தவர் தொப்பியைக் கையிலெடுத்துக்கொண்டு தலை குனிந்தபடி முன்னால் நடந்தார். வெள்ளையர்கள் பெருந்தன்மையுடையவர்கள் ஐயா" என்றான்.

போபண்ணா இந்தப் பேச்சைப் பேசாமல் கேட்டுக்கொண்டிருந்தான். ஒன்றும் பதில் சொல்லவில்லை.

ஒரு கணம் கழிந்த பிறகு உத்தய்ய தக்கன் போபண்ணாவை, "இந்த பகவதி யார்? உங்களுக்குத் தெரியுமா?" என்று கேட்டான்.

"தெரியாது தக்கரே. மலையாளத்து அச்சி, மந்திரம் மாயம் தெரிந்தவள் என்று பேசிக்கொண்டார்கள். அவ்வளவு தான் எனக்குத் தெரியும்."

உத்தய்ய தக்கன், "அப்படியா சொல்லுகிறீர்கள்?" என்றான். மேற்கொண்டு பேச்சைத் தொடரவில்லை. அவள் பாப்பாவாகத்

தானிருக்கவேண்டுமென்று அவனுக்குச் சிறிது சிறிதாக உறுதிப் பட்டது. முப்பத்துநான்கு வருடங்களுக்கு முன்னால் லிங்க ராஜன் அவளை நாடுகடத்திய சந்தர்ப்பம் அவன் நினைவுக்கு வந்தது.

88

வேட்டையில்லாத நாட்களில் முதல் நாள் பெரிய அதிகாரி அரசனைச் சந்தித்து அவனுடன் குடகின் அரசாட்சியைப் பற்றிப் பேசினான்.

அரசன் வழக்கத்தைவிட அதிகமான கட்டுப்பாட்டுடன் அன்று சிறிது குறைவாகவே குடித்துவிட்டு அவன் கேட்ட கேள்விகளுக் கெல்லாம் தனது பொறுப்பை மறுக்காமல் பதிலளித்தான். அதிகாரி, "சென்ன வீரய்யன் என்னும் உங்கள் பிரஜை ஒரு வனை அபராதி என்று தங்களிடம் அனுப்பினோம் அவன் விஷயம் எப்படி முடிவாயிற்று என்று தெரிவிக்கச் சொல்லி பல முறை கடிதங்கள் எழுதுவித்தோம். தங்களுடமிருந்து பதில் வரவில்லை" என்றான். அரசன், "இது சின்ன விஷயம். எங்கள் விஷயத்தில் நாங்கள் எப்படி வேண்டுமானாலும் நடந்துகொள் வோம். இதை நீங்கள் கேட்கக்கூடாது" என்றான்.

"நேரில் என்னிடம் இப்பொழுது சொல்லலாமே."

"பசவய்யன், சொல்லுவான் கேளுங்கள்."

"மங்களூர் வட்டாரத்திலிருந்து யாரோ அயோக்கியர்கள் ஒரு பெண்ணைக் கடத்திக்கொண்டு வந்துவிட்டு மந்திரி பசவய்யன் மீது பழியைப் போட்டிருந்தவுடன் அவளைத் திருப்பி அனுப்பி விட்டாராம் மிகவும் சந்தோஷம். ஜனங்கள் தங்கள் மீது அநியா யமாக அபவாதம் சுமத்த இடமில்லாமற் போயிற்று. இது மிகவும் நலலது."

"ஆமாம் நமது பரிவாரத்தில் இருக்க விருப்பமில்லாதவர்களை நிர்ப்பந்தப்படுத்தி இருத்திக் கொள்ளக்கூடாதென்று உத்தரவு பிறப்பித்திருக்கிறேன்."

"மிக்க சந்தோஷம். தங்கள் தங்கையை அவருடைய கணவ ருடன் இருக்கவிடாமல் அரண்மனையில் நிறுத்திவைத்துக்கொண்

டிருப்பதாகப் புகார் வந்திருந்தது. சமீபத்தில் அவரை அவரது கணவர் வீட்டிற்கு அனுப்பி விட்டதாக பசவய்யா சொன்னார். இதுவும் மிக நல்லதாயிற்று."

"நல்லதில்லை ஒன்றுமில்லை. என் தங்கை நமது அரண்மனையில் இருந்ததே நல்லது. இந்த எங்கள் மாப்பிள்ளை என்னப் பட்டவன் யோக்கியனல்ல அரண்மனை மாப்பிள்ளையென்பதனால் பெரிய மனுஷனாகியிருக்கிறான். பழமொழி சொல்வார்கள். 'உப்பில்லாத கஞ்சி குடித்துவிட்டு தெய்வமே என்றிருந்தான் மகன், நெய்ச்சோறு தின்றுவிட்டுக் குப்பைமேட்டில் ஏறிக்குரைத்தான் மாப்பிள்ளை' என்று. சென்ன பசவய்யனின் புகாரையெல்லாம் நீங்கள் உண்மை என்று எடுத்துகொள்ளாதீர்கள்."

"நம்மிடம் வரும் இது போன்ற எல்லாப் புகார்களையும் கும்பினி சர்க்காரின் நண்பராகிய தங்களுக்கு அறிவிக்கவேண்டியது எங்கள் கடமை. ஆகையால் இதைத் தங்கள் கவனத்திற்குக் கொண்டுவருகிறோம். வேறு விதியில்லை என்று ஆகிற வரையில் நாங்கள் இது பற்றி மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பதில்லை. இது கனம் கும்பினி சர்ககாரின் விருப்பம். மற்றும் கனம் பொருந்திய இந்திய சர்க்காரின் கவர்னர் ஜெனரலும் சென்னை கவர்னரும் நமக்கு இட்டிருக்கும் கட்டளை. எவ்வளவோ புகார்கள் வரலாம். அவைகளை நாம் நம்புவதும் இல்லை; பொய் என்றும் சொல்வதில்லை. அது நமக்குச் சம்பந்தப்படாத விஷயம் என நினைத்து நடுநிலைமையோடு இருப்போம். நண்பரான தங்களுக்குச் சம்பந்தப்பட்ட விஷயமாகையால் தங்கள் கவனத்திற்குக் கொண்டுவருகிறோம்."

"நீங்கள் செய்வதில் ஒன்றும் தவறு இல்லை. புகார் எழுதுபவர்களுக்குத்தான் அறிவு கிடையாது. இங்கே வந்து பசவனிடம் சொன்னால் கவனிக்கிறான். அந்தக் கிழவன் வந்தான்; படி கொடுக்கவில்லை என்றான்; கொடுக்கச் செய்தோம். வருவதில்லை கேட்பதில்லை. வழியில் போகிறவர்களிடம் புகார் செய்கிறார்கள்."

"வழியில் போகிறவர்களிடம் என்று அல்ல. தங்கள் பதவி பெரியது; தங்களெதிரே வந்து பேசுவதற்கு அவர்களுக்கு பயம். தங்கள் நண்பர்களாகவும், பார்த்துப் பேசுவதற்கு சுலபமாகவும் நாங்கள் இருக்கிறோம். எங்கள் விருப்பத்தைத் தாங்கள் நடத்திக் கொடுப்பீர்கள் என்று தெரிந்து எங்களிடம் வருகிறார்கள்."

"வரட்டும். பசவனென்ன, நீங்களென்ன?"

"இங்கே யாரோ சிலருக்குக் கொடுக்கவேண்டிய பணத்தைக் கொடுக்கவில்லை என்றெல்லாம் உங்கள் பிரஜைகளின் உறவினர்கள் எங்கள் பிரதேசத்தில் வாழ்வபர்கள் புகார் செய்தார்கள். அப்படியெல்லாம் ஒன்றும் இருக்காதென்று நாங்கள் நம்பியிருக்கிறோம்."

"அரண்மனை விஷயம் ஆயிரம் இருக்கும். இன்றைக்குக் கடன், நாளைக்கு உடன்; சமாளிப்பவர்கள் இருக்கிறார்கள் சமாளிக்கிறார்கள். சுவாமி பூஜையும் அன்னதானமுமே போதும், அரண்மனையை முழுகவைப்பதற்கு. போதாதற்கு கும்பினி நமது குடும்பத்துக்குச் சேர்ந்த லக்ஷக்கணக்கான ரூபாய்களை முழுங்கிவிட்டு கம்மென்று உட்கார்ந்திருக்கிறது. இப்படிப் பட்டவர்களிடம் சிக்கிய நாம் கடன்காரர்களாகாமல் எப்படி இருக்க முடியும்?"

"தொட்டவீரராஜன் மகள் பேரில் வைத்திருந்த நிதியைப் பற்றிச் சொல்லுகிறீர்கள்."

"ஆமாம்"

"அதுதான் தகராறில் இருக்கிறதே. முடிவானவுடன் அது உங்கள் கைக்குக் கிடைத்து விடுகிறது."

"சீக்கிரமே கிடைக்கும்படி செய்யுங்கள் பார்ப்போம்."

"பலகாரணங்களினால் வெறுப்படைந்திருக்கும் சிலர், தாங்கள் ஆட்சிப்பொறுப்பை வேறு யாருக்காவது விட்டுக்கொடுக்கும்படி நாங்கள் தங்களைக் கேட்டுக்கொள்ளவேண்டும் என்று கோரியிருக்கிறார்கள். அற்சமயத்துக்கு நாங்கள் அப்படிச் செய்ய வேண்டிய தேவை இல்லை என்று எங்கள் மேலிடம் தீர்மானித்திருக்கிறார்கள்."

"உங்கள் மேலிடம் புத்திசாலிகள் தான். ஆனால் உண்மையில் அவர்கள் செய்திருக்கவேண்டிய முடிவு இதற்கும் நமக்கும் சம்பந்தம் இல்லை என்று விட்டிருக்கவேண்டியதுதான்."

"நாங்கள் அப்படியே சொல்லலாம். அனால் ஜனங்கள், மைசூர் அரசரை ஆட்சி பீடத்திலிருந்து விலக்கினார்கள், வேண்டுமென்றால் குடகின் அரசரையும் விலக்கமுடியும், என்று நினைத்திருப்பதாகத் தெரிகிறது."

"மைசூர் அரசரின் விஷயம் வேறு. ஆட்சி பீடத்தில் ஏற்றி வைத்தவர்கள் ஆட்சி பீடத்திலிருந்து இறக்கினார்கள், நம்மை கும்பினி

யின் எந்த அப்பனும் கொண்டு வந்து அரசபதவியில் உட்கார வைக்கவில்லை."

"ஜனங்களுக்கு இதுவும் தெரிவதில்லை, உட்கார வைக்கா விட்டாலும் விலக்கமுடியும் என்று அவர்கள் கருதுகிறார்கள், நாம் கஷ்டத்தில் இருக்கிறோம், யார் நம்மை விடுவிப்பார்கள் என்று தான் யோசிக்கிறார்களே ஒழிய அவர்களைப் போய் கேட்கலாமா கூடாதா என்று யோசிப்பதில்லை இதனால் அநேக வேளைகளில் கும்பினி இக்கட்டில் அகப்பட்டுக்கொள்கிறது, கஷ்டப்படுபவர்களின் பேரில் இரக்கம், நண்பரான தங்கள் பேரில் தாட்சண்ணியம், என்ன செய்வதென்று தெரியாமல் மிகவும் தொந்தரவாகப் போய்விடுகிறது."

"பெற்ற தந்தைக்கு இல்லாத இரக்கமா அயலாருக்கு? நமது நாட்டு மக்களை நாம் பொன்போலவும் தங்கம் போலவும் பார்த்துக்கொள்கிறோம். உங்கள் கும்பினி இந்த விஷயத்தில் தலையிட வேண்டாமென்று சொல்லுங்கள்."

"நல்லது. நான் தங்களோடு பேசும் இந்தப் பேச்சையெல்லாம் செய்தியாக அனுப்புவேன், அப்பொழுது இதையும் சேர்த்துக் கொள்கிறேன். இன்னும் ஒரே ஒரு விஷயம் தான் பாக்கியிருக்கிறது. உங்கள் பிரதேசத்திலிருந்து எங்களுக்கு வந்திருக்கும் ஒரு விண்ணப்பத்தில் தங்களுக்கு ஒரு தமையனார் இருப்பதாகவும், அவர் பட்டத்திற்கு வருவது தவறிப் போய் தாங்கள் பட்டத்திற்கு வந்து விட்டதாகவும், தாங்கள் அந்தத தமையனாருகே ஆட்சியை விட்டுக்கொடுத்தால் நியாயம் நிலைக்கும் என்றும், தங்களுக்கும் ஆட்சிப் பொறுப்பைப் பற்றிய கவலை நீங்குமென்றும் மக்களும் சமாதான மடைவார்கள் என்றும் கண்டிருந்தது. தங்களுக்கு ஒரு தமையனார் இருக்கிறார் என்பது எங்களுக்குத் தெரியாது."

"எனக்கும் தெரியாது போங்களேன் ஆனால் விண்ணப்பம் அனுப்புபவர்களும் அதைப் பார்க்கிறவர்களும் விரும்பினால் தமையன் என்ன, எனக்கு ஒரு அப்பனையே சிருஷ்டி செய்து விடுவார்கள்." அதிகாரி சிரித்தான். "நன்றாகப் பேசுகிறீர்கள், அரசே. தாங்கள் எவ்வளவு அறிவாளி என்று எங்களுக்குத் தெரிவது இது போன்ற சந்தர்ப்பங்களில் தான். தாங்கள் தயவு கூர்ந்து என்னுடன் இந்த விஷயங்களைப் பற்றிப் பேச சம்மதித்ததற்காகத் தங்களுக்கு நன்றி. தெரிவித்துக்கொள்கிறேன். எல்லா விஷயங்களையும் விசுவாசத்தோடு பேசினோம் என்று

தெரிவித்துக்கொள்ளப் பிரியப் படுகிறேன். தாங்கள் என்னை யும் என் சகாக்களையும் வரவழைத்து உபசரித்திருக்கிறீர்கள். இந்த உபசரிப்பை என்றைக்கும் மறக்கப் போவதில்லை, புறப்படுவதற்கு முன்னால் மறுபடியும் இது பற்றித் தெரி விக்கிறேன்."

"சரி."

"இப்பொழுது பேசிய பேச்சுக்களையெல்லாம் இவ்வளவு தாராளமாக கடிதத்தில் எழுத முடிவதில்லை. ஆகையால் தான் தங்களை நேரில் காணும் இந்த சந்தர்ப்பத்தை நான் வர வேற்றேன். இனி நான் தங்களைத் தொந்தரவு செய்யமாட்டேன். உத்தரவானால் நான் நாளைக்கும் நாளை நின்றும் தங்கள் மந்திரி களுடனும், வீட்டு மாப்பிள்ளையுடனும் இரண்டொரு வார்த் தைகள் பேசப் பிரியப்படுகிறேன்."

"பேசுங்கள், தடையில்லை, நீங்களெல்லாம் வந்தது பற்றி எனக்கு சந்தோஷம், மரியாதை கொடுத்து மரியாதை வாங்க வேண்டுமென்று எங்களில் ஒரு வழக்கு உண்டு. நாங்கள் எப் பொழுதும் மரியாதை கொடுப்பதற்குத் தயார். நீங்களும் அது போல எங்களுக்கு மரியாதை கொடுங்கள். சரியானபடி நடந்து கொண்டால், எங்கள் பெரிய தந்தையாருக்கு நாம் குறைந்தவர் களல்ல."

அதிகாரி எழுந்தான், கதவருகே இருந்த பசவன் பூ, பழம் வைத்த தட்டை சேவகர்களின் கையில் ஏந்தச் செய்து உள்ளே வந்தான். அதிகாரிக்குத் தானே மாலை போட்டு செண்டை அரசன் கையில் கொடுத்து அவனுக்குக் கொடுக்கச் செய்தான்; அரசன் செண்டை அவன் கையில் கொடுத்து கைகளில் வாசனை எண்ணெயைத் தடவினான். அதிகாரி அரசனின் கையைப் பிடித்து குலுக்கி தலை வணங்கி விடைபெற்றுக் கொண்டான்.

89

இது நடந்த மூன்றாவது நாள் அதிகாரி போபண்ணா, லக்ஷ்மீ நாராயணய்யாவையும் அதற்கு மூன்றாம் நாள் சென்ன பசவனை யும் கண்டு பேசினான்.

அயலார் இப்படி நமது ஆட்களைப் பார்க்க விட வேண்டா மென்று பசவன் அரசனிடம் குறிப்பாகச் சொன்னான். அரசன், "பார்க்கட்டும் போடா, இவர்களால் என்ன செய்துவிட முடியும்? பார்க்காதே என்றால் எதையோ மூடிவைப்பதாக நினைப்பார்கள். பார்த்து என்ன பிடுங்குகிறார்களோ பிடுங்கட்டும்" என்றான்.

அதிகாரி லக்ஷ்மீநாராயணய்யாவையும் போபண்ணவையும் தனித்தனியாகக் கண்டு பேச விரும்பினான். ஆனால் அவ்வாறு பேச அவர்கள் இருவருமே சம்மதிக்கவில்லை, எனவே இருவரையும் சேர்ந்தாற்போலவே கண்டு பேச வேண்டியதாயிற்று.

அவர்கள் வந்ததும் க்ஷேம சமாசாரங்களை விசாரித்து, கௌரவித்து, உட்காரச் சொல்லி அதிகாரி, "மந்திரிப் பதவியிலிருக்கும் தாங்கள் இருவரும் இப்படி ஒற்றுமையாய் இருப்பது குறித்து எனக்கு மிகவும் சந்தோஷம். ஒரு நாட்டிற்கு, அதிகார வர்க்கத்தாரிடையே இப்படிப் பட்ட ஒற்றுமை இருப்பதை விட நன்மை பயக்கக்கூடியது வேறொன்றில்லை," என்றான்.

போபண்ண, "ஐயா அவர்கள் எங்களுக்கெல்லாம் பெரிய மனிதர். எங்கள் எல்லோருடைய க்ஷேம நலன்களையும் கவனித்துக்கொள்ள வல்லவர். நான் அவருக்குத் துணையாக இருக்கிறேன். எங்களுக்குள் வித்தியாசத்திற்குக் காரணமே இல்லை," என்றார்.

"மிகவும் சந்தோஷம். நான் நேரில் தங்களைக் காண விரும்பியது எதற்காக என்று உங்களுக்குத் தெரிந்திருக்காது. எங்களுக்கு இங்கிருந்து பல மனுக்கள் வந்திருக்கின்றன. அவைகளைப் பற்றி மேலோட்டமாக உங்கள் அரசரிடம் பிரஸ்தாபித்திருக்கிறேன். ஆனால் சில விஷயங்களை அதிகார வர்க்கத்தினரிடம் தெரிவித்தாலொழியப் பயன் இல்லை, அரசர் அத்தகைய விஷயங்களைப் புரிந்துகொள்வது கஷ்டம். ஆகையால் நான் தங்கள் அரசரிடம் தக்க முறையில் கேட்டு தங்களை இவ்வாறு நேரில் பார்த்துப் பேச அனுமதி பெற்றுக்கொண்டேன்."

போபண்ண: "அரசரின் அந்தரங்க மந்திரி இதை எங்களுக்குத் தெரிவித்தார்."

"இந்த அந்தரங்க மந்திரி கீழ் சாதியைச் சேர்ந்தவன் என்றும், அரசரின் துரதிர்ஷ்டத்தினால் அவன் இவருக்கு மந்திரியாக வாய்த்துள்ளான் என்றும், அரசரின் கெட்ட குணம், நடவடிக்கை இவைகளுக்கெல்லாம் அவனே தூண்டுகோலாகவும், போஷகனாக

வும் இருப்பதாக எங்களுக்கு வந்த மனுக்கள் பலவற்றில் சொல்லப்பட்டுள்ளது. இதில் எவ்வளவு உண்மையிருக்கிறது என்பதை நாங்கள் அறிந்து கொள்வது நல்லது."

போபண்ணு லக்ஷ்மீநாராயணய்யாவைப் பார்த்து, "என்ன சொல்லுகிறீர்கள் ஐயா?" என்று கேட்டார். லக்ஷ்மீநாராயணய்யா, "இதை இவர் எதற்காகத் தெரிந்துகொள்ளவேண்டும்?" என்று கேட்டார்.

போபண்ணு, அதிகாரியிடம், "இதைத் தெரிந்துகொண்டு தாங்கள் செய்யப்போவதென்ன?" என்று கேட்டார்.

அதிகாரி ஒரு மாதிரியாகச் சிரித்தபடியே "மனுச் செய்து கொண்டிருப்பவர்களுடைய கூற்று உண்மையா பொய்யா என்று தெரிந்து கொள்ளவேண்டுமென்பது எனது விருப்பம்," என்றான்.

"உண்மை என்று சொல்கிறோம், அப்புறம்"

"எங்கள் மேலிடத்துக்கு இதைத் தெரிவிப்போம்."

"அவர்கள் என்ன செய்வார்கள்?"

"அவர்கள் என்ன செய்வார்கள் என்று என்னால் சொல்ல முடியாது."

"இன்னதைத் தான் செய்வார்களென்று சொல்லமுடியாது, சரிதான்; ஆனால் இப்படிச் செய்யலாம் அல்லது அப்படிச் செய்யலாம் என்று இரண்டு மூன்று வழிகள் இருக்கலாமல்லவா?"

"அதைச் சொல்வது சிரமம் தான்."

"உங்கள் மேலிடத்தார் என்ன சேய்யக் கூடும் என்பதைத் தெரிந்துகொள்ளாமல் மனுச் செய்தவர்களின் கூற்று உண்மை அல்லது பொய் என்று சொல்லி நாங்கள் ஒரு சிக்கலில் மாட்டிக் கொள்ளமுடியுமா?"

"நாங்கள் யாருக்கும் கெடுதல் நினைக்கவில்லை, தாங்கள் அரசாங்கத்தை நடத்துபவர்கள். தங்கள் விஷயமாக ஜனங்கள் மிகவும் அன்பாகவே பேசுகிறார்கள், இதை நான் அறிவேன். அவர்கள் தூற்றுவதெல்லாம் அரசரையோ அல்லது மந்திரி பசவய்யா அவர்களையோ தான். நாங்கள் வெளி மனிதர்கள். எங்களுக்கு இங்கே யார் மேலேயும் புகார் இல்லாமலிருந்தால் தான் மகிழ்ச்சி. ஜனங்கள் சுகத்தோடிருக்கவேண்டும், அரசாட்சி நன்கு நடைபெறவேண்டும். அதை விட அதிகமாக எங்களுக்கு வேறொன்றும் வேண்டாம்."

"இதைப் பற்றி எங்களிடம் கேட்கப் போவதாக அரசருக்குத் தெரிவித்திருக்கிறீரா?"

"அரசாங்க விஷயமாக சில விவரங்கள் கேட்கப் போவதாகத் தெரிவித்திருக்கிறேன்."

"எங்கள் அரசர் உங்கள் கும்பினியின் நண்பர், நண்பரின் ராஜ்யத்தைக் குறித்து இப்படி விசாரிப்பது தரமல்லவே?"

"சரியான பேச்சு. எனக்கு உங்கள் அரசாங்கத்தைப் பற்றி எதுவும் தெரிந்து கொள்ளவேண்டாம். ஆனால் இங்கே கலகம் ஏற்பட்டால் அதன் பிரதிபலிப்பு இதன் எல்லைக்கு அப்பாலும் ஏற்படும். குடகில் வீசும் புயல் எங்கள் ஆட்சிப் பிரதேசத்திலும் பிரவேசிக்கும். அது க்ஷேமமாக இருக்கவேண்டுமானால் இதுவும் க்ஷேமமாக இருக்கவேண்டும். அது தான் என் கவலைக்குக் காரணம்."

"உண்மையில் இங்கே அரசாங்கம் சரியானபடி இல்லை என்று வைத்துக்கொண்டால் என்ன செய்வீர்கள்?"

"நிலைமை உண்மையிலேயே சீர்கேடடைந்திருந்தால் நமது மேலிடத்தார் என்ன செய்வார்களோ தெரியாது. அங்கே இது விஷயமாக யோசிப்பவர்களில் சிலர் மைசூரின் ஆட்சிப் பொறுப்பை சிறிது காலத்திற்கு ஏற்றுக்கொண்டபடி குடகின் ஆட்சிப் பொறுப்பையும் சிறிது காலத்திற்கு ஏற்றுக்கொள்வது நல்லது என்று அபிப்ராயப் படுபவர்கள் இருக்கிறார்கள். கும்பினி சர்க்காருக்கு மண்ணாசை கிடையாது. ஏற்கனவே அது கைப்பற்றியிருக்கும் பிரதேசத்தின் அரசாட்சியை நடத்துவதே போதும் போதுமென்றிருக்கிறது. அந்த ஜனங்களும் விதியில்லாமல் நமது ஆட்சிக்குட்பட்டவர்கள் தான். 'இந்த ஜனங்களும் விதியில்லாமல் நம் கைக்கீழ் வரப்போகிறார்கள். அந்தப் பொறுப்பை நிர்வகிப்பது எப்படி?' என்று நமது சர்க்காரில் சிலர் கவலைப் படுகிறார்கள். 'கஷ்டமோ நஷ்டமோ ஜனங்களின் க்ஷேமம் தான் முக்கியம்' என்று சொல்பவர்களும் உண்டு. குடகின் பிரஜைகள் சுகமாக இருந்தால் கும்பினிக்கு ஒரு கஷ்டமும் இல்லை. குடகின் ஜனங்கள் கஷ்டப் பட்டுக்கொண்டு நமக்கு மனுச் செய்துகொண்டால் இதை எப்படிச் சரி செய்வது என்று கும்பினி கவலைப்படவேண்டியிருக்கிறது."

போபண்ணா லக்ஷ்மீநாராயணய்யாவிடம் மெதுவாக, "நல்லது என்று பேச்சை முடிக்கிறேன் ஐயா" என்றார்.

லக்ஷ்மீநாராயணய்யா, "ஜனங்களின் நலனுக்கு வேண்டிய உதவியை நாம் வேண்டலாம். ஆனால் கும்பினி குடகை மைசூர் மாதிரி நினைத்துவிடக்கூடாது என்று சொல்லுங்கள்," என்றார்.

போபண்ணா அதிகாரியிடம் அவ்வாறே சொன்னார். அதிகாரி, "தாங்கள் சங்கோசப்படாமல் இந்த விஷயத்தைக் குறித்து இவ்வாறு பேசியதற்காக உங்களைப் பாராட்டுகிறேன். எல்லா மந்திரிகளும் இவ்வாறு பேசினால் அரசியல் நிர்வாகம் எல்வளவு நன்றாக நடக்கும். மைசூரை கும்பினி ஏதோ செய்து விட்டதாகவே நினைக்கவேண்டாம். உங்களைப் போன்ற திறமைசாலிகளும் சத்தியத்தை உடையவர்களுமான மந்திரிகள் முன் வந்து நாங்கள் அரசாங்கத்தைப் பார்த்துக்கொள்கிறோம் என்றால், இந்த மந்திரிகள் நடத்தும் அரசாட்சியை நான் மேற் பார்த்துக் கொள்கிறேன் என்று அரசர் வாக்குக் கொடுத்தால், கும்பினி நாளைக்கே மைசூரைத் திருப்பித் தந்து அந்த மந்திரிகளை அதிகாரத்தில் அமர்த்தத் தயாராயிருக்கிறது. தாங்கள் இருவரும் ஒருமுகமாக நின்று குடகின் அரசாட்சியில் குடகு மக்களுக்கு கஷ்டமில்லாமல் பார்த்துக்கொள்கிறோம் என்று வாக்குக் கொடுத்தால் கும்பினி சர்க்கார் இங்கே தலையிடப் போவதில்லை; மகாராஜர்களாக உங்கள் வேலையை நீங்கள் பார்த்துக்கொள்ளுங்கள் என்று சொல்லி விடும். இங்கே புரட்சி ஏற்பட்டால், அருகில் எங்கள் ஆதீனத்தில் இருக்கும் நாட்டில் கலகம் ஏற்பட்டு விடக்கூடும் என்பது ஒன்றே தான் பயம் கும்பினியாருக்கு."

போபண்ணா லக்ஷ்மீநாராயணய்யாவிடம், "அப்படிப் பட்ட சந்தர்ப்பம் வந்தால் உங்களுக்குத் தெரிவிக்கிறோம் என்று சொல்லுகிறேன் ஐயா" என்றார்.

லக்ஷ்மீநாராயணய்யா சம்மதம் என்று தலையாட்டினார்.

போபண்ணா அதிகாரியிடம், "குடகில் தற்போதைக்கு நீங்கள் கூறும்படியான இயக்கம் எதுவும் காணோம். அப்படி ஏதாவது தோன்றி ஜனங்கள் உதவி வேண்டினால் நீங்கள் நண்பர்கள் என்ற முறையில் உதவலாம். நீங்களாக எந்த விஷயத்திலும் இங்கே தலையிடுவதற்கு நாங்கள் சம்மதிக்கமாட்டோம். இது பற்றிச் சந்தேதமே வேண்டாம்," என்றார்.

"உங்கள் பேச்சைப் பற்றி நான் மறுபடியும் பெருமைப் படுகிறேன். இந்த உறுதியும், நிச்சயமும் ஒரு நாட்டைக் காப்

பாற்றக்கூடியது, என்னுடன் கபடமில்லாமல் இவ்வளவு தூரம் பேசியதற்காக என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்" என்று கூறி அதிகாரி கதவருகே இருந்த சேவகனுக்கு ஏதோ ஜாடை காட்டினான். அவன் கொண்டு வந்த வெற்றிலை, பாக்கு, புஷ்பச் செண்டு தட்டை எடுத்துத் தன் அருகில் வைத்துக் கொண்டு முதலில் லக்ஷ்மீநாராயணய்யாவுக்கும் பிறகு போபண்ணாவுக்கும் வெற்றிலை, பாக்கு, புஷ்பச் செண்டு இவைகளைக் கொடுத்தான். மந்திரிகள் சந்தோஷத்துடன் அவைகளைப் பெற்றுக்கொண்டு அவனுக்கு வணக்கம் செலுத்திவிட்டு விடை பெற்றுக்கொண்டனர்.

90

சென்னபசவய்யன் வந்த அன்று அதிகாரி அவனை ராஜ மரியாதையுடன் வரவேற்று அத்தியந்த அன்புடன் பேசினான். "தாங்கள் குடகர்களில் மிகப் பெரிய வம்சத்தைச் சேர்ந்தவர் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். அதனால்தான் லிங்கராஜர் தங்களை அதே வேலையாகத் தேடிப்பிடித்து அழைத்து அரண்மனை மாப்பிள்ளையாகச்செய்து கொண்டாராம்."

"ஆமாம், ஐயா. எங்கள் வம்சம் குடகர்களில் மிகவும் உயர்ந்த வம்சம். மந்திரி போபண்ணா இருக்கிறாரே, அவரைவிட உயர்ந்தது எங்கள் வம்சம்."

"நானும் அப்படித்தான் கேள்விப்பட்டேன். பெங்களூருக்கு நான் வந்தது முதற்கொண்டே தங்களைக் காணவேண்டுமென்ற ஆவலோடு இருந்தேன். அது இப்பொழுதுதான் நிறைவேறியது எனக்கு இதுபற்றி மிகவும் சந்தோஷம்."

"எனக்கும் மிகவும் சந்தோஷம், ஐயா, தங்களைக் காண்பது. உங்களுக்கு முன்னால் இருந்த பெரிய அதிகாரியை நான் பார்த்திருக்கிறேன். அவருக்கு இரண்டொரு மனுக்கள் எழுதியதும் உண்டு. தங்களுக்கும் அதுபோல ஒரு கடிதம் எழுதினேன்."

"ஆமாம். தாங்கள் எழுதிய ஒவ்வொரு கடிதத்தின் விவரங்களையும் நாங்கள் நன்றாக ஆலோசித்திருக்கிறோம். தங்களுக்கும் அரசருக்கும் சிறிது மனஸ்தாபம் ஏற்பட்டிருப்பதை அறிந்து

கொண்டோம். உறவினர்கள் என்ற பிறகு ஏதாவது இப்படி கூடக்குறைய இருக்கத்தான் செய்யும். இப்பொழுது எல்லாம் சரியாகப் போய்விட்டதாகக் கேள்விப்பட்டேன். மிகவும் சந்தோஷம்."

"சரியாகப்போவது ஏது ஐயா? நான் உங்களுக்குக் கடிதம் எழுதியதாக நீங்கள் அவருக்கு ஏதாவது சொல்லியிருப்பீர்கள். இதென்னடா பூதம் புறப்பட்டுவிட்டது என்று பயந்து போயிருப்பார்கள். தங்கையை உடனே என்னிடம் அனுப்பிவிட்டார். எல்லாம் எங்கே சரியாகப் போயிற்று?"

"அப்படியானால் இன்னும் சரியாக வேண்டிய சங்கதி என்ன? நூறு சொன்னாலும் நாங்கள் அயலார். உங்கள் குடும்ப விஷயத்தில் நாங்கள் தலையிடுவது உசிதமல்ல. ஆனால் அரசர் எங்களுக்கு வேண்டியவர். அரண்மனை மாப்பிள்ளை என்ற காரணத்தால் தாங்களும் எனக்கு வேண்டியவர். ஆகையால் இரண்டு பேருக்கும் நண்பர்களாக இருந்துகொண்டு நாங்கள் செய்யக்கூடிய சேவை ஏதாவது இருந்தால் அதைச் செய்யத் தயாராயிருக்கிறோம். நமது நண்பர்களிடையே மனஸ்தாபம் இருப்பது எங்களுக்கும் சந்தோஷமான சமாசாரம் அல்ல. ஆனால் மனஸ்தாபம் இருந்தால் எங்கள் மனத்திற்கு எவ்வளவு வருத்தமாக இருந்தாலும் அதைப்பொறுத்துக்கொண்டு அந்த மனஸ்தாபத்தை நிவர்த்திப்பதற்கு முயல்வது எங்கள் கடமை என நினைக்கிறோம்."

"யாரும் வந்து குணமாக்கக்கூடிய வியாதி அல்ல இது போங்களேன். எனக்கும் அரசருக்கும் மறுபடியும் நல்லுறவு என்பது கனவு தான்."

"தாங்கள் இவ்வளவு அவநம்பிக்கை கொண்டிருப்பது எனக்கு வருத்தமாக இருக்கிறது. அப்படி என்ன மனஸ்தாபம்? எனக்குத் தெரிவிக்கக்கூடியதானால் தெரிவியுங்கள்."

"தெரிவிக்கவேண்டு மென்றே வந்திருக்கிறேன். சொல்லுகிறேன், கேளுங்கள். முதலாவது, என் மாமனார் மகளுக்குக் கொடுத்த நகைகளில் பாதியை இவர் அரண்மனையிலேயே வைத்துக்கொண்டிருக்கிறார். எனக்குக் கொடுக்கவில்லை. எனக்கு ஏன் கொடுக்கவில்லை என்றால் நான் அவைகளை விரயம் செய்து விடுவேனாம். அதனால் கொடுக்க முடியாது என்கிறார்."

"சரி."

"தந்தை மகளுக்கு அப்பங்கொளத்தைச் சுற்றியுள்ள பத்து கிராமங்களை ஜாகீராகக் கொடுத்தார். அவர் இருந்த சில நாட்கள் வரை ஜாகீர் நடந்தது. அவர் கண்ணை மூடினார்; ஜாகீரும் முடிந்தது. பத்து வருஷமாயிற்று. வருஷத்திற்கு ஆயிரம் பொன் எங்களுக்கு வரவேண்டியது அரண்மனைக்குப் போயிருக்கிறது."

"தெரிந்து கொண்டேன்."

"முன்பு நான்கு வருடம், சென்ற இரண்டு வருடங்கள் என் மனைவி அரண்மனையில் சிறை வாசம் செய்யவேண்டியதாயிற்று. அரசர் சிவமதத்தைச் சேர்ந்தவர் என்று பெயர். அதன் நியமங்கள் எதுவும் அவருக்குத் தெரியாது. சிவாசாரத்துக்கும் அவருடைய ஆசாரத்துக்கும் வெகு தூரம். குடித் திருக்கும் பொழுது இவர் தங்கையோடு எப்படி நடந்து கொண்டாரென்று சொல்வது கஷ்டம் தங்கையும் வேண்டாம், தங்கை புருஷனும் வேண்டாம். எங்களுக்கும் வேண்டியவர்கள் அநேகம் பேர் இருப்பதால் எங்களை உயிரோடு விட்டிருக்கிறார்; இல்லாவிட்டால் நாங்கள் உயிரோடு இந்தத் தரைமீது நடமாடிக் கொண்டிருக்க முடியாது."

"தாங்கள் சொல்வதுபோல இந்த நிலைமை சரிப்படுவது சிரமம் தான். தாங்கள் என்ன செய்யவேண்டுமென்று யோசித்திருக்கிறீர்கள்?"

"நான் செய்திருக்கும் யோசனையை உங்களுக்குத் தெரிவிப்பதற்கு முன்னால், எனக்கு உதவுவதாக நீங்கள் வாக்களிக்கவேண்டும். அப்படி இல்லாமல் உங்களை நம்பி நான் என் யோசனையைச் சொல்ல, நீங்கள் அரசரிடம் நல்ல பெயர் வாங்குவதற்காக அதை அவரிடம் சொல்லிவிட்டால் நெஞ்சிலிருக்கும் நஞ்சு தலைக்கு ஏறிவிடும். நான் ஒழிந்தேன்."

"தாங்கள் அதுபற்றி எள்ளத்தனையும் கூட சந்தேகப்பட வேண்டாம். நாங்கள் அதிகாரம் ஏற்றுக் கொள்ளும்பொழுது ஒரு பிரமாண வசனம் எடுத்துக் கொள்கிறோம். அதிகாரத்தில் இருக்கும்பொழுது நமக்கு யாராவது எதையாவது தெரிவித்தால் அது நம்மிருவரிடையே மாத்திரம் இருக்கவேண்டியது. அதை எதிர்க் கட்சியாக இருப்பவரிடம் மாத்திரம் அல்ல, எதிர்க்கட்சியாகலாம் என்ற சந்தேகம் இருப்பவரிடம் கூட தெரிவிக்க மாட்டோம். இந்த நம்பிக்கைக்குக் கூட பாத்திரமாக இல்லாமல்

நடந்து கொண்டால் நாங்கள் ஜனங்களுக்குக் கஷ்டத்தில் உதவுவது எப்படி? நீங்கள் இது வரையில் சொன்னதும் இனிமேல் சொல்லப்போவதும் நம்மிருவரிடையே ரகசியமாகவே இருக்கும். எங்கள் ஆட்களுக்கும் நாங்கள் ரகசியக் கட்டளை இட்டுள்ளோம். நாங்கள் பேசும் பேச்சு எதுவும் ஒரு துரும்பு அளவு வெளியில் செல்லக்கூடாது. அப்படிப் போனால் அவர்கள் எங்களிடம் வாழ முடியாது. இதை நீங்கள் நிச்சயமாக நம்பலாம்.''

"நல்லது ஐயா, அப்படியானால் சொல்லுகிறேன் கேளுங்கள். என் மாமனார் இவரை அரசராக்க முயன்றபோது ஜனங்கள் இவரை வேண்டாம் என்றார்கள். அப்படி உங்கள் குழந்தை தான் அரசராக வேண்டுமானால் உங்கள் மகளை ஆட்சி பீடத்தில் அமர்த்துங்கள் என்று சொன்னார்கள். அண்ணன் இருக்கும் பொழுது தங்கையை ராணியாக்க மாமனார் ஒப்பவில்லை. பெரியவர்களுடன் கலந்து யோசித்து அவர்களைச் சமாதானப்படுத்தி, ஒரு வருஷம் பாருங்கள், பிறகு வேண்டுமானால் என் மகளையே அரசியாக்குங்கள், என்று கூறினார். அவர்கள் ஒப்புக்கொண்டனர். அவர் கண் மூடினார். பெண்ணாகப் பிறந்து, ஆணைவிட மேலாக, இவள் என்னை அரசாட்சியிலிருந்து விலக்கப் போட்டியாக வந்து விட்டாளே என்று இந்த அண்ணனுக்கு அப்பொழுதிருந்தே வயிற்றெரிச்சல்; இன்னும் எரிந்துகொண்டே இருக்கிறான்; எரியட்டும். எங்களுக்கென்ன? இவன் வயிறுதான் எரிகிறது. ஆனால் இப்பொழுது என்ன ஆயிற்று? குடிகளுக்கெல்லாம் போதும் என்றாகிவிட்டது. இவன் செத்தாலும் அவர்கள் வருந்த மாட்டார்கள். இவனை ஒழித்து தங்கையை அரசியாக்கினால் அவர்களுக்கு சம்மதம். ஆனால் நாட்டில் கலகம் எழுப்புவதற்கு எனக்குப் பிரியமில்லை. இந்தப் பக்கம் நான்கு பேர், அந்தப் பக்கம் நான்கு பேர், ஒருவரை யொருவர் அடித்துக்கொண்டு ரத்தம் பெருக்குவதனால் நமக்கு வந்ததென்ன? அதற்காக நான் இதை உங்களுக்குச் சொல்லுகிறேன். குடகுநாட்டு மக்கள் விரும்புகிறார்கள்; இந்த அரசனின் ஆளுகை முடியட்டும் என்று. நீங்கள், கம்பினி சர்க்கார், பலம் பொருந்தியவர்களாக இருக்கிறீர்கள்; மைசூரைக் கைப்பற்றிக் கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் இந்த அரசனுக்குச் சொல்லுங்கள்: பதினான்கு வருஷம் ஆண்டு விட்டாய், பட்டத்தைவிட்டு விடு. உன் தந்தை விரும்பியதைப் போல உன் தங்கை சில காலம் ஆளட்டும், என்று. இந்த அரசன் உங்கள் பேச்சை மறுக்க மாட்டான். பட்டத்தை விட்டுவிடு

வான்; தங்கை அரசியாவாள்; உங்களைச் சரியானபடி பார்த்துக் கொள்வாள். தொட்ட வீரராஜர் முப்பது வருஷங்களுக்கு முன்னர் எப்படி உங்களுக்கு வலது கையாக இருந்தாரோ அதுபோல் உங்கள் வலது கையாக நடந்துகொள்வாள். உங்கள் கைக் கீழ் இருக்கும் மைசூர் வேறல்ல, நம் கைக் கீழ் இருக்கும் குடகு வேறல்ல என்பது போல உங்களிடம் நடந்துகொள்வாள். செய்யுங்கள்; பார்ப்போம்.''

"நீங்கள் மிகத் தெளிவாகவும் தைரியமாகவும் சொல்லிவிட்டீர்கள். எனக்கு மிக்க சந்தோஷம். ஆனால் இந்த சந்தர்ப்பத்தில் நாம் இன்னொரு விஷயத்தை யோசிக்கவேண்டும். உங்கள் மனைவியை அரசியாக்கும் யோசனையை நாங்கள் அரசருக்குத் தெரிவித்தால் அவரால் உங்களுக்கு அபாயம் நேரிடக்கூடுமல்லவா?''

"ஹா! அது உண்மை.''

"அதை எப்படித் தடுப்பீர்கள்?''

"எனக்கு ஆட்கள் இருக்கிறார்கள் ஐயா. அவ்வளவு பயப்பட வேண்டியதில்லை ''

"நீங்கள் தைரியசாலி. அது விஷயத்தில் சந்தேகமேயில்லை. ஆனால் கலகம் கூடாதென்று சொன்னீர்களல்லவா? எங்கள் அபிப்பிராயத்தைத் தெரிந்துகொண்டு அவர் உங்களைத் தண்டிக்கப் புறப்பட்டால் நீங்கள் அவரைத் தடுக்க வேண்டியிருக்கும். அப்பொழுது கலகம் தான், மண்டைகள் உருளவேண்டியதுதான். விவகாரம் நல்லபடியாக நடக்காது.''

"நீங்கள் என்ன செய்யவேண்டுமென்கிறீகள்?''

"நாங்கள் ஒரு அபிப்பிராயமும் சொல்லமாட்டோம். இங்கே அருகில் இருந்தால் இவர் தண்டிக்க முயற்சிக்கலாம். அதைத் தவிர்க்க என்ன செய்யலாம் என்று யோசியுங்கள்.''

"பக்கத்தில் இருக்கவேண்டாம்.''

"என்ன செய்வீர்கள்?''

"ஒரிரண்டு மாதங்கள் குடகைவிட்டு வேறு எங்காவது போய் இருப்பது.''

"தாங்கள் நிர்ப்பயமாக வேறு எங்கே போய் இருக்க முடியும், யோசித்தீர்களா?''

"நஞ்சனகூடுக்குப் போகலாம்.''

"நஞ்சனகூடில் போதுமான பாதுகாப்பு உண்டா!"

"பாதுகாப்பு வேண்டியிருந்தால் பெங்களூருக்கே வரலாம்."

"அவசியம் வாருங்கள். நாங்கள் உங்களைப் பார்த்துக் கொள்கிறோம். நீங்கள் விரும்பும் காரியத்தை நடத்துவதற்கும் அதிக சௌகரியமாயிருக்கும்."

"உண்மை ஐயா."

"இதையெல்லாம் யோசித்து உங்கள் முடிவை எனக்குத் தெரிவியுங்கள். இந்த நான்கு நாட்கள் எப்படியும் நாங்கள் இங்கே விருந்தினர்களாக இருக்கப் போகிறோம். நாங்கள் திரும்பிப் போக சில நாட்கள் ஆகலாம். தாங்கள் எங்களிடம் என்ன உதவியை விரும்பினாலும் அதை நாங்கள் மகிழ்ச்சியுடன் அளிப்போம்."

"நல்லது ஐயா."

"இப்பொழுது நம்மிடையே நடந்த பேச்சு வெளியில் போகாதபடி நான் எப்படிப் பார்த்துக் கொள்வேனோ அதே போல நீங்களும் எச்சரிக்கையுடன் நடந்துகொள்ள வேண்டும்."

"பார்த்துக் கொள்கிறேன்."

"குடகு நாட்டு மக்களுக்குப் பிரியமானவர் குடகின் அரசராகி அவர்கள் க்ஷேமமாக இருக்கவேண்டுமென்பது என் அபேட்சை. எந்த மனவேதனையும் இல்லாமல், கலகம் இல்லாமல் இது கை கூடவேண்டும். இதை நடத்திக் கொடுக்கவேண்டியது உங்கள் பொறுப்பு."

"நல்லது ஐயா."

அதிகாரி சேவகனுக்கு ஜாடை காட்டி தாம்பூலம், சுகந்த திரவியங்கள் இவைகளை வரவழைத்து சென்ன பசவனுக்கு வழங்கி மிகவும் மரியாதையோடு அவனை வழி அனுப்பி வைத்தான். சென்ன பசவய்யன் தன் மாளிகைக்குத் திரும்பும்பொழுது, தன் மனைவி சீக்கிரத்தில் குடகு ராணியாகப் போவதாகவும், அவள் பெயரில் தான் குடகை ஆளப் போவதாகவும் நினைத்துக் கொண்டே சென்றான்.

ஐந்தாவது நாள் அரண்மனையில் பண்டிகை நாள். குடகர்களுக்கு இது ஆயுதபூஜைக்காக ஏற்பட்ட பண்டிகை. ஒவ்வொரு பிரதேசத்தில் அது ஒவ்வொரு நாள் நடைபெறும். அரண்மனை பத்துப பிரதேசங்களிலிருந்தும் கலைஞர்களை வரவழைத்து அரண்மனைக்கு வெளியே அமைந்துள்ள மண்டபத்தில் மற்ற திருவிழாக்களைப்போல விமரிசையாக நடத்தும்.

வழக்கம்போல பத்துப் பிரதேசத்தவர்களும் மடிகேரி பிரதேசத்து கோவிலில் கூடி ஜோசியனிடம் ஆயுதபூஜைக்கு ஒரு நல்ல முகூர்த்தத்தை வைததுக் கொடுக்கச் சொன்னார்கள். எந்தத் திசையில் வேட்டைபாடச் செல்லவேண்டும், எந்த நட்சத்திரத்தில் பிறந்தவனுக்கு அதன் பலன் கிட்டுப, என்பவைகளையும் இன்னும் அப்பண்டிகை சம்பந்தப்பட்ட சில சடங்குகளை எந்த முகூர்த்தத்தில் செய்ய வேண்டும் என்பதையும் ஜோசியன் குறித்துக் கொடுத்தான்.

காலையில் ஒவ்வொருவரும் துப்பாக்கி, கத்தி, ஈட்டி முதலியதங்களிடமுள்ள ஆயுதங்களை எடுத்து நன்ருகத் துடைத்து வீட்டின் ஒரு மூலையில் அடுக்காக நிறுத்தி வைத்தார்கள்.

சமையல் ஆனதும் ஆயுதங்களுக்கு முதல் நைவேத்தியம். வீரமக்கள் தமது ஆயுதங்களுக்கு தூபம் காட்டி, சந்தனப் பொட்டிட்டு, தலை வாழையிலை போட்டு அவைகளில் அறுசுவை உண்டிகளை இட்டு, ஆயுத தேவதைக்குப் பூஜை செய்தனர்.

பிறகு வீட்டிலுள்ளவர்களின் சாப்பாடு. சிறிது இளைப்பாறிவிட்டு வீரர்களெல்லாம் புத்தாடை புனைந்துகொண்டு மண்டபத்திற்கு வந்து ஆயுதங்களின் எதிரே நின்றனர். வீட்டின் பெரியவர்கள் ஒவ்வொரு துப்பாக்கியை எடுத்துத் தமது கைகளில் வைத்துக்கொண்டு, வழக்கமாகச் சொல்லும் சில வாக்கியங்களைச் சொல்லி சிறியவர்களில் அதிக வயதானவர்களிடம் அதைக் கொடுத்தனர். அதைப் பெற்றுக் கொள்பவர்கள் கொடுக்கும் பெரியவரின் பாதங்களைத் தொட்டு நமஸ்கரித்து பிறகே துப்பாக்கியைப் பெற்றுக்கொண்டனர். அதன் பிறகு வயதுக் கிரமப்படி மற்றவர்களும் பெரியவர்களிடமிருந்து ஒவ்வொரு துப்பாக்கியைப் பெற்றுக் கொண்டனர்.

நூறு அடி தூரத்தில் ஒரு கயிற்றில் ஒவ்வொரு கஜம் இடைவெளிவிட்டு இருபது தேங்காய்களைக் கட்டித் தொங்கவிட்டிருந்தனர். துப்பாக்கியை வாங்கிக் கொண்டவர்கள் ஒரு கோட்டில் நின்றுகொண்டு அந்தக் காய்களைக் குறிவைத்துச் சுடவேண்டும். அந்தப் பந்தயம் வெகு சிறப்பாக இருந்தது.

நூற்றுக்குத் தொண்ணூறு பேர் காய்களைச் சுட்டனர். தவறியவர்கள் பயிற்சி இல்லாத இளைஞர்கள் அல்லது மிகவும் வயதான கிழவர்கள்.

அவ்வளவு அதிகமாக வயதாகாத உத்தய்யதக்கனும் மற்றவர்களின் வற்புறுத்தலால் தானும் துப்பாக்கியை எடுத்துக்கொண்டு சுட வந்தான். 'டேய், பையன்களா, என்னைக் கேலி செய்யப் பார்க்கிறீர்களா? புலியைக் கொன்றவன் என்கிறானே, காயைச் சுடட்டும் பார்க்கலாம் என்கிறீர்களா? உங்களைப் போல நான் இருந்தபொழுது என்னைப் போல இருப்பவர்களைப் பார்த்து நானும் கேலி செய்ததுண்டப்பா. சருகைக் கண்டால் தளிருக்கு இளப்பம்தான்," என்றான்.

துப்பாக்கியைத் தூக்கியபொழுது கை ஆடினாலும் குறி பார்த்து அதைத் தோளுக்கு நேராக வைத்துக் கொண்டபோது கிழவன் எ.:கில் வடித்த சிலைபோலக் காணப்பட்டான். மூன்று முறை குறி வைத்து மூன்று காய்களை சுட்டுத் தள்ளினான். பின்னால் நின்று பார்த்துக் கொண்டிருந்தவர்கள், வலதுபுறம் நின்று பார்த்துக் கொண்டிருந்த அரண்மனை வாசிகள், விருந்தாளிகள் அனைவரும் இவனுடைய திறமையைக் கண்டு ஜய கோஷம் செய்தார்கள். கிழவன், "அப்படியானால் இந்த மீசை சும்மா விளையாட்டுக்காக வளர்த்ததல்ல. நான் கிழவனாகிவிட்டாலும் துப்பாக்கி இளமையாகவேதான் இருக்கிறது" என்று கூறி நகைத்தான். மற்றவர்களும் சிரித்தார்கள். "பார், உன் துப்பாக்கி இதைப்போல அவ்வளவு நன்றாக இல்லை" என்று கூறி கிழவன் பக்கத்தில் நின்றிருந்த ஒரு இளைஞனின் துப்பாக்கியை வாங்கிக் கொண்டு சரியானபடி குறி வைக்காமல் இரண்டு காய்களுக்கு நடுவே சுட்டுவிட்டு துப்பாக்கியைத் திருப்பிக் கொடுத்தான்

இவனுடைய விளையாட்டைக் கண்டு எல்லோரும் சிரித்தார்கள். கிழவன், "திருஷ்டி படாமலிருப்பதற்காக ஒரு தடவை இப்படி சுடவேண்டும். குறி தவறாமல் திருஷ்டிபடும்படி சுட்டீர்களானால் என்னைப்போல கிழவனாகி விடுவீர்கள், தலை நரைத்துப்போகும்,

ஜாக்கிரதை," என்று கூறி தன் ஹாஸ்யத்துக்கு தானே சிரித்துக் கொண்டான். பிறகு அங்கிருந்து அகன்று தன் சகாக்களான கிழவர்களோடு சேர்ந்துகொண்டான்.

துபாஷ் பசவனைப் பக்கத்தில் வைத்துக்கொண்டு இந்த விளையாட்டுகளின் விவரங்களைக் கேட்டுத்தெரிந்துகொண்டு விருந்தாளிகளுக்கு அவைகளை விவரித்துச்சொன்னான். பெரிய அதிகாரி, "இந்த ஜனங்களில் பெரியவர்கள் சிறியவர்களை நடத்தும் முறையும், சிறியவர்கள் பெரியவர்களிடத்தில் நடந்துகொள்ளும் முறையும் வெகு நன்றாக இருக்கிறது," என்று புகழ்ந்தான்; உத்தய்ய தக்கனைக் குறித்து, "The old man is wonderful! How cheerful an old man can be! And he can handle a gun! Each time he shot off in the flicker of an eye and hit the nut. He is marvellous!" என்றான்.

இதன் பிறகு நூறு கஜ ஓட்டப்பந்தயம் நடைபெற்றது. அதன் பின்னர் குண்டு வீசுதல் ஈட்டி எறிதல் முதலிய பந்தயங்கள் நடைபெற்றன.

எல்லாப் பந்தயங்களிலும் மற்றவர்களைவிட அதிகத் திறமை காட்டி வென்றவன் படைத்தலைவன் உத்தய்யன்.

வேட்டையில் இவனது திறமையைக் கண்டு வியந்திருந்த விருந்தாளிகள் அவன் குறிபார்த்து எய்வதிலும், குண்டு வீசுதலிலும், ஈட்டி எறிதலிலும் முதலாக நின்றதைக் கண்டு மிகவும் புகழ்ந்து கொண்டாடினார்கள்.

உத்தய்யதக்கன், "தம்பி உத்தப்பா, நீ இவ்வளவு திறமைசாலியாக இருப்பதற்கு என்ன காரணம் தெரியுமா?" என்று கேட்டான். இளைஞன், "சொல்லுங்கள் தாத்தா, தெரிந்து கொள்கிறேன்", என்றான்

"உனக்கு வைத்திருப்பது என் பெயர்."

"ஆமாம் தாத்தா. பித்தய்யா என்று பெயர் வைத்திருந்தால் இந்த மாதிரி குறி பார்த்து எய்ய முடிந்திருக்காது," என்றான்.

இவர்களுடைய இந்த ஹாஸ்யத்தை விருந்தாளிகளுக்குப் புரியும்படி விளக்கிச்சொன்னார்கள். பெரிய அதிகாரி, "இந்தக் கிழவனும் இந்த இளைஞனும் மிகவும் கெட்டிக்காரர்கள்; நல்லவர்களும்கூட. இவர்களுக்கு ஏதாகிலும் மரியாதை செய்யவேண்டுமென்பது என் விருப்பம். செய்யலாமா என்று அரசரைக் கேளுங்கள்," என்று பசவனிடம் தெரிவித்தான். பசவன் இந்த

விஷயத்தை அரசரிடம் தெரிவித்தபோது அவன் மிகுந்த வெறுப்புடன், "என்ன அப்படி சாதித்து விட்டார்கள் இந்த நாய்ப் பயல்கள். இரண்டும் இரண்டு மதம் பிடித்த காளைகள். இவனுக்கும் கொழுப்பு. அவனுக்கும் கொழுப்பு" என்றான்.

பசவன் அரசனிடம், "கொடுத்து விட்டுப்போகட்டும் அரசே. வேண்டாம் என்று சொன்னதாக ஏன்?" என்றான்.

அரசன் அவனிடம், "என்னமோ செய்து நாசமாகப் போ என்று சொல்," என்றான்.

அதிகாரி அப்பொழுதே அவர்களிருவருக்கும் கௌரவம், பரிசுகள் வழங்கினான்.

இதன்பிறகு பெரிய அதிகாரி, "நம்மவர்களில் சிலர் குறி பார்த்துச் சுடுவதை அரசர் பார்க்க விரும்புகிறாரா?" என்று கேட்டான். அரசன், "சரி" என்றான். பெரிய அதிகாரி இரண்டு முறை சுட்டான்; ஒன்று காயின் மீது பட்டது, ஒன்று தவறியது. ஹாகரும், பார்க்கரும் இரண்டிரண்டு தடவைகள் சுட்டனர். அவர்களும் அதேபோல ஒரு முறை காயைச் சுட்டார்கள். ஒரு முறை தவறினார்கள். காப்டன் துரை மூன்று முறை சுட்டான். மூன்று முறையும் வெற்றிபெற்றான். இவன் மிகவும் கெட்டிக்காரன் என்று எல்லோரும் பாராட்டினார்கள்.

இதன் பிறகு குடக இளைஞர்கள் குஸ்திச்சண்டை போட்டுக் காண்பித்தனர். ஜதை ஜதையாக வந்து இவர்கள் ஐந்தைந்து நிமிடங்கள் காண்பித்த மல்யுத்தம் மிக நன்றாக இருந்தது. இவர்களின் குஸ்தியில் ஒருவர் வெல்வதோ, தோற்பதோ முக்கியமானதாக இருக்கவில்லை. இருவரும் தத்தம் உடலை அழகாகக் காண்பிப்பது தான் முக்கியமாக இருந்தது. ஒருவன் மற்றவனைக் கீழே தள்ளிவிட்டாலும் மறுபடியும் எழுப்பி அணைத்துக்கொண்டு பிறகு இருவரும் ஜோடியாகக் கை சேர்த்துகொண்டு செல்வார்கள். இந்தப் பண்பையும் பெரிய அதிகாரி மிகவும் பாராட்டினான்.

வெள்ளையர்கள் தம்மைப் பாராட்டிவிட்டார்கள் என்று குடகர்களுக்கும் பரம சந்தோஷம். மற்றவர்களுக்கும் இந்த அயல் நாட்டார் முன்னிலையில் நம்மவர்கள் கெட்டிக்காரர்கள் என்று பெயர் வாங்கினார்களே என்று சந்தோஷம். எப்படியோ, மற்ற நிகழ்ச்சிகளைவிட இந்த விளையாட்டுப் போட்டி நிகழ்ச்சிகள் விருந்தினர்களுக்கு அதிகமாகப் பிடித்திருந்தன; மகிழ்ச்சியை அளித்தன.

92

அன்று இரவு அரண்மனையில் விருந்தாளிகளுக்கு விருந்துச் சாப்பாடு.

விருந்தாளிகள் வந்ததும் ராணி மகளுடன் அரசனின் அறை வாசலில் நின்று அவர்களை வரவேற்றாள். அறையின் ஒரு மூலையில் ஆங்கிலேயர்களின் வழக்கப்படி இரண்டு மேஜைகளைப் போட்டு சுற்றிலும் நாற்காலிகளைப் போட்டிருந்தனர். ராணி விருந்தினர்களை உட்காரச்சொல்லிவிட்டு, பெண்களோடு தானும் சில நிமிடங்கள் உட்கார்ந்துகொண்டு துபாஷின் மூலமாக அரண்மனையின் சார்பில் இரண்டொரு வரவேற்பு வார்த்தைகளைக் கூறினாள். அதற்குள்ளாக அரசனும் வந்து விட்டான். விருந்தாளிகளைக் கவனித்துக்கொள்ள அவனை விட்டு, மகளை தந்தையோடு சிறிது நேரம் இருந்துவிட்டு வரும்படி சொல்லிவிட்டு ராணி உள்ளே சென்றாள்.

இரண்டொரு நிமிடங்கள் விருந்தாளிகள் வேட்டை, விளையாட்டுகள் குறித்து பேசினார்கள். பார்க்கர் அரசரைப் பார்த்து "தாங்கள் கைத்துப்பாக்கியினால் நன்றாகக் குறிபார்த்துச் சுடுவீர்களாம்" என்று கூறினான். அரசன், "அதெல்லாம் பழங்கதையாகிவிட்டது. சிறுவயதில் நான் இருநூறு ஆனைகளைக் கொன்றேன்; பிடித்தது இன்னொரு இருநூறு," என்றான்.

எல்லோருக்கும் ஆச்சரியம். "இப்பொழுது சிறிது தங்கள் திறமையைக் காட்டக்கூடாதா?" என்று லூஸி கேட்டாள்.

அரசன் சிறிது தொலைவில் நின்றிருந்த பசவனை நோக்கி, "சுட்டுக் காண்பிக்கட்டுமாடா?" என்று கேட்டான். பசவன், "கை வலிக்காதென்றால் காண்பியுங்கள் அரசே," என்றான்.

"அந்தத்தாம்பாளத்தை எடுத்துக் கொள்" என்றான் அரசன் பசவனிடம், ஒரு தட்டைக் காண்பித்து. பசவன் அந்தத் தட்டைக் கொண்டு வந்ததும் அதில் நான்கு இடங்களில் கரித்துண்டினால் குறியிட்டுக் கொண்டு வரச்சொல்லி நான்கு இடங்களைக் குறிப்பிட்டான். "என்னுடைய கைத்துப்பாக்கி நான்கை எடுத்துக் கொண்டு வா" என்றான்.

தாம்பாளத்தில் கரித்துண்டினால் விளிம்பின் ஓரமாக மூன்று இடங்களிலும் மத்தியிலும் ஆக நான்கு இடங்களில் வட்டமாக

அடையாள மிட்டுக்கொண்டு வந்தனர். கைத்துப்பாக்கிகளும் வந்தன. பத்து கஜ தூரத்தில் தாம்பாளத்தை சுவரில் சாய்த்து நிறுத்தும்படி அரசன் பசவனிடம் சொன்னான். அப்படியே செய்தாயிற்று. அரசன் தனது ஆசனத்தில் பின்னுக்குத் தள்ளி மூன்று நிமிடங்கள் அப்படியே உட்கார்ந்திருந்தான். ஒரு கைத் துப்பாக்கியை எடுத்து தாம்பாளத்தை நோக்கிக் குறி வைத்து உடலை நிமிர்த்தி நிலையாக வைத்துக் கொண்டு சுட்டான். குண்டு முதல் அடையாளத்தில் சரியாகச் சென்று தாக்கியது.

தாம்பாளத்தை மறுபடியும் சுவற்றில் சரியாகச் சாய்த்து வைக் கும்படிச் சொல்லி இரண்டாவது தடவை இடதுபக்க அடை யாளத்தின் மீதும், மூன்றாவது முறை வலதுபக்க அடையாளத் தின்மீதும், நான்காவது முறை மத்தியிலுள்ள அடையாளத்தின் மீதும் தவறாது சுட்டான்: விருந்தாளிகளின் ஆச்சரியத்திற்கு எல்லையே இல்லை. வீரராஜனைப் பார்த்தால் அவன் உடலில் இந்த சக்தியும், கண்களில் குறிபார்க்கும் திறனும் இருக்கக்கூடும் என்று தோன்றவில்லை. பெரிய அதிகாரி, "This beats anything I could have thought" என்றான்.

அரசன் பசவனிடம், "ஏதாவது மந்திரம் கிந்திரம் போட்டு வைத்திருக்கிறாயாடா, படவாப்பயலே! நான்கு குண்டுகளும் சரியாக அடித்துவிட்டதே" என்றான். பசவன், "எல்லாம் உங்கள் கையின் மகத்துவம் அரசே" என்றான்.

பார்க்கர், "இவர்களின் ராபின்ஹுட் மாலையில் வெகு நன்றாக குஸ்தி போட்டார். நமது காப்டன் துரையும் நன்றாக குஸ்தி பழகியிருக்கிறார். இவர்கள் இருவரும் மல்யுத்தம் செய்தால் பார்ப்பதற்கு வெகு நன்றாக இருக்கும் என்றாள் லூஸி" என்றான், பெரிய அதிகாரியிடம்.

"படைத்தலைவன் உத்தய்யனுக்குச் சொல்லியனுப்புவதானால் இதை ஏற்பாடு செய்யலாம்" என்று ஹாகர் சொன்னான். பெரிய அதிகாரியும் சம்மதிக்கவே உடனே உத்தய்யனுக்குச் சொல்லி அனுப்பினார்கள்.

உத்தய்பன் வந்தான். சண்டை நடந்தது. காப்டன் துரை மேற்கத்திய முறையில் சண்டை போட்டான்; உத்தய்யன் இந்திய நாட்டுத் தென்னக முறைப்படி சண்டை செய்பவன். இருந்தும் குஸ்தி பார்ப்பதற்கு வெகு நன்றாக இருந்தது. அரசன் பசவனிடம்; "துரையைக் கீழே தள்ளவேண்டாமென்று

சொல்லுடா," என்றான். உத்தய்யன் அதைப் புரிந்துகொண்டான். தான் கீழே விழாமலிருப்பதற்கு எவ்வளவு தேவையோ அவ்வளவே சண்டை செய்தான்.

காப்டன், உத்தய்யன் — இருவருடைய உடற்கட்டும் பார்க்கத் தக்கவை. ஒன்று உயர்வு, ஒன்று தாழ்வு என்றிருக்கவில்லை. புத்தம் செய்யும் முறை வேறு வேறு சம்பிரதாயத்தைச் சேர்ந்ததானாலும் கிட்டத்தட்ட சமபலமுடைய இவ்விருவரின் மல்யுத்தம் பார்ப்பதற்கு வெகு நன்றாக இருந்தது.

பெரிய அதிகாரி, "மகாராஜா சம்மதிப்பதானால் இவர்களிருவருக்கும் ஒவ்வொரு பரிசு கொடுக்கலாம்," என்றான். அரசன், "செய்யலாம்" என்றான்.

"இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் பரிசைப் பெண்களின் கையினால் வழங்கச் செய்வது எங்கள் வழக்கம். அது தவறு என்று தங்களுக்குப் படாவிட்டால் மகாராணியவர்கள் கையினாலோ, ராஜகுமாரியின் கையினாலோ பரிசுகளை வழங்கச் செய்யலாம்."

அரசன் ஒரு கணம் யோசித்து விட்டு, "ராஜகுமாரி இதைச் செய்யட்டும்" என்றான்.

"இதே சமயத்தில் நாங்களும் மகாராஜாவுக்கு ஒரு காணிக்கை செலுத்தப் பிரியப்படுகிறோம்."

அரசன் அதற்கும் சம்மதித்தான். ராஜகுமாரி பெண்களின் கூட்டத்திலிருந்து வந்து உத்தய்யனுக்கும், காப்டன் துரைக்கும், அரசனுக்கும் பரிசுகளை வழங்கினாள்.

களங்கமில்லாத பெண். இந்த அநுபவமும் புதிது. இளைஞர்கள் தன்னை விரும்பும் பருவத்தினாள். யுவதி அவர்களுக்குப் பரிசுகளை வழங்கும்போது சம்பிரமம், சங்கோசம் இரண்டும் கலந்த ஒரு ஒய்யாரத்தோடு நடந்துகொண்டாள்.

உத்தய்யனின் மனத்தில் வெகு நாட்களாக இவளைப் பற்றிய பரிவு உண்டு. காப்டன், இவளை மணந்துகொண்டால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்று எண்ணிக்கொண்டான். அரசனுக்கும் தன் மகளின் நடையும், பார்வையும் வெகு அழகாகக் காணப்பட்டன.

மறுநாள் காலை விருந்தினர்களில் இளையவர்கள் அரண்மனை ஆபரணங்களைக் கண்டு சந்தோஷப்பட்டனர்.

மடிகேரி அரண்மனையின் ஆபரணமாளிகை முதலிலிருந்தே அபூர்வமான ரத்னங்களுக்கு ஒரு கடல்போல இருந்து வந்துள்ளது. ஹாலேரி, ஹொரமலெ என்ற இரண்டு வம்சத்து அரசர்களும் தத்தம் ராணிகளுக்காக கொள்ளையடித்துச் சேர்த்த நூற்றுக்கணக்கான ஆபரணங்கள் அதில் இருந்தன. இவைகளில் பல ஹொரமலெ வம்சம் நாசமடைந்த பின்னர் ஹாலேரி வம்சத்துக்கு ஆஸ்தியாக வந்து சேர்ந்தன. இந்த நகைகள் எங்கிருந்து வந்தவை, யாருடையவை என்பதைத் தெரிந்தவர்களும் உண்டு. ஹாலேரி வம்சம் ஹைதரிடம் தோல்வியுற்று அரசனின் மக்கள் சிறைப் பட்டிருந்த நாட்களில் அரண்மனை நகைப்பெட்டிகள் சிக்கண்ண செட்டியின் பெரியப்பாவின் பாதுகாப்பில் பத்திரமாக இருந்தன. தொட்டவீர ராஜன் மறுபடியும் அரசனான பொழுது அவை மீண்டும் அரண்மனையை வந்தடைந்தன. தொட்டவீர ராஜனின் ஆட்சிக்காலத்தில் பல ஆபரணங்கள் வந்துசேர்ந்தன. லிங்கராஜனின் காலத்தில் அவ்வளவாக நகைகள் ஏதும் சேரவில்லை. இப்பொழுதைய அரசனின் காலத்தில் ராஜவம்சத்தின் எல்லா குடும்பங்களிலுமுள்ள பெண்கள் எல்லாரின் நகைகளும் பொக்கிஷத்துக்கு வந்து சேர்ந்தன. தொட்டவீர ராஜனின் மகள் தேவம்மாஜி தன் சொந்தம் என்று வைத்துக்கொண்டிருந்த நகைகள் அநேகம். சிற்றப்பா லிங்கராஜனுக்கு கூடக் கொடுக்காமல் அவள் பிடிவாதத்துடன் அவைகளைத் தன்னிடமே வைத்துக் கொண்டிருந்தாள். சிக்கவீர ராஜன் அரசனான பிறகு இவை அரண்மனைக்கு வரவேண்டுமென்று சொல்லி அனுப்பினான். அவள் சம்மதிக்கவில்லை. அவள் இறந்ததும் அரசன் அந்த நகைகளைத் தன்வசமாக்கிக் கொண்டான்.

இவன் தங்கை தேவம்மாஜிக்கு இவன் தந்தை லிங்கராஜன் ஸ்ரீதனமாகக் கொடுத்த நகைகளின் பெரும்பாகத்தை இவன் பலவந்தமாக இன்னும் அரண்மனையிலேயே வைத்துக்கொண்டிருந்தான்.

ஆபரணங்களைப் பார்த்து மெச்சிய விருந்தாளிகள் அவை யார் யார் மேனியை அலங்கரித்தவை, அவைகளைப் பார்த்த யார் யார் உள்ளங்களிலே துராசையைத் தோற்றுவித்தவை, தயமை அணிந்து கொண்டவர்களில் எவ்வளவு பேரின் உயிரைக் குடித்தவை என்று அவர்கள் யோசிக்கவில்லை.

அரண்மனை நகைகள் எனப்படும் இவைகளோடு ராணி, ராஜகுமாரி இவர்களின் சொந்த நகைகளையும் பார்த்து விருந்தினர்கள் மெச்சினார்கள்.

ஆண்களைவிட அதிகமாக லூஸியும், ஹெலனும் ஆச்சரியமும், மகிழ்ச்சியும் அடைந்தது இயற்கையே. அவர்கள் மெதுவாக ஹாகரிடம், "அரசரைக் கேட்டால் அவர் இந்தப் பதக்கங்களில் ஒவ்வொன்றை நமக்குக் கொடுப்பாரோ என்னவோ," என்றாள். ஹாகர், "உபாயமாகக் கேட்டுப் பார்க்கிறேன்; கொடுப்பார்; பேசாமலிருங்கள்," என்றான்.

அன்று இரவு சாப்பாட்டுக்குப் பிறகு நடனம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஏற்பாட்டின்படி நிகழ்ச்சிகள் நடந்து முடிந்த பிறகு பெரிய அதிகாரியும் மற்றவர்களும் விடுதிக்குப் புறப்படுவதற்காக எழுந்தார்கள். ஹாகர், "அரசர் நமது நாட்டு நடனங்கள் இன்னும் இரண்டைப் பார்க்க வேண்டுமென்று விரும்புகிறார். லூஸி, ஹெலன், நான் மூன்று பேரும் ஆடிக் காண்பித்துவிட்டு வரலாமா?" என்று கேட்டான். பெரிய அதிகாரி, "சரி" என்றான்; மற்றவர்கள் புறப்பட்டுச் செல்ல இவர்கள் மட்டும் தங்கினர்.

சென்ற முறை வந்திருந்த பொழுது லூஸியும் ஹாகரும் இந்த நடனங்களை அரசனின் எதிரில் ஆடிக் காண்பித்திருந்தனர். இவை ஆங்கிலேயர்களிடையே வழக்கில் இருந்த கிராமிய நடனங்கள். இவைகளில் சிறிது விரஸம் கலந்திருக்கும். அதனாலேயே அவை அந்த ருசி பிடித்த ஜனங்களுக்கு மிகவும் உவப்பானவை.

அரசன், பசவன் இருவர் மாத்திரம் உட்கார்ந்து பார்த்துக் கொண்டிருக்க ஹாகர்-லூஸி, ஹாகர்-ஹெலன், ஹெலன்-லூஸி இத்தகைய நடனங்கள் இரண்டிரண்டை ஆடிக் காண்பித்து அரசனை சந்தோஷத்திலாழ்த்தினார்கள்.

இந்த நடனங்களை வர்ணிப்பது உசிதமல்ல. இங்கே நாம் கவனிக்க வேண்டியது ஒரு விஷயம். அரசனுக்கு ஏற்பட்ட சந்தோஷத்துக்கு அளவே இல்லை.

புறப்படுவதற்கு முன்னால் ஹாகர் மெதுவாக பசவனிடம், "லூஸி, ஹெலன் இருவருக்கும் அரசர் ஒவ்வொரு நகையைக் கொடுத்தால் அவர்கள் மிகவும் சந்தோஷத்தோடு பெற்றுக் கொள்வார்கள்" என்று சொன்னான். அரசன் உடனே விஷயம் என்ன என்று கேட்டுத் தெரிந்துகொண்டான். "தேவடியாகள், என்னமா குதிக்கிறதுகள்! நம் நாட்டுத் தேவடியாக்கள் இப்படி லஜ்ஜைவிட்டுக் குதிக்க மாட்டார்கள். போவதற்கு முன்னால் வரச்சொல்; கேட்பதைக் கொடுத்தனுப்புவோம்," என்றான்.

94

ஏற்கனவே ஏற்பாடு செய்யப்பட்டிருந்தபடி ஆறாவது நாள் மத்தியானம் பாதிரி மேக்லிங் ராஜசபையில் கிறிஸ்தவ மதத்தின் உயர்வைக் குறித்து சித்தாந்தப் படுத்துவதற்காக விவாதம் நடைபெற்றது. இந்த விவாதம் நடப்பதில் தனக்கு விருப்பம் இல்லை என்று தீட்சிதர் தெரிவித்துக்கொண்டார். மன்னர் அதைக் கேட்கவில்லை. மைசூரிலிருந்து வல்லவர்கள் யாரையாவது வர வழைக்கலாம் என்று தீட்சிதர் வேண்டினார். மன்னர், "அது இன்னொரு முறை ஆகட்டும்; இந்த முறை நமது ஐயா அவர்களே பேசட்டும்" என்று கூறிவிட்டான்.

சபை கூடியவுடன் நிறைய ஜனங்கள் சுற்றிலும் நிறைந்து விட்டார்கள். விளையாட்டுக்களைப் பார்ப்பதற்கு எப்படியோ அப்படி விவாதத்தைக் கேட்பதற்கும் ஜனங்களுக்கு உற்சாகம் இருந்தது தெரிந்தது.

விருந்தினரெல்லாம் வந்து உடகார்ந்த பிறகு அரசனும் வந்தான். மேக்லிங், தீட்சிதர் இருவரும் முதலிலேயே வந்து மேடையின் மத்தியில் எதிர் எதிராக உட்கார்ந்திருந்தனர். பாதிரி விவாதத்தைத் தொடங்கினார்.

"எங்கள் குரு ஏசுநாதர் ஸ்தாபித்த மதம் உங்கள் மதத்தைவிட சிரேஷ்டமான தென்று நாங்கள் சொல்லுகிறோம். அதை நீங்கள் ஒப்புக்கொண்டால் விவாதமே இல்லை. நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?"

தீட்சிதர்: "நான் எங்கள் மதத்தைக் குறித்து வாதம் செய்து பழக்கப்பட்டவனல்ல. உங்கள் மதம் உயர்வானது என்று சொன்னால் அது உங்கள் இஷ்டம். அதற்கு நாங்கள் தடை சொல்லப் போவதில்லை. எங்கள் 'மதம்' சிறப்புடையது என்று நாங்கள் நம்பியிருக்கிறோம். அதன்படி நடந்து கொள்கிறோம். நீங்களும் அதற்குத் தடை சொல்லக்கூடாது."

"எங்கள் மதம் உயர்வானது என்று நாங்கள் சொல்வதன் நோக்கம், உங்களைச் சம்மதிக்க வைத்து உங்களை எங்கள் மதத்தில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்பதுதான். நீங்கள் கடைத்தேறுவதற்கு இதுவே வழி. நீங்கள் இந்த மதத்தை ஒப்புக்கொண்டால் இந்த ஜனங்களெல்லோரும் ஒப்புக்கொள்வார்கள். ஏசுநாதரின் அருளால் எல்லோரும் உய்வுபெறலாம்."

"நாளைவது இந்த ஜனங்களாவது இப்பொழுது அநுசரித்து வரும் மார்க்கத்தைவிட்டு வேறு மார்க்கத்தைக் கைப்பிடிக்கவேண்டிய காரணம் கிடையாது. யார் யார் எந்த வழியில் சென்றுகொண்டிருக்கிறோமோ அதே வழியில் சென்று கடைத் தேறலாம்."

"பரமபிதாவான ஒரே கடவுளை விட்டு நீங்கள் அற்ப தேவதைகளைப் பூஜிக்கிறீர்கள். இதன் மூலம் கடைத்தேறுவது கடினம். எங்கள் கடவுளை நம்பினால் மட்டுமே கடைத்தேற முடியும்."

"நீங்கள் கடவுளை பரமபிதா என்று குறிப்பிடுகிறீர்கள். நாங்களும் அதே கருத்தைக் கொண்டவர்கள்தான். கடவுள் ஒருவரே, பரம்பிரும்மம் ஒன்றே. அதை மக்கள் தத்தம் அறிவுக்கேற்ப வர்ணித்து தத்தம் பாஷைகளில் வெவ்வேறு பெயர்களை வைத்துப் பூஜிக்கிறார்கள். எந்தப் பெயரை வைத்துப் பூஜித்தாலும் அது லோகேஸ்வரனான கடவுளையே போய்ச்சேருகிறது. கடவுள் இல்லாத தேசமில்லை, அவருக்குத் தெரியாத பாஷை இல்லை. எல்லோரும் அவருடைய மக்கள்; அவர் எல்லோரையும் காப்பாற்றுவார்."

"ஓங்காரேஸ்வரன், இக்குதப்பன்,[1] பைதூரப்பன்,[2] கரிங்காளி[3] இவையெல்லாம் ஒரே கடவுளா?"

"தடையில்லாமல். இவையெல்லாம் கடவுளைக் குறித்த பாவனைகள்."

"ஓங்காரேஸ்வரனுக்கு வெறும் தேங்காய், பழம், பூ கொடுக்கிறீர்கள்; மற்ற தேவதைகளுக்கு உயிர்ப்பலி கொடுக்கிறீர்கள். ஓங்காரேஸ்வரன் உயிர்ப்பலி கேட்பதில்லையா?"

1, 2, 3—குடகு நாட்டில் வழங்கிவரும் கிராமதேவதைகள்.

"மனிதன் தான் விளைவிப்பதையும் உண்பதையும் கடவுளுக்குப் படைக்கிறான். மற்றபடி கடவுளுக்குப் பசி என்றும், உணவு என்றும் கிடையாது."

"கரிங்காளியின் பக்தன் ஒங்காரேஸ்வரனுக்கு மாமிசத்தைப் படைக்க முடியுமா?"

"அவனே பூஜை செய்வதானால் செய்யலாம்."

"நீங்கள் அதைத் தொட்டு நைவேத்தியம் செய்யமாட்டீர்கள்?"

"இல்லை."

"ஏன்? நீங்களும் அவனும் கடவுளின் குழந்தைகள் என்றீர்கள். அப்படியிருக்க நீங்கள் அவனைத் தொடுவதில்லை, அவன் சாப்பிடுகிற ஆகாரத்தைத் தொடுவதில்லை, அவன் ஆண்டவனின் பூஜைக்காகக் கொண்டுவரும் பொருள்களைத் தொடுவதில்லை. நீங்கள் அவனை விட உயர்ந்தவன் என்று சொல்லிக்கொள்கிறீர்கள். இது தவறல்லவா?"

"இது வெகு காலமாக நடந்து வந்திருக்கிற ஏற்பாடு. ஒரு மதத்தை அனுசரிக்கும் மக்கள் பலவகை ஆசாரங்களைப் பின்பற்றுகிறார்கள். ஆசாரம் வேறு என்பதனால் மதம் வேறல்ல."

"நீங்கள் பிராம்மணரல்லவா?"

"ஆமாம்."

"நீங்கள் மற்ற ஜாதியாரைவிட உங்களை உயர்வாக எண்ணிக் கொண்டிருக்கிறீர்கள் இல்லையா?"

"நாங்கள் சொல்லவில்லை அப்படி. வேதம் சொல்லியிருக்கிறது; அதை நாங்கள் ஒப்புக்கொண்டிருக்கிறோம்."

"நீங்கள் கடவுளின் தலையிலிருந்து வந்தவர்களென்றும் சூத்திரர்கள் காலிலிருந்து வந்தவர்களென்றும் சொல்லிக் கொள்கிறீர்களல்லவா?"

"வேதத்தில் அப்படிச் சொல்லப்பட்டிருக்கிறது."

"ஆகையால் நீங்கள் உயர்ந்தவர்கள்?"

"கடவுளை விராட் ஸ்வரூபம் என்று கூறி அவருக்கு அங்கங்களைக் கற்பித்து வேறுவேறு தொழில்களுக்கு வேறுவேறு ஜீவராசிகள் பிறந்தன என்று வேதம் சொல்லியிருக்கிறது. தொழில் உயர்வினால் ஜாதி உயர்வு."

"எங்கள் மதத்தில் ஒருவன் இன்னொருவனைவிட உயர்ந்தவன் என்பதெல்லாம் கிடையாது. எல்லோரும் கடவுளின் குழந்தை

கள்; எல்லோரும் சமமானவர்கள் என்று கூறுகிறோம். இது தான் நியாயமானது என்று உங்களுக்குத்தோன்றவில்லையா?"

"நீங்கள் வேறுநாட்டு மக்கள். உங்களுக்கு அந்த ஏற்பாடு சரி. இந்த நாடு கர்மபூமி. இங்கே மனிதர்கள் இப்படி நடந்துகொள்ள வேண்டும், இவ்வாறு வாழவேண்டும், பல ஜன்மங்கள் எடுத்து ஞானம், பக்தி, கர்மம் இவைகளின் மூலமாக மோட்சத்தை அடையவேண்டும் என்று நியமிக்கப்பட்டிருக்கிறது. எங்களுக்கு இந்த நியமமே சரி."

"ஓங்காரேஸ்வரனையும் கரிங்காளியையும் நீங்கள் ஒரு கடவுளின் இரண்டு உருவங்கள் என்று சொல்கிறீர்களா?"

"ஓங்காரேஸ்வரர் கடவுள்; உமாதேவி அவரது பத்தினி, லோக மாதா. காளி என்பது லோக மாதாவின் லயகாரக ரூபம்; கரிங்காளி என்றால் கருப்பாக இருக்கும் காளி. காளிதேவி கருப்பாக இருக்கும் தேவதை என்று சாஸ்திரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. கரிங்காளி பூஜை ஓங்காரேஸ்வரனின் பத்தினியின் பூஜை. கடவுளின் சகல சக்தியும் அவரது பத்தினிக்கும் உண்டு. தாய் மகிழ்ந்தால தந்தை தானே மகிழ்வான்."

"கடவுளுக்கு ஒரு மனைவி தேவையா?"

"பரப்பிரம்மம் ஆணல்ல, பெண்ணல்ல, அலியுமல்ல. அதன் சொரூபத்தைச் சொல்ல இயலாது. அது உலகின் சிருஷ்டி, பாதுகாப்பு, லயம் இவைகளின் நிமித்தம் மூன்று உருவங்களை எடுக்கிறது. இப்படி ஏற்பட்ட மூன்று கடவுளருக்கு சக்தி தேவதைகள் துணையாகின்றன. அந்த சக்திகளை மனைவியர் எனக் கூறுகிறோம். மனித அறிவுக்கு எட்டுவதற்காக இந்த உறவைச் சொல்ல வேண்டியிருக்கிறது."

"அது மாத்திரம் அல்ல. நீங்கள் இந்த தெய்வங்களை விக்கிரக வடிவில் வடித்துக்கொண்டு பூஜை செய்கிறீர்கள். கடவுள், அவதாரம் எடுத்து மனிதனாகப் பிறந்தான் என்கிறீர்கள். அவனைப் பன்றியாகவும், மீனாகவும் கற்பனை செய்கிறீர்கள். குரங்கை அவனது சேவகனாக்குகிறீர்கள். குரங்கு நூறு யோஜனை நீளமுள்ள சமுத்திரத்தைத் தாண்டியது என்கிறீர்கள். இவ்வாறு இல்லாத பொல்லாத கதைகளைக் கற்பித்து நீங்கள் ஜனங்களை மோசம் செய்கிறீர்கள். இவையெல்லாம் தவறு."

"மனிதன் தன் சக்திக்குத் தக்கவாறு கடவுளைக் கற்பித்துக் கொள்ளுகிறான். யோகிகள் பிரும்மத்தை இதயத்திலேயே

காண்கிறார்களாம். யோகிகளல்லாத நம் போன்றவர்களுக்கு விக்கிரகங்கள் தேவை. கடவுள் நம்மை ரட்சிக்கவேண்டுமென்றால் நம்மிடையே வரவேண்டும். அதற்காக அவதாரம் செய்ததாகச் சொல்லுகிறோம். மீன, பன்றி இவை மனிதனைவிடத் தாழ்ந்த ஜாதி ஜீவன்கள் என எண்ணப்படுகின்றன. கடவுளுக்கு ஜீவராசிகளில் இந்த பேதம் இல்லை. கடவுள் எடுக்காத உருவம் இல்லை, எடுக்கக்கூடாத உருவமும் இல்லை. புல், பூண்டு, துரும்பு இவைகளிலும் அவன் முழுமையுடன் குடிகொண்டிருக்கிறான். அவனது சேவகர்களும் அப்படியே. மனிதர்கள் மட்டுமல்ல, நாயும் பன்றியும் கூட தெய்வத்திற்கு சேவை செய்யமுடியும். தெய்வம் அவைகளின் சேவையை அங்கீகரிக்கிறது குரங்கு கடலைத் தாண்டியது குறித்து எங்களுக்கு ஆச்சரியமில்லை. பகவானின் சேவையில் அசைக்க முடியாத நம்பிக்கையுடன் ஈடுபட்டால் குரங்கும் நூறு யோஜனை அகலமுள்ள கடலைத்தாண்ட முடியும். நீங்கள் எவற்றையெல்லாம் தவறு என்று சொல்லுகிறீர்களோ அவைகளையெல்லாம் சரி என்று நமது முன்னோர்கள் நிரூபித்திருக்கிறார்கள். இது உங்களுக்கு சரி எனப் படாவிட்டால் நீங்கள் சம்மதிக்க வேண்டாம். அதேபோல நீங்கள் சொல்பவையும் எங்களுக்குச் சம்மதமில்லை. எங்கள் மதத்தை நாங்கள் பின்பற்ற வேண்டும்.''

"அது எப்படி? இரண்டு மதமும் சரியானவையாக இருக்க முடியாது. இது சரி என்றால் அது தவறு. அது சரி என்றால் இது தவறு.''

"மதம் சரியா தவறா என்பதை சத்துவவாதிகள் ஆராயவேண்டும். நன்னடத்தையைக் கற்பிக்கும் மதம் சரியான மதம். சத்தியவந்தனாக இருக்கவேண்டும், பரோபகாரியாக இருக்க வேண்டும், மரியாதையுடன் நடந்துகொள்ள வேண்டும். இதைச் சொல்லுகிற மதம் நல்ல மதம். எங்கள் மதம் எங்கள் ஜனங்களுக்கு இதை போதிக்கிறது. உங்கள் மதமும் உங்களுக்கு இதைத்தான் போதிக்கவேண்டும் அப்படியிருக்க இந்த மதம் உயர்வு, அந்த மதம் குறைவு என்று சொல்வது சரியல்ல.''

இப்படி இவர்கள் வாதம் வளர்ந்து கொண்டே போயிற்று. முடிவதாகத் தோன்றவில்லை. முதல் இரண்டொரு நாழிகை கேட்டபதற்கு சுவாரசியமாக இருந்தது. அதன் பிறகு எல்லோருக்குமே அலுப்பாக இருந்தது.

அப்போது பெண்கள் பகுதியில் தூய வெண்புடவை உடுத்திருந்த ஒரு உருவம் எழுந்து நின்றது. அப்படி திடீரென எழுந்து நின்ற உருவத்தின் மீது எல்லோருடைய பார்வையும் வேகமாகத் திரும்பியது.

நின்றவள் பகவதி. அவள், "தீட்சிதர் ஐயா அவர்கள் அனுமதித்தால் நான் பாதிரியாரை இரண்டு கேள்விகள் கேட்க ஆசைப்படுகிறேன்," என்று கைகூப்பியபடி சொன்னாள்.

தீட்சிதருக்குச் சிறிது ஆச்சரியம், வெகு பயம். இந்த ஸ்திரீ என்ன சொல்வாளோ என்று கிழவருக்கு பயம். அவர் அரசனை நோக்கினார். அரசனின் முகத்தில் ஏதும் சூசனை தெரியாமலிருக்கவே அதிகாரியின் முகத்தைப் பார்த்தார்; துபாஷ் அவனுக்கு பகவதியின் கோரிக்கை என்ன வென்று சொல்லிக்கொண்டிருந்தது தெரிந்தது.

அடுத்த கணம் அதிகாரி. "அரசர் அநுமதித்தால் அப்பெண்மணி பாதிரியோடு வாதம் செய்யலாம்" என்றான். துபாஷ் இதை அரசனுக்குத் தெரிவித்தான். அதன்பேரில் அரசன், "சரி" என்று அநுமதியளித்தான்.

அதிகாரி, "This is the lady we saw at the hermitage three days ago," என்றான். லுஸி, "Yes" என்றாள்.

பகவதியுடன் வாதம் புரிய பாதிரி சம்மதித்தார். அவர் அவளிடம், "இங்கே வாருங்கள். எதிரில் உட்கார்ந்து கொண்டு சொல்லவேண்டியதைச் சொல்லுங்கள்," என்றார். பகவதி சபையின் நடுவே வந்தாள், தீட்சிதருக்கு எதிராக நிலத்தைத தொட்டுக் கண்களில் ஒற்றிக் கொண்டு உட்காராமல் நின்றபடியே, "எங்கள் குரு அவர்கள் மிகவும் அமைதியாக உங்களுக்கு எங்கள் மதத்தில் சங்கதிகளைத் தெரிவித்தார். நீங்கள அவருடைய வாதத்தைப் புரிந்துகொள்ளாமல் தவறான வகையில் பேசிக்கொண்டு வருகிறீர்கள். எங்கள் மதத்தைக் குறித்து இவ்வளவெல்லாம் சொல்லுகிறீர்களே, உங்கள் மதத்தைக் குறித்து இரண்டு வார்த்தைகள் பேசுங்கள் கேட்போம்," என்றாள்.

மேகலிங் பாதிரி, "கண்டிப்பாக; வேண்டியதைக் கேளுங்கள்; பதில் சொல்லுகிறேன்" என்றார்.

"நீங்கள் கடவுளைத் தந்தை என்று அழைக்கிறீர்கள். தாய் என்று அழைப்பதில்லை அல்லவா?"

"ஆமாம். கடவுள் தந்தை."

"தாய் அல்ல!"

"தாய் என்று சொல்வதில்லை."

"கடவுளில் அவரது மகனும் கலந்திருக்கிறான்?"

"ஆமாம் கடவுளில் கடவுள், கடவுளின் குமாரன் பரிசுத்த ஆவி மூன்றும் ஒன்றாகக் கலந்துள்ளன."

"கடவுளுக்கு மனைவி இல்லை."

"இல்லை."

"மனைவி இல்லாமல் மகன் எப்படி வந்தான்?"

"பகவானின் சக்திக்கு எல்லை இல்லை."

"மனைவியில்லாமல் மகனைப் பெற்ற கடவுள் குரங்காகக் கடலைத் தாண்டக்கூடாதா?"

"ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாதபேச்சு இவை."

"நீங்கள் சொல்லுகிற அற்புதம் ஆண்டவனின் சக்தியால் நடைபெறக்கூடியது என்கிறீர். நாங்கள் கூறும் அற்புதத்துக்கும் அது வேதான் காரணமென்றால் ஒப்பமாட்டேனென்கிறீர்கள். உங்கள் பேச்சில் ஒன்றுக்கொன்று ஏதாவது சம்பந்தமிருக்கிறதா?"

"நீங்கள் எங்கள் மதத்தைப் புரிந்துகொள்ளவில்லை. இந்த வாதத்தை வேறு எங்கோ கேட்டு இங்கே கிளியைப் போல ஒப்புவிக்கிறீர்கள்."

"ஆம். தங்களைப் போன்ற பாதிரிகள் மலையாளத்தில் எங்கள் குரு அவர்களிடம் சர்ச்சைக்கு வந்தபொழுது இதைக் கேட்டுத் தெரிந்துகொண்டேன். நீங்கள் எங்கள் மதத்தைப் பற்றிய விஷயங்களை அதுபோலத்தான் தெரிந்துகொண்டிருக்கிறீர்கள். யாரையோ கேட்டு நான்கு விஷயங்களைத் தெரிந்துகொண்டு வந்த கிளிப்பாடமாக ஒப்புவிக்கிறீர்கள்."

"நீங்கள் இப்படிச் சொல்வது சரியல்ல."

"சரியல்லவென்று தான் உங்களுக்குத் தோன்றும். சரியா அல்லவா என்பதைச் சொல்லவேண்டியது நீங்களும் அல்ல நானும் அல்ல. சபையிலுள்ள பெரியவர்கள் சொல்ல வேண்டும். அவர்களுக்கு இது சரி எனப்படுகிறதா தவறு எனப் படுகிறதா அவர்களே சொல்லட்டும்."

துபாஷ் இந்த விஷயத்தை அதிகாரிக்கு விளக்கிச் சொன்னான். அதிகாரி சிரித்துக்கொண்டே, "I don't know about the argument but the objection is certainly clever", என்றான். துபாஷ் இதைக் கன்னடத்தில் சொன்ன போது சபை பேஷ் பேஷ் என்று ஆமோதித்தது. அரசன் பசவனிடம், "நல்ல கெட்டிக்காரி தாண்டா உன் பகவதி," என்றான்.

பகவதி விவாதத்தைத் தொடர்ந்தாள்.

"உங்கள் குருமார்கள் நீங்கள் தினமும் செய்கிற பிரார்த்தனையில் என்ன என்ன சொல்லவேண்டும் என்று சொல்லிக்கொடுத்திருக்கிறார்களல்லவா?"

"ஆமாம்."

அதில் 'சுவர்க்கத்தில் இருக்கும் ஓ பரமபிதாவே' என்று அழைக்கிறீர்களாம்?"

"ஆமாம்."

"அப்படியானால் பூமியின் மீது கடவுள் இல்லையென்று சொல்லுங்கள்."

"இது விஷயமாக நீங்கள் சொல்ல வேண்டியதையெல்லாம் சொல்லிவிடுங்கள். பிறகு சமாதானம் சொல்லுகிறேன்."

"ஆகட்டும், 'சுவர்க்கத்தில் இருக்கும் தந்தையே' என்றால் அவன் பூமியின் மீது இல்லை. 'உன் பெயர் பரிசுத்தமாகட்டும்' என்றால் இப்பொழுது மாசு படிந்திருக்கிறது. 'உன் ராஜ்யம் ஸ்தாபிக்கப்படட்டும்' என்றால் இப்பொழுது அவன் ஆளுபவன் அல்ல. 'உன் இச்சை சுவர்க்கத்தில் நடைபெறுவது போல பூமியின் மீதும் நடைபெறட்டும்' என்றால் இப்பொழுது நடைபெறவில்லை. நடைபெறட்டும் என்று பக்தன் ஆசீர்வாதம் செய்கிறான். 'இன்று எனக்கு எனது ரொட்டியைக் கொடு' கடவுளின் அரசாட்சி பூமிக்கும் வரட்டும் என்று ஆசீர்வதிக்கும் இந்தப் பெரிய மனுஷன் அடுத்த கணம் ஒரு துண்டு ரொட்டி கொடு என்று கேட்கிறான். 'நாம் நமது எதிரிகளின் தவறுகளை மன்னிப்பது போல நீ எங்கள் தவறுகளை மன்னித்து விடு.' மன்னித்து விடு என்று மட்டும் சொன்னால் அது ஆண்டவனுக்குப் புரியாது என்று பக்தன் உதாரணம் காட்டி விளக்குகிறான். 'ஆசை காட்டி எங்களை மோசம் செய்யாதே' ஏன்? கடவுளுக்கு அறுபது நாழிகையும் இதேதான் வேலை. 'எங்களை ஆபத்தினின்றும் காப்பாற்று.' இவ்வளவு பிரார்த்தனைகளில் இது ஒன்று சரியானது

என்று தோன்றுகிறது. 'காப்பாற்று: ஏனென்றால் ராஜ்யம் உன்னுடையது, சக்தி உன்னுடையது, புகழ், உன்னுடையது.' இந்தப் பிரார்த்தனை பொருத்தமாக இருக்கிறதா?"

"பிரார்த்தனையின் பொருளை நீங்கள் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை."

"இருக்கலாம். எங்கள் மதத்தையே நாங்கள் இன்னும் சரியாகப் புரிந்துகொள்ள நேரமேது? நீங்கள் எனக்குச் சொல்லுவதை நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். நீங்கள் எங்கள் மதத்தைச் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை."

சபையிலுள்ளோர் சந்தோஷமாக, "ஆமாம் அம்மா; ஆமாம்," என்று ஆமோதித்தார்கள்.

துபாஷ் அதிகாரியிடம் இதையும் விளக்கிச் சொன்னான். அதிகாரி, "She is certanily a clever woman. She knows that attack is the best defence" என்றான்.

துபாஷ் இதை சபையோர்க்குச் சொல்லவேண்டிய அவசியம் இல்லை. ஆனால் அவன் ஹிந்து. தனது மதத்தின் பரியாதையைக் காப்பாற்றுகிற அந்தப் பேச்சை சபைக்குத் தெரியப்படுத்துவதில் அவனுக்கு உற்சாகம். அதிகாரியின் அபிப்ராயத்தை அவன் கன்னடத்தில் சொன்னான். சபை "ஆம் ஐயா துரையே" என்று ஆரவாரம் செய்தது.

பகவதி பாதிரியிடம், "போதுமா, இன்னும் சொல்லட்டுமா?" என்றாள்.

பாதிரி: "இன்னும் ஒன்று சொல்லுங்கள். அத்துடன் இன்றைய விவாதத்தை முடித்துக்கொள்வோம். இன்னொரு சந்தர்ப்பத்தில் இதைத் தொடரலாம்."

"நாங்கள் கடவுள் அவதாரம் செய்தார் என்றால் நீங்கள் ஒப்புவதில்லையே, கடவுளின் குமாரன் ஏசுநாதராக அவதரித்தார் என்று சொல்லுகிறீர்கள். நாங்கள் அவதாரம் என்று சொன்னால் ஒப்புவதில்லை. நீங்களும் அதைத்தான் சொல்லுகிறீர்கள். இது எப்படிச் சரியாகும்?"

"கடவுளின் குமாரன் மனித உருவை எடுத்தான். அவ்வளவுதான். அவன் மனிதனிலிருந்து பிறக்கவில்லை. தேவனிலிருந்து பிறந்தான்."

"நான் சொல்லுவதற்கு நீங்கள் கோபித்துக்கொள்ளக்கூடாது. நீங்கள் சொல்லுவது கிறிஸ்துவின் தாய் மேரியம்மைக்குக் களங்கம் ஏற்படுத்துவதாக இருக்கிறதே. உங்களுக்கு அப்படித் தோன்றவில்லையா?"

"ஆண்டவனின் அருளால் அவள் அந்த மகனை கர்ப்பத்தில் ஏந்தினாள்; அதில் களங்கமில்லை."

"ஒரு ஆணின் சகவாசத்தால் கர்ப்பம் தரித்திருந்தால் அது களங்கமுடையதாகி இருக்கும் இல்லையா?"

"ஆமாம்."

"ஆண்-பெண் உறவை நீங்கள் தவறானதென்று எண்ணியிருக்கிறீர்கள். அது கடவுள் உண்டாக்கிய நியமம். அதில் தவறு என்ன? மற்றவர்களுக்குத் தெரியாமல் கள்ளத்தனமாகச் சேர்வது தவறு. விவாகமான பெண் கணவனோடு கூடி வாழ்ந்து மகனைப் பெற்றால் அது களங்கமா?"

"கடவுளின் குமாரன் ஜன்மம் எடுப்பதற்கு ஓர் அற்புதமான மார்க்கத்தைத் தேர்ந்தெடுத்தான். அதிலிருந்து அவன் கடவுளின் குமாரன் என்பது நிதர்சனப்படுகிறது."

"எங்கள் ஊரிலோ உங்கள் ஊரிலோ கல்யாணமாகாத ஒரு பெண் கர்ப்பம் தரித்து ஒரு மகவைப் பெற்று, இதன் தந்தை யார் என்ற கேள்விக்கு 'ஆண்டவன்' என்று பதில் கொடுத்தால் நீங்கள் அதை ஒப்புக்கொள்வீர்களா?"

"மேரியம்மையின் சரித்திரம் சாஸ்திரத்தில் வந்துள்ளது. ஆகையால் அதை நம்புகிறோம்."

"இதையும் சாதித்து ஒரு சாஸ்திரம் நாம் எழுதினால்?"

"அது நீங்கள் எழுதிய சாஸ்திரமாகும். ஜனங்கள் ஒப்புக் கொள்ள மாட்டார்கள்."

"என்றைக்கோ யாரோ ஒருவர் எழுதிய சாஸ்திரத்தை நீங்கள் ஒப்பி ஏற்றுக்கொண்டிருக்கிறீர்கள். இன்றைக்கு நாம் எழுதும் சாஸ்திரத்தை நூறு வருடங்களுக்குப் பிறகு மற்றவர்கள் ஒப்புக் கொள்வார்கள். இப்பொழுது நான் இந்தப் பெண் அற்புதமான வழியில் கர்ப்பிணியானாள் என்பதை நம்புவதில்லை. பின்னால் பாதிரிகள் அதையே சரி என்று ஆதரித்துப் பேசுவார்கள். நம்புவதே கடமை என்று சொல்லுவார்கள்."

சபையில் பின்புறம் உட்கார்ந்திருந்த உத்தய்ய தக்கன், "நன்றாகச் சொன்னாய் அம்மா, நன்றாகச் சொன்னாய். பாதிரி

பேசுகிற மாதிரி எல்லோரும் பேச ஆரம்பித்தால் ஊர் நாசமாகத் தான் போய்விடும்," என்றான். 'சபையோர் 'கொல்' லென்று சிரித்துவிட்டனர்.

பாதிரி: "நீங்கள் இதற்கு முன்பு இதுபோல விவாதம் நடந்ததைக் கேட்டு இரண்டு மூன்று விஷயங்களைத் தெரிந்துகொண்டு வந்து இங்கே சொல்லுகிறீர்கள். இது மதத்தைக் குறித்த விவாதமாக இல்லை. மதத்தின் சாரம் வேறு. ஆத்மத்தின் சொரூபம்; மதம் இவைகளைப் பற்றிக் கூறவேண்டும், மக்களுக்குத் தெரிவிக்க வேண்டும். நீங்கள் செய்துகொண்டிருப்பது நான் சொல்வதைக் கோணங்கித்தனம் செய்து ஜனங்களைச் சிரிக்க வைப்பதுதான்."

"நீங்கள் ஹிந்து மதத்தைக் குறித்துச்சொன்னதும் அதுவே. அது ஜீவாத்மா, பரமாத்மா, புருஷார்த்தம், நீதி என்று கூறுவதையெல்லாம் விட்டுவிட்டு ஏதோ நான்கு விஷயங்களைக் கோணங்கித் தனமாகத் திரித்துக்கூறி, வயதான நமது ஐயா அவர்கள் அழகாகவும், மரியாதையாகவும் பதில் சொல்வதை ஒப்புக்கொள்ளாமல் நீங்களே பெரிய அறிவாளி என்று காட்டிக் கொண்டீர்கள். எங்களில் உங்களைப் போன்ற அறிவாளிகள் சொல்லக்கூடிய நான்கு வார்த்தைகளை நான் சொன்னேன். உங்கள் மதம் உங்களுக்கிருக்கட்டும், எங்கள் மதம் எங்களுக்கிருக்கட்டும், எல்லோரும் சத்திய சீலர்களாக இருப்போம், நன்றாக வாழ்வோம், என்று சொன்னால் நாங்கள் உங்களிடம் வம்புக்கு வரவில்லை."

சபை "ஆமாம் ஆமாம்" என்று ஆரவாரம் செய்தது.

துபாஷ் விவாதத்தின் விவரங்களை அவ்வப்பொழுது அதிகாரியிடம் விவரித்துக்கொண்டே வந்திருந்தான். அதன் கடைசிப் பகுதியைச் சொன்னபொழுது அதிகாரி, "What do they call this lady? Bhagavathi: that means goddess, does't not?" என்றான். பகவதி உபாசகன் என்று சொல்வதற்குச் சுருக்கமாக பகவதி என்று சொல்லுகிறார்கள் என்று விளக்கியதும், "Yes, certainly she is a most sensible women. She has done better than either the Padre or her own teacher, the Dikshit. Let us stop now. The discussion can continue on some other occasion if His Highness approves", என்றான்.

மன்னனின் அனுமதியுடன் சபை கலைந்தது.

அன்றைக்கு சூரப்பா, "நான்கு நாட்களாகக் கத்திக் கத்தி என் தொண்டை போய்விட்டது. சிறிது ஜுரமும் வந்தாற் போலிருக்கிறது. திட்டமிட்டுள்ளபடி நாடகம் ஆடுவதற்கு இயலாது" என்று சொல்லியனுப்பினான். அரசன், "வேறு ஏதாவது நாடகம் போடு" என்றான். பாணே சூர்யநாராயணன் வீரராஜனைப் புகழ்ந்து ஒரு ஹாஸ்ய நாடகம் எழுதியிருந்தானும். இவன் கடந்த நான்கு மாதங்களாக பிரியாபட்டணத்தில் இருந்து கொண்டு இங்கே வந்து போய்க்கொண்டிருந்தான்; மாப்பிள்ளையான சென்ன பசவனை அறிமுகம் செய்து கொண்டிருந்தான். சென்னபசவய்யன் நாடகத்தைப் பார்த்துவிட்டு இதை ஆடலாம் என்றான். சூர்யநாராயணனுக்கு இதுபோன்ற நாடகங்களை நடத்தி அநுபவம் உண்டு; தானே அதை நடத்துவதாக ஒப்புக் கொண்டான்.

சபை கூடி எல்லாம் தயாரான பிறகு சூர்யநாராயணன் புஜகீர்த்தி, கிரீடம் இவைகளை அணிந்துகொண்டு பின்புறம் பெரிய குரங்கு வேஷத்தில் மேடையின்மீது தோன்றினான். மைசூர்ப் பக்கத்து தெருக்கூத்துகளில் ராஜபார்ட் வேடக்காரன் தித்தோங்க தக்கதைய என்று குதிப்பதைப் போல குதித்தான். "ஹா! ராஜாவாகப்பட்ட நான் ராஜசபைக்கு வந்து இவ்வளவு சிரமப்பட்டு ஆடியும்கூட நீங்கள் யார் என்று கேட்பதற்கு ஒரு சாரதிகூட இல்லாமற்போய்விட்டதே. நான் யார் என்பதை இந்த சபைக்குத் தெரியப்படுத்துவது எப்படி? ஆழ்ந்து யோசிக்கிறேன்", என்று கூறி மிகவும் தீவிரமாக யோசிப்பவன்போல முகத்தை வைத்துக் கொண்டு "ஹா! இப்பொழுது தெரிந்தது. புத்திசாலிகளுக்கு எந்த விஷயம் தான் தெரியாமல் போய்விடும். அதிலும் என்னைப் போன்ற புத்திசாலிக்குத் தோன்ருத சங்கதியும் உண்டா? சாரதியாரும் இல்லையென்று சொன்னேல்லவா? ஒரு சாரதியை நியமித்துக்கொண்டால் போச்சு", என்ருன்.

இவனுடைய தித்தோங்க தக்கதைய நடனம், இவன் நின்றிருந்த தோற்றம், பேசிய பேச்சு, சாரதி வேண்டுமென ஏங்கியது, யோசிப்பதுபோல முகத்தை வைத்துக்கொண்டது, தன்னைத் தானே புத்திசாலி என்று சொல்லிக்கொண்டது எல்லாவற்றிற்

கும் சபையோர் கொல் கொல் என்று சிரித்துக்கொண்டே இருந்தனர். எதிரிலே உட்கார்ந்திருந்த அரண்மனையோர், அர்த்தத்தைக் கேட்டுத் தெரிந்துகொண்ட விருந்தாளிகள் எல்லோருக்கும் இந்த ஆட்டத்தைக்கண்டு சிரிப்பு வந்தது. பெரிய அதிகாரி "That fellow acts well. His pose is ludicrously thouhtful" என்றான். (இவன் நன்றாக நடிக்கிறான். அவன் முக முத்திரை சிரிப்பை வரவழைக்கக்கூடியதாக இருக்கிறது.)

சாரதியை நியமித்துக்கொள்கிறேன் என்று சொன்ன அவன் தன் அருகில் நின்றிருந்த கும்பலை நோக்கி "ஐயா சபையோர்களே, யாராவது ஒருவர் தயவு செய்து மேடைக்கு வாருங்கள், எனக்கு சாரதியாக இருங்கள்; சம்பளம் கொடுக்கிறேன்; நான் வேஷக்கார ராஜனல்ல. மோசக்கார ராஜனுமல்ல," என்றான்.

சபையிலிருந்து யாரோ ஒருவன் அவனெதிரே வந்து நின்றான். "நான் சாரதியின் பாகத்தைப் படித்துக்கொள்ளவில்லையே?" என்றான். ராஜா, "அடேய், எமது ராஜ்யத்தில் ஆடவேண்டியதெல்லாம் நான், வேறு யாரும் வாலாட்டக்கூடாது. இந்த வாலைப் பார்த்தாயா?" என்று தன் வாலை இழுத்துக் காண்பித்தான்.

"பார்த்தேன்."

"மன்னனின் வால் இப்படி இருக்கும்போது இன்னொரு வாலுக்கு இடமுண்டாடா? (ஒரு கணம் விட்டு) இல்லையென்று சொல்லவே வேண்டாம், தெரிந்தே இருக்கிறது. பேச்சு படித்துக் கொள்ளவில்லை என்று சொன்னாயல்லவா, இப்பொழுது சொல்லிக்கொடுக்கிறேன். தெரிந்துகொள். நான் இந்த விஷயம் இப்படி என்று சொல்லுவேன். நீ 'சரி மகாப்பிரபு' என்று சொல்லவேண்டும். நான் இது இப்படி இல்லையாடா என்பேன். நீ 'ஆம் மகாப்பிரபு' என்று சொல்லவேண்டும். நமது நாட்டில் என் வால் மாத்திரம்தான் ஆடவேண்டும். மற்றவர்களின் வால் ஆடக்கூடாது. என் நாக்கு மட்டும் பேசவேண்டும். மற்றவர்களின் நாக்கு பேசக்கூடாது."

சாரதியாக நடிக்க வந்தவன், "இவ்வளவு தான் வேலையென்றால் அதற்கு நம்ம லக்கன் தான் சரியான ஆள். நம்மாலே முடியாது" என்று கூறி "டேய் லக்கா, நீ வாடா இங்கே, சாரதியா இரு" என்றான். பின்னால் நின்றிருந்த கும்பலிலிருந்து ஒரு நொண்டி மேடைக்கு வந்தான். முதலிலிருந்தவன், "இதோ இவனை எடுத்துக் கொள்ளுங்கள் சாரதியாக" என்று நாடகராஜாவிடம் சொல்லிவிட்டுத் தான் இறங்கிப்போய் சபையோருடன் சேர்ந்து கொண்டான்.

97

ராஜபார்ட்காரன் புதியவனை அடிமுதல் நுனிவரை ஒரு பார்வை பார்த்தான்; நொண்டிக்காலை உற்றுப்பார்த்தான். சட்டென்று அவன் அருகில் சென்று உட்கார்ந்துகொண்டு கால் நொண்டி தான் என்பதை நிச்சயப் படுத்திக்கொள்வதுபோல இப்படியும் அப்படியும் பார்த்துவிட்டு எழுந்து நின்று எதிரே இருந்த சபையைப் பார்த்து அரசனின் பின்னால் நின்றிருந்த பசவனைக் குறிப்பாகப் பார்த்துக்கொண்டே ஆம் என்றும் பாவனையில் இரண்டு மூன்று முறை தலையாட்டினான்; மறுபடியும் புது சாரதியிடம், "என்னடா, நீ நமக்குச் சாரதியாக இருக்கிறாயா?" என்று கேட்டான்.

"ஆகட்டும் சாமி."

"உன்னை இங்கே அழைத்த அந்தக் குரங்குக்குச் சொன்னதைக் கேட்டுக் கொண்டிருந்தாயல்லவா? நீ இரண்டே வார்த்தைகள் தான் பேசவேண்டும். நான் ஏதாவது சொன்னால், 'சரி மகாப் பிரபு' என்று சொல்லவேண்டும். அப்படித்தானே என்று கேட்டால் அப்படித்தான் என்று சொல்லவேண்டும். தெரிந்ததா?"

"ஆம் மகாப்பிரபு."

"தெரிந்தது என்று சொல்லுடா. நாடகம் நடக்கும்போது தான் அப்படிச் சொல்லவேண்டும். இப்பொழுது சரியாகப் பேசு."

"அப்புறம் சரியாகப் பேசவேண்டாமா சாமி?"

"டேய், ரொம்பவும் ஒட்டாதே. நாம் சொன்ன இரண்டே வார்த்தைகளைத்தான் பேசவேண்டும்."

"சரி மகாப்பிரபு."

"சரி. அங்கே நில். நாம் ராஜா. குதிக்கிறோம் பார்."

என்று கூறி ராஜபார்ட் தித்தோங், ஜணதகுய என்று சரியாகக் குதிக்காமல் தாளம் தவறி கன்னு பின்னுவென்று நான்கு முறை குதித்து நடனத்தை முடித்தான். வேண்டுமென்றே தான் அப்படிச் செய்தான். சபையோரெல்லாம் சிரித்தனர்.

ராஜ பார்ட், "ஐயா சாரதி, நீ நம்மை யாரென்று கேட்டாயல்லவா?" என்று உரக்கக் கூறி மெல்லிய குரலில், ஆனால்

எல்லோருக்கும் கேட்கும் படியாக, "'ஆம் மகாபிரபு,' என்று சொல்லுடா முண்டமே," என்றான்.

அவன், "இதென்னப்பா? எல்லாம் நீ சொல்வதையே நான் சொல்லவேணுமானால் நான் எதற்காக? நீயே சொல்லிக்கோ" என்றான்.

"அப்படியானால் நீயே பேசுவாயா?"

"ஏன் பேசமாட்டேன்? பேசுகிறேன்."

"சரி அப்படியானால், பேசு."

"நீ யாரப்பா? இப்படிக் கன்னா பின்னா என்று குதிக்கிறாயே?"

"டேய், அரசரை நீ என்கிறாயே?"

"நான் என்னத்தைக் கண்டேன், நீ அரசன் என்று."

ராஜபார்ட் இவனை நன்றாகப் பார்த்துக் கொண்டே, "பார்த்தால் தெரியவில்லை?" என்றான்.

"தெரியவில்லை. நான் என்ன செய்யட்டும்? வேறு என்னமோ தெரிகிறது."

"என்ன தெரிகிறது?"

பக்கத்தில் சென்று அவன் வாலைத் தொட்டு எவ்வளவு நீளம் என்று பார்ப்பதுபோல நடித்து, "இது தெரிகிறதப்பா" என்றான்.

"ஆஹா! அதுவாவது தெரிகிறதே உனக்கு."

"கண்ணில் வந்து குத்துகிறேன் என்கிறது. எப்படித் தெரியாமல் இருக்கும்? இதென்ன பூராவும் நிஜமான வால் தானா?"

"பின் என்னவென்று நினைத்துக்கொண்டிருக்கிறாய்?"

"இது தானாக ஆடுமா அல்லது கையில் பிடித்து ஆட்ட வேண்டுமா?"

"டேய் அதிகப்பிரசங்கி சாரதி, ரொம்பத்தான் பேசாதே. சும்மா நீங்கள் யார் என்று கேள். நீ என் வாலைப் பார்த்துக் கொண்டு அசந்துபோய் நின்றுவிட்டால் ஆட்டம் மேலே நடக்காது."

"மேலே நடக்கட்டும். சொல்லப்பா நீ யார்?"

"ஊம், அதுதான் கெட்டிக்காரத்தனம். அடே சாரதி, யாம் யாரென்பதாகத்தானே நீ பயபக்திவிசுவாசத்துடன் கூடிய கேள்வியைக் கேட்டிருக்கின்றனையன்றோ?" என்று மீசையைத் தடவிக் கொண்டே புஜகீர்த்திகளை ஆட்டியபடி, "யாம் யாரென்பதைச்

சந்தோஷத்துடன் தெரிவிக்கின்றோம். நீ மகிழ்ச்சியடைவாயாக. சமஸ்த பூமண்டலத்திலே அழகாகத் திகழா நின்ற கூடகு என்ற நாடொன்று விளங்கா நின்றது. நீ அதை அறிவாயோ, சாரதியே?"

"கூடகு? குடகு அறிவேன். கூடகு தெரியாதே?"

"அடேய் மூடா! குடகு நாட்டுக்கு நான் அரசனென்றால் என்னை உயிரோடு விட்டுவைப்பார்களா இந்தச் சபையோர். எதிரே ராஜ பீடத்தில் சர்வாலங்கார பூஷிதராய் வீற்றிருக்கும் சிக்கவீர ராஜேந்திர மகாபிரபு அவர்கள் குடகு நாட்டின் அரசர். நாம் கூடகு நாட்டின் அரசர். அது எங்கே இருக்கிறதென்று கேட்பாயோ, சாரதி?"

"ஆமாப்பா சொல்லு."

"கேளாய் சாரதி. இந்த நாட்டுப் பிரபுக்கள் அதை முன்னர் கிஷ்கிந்தை என்று அழைத்து வந்தனர்."

"ஓ, அப்படியானால் நீ குரங்கா?"

"அடேய் சாரதி. உன் புத்தி எவ்வளவு கூர்மையானது என்பது நீ இவ்வளவு சீகிரம் நம்மைக் குரங்கு என்று தெரிந்து கொண்டுவிட்டதிலிருந்தே விளங்குகிறது. நீ கேவலம் ஒரு சாரதியாக இருப்பது இனி நமக்குப் பிடிக்கவில்லை. இந்த நிமிடம் முதல் நீ நமது மந்திரி. உன் பேரென்ன?"

"பசவன்னு சொல்லுப்பா."

"ஆஹா! என்ன ஆச்சரியம். இந்தப் பெயருள்ளவர்களே இப்படி புத்திசாலிகள் என்று தோன்றுகிறது. இந்தக் கணம் முதல் நீ உன் பெயரென்ன என்று கேட்டால், "மந்திரி பசவய்யா" என்று சொல்."

"மந்திரி சரிதான். ராஜா யாரென்று கேட்டால் என்ன சொல்லட்டும்? நமது நீண்ட வால் குரங்கனார் என்று சொல்லட்டுமா?"

"ஐயா மந்திரியே! உனது புத்தி கூர்மை இதனாலும் வெளிப்படுகிறது. நீ சொல்லுவதைப்போல நமது பெயர் வாலன்."

"நீங்கள் வாலிக்கு ஏதாவது..."

"ஆமய்யா மந்திரியாரே, நாம் ராமர் காலத்து வாலியின் பேரனின், கொள்ளுப் பேரனின், கொள்ளுப் பேரனின்., பேரனின், பேரனின், கொள்ளுப் பேரனின்..."

"போதும் நிறுத்தப்பா உன் வாலைவிட நீளமாக இருக்கும் போலிருக்கிறது. அவன் வாலி. அவன் குலத்திலுதித்த வாலன் நீ என்று சொல்."

"ஆஹா! மீண்டும் உன் அறிவின் கூர்மையை மெச்சினேன். யோசித்துப் பார்த்தால் உனக்கு எப்படி இவ்வளவு அறிவு வந்ததென்று விளங்குகிறது."

"எப்படி என்கிறாய்?"

"ஐயா மந்தியாரே சொல்லுகிறேன், கேட்பீராக. உன் அறிவு இவ்வளவு கூர்மையாக இருப்பதற்குக் காரணம் நீ கடவுள் கிருபையால் பங்குவாக இருப்பது தான்."

"பங்கு என்றால்?"

ராஜபார்ட் 'அது' என்று மந்திரியின் நொண்டிக் காலைக் காட்டினான்.

"நொண்டி என்று அர்த்தமா?"

"ஆமய்யா, மந்திரியாரே."

"அப்படியென்றால் எனக்குத் தெரியாத பாஷையில் நீ என்னை நொண்டி என்று திட்டுகிறாய்?"

"ஐயா மந்திரியாரே. சாமான்னியப் பட்டவர்கள் நொண்டிகளாக இருந்தால் அவர்களை நொண்டி என்று அழைப்பார்கள். பதவியிலிருப்பவர்கள் நொண்டியானால் அவர்களை 'பங்கு' என்று அழைப்பார்கள்."

"சரிதாம்ப்பா. பெரிய மனிதர்களென்றால் தலைவலி கால் வலிக்குக் கூட பேர் வேறு என்று சொல்."

"ஆமாம்டா நொண்டி. ஐயையோ மறந்துவிட்டேன். ஆமய்யா பங்கு மந்திரிப் பெரியாரே."

அப்பொழுது பெண்கள் பகுதியிலிருந்து ஒரு குரல், "எவ்வளவு தடவை சொல்வாய் நொண்டி நொண்டி என்று. உனக்கு வேறு பேச்சே இல்லையா?" என்று கத்தியது. கடைசி வரிசையிலிருந்து அந்தக் குரல் வந்ததால் எல்லோரும் அந்தப் பக்கம் திரும்பிப் பார்த்தார்கள். ஆனால் அப்படிக் கத்தியது யாரென்று ஒருவருக்கும் தெரியவில்லை. பின்புறம் உயரமாக தனது வழக்கமான வெள்ளைப் புடவையை உடுத்துக் கொண்டு பகவதி நின்றிருந்தாள். அப்படிக் கத்தியவள் அவள்தான்.

ராஜபார்ட் குரல் வந்த பக்கம் திரும்பிப் பார்த்து, "சரியமமா, இனிமேல் சொல்லமாட்டேன்," என்று கூறிவிட்டு நாடக மந்திரியை நோக்கி, "ஐயா மந்திரி, நீ இந்தக் கணம் முதல் நமக்கு மந்திரியாக நியமிக்கப்பட்டிருப்பதால் உனது உயர்ந்த பதவியின்

கடமைகள் என்ன என்பதைச் சொல்கிறேன், கேட்பாயாக. நமது மந்திரியின் வேலை குடகு மந்திரியின் வேலையைப் போல அல்ல. ஏனென்று கேட்கிறாயா?''

"ஏன் என்று சொல்லப்பா.''

"நாம் குடகின் அரசரைப் போன்ற அரசரல்ல.''

"அப்படியா சொல்லுகிறாய்?''

"ஏனென்று சொல்லுகிறேன் கேட்பாயாக. குடகின் அரசர் சிக்கவீர ராஜேந்திர உடையார். எதிரில் உட்கார்ந்திருக்கிறார் பார்த்தாயா?''

மேடையைச் சுற்றி நின்றிருந்த ஜனங்களின் மத்தியிலிருந்து ஒரு குரல், "அப்பய்யா, விளையாட்டு வினையாகிவிடப் போகிறது, ஜாக்கிரதை,'' என்றது.

சுற்றியிருந்த சிறுவர்கள் அப்படிக் கத்தியவனின் பக்கம் திரும்பிப் பார்த்தனர். அவன் உத்தய்ய தக்கன். அவன், "நீ பேசுகிற தப்புக்கு நம்மையெல்லாம் இழுத்துவிட்டு விடப் போகிறாய்!'' என்றான்.

ராஜபார்ட், "இல்லை தக்கரே,'' என்று அவனுக்குப் பதிலளித்தான். ஆனால் அவன் நாக்கு அதற்குள்ளாக நன்றாக அந்த கேலிப் பேச்சின் ருசியை அனுபவிக்கத் தொடங்கிவிட்டது. அதைவிட மனம் வரவில்லை. யட்சகானத்தில் வேஷம் போடும் போது கற்பனை செய்து பேசிப் பேசி வழக்கமாகி விட்டிருந்த அந்த மனிதனுக்குத் தன் மனத்தின் வெறுப்பையெல்லாம் வெளியில் கொட்டுவதற்குக் கிடைத்த இந்த சந்தர்ப்பத்தை விட்டுவிட மனம் வரவில்லை. அவன் பேச்சை அதே தோரணையில் தொடர்ந்தான். "கேட்டீரா மந்திரி? சிக்கவீர ராஜேந்திர உடையார் சத்தியவந்தர். குடகு நாட்டில் சத்தியம் தேவை. நமக்கு சத்தியத்தின் வாசனையே தெரியாது. கூடகு நாட்டில் அது வேண்டியதில்லை. சிக்கவீர ராஜேந்திரர் தர்ம நிஷ்டை உடையவர் குடகு நாட்டில் தர்மம் தேவை. நமக்கு தர்மத்தின் வாசனையே பொறுப்பதில்லை. கூடகு நாட்டில் அதற்கு வேலையில்லை. சிக்கவீர ராஜேந்திர உடையார் அவருடைய முப்பாட்டனார், பாட்டனார், பெரியப்பா, தந்தை லிங்கராஜர் இவர்களைப் போல தமது பிரஜைகளை மக்களைப்போலப் பரிபாலிக்கிறார். அவர் பிற ஸ்திரீகளைச் சகோதரிகளாகக் கருதுபவர். நாட்டிலுள்ள எல்லாப் பெண்களையும் தனது தாய்மார்களாகக் கருதி மரியாதையோடு காண்கிறார்.

குடகு நாட்டில் இது தேவை. நமது கூடகு நாட்டில் எல்லா வீட்டுப்பெண்களும் நமது மனைவிமார்கள் தான். அதே போல எல்லோர் வீட்டுக் குழந்தைகளும் நமது குழந்தைகள்."

98

சபையோர் கொல் கொல் கொல்லென்று சிரித்தனர். எதிரே உட்கார்ந்திருந்த அரசனுக்கு அந்தப் பேச்சில் அடங்கியிருந்த பரிகாசம் முகத்தில் உமிழ்ந்தாற் போல உறைத்தது. அவன் மிகுந்த கோபத்துடன், "யாரடா இவன் தேவடியாள் மகன்? போடு அவனுக்கு இரண்டு," என்று கூச்சலிட்டான். அரசனின் பின்னால் நின்றிருந்த பசவன் இரண்டடி முன்னால் வந்து பக்கத்திலிருந்த மாசனிடம், "அவனைப் பிடித்து நிறுத்திவை," என்றான்.

மாசன் ஒரு அடி எடுத்து வைக்கவில்லை. கூட்டத்தாரிடையே 'ஹோ' வென்ற கோஷம் எழுந்தது. ராஜபார்ட்காரன், "காவேரி மக்கள்" என்று கத்தினான். கூட்டத்தின் பல பகுதிகளிலிருந்து "மக்களின் தாய்" என்ற பதில் குரல் எழுந்தது. காட்டின் மத்தியிலிருந்து ஓடிவரும் நூறு ஓடைகள் சேரந்து பெரிய நதியாகப் பெருகிப் பாய்வதைப் போல ஜனக் கும்பலிலிருந்து விடுபட்டு வந்த நூறு ஆட்கள் அவனைச் சுற்றி வளைத்துக்கொண்டார்கள். பின்னாலிருந்த ஆட்களை ஒதுக்கி அவன் ஓடிப் போக வழி செய்து கொடுத்தார்கள். பத்து சேவகர்களுடன் மாசன் மேடைக்கு வருவதற்குள்ளாக அங்கே ராஜபார்ட்காரன் இருக்கவில்லை.

அன்று மாலை நிகழ்ச்சி இவ்வாறு முடிவடைந்தது.

ஆங்கிலேய அதிதிகளின் அருகில் நின்றுகொண்டு துபாஷ் நாடகத்தின் சம்பாஷணை விவரங்களை அவர்களுக்குத் தெரிவித்துக்கொண்டிருந்தான். அது அவ்வாறு திடீரென்று நின்று போனதன் காரணத்தையும் விவரித்தான். அரசனுக்கு விரோதமான கட்சி ஒன்று நாட்டில் இவ்வளவு பலமுள்ளதாக இருக்கிறது என்பதை அறிந்துகொண்டு விருந்தினர் உள்ளுக்குள் மிகவும் மகிழ்ச்சியடைந்தனர்; வெளியே காட்டிக்கொள்ளவில்லை.

மறுநாள் முறைப்படி விருந்தினருக்கு வழியனுப்புதல் நடந்தது. அது முடிந்ததுமே அரசன் பசவனிடம், "அந்த மாப்பிள்ளைப் பயலை வரச் சொல்லுடா, பசவா. அவன் எப்படி இந்த நாடகத்துக்கு ஏற்பாடு செய்தான் என்று கேட்போம். சரியானபடி பதில் சொல்லாமலிருந்தால் தலையைக் கொடுக்கட்டும்" என்றான்.

இது எல்லோரும் எதிர்பார்த்திருந்ததே. சென்னபசவய்யன், "எனக்கு உடல் நலம் சரியாக இல்லை. சரியான பிறகு அரசரின் சமுகத்திற்கு வருகிறேன். அதற்கு இடையே என்ன தவறு நடந்தது. அதன் காரணம் என்ன என்பதை சூரப்பா தெரிவிப்பான்; அவனை அழைத்து விசாரியுங்கள்," என்று சொன்னான்.

சூரப்பாவுக்கும் அரசனின் எதிரில் நின்று நடந்த சங்கதியைச் சொல்லி வசவு வாங்கிக் கொண்டு அவமானப்பட்டு வருவதில் இஷ்டமில்லை. ஆனால் அவன் அரண்மனை மாப்பிள்ளையைப் போன்று தப்பித்துக் கொள்ளக்கூடிய அந்தஸ்தில் இருக்கவில்லை. இஷ்டமில்லாமலே அவன் பசவனுடன் சென்று அரசனின் எதிரில் நின்றான்,

அரசன் அவனுடன் முகம் கொடுத்துப் பேசவில்லை பசவனிடம், "என்ன சொல்லுகிறான், பார்ப்பான்? சொல்லித்தொலை என்று சொல்," என்றான். பசவன் சூரப்பாவிடம், "சொல்லப்பா அந்த நாடகம் ஆடவேண்டுமென்று யார் ஏற்பாடு செய்தீர்கள்?" என்றான்.

சூரப்பா, "அன்று சபையில் என்ன நடந்ததோ எனக்குத் தெரியாது. எனக்குத் தொண்டை போய்விட்டது. காய்ச்சல் அடித்துக் கொண்டிருந்தது நான் வீட்டிலேயே தங்கிவிட்டேன். நாடகம் ஒன்றும் இல்லாமல் போகிறதே என்ன செய்வது என்று யோசித்துக் கொண்டிருந்த பொழுது கடைசி நாழிகையில் பாணே சூர்யநாராயணன் அரசரைப் புகழ்ந்து தெருக்கூத்தைப் போல நல்லதொரு யட்சகானம் போடுகிறேன் என்றான். நாடகத்தின் மையக்கருத்து என்ன வென்று கேட்டபோது 'குடகு நாடு நல்ல நாடு, அரசர் மிகவும் நல்லவர், மந்திரிகள் மிகவும் புத்தி கூர்மையுள்ளவர்கள், மற்ற நாடுகளைப் போல அல்ல'

என்பதுதான் கருத்து என்றான். தொட்டராஜனின் கதை ஆயிற்று; லிங்கராஜனின் கதையும் ஆயிற்று. ஆளுகிற அரசரின் கதையையும் ஆடவேண்டுமென நினைத்திருந்தோம், முடியவில்லை. சூர்யநாராயணன் அந்தக் குறையை நிவர்த்திப்பதுபோல வந்து சொன்னதால் மிகவும் நல்லதாயிற்று என்று ஒப்பினோம் அவன் என்னமோ யட்சகானத்தில் கெட்டிக்காரன்தான். மேடையின் மீதேறி நின்று அந்தச் சமயத்துக்கு ஏற்றவாறு வசனம் பேசக் கூடியவன். அப்படிப் பேசும்போது பரிகாசம் அதிகமாகிவிட்டதென்று சொன்னார்கள். இவன் சிரிப்பு மூட்டவும், ஜனங்கள் சிரிக்கவும் அவனுக்குப் பித்தம் தலைக்கேறிவிட்டது. கன்னாபின்னாவென்று பேச ஆரம்பித்து விட்டானாம். இன்னும் என்னென்ன ஆபாசமாகப்பேசியிருப்பானோ, நல்ல வேளையாக நீங்கள் குறுக்கிட்டீர்கள். இது நான் தெரிந்து செய்த தப்பல்ல. அரசர் என்னை மன்னிக்க வேண்டும். மன்னித்து என்னைக் காப்பாற்ற வேண்டும். இந்த விஷயம் தெரிந்ததுமே நான் சூர்யநாராயணனை நன்றாகத் திட்டிவிட்டேன்," என்று வினயத்துடன் சொல்லிக் கொண்டான்.

அரசன், "என்னடா கொண்டி, இந்தப் பார்ப்பான் சொல்வது நிஜமாக இருக்குமா?" என்று கேட்டான்.

பசவன் "பார்க்க வேண்டும் அரசே. அந்தச் சூரியநாராயணனை வரவழைத்து இரண்டு வாங்கு வாங்க வேண்டும்," என்றான்.

"வரவழைக்கச் சொல்."

சூரப்பா, "இப்படி விளையாட்டு வினையாகி, நாங்களும் சீசீ என்று திட்டி விடவே சூர்யநாராயணன் இனி இங்கிருந்தால் ஆபத்து தான் என்று பிரியாபட்டணத்திறகு ஓடிவிட்டான் அரசே," என்றான்.

அரசன்: "அவனைக் கொண்டு வந்தால் சரி. இல்லாவிட்டால் உன் தலையைக் கொடுக்கவேண்டும்."

"நான் சொல்லியனுப்புகிறேன்: அவன் வரவேண்டுமே அரசே. சமூகம் கோபமாக இருக்கிறீர்கள் என்றால் யாருக்குமே குலை நடுக்கம்தான். உத்தரவானால் போய் அழைத்து வருகிறேன்."

"போவது நிஜம். திரும்பி வருவாயா, நீ திருடன்."

"நான் திருடன் என்று நீங்கள் நினைக்கும்போது இல்லையென்று நான் சொன்னால் ஆகுமா அரசே? தவறு நடந்து விட்டது. அது

என்னால் தான் என்று தங்களுக்குத் தோன்றுகிறது. தவறு என்னுடையதல்ல என்று காண்பிக்கும் வரையில் நான் திருடன் தான்."

"சரி, அப்படியே சொல்லிக் கொண்டிரு. மூன்று நாட்களுக்குப் பிறகு உன் தலையைச் சீவி விட்டால் சரி."

"தங்கள் உத்தரவு அரசே, தாங்கள் எப்படிச் சொன்னாலும் அப்படிக் கேட்கிறேன். காப்பாற்றினீர்கள் என்றால் பிழைத்துக் கொள்கிறேன், தலையை வாங்கினீர்களென்றால் உயிரை விடுகிறேன். இந்த உயிர் உங்களுடையது."

அரசன், "சென்னபசவய்யனின் உடல் நிலை சரியாகட்டும். அவனை விசாரித்து யாருக்குத் தண்டனை அளிக்கவேண்டுமென்பதை முடிவு செய்வோம். அதுவரையில் சூரப்பா தன் வீட்டிற்குள்ளேயே காவலிலிருக்கட்டும்," என்று உத்தரவிட்டான்.

100

சூரப்பாவின் மூலம் அரசனின் கோபம் சமாதான மடையப் போவதில்லை என்பது சென்ன பசவய்யனுக்கு நிச்சயமாகத் தெரியும். தான் செய்யவேண்டியது என்ன என்று அவன் யோசித்தான். உண்மையில் அவனுக்கு உடலில் நோய் எதுவும் இருக்கவில்லை. சூர்யநாராயணன் சமயத்துக்குத் தக்கபடி வசனம் கற்பனை செய்து பேசுவதற்கு சூரப்பாவும் அவனும் இருவரும் ஒத்துக்கொண்டிருந்தனர். சூர்யநாராயணன் சந்தர்ப்பத்திற்கொத்தபடி வசனம் பேசக்கூடிய யட்சகான நடிகன் என்பது மட்டும் சூரப்பாவுக்குத் தெரியும். சென்னபசவய்யன் சூர்ய நாராயணனிடம், "பேச்சு சிறிது ஹாஸ்யம் கலந்ததாகவே இருக்கட்டும். அப்பொழுது தான் ஜனங்கள் ரசிப்பார்கள்" என்று அபிப்பிராயம் சொல்லியிருந்தான். சூர்யநாராயணன் அந்த யோசனைப்படி நடப்பதில் துன்வச மிழந்து கட்டுப்பாடில்லாமல் நடந்துகொண்டு விட்டான். எல்லையை மீறுமலிருக்கும் போதே அரசன், பசவன், மற்றவர்கள் கோபமடையக் கூடும் என்று அவனுக்கு ஒரு சந்தேகம் இருந்தது. ஆகையால் அவன் நாராயணதீட்சிதனிடம் சொல்லி அவன் ஆட்களை மேடையைச் சுற்றி

லும் நிற்கலைக்கச் செய்திருந்தான். சூர்யநாராயணனுக்கே அவன் என்ன பேசப்போகிறான் என்பது தெரியாது என்ற பின் சென்னபசவய்யனுக்கு அது தெரியாது என்று சொல்லவேண்டிய அவசியமே இல்லை. ஆனால் அரண்மனைப் பரிவாரங்களின் முன் பகுதியில் அரசனுக்குப் பின்னால் உட்கார்ந்து கொண்டு சென்னபசவய்யன் அரசனைப் பற்றிய பரிகாச வார்த்தைகளையெல்லாம் பாராட்டி மகிழ்ந்து கொண்டிருந்தான். அவைகளைக் கேட்கும்பொழுதெல்லாம் எல்லாரோடும் சேர்ந்து வாய்விட்டுக் கலகல வென்று சிரித்துக்கொண்டிருந்தான்; அந்தச் சமயத்தில் இது ராஜதுரோகம் என்ற நினைவே இல்லாதபடி நடந்துகொண்டான். கலவரம் ஏற்பட்டதுமே இது விசாரணைக்கு வரக்கூடிய சங்கதி என்று தெரிந்துகொண்டான். இப்பொழுது அது விசாரணைக்கு வந்திருக்கிறது. அவன் மேற்கொண்டு என்ன செய்வது என்று ஒரு முடிவுக்கு வந்தான்.

தான் அரசனைப் பார்க்கப் போகக்கூடாது. ஒன்றில்லாவிட்டால் மற்றொரு காரணம் கூறி விலகியே இருந்து விடவேண்டும். அப்படியும் அரசன் பிடிவாதம் செய்தால் தான் மனைவியுடனும் குழந்தையுடனும் ஆடகை விட்டு பெங்களூருக்குச் சென்று விடவேண்டும். இது விஷயம் ஆங்கில அதிகாரியோடு பேசும்போது தீர்மானிக்கப்பட்டதுதான். இந்த அரசன் வேண்டாமென்று மக்களெல்லாம் நினைக்கிறார்கள். இவனைப் பட்டத்திலிருந்து விலக்குவதற்கு ஆங்கிலேயர்கள் தயாராக இருக்கிறார்கள். லிங்கராஜனின் மகனை ஆட்சியிலிருந்து விலக்கினால் அந்த உரிமைக்கு லிங்கராஜனின் மகன் வரவேண்டியது இயற்கை. வேறு வழி இல்லை சூர்யநாராயணனின் காரணமாக இந்தக் கலகம் மூண்டது இந்த நல்ல முடிவை ஏற்படுத்துவதற்காகவே இருக்கலாம். ஆண்டவன் விருப்பம் அதுவானால் நடந்துவிடட்டும். இது அவன் செய்துகொண்ட முடிவு

பசவன் சூரப்பாவை அழைத்து வர அப்படிப் போன அதே சமயத்தில் மேலே கூறப்பட்ட முடிவுக்குவந்த சென்னபசவய்யன் அப்பங்கொளத்துக்குப் புறப்பட்டு விட்டான். போகும்போது ராணியிடம், "நாம் நாளை அல்லது நாளை நின்று நஞ்சன கூடுக்குப் புறப்பட்டு விடுவது நல்லது. இதற்கும் ஏற்பாடு செய்து தாருங்கள்" என்று வேண்டிக் கொண்டான்.

சூரப்பாவின் விசாரணை முடிந்து சென்னபசவய்யன் அரசனை வந்து காணவேண்டுமென்று உத்தரவு வந்த பொழுது அவன்

அப்பங் கொளத்துக்குப் புறப்பட்டுச் சென்று விட்டான் என்று தெரிய வந்தது. அரசன் கோபம் கொண்டு கூச்சலிட்டான். பசவனைத் திட்டினான். "இந்த வேசி மகன் அப்பங் கொளத்தை அரண்மனை என்று நினைத்துக் கொண்டிருக்கிறானா? பெருச்சாளி வலை அது, போகட்டும் முண்டம். புகை போட்டு மூச்சு விட முடியாமல் செய்கிறேன். வயிறு புண்ணாகும்படி சிரித்தானே. அவன் உயிரைக் கக்க வைக்கிறேன். கக்கட்டும் தாசி மகன்," என்றான்.

ஒரு கணம் கழித்து, "டேய் நொண்டி, அந்தத் தேவடியார் மகன் அப்பங்கொளத்தை விட்டும் எங்கேயாவது ஓடிவிடப் போகிறான், ஜாக்கிரதை. காவல் வை. தப்பிப்போகப் பார்த்தால் மண்டையில் அடி. ஆண்குழந்தை பிறந்து விட்டது என்று தலைகால் தெரியவில்லை போலிருக்கிறது. பிள்ளை பெற்றதன் சுகம் என்னவென்று காண்பிக்கிறேன், என்று கோபத்தோடு கட்டளையிட்டான்.

இந்தப் பேச்செல்லாம் அரண்மனையில் எல்லோருக்கும் தெரியும்படியாகவே தான் நடந்தது. அரண்மனை மருமகப்பிள்ளை அரசனுக்கு அவமானம் நேரிடும் படியாக நாடகம் நடத்தினான் என்று ராணிக்கும் கோபம். அதைவிட அதிகமாக அரசன், தங்கைக்கோ அல்லது அவர்கள் குழந்தைக்கோ ஏதேனும் கேடு விளைவிக்கக்கூடும் என்று பயந்தாள். "இந்த வருடம் எப்படியாவது க்ஷேமமாகக் கழிந்து விட்டால் அடுத்த வருஷம் பயம் இல்லை. கடவுள் கிருபையால் எல்லாம் சரியாகப் போய்விடும்," என்று அவள் நினைத்துக் கொண்டாள். "இவர்கள் நஞ்சனகூடுக்குப் போகவேண்டுமாம். அரசருக்கு பொதுவாகத் தெரிவி," என்றாள்.

சுயநலத்தால் முன்யோசனையை இழந்த சென்னபசவய்யன் தனது சுயநலமே கடவுளின் விருப்பமாக இருக்கும் என நினைத்துக்கொண்டான். சுயநலமில்லாத ராணி நாட்டின் நன்மைக்காக கடவுளின் அநுக்கிரகத்தை வேண்டினாள். உண்மையில் பின்னால் நடக்கப் போவதை சுயநலவாதியும் அறியமாட்டான், சுயநலமில்லாதவளும் அறியமாட்டாள்: தனி மனிதனின் வாழ்க்கையில், ஒரு நாட்டுமக்களின் வாழ்க்கையில், உலக மக்களின் வாழ்க்கையில்; எல்லாவற்றிலும் அப்படித்தான். நாளைக்கு என்ன நடக்கும் என்பதை யாரும் கண்டிப்பாகச் சொல்ல முடியாது.

ஆங்கிலேய அதிகாரிகள் குறித்த காலத்தில் பெங்களூரை அடைந்தனர். ரெஸிடெண்ட் கீழே கண்டபடி ஒரு செய்தியை மதராஸ் கவர்னருக்கு அனுப்பிவிட்டு அதன் நகலை கவர்னர் ஜெனரலுக்கும் அனுப்பிவைத்தான்:

"இந்த முறை நவராத்திரித் திருவிழாவின்போது குடகு மன்னரின் அழைப்புக்கிணங்கி மடிகேரிக்குச் செல்லுவதாக ஏற்கனவே தெரிவித்துள்ளேன். மடிகேரியிலிருந்து நேற்று திரும்பி வந்தேன். அங்குள்ள நிலைமையைத் தங்களுக்கு விளக்குவதற்காக இந்தக் கடிதத்தை எழுதுகிறேன்.

"குடகின் அரசர் மக்களின் மனத்திலே வெகு தூரம் கசப்பை விளைவித்து விட்டார் என்பதிலே சந்தேகமே இல்லை. தொட்டவீர ராஜன் தமது கடைசி காலத்தில் அரைப் பைத்தியமாக இருந்த பொழுது செய்த அக்கிரமங்களை இந்த அரசர் தமது வாலிபத்திலேயே செய்து வருகிறார். குடகு நாட்டு மக்கள் இவருடைய கொடுமையினால் உள்ளம் கொதித்துக் கொண்டிருக்கிறார்கள்.

"நான் மடிகேரியில் தங்கியிருந்த நாட்களில் ஊரிலுள்ள நாடக மன்றங்கள் தினந்தோறும் அரசாட்சியின் தன்மையைக் காட்டுகிற சிறுசிறு நாடகங்களை நடித்துவந்தனர். அவைகளில் பழைய அரசர்களைப் புகழ்ந்ததுடன் இன்றைய அரசரின் கொடுங்கோலாட்சியையும் பரிகாசம் செய்து காண்பிக்கத் தொடங்கினர். தாங்கள் விரும்பாத அரசனின் எதிரில் இப்படிப் பரிகாசம் செய்வது அவர்களால் எப்படி முடிந்தது என்று விவரிப்பது கஷ்டம். அரசன் தன் வலிமையையெல்லாம் இழந்துவிட்டிருக்கிறார். ஜனங்கள் பகிரங்கமாக அவருக்கு எதிராகத் திரண்டு கொண்டிருக்கிறார்கள்.

"மந்திரிகள் தங்கள் அரசனை விட்டுக்கொடுத்து எதுவும் பேசவில்லை. ஆனால் அவர்களுக்கும் அரசனிடம் அவ்வளவொன்றும் விசேஷமான பக்தி இல்லை என்பது அவர்கள் நடந்துகொள்வதிலிருந்து தெரிகிறது. அவர்களில் மூத்தவரான லக்ஷ்மீநாராயணய்யா (இவர் பிராம்மணர்) எந்த விஷயத்திலும் உறுதியான ஒரு அபிப்ராயத்தைத் தெரிவிக்கக்கூடியவரல்ல என்று தோன்றுகிறது. போபண்ணா குடகர். இவர் சிறிது கண்டிப்புப் போர்

வழி என்று தோன்றியது. சரியான சந்தர்ப்பத்தில் இவரை வற்புறுத்தினால் இவர் ஜனங்களின் சார்பில் நமக்கு உதவி புரியக் கூடும் என்று எனக்குத் தோன்றியது.

மூன்றாவது மந்திரி பசவய்யன் ஒருவன் தன் அரசனை விட்டுக் கொடுக்கக்கூடியவன் அல்ல. உண்மையில் இவனும் அரசனும் வேறுவேறு அல்ல என்கிற அளவுக்கு இருவரும் நண்பர்களாக இருக்கிறார்கள். இவர்களிடையே உள்ள சிநேகத்தை ஜனங்கள் பலவகையில் விவரிக்கிறார்கள். அதைப் பற்றிச் சொல்லக்கூட நான் கூசுகிறேன். விஷயம் இதுதான். அரசன் இளவயதிலிருந்தே இவனுடன் வளர்ந்து இவனால் கெட்ட வழிகளில் இழுத்துச் செல்லப்பட்டவன்; மற்றவர்கள் பெண் என்பதை முதன்முதலில் அறியும் வயதுக்குள்ளாக இவன், உடலில் இனி சக்தியே இல்லை என்னும் அளவுக்கு துர்ப்பழக்கங்களிலே ஈடுபட்டுவிட்டான்; இப்பொழுது இந்த மந்திரி இவனுக்கு அசுவாபாவிகமான காமநுகர்ச்சியில் சகா; பிரதிநிதித்துவத்தின் மூலம் ரதிசுகத்தை அளிக்கும் மனிதன். அரசன் தான் அநுபவிக்க முடியாத இன்பத்தை இவன் அநுபவிப்பதைப் பார்த்தே சந்தோஷமடைகிறான் என்று ஜனங்களிடையே பேச்சு.

"இது நேரில் யாரும் நம்மிடம் வந்து சொல்லக்கூடிய விஷயமல்ல; நமது ஆட்கள் விடுதிக்கு வந்தவர்களுடனும் வெளியே சந்தித்தவர்களுடனும் பேசி உபாயமாக அறிந்து கொண்ட விஷயம்.

"அநுபவிக்க முடியாமற் போய்விட்ட மற்ற எல்லா சுகங்களையும் அரசன் மதுவின் மூலம் அநுபவிக்கிறானாம். நாங்கள் அங்கே இருந்த வரையில் அவன் நினைவிழக்கும் அளவுக்கு குடிக்கவில்லை. இதற்குக் காரணம் நாங்கள் அங்கே இருந்ததுதான் என்றும் தெரியவந்தது.

"ராணி சத்தியத்தைக் கடைப்பிடித்து ஒழுகுபவள்: கம்பீரமான சுபாவத்தைக் கொண்ட ஸ்திரீ; அரண்மனையின் மரியாதை காப்பாற்றப்படுவது அவளுடைய பெருந்தன்மையால்தான்.

"இவளுடைய மகள் இப்பொழுதுதான் வயதுக்கு வந்து கொண்டிருக்கிறாள்; செல்லமாக வளர்ந்து வருவதால் தன் வயதைவிடச் சிறியவள் போலப் பேசுகிறாள்; நடந்துகொள்கிறாள்.

"ராணியிடம் ஜனங்களுக்கு இருக்கும் மரியாதை, கௌரவம் இவை இன்னும் இவள் பேரில் உதிக்கவில்லை.

"மொத்தத்தில் முடிவாகத் தோன்றுவது இதுதான்: சரியானதுபோல் காணப்படும் ஒரு காரணம் தோன்றியவுடனே நாம் அரசரைப் பட்டத்திலிருந்து விலக்குவதற்காகப் போவதற்குத் தடையில்லை. இது கூடாது என்று சொல்லக்கூடிய மக்கள் சிலர் இருக்கதான் செய்வார்கள். ஆனால நமது நோக்கத்திற்கு உதவியாக இருக்கக்கூடியவர்கள் வேண்டிய அளவு இருப்பார்கள்.

"காரணம் தானாகத் தோன்றி நாம் போகவேண்டும்; காரணம் இல்லாமல் நாம் போனால் அவ்வளவாக நமக்கு ஒத்துழைப்பு கிடைக்காமற் போய்விடலாம். அது முட்டாள்தனமாகிவிடும். ஆத்திரப்படாமல் இருக்கவேண்டியது இந்த சந்தர்ப்பத்தில் முக்கியமான கடமை.

"இப்படிச் சொல்வதனால் நாம் வெகு நாட்கள் பேசாமல் இருக்க வேண்டும் என்று சொல்வதாக அர்த்தமல்ல. அரசர் பல விரோதிகளைப் பல திசைகளிலும் சிருஷ்டித்துக் கொண்டிருக்கிறார். அவருடைய பெரியப்பா என்று சொல்லிக்கொள்ளும் ஒருவர் அரசனைப் பட்டததிலிருந்து நீக்குவதனால் தன் மகனை அரசனாக்கவேண்டும் என்று ஏற்கனவே நம்மிடம் மனுச் செய்து கொண்டுள்ளார். பெரியப்பா ஒருவர் இருந்ததாக ஜனங்கள் ஒப்புக்கொள்கிறார்கள். ஆனால் வெகு நாட்களுக்கு முன்னரே நாட்டைவிட்டு ஓடிப் போய்விட்ட அவரைப் பார்த்தவர்கள் குறைவு. நாம் விரும்பினால் இவர் நாட்டில் தமது கடசியாக உள்ளவர்களைத் திரட்டி நமது உதவியை நாடும்படிச் செய்யக் கூடியவர் என்று தோன்றுகிறது.

"அரசனுக்கு ஒரு தமையன் இருப்பதாக நமக்குச் சில கடிதங்கள் வந்துள்ளன. இதை எழுதியவர்கள் யார் என்று அறிய முயற்சித்தேன். முடியவில்லை. யாரோ ரகசியமாக இருந்து கொண்டு இந்தக் கடிதங்களை எழுதியிருக்கிறார்கள். அவர்கள் யாராக இருக்கலாம் என்பது தக்க காலத்தில் வெளிப்படக் கூடும். அவர்களாலேயே நாட்டில் கலகம் ஏற்பட்டாலும்கூட ஆச்சரியப் படுவதற்கில்லை.

"ஜனங்களில் வேண்டுமளவு அதிருப்தி தோன்றி சிலராவது அரசனுக்கு விரோதமான ஒரு கூட்டத்தைத் திரட்டியிருக்கிறார்கள் என்று தோன்றியது. நாடகத்தில் நேருக்கு நேர் அரசரை இகழ்ந்தவர்கள் இந்தக் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்று தெரிகிறது. இவ்வளவு எதிர்த்தவர்கள் இன்னும் சிறிது எதிர்ப்பதற்கு வெகு காலம் வேண்டியிருக்காது. ஒரிரண்டு மாதங்

களுக்குள்ளாக இந்த அதிருப்தி பகிரங்கமாக வெளிப்பட்டால் ஆச்சரியப் படவேண்டியதில்லை.

"இது எப்படியானாலும் அரசர் தமது தங்கையின் கணவனை விரோதியாக்கிக் கொண்டிருப்பதால் அந்த மாப்பிள்ளையின் மூலம் விரைவில அரசனுக்குக் கேடு உண்டாகலாம். இந்த மாப்பிள்ளை சென்ன பசவய்யன் பிறவியில் குடகன. அரண்மனை மகளை விவாகம் செய்துகொள்வதற்காக வேறு மதத்தில் சேர்ந்து கொண்டவன் மன்னர் மகளைக் கல்யாணம் செய்து கொண்டதனால், தான் மன்னருக்குப் பெரிய உபகாரம் செய்து விட்டதாக இவன் எண்ணம். இயற்கையாகவே தற்பெருமை நிறைந்த மனிதன்; அரண்மனையின் மாப்பிள்ளை என்ற காரணத்தால் அது இன்னும் அதிகமாகியுள்ளது. வீட்டு மருமகன் வீட்டு மகனைவிட உயர்வு என்கிற ரீதியில் நடந்து கொள்வது இந்த நாட்டில் வழக்கம்: தான் அரசனைவிட உயர்ந்தவன் என்கிற விஷயத்தில் சென்ன பசவய்யனுக்கு ஏதும் சந்தேகமே இல்லை.

"நான் குறிப்பிட்டிருக்கும் இந்த நான்கைந்து சந்தர்ப்பங்களில் எதன் மூலமாகக் கலகம் தோன்றினாலும் அதை அடக்குவதற்கென்று நாம செல்லலாம். அப்படிச் செய்தால் நாம் நாடாசையால் படையெடுத்தோம் என்ற அவப் பெயர் வராது

"கலகம் தானாகவே தோன்றக்கூடிய இந்த சந்தர்ப்பத்தில் அரசரின் துடுக்குத்தனம் நமக்குச் சகாயமாக இருக்கிறது. கட்டுப்பாடின்றி நடந்துகொள்வது குடகின் அரண்மனையின் ஒரு சம்பிரதாயம். இந்த அரசன் அதில் நன்கு தேர்ந்திருக்கிறான். நினைத்த நேரத்தில் நினைத்தபடி பேசுவதே அரசனின் முக்கிய லட்சணம் என்று இவர் நினைத்துக் கொண்டிருக்கிறார். தான் அரசனாக இருப்பது குடகு என்ற ஒரு சிறு நாட்டிற்கு என்று அவர் எண்ணவில்லை. நானும், கவர்னரும், கவர்னர்-ஜெனரலும் இருக்கட்டும். இங்கிலாந்து மன்னரே தனக்கு இணையில்லை என்பது இவர் நினைப்பு. இவருடைய பேச்சு தோரணைக்கு ஒரு வரம்போ, கட்டுப்பாடோ கிடையாது.

"இப்படிப்பட்ட மனிதன் நாட்டில், இப்பொழுது இருக்கும் நிலைமையில், தனது அவிவேகத்தால் காட்டுத் தீயை மூட்டுவதற்கு வெகு நாட்கள் வேண்டியதில்லை.

"குடகின் அரசர்கள் எப்போதும் நம்மிடம் நம்பிக்கையாகவே நடந்து வந்திருக்கிறார்கள். இந்த நம்பிக்கையின் பின்னால் ஆங்கில

அரசாங்கத்தைப் பற்றிய பயமும் இருக்கிறது. நண்பர்களான இத்தகையவர்களின் விஷயத்தில் நாம் விரோதிகளாக நடந்து கொள்ளலாமா என்பது யோசிக்கவேண்டிய விஷயம். எனக்கும் இந்த எண்ணம் இருந்துகொண்டே இருக்கிறது. ஆனால் இந்தக் கூச்சத்தைப் போலவே அதற்குப் பதிலும் தெளிவாக எனக்குப் படுகிறது. அரசர் நண்பர். ஆனால் அவர் துஷ்டரானதால் ஜனங்கள் இந்தக் கொடுமையிலிருந்து எங்களைக் காப்பாற்றுங்கள் என்று கேட்டால் நமது கடமை ஒன்றே. துஷ்டனான அரசனுக்கு உதவுவதல்ல; துன்பத்தில் வீழ்ந்திருக்கும் ஜனங்களுக்கு உதவுவதுதான். இது கம்பெனி சர்க்கார் இதற்கு முன்னர் நடந்துகொண்ட மாதிரிகளிலிருந்து புலனாகிறது.

"மைசூர் அரசர் நமது நண்பர். இப்பொழுதும் நமது நண்பரே. இருந்தாலும் மைசூர் அரசாட்சி சீர் கெட்டிருந்ததால் நாம் மைசூர் பிரஜைகளின் அமைதியைக் காப்பாற்றுவதற்காக அந்த நண்பரைப் பட்டத்திலிருந்து இறக்கவேண்டியதாயிற்று.

"இதே போன்ற பிரச்னை குடகில் தோன்றினால் இதே போல அதை நிவர்த்திக்க வேண்டியது தான்.

"இப்படிப் பிரச்னை தோன்றட்டும் என்று நான் விரும்பவில்லை. ஆனால் அது தோன்றினால் அதை நிவர்த்திப்பதில் நான் பின் வாங்க மாட்டேன்.

"அரசர் எங்களை மிகுந்த பிரியத்துடன் நடத்தினார். விருந்தோம்புதலில் இந்த நாட்டு மக்கள பழகியவர்கள். குடகில் இருந்த ஆறு நாட்களும் நாங்கள் தேவலோகத்தில் வசித்தது போன்ற சுகத்தை அநுபவித்ததோம். அதில் ஒரே குறை, தாங்களும் அங்கே வரவில்லையே என்பதுதான்."

இப்படிக்கு, என்றும் தங்களுடையவனான, ரெஸிடெண்ட் என்று கையொப்பம்.

102

அரப்பங்கொளத்தை அடைந்ததும் சென்ன பசவய்யன் கூடிய மட்டிலும் சீக்கிரமாக நாட்டைவிட்டு பெங்களூருக்குப் பிரயாணம் புறப்படும் ஆயத்தத்தில் தொடங்கினான். அரண்மனையை அடைந்ததுமே தேவம்மாஜியிடம் தனிமையில் இந்த யோசனை

யைத் தெரிவித்து, "இன்றைக்கோ நாளைக்கோ புறப்பட்டு விடலாம். புறப்படுவதற்குத் தயாராயிரு," என்றான்.

"பெங்களூருக்குப் போகவேண்டுமா?"

"ஆமாம். அதிகாரியிடம் சொல்லியிருக்கிறேன். அவர் நமது சார்பில் காரியம் நடத்துவார். உன் தமையன் புத்திசாலித் தனமாக நடந்துகொள்வதாக வாக்குக் கொடுத்தால் திரும்பி வரலாம். பிடிவாதம் செய்தால் அவனைப் பட்டத்திலிருந்து நீக்கி நீ அரசியாக வரவேண்டும்."

"எல்லாம் சரியாக நடந்தால் ஆயிற்று. இல்லாவிட்டால் மிக வும் ஆபத்தாயிற்றே."

"இப்படியே இருந்தால் அதைவிட ஆபத்து, ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு கணமும் ஒரு கண்டம்தான். இதைவிட அது எவ்வ ளவோ மேல்."

"ஆமாம், கூட்டத்தாரெதிரே அண்ணய்யாவைப் பரிகசித்துப் பேசி விட்டார்களே. சூரப்பா ஏன் இப்படிச் செய்தார்?"

"அது பெரிய கதை. சூரப்பா அல்ல, சொர்க்கத்திலிருந்து அவனுடைய அப்பா வந்திருந்தாலும் அந்தப் பாணே பார்ப் பானைத் தடுத்திருக்க முடியாது. அவன் மனைவியை இவர்கள் கடத்திக்கொண்டு வந்திருந்தார்கள். பாடுபட்டு அவன் மீட்டுக் கொண்டான். நாடகம் என்ற சாக்கில் துஷ்டர்களின் முகத்தில் உமிழ்ந்து தன் வயிற்றெரிச்சலைத் தீர்த்துக்கொண்டான்."

"அவன் வயிற்றெரிச்சலைத் தீர்த்துக் கொண்டுவிட்டான், சரி தான். இப்பொழுது நாமல்லவா திண்டாடவேண்டும்?"

"மூன்று நாள் திண்டாட்டத்தை விட்டுத்தள்ளு. நான்காவது நாள் நீயே அரசி."

"என் தலையில் அது எழுதவில்லை."

"அதை யார் கண்டார்கள் விடு. அதைப் பற்றி நாம் பேச வேண்டாம். ஆனால் உங்கள் அண்ணய்யாவுக்கு புத்தி கற்பிக்கா விட்டால் நான் சென்ன பசவய்யனல்ல."

"சரி, நாலு துணி, நாலு நகை, அவ்வளவுதானே. எவ்வளவு நேரம் தயார் செய்து கொள்வதற்கு? எப்பொழுது புறப்பட வேண்டுமென்றாலும் புறப்படுகிறேன். நீங்கள் ஏற்பாடு செய்யுங்கள்."

சென்ன பசவய்யனின் பரிவாரங்களில் வேண்டிய அளவு ஆட்கள் இருந்தனர். அவர்கள் தமது எஜமானனிடம் மிகுந்த

விசுவாசிகள். இயற்கையாகவே இவர்கள் யார் தங்களுக்கு எஜமானனோ அவனுக்கு தங்கள் உயிருக்கும் அஞ்சாது சேவை செய்யக் கூடியவர்கள். சென்ன பசவய்யன் இவர்களின் தலை வனான சோமனை அழைத்தான். "இன்றைக்கோ நாளையோ நீங்கள் ஆறு பேர் ஒரு வேலையாகப் போய் வர வேண்டும். ஆறு குதிரைகள் தயார் செய்துகொள், செய்கிறேன்," என்றான். சோமன், "உத்தரவு எஜமான்" என்றான்.

ஆனால் சென்ன பசவய்யனின் ஏற்பாடு அவன் யோசித்தபடி அவ்வளவு சுலபமாக நடைபெறவில்லை. அன்று மாலை மடிகேரியி லிருந்து பசவனின் ஆறு காலாட்படையினர் அப்பங்கொளத் திற்கு காவலுக்காக வந்து சேர்ந்தனர்.

அவர்கள் வந்திருக்கிறார்களென்று கேள்விப்பட்டதுமே சென்ன பசவய்யன், இவர்களை அரசன் அனுப்பி யிருக்கிறான்; தானும் தன் மனைவியும் குழந்தையும் அந்தக் கணத்திலிருந்து காவல் கைதிகள், என்று புரிந்துகொண்டான். தேவம்மாஜியும் இதைப் புரிந்து கொண்டாள். அரண்மனையில் கைதியாக இருந்து விடு தலை பெற்று வந்து இன்னும் நான்கு மாதங்கள் ஆகவில்லை. அதற்குள்ளாக தன் கணவன் குழந்தையோடு இப்பொழுது தன் வீட்டிலேயே கைதியாக வேண்டிய நிலை வந்ததே என்று கவலை கொண்டாள்; அதை நினைக்க நினைக்க அழுகையே வந்து விட்டது அவளுக்கு; இந்த சுகத்தை அநுபவிப்பதற்கு இந்தக் குழந்தை வேறு பிறந்திருக்கவேண்டுமா என்று வேதனையால் நொந் தாள்.

அன்று இரவு சென்ன பசவய்யன், "மூன்று நாட்கள் கழித்து ஆட்களுக்காக வென்று பண்டிகை கொண்டாட ஏற்பாடு செய். ராத்திரி எல்லோருக்கும் சாப்பாட்டுக்கு ஏற்பாடு இருக்கட்டும். மற்றவை பிறகு சொல்லுகிறேன்," என்றான். சோமனுக்கு விஷயம் சொல்லப்பட்டது.

குறிப்பிட்ட அன்று இந்த அரண்மனையில் பண்டிகை நடந்தது. மத்தியானம் நடந்த வேடிக்கை விநோதங்களில் மற்ற அரண் மனை ஆட்களோடு மடிகேரியிலிருந்து வந்திருந்த காவல் ஆட் களும் சகஜமாகக் கலந்து கொண்டார்கள்.

இரவு இவர்கள் எல்லோருக்கும் விருந்துச் சாப்பாடு. சென்ன பசவய்யன் பசவனின் ஆட்களை ஒரு பந்தியில் உட்காரவைத்தான். அவர்களுக்குப் பரிமாறப்பட்ட பாயசத்தில் அபின் கலக்கப்

பட்டிருந்தது. தேவம்மாஜியிடம் புறப்பட தயாராயிரு என்று சொன்னான். சோமனுக்கும் தன் திட்டத்தை தெரிவித்தான்.

அபின் மற்றும் அதுபோன்ற இதர வஸ்துக்கள் அந்த காலத்தில் இது போன்ற வீடுகளில் எந்த நேரத்திலும் போதுமான அளவு கிடைக்கும்படி இருக்கும். அரண்மனைகளின் வாழ்வில் ஆகாரம் எவ்வளவோ அவ்வளவு விஷமும் ஒரு முக்கியமான பொருள். பதம் தவறிய வாழ்வுக்கு ஆகாரத்தைவிட விஷமே விருப்பமான வஸ்து; ஆகாரம் கொடுக்க முடியாத ஒரு விடுதலையைத் தரக் கூடிய வஸ்து.

இரவின் முதல் பாதியில் இருவரும், பிற்பாதியில் இருவரும் பசவனின் ஆட்கள் காவல் இருக்க வேண்டும். படுக்கவேண்டியவர்கள் நால்வரும் படுத்துக் கொண்டு மற்ற இருவரும் யாரும் வெளியே போகாதபடி பார்த்துக்கொண்டு சுற்றுக் காவல் புரிந்து கொண்டிருந்தனர். தூக்கம் கண்ணை அழுத்தவே, "இதென்ன டாது, இப்படி கண்ணை இழுக்குதே தூக்கம்?" என்று ஒருவரையொருவர் கேட்டுக்கொண்டார்கள். சிறிது நேரங்கழித்து அவர்களில் பெரியவன், "நான் கொஞ்சம் இப்படிப் படுக்கிறேன். ஒரு நாழிகை கழித்து என்னை எழுப்பு" என்று கூறி திண்ணையின் மீது படுத்துவிட்டான். அவனை எழுப்பவேண்டிய பொறுப்புள்ள சின்னவன் அரைமணிக் குள்ளாக தூக்கத்தைத் தடை செய்ய முடியாமல் தானும் படுத்துவிட்டான்.

இவர்கள் இவ்வாறு மெய்மறந்து கிடப்பதற்காகவே காத்திருத்த சோமன் சென்ன பசவய்யனிடம், "புறப்படுகிறீர்களா எசமான்?" என்று கேட்டான். தேவம்மாஜி தயாராயிருப்பதை அறிந்துகொண்டு குழந்தை படுத்திருந்த தொட்டிலைத் தூக்கிக் கொண்டான்.

குதிரைகள் அரண்மனையின் எதிரிலுள்ள பள்ளத்துக்கப்பால் மரத்தின் மறைவில் நின்றிருந்தன. இவர்கள் அரண்மனையின் பின் கதவு வழியாக வெளியேறி மெதுவாகச் சுற்றிவந்து பள்ளத்தைத் தாண்டி அவைகளின அருகில் வந்தடைந்தனர்.

சென்ன பசவய்யன் ஒரு குதிரையின் மீது ஏறிக்கொண்டான். தேவம்மாஜி அவன் பின்னால் ஏறிக்கொண்டு அவன் இடுப்பை வளைத்துப் பிடித்துக் கொண்டு உட்கார்ந்தாள்; சோமன் ஒரு குதிரையிலமர்ந்து கொண்டான். கூட இருந்த இன்னொரு ஆளை இன்னொரு குதிரையின்மீது ஏறிக்கொள்ளச் சொல்லி தொட்டிலை

அவன் கையில் கொடுத்தான். தான் இன்னொரு குதிரையைக் கூட அழைத்துக் கொண்டு முன்னால் புறப்பட்டான். அவனுடைய இன்னொரு ஆள் பின்னால் மற்றொரு குதிரையின் மீதேறிக் கொண்டு ஒரு குதிரையைக்கூட அழைத்துக்கொண்டு பின்னால் வந்தான்.

எச்சரிக்கை அவசியமில்லாவிட்டாலும் இவர்கள் அலட்சியமாக இருந்து விடாமல் பல கஜ தூரம் மெதுவாகவே நடந்து சென்று பிறகு வேகமாக சம்பாஜெ காட்டை நோக்கி முன்னேறினார்கள்.

5. கதையின் முடிவு

103

அப்பங்கொளத்துக்கு காவலகாரர்களை அனுப்பிவிட்டு அரசன் பசவனிடம், "ஏய் நொண்டி, நாடகத்தின்போது அந்த படிக்கிழவன் அங்கே நின்று கொண்டு அந்தப் பார்ப்பானுக்கு உற்சாக மூட்டிக் கொண்டிருந்தான். அவனைப் பிடித்துக் கொண்டு வரச் சொல். கொஞ்சம் விசாரித்துக் கொள்ளலாம்," என்றான்.

கிழவன் ஏதோ பேசினான் என்று மட்டும் இவர்களுக்குத் தெரியும்; அவன் பேசியது இவர்களுக்கு விரோதமாக அல்ல என்று இவர்களுக்குத் தெரியாது பசவன், "அவனை அழைத்து வருவது எதற்காக அரசே, நான் விசாரித்துக் கொள்கிறேன்" என்றான்.

பசவனுக்கு, நாடகத்தில் மந்திரி வேடம் தாங்கி, தன் பெயர் பசவன் என்று பொய் சொல்லித் தன்னை அவமானப் படுத்திய அந்த நொண்டிப் பிச்சைக் காரனின் மீது கோபம். அவனைப் பிடித்து வந்து நன்றாக உதைக்க வேண்டுமென்று பசவன் நிச்சயித்துக் கொண்டான்.

இந்த இரண்டாவது வேலை உடனே நடக்கக் கூடியது. பிச்சைக் காரனைப் பிடித்துவர இரண்டு ஆட்கள் புறப்பட்டனர்.

பிச்சைக்கார நொண்டி லக்கன் நாடகம் முடிந்ததுமே தனக்கு இது போன்ற ஆபத்து ஏதோ இருக்கிறது என்பதைத் தெரிந்து கொண்டான். நாடகத்தில் சேர் என்று அவனை நான்கு பேர் அழைத்தபோது என்ன நாடகம் என்று அவனுக்குத் தெரியாது; அதில் அரசன், அவனது நொண்டி மந்திரி இவர்களைப் பரிகாசம் செய்யும் கட்டங்கள் இருப்பதாக அவனுக்குத் தெரியவே தெரியாது. "உனக்குத் தோன்றியபடி பேசு, சூர்யநாராயணன் அதையே உபயோகப்படுத்திக் கொண்டு மேலே பேசுவான். நீ என்ன பேசவேண்டு மென்பதையும் அவனே சொல்லிக் கொடுப்பான் பேரென்ன என்று கேட்டால் பசவன் என்று சொல், அவ்வளவு தான்" என்று சொல்லியிருந்தார்கள்.

அரசனின் முன்னிலையில், தூரத்திலிருந்து வந்திருக்கும் விருந்தினர்களின் முன்னிலையில் தானும் நாடகத்தில் பாத்திரம் ஏற்கும் சந்தர்ப்பம் கிடைத்ததே என்று அவனுக்கு சந்தோஷம்.

இந்த மகிழ்ச்சியில் தான் அவன் நாடகமேடைக்கு வந்தான். சூர்யநாராயணன் அரசனையும் மந்திரியையும் பரிகாசம் செய்து கொண்டிருப்பது அவனுக்கு அவ்வளவாகப் புரியவில்லை ஆனால் அரசன் கோபத்தால் கூச்சல் போட, பசவன் எழுந்திருக்க, மாசன் தங்களை நோக்கி வரத்தொடங்கியதும்தான் அவனுக்கு ஏதோ விபரீதம் நடந்துவிட்டது என்று தெரிந்தது. ஜனங்கள் கூட்டமாக மேடையை நோக்கி வர ஆரம்பித்தனர் சூர்யநாராயணனையும் அவனையும் அங்கிருந்து வெளியே அனுப்பி விட்டார்கள். அரண்மனை விஸ்தீரணத்தைத் தாண்டியதுமே அவனை ஒரு சந்தில் தள்ளி, "இப்பொழுது எங்கேயாவது ஒளிந்துகொள்ளடா, நாளைக்கு நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்," என்று கூறி விட்டுப் போய் விட்டார்கள்.

அரசன் கோபித்துக் கொண்டால் இவர்கள் யாரும் காப்பாற்ற மாட்டார்கள் என்று லக்கனுக்குத் தெரியும். இனி மடிகேரிக்கும் தனக்கும் பிராப்தம் இல்லை, மைசூருக்கு ஓடிப் போவது தான் சரி என்று நிராசையுடன் நிச்சயம் செய்து கொண்டு விடிவதற்கு முன்னரே நுசால நகரத்தை நோக்கிப் புறப்பட்டு விட்டான்.

அவனைப் பிடித்துக் கொண்டு வரச்சொல்லி பசவன் அனுப்பிய ஆட்கள் அவன் வாடிக்கையாக உட்கார்ந்திருக்கக் கூடிய இடத்தில் இல்லாததைக் கண்டு அவன் எங்கே போய்விட்டான் என்று விசாரித்தார்கள். அவர்கள் லக்கனை எதற்காகத் தேடுகிறார்கள் என்பதை அறியாத ஒரு கிழவி அவன் இந்தப் பக்கம் போய்க் கொண்டிருந்தான் என்று சொன்னாள். பிச்சைக்காரன் சில மைல்கள் தூரம் உள்ள ஒரு கிராமத்தில் மத்தியானம் பிச்சை எடுத்துக் கொண்டிருந்தான். பசவனின் ஆள் ஒருவன் யம தூதனைப் போல வந்து சேர்ந்தான். கைதினவு தீரும் வரையில் அவனை அடித்து அவன் கைகளில் கயிற்றைக் கட்டி அவனை மடிகேரிக்கு அழைத்து வந்தான்; பசவனின் எதிரில் நிற்க வைத்தான்.

பசவன் நாய்களின் லாயத்தில் மேல்விசாரணை செய்துகொண்டிருந்தபோது லக்கனை அவனெதிரில் கொண்டுவந்து நிறுத்தினார்கள். மந்திரி அந்த அப்பாவியை நன்றாகத் திட்டினான். "பிசசைச் சோறு தின்று என்னைப் பரிகாசம் செய்யும் அளவுக்குக் கொழுப்பு ஏறிவிட்டதா உனக்கு, பன்றி மகனே" என்று கர்ஜித்தான்.

பிச்சைக்காரன் வாய் திறக்கவில்லை; அவ்வளவு பயம். பசவனைச் சுற்றிலும் பத்து நாய்கள். அவன் கையால் தீனியைத் தின்று கொண்டு புலிகளைப் போல இவனைப் பார்த்துக்கொண்டிருந்தன. பசவனின் முகமும் நாய்களின் கண்களும் இவனுக்கு யமலோகத்தை நினைவூட்டின. பயத்தால் உதறும் நாக்கோடு அவன், "ஐயையோ இல்லை சாமி, 'அரசரையும் மந்திரியையும் புகழ்ந்து நாடகம் போடுகிறோம், நீ மந்திரியாக இரு, மரியாதை கொடுக்கிறோம்' என்றார்கள். வயிற்றுக்கில்லாத பிச்சைக்கார நாய், சரி தான், என்று வந்தேனுங்க. இப்படி கலாட்டா ஆய்ப் போச்சு" என்றான்.

"என் கால் நொண்டி என்று பரிகாசம் செய்வதற்காக நொண்டியாக இருக்கும் உன்னை வா என்று கூப்பிட்டால் உனக்கு எவ்வளவு திமிர் அங்கே வந்து நிற்பதற்கு?"

"ஐயோ சாமி, எனக் கென்ன தெரியுமுங்க? வாடா என்றார்கள், வந்தேன் இப்படி வினையாயிட்டுதுங்க."

"நொண்டி என்பது நீ தெரிந்து செய்ததோ இல்லையோ. பெயரென்னடா என்று கேட்டபோது பசவன் என்றாயேடா, உன் பெயர் பசவனா?"

"ஐயோ என் சாமி, என்னை பசவன் என்று எந்த அப்பனும் அம்மாவும் பேர் வைத்தவர்கள்? நானொரு அனாதை. யாரோ நொண்டி லக்கன் என்றார்கள். அதுவே பெயராகிவிட்டது. நான் பசவனாவது எங்கே?"

"பேர் பசவன் என்று ஏன் சொன்னாய்?"

"மந்திரி பசவய்யா அவர்கள் எப்படிப்பட்ட புத்திசாலி என்று புகழவேண்டும். மந்திரி என்றால் பசவய்யன், வேறு பெயருடையவர்கள் மந்திரி அல்ல என்று காண்பிக்கவேண்டும் என்று சொன்னார்கள். அவர்கள் சொல்லிக் கொடுத்தபடி சொல்லிவிட்டேன் சாமி. தொலையட்டும் என்று பெரிய மனசு பண்ணி எஜமான் என்னை விட்டுவிட வேணுமுங்க," என்றான்

"டேய், கழுதைப்பயலே, செய்யக் கூடாததைச் செய்துவிட்டு இப்பொழுது கெஞ்சினால் விட்டுவிடுவேனா? இந்தா வாங்கிக் கொள், தேவடியாள் மகனே" என்று முன்னால் வந்த பசவன் தன் கையில் வைத்திருந்த சவுக்கினால் அவன் தலை, தோள் மீது பளீர் பளீர் என்று அடித்தான். மறு கணம் அவன் 'ரூ' விட்டோ அல்லது தன் எஜமானனின் கோபத்தை அறிந்துகொண்டு

தானேயாகவோ அவன் இடது கையால் தடவிக்கொண்டிருந்த நாய் 'சங்' கென்று பாய்ந்தது; பிச்சைக் காரனின் கழுத்தைக் கடித்து இழுத்தது. அவன் கதறிக்கொண்டே கீழே விழவும் மறுபடியும் வாயைத் திறந்துகொண்டு அவன் முகத்தின் மீது விழுந்தது.

எஜமானனின் விருப்பம் என்னவென்று தெரியாமல் ஆட்கள் பேசாமல் நின்றிருந்தார்கள். நாய் பிச்சைக்காரனின் மூக்கைக் கடித்துத் துப்பியது. பசவன் அப்பொழுது, "ஏய், இங்கே வா" என்று அதைக் கூப்பிட்டான். ஆட்கள் அதன் மீது பாய்ந்து அதை இழுத்துத் தடுத்து நிறுத்தினர்.

இந்த விபத்தினால் பிச்சைக்காரன் அரை உயிராகி அழுது அலறியபடி அப்படியே படுத்துக் கிடந்தான். பசவன், "இந்தப் பிச்சைக்கார நாயை அந்தப்பக்கம் இழுத்து எறியுங்கள். இங்கே செத்துத் தொலைக்கப் போகிறான். இங்கே யார் இவனுக்கு சிரார்த்தம் செய்வார்கள்?" என்றான். ஆட்கள் லக்கனைத் தூக்கிக்கொண்டு வெளியே எடுத்துச் சென்றார்கள். காயத்திலிருந்து ரத்தம் பெருகி அவன் உடலெல்லாம் நனைந்து விட்டிருந்தது. அவன் கந்தை ஆடையெல்லாம் ரத்தத்தால் நனைந்து போயிருந்தன. வேதனை பொறுக்கமாட்டாமல் அவன் ஓ வென்று குரல் எடுத்து அழுதுகொண்டிருந்தான். அப்படியே அவனைத் தூக்கிக்கொண்டு சென்று அந்தக் கட்டிடத்து சுற்றுச் சுவருக்கு வெளியே அவனை எறிந்துவிட்டு ஆட்கள் திரும்பி வந்தனர்.

பசவன் செய்தது அநியாயம் என்றோ தங்கள் நடத்தை குரூரமானதென்றோ அவர்களுக்குத் தோன்றவில்லை.

வழியில் அழுதுகொண்டே உருண்டு கொண்டிருந்த பிச்சைக்காரனை யாரோ கண்டார்கள்; அருகில் வந்து உட்கார்ந்து கொண்டு, "ஏண்டா, என்ன ஆயிற்று" என்று கேட்டார். பிச்சைக்காரன், "மந்திரி பசவய்ய என் மீது நாயை ஏவினார்; அது என் மூக்கைக் கடித்துவிட்டது", என்றான்.

வந்தவன் அபரம்பர சுவாமி அவன் பிச்சைக்காரனை எழுப்பி நிற்க வைத்து, "அந்த வீடு வரையிலும் வா, முகத்தை அலம்பிக் கொள்வாயாம்," என்றான்.

பிச்சைக் காரனின் முகத்தைக் கண்டு சுவாமிக்கு கருணையை விட பயமே அதிகமாகத் தோன்றியது. நாய் மூக்கின் எலும்பை விட்டுவிட்டு அதன் நுனியை, மெத்தென்ற சதைப் பகுதியை முழுதும் கடித்து விட்டிருந்தது.

சுவாமி பிச்சைக்காரனைப் பக்கத்து வீடுவரையிலும் அழைத்துச் சென்று வீட்டுக்காரர்களை அழைத்து, "சிறிது தண்ணீர் கொடுங்கள்" என்று கேட்டான்; வீட்டுக்காரர்கள் கொடுத்த செம்பு தண்ணீரைத் தன் கையில் வாங்கிக்கொண்டு பிச்சைக்காரனின் காயத்தை மெதுவாகத் துடைத்தான். "சிறிது குங்குமம் கொடுக்கிறீர்களா?" என்ற அவன் வேண்டுகோளுக்கிணங்க வீட்டார் பிடி குங்குமம் கொண்டுவந்து கொடுத்தனர். சுவாமி அதை காயத்தில் வைத்து அப்பினான். தனது வஸ்திரத்தின் ஓரத்தை நீளமாகக் கிழித்து காயத்தின் மீது நன்றாகக் கட்டுப் போட்டான். "போபண்ணா மந்திரியிடம் போய் நடந்ததைச் சொல்லி சகாயம் கேள், போ" என்று பிச்சைக்காரனிடம் சொன்னான். பிச்சைக்காரன் பொறுக்க முடியாத வேதனையை எப்படியோ பொறுத்துக் கொண்டு "ஐயையோ, அப்பப்பா" என்று கத்திக்கொண்டே போபண்ணாவின் வீட்டை நோக்கிப் புறப்பட்டான்.

சுவாமி செம்பை வீட்டுக்காரர்களிடம் கொடுத்துவிட்டு, "குடகு நாட்டுமக்கள் வேட்டைக்கு மிருகங்களாகி விட்டனர்" என்று உள்ளுக்குள் கருணை பொங்க தன் வழியே நடந்து சென்றான்.

104

தான்னை அவமானத்திற்குள்ளாக்கிய பிச்சைக்காரனைப் பழிவாங்கி தன் சுயகாரியத்தைப் பூர்த்தி செய்துகொண்ட பின் பசவன் தன் எஜமானனின் கட்டளையான உத்தயயதக்கனை விசாரித்துக்கொள்ள வேண்டிய வேலையில் கவனத்தைத் திருப்பினான்.

இப்படிப்பட்ட வேலைகளென்றே இவனிடம் ஊரில் நூறு பேருக்கு மேலாக காலிகள் இருந்தனர். அவர்களில் நான்கு பேர் தலைவர்கள். ஒவ்வொருவனின் கீழும் இருபத்தைந்து முப்பது பேர் துணைவர்கள்.

இந்தத் தலைவர்களில் யாருக்காவது பசவன் சொல்லி அனுப்பினானென்றால் ஏதோ பெரிய காரியம் ஒன்று நடக்கப் போகிறது என்று அரண்மனை ஆட்களுக்குத் தெரிந்துவிடும். இந்த விஷயம் தெரிந்ததும் ஊரில் எந்தப் புண்ணியவானுக்கு என்ன கேடுகாலமோ என்று இவர்கள் பயப்படுவார்கள். இன்று பசவன்

காலிகள் தலைவன் ஒருவனுக்குச் சொல்லி அனுப்பியதும் மாசன் உபாயமாக விஷயம் என்னவென்று தெரிந்து கொண்டான்.

அரண்மனையின் பல வகை சேவகர்களிலும் அவனுடைய ஆட்கள் ஒருவர் உண்டு. பசவன் காலிகள் தலைவனுக்குச் சொல்லி அனுப்பியதை அவன் இந்த ஆட்களின் மூலமாகத் தெரிந்து கொண்டான்.

"அரண்மனையிலிருந்து மரியாதைப் படி பெறும் உத்தய்ய தக்கன் மந்திரி போபண்ணாவின் வீட்டில் இறங்கிக் கொண்டிருக்கிறான். அவன் நாடகத்தின்போது மன்னருக்கு எதிராகப் பேசிய நடிகர்களைத் தூண்டிவிட்டு உற்சாக மூட்டினான். அவன் எங்கேயாவது போய்க்கொண்டிருக்கும் பொழுது உனது ஆட்கள் அவனைத் தாக்கி முகம், முதுகு இவைகளின் மீது நன்றாக அடிககட்டும். உயிருக்கு ஆபத்து வேண்டாம். நன்றாக செம்மையாக உதைக்கட்டும்" என்று காலிகள் தலைவனுக்கு உத்தரவிடப்பட்டது

இந்தச் சங்கதி தெரிந்ததும் மாசய்யன் நாராயண தீட்சிதருக்கு அதைத் தெரிவித்தான். தீட்சிதன் இந்த விஷயம் ஒன்றையும் தெரிவிக்காமல் தனது ஆட்களில் ஒருவனை உத்தய்ய தக்கனுக்குக் காவலாக நியமித்தான். "தக்கர் எங்கேயாவது ஒருவரே போய்க் கொண்டிருந்தால் நீ சிறிது பின்னாலேயே சென்று கொண்டிரு. யாராவது அவரை அடிக்க வந்தால் நீ அவரது உதவிக்குப் போ," என்று சொல்லியிருந்தான்.

தக்கனிடமே இந்த எச்சரிக்கையைச் செய்ய இவர்கள் யாருக்கும் இஷ்டமில்லை. தம்முடைய கூட்டம் ஒன்று இருக்கிறது, அதன் சங்கேத வார்த்தைகள் இரண்டு உண்டு என்பதை வெளியிட அது சந்தர்ப்பமல்ல; தங்கள் காரியத்தைச் சாதிக்க வேண்டும், ஆனால் தாங்கள் ஒரு கூட்டம் இருப்பதை குட்டாகவே வைத்துக்கொண்டிருக்க வேண்டும்.

"காவேரி மக்கள்" இயக்கம் தற்சமயத்துக்கு இதைவிட அதிகமாக முன்னேற முடியவில்லை. தர்மத்தின் பாதையை விட்டு விடாதே என்று கிழ தீட்சிதர் வீரண்ணாவின் கைகளைக் கட்டியிருந்தார். படைத தலைவன் உத்தய்யனுக்கு ஆபத்து வரக் கூடாது என்பதற்காக சுவாமி இன்னும் அதிக ஜாக்கிரதையோடு இருந்தான் உத்தய்யன் எல்லைப்புறத்தில். இயக்கம் அதிகமாக என்ன செய்ய முடியும்?

பசவனின் ஆக்ஞையைப் பெற்றுக்கொண்ட காலிகள் தலைவன் அதை நிறைவேற்றுவதில் அநாவசியமான காலதாமதம் செய்ய

வில்லை. அன்று மாலை தக்கன் கடை வீதிக்குச் சென்று கொண்டிருந்த பொழுது ஜனங்கள் குறைவாக இருந்த இடத்தில் எவனோ ஒருவன் ஒரு மூலையில் நின்றுகொண்டு, "அட, புலி மீசையைப் பாருடா!" என்று எகத்தாளமான குரலில் கூறினான்.

தக்கன், "யாருடாது, மீசையைக் கேலி செய்வது?" என்று அவன் பக்கம் திரும்பினான்

அந்த மனிதன், "ஏன் தாத்தா, நான் தான்" என்றான்

தக்கன், "என்ன சொன்னாய் மீசையைப் பற்றி?"

"என்னமோ சொல்லினேன். உங்களுக்கு ஒருவருக்கென்ன அதைப் பற்றி?"

"என்னைப் பார்த்து தானே சொன்னாய்?"

"ஓஹோ! கிழவரே, ஊருக்குள் உங்களுக்கு ஒருவருக்குத்தான் மீசை இருக்கிறதோ?"

"ஊரில் எவ்வளவோ மீசை இருக்கலாம். இங்கே புலி மீசை வேறு எங்கே கண்டாய்?"

"உங்கள் மீசையைத்தான் சொன்னேன். நன்றாக இருக்கிறது என்று சொல்லக்கூடாதா?"

"சொல்லக்கூடாதுடா உங்கப்பன் மவனே! மயிர் நரைத்தாலும் கோபம் நரைக்கவில்லைடா எனக்கு. அதிகப் பிரசங்கித்தனம் செய்தால் முதுகுத் தோல் பிய்ந்து விடும்!"

"அடேங்கப்பா, கிழவரே, முதுகுத்தோலை உரிச்சுடுவிங்களா? மீசை பெரிசா வைச்சுக்கிட்டா நீங்க என்ன ராஜா ஆயிட்டிங்களா?"

இவர்களிருவரிடையே இவ்வளவு பேச்சு நடப்பதற்குள்ளாக இங்கிருந்து ஒருவர் அங்கிருந்து ஒருவராக ஏழெட்டு பேர் கூடி விட்டார்கள். சுற்றிலும் நின்று கொண்டார்கள். கிழவனின் பேச்சுக்கு ஆகா என்றும் ஓஹோ என்றும் ஒருவன் கனைப்பதும் ஒருவன் கத்துவதுமாக நையாண்டி செய்தார்கள். எல்லோரும் தெருச்சண்டையை ரசிப்பவர்களானார்கள். நாராயண தீட்சிதனின் ஆளும் கூட்டத்தில் ஒருவனாக ஒரு மூலையில நின்று கொண்டு நடப்பதை எல்லாம் பார்த்துக் கொண்டிருந்தான்.

தக்கன், "போக்கிரிப் பசங்களின் முதுகுத்தோலை உரிப்பதற்கு ராஜா வரவேணுமாடா என் கண்ணு! திமிர் ஏறிவிட்டதா?" என்றான்.

போக்கிரிகளில் ஒருவன், "யாருடா இந்தக் கிழட்டுப் பயல்? ரொம்பப் பேசறானே? போடுரெண்டு. புத்தி வரட்டும்," என்றான்.

தக்கன், "யாரடாவன். ரெண்டு போடறவன்? போடு பார்க்லாம்" என்று கூறியபடி தன் கைத்தடியை உயர்த்தினான். அவன் அப்படிச் செய்தது தான் தாமதம், கும்பலில் யாரோ ஒருவன் "ஐயோ" என்று கத்தினான்; இன்னொருவன், "டேய், கிழவனைப் பிடியுங்கடா" என்றான். இரண்டு பேர் கிழவனின் மீது பாய்ந்தார்கள். ஒருவன் அவனது தோளைப் பிடித்துக் கொண்டான். இன்னொருவன் பின்னாலிருந்து அவன் இடுப்பைச் சுற்றித் தன் கைகளை வளைத்துப் பிடித்துக் கொண்டான். கிழவனின் கையிலிருந்த தடியைப் பிடுங்கி கொண்டு அவன் தோள் மீது அடிக்க முயற்சித்தான் முதலில் கலகத்தை ஆரம்பித்தவன்.

அவனுக்குப் பின்னால் நின்று கொண்டிருந்த தீட்சிதனின் ஆள் தடியைப் பறித்துக் கொண்டான். "ஏம்ப்பா கிழவரை அடிக்கிறீர்கள். அவர் பாட்டுக்குப் போகட்டும் விட்டுவிடுங்கள்" என்றான்.

போக்கிரி தன் காரியத்திற்கு இப்படி ஒரு இடைஞ்சலை எதிர்பார்த்திருக்கவில்லை. அவன் புதியவனின் பக்கம் திரும்பி, "இவன் யாருடா முளைச்சான். போடுங்கடா ரெண்டு இவன் மேலும்" என்றான். தக்கனைச் சூழ்ந்திருந்தவர்களில் பலர் இங்கே திரும்பிப் பார்த்தனர். தீட்சிதனின் ஆள் கைத்தடியை வேகமாகச் சுழற்றியபடி "காவேரி மக்கள், காவேரி மக்கள்" என்று உரக்கக் கத்தினான். போக்கிரிகள் அவன் மீது பாய்ந்தார்கள். தடியைச் சுழற்றிக்கொண்டே அவன் இன்னும் உரக்க அதே வார்த்தைகளைத் திருப்பிச் சொன்னான். ஏதோ ஒரு வீட்டிலிருந்து "மக்களின் தாய்" என்று குரல் வந்தது. அதே கணத்தில் சிறிது தூரத்தில் ஒருவன் கையில் ஒரு தொண்ணையைப் பிடித்துக் கொண்டு வருவது தெரிந்தது. அவனும் "காவேரி மக்கள்" என்று கத்தினான். ஓரிரண்டு நிமிஷங்களில் "மக்களின் தாய், மக்களின் தாய்" என்று கத்திக் கொண்டு நான்கு பக்கங்களிருந்தும் எட்டுப் பத்துப் பேர் கையில் தடிகளை ஏந்திக்கொண்டு வந்து விட்டார்கள்.

இவ்வளவு பேரைச் சமாளிக்கவேண்டியிருக்குமென்று காலிகள் நினைத்திருக்கவில்லை. அவர்கள் அங்கிருந்து ஓட்டம் எடுத்தனர். உத்தய்ய தக்கனைக் காப்பாற்றியவர்கள் அவனைச் சுற்றிலும் நின்றிருந்தார்கள். தீட்சிதனின் ஆள், "எந்தப் பக்கம் போக வேண்டும், பாட்டா? வாருங்கள், இருவர் துணைக்கு வருகிறோம்" என்றான்.

தக்கன், "இது யாரப்பா இவர்கள், வலுச்சண்டைக்கு வந்து மேலே விழுந்தார்கள்?" என்றான்

தீட்சிதனின் ஆள், "யாரோ தெருப் போக்கிரிகள். கலகம் செய்தார்களென்பதற்காகவே நான் வந்தேன். என் சகாக்களையும் அழைத்தேன்" என்றான்.

தக்கன், "கடவுளைப் போல வந்து கடவுளைப் போலக் காப்பாற்றினாய் அப்பாஜி; நீ யார்?" என்றான்.

"நான் ஒன்றும் அப்படிப் பெரியவனல்ல. விடுங்கள். நான் கத்தினேன், இவர்கள் ஓடி வந்தார்கள். நீங்கள் எங்கே போக வேண்டும் சொல்லுங்கள். கூட இரண்டு பேர் வருகிறோம்"

"உன் வேலையைவிட்டு என்னோடு ஏன் வருகிறாய்? எனக்கு அப்படி ஒன்றும் வேலை இல்லை. நீங்கள் பாட்டுக்கு நீங்கள் போங்கள். நான் போபண்ணா மந்திரியின் வீட்டுக்குப் போகிறேன்."

"அப்படியா? எனக்கும் அங்கே கொஞ்சம் வேலை இருக்கிறது. வாங்க, போகலாம். துணையாக வருகிறேன்."

"ஊர் நடுவே துணை எதற்கப்பா? நான் போகிறேன் விடு."

"ஊர் நடுவே இவன் சண்டைக்கு இழுக்கவில்லையா? இன்னொருவன் அப்படிச் செய்தால்? எனக்கொன்றும் வேலையில்லை. துணை வருகிறேன், வாருங்கள்."

"அதுவும் சரித்தான் அப்பாஜி. காட்டில் போய்க்கொண்டிருக்கும் பொழுதாவது புலி விலகி வழிவிடும். ஊரில் போக்கிரி சண்டைக் கிழுக்கிறான். ஊர் காட்டைவிட மோசமாகப் போய்விட்டது."

என்று கூறி கிழவன் தீட்சிதனின் ஆளுடன் போபண்ணாவின் வீட்டிற்குப் புறப்பட்டான். அங்குக் குழுமியிருந்த காவேரி மக்கள் அவனுக்குக் கைகூப்பி விட்டு அங்கிருந்து மறைந்தனர்.

தக்கன் தன் விடுதியை அடைந்ததும் தன்னைக் காப்பாற்றிய மனிதனுக்கு இரண்டு வார்த்தைகள் நன்றி சொல்வதற்காகத் திரும்பிப் பார்த்தால் அவனைக் காணவில்லை. கிழவன் உள்ளே சென்று நடந்தவைகளையெல்லாம் வீட்டாரிடம் தெரிவித்தான்.

105

அப்பங்கொளத்திலிருந்து புறப்பட்டு சென்னபசவய்யன் சோமனிடம், "சம்பாஜெக்குப் போகவேண்டும், சோமா" என்றான்.

சோமன், சென்னபசவன், துக்ரன், உக்ரி இவர்கள் சில மைல்கள் வேகமாகச் சென்றனர். குழந்தை விழித்துக் கொண்டு அழுதது. சென்னபசவய்யன் குதிரையை நிறுத்தினான் தாய் குழந்தையைத் தூக்கிப் பாலூட்டி சமாதானம் செய்து, படுக்கையைச் சரிப்படுத்தி மீண்டும் அதைத் தொட்டிலில் விட்டாள்.

குதிரையின் ஓட்டத்தினால் குழந்தைக்குத் தூக்கிப்போடாமலிருப்பதற்காக தொட்டிலில் குறுக்கே ஒரு பட்டை கட்டியிருந்தார்கள். குழந்தையைத் தொட்டிலில் விட்டுவிட்டு தேவம்மாஜி துக்ரனிடம் பட்டையைச் சரியாகக் கட்டும்படி சொன்னாள். "சரியம்மா" என்று அவன் பட்டையைக் கட்டினான்.

பௌர்ணமி கழிந்து இரண்டு நாட்கள் ஆகியிருந்தன. நிலவு, அடர்த்தியான மரங்களின் இலைகளினூடே பாய்ந்து பாதி வெளிச்சம், பாதி இருளை உண்டாக்கியிருந்தது சோமனுக்கு இந்தப் பகுதி வழிகளெல்லாம் நன்கு தெரியும். கண்ணைக் கட்டி விட்டால் கூட தவறாது போய்ச் சேர வேண்டிய இடத்தைச் சேர்ந்துவிடுவான் என்னும் அளவுக்கு அவனுக்கு அந்தப் பிரதேசம் பழகியிருந்தது.

வழி பெரும்பாலும் மலைப் பிரதேசமாக இருந்தது. சில இடங்களில் பள்ளம்; அங்கே சிறு வாய்க்கால்கள் இருக்கும். குதிரைகள் அவைகளைச் சுலபமாகத் தாண்டிவிடும். இரண்டு வாய்க்கால்கள் கொஞ்சம் அகலம், ஆழம். அங்கே சோமன், "இந்தப் பள்ளத்தைத் தாண்டவேண்டும் எஜமான். என் குதிரையும் தாண்டும். உங்கள் குதிரையும் தாண்டும். கெட்டியாகப் பிடித்துக்கொண்டு உட்கார்ந்து கொள்ளுங்கள்" என்றான்.

ஒரு குதிரை வாய்க்காலைத் தாண்டியதும் மற்ற குதிரைகளும் அதைப் பின்பற்றின. எல்லோரும் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தனர். பிரயாணம் தொடர்ந்தது.

வழியில் அங்கங்கே ஒன்றோ இரண்டோ குடிசைகள் இருந்தன. அவைகளில் படுத்திருக்கும் ஜனங்கள் இரவில் பிரயாணிகளுக்கு உதவி வேண்டுமென்றால் செய்யக்கூடிய காவல்காரர்கள். இரண்டு மூன்று இடங்களில் இந்த ஆட்கள் "யாரப்பா குதிரை?" என்று கேட்டார்கள். சோமன், "அரண்மனை ஆட்களப்பா. சம்பாஜெக்குப் போகிறோம்" என்றான். காவல்காரர்கள், "கூட வரவா?" என்று கேட்டார்கள். சோமன், "வேண்டாம்ப்பா, நாங்களே நாலு பேர் இருக்கிறோம்" என்றான்.

காவல்காரர்கள் மற்றபடி எதுவும் கேட்கவில்லை. யாருமே வெளியே வந்து பார்க்கவில்லை. இந்த மாதிரி இரவுப் பயணங்கள் இவர்களுக் கெல்லாம் வழக்கம். வழியில் பயமும் இல்லை. தப்பித் தவறி எப்பொழுதாவது வருஷத்தில் ஒருமுறை எந்தப் பிரயாணிக்காவது ஏதாவது தொல்லை ஏற்பட்டால் அந்த இடம் எந்தக் கிராம எல்லையில் இருக்கிறதோ விசாரித்து அந்தக் கிராமத்து மணியகாரரும் சிப்பந்திகளும் தொல்லைக்குக் காரணமானவர்களை அல்லது போக்கிரிகளைப் பிடிக்கவேண்டுமென்று உத்தரவு பிறப்பிப்பார்கள். அப்படிப் பிடிக்க முடியாமற் போனால் பிரயாணிகளுக்கு ஏற்பட்ட நஷ்டத்தை கிராமத்தார் ஈடு கட்ட வேண்டும்.

இந்தக் கட்டுப்பாட்டின் பலனாக போக்கிரிகளும், கலககாரர்களும் கூட தங்கள் போக்கிரித்தனம் முதலியவகளைக் காட்ட விரும்பினால் குடகுக்கு வெளியே சென்றுதான் தங்கள் கைவரிசையைக் காட்டுவார்கள்; நாட்டுக்குள் யாருக்கும் கெடுதல் செய்ய மாட்டார்கள்.

வழியில் காவல் காரர்கள் இப்படிக் கேட்பார்கள் என்பது சோமன் எதிர்பார்த்தது தான். அநேகமாக அவர்களுக்கு இவனைத் தெரியும். சம்பாஜெ அருகில் மட்டும் எல்லைப்புறக் காவல் காரர்கள் பிரயாணிகளை நிறுத்தி யாரென்று பார்த்துவிட்டே அனுப்புவது வழக்கம். அங்கே எப்படியாவது உபாயமாகத் தப்பிவிட்டால் இன்னும் சில மைல்களில் எல்லையைத் தாண்டி விடலாம் சோமன் சென்ன பசவய்யனிடம், "சம்பாஜே வந்ததும் நான் காவல் இல்லத்துக்கு முன்னால் போய் நிற்கிறேன், பிரபு. உங்கள் குதிரை கீழ்ப்பாதையில் போகட்டும். உக்ரி வழி காட்டுவான். காவல்காரர்கள் கூப்பிட்டால் நான் பதில் சொல்லிக்கொள்கிறேன். நீங்கள் மெதுவாக நழுவிவிடுங்கள். நான் அவர்களுக்குப் பதில சொல்லிவிட்டு வந்து உங்களுடன் சேர்ந்து கொள்கிறேன்," என்றான். சென்னபசவய்யன், "அப்படியே செய்வோம்" என்றான்.

சம்பாஜெ காவல்மனை வந்தது. கீழ்ப்பாதையில் உக்கிரியின் குதிரை முன்னதாகவும், சென்னபசவய்யனின் குதிரை மத்தியிலும், துக்ரனின் குதிரை பின்னாலும் ஆக அவர்கள் சென்றனர். சோமன் காவல்மனைக்கு எதிராக உள்ள பாதையில் வந்தான்.

காவல்மனையின் வாசலில் உட்கார்ந்து தூங்கி வழிந்துகொண்டிருந்த காவல்காரன் சோமனைப் பார்ப்பதற்கு முன்னால் கீழே

சரிவில் சென்று கொண்டிருந்த குதிரைகளைக் கண்டான்; "யாரப்பா அது?" என்று கூறினான். அவன் தன்னைத்தான் கேட்பதுபோல பாவித்துக் கொண்டு சோமன் முன்னால் வந்து, "நான் தானப்பா, அரண்மனை ஆள்," என்றான்.

"சரிவில் போய்க் கொண்டிருப்பது யார்?" என்று கேட்டுக் கொண்டே காவல்காரன், "இந்தாங்கப்பா, நீங்க யாரு, சொல்லி விட்டுப் போங்க". என்று கத்தினான். அங்கிருந்து பதில் வரவில்லை. காவல்காரன், "துணை வேணுமா?" என்று கேட்டான். பதில் வரவில்லை. காவல்காரன், "அடடே, இவர்கள் யாரோ திருட்டுத்தனமாகப் போகிறார்கள் அப்பா. நாயக்கரைக் கூப்பிட வேண்டும்" என்றான்.

சோமன், "நீ கூப்பிட்டது அவர்கள் காதில் விழுந்ததோ இல்லையோ. திருட்டுத் தனமாக யார் குதிரையேறிப் போகவேண்டும்?" என்றான்.

"பின் அவர்கள் யாரென்று தெரியவில்லையே? நாளைக்குக் கேட்டால் சொல்லவேண்டுமே?"

"நான் போய்ப் பார்த்து வரட்டுமா?"

"அவ்வளவு செய்யுங்க புண்ணியவான்; இல்லாவிட்டால் எனக்குத் தொல்லை. நானும் கூட வருகிறேன்."

சோமன் குதிரையை முன்னால் செலுத்தினான். காவல்காரன் அவன் பின்னால் வந்தான். சரிவுப் பாதை நூறு கஜங்களுக்குப் பிறகு பெரிய பாதைபோடு வந்து சேருகிறது. சோமன் குதிரையைச் சிறிது ஓட்டி "யாரது குதிரை? துரத்திக்கொண்டு வருகிறேன், நிற்காதே" என்று கத்திச் சொன்னான். சென்னபசவய்யன் இதன் பொருளைப் புரிந்து கொண்டான். "எல்லையைத் தாண்டும் வரையில் குதிரை ஓடட்டும். நிற்காதே" என்று அவன் துக்ரனுக்குக் கட்டளையிட்டான். காவல்காரனிடம் சிக்கிவிடக் கூடாது என்பதனால் அவர்கள் வேகமாகக் குதிரைகளை ஓட்டி ஒரு நாழிகைக்குள்ளாக எல்லையைத் தாண்டிச் சென்று விட்டனர்.

இங்கே சோமன், "நான் சொன்னதே அவர்களுக்குக் கேட்கவில்லையே; பேசவே இல்லை; இரு, நீ ஏன் ஓடுகிறாய்? நான் கேட்டுக்கொண்டு வருகிறேன்" என்று கூறி அவர்கள் பின்னால் குதிரையை ஓட்டிக்கொண்டு சென்றான் வருகிறேன் என்று அவன் கூறியது காவல்காரனின் சமாதானத்துக்காக என்று சொல்லவேண்டிய தேவையில்லை. இவர்கள் யாரோ மோசம்

செய்துவிட்டார்கள் என்று காவல்காரன் நாயக்கனிடம் சொல்லி, நாயக்கன் குதிரையை எடுத்துக்கொண்டு தங்களைப் பின் தொடர்ந்து வந்தல்லவா நிறுத்தவேண்டும். அதற்கு வெகு நேரம் ஆகும். அதற்குள்ளாகத் தான் எல்லையைத் தாண்டிவிட லாம், அதன் பிறகு பயமில்லை என்பது சோமனின் எண்ணம். சென்னபசவய்யன், துக்ரன், உக்ரி இவர்கள் எல்லையைத் தாண்டி குதிரையை நிறுத்திய சில நிமிஷங்களுக்குள்ளாக சோமனும் குதிரையை ஓட்டிக்கொண்டு அவர்களிடம் வந்துசேர்ந்தான்.

சென்ன பசவய்யன் அவனை, "யாரும் துரத்திக்கொண்டு வர வில்லையே?" என்று கேட்டான்.

சோமன், "யார் துரத்திக்கொண்டு வருவது? குதிரையும் ஜேணமும் கிடைக்கவேண்டாமா? இன்னும் இரண்டு நடை சென்று கண் மறைவாகிவிட்டால் அவர்கள் இங்கே வந்து நம் மைத் தொட முடியாது."

இதற்குள்ளாக கோழி கூவுகிற நேரம் தாண்டிவிட்டது. நில வின் வெளிச்சத்தோடு அருணோதயமும் சேர்ந்து இதோ உதய மாகிவிடப் போகிறது என்று காண்பித்துக் கொண்டிருந்தது.

சோமனின் பேச்சு முடிந்ததும் துக்ரன் தன் குதிரையின்மேல் உட்கார்ந்தபடியே, "ஐயோ, இதென்னப்பா" என்று அலறினான்; தன் எதிரில் இருந்த தொட்டிலை விடாமல் பார்த்துக்கொண்டே இருந்தான்.

அவனது அலறலைக் கேட்ட மற்றவர்கள் யாரோ துரத்திக் கொண்டு வருகிறார்களோ என நினைத்து தாங்கள் வந்த வழியே திரும்பிப் பார்த்தனர்; யாரையும் காணவில்லை. ஏன் அவன் அப்படி அலறினான் என்று பார்ப்பதற்காக அவன் பக்கம் திரும்பி னர். "தொட்டிலில் குழந்தையைக் காணோமே" என்று அவன் கதறிக் கொண்டிருந்தான்.

106

துக்ரனின் கதறல் எல்லோர் உள்ளங்களிலும் ஈட்டியைப் போலப் பாய்ந்தது. தேவம்மாஜி ஐயோ என்று கதறி கணவ னின் இடுப்பை விட்டு விட்டு கீழே குதிக்கப் போனவள் கால் இடறி விழுந்துவிட்டாள்.

அதற்குள்ளாக துக்ரன், சோமன், உக்ரி தமது குதிரைகளி னின்றும் இறங்கி விட்டிருந்தனர். சோமன், "மெதுவாக அம்மா, மெதுவாக" என்று தேவம்மாஜியின் அருகே வந்தான். சென்ன பசவய்யன் கீழே இறங்கி மனைவியை எழுப்பி நிற்கவைத்தான். துக்ரனின் பக்கம் திரும்பி, "என்னடா அது இப்படிச் சொல்லு கிறாய்? என்ன செய்தாய் குழந்தையை?" என்றான்.

துக்ரன், "ஐயோ, நான் என்ன செய்தேன் பிரபு? பள்ளம் தாண்டி வரும்போதோ ஓட்டத்திலோ எங்கோ கீழே விழுந்து விட்டிருக்கவேண்டும்" என்றான்.

"கீழே எப்படிடா விழும்? பட்டை கட்டியிருக்கிறோம்!" என்று சொல்லிக் கொண்டே மற்றவர்கள் துக்ரனின் குதிரை அருகில் வந்து தொட்டிலைப் பார்த்தனர். பட்டையை ஒரு பக்கத்தி லிருந்து இன்னொரு பக்கத்திற்கு இழுத்துக் கட்டியிருக்கவில்லை. ஒரே பக்கத்தில் இரண்டு முறை கட்டியிருந்தது.

நடந்தது என்னவென்றால், தேவம்மாஜி, குழந்தைக்குப் பால் கொடுத்துவிட்டு அதைத் தொட்டிலில் கிடத்திய பின்னர், பட்டை யைக் கட்டச்சொல்லி துக்ரனின் கையில் கொடுத்திருக்கிறாள். துக்ரன் அஜாக்கிரதையாக ஒரே பக்கத்தில் இரண்டு முறை கட்டிவிட்டான். குதிரையின் ஓட்டத்தின்போது குழந்தை எம்பி விழுந்து விடாமலிருப்பதற்காக உபயோகப்படவேண்டிய பட்டை உபயோகமில்லாமலே கிடந்தது.

பாலூட்டியது பிரயாணத்தின் தொடக்கத்தில். அதற்குப் பிறகு பல மைல்கள் வந்தாய் விட்டது. வழியில் எங்கோ குழந்தை துள்ளி விழுந்திருக்கிறது. இதை எல்லோரும் புரிந்துகொண்டனர். சென்ன பசவன், "ஐயோ, பன்றிப் பயலே, வீட்டை நாசமாக்கி விட்டாயேடா" என்று துக்ரனின் கன்னத்தில் ஓங்கி அறைந்தான்.

துக்ரன், "சாமி சத்தியமாக தவறு என்னுடையதல்ல. தெரி யாமல் நடந்துவிட்டது," என்று முறையிட்டான்.

"ஏண்டா தெரியக்கூடாது?" என்று சென்ன பசவய்யன் மறு படியும் அவனை அடிக்கக் கையை ஓங்கியபோது தேவம்மாஜி அவனைத் தடுத்தாள்.

"நம் தலைவிதிக்கு யார் என்ன செய்ய முடியும்? வாருங்கள், திரும்பிப் போவோம். குழந்தை எங்கே விழுந்திருக்கிறதோ பார்த்து எடுத்துக் கொள்வோம். தாமதமானால் புலியோ கரியோ தின்றுவிடப் போகிறது," என்றாள்.

என்ன செய்வதென்று யாருக்கும் தெரியவில்லை. தாயாகப் பட்டவளுக்கு குழந்தையைக் காப்பாற்றவேண்டு மென்ற ஒரே யோசனைதான். மற்றவர்கள் அவ்வளவு சுலபமாகப் பின் திரும்புவதற்கு ஒத்துக்கொள்ளக் கூடியவர்களல்ல. சம்பாஜெ காவல்காரர்கள் பின்னால் வந்து கொண்டே இருப்பார்கள். எல்லைக்கு வெளியே இருந்தாலும் அவர்கள் இவர்களைப் பலவந்தமாகப் பிடித்துக் கொள்ளக்கூடும். இனி எல்லைக்குள்ளாகவே இருந்தால் விட்டு விடுவார்களா? பிடித்த பிறகு எல்லோருக்கும் ஒரே கதிதான்: கழுமரம். குழந்தையாவது பிழைத்துக் கொள்ளக் கூடும் என்ற நம்பிக்கைக்கும் ஆதாரம் இல்லை. நரியும் புலியும் தொடாமல் விட்டிருந்தாலும், ஜனங்களின் கைகளில் சிக்கினாலும் அது அரசனின் கைக்குக் கிடைத்த பிறகு இந்த ஐந்து பேரின் ஆயுளோடு அதன் ஆயுளும் முடிவடைந்துவிடும். அப்படியென்றால் அவர்கள் செய்யவேண்டியது என்ன? குழந்தையைக் கொண்டுவரும் வரையில் தான் ஒரு அடி முன்னால் எடுத்து வைக்க முடியாது என்று தேவம்மாஜி பிடிவாதம் செய்தாள். சுள்யத்துக்காவது போய் அங்குள்ள அதிகாரிகளிடம் தஞ்சம் புகவேண்டும்; அப்படிச் செய்யாவிட்டால் தாங்களும் இல்லை, குழந்தையும் இல்லை என்று சென்ன பசவய்யனும் சோமனும் திருப்பித் திருப்பி விவரித்துச் சொன்ன பிறகு கடைசியாக எல்லோரும் ஒரு முடிவுக்கு வந்தார்கள். சோமன் தாங்கள் வந்த வழியில் குழந்தையைத் தேடிக்கொண்டு திரும்பிப் போகவேண்டும் குதிரை பள்ளத்தைத் தாண்டிய இடம், வேகமாக ஓடிய இடம் அங்கெல்லாம் குழந்தை அகப்படுமா என்று பார்க்க வேண்டும். வழியில் குழந்தையைக் கண்ட யாராவது அதை எடுத்து வைத்துக் கொண்டிருக்கலாம்; உபாயமாக விசாரித்து மகவை வாங்கிக்கொண்டு சுள்யத்திற்கு வரவேண்டும்.

விஷயம் இவ்வளவு சுலபமாக முடிவடைந்தது தேவம்மாஜியின் மனச் சமாதானத்திற்காக; அவ்வளவுதான். வாயால் சொல்லாவிட்டாலும் சென்ன பசவய்யன், சோமன் இருவரும் நிச்சயமாகத் தெரிந்து கொண்டார்கள், குழந்தைக்கும் சோமனுக்கும் சாவுதான் கதி என்பதை. சென்ன பசவய்யனுக்கு வேறொரு எண்ணம் இருந்தது. கூடிய சீக்கிரம் மங்களூர் கலெக்டரைச் சென்று கண்டு பிரிட்டிஷாரின் ஆசிரயத்தை வேண்டி, அவசியமான ஒரு பாதுகாப்புப் படையுடன் திரும்பி வந்து குழந்தையைத் தேடலாம் என்பது அது. சோமனின் எண்ணம் இப்படி இருந்தது:

முடியுமானால் குழந்தையைக் காப்பாற்றுவது; முடியவில்லை, தலை எழுத்து; தான் என்னமோ இனி பிழைக்கப் போவதில்லை, தனது எஜமானரும் அவரது ராணியும் சுகமாக இருந்தால் போதும் என்பது.

துக்ரன் சோமனின் மனத்தைத் தெரிந்து கொண்டான். தன் தவறுக்காக அவன் ஏன் சாகவேண்டும் என நினைத்து அவன், "சோமா, பிரபுவோடு நீ போ. குழந்தையை நான் தேடிக் கொண்டு வருகிறேன்," என்றான். சோமன், "நீயானால் என்ன, நானானால் என்ன? சுள்யத்திற்கு வந்து சேருகிறேன், நீ போ" என்றான்.

தேவம்மாஜிக்கு சோமன் போவது தான் சம்மதம். சென்ன பசவய்யனுக்கும் அதே எண்ணம் தான். மொத்தத்தில் சோமன் கெட்டிக்காரன். பேச்சிலும் காரியத்திலும் சாதுரியம் நிறைந்தவன்.

சென்ன பசவய்யன், தேவம்மாஜி, துக்ரன், உக்ரி மேலே புறப் பட்டுச் சென்றார்கள். காலித் தொட்டிலைப் பின்னால் கட்டிக் கொண்டு ஆளில்லாமல் வந்த குதிரைகளில் ஒன்றை எடுத்துக் கொண்டு சோமன் வந்த வழியில் திரும்பினான்

சூரியன் உதித்து உலகிற்கு உதயம் ஆயிற்று. ஆனால் இவர் களின் இதயத்திலோ அந்தகாரம் சூழ்ந்திருந்தது.

107

நிரின்கு அடிகள் தனது வழியே சென்ற சோமன் திரும்பிப் பார்த்து தன் சகாக்கள் கண்ணுக்கு மறைந்தவுடன் தொட்டிலை எடுத்துக் கொண்டு போய் ஒரு புதரின் மறைவில் எறிந்தான். புறப்பட்டு வரும்போது அவன் காவல் நிலையத்து ஆளுக்கு ஒரு பொய்யைச் சொல்லி வந்திருந்தான். திரும்பிப் போய் அந்தப் பொய்யையே ஊர்ஜிதப் படுத்தவேண்டும்; தொட்டில் அதற்குத் தடையாக இருக்கும். காவல் நிலையத்து ஆள் தனது எஜமானனை அழைத்திருந்தால் அவன் தன்னை விவரமாகப் பரீட்சிக்கப் போவது நிச்சயம். சமயத்தைப் பார்த்து நம்பிக்கை உண்டாகு மாறு பொய் சொல்லி எவ்வளவு முடியுமோ அவ்வளவு காரி

யத்தை முடித்துக் கொள்ளவேண்டும். இடையே ஏதாவது தவறு நேர்ந்து தலையைக் கொடுக்கவோ, கழுவில் ஏறவோ நேரிட்டால் விதி என்று உடன்படவேண்டியதுதான்.

இவன் நினைத்தபடியே காவல் சாவடி சிறிது தொலைவில் தெரிந்தபோதே "அதோ அந்தக் குதிரை ஆள் வருகிறான்" என்று கூக்குரல் கேட்டது. அப்படிக் கூச்சல் போட்டவன் காவல் காரனாக இருக்கவேண்டும், தன் எஜமானனிடம் சொல்லுகிறான் என்று சோமன் நினைத்துக் கொண்டான். அடுத்த கணம் சாவடியின் வாசலில் ஓர் இளைஞன் நின்றுகொண்டு இவனைப் பார்த்துக்கொண்டிருப்பதைக் கண்டான். சோமன் அதிக மெதுவாகவுமல்லாமல் வேகமாகவும் இல்லாமல் குதிரையை ஓட்டிக் கொண்டு காவல் நிலையத்திற்கு வந்து சேர்ந்தான்.

ஆள், "என்னப்பா அப்படி ஓடிவிட்டாய்? நான் எஜமானரின் தூக்கத்தைக் கெடுக்க வேண்டியதாயிற்று" என்றான்.

எஜமானன் செய்யவேண்டிய விசாரணையைச் செய்து இந்த ஓடிப்போன மனிதன் சரியான பதிலைக் கொடுத்து விட்டால், எதற்காக அநாவசியமாக என்னை எழுப்பினாய் என்று எஜமானன் தன்னைத் திட்டாமலிருக்க வேண்டுமே என்று அவன் பயம்.

சோமன், "பாவம், அவரை ஏன் எழுப்பினாய்? நான் அவர்களைத் தடுத்து நிறுத்தலாம் என்று துரத்திக்கொண்டு ஓடினேன். யாரோ என்னமோ பயப்பட்டு விட்டார்கள் போலிருக்கிறது. ஒரே ஓட்டமாக ஓடிவிட்டார்கள். எல்லையையும் தாண்டிப்போய் விட்டார்கள். இனி அவர்களை என்ன செய்வது? அண்ணனிடம் தெரிவிக்கலாம் என்று திரும்பி வந்தேன்," என்றான்.

காவல் தலைவன், "நீ யார், குதிரை ஆள்?" என்றான்.

சோமன் அந்தச் சமயத்துக்குத் தக்க ஒரு பொய்யைச் சொன்னான். "அப்பங்கொளத்து சோமன் நான். மாப்பிள்ளைப் பிரபு மங்களூரில் மஞ்சுநாத சுவாமிக்கு பிரார்த்தனை செலுத்தச் சொல்லி இரண்டு பொன் கொடுத்து அனுப்பினார். புறப்பட்டேன். அண்ணன் அந்தக் குதிரைகளைப் பார்த்துக் கூச்சல் போட்டது. நான் குதிரையின் மீது இருந்ததால் அவர்களைப் பிடிப்பதற்காகப் பாய்ந்தேன்."

ஆள், "என்னப்பா, நீ அவர்களிடம் நில்லாதே ஓடு ஓடு என்று சொன்னாயே?" என்றான்.

சோமன், "சேசே நில் ஓடாதே என்றேன். நிற்காதே ஓடு என்று நான் ஏன் சொல்லுகிறேன்? அவர்கள் யாரோ நான் யாரோ?" என்றான்.

காவல் தலைவன் இவனையே கூர்மையாகப் பார்த்துக் கொண்டிருந்தான். சோமன் மிகவும் சகஜமாகவும் இயற்கையாகவும் பேசிக் கொண்டிருந்த போதிலும் அவனுக்கு நம்பிக்கை ஏற்படவில்லை. அவன், "மாப்பிள்ளைப் பிரபு கடிதம் ஏதாவது கொடுத்திருக்கிறாரா? அவர் தந்த பொன்னைக் காண்பி" என்றான்.

சோமன் கடிதம், பொன் இவைகளை எடுப்பவன் போல இடுப்பில் கையை வைத்து, திடுக்கிட்டவன் போலும் அவைகளைத் தொலைத்து விட்டவன் போலும் நடித்து, "ஐயோ, இந்தக் கலாட்டாவில் அதை எங்கேயோ விட்டு விட்டேனே, இனி அப்பங்கொளத்துக்குத் திரும்பிப் போய் பிரபுவின் காலில் விழவேண்டியது தான், தலைவிதி, என்ன செய்வது" என்றான்

இவன் பேசுவது பொய்யென்று காவல் தலைவனுக்கு நிச்சயமாயிற்று. உண்மையில் அவன் சோமனைக் காவலில் வைத்து விசாரணை நடத்த வேண்டும். ஆனால் அவனுக்கு ஒரு பயம். மாப்பிள்ளை சென்னபசவன் இவனை அனுப்பியது நிஜமாக இருந்து இவனைத் தான் காவலில் வைத்தால் சென்ன பசவய்யன் அதைத் தனக்கு ஏற்பட்ட அவமானமாகக் கருதலாம். அவன் ஒரு பிடிவாதக்கார மனுஷன் என்பதை நாடெல்லாம் அறியும். அவன் காவல் தலைவனைப் பழி வாங்காமல் விடமாட்டான். இதற்கு என்ன செய்வது?

இவன் அரண்மனையிலிருந்து தப்பித்துக் கொண்டு, குதிரையைத் திருடிக்கொண்டு மங்களூருக்கு ஓடுபவனாக இருக்குமோ? இருக்காது. அப்படியிருந்தால் ஏன் திரும்பி வருகிறான்? காவல் காரனிடம் அவன் கண்ட அந்தக் குதிரைகள் தப்பித்துக்கொண்டு போய்விட்டன என்று சொல்வதற்காகவே இருக்குமோ? அநேகமாக அப்படித்தான் இருக்கவேண்டும். கடிதமும் பொன்னும் தொலைந்து போய்விட்டன என்று சொல்வது' அதுவும் உண்மையாக இருக்கலாம். இல்லை என்று எப்படிச் சொல்ல முடியும்?

இவ்வளவு யோசித்த காவல் தலைவன், தானும் அவனோடு அப்பங்கொளத்துக்குப் போவது, சோமன் சொல்வது உண்மையானால் சென்னபசவய்யனின் மன்னிப்பைக் கேட்டுக்கொண்டு திரும்பி வருவது என்று முடிவு செய்தான்.

இவ்வாறு யோசித்து அவன் ஆளிடம் தன் குதிரையைக் கொண்டுவா என்று சொல்ல வாய் திறக்கும் சமயத்தில் காவல் நிலையத்தின் வலது திசையில் சிறிது தூரத்தில் இருந்த மேட்டில் மணியகாரர் வீட்டுக்குப் பக்கத்தில் பத்துப் பதினைந்து

பேர் கூடி ஏதோ உரக்கப் பேசிக் கொண்டிருப்பது கேட்டது. தலைவன் ஆளிடம், "அதென்னவென்று பார்த்துக் கொண்டு வா" என்றான். ஆள் அந்தப் பக்கமாக ஓடினான். தலைவன் சோமனிடம், "உன் பேர் சோமன் என்றுதானே சொன்னாய்?" என்று கேட்டான்.

"ஆமாம் எஜமான்."

"உன் குதிரையை இந்தக் கம்பத்தில் கட்டு. நானும் வருகிறேன் அப்பங்கொளத்துக்கு. போவோம்."

"சரி எஜமான்."

சோமன் குதிரையை கம்பத்தில் கட்டிவிட்டு தலைவனிடம், "இதற்குக் கொஞ்சம் புல்லும் தண்ணீரும் கொடுக்கச் சொல்லி அண்ணனிடம் சொல்லுங்கள்" என்றான். தலைவன் சரி என்று தலையாட்டினான்.

மணியகாரர் வீட்டுப்பக்கம் சென்று பார்த்து வந்த ஆள், "வழிக்காவல் கொக்கனின் குடிசைக்கு எதிரே யாரோ ஒரு குழந்தையைக் கிடத்தி விட்டுப் போயிருந்தார்களாம். கொக்கனும் அவன் மனைவியும் அதை மணியகாரிடம் கொண்டு வந்திருக்கிறார்கள்" என்றான்.

தலைவன், "குழந்தையா?" என்று கேட்டான்.

"ஆண் குழந்தை; ஆறு மாதம் இருக்கலாம்."

"நீ இங்கே இரு. நான் போய்ப் பார்த்துக் கொண்டு வருகிறேன். ஏய் சோமா, நீயும் வா."

சோமனுக்கு தனது பிரபுவின் குழந்தை பிழைத்திருக்கிறது, பத்திரமாக இருக்கிறது என்று சந்தோஷம். அதை எப்படிக் கைப்பற்றி மங்களூருக்கு எடுத்துக் கொண்டு போவது என்று கவலை. "நான் என்ன செய்ய முடியும்? கரிங்காளித் தாயே! நீ தான் வழி காட்ட வேண்டும். நான் அதன்படி நடந்து கொள்கிறேன். குழந்தையைக் காப்பாற்றித்தா. இரண்டு ஆடுகள் பலி கொடுக்கிறேன்," என்று அவன் தன் குலதேவதையைப் பிரார்த்தித்துக் கொண்டு காவல் தலைவனுடன் மணியகாரரின் வீட்டுக்குச் சென்றான்.

108

தலைவன், சோமன், இருவரும் மணியகாரரின் வீட்டை வந்தடைந்த பொழுது அங்கே கும்பல் இன்னும் அதிகரித்திருந்தது.

ஒரு சந்தையே கூடியிருப்பது போல இருந்தது. மணியகாரர் வீட்டில் இருக்கவில்லை. அவர் மனைவியும், மருமகளும் வாசலில் நின்றுகொண்டு கொக்கனோடு பேசிக் கொண்டிருந்தார்கள். கொக்கனின் மனைவி குழந்தையை ஏந்திக்கொண்டு அவனருகே நின்றிருந்தாள். தலைவன் வருவதைக் கண்டு கும்பலில் ஒருவன், "வழி விடுங்கப்பா, சாவடி எஜமான் வருகிறார்" என்றான். கும்பல் மரியாதையாக வழி விட்டு விலகி நின்றது. தலைவன் கும்பலில் நுழைந்து மணியகாரரின் மனைவிக்குச் சிறிது தொலைவில் வந்து நின்றான்.

அவள் கொக்கனிடம், "இந்த எஜமானரிடம் எல்லாவற்றையும் சொல்லுடா" என்று உத்தரவிட்டாள்.

கொக்கன் சொன்னான்; "கோழி கூப்புட்டாச்சுங்க, எசமான். என் பொஞ்சாதி எழுந்திருக்கிற நேரம். பள்ளத்திலே ஒரு குழந்தை வீல் வீல்னு அழுவுற சத்தம் கேட்டிச்சு. இவ, இதென்ன குழந்தை அழுவறாப்பல சத்தம் கேக்குதே, என்றாள். நான் ஆமாம் என்றேன். ஏதாவது பிசாசு கிசாசாக இருக்குமோ என்றாள் அவ. கோழி கூவுனதுக் கப்புறம் எந்தப் பிசாசு வரும், என்றேன் நான். அவ, கொஞ்சம் வாயேன், போய்ப் பார்க்கலாம், என்றான். நான் இந்த நேரத்துலெ ஏம் பயப்படுறே, நட போய்ப் பாக்கலாம், என்றேன். நானும் எழுந்தேன், அவளும் புறப்பட்டாள்."

கொக்கனின் மனைவி கதையைத் தொடர்ந்தாள்: "பிசாசு அல்ல என்று சொன்னதுக் கப்புறம் துணை எதுக்கு என்று நானே புறப்பட்டேன், அம்மா. ஆம்பளைங்க நகர்றது என்னிக்குமே தாமதம். நாலு அடி எடுத்து வைத்தேன். இந்த வேளையிலும் பிசாசு ஏன் இருக்கக்கூடாது என்று தோன்றியதும் நெஞ்சு திக்கென்றது. குழந்தை வீல் வீல்னு அழுதுகிட்டே இருந்தது. வயிறு சங்கடப்பட்டது. ஆனது ஆகட்டு முன்னு ஓடினேன். பள்ளத்திலே முல்லைப் புதரிலே பட்டாடையிலே சுத்தப்பட்டுக் கிடக்குது குழந்தை, பெரிய பெரிய கண்ணு; வட்டமான மூஞ்சி; குங்குமம் தடவினாப்பலெ சிவப்பு உதடு. பிசாசாயிருந்தாலும் இருக்கட்டு முன்னு தூக்கிகிட்டேன். கைக்குக் கிடைத்ததம்மா பிசாசல்ல, சாமியே தான்னு சொல்லி தூக்கிக்கிட்டு குடிசைக்குத் திரும்பி வந்தேன்."

கொக்கன் சொன்னான்: "நான் எழுந்திருந்து இவ பின்னாடியே போனேன், எசமான். பத்தடி நான் போறதுக் குள்ளார

அவ குழந்தையைத் தூக்கிக்கிட்டு வந்துட்டா. சாமியைப்போல இருக்குது குழந்தை என்றேன் நான். இது எப்படி இங்கே வந்தது, என்றாள் அவள். துணிமணியெப் பாத்தா அரண்மனைக் குழந்தையாட்டமிருக்குது, யாரோ திருட்டுப்பசங்க தூக்கியாந்து நகை நட்டைக் கழட்டிக்கிட்டு எறிஞ்சுட்டுப் போயிட்டாங்க போலிருக்கு, என்றேன். அப்படின்னு நான் இதை வளர்க்க முடியாது, என்றாள் அவள். நீ வளர்க்கற குழந்தையா இது, அவ்வளவு யோக்கியதை உனக்கிருக்குதா, என்றேன்."

கொக்கனின் மனைவி சொன்னாள்: "ஆம்பளை சொல்றது சரின்னு பட்டுதம்மா. வேற எதிஞ்ச்சியுமா இருந்தா வளக்க லாம். திருட்டுச் சொத்து மணியகாரரிடம் ஒப்பிச்சுடலாம், வா என்று எடுத்துக்கிட்டு வந்தோமுங்க."

காவல் தலைவன், "குழந்தையைத் திண்ணையின்மீது வை" என்றான். கொக்கனின் மனைவி குழந்தையைத் துணி மணி களோடு திண்ணையின்மீது வைத்தாள். மணியகாரர் மனைவி, மருமகள், இன்னும் நாலு உயர் குடும்பப் பெண்கள் அதைச் சூழ்ந்து கொண்டார்கள். மணியகாரர் மனைவி, "முகம் எவ்வளவு அழகாக இருக்கிறது?" என்றாள். அவள் மருமகள், "என் கண் மணி இப்படியேதான் இருந்தது. எனக்குத் தான் கொடுத்து வைக்கவில்லை, அதை வைத்துக்கொண்டு சீராட்டுவதற்கு," என்று கண்ணீர் விட்டாள். நான்கு மாதங்களுக்கு முன்னால் ஒரு குழந்தையைப் பெற்றுப் பறி கொடுத்துவிட்ட அந்த இளம் அன்னைக்கு இந்தக் குழந்தையைத் தான் எடுத்து வளர்த்தால் எவ்வளவு நன்றாக இருக்கும், பெற்ற குழந்தையை எடுத்துக் கொண்டுவிட்ட கடவுள், இந்தக் குழந்தையைத் தனக்காகவே அனுப்பியிருக்கலாமோ என்று தோன்றியது.

மற்றப் பெண்களில் ஒருத்தி அதன் புருவங்களையும், ஒருத்தி கண்களையும், ஒருத்தி மூக்கையும், ஒருத்தி மோவாய்க் கட்டை யையும் வர்ணித்தார்கள். ஒரு கிழவி அருகில் வந்து குழந்தையின் நெற்றியைத் தொட்டுக் கையை முத்தமிட்டுக் கொண்டாள். திருஷ்டி படாமலிருக்கும்படி கை விரல்களைச் சொடுக்கினாள்.

கதையை யெல்லாம் கேட்ட சோமன் தன் பிரபுவின் அதிருஷ் டம் எவ்வளவு கெட்டது என்று வருந்தினான். எல்லையைத் தாண்டுகிற வரையிலாவது குழந்தை தொட்டிலில் இருந்திருந் தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும் என நினைத்தான். வெண்ணெய் திரண்டு வருகிற சமயத்தில் இப்படித் தாழி

உடையவேண்டுமா? இப்பொழுது என்ன செய்வது. இனி என்ன கதி? என்று அவன் உள்ளுக்குள்ளேயே புழுங்கினான். கரிங்காளியிடம் மறுபடியும் ஒரு முறை பிரார்த்தித்துக் கொண்டான்.

இதற்குள்ளாக மணியகாரர் வந்து சேர்ந்தார். விஷயம் எல்லாம் அவருக்கும் சொல்லப்பட்டது. அவர் "துணி மணிகளைப் பார்த்தால் இது அரண்மனைக் குழந்தைபோல் தான் தெரிகிறது. அப்பங்கொளத்துக் குழந்தையை யாரோ திருடிக்கொண்டு வந்திருக்கிறார்கள்" என்றார்.

காவல் தலைவன் மணியகாரரிடம், "அப்படியா சொல்லுகிறீர்கள்?" என்று கூறி சோமனை அழைத்து, "ஏய், நீ அப்பங்கொளத்தான் என்று சொல்லுகிறாயே, இந்தக் குழந்தை உங்கள் அரண்மனையினுடையதா, தெரிகிறதா பார்" என்றான்.

அவன் மனத்தில் இவனே தான் குழந்தையைத் திருடிக் கொண்டு வந்திருக்கவேண்டும் என்று தோன்றியது. நகைகளைக் கழட்டிக்கொண்டு அதை எறிந்து விடவேண்டுமென்று ஓடி வந்திருக்கிறான்; வழியில் குழந்தையைத் தவறவிட்டு விட்டான், இப்பொழுது மீண்டும் அதைத் தேடிக்கொண்டு வந்திருக்கிறான் என்று அவன் சந்தேகம். எனவே அவன் இவனையும் அழைத்துக் கொண்டு அப்பங்கொளத்துக்குப் போவதுதான் சரி என்று நிச்சயம் செய்து கொண்டான்.

சோமன் என்ன பதில் சொல்வதென்று தெரியாமல், "துணி மணிகள் அரண்மனையினுடையது போலத் தான் இருக்கின்றன குழந்தை பிரபுவினுடையதாக இருக்கலாம்" என்றான்.

அப்பொழுது மணியகாரரின் மருமகள் உள்ளே யிருந்து வந்து தன் கணவனிடம் தன் ஆசையைத் தெரிவித்தாள். அவன் தன் தாயாரிடம் அதைத் தெரிவித்தான். அவள் தன் கணவனிடம், "எதுவும் விஷயம் சரியாகத் தெரியும் வரையில் குழந்தையை நமது மருமகள் வளர்க்கட்டும். அவள் மார்பில் நிறைந்திருக்கும் பாலை இந்தக் குழந்தை யாவது குடிக்கட்டும்," என்றாள்.

மணியகாரர், "நமது வீட்டுக்கு ஒரு குழந்தை இருக்கவேண்டுமென்றால் ஆண்டவன் நமது குழந்தையை ஏன் எடுத்துக் கொள்கிறான்? இது திருடிக்கொண்டு வரப்பட்ட குழந்தை என்ற பிறகு நம் வீட்டில் நிலைக்கப் போகிறதா? நகை நட்டுக்கள் என்ன இருந்தன. யார் திருடினார்கள், என்ன சங்கதி என்கிற விசாரணை

யெல்லாம் நடக்கவேண்டாமா? நாம் வைத்துக் கொள்கிறோம் என்றால் நாமேதான் திருடிக்கொண்டு வரச் செய்தோம் என்றாகி விடும். மணியம் பதவி அவ்வளவுதான்," என்றார். பிறகு மகனைக் கூப்பிட்டு, "அப்பாஜி, ஆளிடம் குழந்தையைக் கொடுத்துத் தூக்கிக்கொள்ளச் சொல்லி நீ அப்பங்கொளத்துக்குப் போ. அரண்மனைக் குழந்தையா என்று விசாரி, இல்லை என்றால் மடிகேரிக்குப் போய் ராணியம்மாளிடம் காண்பித்து உத்தரவு கேள். அவர்களும் தங்களுடையதல்ல என்றால் உன் இஷ்டப்படி திருப்பிக்கொண்டு வந்து உன் மனைவியிடம் கொடு" என்றார். காவல் தலைவன் ஜனங்களைப் பார்த்து, "நான் மணியகாரருடன் ஒரு வார்த்தை பேசவேண்டும். நீங்களெல்லாம் சிறிது விலகியிருங்கள்" என்றான். ஜனங்கள் விலகி நின்றார்கள். தலைவன் கொக்கனையும் அவன் மனைவியையும் கூட சிறிது தூரம் தள்ளி நிற்கச் சொல்லிவிட்டு சோமனைப் பக்கத்தில் வரச் சொல்லி, மணியகாரரிடம், "கொக்கனும் அவன் மனைவியும் குழந்தையைக் கண்டெடுத்தவர்கள்; அவர்களே அதை அப்பங்கொளத்துக்கு எடுத்துச் செல்லட்டும். எல்லாம் விவரமாக எடுத்துச் சொல்ல சௌகரியமாக இருக்கும். உங்கள் மகனும் வரட்டும்; நானும் போகிறேன். இவன் அரண்மனை ஆள் என்கிறான். இன்னும் ஏதேதோ சொல்லுகிறான். இவனும் வரட்டும். இந்த சங்கதியையும் விசாரித்துக் கொண்டு வருகிறேன்," என்றான்.

மணியகாரர் சம்மதித்தார். குழந்தை கிடைக்கவில்லையே என்று அவர் மருமகள் கண்ணீர்விட்டு அழுதாள். அவள் மாமியார், "குழந்தை அவர்களுடையதல்ல என்றால் உன் புருஷன் அதைத திருப்பிக்கொண்டு வரப் போகிறானே. நீயே வைத்துக் கொள்வாயாம, பேசாமலிரு" என்றாள். மருமகள், "வளர்க்கிற புண்ணியம் இருந்தால் பெற்ற குழந்தை இருந்திருக்காதா? மாமனார் சொன்னாரே," என்றாள்; 'ஹோ' என்று அழுது கொண்டே வீட்டுக்குள் சென்றாள். தேவம் மாஜியின் குழந்தை ஒரு தொட்டிலில் படுத்துகொண்டு கொக்கனின் தலைமீது, சோமனுக்குப் பின்னால், காவல் தலைவன், மணியகாரர் மகன் இவர்கள் பாதுகாப்பில் தன் பிறந்த வீடான அப்பங்கொளத்து அரண்மனையை நோக்கிப் புறப்பட்டது.

அப்பங்கொளத்து அரண்மனையில் அபினின் வேகத்தால் தூங்கிப் போய்விட்ட காவலாளிகளில் தலைவனானவன் கோழி கூவுகிற நேரத்தில் விழித்துக் கொண்டான். அவன் நடுநிசியில் எழுந்து காவல் இருந்திருக்கவேண்டிய முறை. சேவகர்கள் அவனை எழுப்பி யிருக்கவேண்டும். ஆனால் அப்படி எழுப்ப வேண்டிய பொறுப்புள்ளவர்கள் ஆனந்தமாகப் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தார்கள். தலைவனுக்குச் சிறிது பயம் தோன்றியது; மேலும் அப்பொழுதும் தன் இமைகளை அழுத்திக்கொண்டிருந்த தூக்கம் வழக்கமான தூக்கம் அல்ல என்று அவனுக்குத் தோன்றியது. அவனுக்கு இனிப்பு பிடிக்காது. பாயசம் வந்தபொழுது எல்லோரையும் போல அவன் ஆசையுடன் நிறையப் போட்டுக் கொண்டு சாப்பிடவில்லை. மறுநாள் தலைவலி வரும் என்று பயந்து பரிமாறிய பாயசத்தில் பாதியை அப்படியே வைத்து விட்டான். அதனால்தான் அவனுக்கு அப்பொழுதாவது விழிப்பு ஏற்பட்டது. சாப்பாட்டில் ஏதோ மருந்து கலந்து விட்டிருந்தார்களோ என்று அவன் யோசித்தான். அப்படி யென்றால் அது யார் வேலையாக இருக்கும்? ஏதோ சூழ்ச்சி நடந்திருக்கவேண்டும். இந்த யோசனைகளெல்லாம் அவன் மூளையில் ஒரேயடியாக உதித்துவிடவில்லை. தூக்கக் கலக்கத்தில் அவனது அறிவு ஒன்றன் பின் ஒன்றாக இவைகளை மனத்தின் ஆழத்திலிருந்து வெளிக் கொண்டு வந்து கொண்டிருந்தது. சூழ்ச்சி எதுவாக இருக்குமோ என்ற பயத்தால் அவன் சிறிது பரபரப்படைந்தான்; பக்கத்தில் படுத்திருந்தவனைப் பலமாகத் தட்டி எழுப்பி, "என்னடாது இப்படித் தூங்கிவிட்டிங்க. காவல் காக்கிற லச்சணமா இது?" என்று கத்தினான். ஒருத்தன், "என்ன தூக்கம் எஜமான், பாழாப் போன தூக்கம் இது," என்றான். இன்னொருவன் "ஊம்...ஊம்" என்று முனகினானே ஒழிய விழித்துக் கொள்ளவில்லை.

தலைவன் எழுந்திருந்து அரண்மனைக்கு எதிரேயிருந்த ஓடைக்குச் சென்று முகம் கழுவிக்கொண்டு திரும்பி வந்தான். தன் கைத் தடியை எடுத்துக்கொண்டு அரண்மனையைச் சுற்றத் தொடங்கினான்.

அரண்மனை நிசப்தமாக இருந்தது. எஜமானரும் அவர் மனைவியும் படுக்கும் அறை உப்பரிகையின்மீது அங்கே வழக்கம்போல

சிறு விளக்கு ஒன்று எரிந்துகொண்டிருந்தது தெரிந்தது. வீட்டின் பின்புறம் சென்றபொழுது கடைசி அறையில் பணிப்பெண்கள் இருவர் ஏதோ பேசிக்கொள்வது கேட்டது, என்ன வென்று தெளிவாக அவனுக்கு விளங்கவில்லை. அவன் ஒரு சுற்றுச் சுற்றி மீண்டும் முகப்புக்கு வந்தான். ஆட்களை மறுபடியும் எழுப்பினான். அவர்கள் எழுந்திருக்கவில்லை. இதென்ன கிரகசாரமோ என்று கவலைப்பட்டபடி அவன் முன்புறத்து வாசற்படியின்மீது உட்கார்ந்து கொண்டான்.

அப்பொழுதுதான் அவனுக்கு ஞாபகம் வந்தது. தான் வழக்கம் போல முதல் நாளிரவு சென்னபசவய்யனையும் தேவம்மாஜியையும் கண்டு வணக்கம் செலுத்தவில்லை.

காலையில் எழுந்ததும் ஒரு முறை பாரப்பதும், இரவில் கடைசியாக ஒரு முறை பார்ப்பதும் அவர்களது காவல் முறையின் தவிர்க்கக்கூடாத ஒரு அம்சம். இது ஞாபகம் வந்தவுடன் அவன் இதயம் பக பக் என்று அடித்துக்கொள்ள ஆரம்பித்தது. வழக்கமான வணக்கத்தின் நேரத்திற்குப் பிறகு எவ்வளவோ நேரம் கழித்து இவனுக்கு அவர்களுடைய குரல் கேட்டது. இருந்தாலும் அவன் தன் வேலையைச் சரியாகச் செய்யவில்லை. இது பசவனுக்குத் தெரிந்துவிட்டால் தன்னை லேசில் விடமாட்டான்.

இரண்டு நாழிகை கழித்து மற்ற காவல்காரர்களும் எழுந்திருந்தனர். இவ்வளவு நேரத்திற்கு அரண்மனைச் சேவகர்கள் சிலராவது எழுந்து விட்டிருக்கவேண்டும். ஆனால் யாரும் எழுந்திருக்கவில்லை.

கோழி கூப்பிடுவதற்கு முன்னால் குழந்தை சென்ற இரண்டு தினங்களாக எழுந்து அழுதது, இன்றைக்கு அதுவும் எழுந்திருக்கவில்லை. இதையெல்லாம் பார்த்து அவனுக்குப் பயம் ஏற்பட்டது. ஆனால் ஏதும் தவறு நேர்ந்திருக்கும் என்று அவனால் நம்ப முடியவில்லை, முந்தா நாள் தான் காவல் போட்டார்கள். நஞ்சன கூடுக்குப் போகவேண்டும், ஏற்பாடு செய்து தாருங்கள் என்று நேற்று தான் சொல்லியனுப்பியிருக்கிறார்கள்; போதும் போதாததற்கு என்றைக்குமில்லாமல் நேற்று பண்டிகை வேறு நடத்தியிருக்கிறார்கள். அப்படியிருக்க சந்தேகத்துக்கு என்ன காரணம்?

நன்றாக விடிந்தது. அரண்மனையினுள்ளே ஜனங்கள் எல்லோரும் எழுந்து விட்டிருப்பது தெரிந்தது. ஆனால் யாரும் கதவைத் திறக்கவில்லை.

தலைவன் வெளிவாசலைத் தட்டினான், உள்ளேயிருந்து ஒரு பணிப் பெண் கதவருகில் வந்தாள்.

தலைவன், "என்னம்மா இன்றைக்கு இவ்வளவு தாமதம்? இவ்வளவு நேரமாகியும் இன்னும் கதவே திறக்கவில்லையே?" என்றான். கதவைத் திறந்த பணிப் பெண் பதில் சொல்வதற்குள் இன்னொரு வேலைக்காரி, தலைவனுக்கு ஏற்கனவே அறிமுகமானவள்—வந்தாள். "ராத்திரி பண்டிகைச் சாப்பாடு தாமதமாச்சுல்ல, நாயக்கரே; எஜமான் படுத்து, அம்மா அவங்க படுத்து மத்தவங்கல்லாம் சாப்பிட்டுப் படுக்க நடுராத்திரி ஆயிட்டுது," என்றாள். தலைவன், "சரி தான். எஜமான் எழுந்திரிச்சதும் கொஞ்சம் சொல்லுங்க. அவருக்குக் கும்பிடு போட்டுட்டு நான் மடிகேரிக்கு ஆள் அனுப்பணும்," என்றான். வேலைக்காரி பேசாமல் உள்ளே சென்றாள். இவன் வெளியே நின்று கொண்டே இருந்தான். எவ்வளவு நேரமாகியும் யாரும் வெளியே வந்து இவனை அழைக்கவில்லை இவன் கதவைச் சற்று தள்ளி, "யாரம்மா அங்கே, கொஞ்சம் இப்படி வரிங்கயா?" என்று கூப்பிட்டான். அந்த அறிமுகமான வேலைக்காரி வந்தாள். தலைவன் அவளிடம், "ஆள் அனுப்பற நேரமாயிட்டுதேம்மா; எஜமானையும் எஜமானி அம்மாளையும் பார்த்துட்டால் தேவலை," என்றான். "அவங்க இன்னும் எழுந்திருக்கலையேப்பா, கதவு சாத்தியே இருக்குது," என்று கூறி விட்டு உள்ளே சென்றாள்.

என்ன செய்வதென்று தெரியாமல் காவல் தலைவன் ஒரு கணம் யோசித்தபடி நின்றான். இவர்களுக்குத் தாட்சண்ணியம் காண்பித்தால் பசவனிடம் வாழ முடியாது. அவன் கட்டளைப்படி நடந்தால் இங்கே மனக்கசப்பைத் தவிர்க்கமுடியாது, என்றிவ்வாறு நான்கு முறை யோசித்து நான்கு முறையும் ஒரு முடிவுக்கு வர முடியாமல் அவன் ஐந்தாவது முறை, "ஆவது ஆகட்டும், ஆட்கள் எழுப்பவில்லையென்றால் நானே போய் எழுப்புகிறேன்; கை கூப்பி மன்னிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்; மடிகேரிக்கு ஆளை அனுப்பவேண்டும். இல்லாவிட்டால் தலைக்குத் தீம்புதான்," என்ற முடிவுக்கு வந்தான். அரண்மனை வெளிவாசல் கதவைத் தள்ளிக்கொண்டு உள்ளே சென்று "யாரம்மா அங்கே? எஜமானிடம் நான் அவரைப் பார்க்கவேண்டுமென்று சொல்லுங்கள்" என்றான்.

மறுபடியும் அதே வேலைக்காரி வந்தாள், "ராத்திரி நேரமாயிட்டுதுனாலே அவர் எழுந்திருக்கலையேப்பா, என்ன செய்யப்போறே?" என்றாள்.

"போய் கொஞ்சம் எழுப்பும்மா, இனி தாமதமானால் அங்கே கோபிச்சுக்குவாங்க."

"நல்லாருக்கப்பா பாவம், ராத்திரி எல்லோருக்கும் சாப்பாடு போட்டுட்டு பாதிராத்திரிக்கு மேலே படுத்தாரு, எஜமானைப் போய் யார் எழுப்புவாங்க?"

"அது சரிம்மா. எஜமான் படுத்திருக்கறதையாவது நான் பார்த்தால் போதும், எழுப்புவது வேணும்."

வேலைக்காரி, "உன் இஷ்டம் நாயக்கரே நீ இந்த வீட்டு ஆளல்ல; உங்க எஜமானர் வேறே. உன் இஷ்டம் போல செய்" என்றாள்.

நாயக்கன், "நட போகலாம்" என்று கூறி அவளோடு நடந்தான்; அவள் அவனை உப்பரிகையின் மீது கூட்டிக்கொண்டு போனாள். தலைவன் சென்னபசவய்யனின் அறை வாசலில் நின்று உள்ளே யாராவது இருப்பதற்கான அறிகுறிகள் காணப்படுகின்றனவா என்று செவி மடுத்துக் கேட்டான்; அவனுக்கு ஒன்றும் தெரியவில்லை. கதவை மெதுவாகத் தட்டிப் பார்த்தான். யாரும் படுக்கையில் புரளும் சப்தம் கேட்கவில்லை, கதவை மெதுவாகத் தள்ளினான். சிறிது மட்டும் திறந்து உள்ளே தலை நீட்டிப் பார்த்தான்; படுக்கையில் யாரும் இருக்கவில்லை. அவன் இந்தப் பக்கம் திரும்பி, "எஜமான் படுக்கையில் இல்லையேம்மா" என்றான்.

வேலைக்காரி, "உள்ளே அம்மாவங்களோட அறைக்குப் போயிருக்காரோ என்னவோ" என்றாள்.

எவ்வளவு கல்மனத்துடன் தன் கடமையை நிறைவேற்ற அவன் தயாராக இருந்தபோதிலும் கணவன் தன் மனைவியின் படுக்கையறைக்குள் சென்றிருக்கிறானா என்பதைப் பரீட்சிக்க அத் தலைவன் பின்னடைந்தான். அவன் பல நிமிடங்கள் அங்கேயே நின்றபடி தேவம்மாஜியின் அறையிலிருந்து ஏதாவது சப்தம் வருகிறதா என்று உற்றுக் கவனித்தான். உள்ளே யாராவது இருப்பார்களென்ற நம்பிக்கைக்கு ஒரு அறிகுறியும் தென்படவில்லை. தலைவன் வேலைக்காரியிடம், "குழந்தையை எங்கே படுக்க வைப்பது வழக்கம்?" என்று கேட்டான், அவள், "தொட்டில் அம்மாவங்க அறையிலியே தான் இருக்குது" என்றாள்.

கீழே வேலைக்காரர்களெல்லாம் எழுந்திருந்து தத்தம் வேலைகளில் ஈடுபட்டிருந்தனர். தலைவன் இன்னும் சில நிமிடங்கள் கழித்துப் பார்ப்போம் என்று நினைத்துக்கொண்டு மாடியினின்றும் இறங்கி வந்தான்.

வெகு கஷ்டத்துடன் இன்னும் ஒரு நாழிகை காத்திருந்து விட்டு இனி தாமதம் செய்வது சாத்தியமே இல்லை என்று மீண்டும் மேலே சென்றான்; சென்னபசவய்யன், தேவம்மாஜி இவர்களின் அறைகளுக்கு வெளியே சப்தம் உண்டாகுமாறு நடந்து உரக்கவே பேசினான்; சென்னபசவய்யனின் அறை வாசலில் நின்று, "பிரபு! பிரபு!" என்று கூப்பிட்டான், கதவைப் பலமாகத் தட்டினான்; பதிலொன்றும் வராமற் போகவே உள்ளே சென்று உள்ளறையின் கதவருகே நின்று கனைத்தான். கதவைத் தட்டி, "பிரபு, பிரபு" என்று கூப்பிட்டான். அங்கேயும் பதிலில்லை, கதவைத் தள்ளினான். அது திறந்துகொண்டது. உள்ளே தலை நீட்டிப் பார்த்தால் யாரும் இருக்கவில்லை, ஒரு மூலையில் தொட்டில் இருந்தது; பார்த்தால் அதற்குள் குழந்தை இருக்கவில்லை, கடைசி ஆசையாக அவன் அந்த அறையிலிருந்து ஒரு கதவு வழியாக உள்ள மூன்றாவது அறைக்குள் சென்றான். அங்கே தேவம்மாஜியின் புடைவைகள், மேல் வஸ்திரங்கள், ரவிக்கைகள் இருந்தன, நிலத்தின் மீது சில பெட்டிகள் இருந்தன, மனிதர்களின் சுளிவே இல்லை.

தனது அஜாக்கிரதையின் காரணமாக அரசனின் மைத்துனர், தங்கை, அவர்களின் குழந்தையோடு தப்பி யோடிவிட்டார்கள் என்ற உண்மை அவனுக்குச் சட்டெனப் புலப்பட்டது. பயத்தால் அவன் உடல் வியர்த்துவிட்டது. அங்கேயே நிலை தவறி விழுந்து விடுவது போலாயிற்று அவனுக்கு. இதயத்தை நடுங்கவைக்கும் பயத்திலிருந்து எப்படியோ சமாளித்துக்கொண்டு, மூன்று கதவுகளைத் தாண்டி வெளியே வந்து, வேலைக்காரியிடம், "என்னம்மா, இந்த மாதிரி மோசம் செய்துட்டிங்களே? எஜமான், எஜமானியம்மா, குழந்தை மூன்று பேரும் தப்பி ஓடி விட்டார்கள்" என்றான்.

வேலைக்காரி, "என்னப்பா இப்படிச் சொல்றே?" என்று அவனுக்குப் பதில் கூறி அவன் கூறியது உண்மையா என்று பார்ப்பவள் போல அறைக்குள் சென்றாள்.

111

சென்னபசவய்யனும் தேவம்மாஜியும் குழந்தையுடன் வீட்டை விட்டுத் தப்பிச் செல்வது ஆட்களில் பலருக்குத் தெரியாது. இந்த வேலைக்காரிக்கும் அவளது சகாக்களான மூன்று பேருக்கும் மட்டும் தெரியும். தங்களுக்குத் தெரியும் என்று அவர்களும் காட்டிக் கொள்ளக்கூடாது. அதற்காக அவள் இப்படி நாடகம் ஆடினாள். காவல் தலைவன் எல்லா ஆட்களையும், வேலைக்காரிகளையும் வரவழைத்தான்; விசாரணை செய்தான். யார் மேலாவது தவறைச் சுமத்தி பசவனின் கோபத்திற்குப் பலி கொடுக்காவிட்டால் தன் தலை போய்விடும் என்பதை அவன் அறிவான். வீட்டு எஜமானன், எஜமானி, குழந்தை மூன்று பேரும் போயிருப்பதால் அவர்களோடு துணைக்கு சில பேராவது வேலைக்காரர்கள் போயிருக்கவேண்டும். அப்படிப் போயிருப்பவர்கள் யார் என்பதைக் கண்டுபிடிக்க இன்னொரு விசாரணை நடத்த வேண்டியதாயிற்று.

இதுவெல்லாம் முடிந்தபிறகு மடிகேரிக்குச் சென்று மந்திரி பசவய்யனுக்குச் செய்தியைத் தெரிவிக்க ஆள் அனுப்ப வேண்டும். போகச் சொன்ன ஆள், "ஐயா, நான் ஒருத்தன் போய் இந்த சமாசாரத்தை எப்படிச் சொல்றதுங்க. பெரியவங்க நீங்களும் வந்தா அவங்க கேக்கற கேள்விக்கெல்லாம் பதில் சொல்லலாம்," என்றான்.

அவன் பேச்சில் சாதாரணமான அர்த்தத்தோடு ஒரு உள்ளர்த்தமும் அடங்கியிருந்ததை எல்லோரும் கண்டுகொண்டார்கள்.

தலைவனுக்கும் அது தெரிந்தது. செய்தியைக் கேட்டு மந்திரியும், அரசனும் கோபம் கொள்வார்கள். அந்தக் கோபம் அந்த நிமிடத்தில் செய்தியைக் கொண்டுவந்தவன் மீது பாயும். ஒரு சாதாரண ஆள் அதற்கு ஏன் பலியாகவேண்டும்? தலைவன் சுமக்கவேண்டிய சுமை அந்தச் செய்தி. அதை அவனே செய்வதுதான் சரி.

தலைவன், "ஆமாமாம். நீ சொல்வது சரி" என்றான்; மற்றவர்களிடம், "இந்த அரண்மனை ஆட்கள் யாரும் தப்பி ஓடாமல் பார்த்துக்கொள்ளுங்கள்," என்று சொல்லிவிட்டு முதல் ஆளை மாத்திரம் தன்னுடன் அழைத்துக்கொண்டு மடிகேரிக்குப் புறப்பட்டான்.

மடிகேரி அரண்மனையில் அன்று அரசன் என்றைக்கும் விட சிறிது சாவகாசமாகவே படுக்கையினின்றும் எழுந்தான். முதல் நாள் மாலை, சென்ன பசவய்யன் நன்சனகூடுக்கு யாத்திரை செல்வதற்கு அநுமதி கோரி எழுதியிருந்த கடிதம் அரசனுக்குச் சமர்ப்பிக்கப்படுவதற்காக பசவனின் கைக்கு வந்திருந்தது. அப்பொழுது அரசன் அந்தக் கடிதத்தைப் படித்துப் பார்த்து உத்தரவு பிறப்பிக்கும் நிலையில் இருக்கவில்லை, இப்பொழுது அவன் எழுந்து காலைக் கடன்களை முடித்துக்கொண்டு அரசவைக்கு வந்ததும் பசவன் அவனருகில் வந்து கைகூப்பி சென்ன பசவனின் கடிதத்தைப் பற்றிய சங்கதியைச் சொன்னான்.

அரசன், "காவலாளி வந்துவிட்டானா அதற்குள்?" என்று கேட்டான்.

"இல்லை அரசே. இது நேற்று மாலை வந்தது."

"அவன் வரட்டும். வேறு ஆள் போகும்போது சொல்லுவோம்."

பசவன் தனது மற்ற வேலைகளைக் கவனிக்கப் போனான். அப்பங்கொளத்திலிருந்து ஆள் வரவேண்டிய நேரம் தாண்டிவிட்டது. ஒரு நாழிகை ஆயிற்று; இரண்டு நாழிகை ஆயிற்று; செய்தி வரவில்லை. ஏன் இப்படி என்று அவனுக்குக் கவலை தோன்றியது. சேவகன் ஒருவனை அழைத்து, "அப்பங்கொளத்திலிருந்து ஆள் வரவில்லை. ஏன் என்று பார்த்துக்கொண்டு வரட்டும், ஒரு குதிரையாளை அழைத்துவா" என்று உத்தரவிட்டான்; வீர ராஜனிடம் வந்து சங்கதியைத் தெரிவித்தான்.

"இது என்னடா உன் ஏற்பாடு? இப்பொழுதுதான் வந்து சொன்னாய், நஞ்சனகூடுக்குப் போகவேண்டுமென்று சொல்கிறார்கள் என்று. இப்பொழுது வந்து சொல்கிறாய், செய்தியே வரவில்லை என்று? நாம் 'சரி' என்று சொல்லாமலே புறப்பட்டுப் போய்விட்டார்களா என்ன?"

"அப்படியெல்லாம் துணிந்து செய்வார்களா, அரசே? காவலாளி வரட்டும், விஷயம் தெரிந்துவிடுகிறது."

அரசன் எதுவும் சொல்லவில்லை. பசவன் வெளியே வந்து தன் கட்டளைப்படி வந்திருந்த குதிரையாளிடம் "அப்பங்கொளத்திலிருந்து ஒரு காவல்காரன் இந்த நேரத்திற்கு இங்கு வந்திருக்க வேண்டும். ஏன் வரவில்லையென்று பார்த்துக்கொண்டுவா. வழியில் ஒருவரும் எதிர்ப்படாவிட்டால் அரண்மனைக்கே போய்

காவல் தலைவனைப் பார்த்து அழைத்துக் கொண்டுவா" என்று உத்தரவிட்டான்.

குதிரையாள் மடிகேரியின் எல்லையைத் தாண்டி சிறிது தூரம் செல்வதற்குள் அப்பங்கொளத்துக் காவல் தலைவனும், காவல் காரனும் எதிரே வந்துகொண்டிருப்பது தெரிந்தது. தான் அவர்களைத் தேடிக்கொண்டு வந்த சங்கதியை அவன் அவர்களுக்குத் தெரிவித்தான்.

தலைவனின் உயிர் அங்கேயே பாதி போய்விட்டது. எதிரே வந்த ஆளையும் கூட்டிக்கொண்டு அவர்கள் இருவரும் வேகமாகக் குதிரையை ஓட்டிக்கொண்டு அரண்மனையை வந்தடைந்தனர்.

பசவன் வாசலிலேயே காத்திருந்தான். தலைவன் ஓடிச் சென்று அவன் காலில் விழுந்து, "எல்லாம் குட்டிச்சுவராகப் போய் விட்டது எஜமான்; நீங்கள் என்னை மன்னித்துக் காப்பாற்ற வேண்டும்" என்றான்.

பசவன் "ஏண்டா? என்ன ஆயிற்று?"

"மாப்பிள்ளையவர்கள், அம்மா அவர்கள், குழந்தை மூன்று பேரும் இரவு கள்ளத்தனமாகத் தப்பித்துக்கொண்டு ஓடி விட்டார்கள். காலையிலெழுந்து இதைத் தெரிந்துகொள்வதே பெரும்பாடாகப் போய்விட்டது." பசவனுக்குச் சொல்ல முடியாத ஆச்சரியம், அடக்கமுடியாத கோபம்.

"உனக்கு உடம்பிலே உணர்ச்சி இருக்கிறதா இல்லையா? அவர்கள் தப்பி ஓடினார்களென்றால் காவல் தலைவன் நீ என்ன செய்து கொண்டிருந்தாய்?"

"எஜமான், சாப்பாட்டில் ஏதோ மருந்தைக் கலந்து கொடுத்து விட்டார்கள் போலிருக்கிறது. காவல்காரர்களெல்லோருமே மெய் மறந்து கிடந்துவிட்டோம். காலையில் எழுந்திருப்பதுகூட மிகவும் கஷ்டமாக இருந்தது. எழுந்து பார்க்கும்போது ஓடிவிட்டிருந் தார்கள்."

"அவர்களும் பறந்துவிட்டார்கள். இப்பொழுது உன் தலையும் பறக்கப்போகிறது பார்."

"எஜமான் சித்தம், ஜாக்கிரதை தவறிவிட்டது தலையைக் கொடுக்கவேண்டும் என்றால் எடுத்துக்கொள்ளுங்கள்."

பசவன் அவனை, "கூட வா" என்று தன்னுடன் அழைத்துக் கொண்டு அரசனின் சமுகத்திற்குச் சென்றான். "என்ன ஆயிற்று, சொல் அரசரிடம்" என்றான்.

வீரராஜன் பசவனை, "என்ன சொல்லச் சொல்கிறாய் அவனை?" என்று கேட்டான்.

"மைத்துனர், தங்கையையும் குழந்தையையும் அழைத்துக் கொண்டு தப்பி ஓடிவிட்டாராம், அரசே."

"தப்பி ஓடிவிட்டார்கள்! நீ என்னடா செய்துகொண்டிருந்தாய் நொண்டி முண்டம்? இப்பொழுது உன் தலை போகப் போகிறது தெரியுமா?"

"தப்பி ஓடியவர்கள் கிடைத்தால் போதும்; என் தலை போனாலும் பரவாயில்லை, அரசே."

"டேய் நொண்டி. இந்த அழகான பேச்சிலெல்லாம் நான் மயங்கிவிடமாட்டேன். இதையெல்லாம் நீயேதான் செய்திருக்க வேண்டும். நஞ்சனகூடு, கிஞ்சனகூடு என்றெல்லாம் பேர் வைத்து மோசம் செய்து வாழப் பார்க்கிறாயா? அதெல்லாம் நடக்காது. முதலில் உன்னை ஒழித்துவிட்டுப் பிறகு மற்ற வேலைகள். தெரிந்துகொள்."

"சரி அரசே. இப்பொழுது அவர்கள் எங்கே போயிருக்கிறார்கள் என்று தெரிந்துவர ஆள் அனுப்புகிறேன்."

"எங்கே அவர்கள் போகவில்லையோ அங்கேயெல்லாம் ஆள் அனுப்பு. நாடகம் முழுவதும் ஆடினாற்போலாகும். இப்படிச் செய்ததற்காக உனக்குக் கழுமரத்தின் ருசியைக் காட்டுகிறேன்."

பசவன் இதற்குப் பதில் சொல்லவில்லை. வெளியேயிருந்த தனது சேவகனை அழைத்தான். "காவல் தலைவனைப் பார்த்துக் கொள். வேறு ஆட்களை வரவழை. அவர்கள் நான்கு இடங்களுக்குப் போய்ப் பார்க்கவேண்டும்," என்று உத்தரவிட்டான். ஆட்கள் வந்ததும் சரியானவர்களாகப் பொறுக்கி எடுத்து சோமவார்ப்பேட்டை, குசால நகரம், சித்தாபுரம், ஹெக்கள, சம்பாஜெ ஆகிய ஐந்து திசைகளிலும் போகவேண்டிய ஆட்களை நியமித்தான். "இந்த வழிகளில் ஒன்றில்தான் அவர்கள் தலை மறைவாக ஓடியிருக்கிறார்கள். அவர்களே கிடைக்கவேண்டுமென்பதில்லை, அவர்களைப்பற்றிய செய்தியாவது கிடைக்க வேண்டும். எல்லைவரையில் போகவேண்டும். அவர்களோ அவர்களைப் போன்றவர்களோ போயிருந்தால் தெரிந்து வரவேண்டும். மாலையில் பொழுது விழுவதற்குள்ளாக இங்கே வந்து செய்தி தெரிவிக்கவேண்டும். செய்தி ஒன்றும் இல்லாவிட்டாலும் தவறில்லை. வராமல் மாத்திரம் இருக்கக்கூடாது. தலை போய்விடும்.

ஜாக்கிரதை," என்று கட்டளையிட்டான். அவர்களெல்லாம் புறப்பட்டுச் சென்ற பிறகு அரசனிடம் வந்து, "தப்பி ஓடிவிட்டார்களே யொழிய நகை நட்டுக்களையெல்லாம் எடுத்துச் சென்றிருக்கமாட்டார்கள். போய் அவர்களுடைய பெட்டி, பேழைகளையெல்லாம் பார்த்து அகப்பட்டவைகளைக் கொண்டுவந்து விடுகிறேன் அரசே," என்று கூறினான்.

"ஆமாண்டா முண்டமே. அப்பா கொடுத்த நகை என்று எல்லாவற்றையும் சுருட்டிக்கொண்டு போய்விட்டாள் மானங்கெட்டவள். வா போவோம். நானும் வருகிறேன். எல்லாவற்றையும் கொண்டுவந்துவிடலாம்." பசவன் தன்னை மோசம் செய்துவிட்டான் என்று அரசன் உண்மையாகவே நினைக்கவில்லை. ஆனாலும் யாரும் மோசம் செய்வது அசாத்தியம் இல்லை என்று அவன் எண்ணம். தான் அரசனின் யோக க்ஷேமத்தைத் தவறாமல் சிந்தித்துக்கொண்டிருப்பது அவனுக்குத் தெரியட்டும் என்பது பசவனின் எண்ணம். இதனால் அரசனுக்குத் தன்மீது பிரியம் அதிகம் ஆகலாம் என்று அவன் எதிர் பார்த்தான். எப்படியோ அரை நாழிகைக்குள்ளாக அந்த அரசனும் அவனது ஆப்த மந்திரியும் குதிரைகளின் மீதமர்ந்து முன்னால் நான்கு சிப்பந்திகளையும் பின்னால் நான்கு ஆட்களையும் வரச்சொல்லி அப்பங்கொளத்துக்குப் புறப்பட்டனர்.

இங்கே பிரயாண ஏற்பாடுகள் நடந்துகொண்டிருந்தபொழுது ஏதோ கலாட்டா நடக்கிறது என்ற செய்தி ராணிவாசத்திற்குத் தெரிந்து ராணி, "என்ன விஷயம் என்று உபாயமாக அறிந்து வா" என்று தன் சகி ஒருவளை அனுப்பினாள். அவள் போய் அங்கிருந்தவர்களைக் கேட்டு சங்கதியை அறிந்துகொண்டு வந்து சொன்னாள். ராணி சகியிடம், "பசவய்யனை ஒரு கணம் இங்கே வந்து விட்டுப் போகச் சொல்" என்றாள்.

அரசன் குதிரையின் மீது ஏறுவதற்குத் தயார் செய்து கொள்வதற்காகத் தன் அறைக்குள் போன சமயத்தில் பசவன் ராணியின் சமுகத்திற்கு ஓடி வந்தான். ராணி, "செய்தி உண்மைதானா, பசவய்யா?" என்று கேட்டாள்.

"ஆமாம் என்று தான் தோன்றுகிறதம்மா."

"அப்படியானால் நஞ்சன கூடுக்குப் போகவேண்டுமென்று சொன்னதெல்லாம் பொய்."

"கண்ணில் மிளகாய்ப் பொடி தூவி விட்டார்கள் தாயே, நஞ்சனகூடுக்குப் போகவேண்டுமென்று கேட்கிறார்களேயென்று

காவலைத் தளர்த்துவார்கள் என்று இப்படி ஒரு சூழ்ச்சி செய்திருக்கிறார்கள்."

"இருக்கவேண்டும். இப்பொழுது என்ன?"

"மன்னர் தாமே அப்பங்கொளத்துக்குப் போய் வருகிறாராம். நானும் கூடப் போய் வருகிறேன்."

"சவாரி வழக்கம் விட்டுப்போயிருக்கிறது; ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்."

பசவன், "சரியம்மா" என்று கூறி கைகூப்பி வணங்கிவிட்டு அரசரிடம் ஓடினான். கணவனைப் பட்டவன் எவ்வளவு அலட்சியத்தோடு தன்னை நடத்தினாலும் தனது கடமையை இவ்வளவு சிரத்தையுடன் நிறைவேற்றும் மனைவியான இந்தத் தனது எஜமானியின் விஷயத்தில் அவனுக்கு என்றுமில்லாத ஒரு மரியாதை உணர்ச்சி உள்ளத்தில் தோன்றியது.

ராணி, "இவர்கள் தப்பி ஓடியது தவறு, ஆனால் சத்தியா குழந்தை அரசனின் கைக்குக் கிடைக்காமல் தூரப் போனது நல்லதாயிற்று இந்த வருடம் முடிவடையும் வரையில் தங்கை, மைத்துனர், மாப்பிள்ளை இவர்கள் விலகி நின்றால் கடவுள் அரசனைக் காப்பாற்றினாற் போல ஆகும்" என்று நினைத்துக் கொண்டாள்.

113

வீரராஜன் அரண்மனையை விட்டுப் புறப்பட்டதைக் கண்டு மடிகேரியே ஆச்சரியப்பட்டது. அவன் குதிரை மீது வேறு ஏறி விட்டான்! எந்த மாயத்திலோ இந்தச் செய்தி ஊரில் பரவி விட்டது; ஊர் மக்கள் ஓடோடியும் வந்து ஒரு ஊர்வலத்தைப் பார்ப்பதைப்போல நின்றுகொண்டனர். அரண்மனை கொம்புக்காரன் அரசன் அரண்மனையிலிருந்து புறப்பட்டதைத் தெரிவிக்க கொம்பு ஊதினான். உடனே அவனது சகாக்கள் நான்கு பேர் ஒருவர் பின் ஒருவராகத் தமது கொம்புகளை ஊதினார்கள்; இன்னும் இரண்டு பேர் தப்பட்டை அடித்தார்கள்.

பசவன் அரசனின் பின்னாலேயே இருந்துகொண்டு இருபுறமும் நின்று கொண்டிருந்த ஏழை மக்களுக்கு வழக்கம்போல நாணயங்

களை வீசினான். ஏழை மக்கள் அதை எடுத்துக்கொண்டு "வாழ்க நீ எம் அரசே" என்று வாழ்த்தினார்கள். நிறைந்திருந்த ஜனக்கூட்டம் இந்த வாழ்த்தொலியைத் திரும்பவும் முழக்கியது.

ஒரு காலத்தில் அரசன் இப்படிப் புறப்பட்டால் வழியின் இரு பக்கங்களிலும் ஊரின் ஆண், பெண் அனைவரும் கூடி நிற்பார்கள். இவன் கண்கள் கெட்டவை, இவன் மனம் கல் என்பது தெரிந்த பிறகும் பல வருடங்கள் மக்கள் அவன் பேரில் பிரியத்துடனேயே நடந்துகொண்டார்கள். இந்த விசுவாசம் தனக்கு வேண்டாம் என்று சொல்வதுபோல அவன் தவறான வழியிலேயே நடந்து மக்களின் பிரியத்தை இழந்தான். எவ்வளவு பெரியதாக இருந்த வாழ்த்தொலி இன்று எவ்வளவு பலஹீனமாகப் போய்விட்டது என்பதை பசவன் கண்டு கொண்டான். ஆனால் அவனுக்குத் தோன்றிய அந்த எண்ணம் அரசனுக்குத் தோன்றவில்லை. அவன் புத்தி அந்த வழியில் செல்வதையே மறந்துவிட்டிருந்தது.

ஊர் எல்லையைத் தாண்டி அரசன் அப்பங்கொளத்துக்குள் வேகமாகவே வந்து சேர்ந்தான். இவன் வருவதை அறிந்ததுமே அந்த அரண்மனைச் சேவகர்கள் அலறியடித்துக் கொண்டு ஓடி விட்டார்கள். பாவலக்காரர்கள் அவர்களைத் தடுத்து நிறுத்த முயற்சித்தனர். ஆனால் ஒரு ஆள் ஒருவனைத் துரத்திப் பிடிப்பதற்குள் பத்து பேர் ஓட்டம் பிடித்துக் கொண்டு விட்டார்கள். அரசன் அரண்மனை வாசலையடையும் பொழுது அங்கே இருந்தவர்கள் இரண்டு ஆண் வேலைக்காரர்களும், மூன்று பெண் வேலைக்காரர்களும் மட்டுமே.

அரசன் முன் வாசல்படிகளின் அருகே குதிரையை நிறுத்தி யதுமே காவல் தலைவனுடன் அன்று பேசிய வேலைக்காரி ஓடோடி வந்து தரையின் மீது விழுந்து வணங்கினாள். "எஜமான் என்னைக் காப்பாற்றவேண்டும். நான் ஏதும் தவறு செய்யவில்லை" என்றாள்.

அரசன், "நான் உன்னைக் காப்பாற்றப் போவதில்லை. நீ தான் அடுப்பின் மீது கருகப் போகிறாய்" என்று கூறிச் சிரித்து "இல்லையாடா நொண்டி?" என்றான். அது அவனுடைய ஹாஸ்யம். ஆனால் யாருக்கும் சிரிப்பு வரவில்லை. இருந்தாலும் அரசன் நகைச்சுவையோடு பேசியிருக்கும்போது மற்றவர்கள் அதை அநுபவிப்பது கடமை. முன்னும் பின்னும் இருந்தவர்களில், சிலர் ஹஹ்ஹஹ்ஹா என்று சிரித்தனர். பசவன் மிகவும் நெருங்கிய வனாதலால் அவன் இந்த நாடகம் நடிக்கவேண்டியதில்லை. அவன் சிரிக்கவில்லை; கம்பீரமாக "ஆமாம் அரசே," என்றான். வேலைக்

காரியிடம், "அரசர் எழுந்திருக்கச் சொல்கிறார், எழுந்திரு, உள்ளே வருகிறார், வழிகாட்டு" என்றான்.

வேலைக்காரி எழுந்திருந்தாள். கை கூப்பிக்கொண்டே கால்கள் நடுங்க பின்னாலேயே நடந்து சென்றாள். பின்னால் படிகள் இருப்பது நினைவில்லாமல் குதிகால் இடறி விழுந்தாள். எல்லோரும் கொல்லென்று சிரித்துவிட்டு அடக்கிக்கொண்டார்கள். அரசன் சிறிது சிரித்தான். ஒரு ஆளின் உதவியோடு குதிரையினின்றும் இறங்கினான்.

வேலைக்காரி எழுந்திருந்து வழிகாட்டியவாறு முன்னால் நடந்தாள். முதலில் அரசன், பின்னால் பசவன், அதற்கடுத்தபடி காவல் தலைவன் இப்படி உள்ளே நுழைந்தார்கள்.

அரசன் நடத்திய விசாரணையின் விவரங்களை இங்கே சொல்லத் தேவையில்லை. உண்மையில் விசாரணை நடத்தியது அவனல்ல, பசவன்தான். முதல் நாள் நடந்த பண்டிகையின் ஏற்பாடு, அதில் விளையாட்டுப் போட்டிகளில் வென்றவர்களுக்குக் கொடுத்த பரிசுகள், இரவு நடந்த விருந்து, இவைகளின் விவரங்கள், அந்த வேலைக்காரி, மற்ற பணிப் பெண்கள், காவல்காரர்கள் இவர்களின் மூலமாகத் தெரியவந்தன. விடிந்த பிறகு அந்த வேலைக்காரி காவல் தலைவனை ஏமாற்றிய சங்கதியும் தெரிய வந்தது. அவன் பசவனிடம், "இந்த முண்டையைக் கழுதை மேலேற்றி மடிகேரியில் ஊர்வலம் விட்டு புலையர்களிடம் தள்ளிவிடு; இந்தப் பன்றி மகளைக் கழுவிலேற்று" என்று உத்தரவிட்டான். பசவன், "சரி, அரசே," என்றான். பிறகு இவர்கள் அரண்மனையின் எல்லா அறைகளையும் பார்த்து என்னென்ன சாமானகள் இருக்கின்றன என அறிந்துகொண்டு அவைகளுக்கெல்லாம் பூட்டுப்போட்டு முத்திரை வைத்தனர். தேவம்மாஜியின் உள் அறையிலிருந்த துணிமணிகளையெல்லாம் ஒரு பெட்டியில் நிரப்பி அதற்கும் மற்ற பெட்டிகளுக்கும் பூட்டுப் போட்டு அவைகளை ஆட்களின் தலையில் வைத்து அனுப்பச் சொல்லி உத்தரவிட்டுவிட்டு மடிகேரிக்குத் திரும்ப குதிரை ஏறிப் புறப்பட்டனர்.

அப்பங்கொளத்திலிருந்து வரும் வழி மடிகேரி சம்பாஜெ வழியோடு சேருமிடத்தில் இவர்களுக்கு எதிரே ஐந்தாறு பேர் வருவது தெரிந்தது.

அரசனுக்கு முன்னால் சென்று கொண்டிருந்தவர்கள், "ஏ ஏ... குதிரையிலிருந்து இறங்குங்கள், அரசர் வந்து கொண்டிருக்கிறார்" என்று அவர்களை எச்சரித்தார்கள்.

ஒரு கணம் அந்த ஜனங்களுக்கு இந்தப் பேச்சு அர்த்தமானதாகவே தெரியவில்லை. அவர்கள் நன்றாகக் கவனித்துப் பார்த்ததும் குதிரையின் மீது அமர்ந்திருந்த அரசனைக் கண்டு கொண்டார்கள்.

குதிரையின் மீதமர்ந்திருந்த இருவரும் உடனே கீழே இறங்கி அங்கேயே நின்று தலை வணங்கி, "வணங்குகிறோம், மன்னவா" என்றார்கள்.

அவர்கள் சம்பாஜெ மணியகாரனின் மகனும், காவல் நிலையத் தலைவனும். முன்னால் வந்து கொண்டிருந்த சோமன் தரையில் விழுந்து அரசனை வணங்கினான். கொக்கன் தன் தலைமீதிருந்த தொட்டிலைக் கீழே வைத்து விட்டு சோமனைப் போலவே நிலத்தின் மீது விழுந்து வணங்கினான். அவன் மனைவியும் அவ்வாறே செய்தாள்.

114

அரசனுக்கும் பசவனுக்கும் தாங்கள் இந்த மனிதர்களைச் சந்தித்தது எவ்வளவு நல்லதாயிற்று என்று எப்படித் தெரியும்? பரிவாரத்தார் யாரோ வழிப்போக்கர்களை நிறுத்தி வைத்திருக்கிறார்கள் என்று அவர்கள் நினைத்தார்கள்; அரசன் குதிரையை முன்னால் செலுத்தினான்.

காவல் நிலைய அதிகாரி முன்னால் அடியெடுத்து வைத்து பசவனிடம், "அரசரிடம் விண்ணப்பம் செய்து கொள்ளவேண்டிய விஷயம் ஒன்றிருக்கிறது; இந்தக் குழந்தையை அவரிடம் காட்ட வேண்டும்," என்றான்.

"குழந்தை? ஏது குழந்தை?"

"அப்பங்கொளத்து அரண்மனைக் குழந்தையாக இருக்கலாம். மாப்பிள்ளைப் பிரபுவுக்கும் தங்கையம்மாவுக்கும் காட்டலாமென்று புறப்பட்டோம்."

பேசிக்கொண்டே அவர்கள் நகர்ந்துகொண்டிருந்தனர். இவர்கள் பேச்சு அரசனுக்கும் கேட்டுக்கொண்டிருந்தது. அப்பங்கொளத்துக் குழந்தை என்ற பேச்சைக் கேட்டதும் அரசன் குதிரையை நிறுத்தித் திரும்பிவந்தான். பசவனும் தன் குதிரையை இழுத்து நிறுத்தி பின்னுக்குச் செலுத்தினான்.

அரசன் காவல் நிலையத் தலைவனை, "நீங்களெல்லாம் யார்?" என்று கேட்டான். தலைவன், "நான் சம்பாஜெ காவல் சாவடியின் அதிகாரி, அரசே. விடியற் காலையில் யாரோ ஐந்தாறு பேர் குதிரையின் மீதமரந்து சரிவுப் பாதையில் திருட்டுத்தனமாக ஓடினார்கள். ஒருவன் மேட்டுப் பாதையில் வந்தான். அவர்களைப் பிடித்து வருகிறேன் என்று போனவன் அவர்கள் கைக்கு அகப்படவில்லை என்று சொல்லித் திரும்பிவந்தான். அவனைப் பிடித்து வைத்திருக்கிறோம். ஒரு குழந்தை அகப்பட்டது என்று இந்த கொக்கனும் அவன் மனைவியும் இதைத் தூக்கிக்கொண்டு மணியகாரர் வீட்டுக்கு வந்தனர். துணி மணிகளைப் பார்த்தால் அரச குடும்பத்துக் குழந்தைபோலத் தோன்றியது. இவன், "நான் அப்பங் கொளத்தவன்" என்றான். குழந்தையை இவனும் இவனது கூட்டாளிகளும் திருடிக்கொண்டு வந்து நகை நட்டுக்களைக் கழற்றிக்கொண்டு குழந்தையை வழியில் எறிந்து விட்டுப் போய் விட்டார்களோ என்று சந்தேகம், அப்பங்கொளத்தில் காட்டலாம் என்று அந்தக் குழந்தையையும் எடுத்துக்கொண்டு இவனையும் பிடித்து அழைத்து வந்திருக்கிறோம்," என்றான்.

அரசன், பசவன், பின்னால் வந்து கொண்டிருந்த அப்பங் கொளத்து ஆட்கள், காவல் தலைவன் எல்லோருக்கும் ஒரே நினைப்பு! நான்கைந்து குதிரைகளின் மீது தப்பி ஓடியவர்கள் சென்னபசவய்யன், தேவம்மாஜி, பரிவாரம் தான் இருக்கவேண்டும். ஆனால் இந்தக் குழந்தை அவர்களுடையதென்றால் இதை சம்பாஜெ அருகில் விட்டுச் செல்லக் காரணம்? அப்பங்கொளத்து ஆள் என்று சொல்பவன் அவர்களைத் துரத்திக்கொண்டு செல்வானேன்? அவன் திருடியிருந்து அவர்கள் துரத்திச் சென்றார்களென்றால் அவன் திரும்பி வந்தது எதற்காக?

அரசன் பசவனிடம், "குழந்தை அப்பங்கொளத்துதானா? அடையாளம் தெரியுதா பார்" என்றான். ஏற்கனவே குதிரையை விட்டிறங்கியிருந்த பசவன் தொட்டிலினருகில் சென்று குழந்தையைப் பார்த்தான், இதற்கு முந்தின கிராமத்தில் கொக்கனின் மனைவி அதை ஒரு தாயிடம் கொடுத்து முலைப்பால் ஊட்டச் செய்திருந்தாள். குழந்தை சுகமாகத் தூங்கிக்கொண்டிருந்தது. பசவன் போர்வையை விலக்கினான். முகத்தில் வெய்யில் பட்டதும் குழந்தை முகத்தைச் சிணுக்கியது. கொக்கனின் மனைவி, "ஐயோ வெய்யில் பாவம்" என்று குனிந்து தனக்கே போதும் போதாமலிருந்த புடவைத் தலைப்பை வெயில் படாதவாறு அதன் மீது

பிடித்துக்கொண்டாள். பசவன் குழந்தையின் முகத்தைப் பார்த்தான், துணி மணிகளைப் பார்த்தான். அரசனின் பக்கம் திரும்பி, "அரண்மனைக் குழந்தை தான் அரசே" என்றான்.

அரசன், "ஓடிப்போனவர்கள் குந்தை, தாயாகத்தான் இருக்க வேண்டும், இவன் அவர்களின் ஆள் போலத் தெரிகிறது. என்ன ஏது என்று விசாரி," என்றான்.

பசவன் சோமனின் பக்கம் திரும்பி, "நீ அப்பங்கொளத்து ஆளாடா?" என்று கேட்டான்.

115

இந்த விசாரணையெல்லாம் நடந்து கொண்டிருந்தபொழுது சோமனின் புத்தி பம்பரத்தைப் போல சுழன்று வேலை செய்து கொண்டிருந்தது. இந்த முக்கூட்டுப் பாதைக்கு வரும் முன்னர் அவன், "அப்பங்கொளத்துக்குப் போகிறோம். அங்கே அவர்களில் யாரையாவது பார்த்து இவர்கள் குழந்தையை எடுத்துக்கொண்டு மடிகேரிக்குச் செல்வார்கள், நானும் அவர்களோடு போவதா, இல்லாவிட்டால் அப்பங்கொளத்திலோ, வழியிலோ எங்காவது தப்பித்துக்கொண்டு புதரில் மறைந்துகொண்டு பிறகு மங்களூருக்குச் சென்று எஜமான், எஜமானியம்மாளிடம் குழந்தையின் விஷயத்தைச் சொல்வதா?" என்று யோசித்துக்கொண்டிருந்தான். யோசனை செய்து செய்து கடைசியில் அவன், "கரிங்காளியின் தயவு என்னை இந்தக் குழந்தை இருக்குமிடத்துக்குக் கொண்டு வந்து சேர்த்துள்ளது. கூடியவரையில் நான் அதனுடனேயே இருக்க முயற்சி செய்யவேண்டும்" என்று உறுதி செய்துகொண்டான். மடிகேரிக்குச் சென்றால் ராணி குழந்தையின் பேரில் கருணை காட்டுவாள், தன்னையும் எப்படியாவது காப்பாற்றக்கூடும், "பார்ப்போம் கரிங்காளி என்ன செய்கிறாளோ" என்று நினைத்து அவன் சிறிது மனச்சமாதானம் அடைந்திருந்த நேரத்தில் மான் குட்டி புலி வாயில் அகப்பட்டுக் கொண்டதைப் போல இவர்கள் அரசனின் எதிரில் வந்து சிக்கிக்கொண்டனர்.

சிறிது விசாரணைக்குப் பிறகு அவர்கள் தன் பக்கம் திரும்புவார்கள் என்பது சோமனுக்குத் தெரியும். என்ன சொல்வது?

பொய் சொல்வது தவறு. இன்னும் பத்து வருடங்கள் வாழலாம் என்ற நம்பிக்கை இருந்தால் இன்று பொய் சொல்லிவிட்டு நாளைக்கு கடவுளுக்குத் தப்புக் காணிக்கை செலுத்திவிடலாம், அரசரின் இதயம் கல்; பசவனின் இதயம் பாறுங்கல், காரணம் இல்லாமலே கொலை செய்யக் கூடியவர்கள் இவர்கள்; தன்னை இன்றோ நாளையோ தீர்த்துவிடப்போகிறார்கள், அப்படிப்பட்ட சமயத்தில் பொய் சொல்லக்கூடாது, உண்மையைச் சொல்லலா மென்றாலோ அன்னமிட்ட எஜமானுக்கும், எஜமானிக்கும் துரோகம் செய்வது போலாகும். அவர்கள் மங்களூருக்குச் செல் வார்கள்; அரசனுக்குக் கடிதம் எழுதுவார்கள், எல்லாம் சரி தான். அப்படிச் செய்ய அவர்களுக்கு உரிமையுண்டு, ஆனால் அவர்கள் தப்பித்துக்கொண்டு மங்களூருக்கு ஓடி விட்டார்கள் என்று சொல்வதற்கு அவர்கள் கஞ்சியைக் குடித்த தன் நாக் கிற்கு ஏது அதிகாரம்? எப்படிச் சொன்னாலும் ஏதோ ஒரு வகை யில் தவறு தான். எதையுமே சொல்லாமலிருந்து விடுவது நல்லது, இவர்கள் தன்னை என்ன செய்தாலும் அது கடவுளின் விருப்பம், என்ன செய்வது? ஆனால் தான் மாத்திரம் தனது எஜமான, எஜமானியருக்குத் தொல்லை தரக்கூடிய எதையும் தன் வாயால் சொல்லக்கூடாது.

சோமன், பசவன் தன்னைக் கேள்வி கேட்பதற்கு முன்னாலேயே இந்த நிச்சயத்துக்கு வந்து விட்டான். அவன், "ஐயோ எஜமான், இனி அப்பங்கொளம் யார், நான் யார்?" என்றான்.

சம்பாஜெ காவல் நிலையத் தலைவன், "என்னடா இப்படிச் சொல்லுகிறாய்? நீ அப்பங்கொளத்து ஆள் சோமன் என்று சொல்லவில்லை?" என்று கேட்டான்.

சோமன், "சின்ன எஜமானிடம் சொன்ன பேச்சு பெரிய எஜ மானிடம் நடக்குமா?" என்றான்.

அரசனின் பின்னாலிருந்த அப்பங்கொளத்து ஆட்கள் சிரித்தார் கள். காவல் தலைவன் இவனை அடையாளம் கண்டு கொண்டான். "இவன் அப்பங்கொளத்து ஆள் தான் அரசே" என்றான்.

அரசன் பசவனிடம், "இவன் என்னமோ ரொம்பவும் கெட்டிக் காரத்தனமாகப் பேசுகிறான்" என்றான்.

பசவன், "இந்த வேலைக்காரப் பயல்களில் ஒவ்வொருத்தர் இப்படி வளர்ந்து விடுகிறார்கள் அரசே. இவர்கள் கெட்டிக்காரர் கள் போல ஏதாவது உளரவேண்டியது. எஜமான் அதை மெச்சி

சிரிப்பது. எஜமான் சிரித்து விட்டாரே என்று இவர்கள் அதிகப் பிரசங்கித்தனம் இன்னும் ஜாஸ்தி, எஜமானரும் இன்னும் அதிகமாக மெச்சுவது, இந்த முண்டங்களின் தோலை உரித்தால் தான் புத்தி வரும்" என்றான்.

அரசன் சோமனிடம், "ஏய் பன்றி மகனே, வாய்க்கு வந்ததை உளறுதே, நாக்கை அறுத்து விடுவேன். சம்பாஜெயில் ஓடியவர்கள் உன் எஜமான், எஜமானி தானேடா?" என்று கேட்டான்.

"அதை எப்படிச் சொல்வது அரசே?"

"அப்படியென்றால்? உனக்குத் தெரியாதா?"

பசவன், "தெரிந்திருந்தாலும் அது தான் சொல்லக்கூடியதல்ல என்கிறான், அரசே," என்று அரசனிடம் சொல்லிவிட்டு, "அப்படித்தானேடா?" என்று சோமனைக் கேட்டான்.

சோமன், "உங்களுக்குத் தெரியாததா, எஜமான்" என்றான்.

"அவர்கள் அப்படி ஓடிப் போனால் குழந்தை ஏன் இங்கே கிடந்தது?"

"ஆண்டவன் எண்ணத்தை யாரறிவார், எஜமான்?"

"இது அவர்கள் குழந்தைதானா?"

"அதை நான் சொல்ல முடியாது எஜமான். பெற்றவர்கள் தான் சொல்லவேண்டும்."

அரசனுக்குக் கோபம் வந்தது. "இந்த நாய்க்கு பயமே இல்லையே. உண்மையைச் சொன்னால் சரி. இல்லாவிட்டால் கழுவிலேற்றுவோம் என்று சொல்," என்றான்.

சோமன் தடாலென்று பசவனின் கால்களில் விழுந்தான். "தங்கள் காலில் விழுகிறேன், எஜமான். என்னைக் கழுவிலேற்றுங்கள். வேண்டாம் என்று சொல்லவில்லை. என் எஜமான், எஜமானியின் குழந்தையைக் காப்பாற்றுங்கள். நான் சந்தோஷமாக உயிரை விடுகிறேன்," என்றான்.

அரசன், "சந்தோஷமாக இல்லாவிட்டால் அழுது கொண்டே சாவாயாம். உன் எஜமான்-எஜமானியை என்ன செய்ய வேண்டுமென்று சொல்லாதே. கேட்டதற்கு உண்மையாக பதில் சொல்," என்றான்.

"உண்மை சொன்னாலும் சாகவேண்டும், பொய் சொன்னாலும் சாகவேண்டுமென்றால் நான் என்ன செய்யட்டும், அரசே? தங்கள் விருப்பம் போல் என்ன செய்தாலும் அதற்கு உடன்

படுகிறேன்," என்று கூறி சோமன் எழுந்து பின்னால் தள்ளி நின்றான்.

அரசனுக்கு இவனுடைய துணிச்சலைக் கண்டு ஆச்சரியம். மனத்திற்குள்ளாகவே அவனைப் பாராட்டினான். ஒரு ஆளிடம் இவ்வளவு அன்பையும் விசுவாசத்தையும் சம்பாதித்த தனது தங்கையின் கணவனின் மீது அவனுக்குப் பொறாமை ஏற்பட்டது. மேலும் இந்தக் கேடுகெட்ட வேலைக்காரன், அற்பப் புழு, தன்னை இவ்வளவு கேவலப்படுத்துவதா என்று அவன் வெகுண்டான். தப்பிச் சென்றுவிட்ட தங்கை, அவள் கணவன் இவர்கள் மேலுள்ள கோபத்தை அச்சமயத்தில் தீர்த்துக்கொள்வதற்கு இந்தப் பயல் அகப்பட்டான் என்று அவனுக்குத் தோன்றியது. அவன் பசவனிடம், "டேய் நொண்டி, ஒரு கழுமரம் நட்டு இவனை இங்கேயே கழுவிலேற்று; சீக்கிரம்" என்றான். பசவன், "அரசர் அரண்மனைக்கு ஏகலாம். நான் இவனை முடித்துவிட்டு வருகிறேன்" என்றான்.

அரசன், "நான் சொன்ன பேச்சை நீ நிறைவேற்றும் அழகைப் பார்த்தாய்விட்டது; இது என் எதிரில் நடக்கட்டும்," என்றான்.

மேலே நடந்தவைகளை விவரமாக வர்ணிக்க வேண்டிய தேவையில்லை. அருகில் இருந்த மரத்தின் ஒரு கிளையை வெட்டி இரண்டு ஆள் உயரத்துக்கு ஒரு கழு மரத்தைத் தயாரித்து அதை முக்கூட்டுச் சாலையின் ஓர் ஓரத்தில் நட்டார்கள்; பசவன் காவல் தலைவனையும் அப்பங்கொளத்து ஆட்களையும் அழைத்து சோமனைப் பிடித்துவரச் செய்து கழுமரத்தின் நுனி அவன் வயிற்றைக் கிழித்துக்கொண்டு முதுகின் பக்கம் வருமாறு அவனை அதிலே ஏற்றச் செய்தான். சோமன், "கரிங்காளி, என் தாயே, இதுவும் உன் இஷ்டம். எஜமானையும் எஜமானியையும் காப்பாற்று தாயே. அவர்களின் குழந்தையையும் காப்பாற்று" என்று கழுமரத்தின் கூர்மையான முனை தன் வயிற்றைக் கிழித்த போது அலறினான். அடுத்த கணம் அவன் உயிர் அவ்வுடலை விட்டகன்றது. அவன் வாய், கண், மூக்கு இவைகளிலிருந்து ரத்தம் வழிந்தது.

இந்தக் கொடுமை நடந்தபொழுது மனம் கூசாமல் இருந்தவர்கள் அரசனும் பசவனும்தான். சோமனைக் கழுவிலேற்றிய ஆள் கூட அந்தக் கணம் வரையில் கண்ணைத் திறந்து கொண்டிருந்தவன் பிறகு கண்ணை மூடிவிட்டான். கழுமரத்தில் நட்டிருந்த அந்த உடலைப் பார்க்க அவர்கள் யாருக்கும் பொறுக்கவில்லை.

அரசன், "தொட்டிலை உன் எதிரில் வைத்துக்கொள்ளடா, நொண்டி" என்று பசவனுக்குச் சொல்லிவிட்டு அவன் அதைக் கையில் எடுத்துக்கொண்ட பிறகு தன் குதிரையை ஊரை நோக்கித் திருப்பினான். இரண்டு கஜதூரம் போவதற்குள் சட்டென்று திரும்பி "டேய் பசவா, அந்த வேசி மகனின் பிணம் மூன்று நாட்களுக்குக் கழு மரத்திலேயே கிடக்கட்டும். காவல் போட்டுவை. கழுகுகள் கொத்தித் தின்னட்டும். அழுகி நாறட்டும்," என்றான். பசவன், "சரி அரசே" என்றான். அரசன் குதிரையைத் திருப்பிக் கொண்டு மீண்டும் ஊரை நோக்கிச் செலுத்தினான்.

அப்பங்கொளத்திலிருந்து வந்திருந்தவர்களில் நால்வரைக் காவலுக்குப் போட்டுவிட்டு பசவன் காவல் தலைவனோடும் மற்ற ஆட்களோடும் அரசனின் பின்னால் சென்றான்.

அரசனும் அவன் பரிவாரமும் பத்து கஜங்கள் சென்ற பிறகு சம்பாஜெ மணியகாரரின் மகன் காவல் நிலையத் தலைவனிடம், "இனி திரும்பிப் போகவேண்டியதுதானே?" என்று கேட்டான்.

தலைவன், "அவ்வளவுதான்" என்றான்.

"இவன் யாரோ திருடன் என்று நினைத்து நாம் அழைத்து வந்தோம். எவ்வளவு நேர்மையான மனிதன்!"

"ஆமாம். எவ்வளவு பெருந்தன்மை. இவ்வளவுக்கும் கௌடனோ, குடகனோ கூட அல்ல."

கொக்கனும் அவன் மனைவியும் இந்தப் பேச்சைக் கேட்டுக் கொண்டுதான் இருந்தார்கள். கொக்கன் மனைவியிடம், "கேட்டாயா, மணியகாரர் மகன் பேச்சை?" என்றான். அவள், "பேசிக்கொள்ளட்டும் போ. உனக்கென்ன? 'நீங்கள் குலம் உள்ளவர்கள் நடத்தை தவறலாம், எங்களுக்கு இருப்பது நடத்தை ஒன்றுதான்' என்று சொல்" என்றாள்.

அவர்கள் எல்லோரும் அங்கிருந்தே தங்கள் ஊருக்குத் திரும்பினர்.

116

வெகு நாட்களாகக் குதிரையின்மீது ஏறுவதையே விட்டு விட்டிருந்த அரசன் அப்பங்கொளத்துக்கு குதிரையின்மீது

அமர்ந்து செல்லப்போகிருனென்பது ராணிக்கு சிறிது கவலைக் கிடமாக இருந்தது. வரவேண்டிய நேரம் ஆனவுடன் அவள் மாடிச் சாளரத்தின் வழியாக அவன் வருகிருனு என்று இரண்டு மூன்று முறை பார்த்து அவன் வருவதற்கான அறிகுறிகள் காணுமல் கலவரமடைந்தாள். கடைசியில் தூரத்தில் அவன் வருவது தெரிந்தது. அப்பொழுது அவளுக்கு நிம்மதி ஏற்பட்டது.

ராணியின் அருகில் நின்றிருந்த ராஜகுமாரி தந்தையின் பின்னுல் பசவன் குதிரையின்மீது ஒரு தொட்டிலை வைத்துக் கொண்டிருப்பதைக் கண்டாள்; "அம்மாஜி, குழந்தையைக் கொண்டுவந்துவிட்டார்கள் போலிருக்கிறது," என்ருள்.

இது எப்படி முடியும்? ராணிக்கு விளங்கவில்லை. சென்ன பசவய்யனும் தேவம்மாஜியும் தப்பி ஓடிவிட்டார்களென்று சொன்னது பொய்யா? குழந்தை மாத்திரம் எப்படித் தனியாயிற்று? அவள், "மாப்பிள்ளை பின்னுல் வருகிருராம்மா?" என்று கேட்டாள்

"காணவில்லையே அம்மாஜி."

அப்படியானுல் இதன் பொருள் என்ன? அங்கே ஏதோ பேச்சு வார்த்தை நடந்து, தந்தை தாய் தப்பி ஓடாமலிருப்பதற்காகக் குழந்தையை அரசன் அடகாகக் கொண்டு வந்திருக்கவேண்டும். இப்பொழுது என்ன செய்வது? கிரகங்களின் சக்தியே வெல்கிறதோ? கடவுள் கைவிட்டு விடுவாரோ?

அரசன் அரண்மனையைச் சேரும் வேளையில் ராணி மிக்க வருத்தத்துடன் எதிரில் வந்தாள். குழந்தை வந்துவிட்டதென்ற ஆதரத்தில் ராஜகுமாரி தாயின் பின்னுலேயே தடதடவென்று ஓடிவந்து அவளுக்கும் முன்னுல் சென்று "அப்பாஜி, குழந்தையைக் கொண்டுவந்துவிட்டீர்களா?" என்று கேட்டுவிட்டு முன்னுல் ஓடிப்போய் பசவனின் எதிரில் சென்று தொட்டிலின் அருகே நின்றுகொண்டாள்.

பின்னுலிருந்து ஓர் ஆள் பசவனிடம் ஓடிவந்தான் பசவன், "தொட்டிலை இறக்கு என்று அவனிடம் சொல்லி அவன் அதை இறக்கிய பிறகு குதிரையினின்றும் இறங்கினுன்.

ராஜகுமாரி அந்த ஆளின் கையைப் பிடித்து இழுத்து தொட்டிலைத் தாழ்த்துமாறு செய்து குழந்தையை எடுத்துக்கொண்டு முத்தமிட்டாள்.

"அம்மாஜி, நம்ம தங்கம்" என்று கூறி ஆளிடம், "தொட்டிலை உள்ளே கொண்டுவா" என்று சொன்னுள்.

மகளின் இந்தக் குதூகலம் அரசனுக்குச் சிறிதும் வேண்டியிருக்கவில்லை. அவன் முகத்தைச் சிணுக்கிக்கொண்டு, "போம்மா, நீ உள்ளே போ, தொட்டில் உள்ளே வரவேண்டாம்" என்றான். பசவனிடம், "ஏய் நொண்டி, இந்தக் குழந்தையை ஸ்திரீகள் விடுதிக்கு அனுப்பு, பார்த்துக்கொள்ளச் சொல்லி அந்த தொட்டியிடம் சொல்," என்றான்.

பசவன், "சரி அரசே" என்றான். அரசன், "குழந்தையை யாராவது அபகரித்துக் கொண்டு போய்விடப் போகிறார்கள், ஜாக்கிரதை. தப்பி ஓடிய முண்டங்கள் திரும்பி வந்து காலில் விழவேண்டும். அதன் பிறகு அதை அவர்களிடம் கொடுக்கவேண்டும். அது வரையில் யாரும் அதை நெருங்கவிடக் கூடாது. தலை போய்விடும், ஜாக்கிரதை" என்றான்.

பசவன் "சரி அரசே" என்றான்.

ராணி பசவனிடம், "தங்கையம்மாவின் குழந்தை இல்லையா பசவா?" என்று கேட்டாள்.

"ஆமாமம்மா."

"அவளும் மாப்பிள்ளையும் தப்பி ஓடிவிட்டது நிஜம்தானா?"

"இருக்கவேண்டும் தாயே."

"அவர்கள் விட்டுச் சென்றார்களென்பதற்காக நாமும் விட்டுவிட முடியுமா? தொட்டிலை உள்ளே வரவழை" என்றாள்.

அரசனுக்கு இது சம்மதமில்லை. ஆனால் அவனுக்குத் தெரியும். ராணி இவ்வாறு மாறுபட்ட அபிப்ராயத்தைத் தெரிவிக்கும் பொழுது அவள் விருப்பம்தான் நிறைவேறவேண்டும். இவன் கோபம் கொண்டு நான்கு கூச்சல் போடலாம், அவ்வளவுதான்.

அரசன், "அண்ணி வளர்க்கட்டும் என்பதற்காகத்தான் அவள் குழந்தையை விட்டுவிட்டுப் போனாளா? என்ன பேச்சுப் பேசுகிறாய்? இவர்கள் உறவோ, அன்போ, சலுகையோ, என்னத்தைச் சொல்ல?" என்றான்.

ராணி, "எதுவும் நாம் கேட்டுக் கொண்டு வந்த அளவுதான். நாம் அவர்களுக்கு என்ன குறைவு செய்தோம்? இருந்தாலும் அவர்களுக்குத் தெரியவில்லை," என்றாள்.

"உனக்குத் தெரிகிறதல்லவா? நீ கற்றுக் கொடு" என்று கத்திவிட்டு தன் அறைக்குச் சென்றான்.

ராணியின் பேச்சுக்கு அரசன் சம்மதம் தெரிவித்த அழகு இது என்று அறிந்துகொண்ட பசவன் ஆளிடம், 'தொட்டிலை ராணி

வாசத்திற்கு எடுத்துச் செல்' என்று உத்தரவிட்டான். ராணியும் ராஜ குமாரியும் தொட்டிலை எடுத்துக்கொள்ளச் செய்து உள்ளே சென்றார்கள்.

அரசன் தன் அறையிலிருந்து "ஏய் நொண்டி" என்று கூப பிட்டான். பசவன் அங்கே ஓடினான்.

அரசன், "பாருடா, தொட்டவ்வாவிடம் சொல்லச் சொன் னேனே அதை உன் அம்மாஜியிடமும் சொல். குழந்தை சிறை யிலிருப்பதாக நினைத்துக் கொள்ளவேண்டும். யாரும் அருகில் நெருங்கக் கூடாது. தொட்டவ்வா கொடுக்கவேண்டிய பாலை இவர்கள் கொடுக்கட்டும் அவ்வளவே. துணிமணிகள் அணிவிக் கட்டும், பார்த்துக் கொள்ளட்டும். நான் கேட்டபோது குழந்தை யைக் கொண்டு வந்து ஒப்புவிக்கவேண்டும். இதற்கெல்லாம் சம்மதித்தால் குழந்தையை உள்ளே விடு. இல்லாவிட்டால் இப் பொழுதே வெளியே எடுத்துச் சொல்லச் சொல்," என்றான்.

ராணி எதிரே இருந்தால் அரசனால் முரண்டு பிடித்து வெல்ல முடியாது; ஆனால் மறைவில் அவன் அடம் பிடிப்பான்; சேவகன் மூலமாகத் தன் விருப்பத்தைச் சாதித்துக்கொள்ளக் கூடியவன். அரசனின் கட்டளையை நிறைவேற்றாமல் பசவன் திரும்பமாட் டான். இது அரசனின் நம்பிக்கைக்கு அஸ்திவாரம்.

பசவன், "சரி அரசே" என்று கூறிவிட்டு ராணி வாசத்திற்கு வந்து ராணியிடம் அரசனின் உத்தரவைச் சொன்னான்.

அப்பொழுது ராஜகுமாரி குழந்தையைக் கட்டிலில் கிடத்தி விட்டு தான் நிலத்தின் மீது முழங்கால்களை ஊன்றிக்கொண்டு அதனுடன் விளையாடிக்கொண்டிருந்தாள். குழந்தை சிறியது தான்; இருந்தாலும் இந்த முகம் தன்னை விரும்பும் முகம் என் பதை அறிந்துகொண்டது. அதுவும் அவளைப் பிரியத்தோடு ஏற்றுக்கொண்டு சிரித்தபடி அவள் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தது.

ராணி பசவனிடம், "மாப்பிள்ளையை அரசர் தமதிஷ்டப்படி என்ன வேண்டுமானாலும் செய்யட்டும். குழந்தை அரச வம்சத் துக் குழந்தை. அது அரண்மனையிலேயே வளரட்டும் என்கிறேன். ஆட்களின் கையில் ஒப்படைக்கவேண்டாம். அவ்வளவுதான்," என்றாள்.

பசவன், "சரியம்மா" என்றான். அரசனிடம் செல்வதற்காக அவன் திரும்பி இரண்டடி எடுத்து வைப்பதற்குள்ளாக ராணி,

"என்னவாயிற்றும் பசவய்யா? குழந்தையை விட்டுவிட்டு அவர்கள் போய்விட்டார்களாமா?" என்று கேட்டாள். கொக்கன், அவன் மனைவி, காவல் சாவடித் தலைவன் எல்லோரும் சொன்ன சங்கதிகளை பசவன் சுருக்கமாக ராணிக்கு எடுத்துச் சொன்னான். கூடவே, சோமன் ஏதோ கெட்ட எண்ணத்தோடு குழந்தையைத் தன்னிடம் வைத்துக் கொண்டிருந்திருக்கவேண்டும். அவன் எண்ணம் ஈடேறவில்லை என்ற தன் ஊகத்தையும் சொன்னான்.

இந்தக் கதையைக் கேட்ட ராணி நடந்தது என்னவாக இருக்குமென்று ஊகித்துக் கொண்டாள். சோமன் தன் எஜமானுக்கும் எஜமானிக்கும் துரோகம் செய்யக் கூடியவனல்ல. குழந்தை அதைச் சுமந்து சென்றவனுக்குத் தெரியாமல் சரிவில் கீழே விழுந்து விட்டிருக்கவேண்டும். சிறிது தூரம் சென்ற பிறகு அது தொட்டிலில் இல்லாததைக் கண்டு அதைத் தேடி எடுத்துச் செல்ல சோமன் வந்திருக்கவேண்டும். இப்படி அவள் முடிவு செய்தாள். "அந்த சோமன் என்ன சொன்னான்?" என்று கேட்டாள்.

"எஜமான்—எஜமானி தப்பி ஓடிவிட்டார்கள் என்பதையே அவன் சொல்ல மறுத்துவிட்டான் அம்மாஜி. குழந்தை அவர்களுடையதா என்று கேட்டால் ஆமாம் என்று சொல்லவில்லை. அரசருக்கு ஏக கோபம்."

"அவன் எங்கே?"

"அரசர் மிகவும் கோபம் கொண்டு அவனை அங்கேயே கழுவில் ஏற்றிவிட்டார்."

"சோமனையா?"

"ஆம் அம்மாஜி."

ராணி "ஐயோ" என்று அலறினாள். கிரகங்களின் சக்தியே அதிகமாக இருக்கிறது என்று தோன்றி, கலவரம் கொண்டு, "ஒரு ஜீவன் போய்விட்டது. இனியாவது எந்த ஜீவனுக்கும் ஆபத்து ஏற்படாமல் குலதெய்வம் காப்பாற்றவேண்டும்," என்று வேண்டிக்கொண்டு மகளுடன் விளையாடிக் கொண்டிருந்த குழந்தையின் பக்கம் திரும்பினாள். பசவன் அரசனிடம் சென்றான்.

இவர்களை எதிர்கொண்டழைத்து உபசரித்து மரியாதை காண்பித்து வழி அனுப்பினார்கள். இந்த மக்களின் ஆடையலங்காரங்கள், இவர்களின் மரியாதை, உபசரிப்பு; கொம்பு, சங்கு, தாரை, தப்பட்டை இந்த சப்பிரமங்கள் இவைகளையெல்லாம் கண்டு ஆச்சரியப்பட்ட கர்னல் பிரேசர் இந்த மக்களை அரசாள்வது கஷ்டமாக இருக்கக்கூடாது என்று நினைத்துக்கொண்டான்.

மடிகேரியிலும் குடகர்களின் தலைவர்கள் உத்தய்யதக்கனைப் பிரமுகனாக வைத்துக்கொண்டும், பேட்டை வியாபாரிகள் சிக்கண்ண செட்டியைத் தலைவனாக வைத்துக்கொண்டும், ஊரின் இதர பிரமுகர்களோடு சேர்ந்து இவர்களை வரவேற்றார்கள். கர்னல் பிரேசர் துபாஷின் மூலமாக தனது அறிக்கையைச் சுருக்கமாகத் தெரிவித்தான்: "நாங்கள் உங்கள் நண்பர்களாக வந்திருக்கிறோம். உங்கள் விருந்தோம்பலை வேண்டுகிறோம். ஆனால் எங்களுக்கு எல்லா உதவியையும் நீங்கள் செய்துவிட்டு எங்களிடமிருந்து ஏதும் நீங்கள் உதவி பெறாமல் இருக்கக்கூடாது என்பதற்காகவே எங்கள் சேவையை உங்களுக்குத் தர முன் வந்துள்ளோம். நீங்கள் அதை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று வேண்டுகிறோம். குடகின் பிரஜைகள் சுகமாக வாழவேண்டும், அவர்கள் விருப்பம் நிறைவேறவேண்டும், அதற்கு நாம் உதவி புரியவேண்டும் என்பதே எங்கள் விருப்பம். எங்களின் இந்த வேண்டுகோள் உங்கள் தலைவரான போபண்ணாவின் சம்மதத்தைப் பெற்றிருக்கிறது. அவர் எங்களை அழைத்து வந்திருக்கிறார் உங்கள் வரவேற்பால் நீங்களும் உங்கள் சம்மதத்தைத் தெரிவித்திருக்கிறீர்கள். இந்த வரவேற்பின் அடிப்படையான கௌரவத்திற்காக நாங்கள் உங்களுக்கு நன்றி கூறுகிறோம்."

நிறைந்திருந்த கூட்டம் சந்தோஷ ஆரவாரம் செய்தது. பிரேசர் போபண்ணாவோடு முன்னால் நடந்து சென்று தனக்காக ஏற்படுத்தியிருந்த விடுதியை அடைந்தான்.

மத்தியான்னம் அவன் போபண்ணாவின் வீட்டிற்கு வந்தான். போபண்ணாவை அழைத்துக் கொண்டு தனது விடுதிக்குத் திருப்பிச் சென்றான். இருவரும் அங்கே அமர்ந்து இனி கைக்கொள்ளவேண்டிய ஏற்பாடுகள் என்ன என்று யோசிக்கலானார்கள்.

பேச்சுவார்த்தை ஆரம்பிப்பதற்கு முன்னால் போபண்ணா லக்ஷ்மீநாராயணய்யாவுக்குச் சொல்லியனுப்பி அவரும் வந்து சம்பாஷணையில கலந்கொள்ளுமாறு அழைப்பு விடுத்தார்

சுள்யத்து ஜனங்கள் இந்தச் செய்தியைத் தத் தமக்குள் ளாகவே பேசிக்கொண்டு அசைபோட்டுக் கொண்டிருந்தனர். செய்தி கொஞ்சம் விசேஷமானது எனவே அதைப் பற்றிப் பேசு வதில் அதிக சுவாரஸ்யம் இருந்தது. விஷயம் என்னவென்று சென்னபசவய்யனும் கேட்டுத் தெரிந்துகொண்டான்.

குழந்தை தங்களுடையது, அப்பங்கொளத்து ஆள் எனப்படு வது சோமன், சம்பாஜெயின் மணியகாரர், காவல் சாவடித் தலைவன் இவர்களோடு அப்பங்கொளத்துக்குச் சென்ற குழந்தை அரசனின் காவலாளிகள் கையில் தான் போய்ச் சேரும். தாங்கள் தப்பி ஓடி வந்த செய்தி இதற்குள்ளாக அம்பலமாகியிருக்கும். காவலாளிகள் குழந்தையையும் சோமனையும் மடிகேரிக்கு இட்டுச் செல்வார்கள்; அரசனிடம் ஒப்படைப்பார்கள். அரசன் குழந்தையையும் சோமனையும் கொல்லாமல் விடுவானா' விட மாட்டான்.

இப்படி நினைத்து சென்னபசவய்யன் தனக்குள்ளாகவே தத்தளித்தான். விஷயத்தை தேவம்மாஜிக்குத் தெரியப்படுத்து வதா வேண்டாமா என்று யோசித்தான். வெகு நேரம் சாதக பாதகங்களை யோசித்த பிறகு எல்லாவற்றையும் அவளிடம் சொல்லிவிட வேண்டும், மேற்கொண்டு செய்யவேண்டிவைகளை யெல்லாம் அவளோடு ஆலோசித்தே செய்யவேண்டும் என்று தீர்மானித்துக்கொண்டான். தான் தெரிந்துகொண்ட செய்தியை தேவம்மாஜிக்குத் தெரிவித்தான்.

காலையில் தொட்டிலில் குழந்தையைக் காணோம் என்ற பொழுதே தேவம்மாஜிக்கு அதைப் பற்றிய நம்பிக்கை அடியோடு போய்விட்டது. கொஞ்ச நஞ்சம் ஒட்டிக்கொண்டிருந்த ஆசையும் இந்தச் செய்தியைக் கேட்ட பிறகு மடிந்துபோய்விட்டது. இந்தக் கதி ஏற்படவேண்டுமென்பதற்காகவா கடவுள் சிறையிலிருந்த தன்னிடம் தன் கணவனைக் கொண்டு வந்து சேர்த்து இந்தக் குழந்தையைத் தனக்களித்தார்? என்ன அநியாயம், என்ன பாதம் இந்த உலகில்! இந்தக் கசப்பை வயிறு நிறைய உண்டு வேதனைப்பட தன்னைப்போன்ற ஜீவன்கள் எவ்வளவு கோடி! இல்லை, தன்னைப்போன்ற ஜீவன்கள் அதிகம் இல்லை. இது போன்ற சகிக்க இயலாத துயரம் தன்னைப்போல கோடியில் ஒருத்திக்குத்தான் வருகிறது, நமது பூர்வ கர்மம் நம்மைத் தின்கிறது, என்று அவள் பொறுக்க முடியாத அத்துயரத்தோடு தனது இந்த எண்ணங்களின் வேதனையையும் சேர்த்துக்கொண்டு

அத்துயரத்தை இன்னும் கசப்பாக்கிக்கொண்டாள். வேதனையில் வெந்து நிலத்தின் மீது சுருண்டாள்.

குழந்தை, சோமன் இவர்கள் விஷயம் என்னவாயிற்றென்று தெரிந்துகொள்வதற்கு என்ன செய்யலாம் என்று சென்னபசவய்யன் யோசித்தான். எதற்கும் தான் மங்களூர் சென்று அங்குள்ள ஆங்கில அதிகாரியைக் கண்டு அவன் உதவியைப் பெறுவது நல்லது. மனைவி உடனே பிரயாணத்தைத் தொடரக் கூடிய நிலையில் இருக்கவில்லை; மறுநாள் புறப்படுவது சாத்தியமாகலாம். குதிரையின் மீது உட்கார்ந்து செல்வது கஷ்டம் என்றால் தேவம்மாஜியை ஒரு பல்லக்கில் உட்கார வைத்துக் கொண்டு செல்லலாம். மங்களூருக்குச் சென்று யாரையாவது மடிகேரிக்கு அனுப்பி குழந்தையின் சங்கதி என்ன வாயிற்றென்று விசாரிக்கச் செய்யலாம்.

ஆனால் குழந்தையைப் பற்றி அறிந்து கொள்வதற்காக இவன் இவ்வளவு ஏற்பாடுகளைச் செய்யவேண்டிய அவசியம் ஏற்படவில்லை. தேவம்மாஜிக்கு அன்று ஜுரம் வந்து விட்டது. அவள் சுள்யத்தை விட்டு பல்லக்கில் கூட பிரயாணம் செய்யும் நிலையில் இருக்கவில்லை. சென்னபசவய்யன் அவள் படுக்கையின் அருகிலேயே உட்கார்ந்திருக்க வேண்டியதாயிற்று.

மணியகாரரின் உதவியோடு மனைவிக்கு மருந்து, பத்தியம் முதலியவைகளைக் கொடுத்துக்கொண்டு அவன் இரண்டாவது நாளையும் சுள்யத்திலேயே கழித்தான்.

சம்பாஜெ மணியகாரரின் மகன், சாவடித் தலைவன், கொக்கன், அவன் மனைவி ஆகியோர் மாலையில் ஊருக்குத் திரும்பி வந்து நடந்த எல்லாச் சங்கதிகளையும் ஊராருக்குத் தெரிவித்தனர். மறுநாள் மாட்டு வண்டிக்காரர்களின் மூலமாக இந்தச் செய்தியும் சுள்யத்திற்கு வந்து சேர்ந்தது. சென்னபசவய்யனின் காதுகளிலும் விழுந்தது. குழந்தை அரசனின் கைகளில் சிக்கியிருக்கிறது; சோமன் அவன் கோபத்திற்கு முதல் பலியானான்; அரசனிடமிருந்து தப்பித்துக்கொள்வதற்காகத் தான் செய்த முயற்சி விபரீதமாக முடிந்துவிட்டதை சென்னபசவய்யன் உணர்ந்தான். இந்தச் செய்தியை அவன் உடனே தேவம்மாஜிக்குத் தெரிவிக்கவில்லை; இரண்டு நாள் கழித்துச் சொல்லலாம் என்று இருந்தான்.

மறுநாள் தேவம்மாஜி சிறிது குணமடைந்தாள்; ஜுரம் விட்டிருந்தது. சென்னபசவய்யன் சுள்யத்து மணியகாரரிடம் வேண்டிய

உதவியைப் பெற்றுக்கொண்டு மங்களூரை நோக்கிப் புறப்பட்டான். ஒரு நாள் புத்தூரில் தங்கி மறுநாள் மாலை மங்களூரை அடைந்தான். தான் மங்களூர் வந்திருப்பதையும், கலெக்டரைப் பார்க்க விரும்புவதையும் தெரிவித்து அவனுக்கு ஒரு கடிதம் எழுதி அனுப்பினான்.

118

இவனுடைய கடிதத்தைக் கண்டு கலெக்டர் மிகவும் ஆச்சரியம் அடைந்தான். அவன் சென்னபசவய்யனை உடனே வரும்படி அழைத்து எல்லாச் சங்கதிகளையும் கேட்டுத் தெரிந்து கொண்டான். தனது மேலதிகாரிகளான கும்பினியாரின் விருப்பம் நிறைவேறுவதற்கு இவ்வளவு சீக்கிரம் சந்தர்ப்பம் கிடைத்ததே என்று அவனுக்கு சந்தோஷம். அவன் சென்னபசவய்யனிடம், "அப்பங் கொளத்திலிருப்பது அபாயம் என்று தெரிந்த உடனேயே நீங்கள் இங்கே வந்தது நல்லதாயிற்று. உங்களுக்கும் உங்கள் மைத்துனரான அரசருக்கும் இடையேயுள்ள மனஸ்தாபத்தை நமது ரெஸிடெண்ட் துரை மகிழ்ச்சியுடன் நிவர்த்தித்துத் தருவார். தாங்கள் கவலைப்படவேண்டாம். குழந்தையை பெங்களூருக்கு அனுப்பித் தருமாறு நான் உடனே அரசருக்குக் கடிதம் எழுதுகிறேன். தாங்கள் பெங்களூருக்குப் போய் அங்கே குழந்தையை எதிர்பார்க்கலாம்," என்றான்; சென்னபசவன், தேவம்மாஜி, ஆட்கள் ஒருநாள் மங்களூரில் தங்குவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை மரியாதையுடன் செய்து கொடுத்து, வீரராஜனுக்கு ஒரு கடிதம், பெங்களூரில் சீப்-கமிஷனருக்கு ஒரு கடிதம் எழுதியனுப்பினான். மூன்றாவது நாள் சென்னபசவய்யன், தேவம்மாஜி இவர்களைத் தக்க உதவியுடன் பெங்களூருக்கு அனுப்பி வைத்தான்.

அவன் எழுதிய கடிதங்களின் விஷயம் இவ்வாறு இருந்தது:

"குடகின் அரசர், கும்பணி சர்க்காரின் அபிமான நண்பர், ஸ்ரீ சிகவீர ராஜேந்திர உடையாரின் சமுகத்தில் மங்களூரிலிருக்கும் கும்பணி கலெக்டர் மரியாதையுடனும் பணிவுடனும் தெரிவித்துக்கொள்ளும் விண்ணப்பம்.

"ஒரு வாரத்துக்கு முன்னால் நான் தங்கள் முன்னிலையிலும் அருகாமையிலும் இருந்து கொண்டு தங்களிடமிருந்து பெற்றுக் கொண்ட உபசாரங்களையும், அன்பையும் இடைவிடாமல் நினைத்துக்கொண்டே இருக்கிறேன். இது பற்றி எங்கள் மேலதிகாரியான ரெஸிடெண்ட் துரை எங்கள் எல்லோர் சார்பிலும் நன்றி தெரிவித்து எழுதியிருப்பார் என்று நம்புகிறேன். அது எப்படியிருந்தாலும் என் சொந்தச் சார்பில் எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்ளத் தங்கள் அநுமதியை வேண்டுகிறேன்.

"அத்துடன் கூட ஒரு சங்கதியைத் தங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அந்த விஷயம் எனக்குத் தெரிந்ததே இரண்டொரு நாழிகைக்கு முன்னால்தான். விஷயம் முக்கியமானதால் சிறிது கூடத் தாமதம் செய்யாமல் இந்தக் கடிதத்தை எழுதுகிறேன்.

"தங்கள் சகோதரி தேவம்மாஜியவர்களும் அவரது கணவர் ஸ்ரீமான் சென்னபசவய்யன் அவர்களும் இன்று இங்கே வந்து சேர்ந்தரர்கள். ஸ்ரீசெனனபசவய்யன் அவர்கள் இப்பொழுது தான் என்னைப் பார்த்துப் பேசிவிட்டுத் தமது இருப்பிடத்திற்குத் திரும்பிச் சென்றார். அவரும் தங்கள் தங்கையும் நாளை ஒரு நாள் இங்கிருந்துவிட்டு நாளை நின்று பெங்களூருக்குப் போவதாக இருக்கிறார்கள்.

"தங்கள் மாப்பிள்ளையவர்கள் தெரிவித்ததிலிருந்து மூன்று நாட்களுக்கு முன்னால் அவர் இந்த ஊருக்குப் புறப்பட்டு வந்து கொண்டிருந்தபொழுது அவரது குழந்தை—தங்கள் மருமகன்—வழியில் தொட்டிலிலிருந்து நழுவிக் கீழே புதரொன்றில் விழுந்து விட்டதாகவும், அது மறு நாள் சம்பாஜெ கௌடரிடம் கொண்டு வரப்பட்டு, அங்கிருந்து க்ஷேமமாக தங்கள் அரண்மனைக்கு வந்து சேர்ந்திருப்பதாகவும், இப்பொழுது அரண்மனையில் இருப்பதாகவும் தெரியவந்தது, குழந்தை விஷயமாகக் கவலைப் பட்டுக்கொண்டிருந்த தாய் தந்தையர்களுக்கும், அது நழுவி விழுந்துவிட்டது என்று கேட்டபோது பயந்துவிட்ட எனக்கும், அது தங்கள் ஆசிரயத்தில் க்ஷேமமாக இருக்கிறது என்பதைக் கேள்விப்பட்டு சமாதானம் ஏற்பட்டது.

"குழந்தை விரைவில் தன்னிடம் வந்து சேரவேண்டுமென்று தங்கள் சகோதரி விரும்புகிறார், தங்களுக்கு மருமகனின் பேரில் மிகவும் அன்பு உண்டென்பதையும், குழந்தை மடிகேரியிலேயே இருந்தால் தவறென்ன என்று தாங்கள் நினைக்கலாம் என்பதை

யும் நான் அறிவேன், இருந்தாலும் குழந்தையை உத்தேசித்தும், அதன் தாயாரை உத்தேசித்தும் அது விரைவில் தாயிடம் வந்து சேர்வது விரும்பத்தக்கது. இது தங்களுக்கும் தெரிந்ததே, ஆகையால் தாங்கள் இந்தக் கடிதத்தைக் கண்டவுடன் குழந்தையை பெங்களூருக்கு அனுப்பிக் கொடுக்குமாறு தாய் தந்தையரின் சார்பில் கேட்டுக்கொள்கிறேன். இவர்கள் பெங்களூரில் ஸ்ரீமான் ரெஸிடெண்ட் அவர்களின் அதிதிகளாக இருப்பார்கள். குழந்தையை அழைத்துக்கொண்டு செல்பவர்கள் ரெஸிடெண்ட் பிரபுவைப் போய்ப் பார்த்தால் எல்லா விவகாரங்களும் சுலபமாக நடைபெறும்.

"எதற்கும், இந்தக் கடிதத்திற்குப் பதில் எழுதி அநுக்கிரகம் காட்ட வேண்டுமாகக் கோருகிறேன். இப்படிக்கு, தங்கள் கீழ்ப்படிதலுள்ள சேவகன்."

பெங்களூர் ரெஸிடெண்ட் பிரபுவுக்கு எழுதிய கடிதம்: "அன்புள்ள ஐயா, இந்தக் கடிதத்தைத் தங்கள் சொந்த கவனத்திற்காக எழுதுகிறேன். தற்போதைக்கு எல்லா விஷயங்களும் மிகவும் ரகசியமாகவே இருக்கவேண்டும்

"நாம் மடிகேரியிலிருந்தபொழுது கடைசி நாள் நாடகத்தில் ஏற்பட்ட கலாட்டா தங்களுக்கு நினைவிருக்கும். அரசர் அதன் மூலமாகத் தமக்கு ஏற்பட்ட அவமானம் அரண்மனை மாப்பிள்ளையான ஸ்ரீமான் சென்னபசவய்யன் வேண்டுமென்றே ஏற்படுத்தியது என நினைத்து மாப்பிள்ளையைச் சிறைவைத்தார். அவர் காவலிலிருந்து தப்புவித்துக்கொண்டு மனைவி, குழந்தையுடன் இங்கே வருவதற்காக வந்தார்.

"வரும் வழியில் குழந்தை நழுவி விழுந்துவிட்டது. அவர்களிருவர் மட்டும் வந்து சேர்ந்திருக்கிறார்கள். குழந்தை யார் கையிலோ கிடைத்து அரண்மனையில் போய்ச் சேர்ந்துவிட்டது. இப்பொழுது மடிகேரியில் அரசரிடம் இருக்கிறது.

"சென்னபசவய்யன் புறப்பட்டது பெங்களூர் செல்லும் உத்தேசத்துடன். பக்கத்தில் விடிவதற்குள் எல்லையைத் தாண்டவேண்டுமென்பதற்காக இங்கே வந்திருக்கிறார்கள். நாளை இங்கே இருந்து மறு நாள் பெங்களூருக்குப் புறப்பட விருக்கிறார்கள். அதற்கு வேண்டிய ஏற்பாடுகளை நான் செய்து தருகிறேன்

"குழந்தையை பெங்களூருக்கு அனுப்பிக் கொடுத்தால், ரெஸிடெண்ட் துரை அதை தாய் தந்தையரிடம் சேர்ப்பித்து விடுவார்

என்று அரசருக்குக் கடிதம் எழுதியிருக்கிறேன், இந்தக் கடிதம் கிடைத்தவுடன் தாங்களும் இதே போல வீரராஜனுக்கு ஒரு கடிதம் எழுதவும்.

"அரசர் குழந்தையை அனுப்புவாரென்று நான் எதிர்பார்க்க வில்லை, தாங்களும் அவ்வாறு எதிர்பார்க்கமாட்டீர்கள். அவர் சுபாவம் நமக்குத் தெரிந்திருப்பதுபோல இருந்தால் அவர் நமது பேச்சைக் கேட்கப்போவதில்லை; குழந்தையை அனுப்பப் போவ தில்லை; தங்கையும் அவள் புருஷனும் மடிகேரிக்கு வரவேண்டு மென்று பிடிவாதம் செய்வார்.

"இவர்களுக்கு உயிர்ப் பயம். இவர்கள் அங்கே போக ஒப்ப மாட்டார்கள், மேற்கொண்டு எப்படி நடக்குமோ சொல்லமுடி யாது. ஆனால் நான் இதைப் பற்றிக் கவலைப்படவில்லை. அது தங்கள் பொறுப்பு. அதைத் தாங்கள் சரியானபடி நிறைவேற்று வீர்கள்.

"இவைகளையெல்லாம் தெரிவித்து மதராஸ் கவர்னர் மகாப் பிரபுவுக்கு இப்பொழுதே ஒரு கடிதம் எழுதியனுப்பி யுள்ளேன்.

"இப்படிக்கு, தங்கள் விசுவாச முள்ள..."

மதராஸ் கவர்னருக்கு எழுதிய கடிதம்:

"மகாப் பிரபுவின் சமுகத்தில் வணக்கம்.

"குடகின் அரசரின் தங்கை, அவரது புருஷன் இங்கே வந்திருப் பது குறித்தும் அந்த சந்தர்ப்பங்களின் விவரமும் தெரிவித்து மைசூர் ரெஸிடெண்ட் துரைக்கு நான் எழுதிய கடிதத்தின் ஒரு நகலை இத்துடன் அடக்கம் செய்துள்ளேன். அதைத் தாங்கள் பார்வையிடுமாறு வேண்டுகிறேன்.

"அரசர் நல்லபடி நடந்துகொள்ள மாட்டாரென்று எனக்குத் தோன்றுகிறது. அநேகமாக மிகவும் மோசமாகத்தான் நடந்து கொள்வார். அப்படியானால் நாம் அவர் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டியிருக்கும். இது பற்றி பெங்களூருக்குத் தகுந்த ஆலோசனைகளை அனுப்பி எதற்கும் தயாராக இருக்கும்படி செய் வது நல்லது. என்ன செய்யவேண்டுமென்பதை அடியேனை விட தாங்கள் நன்றாக அறிவீர்கள், இருந்தாலும் எனக்குத் தோன்று வதைச் சொல்லவேண்டியது கடமை என நினைத்து இவைகளை எழுதும் துணிச்சலை எடுத்துக்கொண்டேன், மன்னிக்கவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

"இந்தச் சங்கதிகளெல்லாம் முக்கிய அதிகாரிகள் மட்டுமே அறிந்திருக்கவேண்டிய ரகஸ்யமாக இருக்கவேண்டுமென ரெஸிடெண்ட் துரையவர்களிடம் விண்ணப்பித்துக் கொண்டிருக்கிறேன்.

"இப்படிக்கு, தங்கள் விசுவாசி....."

119

மருமகனை ராணியிடம் விட்டு விட்டுத் தன் அறைக்கு வந்த வீரராஜன், தன்னை மோசம் செய்து விட்டுத் தப்பி ஓடிய தங்கையும் அவள் புருஷனும் உடனே திரும்பி வந்தால் சரி, இல்லாவிட்டால் இந்தக் குழந்தையைக் கொன்றுவிடவேண்டியது தான் என்று தீர்மானித்துக்கொண்டான். தோன்றியதைத் தோன்றிய பொழுதில் செய்து, அதற்குத் தடையென்பதையே கண்டறிந்திராத வீரராஜன், எந்த விதமான கட்டுப்பாடும் இல்லாமல் வளர்ந்திருந்தான். எச்சரிப்பவர்களே இல்லாமற்போய் அவனது கட்டுப்பாடற்ற மனம் எல்லையில்லாத குரூரத்தின் இருப்பிடமாயிற்று. அவன் வயிற்றில் ஜனித்த அந்த மகளின் உயிர் ஒன்றைத் தவிர வேறு எந்த உயிரையும் கொல்ல அவன் மனமும் கைகளும் கூசுபவையாக இருக்கவில்லை, தங்கைக்கும் அவள் புருஷனுக்கும் உடனே புறப்பட்டு வரும்படியும், அப்படி வராமலிருந்தால் அவர்களின் குழந்தை சாகவேண்டியது தான் என்றும் சொல்லியனுப்ப வேண்டும். அப்படிச் செய்ய அவர்கள் இருக்கும் இடம் தெரிய வேண்டும். இவர்கள் மங்களூரில் தங்கியி[illegible]பாகிறார்களா அல்லது சுற்று வழியில் நஞ்சனகூடுக்குப் போகப்போகிறார்களா?

பிறகு பசவன் அருகில் வந்தபொழுது அரசன் அவனிடம், "இந்த முண்டை பெற்ற மக்கள் மங்களூருக்குத் தான் போயிருக்க வேண்டும், இல்லையாடா?" என்றான்.

"ஆம் அரசே. வேறு எங்காவது போவதாக இருந்தாலும் கூட அங்கே போய்த்தான் போவார்களென்று தோன்றுகிறது."

"நஞ்சனகூடுக்குப் போவார்கள் என்கிறாயா?"

"நஞ்சனகூடாவது போவதாவது அரசே? அது வெறும் புரட்டு."

"சிவன் தரிசனத்திற்காக?"

"அதுதான் புரட்டு அரசே. நம்மை ஏமாற்றுவதற்காக நஞ்சன கூடு, நஞ்சனகூடு என்றார்கள். மனத்தில் இருந்ததெல்லாம் வேறு."

"பார்த்தாயா அந்த வேசி மகனின் மோசத்தை? உள்ளொன்று, புறமொன்று!"

"வேறென்ன அரசே? எல்லோரும் அவ்வளவுதான்; தங்களுக்கு என்ன வேண்டும் என்று பார்த்துக்கொள்கிறார்கள். வேறு யாருக்கு என்ன வேண்டுமென்பதைப் பற்றி அவர்களுக்கு என்ன?"

"ஊம். இந்த அரண்மனைச் சோற்றைத் தின்றவர்கள் நலலவர்களல்லடா, நொண்டி."

"உண்மை அரசே."

"சரி, இப்போது யாரையாவது, மங்களூருக்கு அனுப்பி அவர்கள் எங்கே போனார்கள் என்ன சமாசாரம் என்று தெரிந்து வரும்படி செய்."

"சரி அரசே."

என்று கூறிவிட்டு பசவன் தனது வேறு வேலையைக் கவனிக்க ஆரம்பித்தான். அன்று இரவு மங்களூருக்குப் புறப்படும் மாட்டு வண்டிகளுடன் தனது ஆட்கள் இருவரை அனுப்ப ஏற்பாடு செய்தான்.

இந்த ஆட்கள் மங்களூருக்குப் போய் விஷயம் தெரிந்து கொண்டு வருவதற்கு என்ன இல்லை என்றாலும், ஒரு வாரமாவது ஆகும். ஆனால் அதற்குள்ளாக அவர்களுக்கு கலெக்டரின் கடிதத்தினால் அவர்கள் எதிர்பார்த்த செய்தி கிடைத்து விட்டது.

கலெக்டரின் கடிதத்தைக் கண்டு வீரராஜன் எரிந்து விழுந்தான்; அனலைக் கக்கினான். "குழந்தையை அனுப்புகிறார்களாம் விபசாரத்தில் பிறந்த இவர்களுக்கு! அவர்கள் சொன்னார்களென்று இந்த வேசி மகன் வெள்ளைக்காரன் நமக்குக் கடிதம் எழுதுகிறானே, இவனுக்கு என்ன திமிர்? நான்கு பேரை அனுப்பு. அந்த குஷ்டம் பிடித்த முண்டத்தை இங்கே கொண்டுவரட்டும். குதிரையின்மேல் போகும்போது. கீழே தள்ளி கைகளைப் பின்னால் வைத்துக் கட்டி இங்கே கொண்டுவந்து நம் எதிரில் கிடத்தட்டும். ஆடது காலால் மூஞ்சியின்மீது இரண்டு உதை உதைப்

போம். ஒரு வாரம் நமது சோற்றைத் தின்றுவிட்டு நம்மிடமே இந்தப் பேச்சா?"

பசவன் உடனே ஒன்றும் பதில் பேசவில்லை. மங்களூர் கலெக்டரை விரோதித்துக்கொண்டு வீரராஜன் எதுவும் செய்ய முடியாதென்பதை அவன் அறிவான். கலெக்டரின் கடிதத்தைப் படித்துக்கொண்டிருந்த போதே அதற்குப் பதிலையும் அவன் தன் மனத்தில் நிச்சயித்துக் கொண்டுவிட்டான். அரசன் கோபித்துக் கொள்வது இயற்கைதான். கோப வெறி அடங்கியபிறகு பதில் என்ன எழுதவேண்டுமென்பதைப் பற்றித் தனது யோசனையைத் தெரிவிக்கலாம்.

வீரராஜன் வெகுநேரம் கூச்சல் போட்டான். இடையே சிரம பரிகாரத்திற்காக இரண்டுமுறை மது அருந்தினான். அப்பொழுது பசவன் அருகில் நின்றுகொண்டு, "'மாப்பிள்ளை அவர்கள் அரண்மனையை மோசம் செய்து தப்பி ஓடியிருக்கிறார். அரசரின் தங்கையையும் வற்புறுத்தி அழைத்துச் சென்றிருக்கிறார். ஒடும் ஆத்திரத்தில் குழந்தை என்ன ஆயிற்றென்று கவனிக்கக்கூட இவர்களுக்கு உடம்பில் எச்சரிக்கை இல்லை. கடவுளின் கருணை, அது நம் கையில் வந்து சேர்ந்தது. அதை மறுபடியும் இந்த அஜாக்கிரதைத் தந்தையிடம் ஒப்படைப்பது தவறு. மகனைப் பாலூட்டிச் சீராட்டி வளர்க்கவேண்டுமென்ற ஆசை இருந்தால் அவர்கள் இங்கே வரட்டும்; அரண்மனையில் நமக்கு எதிராக இருந்துகொண்டு அதை வளர்க்கட்டும். நீங்கள் ஒரு வாரத்துக்கு முன்பு நம் வீட்டில் இருந்தீர்கள், நமது விருந்தை உண்டீர்கள்; எங்கள் விஷயத்தில் நீங்கள் சத்தியமாக நடந்துகொள்ள வேண்டும். என் தங்கையையும் அவள் கணவரையும் பெங்களூருக்குப் போக அனுமதிக்கவேண்டாம். இங்கே திருப்பி அனுப்புங்கள். நமக்கும் கும்பணி சர்க்காருக்கும் இடையேயுள்ள நட்புறவை வளருங்கள்,' என்று மங்களூர் அதிகாரிக்கு கடிதம் எழுதலாம் அரசே. அப்படி எழுதிக்கொண்டு வரட்டுமா?" என்றான்.

"ஏண்டா முண்டமே, அவர்களுக்குப் பயந்துவிட்டாயா? 'ஹோ' என்றதுமே காலில் விழப்போகிறாயே?"

"பேச்சு மிருதுவாக இருந்தால் காலில் விழுவதாக அர்த்தமா அரசே? மிருதுவான வார்த்தைகளுக்குப் பணியாவிட்டால் பிறகு கண்டிப்பான வார்த்தைகளிலே பேசுவோம். முதலில் இப்படிப் பேசிப் பார்ப்பது."

"நீ பெரிய ராஜதந்திரி ஆய்விட்டாயடா நொண்டி, மந்திரத்தில் குரங்கை வருவிக்கப் பார்க்கிருய்!"

"குரங்குதான் அரசே. மந்திரத்தில் அகப்பட்டுக்கொள்ளா விட்டால் கூண்டு வைத்துப் பிடிப்போம்."

"சரி செய். அவர்களுக்குக் கூண்டுவைக்கும் வேலையில் நீ அவர்கள் பிடியில் சிக்கிக்கொண்டு விடாதே."

"மீனையும் குரங்கையும் ருசி பார்க்கவரும் இந்த ஜனங்களின் பிடியில் நான் சிக்குவேனு அரசே? இரைக்கு வாயைத் திறப்பது மீன். இந்த வெள்ளைக்காரர்களுக்கு வேண்டிய இரை நம்மிடம் இருக்கிறது. மாப்பிள்ளையிடம் என்ன இருக்கிறது?"

"அது சரி. இன்னெரு விருந்துக்கழைத்தால் அங்கிருந்து வாயைத் திறந்துகொண்டு வரும், முண்டங்கள். நீ சொன்ன படியே எழுதியனுப்பு, பார்ப்போம் என்ன சொல்கிருனென்று."

"சரி அரசே."

"அந்தப் பன்றி மகன், மாப்பிள்ளை என்று நீ சொல்கிருயே அவன், இங்கே வந்தால் வந்த அன்றே அவன் தலை நிலத்தின் மீது உருளவேண்டும். விட்டுவிடப்போகிருய் ஜாக்கிரதை."

"வரட்டும் அரசே."

"அந்த சோம்பேறியோடு சேர்ந்துகொண்டு பிறந்த வீட்டுக்கு இரண்டுசெய்த அந்தப் பெண் நாயையும் உன் புருஷனேடே நீயும் இரு என்று சொல்லித் தீர்த்துக்கட்டிவிடவேண்டும்."

"சரி அரசே."

தங்கையும் அவள் புருஷனும் திரும்பிவந்தால் அவர்களுக்குத் தான் கொடுக்கக்கூடிய சித்திரவதையின் நினைவிலே மகிழ்ந்து திளைத்தபடி அரசன் மௌனமானுன்.

120

பசவன் தான் குறிப்பிட்ட அர்த்தத்தில் மிகவும் ஜாக்கிரதை யாக பாஷையை உபயோகித்து கலெக்டருக்கு ஒரு கடிதம் எழுதுவித்துக் கொண்டுவந்து அரசனுக்குப் படித்துச் சொன் னுன்; அவனுடைய அனுமதிபெற்று அதை மங்களூருக்கு

அனுப்பிவைத்தான். இந்தக் கடிதம் கலெக்டருக்குக் கிடைத்த பொழுது சென்னபசவனும் தேவம்மாஜியும் பெங்களூருக்குப் புறப்பட்டுவிட்டார்கள். அப்படியில்லாவிட்டாலும் அவர்கள் திரும்பி வரக்கூடியவர்களல்ல; திரும்பிச் செல்லுங்கள் என்று கலெக்டரும் அவர்களுக்குச் சொல்லியிருக்கப் போவதில்லை. எது எப்படியானாலும் அந்தக் கடிதத்திற்கு என்ன பதில் எழுதவேண்டு மென்பதைப்பற்றி கலெக்டர் அதிகமாக யோசனை செய்ய வேண்டிய தேவை இருக்கவில்லை. மிகவும் சுருக்கமாக, "தங்கள் கடிதம் கிடைத்தது. ஆனால் அது என் கைக்குக் கிடைப்பதற் குள்ளாகவே தங்கள் தங்கையும் அவர் கணவரும் பெங்களூருக் குப் புறப்பட்டுச் சென்றுவிட்டார்கள். எனவே தங்கள் விருப்பப் படி நான் எதையும் செய்ய இயலாதவனாக இருக்கிறேன். தங்கள் கடிதத்தை ரெஸிடெண்ட் துரை அவர்களுக்கு அனுப்புகிறேன். இது சம்பந்தமாக மேற்கொண்டு தாங்கள் அவரோடு கடிதப் போக்குவரத்து வைத்துக்கொள்ள வேண்டுமாகக் கேட்டுக்கொள் கிறேன்," என்று பதில் எழுதிவிட்டான்.

இந்த பதில் கிடைத்த அன்று வீரராஜன் மற்றொரு முறை கூச்சல் போட்டு ஆர்ப்பாட்டம் செய்தான்; வழக்கத்தை விட அதிகமாக மது அருந்தினான் மறுநாள் ரெஸிடெண்ட் துரைக்கு ஒரு கடிதம் எழுதுவித்தான் "எங்கள் மாப்பிள்ளையவர்கள் இங்கே குற்றம் செய்துவிட்டு சிறையிலிருந்து தப்பி தங்களிடம் ஓடி வந்திருக்கிறார். என் தங்கையையும் உடன் அழைத்துச் சென்றிருக்கிறார். அவர்களை இங்கே திருப்பி அனுப்பவேண்டும்" என்பது அதன் சாராம்சம், இந்தக் கடிதம் சென்னபசவய்யனும் தேவம்மாஜியும் பெங்களூரை அடைந்த அன்றே சீப்-கமிஷனரின் கையில் கிடைத்தது.

121

ஜூடகின் நிலைமையைக் குறித்து தனது எண்ணத்தை ஏற்கனவே விவரித்துள்ளபடி மேலதிகாரிகளுக்குத் தெரிவித்திருந்த ரெஸி டெண்ட் துரை தனது ஜோசியம் இவ்வளவு சீக்கிரத்தில் பலிக்கப் போகிறதென்று நினைத்திருக்கவில்லை. மங்களூர் கலெக்டர் சென்னபசவய்யன் தேவம்மாஜி இவர்களைப் பற்றி எழுதிய

கடிதம் அவர்கள் பெங்களூர் வந்து சேர்வதற்கு மூன்று நாட்களுக்கு முன்னால் அவன் கையில் கிடைத்தது. அவன் உடனே அந்த விஷயத்தைச் சென்னைக்கும், கல்கத்தாவுக்கும் தெரிவித்து விட்டான்; சென்னபசவய்யனையும் தேவம்மாஜியையும் எதிர் கொண்டழைப்பதற்காக பத்து காவலாளிகளை அனுப்பினான்; பெங்களூரில் அவர்கள் தங்குவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தான். தாங்கள் அநியாயம் செய்ததாகத் தெரியக்கூடாது. குடகின் அரசன் போதுமான ஜாக்கிரதையுடன் நடந்து கொண்டால் தனது நாட்டை ஆளலாம், அப்படியில்லாவிட்டால் அவனைப் பட்டத்திலிருந்து நீக்குவதற்கு முயற்சி செய்யவேண்டும் என்று நிச்சயித்துக்கொண்டான்.

சென்னபசவய்யனும் தேவம்மாஜியும் பெங்களூரை அடைந்தனர். ரெஸிடெண்ட் மற்றும் சீப்-கமிஷனர் அவருடைய பிரதிநிதி அவர்களைக் கண்டு வரவேற்று விடுதிக்கு அழைத்துச் சென்று ராஜ மரியாதைகளுடன் அவர்களை உபசரித்து, "தாங்கள் பிரயாணக் களைப்பை ஆற்றிக் கொள்ளுங்கள், பிறகு தங்கள் சௌகரியத்தை அநுசரித்து பெரிய அதிகாரியைப் பார்க்கலாம்" என்றான். சென்னபசவய்யன் தேவம்மாஜி இருவரும் தமக்குக் காட்டப்பட்ட மரியாதையைக் கண்டு ஆச்சரியமுற்றனர்; ஏதோ கவர்க்கத்திற்கே வந்துவிட்டதுபோல அவர்களுக்குத் தோன்றியது. ஆனால் ஒரே ஒரு விஷயம் அவர்கள் ஆனந்தத்துக்கு இடையூறாக இருந்தது அவர்கள் குழந்தை நரகத்தில் அகப்பட்டுக் கொண்டிருந்ததுதான் அது. இருவருடைய மனத்தையும் இந்தத் துயரம் அரித்துக்கொண்டிருந்தது. சென்னபசவய்யனைவிட தேவம்மாஜி இந்த வேதனையை அதிகமாக அநுபவித்துக்கொண்டிருந்தாள்.

ஒரு நாள் ஓய்வு எடுத்துக்கொண்டு மறுநாள் சென்னபசவய்யன் ரெஸிடெண்ட் துரையைக் காண அவனது மாளிகைக்குச் சென்றான்.

ரெஸிடெண்ட் அவனை மிகவும் மரியாதையுடன் வரவேற்று மடிகேரியில் காட்டியதைப் போல நான்கு மடங்கு கௌரவம் காண்பித்து, முதலில் அவனை உட்காரச் சொல்லி பிறகு தான் உட்கார்ந்து கொண்டு க்ஷேம சமாசாரங்கள் விசாரித்தான். "மடிகேரியில் தங்களைச் சந்தித்தபொழுது தங்களுக்கும் அரசருக்குமிடையே உறவு சரியாக இல்லை என்பது எனக்கு விளங்கியது. ஆனால் அந்த மனஸ்தாபம் இவ்வளவு சீக்கிரத்தில்

இவ்வளவு விபரீதமாக வளரும் என்று நான் எதிர்பார்க்கவில்லை. நெருங்கிய உறவான தங்கள் விஷயத்தில் அரசர் இவ்வளவு அநுசிதமாக நடந்துகொள்வது எனக்கு ஆச்சரியத்தையும் துயரத்தையும் அளிக்கிறது," என்றான்.

சென்னபசவய்யன் : "ஆம் ஐயா; அவருக்கு அது வழக்கம். கேட்பவர் பிடிப்பவர் இல்லாமல் அவர் இப்படி துஷ்டராக கொழுப்பேறிப் போயிருக்கிறார். அவரை அடக்குவதற்கு உதவி புரியுங்கள் என்று கேட்பதற்காகவே நான் இங்கே வந்திருக்கிறேன்."

"சுதேச மன்னர்களின் கொடுமையிலிருந்து பிரஜைகளை விடுவித்து க்ஷேமகரமான ஆட்சியை ஏற்படுத்துவது தமது கடமை என்று கும்பணி சர்க்கார் நிச்சயித்துள்ளார்கள். தாங்கள் இது விஷயமாகக் கவலைப்படவேண்டியதில்லை. இந்தச் சந்தர்ப்பத்தில் அவசியமான சகல நடவடிக்கைகளையும் எடுப்பதற்கு நான் மேலதிகாரிகளிடம் அநுமதி பெற்றுக்கொள்வேன். தக்க சமயத்தில் சரியான ஏற்பாடுகளைச் செய்வேன்."

"அரசரை நீக்கி நீங்கள் அரசாட்சியைக் கைப்பற்றும் ஏற்பாட்டைச் செய்துவிடாதீர்கள் ஐயா; குடகை இன்னொரு மைசூராக்கி விடாதீர்கள்."

"இந்தப் பேச்சு இப்போதைக்கு சம்பந்த மற்றது. மேலும் தாங்கள் நினைக்கும் வழி தவறு. குடகை அரசரின் கையிலிருந்து விடுவிக்க வேண்டியது முதல் படி; அதன் பிறகு தான் என்ன ஏற்பாடு செய்யவேண்டுமென்பதை யோசிக்கவேண்டும்."

"அப்படியா ஐயா? அரசரை நீக்குவதற்கு முன்னரே அடுத்த படி யார் அரசராக வரவேண்டுமென்பதை நிச்சயம் செய்து விடவேண்டும். முதலில் இது, பிறகு அது என்று சொல்வதற்கு இடைவெளி எங்கே இருக்கிறது?"

"நல்லது, இது பற்றிப் பிறகு யோசிப்போம். தற்போதைக்குத் தாங்கள் பயமில்லாமல் இங்கே தங்கியிருக்கலாம். தங்களை அபாயமின்றிப் பார்த்துக்கொள்வது எல்லாவற்றிற்கும் மேலாக என்னுடைய முதல் கடமை."

"எங்கள் குழந்தையை இங்கே வரவழைக்கவேண்டும் ஐயா. அதுதான் இப்பொழுது முதல் வேலை."

"வரவழைப்போம். குழந்தைக்கு அபாயம் நேரிடும் என்ற பயம் ஏதும் இல்லையே?"

"இல்லை என்று சொல்லமுடியாது. எங்கள் மேலுள்ள கோபத்தில் அதை என்ன செய்தாலும் செய்து விடுவான் என்று ராணி நினைக்கிறார்."

"ராணி என்றால் தங்கள் மனைவியைச் சொல்லுகிறீர்களா?"

"ஆமாம்."

"அவர் பயப்படுவது இயற்கை. ஆனால் அரசர் குழந்தையை எதும் செய்து விடுவார் என்று எனக்குத் தோன்றவில்லை."

"அவ்வளவு தைரியமாக அப்படிச் சொல்லிவிட முடியாது."

"ஆகட்டும். குழந்தையை உடனே அனுப்பவேண்டும், அதை க்ஷேமமாக அதன் பெற்றோர்களிடம் சேர்ப்பிக்க வேண்டியது இப்பொழுது எமது பொறுப்பாக இருக்கிறது, என்று அரசருக்கு எழுதுகிறேன்."

"அப்படிச் செய்தால் உங்களைப் பழிவாங்குவதற்காகக் குழந்தைக்கு ஏதாவது தீங்கு செய்யக்கூடும்."

"என்னைப் பழிவாங்கி உங்கள் அரசர் பிழைத்து விடுவாரா? கும்பணி சர்க்காரிடம் அதுவெல்லாம் நடக்காது."

இவ்வாறு தைரியம் சொல்லி ரெஸிடெண்ட், "தேவம்மாஜிக்குத் துணையாக இருக்க லூஸியை அனுப்புகிறேன். உங்கள் மனைவியாருக்குத் தெரிவியுங்கள்," என்று கூறி சென்னபசவய்யனை அவன் விடுதிக்கு அனுப்பி வைத்தான். அன்றைக்கே வீரராஜனுக்கு ஒரு கடிதம் எழுதி குதிரையாள் மூலமாக அதை அனுப்பினான். அதில் இவ்வாறு எழுதப்பட்டிருந்தது.

"தங்கள் தங்கை மற்றும் அவரது கணவர் விஷயமாகத் தாங்கள் எழுதிய கடிதம் கிடைத்தது.

"நாங்கள் தங்களிடமிருந்து விருந்தையும் உபசாரத்தையும் பெற்று மகிழ்ந்து திரும்பி வந்த பதினைந்து நாட்களுக்குள்ளாக நம்மிடையே இத்தகைய கடிதப்போக்கு வரவு நடைபெறவேண்டியிருப்பது வருந்தத்தக்கது. ஆனால் சந்தர்ப்பம் அப்படி நேர்ந்திருப்பதால் நான் தங்களுடன் விவாதம் செய்யும் முறையில் பேச வேண்டியிருக்கிறது. இதை விவாதம் என்று நினைக்காமல், சிக்கலை விடுவிப்பதற்காக எதிரியின் கட்சியை எடுத்துச்சொல்லும் முயற்சி என்று கொள்ளவேண்டுமாக பிரார்த்திக்கிறேன்.

தங்கள் தங்கையின் கணவர் செய்த குற்றம் என்னவென்று, எனக்குத் தெரியாது. தாங்கள் அவரைக் காவலில் வைத்தது

நியாயமானதாகவே இருக்கலாம். அதை நான் ஆட்சேபிக்கவில்லை. முக்கியமாக அது நமக்குச் சம்பந்தப்படாத விஷயம். அவர் காவலிலிருந்து தப்புவித்துக் கொண்டு மனைவியுடன் கும்பணி சர்க்காரின் பாதுகாப்பை நாடி வந்திருக்கிறார். சந்தர்ப்பம் என்ன ஏது என்று முழுதும் தெரிந்துகொண்டு பிறகுதான் நாம் அவரைத் தங்களிடம் அனுப்ப முடியுமே ஒழிய இப்படியே அவரை அனுப்பிக் கொடுப்பது இயலாது.

"ஆகையால் ஸ்ரீமான் சென்னபசவய்யன் அவர்கள் செய்த குற்றம் என்ன, அதன் பொறுப்பை எப்படி முடிவு செய்தீர்கள், அவர் நிரபராதியாக இருந்து சூழ்நிலை சாட்சியங்களால் அபராதியாகக் காணப்படுகிறாரா, என்பவை குறித்து போதுமான விவரங்களுடன் எனக்குத் தெரியப்படுத்த வேண்டுகிறேன்.

"காவலிலிருந்து தப்பி வரும்போது அவர் அஜாக்கிரதையினால் தமது குழந்தையை நழுவவிட்டு வந்திருக்கிறார். அது தங்கள் கைகளுக்கு வந்து சேர்ந்திருக்கிறது. அவருக்கும் தங்களுக்கும் இடையேயுள்ள மனஸ்தாபம் தீருவதற்குச் சிறிது காலமாகும். இந்த இடைக் காலத்தில் குழந்தை பெற்றோர்களை விட்டுத் தங்களிடம் இருக்கவேண்டிய முகாந்தரம் இல்லை. ஆகையால் தாங்கள் பெரிய மனது வைத்து குழந்தையை எம்மிடம் அனுப்பி வைக்கும்படி பிரார்த்திக்கிறேன். தங்கள் தங்கையிடம் அவரது குழந்தையை ஒப்புவித்தாலல்லாமல் நான் அவர் விஷயத்தில் என் கடமையைச் செய்ததாக ஆகாது. ஆகையால் தாங்கள், வேறு யாரை உத்தேசித்தும் அல்லாமல், என்னை உத்தேசித்து, குழந்தையை இவிடம் தாமதமில்லாமல் அனுப்பிவைக்கவேண்டுமெனக் கோருகிறேன்."

122

மங்களூரிலிருந்து கலெக்டர், பெங்களூரிலிருந்து ரெஸிடெண்ட் துரை இவர்கள் எழுதிய கடிதங்களைப் பார்த்த சென்னை கவர்னர் குடகின் சரித்திரம் தான் விரும்பிய பதத்திற்கு வந்து கொண்டிருக்கிறது என்று தெரிந்து கொண்டான். கவர்னர் ஜெனரல் பெண்டிங்க் துரைக்கும் தனது கருத்தைத் தெரிவித்து ஒரு கடிதம் எழுதினான். அந்தக் கடிதத்தில், "அரசர் இப்படித்தான்

நடந்துகொள்வார் என்று நாம் நிச்சயமாகச் சொல்ல முடியாது. ஆனால் அவர் நம்மை அலட்சியம் செய்தும் கேவலப்படுத்தியும் நடந்துகொள்வார் என்பது பெரும்பாலும் நிச்சயம். அவர் அப்படிச் செய்தால் அவரைத் தண்டிக்க வேண்டியது அவசியம். அந்தச் சமயத்தில் விவரங்களைத் தெரிவித்துத் தங்களிடமிருந்து உத்தரவு பெற்றுக்கொள்வதற்கும் அதன் பிறகு நடவடிக்கைகள் எடுப்பதற்கும் அவகாசம் இருக்காது. ஆகையால் இப்பொழுதே நீங்கள் இந்த சந்தர்ப்பத்தில் பின்னால் அவசியமென்று தோன்றக்கூடிய எல்லா நடவடிக்கைகளையும் சென்னை சர்க்கார் எடுத்துக்கொள்ளலாம் என்று உத்தரவு அனுப்பினால் மிகவும் அநுகூலமாக இருக்கும். சந்தர்ப்பத்திற் கனுசரணையாக இங்கே இருக்கும் நாங்கள் நடந்துகொள்வது சுலபமாக இருக்கும். மேலும் பெங்களூரிலிருக்கும் ராணுவ அதிகாரிகள் ஏற்கனவே அரசரைக் கண்டு, ஏதோ ஒரு விதத்தில் அவருடைய விருந்தோம்பலைப் பெற்றிருக்கிறார்கள். அவர்களில் யாருமே படையுடன் குடகுக்குச் செல்ல விரும்பாமலிருக்கலாம். ஆகையால் பெங்களூர் ராணுவத்தின் தலைமைப் பதவிக்கு புதிதாக ஒருவரை அனுப்பவேண்டும். மூன்றாவதாக, இப்பொழுது தோன்றியிருக்கும் இந்த நிலைமை அவசியமான கடிதப் போக்கு வரவு நடந்து ஒரு திடமான கட்டத்தை அடைவதற்கு இரண்டு மூன்று மாதங்கள் ஆகலாம் என்று காண்கிறது. அந்தச் சமயத்தில் நீங்கள் சென்னைக்கு வருவதானால் எல்லாவற்றையும் நேரில் தெரிந்துகொள்ளலாம். அவசியமான எல்லா உத்தரவுகளையும் நேரில் பிறப்பிக்கலாம் என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்," என்று எழுதினான்.

மங்களூர் கலெக்டருக்கும் பெங்களூருக்கும் இதே போல அதிகாரபூர்வமான பதிலுடன் சொந்தமாகவும் கடிதங்கள் எழுதி, "குடகை வாயில் போட்டுக்கொள்ள ஆங்கிலேயர்கள் பறந்தார்கள் என்று பெயர் வரக்கூடாது; ஆனால் அரசன் அவிவேகத்துடன் நடந்து கொண்டாலும் நமது நல்ல பெயரை உத்தேசித்து அதைப் பொறுத்துக்கொண்டோம் என்றும் பெயர் எடுக்கவேண்டாம். நாட்டு மக்களின் நலத்தை உத்தேசித்து நாம் அதிகாரத்தை ஏற்றுக்கொள்கிறோம் என்பது தெளிவுபடுத்தப்படவேண்டும். இதை மனத்தில் கொண்டு தேவையென்று தோன்றும் எல்லா நடவடிக்கைகளையும் எடுத்துக்கொள்ள உங்களுக்கு அதிகாரம் தரப்பட்டிருக்கிறது. முடிந்தால் முதலிலேயே

எனக்குத் தெரிவித்து அவசியமான நடவடிக்கையைக் கைக் கொள்ளுங்கள். முடியாவிட்டால் நடவடிக்கை எடுத்துவிட்டுப் பிறகு தெரியப்படுத்துங்கள். இது போன்ற காரியங்களில் என் ஆதரவு எப்பொழுதும் உண்டு," என்று தெரிவித்தான்.

அந்த நாட்களில் கம்பெனி சர்க்காரின் இது போன்ற கடித விவகாரங்களெல்லாம் அநுகூலமுள்ள இடத்தில் படகுகள் மூலமாகவும், மற்ற இடங்களில் அறுபது நாழிகையும் ஓடச் கூடிய குதிரைகளின் மூலமாகவும் நடைபெற்று வந்தன. இது போன்ற கடிதங்கள் அவசியமென்று தோன்றிய சமயங்களில் ஒரு நாளில் பத்து காத தூரம் செல்லும். குடகைப் பற்றிய இந்தக் கடிதங்களெல்லாம் சென்னை, கல்கத்தா, பெங்களூர், ஆகிய ஊர்களுக்கு இவ்வாறு சென்றன. கவர்னர் – ஜெனரல், கவர்னர், ரெஸிடெண்ட் இந்த மூவரும் ஒரு யந்திரத்தின் மூன்று பாகங்களைப் போல நடந்துகொண்டனர்.

கவர்னர் ஜெனரல் பெண்டிங்க் துரை மதருஸ் கவர்னருக்கும் மைசூர் ரெஸிடெண்டுக்கும் உடனே பதில் எழுதினான். "மைசூர் அரசன் வேறு என்னதான் தவறு செய்திருந்தாலும் குடகின் அரசனைப் போலக் கெட்டவனல்ல; கொலைபாதகனல்ல. அவனையே மக்களின் நலனுக்காகப் பட்டத்தை விட்டு விலக்கிய நாம் குடகின் அரசனை அரசாள விடுவது பட்சபாதமென்று தோன்றலாம். இவனது முன்னோர்களுக்கு நாம் நெருங்கிய நட்பின் நம்பிக்கை அளித்துள்ளோம். ஆனால் அரசர் எவ்வளவு துர்நடத்தையை அநுஷ்டித்தாலும் நாம் அதையெல்லாம் ஒப்புக் கொண்டு அவரது நண்பர்களாக இருப்போம் என்பது அந்த உடன்படிக்கைகளின் பொருளல்ல. நமது பாதுகாப்பை நாடி வந்திருக்கும் அரச வம்சத்தாரை விட்டு விடுங்கள் என்று கேட்பது அரசரின் தவறு. ஆகையால் இது விஷயமாக நீங்கள் தேவையான எல்லா நடவடிக்கைகளையும் எடுத்துக்கொள்ளலாம். அதற்கு நான் உங்களுக்கு சகல அதிகாரத்தையும் கொடுத்துள்ளேன். மைசூர் ராணுவத்தின் தலைமைப் பதவிக்கு லெப்டினண்ட் கர்னல் பிரேசர் என்பவரை நியமித்து அனுப்பியிருக்கிறேன். மேலும் அரசருடன் பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்காக நாகப்பூரில் இப்பொழுது இருக்கும் கிரஹாம் துரையை நியமித்திருக்கிறேன். கிரஹாம் முன்பு குடகின் அரசருடன் பேச்சு வார்த்தைகள் நடத்தியவர். புதிதாக ஒருவர் செய்வதை விட சிறப்பாக நமது அபிப்ராயங்களை அரசருக்கு எடுத்துச்

சொல்லக்கூடியவர் அவர். நிலைமை முற்றி ஒரு பதத்திற்கு வரும் பொழுது நான் கண்டிப்பாக சென்னைக்கு வருவேன்."

ஒரு மாதத்தில் லெப்டினண்ட் கர்னல் பிரேசர் பெங்களூருக்கு வந்து சைன்னியத்தின் தலைமைப் பதவியை ஏற்றுக்கொண்டான். அதற்கடுத்த பத்து நாட்களில் கிரஹாம் நாகப்பூரிலிருந்து வந்து சேர்ந்தான்.

123

இதனிடையே ரெஸிடெண்ட் வீரராஜனுக்கும் வீரராஜன் ரெஸிடெண்டுக்கும் மூன்று மூன்று கடிதங்கள் எழுதிக் கொண்டு விட்டார்கள்.

அவைகளின் சாராம்சம் வருமாறு.

வீரராஜன்; "என் தங்கை, அவள் புருஷன் இவர்கள் விஷயமாக எப்படி நடந்து கொள்வதற்கும் எனக்கு முழுச் சுதந்திரம் உண்டு. நீங்கள் என்னுடைய நண்பர் என்று திருப்பித் திருப்பி வாயால் சொல்லுகிறீர்கள். அதன்படி நடப்பதில்லை. என் தங்கையின் குழந்தையை உங்களிடம் அனுப்ப வேண்டுமென்று கேட்கிறீர்கள். அவ்வாறு கேட்பதற்கு உங்களுக்கு என்ன உரிமை? நல்ல வார்த்தைகளில் தேவம்மாஜியையும் சென்ன பசவய்யனையும் இங்கே அனுப்பிவிடுங்கள். குழந்தையை அவர்களுக்குக் கொடுத்து விடுகிறேன். அப்படி அனுப்பாவிட்டால் அந்தக் குழந்தையைக் கொன்றுவிடப் போகிறேன், ஜாக்கிரதை. இந்த வருடத்திய பொங்கல் பண்டிகை கடைசி நாள். அன்று மாலைக்குள்ளாக அவர்களிருவரும் இங்கு வந்து சேர்ந்தால் சரி. வராவிட்டால் அவர்கள் மீண்டும் தம் குழந்தையைக் காணப் போவதில்லை. அதுமாத்திரம் அல்ல; அதன் பிறகு நானும் நீங்களும் நண்பர்கள் அல்ல, ஜாக்கிரதை. இந்தச் சங்கதியை உங்கள் பாதுகாப்பைத் தேடி வந்திருக்கும் உங்கள் அடிமைகளான தேவம்மாஜிக்கும் சென்னபசவய்யனுக்கும் தெரிவித்து விடவும். உங்கள் வீம்பினால் நீங்கள் அவர்களை அனுப்பாவிட்டாலும் தங்கள் குழந்தையைக் காப்பாற்றிக் கொள்வதற்காக அவர்கள் திரும்பிவரச் சம்மதிக்கலாம். இந்தப் பேச்சை நீங்கள் காதில் போட்டுக்கொள்ளாமல், உங்களைத் தண்டிக்கும் நோக்கத்

துடன் நான் அக் குழந்தையைக் கொல்வித்தால் அதற்குப் பொறுப்பு நீங்களும், அவர்களுமே; நான் அல்ல. ஜாக்கிரதை."

வாஸிடெண்ட்: "உங்கள் தங்கையையும் அவரது கணவரையும் உங்களிடம் அனுப்புவது பற்றி எங்களுக்குத் துளியும் ஆட்சேபணையில்லை. ஆனால் திரும்பிச் செல்ல அவர்கள் சம்மதிக்க வேண்டும். அவர்களின் சம்மதம் இல்லாமல் அவர்களை இங்கிருந்து துரத்துவது பாதுகாப்பளித்தவர்களாகிய எங்கள் நோக்கில் தர்மம் அல்ல. இப்போழுது அவர்கள் உங்களிடம் வரத் தயங்குகிறார்கள். குழந்தை முதலில் வரட்டும், பிறகு எல்லோரும் அங்கே திரும்பிச் செல்லுகிறோம் என்கிறார்கள். இந்த நிலைமையில் அவர்களை நீங்கள் விரும்புவது போல உடனே உங்களிடம் அனுப்புவது இயலாத காரியமாக இருக்கிறது. இவ்வாறு நடந்துகொள்வதனால் நாங்கள் நம்மிடையேயுள்ள நட்புக்குக் பங்கம் விளைவிக்கவில்லை. தங்கள் பெயர் கெடக்கூடாது, தங்கள் விரோதிகளின் எண்ணிக்கை அதிகரிக்கக்கூடாது என்ற ஒரே நோக்கில் தான் இந்த விவகாரத்தில் தலையிட்டுள்ளோம். இதை உண்மை என்று கண்டு தாங்கள் தங்கள் மருமகக் குழந்தையை இங்கே அனுப்பிவைக்க வேண்டுமென்று பிரார்த்திக்கிறேன். அப்படிச் செய்யாமல் தாங்கள் பிடிவாதப் பிடித்தால் தாங்களே எங்கள் நட்பை அலட்சியப் படுத்துகிறீர்கள் என்றுதான் எடுத்துக்கொள்ள வேண்டும். பொங்கலுக்குள்ளாக தங்கள் விருப்பப்படி நடக்காவிட்டால் குழந்தைக்கு அபாயம் என்று தெரிவித்திருக்கிறீர்கள். இது போன்ற மனிதத் தன்மையற்ற காரியத்தைத் தாங்கள் செய்யமாட்டீர்களென்று நம்பியிருக்கிறோம். அப்படியும் தாங்கள் கோபவெறியில் குழந்தைக்கு அபாயம் விளைவித்தால் கும்பணி சர்க்கார் அந்தச் செயலுக்குத் தகுந்த எதிர் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கும். அதை இப்பொழுதே தெரிவித்து வைக்கிறேன். இது விஷயத்தில் கும்பணி சர்ககாரின் கருத்து என்ன என்று எனக்குத் தெரியவில்லை, அதனால் இத் தவறு நேர்ந்தது என்று தாங்கள் பிற்பாடு சொல்லக்கூடாது என்பதற்காகவே இதை இப்பொழுதே தெளிவுபடுத்தியிருக்கிறேன். இந்தக் கடிதம் போதுமான அளவு சிரிவாகவே இருந்தாலும் கும்பணி சர்க்காரின் அபிப்ராயத்தைத் தங்களுக்கு நேரில் எடுத்துக் கூறுவதற்காக தங்கள் பால் இரண்டு தூதுவர்களை அனுப்பியுள்ளோம். அவர்கள் எடுத்துக் கூறுவதையெல்லாம் கவனமாகக் கேட்டு நமது நட்புக்குப் பங்கம்

வராதபடியும், உங்கள் உறவினர்களுக்குத் துயரம் ஏற்படாத வாறும், தங்கள் பெயருக்குக் களங்கம் ஏற்படாத வகையிலும் நாங்கள் நடந்துகொள்ள வேண்டுமென்று நான் வற்புறுத்தி வேண்டிக்கொள்ளுகிறேன்."

124

கடிதம், பதில் கடிதம் இவைகளால் ஏற்பட்ட ஒரே பயன் வீரராஜனின் மனத்தின் குரூரம் எல்லை மீறி வளர்ந்தது தான். தேவம்மாஜியும், சொன்னபசவய்யனும் அருகில் இருந்திருந்தால் அவன் அவர்களை மூட்டைப்பூச்சிகளை நசுக்குவதைப் போல நசுக்கியிருப்பான். ரெஸிடெண்டோ அவனது ஆட்களோ கையில் அகப்பட்டிருந்தாலும் அவன் அவர்களையும் தனது கோபத்திற்குப் பலியாக்கியிருப்பான். ஆனால் அவர்கள் யாரும் அவன் கைகளில் அகப்படுவார்கள் போல இருக்கவில்லை; அகப்பட்டது தங்கையின் குழந்தை. அரசனின் கோபமெல்லாம் கண்ணாடிக் குமிழில் பாயும் சூரிய கிரணத்தைப்போல ஒன்றுபட்டு தீவிரமாக அந்த அப்பாவிக் குழந்தையின் மீது பாய்ந்தது. "இந்த முண்டங்களுக்கு நல்ல பாடம் கற்பிக்கவேண்டும்" என்று சொல்லிக் கொண்டு அவன் அந்தக் குழந்தையைக் கொல்லத் தயாரானான்.

இந்த வேளையில் கிரஹாம் துரையின் யோசனைப்படி ரெஸிடெண்ட் மங்களூர் கலெக்டருக்குக் கடிதம் எழுதி தங்கள் சார்பில் அரசனைக் கண்டு பேச தலைச்சேரி பார்சி வியாபாரி தாரா சேட்டையும் மலபார் கலெக்டரின் சிரஸ்ததார் கருணாகர மேனனையும் மடிகேரிக்கு அனுப்பிவைத்தான். வீரராஜன் அவர்களைத் தான் காணமுடியாது என்று கூறினான். பசவன் அவனுக்குப் பலவிதமாக அறிவுரைகள் எடுத்துக் கூறிய பிறகு அவர்களை வரவழைத்துக்கொண்டான். அவர்கள் சொல்வதைச் சொல்ல விடாமல், "நம் நாட்டவரான நீங்கள் ஆங்கிலேயரின் எச்சிலைத் தின்று அவர்களுடைய நாய்களைப்போல ஆகிவிட்டீர்கள். குடகின் மன்னரோடு தூது பேசுமளவு நீங்கள் பெரிய மனிதர்களாகி விட்டீர்களா? இதுபோலப் பெரிய காரியத்தில் தலையிடுவதற்கு எங்களுக்கு யோக்யதை இல்லை என்று அந்த குஷ்டரோகி வெள்ளையர்களிடம் சொல்லிவிட்டு உங்கள் ஊரில் இருப்பதை

விட்டுவிட்டு இங்கே வர உங்களுக்கு எவ்வளவு துணிச்சல்? அப்படிப் பேசவேண்டுமென்றால் உங்கள் ரெஸிடெண்டோ, கிரஹாம் துரையோ, உங்கள் கலெக்டரோ வந்திருக்க வேண்டும். உங்களை அனுப்புகிற முட்டாள்தனத்தை அவர்கள் செய்தார்களென்றால் அவர்களின் கட்டளைப்படி இங்கே வரும் முட்டாள்தனத்தை நீங்கள் செய்துள்ளீர்கள். என்னை அவமானப் படுத்தியிருக்கிறீர்கள். இந்தத் தவறுக்காக நான் உங்களைத் தண்டிக்க வேண்டியிருக்கிறது. இந்த நிமிடம் முதல் நீங்கள் என் கைதிகள் என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்," என்றான்.

தாராசேட் அரசனிடம், "நாங்கள் ஆங்கிலேயர்களின் நலனை உத்தேசித்து அரசரின் சமுகத்திற்கு வரவில்லை. தாங்கள் குடகின் அரசராக வாழவேண்டுமென்றே இந்தத் தூது வர சம்மதித்தோம். ஆங்கிலேயர்கள் மிகவும் பலசாலிகளாக இருக்கிறார்கள். ஹைதரைவிடத் திறமைசாலியான போர் வீரன் கிடையாது; அப்படிப்பட்டவனையே அவர்கள் தோற்கடித்து விட்டார்கள். திப்புசுல்தானைவிட அதிகம் பிடிவாதக்காரர்கள் கிடையாது; அப்படிப்பட்டவன் அவர்களை எதிர்த்து நிற்க முடியவில்லை. அவர்களை எதிர்த்து நம்முடைய ராஜ்யங்கள் ஒவ்வொன்றாக அழிந்து போயிருக்கின்றன; நமது ஜனங்கள் ஆங்கிலேயரின் பிரஜைகளாக இருக்கிறார்கள். தாங்கள் வீரர்; தங்களின் பிரஜைகள் தங்களுக்கு ஆதரவு தந்து நன்றாகவே போர் செய்யக்கூடும். ஆனால் அது வெகு காலத்திற்கு நடக்காது. இரண்டு வருடங்களிலோ அல்லது நான்கு வருடங்களிலோ ஆங்கில சேனை குடகில் இங்கும் அங்கும் நடமாடும்படி நேரிடும். ஹைதரின் சேனை அவ்வாறு நடமாடியது; ஜனங்கள் படாத பாடு பட்டனர்; தங்கள் பாட்டனார் ராஜ்யத்தை இழந்து சிறையில் வாடவேண்டியதாயிற்று. ஆங்கிலேயரிடம் தோல்வியுறாவிட்டாலும் தாங்கள் எப்பொழுதும் இமைகளை மூடாமல் அவர்களுக்கு எதிராக காவல் காக்கவேண்டி நேரிடும், இப்படிப்பட்ட விரோதத்தை தாங்கள் சம்பாதித்துக் கொள்ளவேண்டாம் என்று தான் வேண்டுகிறோம். தங்கள் ஆட்சிபீடம் ஆட்டம் கொடுக்காமல் இருக்கவேண்டுமென்பது தான் எங்கள் விருப்பம்," என்றான்.

வீரராஜன், "இது என் சரர்பாகப் பேசும் பேச்சா? பகைவனைப் புகழ்ந்து என்னை இகழ்ந்து நீ நம்மவன் என்று சொல்லிக் கொள்கிறாயா? உனக்கு எச்சில் ஊட்டியவர்களின் கையை நக்கி என்னைப் பார்த்துக் குரைக்கிறாய். உன் குஷ்டரோகி எஜமானர்

களின் சேனை குடகில் நடமாடுமா? கனுக் கண்டாயா நீ? குடகு பெங்களூரல்ல, நினைத்தவர்கள் நினைத்தபடி வருவதற்கும் போவதற்கும், வரட்டும் பார்ப்போம் உன் எஜமானர்கள். முதலில் உன்னை விடுவித்துக் கொண்டுபோகட்டும், சொல்லி அனுப்பு அவர்களுக்கு," என்ருன்.

கருணுகரமேனன் அரசனுக்கு சமாதானமாகச் சொன்னுன் "சேட்ஜி வெள்ளைக்காரர்களைப் புகழ்ந்து தங்களை இகழ்ந்து மகிழ்பவரல்ல. உண்மையில் அவருக்கும் எனக்கும் அப்படித் தோன்றுகிறது. தாங்கள் ஆங்கிலேயர்களின் நண்பராக இருப்பது எல்லா வகையிலும் நல்லது. குடகினுள் வருவது அவ்வளவு சுலபமல்ல, நாம் பத்து வருடங்கள் போராடமுடியும் என்ருலும் அனுவசியமாக ஏன் போராடவேண்டும்? இவ்வளவுக்கும் ஆங்கிலேயர்கள் கேட்பது என்ன? உங்கள் தங்கையின் குழந்தையை அதன் தாயிடம் அனுப்பிவிடுங்கள் என்று தானே? தங்கள் தங்கையும் அவர் குழந்தையும் சுகமாக இருக்கவேண்டுமென்பதை மற்றவர்கள் சொல்லவேண்டுமா? அது தங்கள் விருப்பமும் தான். தங்கையும் அவள் புருஷனும் எதற்காகவோ பயப்பட்டு வெள்ளையரிடம் ஓடிப் போயிருக்கிருர்கள் குழந்தையை அனுப்பிக் கொடுத்து பயம் வேண்டாம், வாருங்கள், என்று சொல்லுல் ஓடி வருகிருர்கள். தாங்கள் குழந்தையை அனுப்பித்தருவதே தங்களின் நல்லெண்ணத்தின் சாட்சியாக இருக்கும். குழந்தை கையில் கிடைத்ததும் தங்கையும் தங்கை புருஷனும், "அரசருக்குக் கோபமில்லை, அவர் நம்மை மன்னித்துக் காப்பாற்றுவார்" என்று நினைத்துகொள்வார்கள். அவர்கள் திரும்பி வந்து விட்டார்களென்ருல் வெள்ளையர்களோடு விரோதமும் தீர்ந்து விடும்."

அரசன் இந்தப் பேச்சு முழுவதையும் செவிகளில் ஏற்றுக் கொண்டானே இல்லையோ சொல்லமுடியாது. இந்தப் பேச்சு முடிந்து சில நிமிடங்கள் சென்ற பின்னும் அவன் வாய் திறவாமலே உட்கார்ந்திருந்தான். பிறகு இவர்கள் பக்கம் திரும்பி, "குடகின் அரசரோடு சரிசமமாக உட்கார்ந்துகொண்டு பேசுகிற துணிச்சலா உங்களுக்கு? எவ்வளவு கொழுத்துப் போய் விட்டீர்கள் அந்நியர்களின் எச்சிலை உண்டு? உங்கள் கொழுப்புக்குத் தண்டனை உங்கள் தலையைத் துண்டிப்பது தான்; ஆனுல் அப்படிச் செய்யவில்லை, கைதிகளாக்கியிருக்கிறேன். உங்கள் எஜமானர்கள் தவறு என்று மன்னிப்புக் கேட்கட்டும்; உங்களைத் திருப்பி

அனுப்புகிறேன். குடகின் அரசர் உங்களுக்குச் சமம் என்கிற அளவுக்கு இன்னும் மலிந்து விடவில்லை," என்றான்.

பசவன் அவ்விருவரிடமும், "பேச்சு போதும் வெளியே வாருங்கள்" என்று சைகை காட்டினான். அவர்கள் எழுந்திருந்து அவனுடன் வெளியே வந்தார்கள். பசவன் அவர்களிடம், "அரசருக்கு வெள்ளைக்காரர்களின் மீது வெறுப்பு ஏற்பட்டிருக்கிறது. நண்பர்கள் என்று சொல்லிக்கொண்டு பகைவர்களைப் போல நடந்து கொள்கிறார்கள் என்று கோபம். உங்கள் பேரில் அவருக்கு ஒன்றும் இல்லை. அரசரின் தங்கையும், தங்கையின் கணவரும் இங்கே வந்து விட்டால் சண்டை எதுவும் இல்லை. அவர்களை இங்கே அனுப்பும்படி உங்கள் எஜமானர்களுக்கு ஒரு கடிதம் எழுதுங்கள். அதை நான் அவர்களுக்கு அனுப்பிவைக்கிறேன்," என்றான்.

அரசனின் தங்கையும் சென்னபசவய்யனும் அவ்வளவு சுலபமாக குடகுக்குத் திரும்பி வந்து விடமாட்டார்கள் என்பது தூது கோஷ்டியினருக்குத் தெரியும். அவர்கள் திரும்பி வந்தாலொழிய தாங்கள் இங்கிருந்து திரும்பிச் செல்லமுடியாது என்றால் தங்கள் பாடு கஷ்டம் தான் என்பதையும் அவர்கள் அறிவார்கள். வீர ராஜன் சுயநலக்காரன், வீணில் பிறரைக் கொடுமைப் படுத்துபவன்: தனக்கு விரோதமாக நடந்து கொள்கிறார்கள் என்று ஆங்கிலேயரின் பேரில் கோபம் கொண்டு அவன் தங்கள் தலையைச் சீவினாலும் சீவி விடுவான். அங்கிருந்து தப்புவித்துக் கொண்டு போவது எப்படி என்பதையே அவர்கள் யோசிக்கவேண்டியதாயிற்று.

ஒரு நிமிடம் கழித்து மேனன் பசவனிடம், "இது விஷயமாக உங்கள் சக மந்திரிகளுடன் சிறிது பேசலாமா?" என்று கேட்டான். பசவன், "அதற்கொன்றும் தடையில்லை. ஆனால் இது விஷயமாக அவர்கள் ஏதும் செய்யமுடியாது. இது முழுக்க முழுக்க அரசரின் சொந்த விஷயம். வீட்டுத் தங்கை, வீட்டு மாப்பிள்ளை, இவர்களைப் பற்றிய விஷயத்தை மற்றவர்கள் பேசுகிறாற்போல இல்லை" என்றான்.

சேட்டும் மேனனும் தமக்குள் பேசிக்கொண்டு, மேனன் பசவனிடம், 'சரி, அரசரின் உத்தரவைத் தெரிவித்து எங்கள் எஜமானர்களுக்குக் கடிதம் எழுதுகிறோம். அதை பெங்களூருக்கு அனுப்ப ஏற்பாடு செய்யுங்கள். பதில் வரும் வரையில் நாங்கள் இங்கேயே இருக்கிறோம்," என்றான். பசவன், "நீங்கள் எழுதுகிற கடிதத்தை

அரசருக்குக் காட்டவேண்டும்" என்றான். மேனன், "அவசிய மாக" என்று சம்மதித்தான்.

125

இதன் நடுவே நாட்டில் மக்களின் மனம் அரசரின் விஷயத்தில் மிகவும் வெறுப்படைந்து விட்டிருந்தது. தேவம்மாஜியும் சென்ன பசவய்யனும் ஜனங்களுக்கு மிகவும் வேண்டியவர்கள் என்ப தொன்றும் இல்லை, ஆனால் அரசன் தேவம்மாஜியை சரியானபடி நடத்தவில்லை என்பது ஜனங்களுக்குத் தெரியும். பண்டிகையின் போது நடந்த நாடகத்தில் அரசனைக் கேலி செய்ததில் சில பேருக்கு சந்தோஷம்; சிலருக்கு அது சம்மதமில்லை, ஆனால் சென்னபசவய்யன் தேவம்மாஜி இவர்களின் அரண்மனைக்குக் காவல் போட்டு அவர்களைக் கைதிகளாக ஆக்கியது யாருக்குமே சம்மதமில்லை. இவன் இப்படி அநியாயம் செய்ததனால் தேவம் மாஜியும் அவள் கணவனும் தப்பித்துக்கொண்டு ஓடவேண்டிய தாயிற்று. அவர்கள் நாட்டை விட்டு ஓடியது நியாயம் தான்.. அவர்களுடைய கிரகசாரப் பழியில் குழந்தை தவறி விழுந்து இந்த மாமனின் கையில் வந்து அகப்பட்டுக் கொண்டிருக்கிறது; அதைத் தங்கையிடம் அனுப்பாமல் இந்த அண்ணன் ஈடாக வைத்துக் கொண்டிருக்கிறான். இவன் என்றைக்குமே நல்ல வனல்ல; இருந்தாலும் இந்தச் செயல் மற்றவைகளைவிட மிகவும் அநியாயமானது, என்ன கொலைகாரத் தன புத்தி இது? சோறு போட்ட எஜமான் எஜமானி இவர்களுக்கு விசுவாசம் காட்டிய சோமனைக் கழுவிலேற்றிவிட்டானே. அதுவும் எப்படி? ஒரு கழுமரத்தைக்கொண்டு வந்து நடுகிறவரையில் பொறுமை இல்லை. மரக்கிளையை முறித்து சீவி நட்டு அப்பொழுதைக் கப் பொழுதே உயிரைப் போக்கிவிட்டானே! மூன்று நாட்கள் அப் படியே அழுகட்டும் என்று உத்தரவிட்டானே! அப்படிப் பட்ட மனிதனின் உடல் சதை பருந்துக்கும் காக்கைகளுக்கும் ஆகார மாகியது. அவனுடைய எஜமானனுக்கு அவன் உண்மையாக நடந்துகொண்டது ஒரு தவறு என்றால் இவனுடைய சேவகர்கள் எப்படி இவனிடம் விசுவாசமாக நடந்து கொள்வார்கள்? இந்த அரசாட்சி நாளுக்கு நாள் மோசமாகிக்கொண்டு வருகிறது.

எப்படியாவது இதற்கு ஒரு முடிவு ஏற்பட்டால் தான் நன்மை ஏற்படும்.

ஜனங்களிடையே இந்தக் கருத்து எப்படி உதிக்கிறது. அது எப்படிப் பரவுகிறது என்று சொல்வது கஷ்டம். ஆனால் இந்த விஷயத்தில் சோமனின் மனைவியும் தங்கையும் மக்களிடையே இந்த அதிருப்தி வளர்வதற்குக் காரணமானார்கள். சோமனைக் கழுவிலேற்றிவிட்டார்கள் என்று தெரிந்ததுமே அவர்கள் அந்த இடத்திற்கு விரைந்தார்கள். அவனுக்காக வாய் மீது அடித்துக் கொண்டு கதறிக் கதறி அழுதனர். அவனைக் கழுவிலேற்றியவர்களின் வம்சம் நாசமாகப் போகட்டும் என்று சாபமிட்டார்கள். அங்கே காவல் இருந்தவர்கள், "இங்கே வராதீர்கள், நாட்டை விட்டு ஓடுங்கள். கழுவிலேற்றியது யார்? அரசரல்லவா? அவருடைய வம்சம் பாழாகப் போகட்டும் என்கிறீர்களா? தலையைச் சீவி விடுவார்" என்றார்கள். அவர்கள், "இப்படிப் பட்ட புருஷன் அண்ணன் போய்விட்டான். இனி நாங்கள் இருந்து ஆவதென்ன? வரச்சொல் உங்கள் பிசாசு அரசனை; எங்கள் கழுத்தையும் முறித்து எங்கள் ரத்தத்தையும் குடிக்கட்டும்," என்றார்கள். மூன்று நாட்கள் பிணத்தின் அருகிலேயே இருந்து முடிந்த வரையில் காக்கை, கழுகுகளை விரட்டி அவைகள் மீதி விட்டுவைத்திருந்த பிணத்தை எடுத்துக் கொண்டுபோய்ப் புதைத்தார்கள். செய்யவேண்டிய கர்மங்களையெல்லாம் செய்து முடித்து விட்டு அரண்மனையின் எதிரில் வந்து நின்றுகொண்டு, "உன் வம்சம் பாழாய்ப் போக! என் கணவனைக் கொன்றாயா? எங்கள் அண்ணனைக் கொன்றாயா? கரிங்காளி உன்னையும் இப்படியே கழுவிலேற்றட்டும். பூதப்பன் உன் உடலைச் சுட்டுப் பொசுக்கட்டும். உன் பேரே வழங்காமல் போகட்டும்; நாசமாகப்போன முண்டையின் மகனே," என்று நிர்ப்பயமாக அரசனைத் திட்டினார்கள். முதலில் இது அரசனுக்குத் தெரியவில்லை, தெரிந்தபொழுது அவன், "இந்த முண்டைகளையும் கழுவிலேற்றுங்கடா" என்று கட்டளை பிறப்பித்தான். ஆட்கள் சென்று அவர்களை நன்றாக உதைத்து விரட்டினார்கள். அவர்கள் ஆத்திரம் தீரும் மட்டும் அரசனை வைதுகொண்டும், அவன் வம்சத்தைச் சபித்துக்கொண்டும், இவனுக்கு நாய் ஜன்மத்தைக் கொடு என்று கரிங்காளியை வேண்டிக்கொண்டும் மடிகேரி முழுவதும் சுற்றியலைந்தனர்.

இவர்கள் அரண்மனை வாசலில் வாயில் அடித்துக்கொண்டு அழுதபோது ராணி கௌரம்மாஜிக்கு அவர்களின் துயரத்தைக்

கண்டு துயரமும், அவர்களின் சாபத்தைக் கேட்டு பயமும் தோன்றியது. அரசன் சோமனைக் கொன்றிருக்கக் கூடாது என்று அவளுக்குத் தோன்றியது. அதிகமென்றால் அவனைச் சிறையில் அடைத்திருக்கலாம்; சவுக்கடி கொடுத்திருக்கலாம். அதை விட்டு அப்போதைக்கப்போதே அவன் உயிரை வாங்கியது, தானே கொலைகாரனாக நின்று கழுமரம் செய்வித்தது, சோமனை அங்கேயே அதன்மீது ஏற்றியது, இவைகளெல்லாம் ரொம்பவும் மிகையாகப் போய்விட்டன; அரசன் அப்படிச் செய்தால் இந்தப் பெண்கள் இவ்வாறு கதறாமல், சபிக்காமல் இருப்பார்களா? இதற்காக இவர்கள் என்ன கொடுமைக்கு ஆளாவார்களோ என்று வேறு ராணி பயந்தாள். நலலவேளையாக அப்படி ஏதும் நேரிடாமல் அவர்கள் உதை வாங்கிக்கொண்டு அழுதபடியே புறப்பட்டுச் சென்ற பிறகு அவள் ஒரு சிப்பந்தியை அழைத்து, "இந்தப் பெண்கள் நம்மால் துயரத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள். நான் சொன்னதாகத் தெரிவிக்காமல் அவர்களுக்கு ஆகார வசதிகள் செய்து கொடுத்து நல்ல பேச்சு சொல்லி அனுப்புங்கள்," என்றாள். அவன் இந்தப் புண்ணியாத்மா இருப்பதால்தான் இந்த அரண்மனை அரண்மனையாக இருக்கிறது என்று நினைத்துக்கொண்டு தனக்கு வேண்டியவர்கள் மூலமாக ரகசியமாக அவள் விருப்பத்தை நிறைவேற்றினான். மாலையில் வந்து, அந்தப் பெண்கள் ஊரை விட்டுப் போய் விட்டார்கள், இனிக் கவலையில்லை, என்று ராணிக்குத் தெரிவித்தான்.

சின்ன தீட்சிதன், லக்ஷ்மீ நாராயணய்யாவின் தம்பி மகன் சூரி இருவரும் தங்களுக்கு வேண்டியவர்கள் மூலமாக இந்தப் பெண்களுக்கு சொல்லச் சொல்லி, பெங்களூருக்குச் சென்று ஆங்கில அதிகாரியிடம் புகார் செய்யும்படி யோசனை கூறினர். இந்தப் பெண்கள் அதுவே சரியென்று ஊர் விட்டு ஊர் சென்று அரகல கூடை அடைந்து, அங்கிருந்து வழி விசாரித்துக்கொண்டு பெங்களூருக்கு வந்து, ரெஸிடெண்டின் வீட்டெதிரில் நின்றுகொண்டு வாயில் அடித்துக்கொண்டனர். யார் என்று அவனுடைய சேவகர்கள் விசாரித்தபொழுது தமது சங்கதியைச் சொன்னார்கள்.

சென்னபசவய்யன் தனது கதையைச் சொல்லி ரெஸிடெண்டின் உதவியைக் கோரியபொழுது சோமனுக்கு ஏற்பட்ட கதியை அவ்வளவாக அழுத்திச் சொல்லவில்லை. அந்த விஷயம் ரெஸிடெண்டுக்கு நன்றாக மனத்தில் பதிந்தது சோமனின் மனைவியும்

தங்கையும் வந்து அவனெதிரில் அழுது அரற்றி விஷயத்தைக் கூறியபோது தான். அவர்கள் சொன்னதை முழுவதும் கேட்ட பிறகு அவன் அரசனின் பேரில் மட்டுமல்லாமல் சென்னபசவனின் மீதும் வெறுப்புக்கொண்டான். அப்பெண்களிடம், "உங்களுக்கு மிகவும் அநியாயம் செய்துவிட்டார்கள். நான் உங்கள் அரசரை இது விஷயமாக விசாரித்துக் கொள்கிறேன். அதுவரையில் நீங்கள் இங்கேயே இருப்பதானால் இருங்கள. நான் உங்களைப் பார்த்துக்கொள்கிறேன்," என்று கூறி அவர்களைப் பார்த்துக் கொள்ளவேண்டிய ஏற்பாடுகளைச் செய்தான். மறுபடியும் சென்னபசவய்யனைக் கண்டபோது இவர்கள் வந்த விஷயத்தைச் சொல்லி, இவர்கள் விஷயமாக அவன் சிரத்தை எடுத்துக்கொள்ளாதது தவறு என்பதை நயமாகச் சுட்டிக் காண்பித்தான்.

126

"குழந்தையை அனுப்பாதது மட்டுமல்ல, நீங்கள் அனுப்பிய தூதுகோஷ்டியின் இருவரையும் நான் இங்கேயே பிடித்து வைத்துக்கொண்டிருக்கிறேன். தங்கையும் அவள் கணவனும் இங்கே வந்து சேர்ந்த பிறகுதான் நான் உங்கள் மனிதர்களை உங்களிடம் அனுப்பமுடியும்," என்று வீரராஜன் எழுதிய கடிதம் பெங்களூருக்கு வந்து சேர்ந்தபொழுது ரெஸிடெண்ட் காஸா மேஜர், சேனாதிபதி பிரேசர், நாகப்பூர் ரெஸிடெண்ட் கிரஹாம் மூவரும் மந்திராலோசனை செய்தார்கள் முதலில், கிரஹாம் மடிகேரிக்குச் சென்று குழந்தையையும் தூதுவர்களையும் விடுவித்துக்கொண்டு வரலாம் என்று அவர்கள் யோசித்தார்கள். கிரஹாம் மடிகேரிக்குச் செல்வதற்குத் தயாராக இருந்தான். அவனுக்கு அங்கே அபாயம் நேரிடாமல் இருக்க, கூட யாரை யாவது அனுப்பவேண்டுமென்றால் தானே அவனுடன் செல்வதாக பிரேசர் சொன்னான். ஆனால் இந்த யோசனை காஸா மேஜருக்குப் பிடிக்கவில்லை.

அவன், தாராசேட்டையும் மேனனையும் பிடித்து நிறுத்தி வைத்திருப்பதுபோல வீரராஜன் கிரஹாம்மையும் பிடித்து வைத்துக்கொண்டால் என்ன செய்வது என்று கேட்டான். "இந்த அரசனின் பிடிவாதம் பைத்தியக் காரத்தனத்தின் எல்லையைத்

தொட்டு நிற்கிறது. உண்மையில் இவன் நம்மை எதிர்த்துப் பிழைக்க முடியுமா? இருந்தாலும் தானே மிகவும் பலமுள்ளவன் போலவும் நாங்கள் பலவீனர்கள் என்பது போலவும் நடந்து கொள்கிறான். கிரஹாம்மைச் சிறையிலடைத்து நம்மைக் கேவலப்படுத்தினால் நாம் குடகின் மீது படையெடுக்கவேண்டியிருக்கும். இந்தப் பைத்தியம் கிரஹாம்மைக் கொன்றுவிட்டால் என்ன செய்வது? இந்த விபத்திற்கு இடம் கொடுக்க நான் தயாராயில்லை" என்றான்.

இந்த பயத்துடன் அவன் மனத்தில் வேறொரு யோசனையும் இருந்தது. அதை அவன் விவரித்துச் சொல்லவில்லை. "கிரஹாம் சென்று, அரசன் அவன் பேச்சுக்கு சம்மதித்து, சண்டை பரிகாரமாயிற்று என்று வைத்துக்கொள்வோம். நாளை மறுபடியும் சண்டை இருந்தே இருக்கிறது. ஒவ்வொரு முறையும் கிரஹாம்மை வரவழைப்பது சாத்தியமா? பழைய நட்பு எப்படியிருந்தாலும் இப்பொழுது அரசன் மிகவும் தவறாக நடந்து கொண்டிருக்கிறான். இவனைப் பதவியிலிருந்து விலக்குவதற்கு இது சரியான சந்தர்ப்பம். இதை ஏன் இழக்கவேண்டும்? சரித்திரம் திரும்ப நிகழட்டும், குடகு நம்முடையதாகட்டும்."

மந்திராலோசனையின் பயனாக குடகின் மீது படையெடுக்க எல்லா ஏற்பாடுகளும் நடைபெறட்டும் என்று முடிவாயிற்று.

இந்தச் சமயத்தில் அப்பாஜி ரெஸிடெண்டிடம் வந்து தான் ஏற்கனவே சீப்-கமிஷனரிடம் செய்து கொண்டிருந்த பிரார்த்தனையை நினைவுபடுத்தினான். ரெஸிடெண்ட் பழைய தஸ்தாவேஜுகளை எடுத்துப் பார்த்து அவனிடம், "நீங்கள் குடகுக்கு அரசராக வேண்டுமென்கிறீர்களா? அது விஷயமாக நீங்கள் வற்புறுத்த மாட்டீர்கள் என்று இதில் எழுதியிருக்கிறது," என்றான். அப்பாஜி, "அது உண்மை; நான் பட்டம் ஏற்றுக்கொள்ளமாட்டேன் என்று உறுதி கூறியிருக்கிறேன்; அதை நான் மறக்க மாட்டேன். இப்பொழுது இருக்கும் அரசரை விலக்கினால் எனது மகன் வீரப்பன் அரச பதவிக்கு உரிமையுடையவன். அவனை அரசனாக்க வேண்டும்," என்று பதிலளித்தான்.

"அரசரின் மகள்? உங்கள் மகனை விட அவள் உரிமை அதிகமல்லவா?"

"அரசரின் மகளானால் என்ன, என் மகனானால் என்ன? அவளுக்கே கொடுப்பதென்றாலும் கொடுக்கலாம்."

"ஜனங்கள் என்ன சொல்லுவார்களோ?"

"அதையும் விசாரிக்கலாம்."

"நீங்கள் எங்கள் பக்கம் இருக்கிறீர்களா? இந்த விஷயத்தில் உங்களாலான சகாயத்தைச் செய்தால் நாங்கள் உங்கள் வேண்டுகோள் விஷயமாக எங்களாலான மட்டும் அநுகூலமாக நடந்துகொள்வோம்."

"சரி."

"உங்கள் பேச்சையெல்லாம் சென்னபசவய்யன், தேவம்மாஜி இவர்களுக்குத் தெரிவிக்கலாமோ?"

"தெரிவித்தால் தவறில்லை; இருந்தாலும் நான்கு நாட்கள் தாமதிப்பது நல்லது."

"சரி; நாங்கள் என்ன செய்யவேண்டுமென்பது நிச்சயமானவுடன் உங்களுக்குத் தெரியப்படுத்துகிறோம். அது வரையில் நீங்கள் எங்களுடனேயே இருங்கள்."

என்று கூறி ரெஸிடெண்ட் அப்பாஜியை பெங்களூரில் நிறுத்தி வைத்துக்கொண்டான். அவன் தப்பி ஓடி விடாமல் காவல் போட்டு வைத்தான். அதேபோல சென்னபசவய்யன், தேவம்மாஜி இவர்களும் பெங்களூரை விட்டு ஓடி விடாமல் காவல் ஏற்பாடு செய்தான்.

"குடகின் மீது இன்னும் பதினைந்து நாட்களில் படையெடுக்க ஏற்பாடு செய்துள்ளேன். இந்தப் பிரதேசத்திற்குள் நான்கு பக்கங்களிலிருந்தும் நமது படைகள் நுழையவேண்டும். மலபார், மங்களூர் கலெக்டர்களுக்குக் கடிதம் எழுதியிருக்கிறேன். தாங்களும் அவர்களுக்குக் கடிதம் எழுதி உத்தரவு அனுப்ப வேண்டும்," என்று மதருஸ் கவர்னருக்கு ஒரு கடிதம் எழுதி அனுப்பினான்.

இதற்கிடையில் மேனன் எழுதிய கடிதம் வந்து சேர்ந்தது. குடகின்மீது படையெடுப்பதைத் தவிர வேறு வழியில்லை என்று முடிவாயிற்று.

பதினைந்து நாட்கள் கழிந்தன. மதருஸிலிருந்தும் மங்களூரிலிருந்தும் பதில்கள் வந்தன. இதனிடையே தேவையான அளவு வீரர்கள் நான்கு திசைகளிலும் சென்று வழியிலுள்ள கிராமங்களின் தலைவர்களைக் கண்டு, படை வருகிறது, அதற்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்கவேண்டும் என்று அறிவித்தார்கள்

இதன் மத்தியில் சென்னைக்குப் பிரயாணம் வந்திருந்த கவர்னர் ஜெனரல் பெண்டிங்க் வீரராஜனுக்கு அறிவுரையும் எச்சரிக்கையும் கூடிய ஒரு கடிதத்தை எழுதினான். வீரராஜன் அதைப் பார்த்து இன்னும் அதிகக் கோபமடைந்தான். ஆங்கிலேயர்களை மிலேச்சர்கள் என்றும் பரதேசிகள் என்றும் நிந்தித்து, இவர்களை இந்தியாவை விட்டே விரட்டவேண்டும், நமது ஜனங்கள் புரட்சி செய்யவேண்டும் என்று பிரகடனம் செய்தான்.

மாசி மாதம் முதல் வாரத்தில் சேனாதிபதி பிரேசர் சேனையின் மூன்று தளங்களை மூன்று தலைவர்களின் கீழ் அவரவர்களுக்குக் குறிப்பிடப்பட்ட வழியில் அனுப்பிவிட்டு தான் உபசேனாதிபதி விண்ட்ஸேயுடன் ஒரு தளத்தை நடத்திக் கொண்டு ஸ்ரீரங்கபட்டணம் வழியாகச் சென்று பிரியா பட்டணத்தை நோக்கிப் புறப்பட்டான்.

127

குழந்தை அரசனிடம் கிடைத்து அரண்மனைக்கு வந்து சேர்ந்த அன்று அதைத் தன்வசம் பெற்றுக்கொண்ட ராணி ஏதோ விசித்திர நாடகம் ஒன்றில் தனக்கு இஷ்டமில்லாத பாத்திரம் ஒன்றைத் தாங்கி நடிக்கும் வெறும் பொம்மை என்ற பாவனையை அநுபவித்தாள்.

தேவம்மாஜி சிறையிலிருந்தபொழுது அவள் கணவன் அவளை வந்து காண அவள் சம்மதித்தது உண்மை. அரசனின் குரூரத்தைத் தன்னால் இயன்ற அளவு குறைத்து, நாத்தனாரைக் கருணையுடன் நடத்தியதாக இருக்கட்டும் என்பது அவள் நோக்கம். அந்த நோக்கம் அவள் மனம் நிர்மாணித்திருந்த எல்லையைத் தாண்டி இப்பொழுது இந்தச் சிக்கலில் வந்து முடிந்திருக்கிறது. அந்த தாய் தந்தையர் குழந்தையைக் காப்பாற்றுவதற்காக வீட்டைத் துறந்து ஓடினார்கள், ஆனால் அவர்கள்தான் ஓடினார்களே ஒழிய குழந்தை அபாயத்திலிருந்து தப்பவில்லை; அவர்களது முயற்சியின் பயனாக அது மேலும் அதிக அபாயத்திற்குள்ளாயிற்று. இப்பொழுது இது தன் கைகளுக்கு வந்திருக்கிறது; தான் இதைக் காப்பாற்ற வேண்டும். காப்பாற்ற இயலுமா? தங்களை எல்லாம் மீறிய சக்தி ஒன்று இருக்கிறது

என்பதை இதுவரையிலும் பார்த்தாயிற்று. இனிமேலும் பார்த்தால்? "ஓங்காரா, அம்பிகே, நீங்களே எல்லாவற்றிற்கும் காரண கர்த்தர்கள்; கிரகங்கள் உங்கள் கண்களின் சைகைக்கு அஞ்சி நடப்பவை. இந்தக் குழந்தையின்மீது கிருபை இருக்கட்டும்; என்மீது கிருபை இருக்கட்டும்; அரசனின்மீது கிருபை இருக்கட்டும். அவரால் இந்தக் குழந்தைக்கு ஏதும் அபாயம் நேரிடாமல் இருக்கட்டும். இந்த அருள்புரிந்து இந்த வீட்டைக் காப்பாற்றுங்கள்." இவ்வாறு ராணி தீன பாவத்துடன் கடவுளை வேண்டிக் கொண்டாள். தன்னால் முடிந்தவரையில் ஜாக்கிரதையாக இருந்து குழந்தையைக் காப்பாற்ற வேண்டுமென்று நிச்சயித்துக் கொண்டாள்.

குழந்தை என்னவோ ராணிவாசத்தில் சிரித்துக்கொண்டே வளர்ந்தது. வந்த நாள்கூட அது தாயைக் காணாமல் கஷ்டப்பட்டதாகத் தெரியவில்லை. அரண்மனைக் குழந்தையானதாலோ என்னமோ! ஏழைகளின் வீட்டில் குழந்தைக்குத் தாயே நூற்றுக்கு நூறு ஆதாரம்; தாய்க்குக் குழந்தையே சகல ஆஸ்தியும். பணக்காரப் புண்ணியசாலிகளின் வீட்டில் குழந்தைக்கு ஆதாரம் தாயல்ல, தாதி. அப்பங்கொளத்து அரண்மனையில் மூன்று சேடிகளின் ஆதரவில் வளர்ந்த குழந்தை இங்கே வேறு மூன்று சேடிகளின் கைகளை யடைந்தது மடிகேரியும் அப்பங்கொளமும் ஒன்றுதான் என்பது போல் விளையாடிக்கொண்டிருந்தது. அந்தச் சின்னஞ்சிறு கண்கள் தாய் முகத்தைக் கண்டு மகிழ்ந்திருந்து மறுபடியும் அதை விரும்புவதாலால் இங்கே அந்தத் தாய் முகத்தைப் போலவே இன்னொரு முகம் அதன் அருகே வந்து சிரித்து சிரிப்பு மூட்டி அதை மகிழ்வித்துக்கொண்டிருந்தது. தேவம்மாஜி விட்ட இடத்தில் ராஜகுமாரி கண்டாள்; தேவம்மாஜி காண்பித்திராத ஒரு அன்புப் பிரவாகத்துடன் குழந்தையை உச்சி முகந்து சீராட்டிப் பாராட்டினாள்.

ராணிவாசத்தில் ஒரு குழந்தை விளையாடி வெகு நாட்களாகி விட்டன. அநாதரவாக அழும் ஒரு குழந்தையின் குரலால் வீட்டுக்கு வீடே நெகிழ்கிறது. இப்படிப் பார்க்கும்போது ஒவ்வொரு மனிதனுக்கும் ஒரு தனித்துவம் இருப்பதுபோல ஒவ்வொரு வீட்டுக்கும் ஒரு தனித்துவம் இருப்பது தெரிகிறது. அது ஒரு பச்சிளம் குழந்தையின் நகைப்புக்கு ஒளிர்கிறது; அதன் அழுகைக்கு இரங்குகிறது; இதுவிஷயத்தில் அரண்மனையும்

மற்ற வீடுகளைப்போல ஒரு வீடுதான். வெகுநாட்களுக்குப் பிறகு வந்திருக்கும் இந்தக் குழந்தையின் சான்னித்தியத்தால் ராணி வாசத்தில் ஒரு புது களை கட்டியிருந்தது. வளர்ந்தவர்கள் மட்டுமே வாழும் வீட்டில் பணிப் பெண்ணானவள் அழைக்கப் பட்டா லல்லாமல் எஜமானியோடு பேசமுடியாது; அழைக்கப் பட்டபோதும் மிகவும் சம்பிரமத்தோடு பேசமுடியாது. வேலை யில்லாமல் எஜமானியும் பணிப் பெண்ணை அழைக்கமுடியாது; அழைத்து, பணிப்பெண் அருகில் வந்ததும் கௌரவத்தை விட்டு விட்டு சலுகையோடு அவளுடன் பேசமுடியாது. இவர்களுக் கிடையே ஒரு சிறு குழந்தை இருந்துவிட்டால் போதும். வாழ்க் கையின் வண்ணமே சட்டென்று மாறிவிடும். வேறு காரணமே இல்லாமல் பணிப்பெண் குழந்தையின் அருகில் உட்கார்ந் துகொண்டு சிரிக்கலாம், பேசலாம். அதற்கு விளையாட்டுக் காட்டுவதற்காகவென்று தானும் விளையாடலாம் அதே போல காரணமில்லாமல் எஜமானி தன் கௌரதையை ஒரு வஸ்திரத்தைக் கழட்டிவைப்பது போலக் கழட்டிவிட்டு வெறும் பெண்ணாக குழந்தையுடன் விளையாடலாம். ஒரு தாய் வேதனையை அநுபவித்துப் பெற்ற குழந்தை நூறு ஜீவன்களுக் குத் தாய்மை இன்பத்தைக் கொடுக்கிறது. தனது விளையாட்டுக் களால் சுற்றிலுமுள்ள நிலம், சுவர், கூரைகளுக்கும் ஒரு புதுப் பிரகாசத்தை அளிக்கிறது. வெகு நாட்களாக இந்த அநுபவத்தைப் பெற்றிராத மடிகேரி அரண்மனை தேவம்மாஜி யின் குழந்தை மூலமாக அந்த பாக்கியத்தின் மகிழ்ச்சியை அநுபவித்தது.

அரசன் ஒருவனுக்குத்தான் இது ஒரு ஆனந்தம் என்று தோன்றவில்லை. ராணிவாசத்தில் உள்புறத்தில் யாராவது குழந்தையுடன் விளையாடிக்கொண்டிருந்தால் இவன் அறையில் அந்த விளையாட்டின் சப்தம், கனைப்பு இவை கேட்காது. ஒவ் வொரு சமயத்தில் குழந்தைக்கு விளையாட்டுக் காண்பிக்கும் சேடி அதை ராணிவாசத்தின் இந்தப் பக்கத்துக் கதவண்டை கொண்டுவந்து விடுவாள். அரசருக்குக் கேட்கட்டும் என்ற நோக்கம் ஏதும் இல்லாமல் அதனுடன் விளையாடுவாள். அந்தக் குரல் கேட்டால் அரசனுக்கு ஒரே வெறுப்பு. அறுபது நாழிகை களில் ஒரு நாழிகைகூட அவள் சென்னபசவய்யனையும் தேவம் மாஜியையும் மறந்ததில்லை. தான் அவர்களுக்கு எதுவும் கெடுதல் செய்ததாகவே அவனுக்குத் தோன்றவில்லை. அவர்கள் தனக்குச்

செய்த தவறுகள் வரிசை வரிசையாக அவன் கண்முன் நிற்கும். அவைகளை ஒவ்வொன்றாக அவன் நினைப்பான். நினைத்து நினைத்து இதயத்திலே ரோஷத்தை வளர்த்துக்கொள்வான். "வேசி மக்களே, இங்கிருந்து என்னைக் கெடுத்தது போதாதென்று பகைவர்களைத் தூண்டிவிடப் போயிருக்கிறீர்களா? இருக்கட்டும். உங்களைப் பார்த்துக்கொள்கிறேன். விபசார நாய்களா, நீங்கள் கடவுள் கடவுள் என்று சொல்கிறீர்களே அந்தக் கடவுள் உங்கள் குழந்தையை என் கையில் கொடுத்திருக்கிறான். இங்கே வந்தீர்களென்றால் உங்கள் தலை; வரவில்லையென்றால் உங்கள் குழந்தையின் தலை. நீங்கள் தப்பித்துக் கொண்டுவிட்டால் உங்கள் குழந்தை கடனைத் தீர்க்கும்; என் நாய்களுக்கு இரையாகும். விபசார நாய்களே, பாம்புகளே, சுடுகாட்டில் நீங்கள் பெற்றீர்கள் அந்தக் குழந்தையை. அது செத்து உங்கள் கடனைக் கழிக்கட்டும்" என்று திட்டுவான். குழந்தையின் மகிழ்ச்சியைக் கண்டு பொறுக்காமல் அதன் குரல் கேட்காத இடத்திற்கு, தனது அறையின் உட்புறத்திற்குச் சென்றுவிடுவான்.

வீட்டுக்கும், குழந்தைக்கும், அரசனுக்கும் நன்மை உண்டாகட்டும் என்று ராணி தீட்சிதரிடம் சொல்லி கோவிலில் நித்ய பூஜை நடத்தச் செய்தாள். தீட்சிதரை வரவழைத்து இன்னும் என்ன செய்யலாம் என்று விசாரித்தாள். அவர் வெகு நேரம் ஒன்றும் பேசாமலிருந்து பிறகு, "எனக்குத் தெரிந்தவைகளையெல்லாம் நான் ஏற்கனவே தெரிவித்துள்ளேன், என் தாயே. ஒரு பக்கம் யமதர்ஷ்டரம். ஒரு பக்கம் அமிர்தஹஸ்தம். ஓங்காரன் கருணை புரிந்தால் அமிர்தஹஸ்தம் வெல்லும். குழந்தைக்குப் பயமில்லை. தங்கள் புண்ணியம் சாதிக்கமுடியாத சங்கதியா இது? நீங்கள் உத்தரவிடுகிறபடி பூஜை நடக்கும் வேறு எதுவும் செய்யவேண்டுமென்று எனக்குத் தோன்றவில்லை, நல்ல வழியில் நடத்துமாறு ஈஸ்வரனை வேண்டிக் கொண்டாயிற்று, இனி மேலும் நமக்கு அதுவே கதி," என்று ஏதோ சொல்லப் போய் பேசாமலிருந்தார். ராணி. "இனனும் என்ன, சொல்லுங்கள்?" என்றாள். தீட்சிதர், "இல்லை, அதெல்லாம் ஒன்றுமில்லை" என்றார்.

"அப்படியல்ல, மனத்தில் தோன்றியதைச் சொல்லிவிடுங்கள். முடியுமானால் செய்வோம்."

"அரசரின் காலைப் பிடித்துக்கொண்டு கெஞ்சி குழந்தையை அதன் பெற்றோர்களிடம் அனுப்பிவிட்டால் எவ்வளவு புண்ணியம் என்பதை நான் சொல்லவேண்டாம். ஆனால் அரசர் இதற்குச் சம்

மதிக்கமாட்டார். முயற்சி செய்யலாம்; பயன் இருக்காது. அதனால் தான் அதைச் சொல்லவில்லை."

ராணி பேசவில்லை. தீட்சிதரின் வாக்கு உண்மை. பதில் சொல்வதற்கு ஒன்றும் இல்லையாதலால் அவள் மௌனமாக இருந்து விட்டாள்.

128

நாட்கள் கழிந்து, வாரங்கள் கழிந்து பெங்களூரிலிருந்தும், மங்களூரிலிருந்தும் மற்ற இடங்களிலிருந்தும் கடிதங்கள் வந்தன. அந்த இடங்களுக்கெல்லாம் கடிதங்களும் சென்றன. இந்தக் கடிதங்களில் அடங்கியுள்ள விஷயங்கள் அரசன், பசவன், ஒரு அந்தரங்க குமாஸ்தா இவர்களுக்கு மாத்திரம் தெரியும், மற்றவர்கள் யாருக்கும் என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பதே தெரியாது.

"வயிற்றிலுதித்த சிசுவை நினைக்க ஒண்ணாத அபாயத்தில் சிக்க வைத்துவிட்டு தேவம்மாஜி விலகி நிற்கமாட்டாள். ஏதாவது செய்து கணவனைச் சம்மதிக்கச் செய்து, முடியுமானால் அவனை அழைத்துக்கொண்டோ, இல்லாவிட்டால் அவனை விட்டு விட்டோ, தான் மட்டும் வருவாள்" என்று ராணியின் மன ஆழத்தில் ஒரு நம்பிக்கை இருந்தது, வெளியிலிருந்து வந்த தூதுவர்களைச் சிறை பிடித்து அரசன் குழந்தையை அடகாக வைத்துக் கொண்டிருக்கும் சங்கதி தெரிந்தவுடன் அவள், இவ்வளவு தூரம் இந்த நெருக்கடியை வளர விட்டவர்கள் இனி இங்கே வரமாட்டார்கள் என்று தெரிந்துகொண்டு குழந்தைக்காகப் பரிதாபப்பட்டாள். தீட்சிதர் சொன்னபடி அரசனை வேண்டிக்கொள்வது என்று முடிவு செய்தாள்.

ராணிக்குத் தெரிந்தது போல, அரசன் தூது கோஷ்டியாரைச் சிறையிலடைத்தது, குழந்தையை அடமானப் பொருளாக வைத்திருப்பது இவையெல்லாம் ஊர் முழுவதும் தெரிந்து விட்டிருந்தது, நாடு முழுவதும் பரவியது. இது ஏதோ ஆபத்துக்குத் தான் என்று எல்லோருக்கும் தோன்றியது.

எல்லோருக்கும் ஒரே யோசனை, அரசன் முரண்டு செய்து ஆங்கிலேயர்களை எதிர்த்துக் கொண்டால் அவர்கள் படை

யெடுத்து வரப்போவது நிச்சயம். அவர்கள் அப்படிச் செய்தால் அரசன் குழந்தையையும் தூது கோஷ்டியாரையும் கொன்றாலும் கொன்றுவிடலாம். அந்நியர்கள் புகுந்தால் நாட்டில் சீர்கேடு தான். இப்பொழுது எல்லாம் சீராக இருக்கிறதென்று அல்ல. ஆனால் இப்பொழுது மடிகேரியில் அரண்மனையருகில் நடக்கும் அவிவேகத்திற்கு ஒரு எல்லையிருக்கிறது. நாடு முழுவதும் ஏதோ ஒருவகையாக வாழ்ந்து வருகிறது. அந்நியர்கள் வந்து விட்டால் ஏற்படக் கூடிய அலங்கோலத்தில் யாரும் தங்கள் வீட்டில் நிச்சிந்தையாக வாழமுடியும் என்று சொல்வதற்கில்லை.

அதெல்லாம் சரிதான். ஆனால் அதையெல்லாம் தடுப்பதற்கு யார் என்ன செய்யமுடியும்? இத்தகைய சந்தர்ப்பங்களில் வாழ்க்கை என்பது ஆண்டவன் எழுதிவைத்துள்ள ஒரு நாடகமாகி விடுகிறது. கவி எழுதி முடித்து ஆடுங்கள் என்று கையில் கொடுத்திருக்கும் நாடகம்; நடிகன் அதை நடிக்கலாமே ஒழிய மாற்ற முடியாது. இதைத்தான் நமது முன்னோர்கள் விதி என்றார்கள். காட்டின் நடு வழியே புறப்பட்ட ரதம் எதிரில் புலி வருகிறது என்பதற்காக காட்டுக்குள் புகமுடியாது. பாதையிலே தான் போயாகவேண்டும். வாழ்க்கையும் அப்படியே. ரதத்திற்கும் வாழ்க்கைக்கும் ஒரே வித்தியாசம்; புலிக்குப் பயந்து ரதம் ஒரே இடத்தில் நின்று விடலாம, வாழ்க்கையில் சிக்கிக்கொண்டவர்களுக்கு இந்த பாக்கியமும் இல்லை.

நடந்துள்ள விஷயங்கள் குழந்தைக்கும் தூது கோஷ்டியாருக்கும் மட்டுமல்லாமல் அரசனுக்கும் அபாயம் விளைவிக்கக்கூடியது என்பதை அநேகர் தெரிந்துகொண்டார்கள். இவர்களில் உத்தய்ய தக்கன் ஒருவன். மடிகேரியில் போக்கிரிகளின் கையில் வாங்கியிருக்கவேண்டிய உதையிலிருந்து தப்பிக்கொண்டு ஒரு நாள் போபண்ணாவில் வீட்டில் இருந்துவிட்டு தக்கன் தன் ஊருக்குச் சென்று விட்டான். பிறகு நடந்த சங்கதிகள் ஒவ்வொன்றாக அவன் செவிகளில் வந்து விழுந்தன. தூதுகோஷ்டியினர் சிறைப்பட்ட செய்தியைக் கேள்விப்பட்டபோது அவன் தனக்கும் லிங்கராஜனுக்கும இருந்த நட்பை நினைத்துக்கொண்டு, இந்தப் பையன் கேட்காவிட்டாலும் நான் சொல்லவேண்டியதைச் சொல்லிவிடவேண்டும் என நினைத்து அரசருக்கு அறிவுரை கூறுவதற்காக மடிகேரிக்கு வந்தான்.

காக்கை உட்காரப் பனம் பழம் விழுந்தது என்பது போல ராணி அன்று மகளைத் தன் அருகில அழைத்து, "புட்டவ்வா,

உன்னிடம் ஒன்று சொல்லுகிறேன். நீ அதை அப்பாஜியிடம் அறிவிக்கவேண்டும்" என்றாள்.

"என்ன அது அம்மாஜி?"

"குழந்தை தாயைவிட்டு அகன்று வெகு நாட்கள் ஆகிவிட்டன. அதை அவளிடம் அனுப்பச் சொல்லவேண்டுமம்மா."

"அம்மாஜி, குழந்தை நம்மிடமே இருக்கட்டும்."

"இல்லை புட்டவ்வா; அதன் தாயும் இங்கே இருந்தால் அதுவும் இருக்கலாம். அம்மாவின் கையிலிருந்து விடுவித்து நாம் அதை வைத்துக்கொள்ளக்கூடாது. என்னிடமிருந்து பிரித்து உன்னை யாராவது எடுத்துக்கொண்டு போனால்?"

ராஜகுமாரி சிறிது யோசித்தாள். ராணியை விட்டுத் தானே தன்னை விட்டு ராணியோ வாழ்வது சாத்தியம் அல்ல என்று அவளுக்குத் தோன்றியது. அவள், "அப்பாஜியிடம் சொல்லுகிறேன் அம்மாஜி" என்றாள்.

வீரராஜன் பகல் உணவை முடித்துக்கொண்டு வந்து மஞ்சத்தின் மீது கால் நீட்டிய வாறு சாய்ந்து படுத்துக் கொண்டிருந்த பொழுது மகள் தந்தையின் அருகில் வந்தாள். கட்டிலின் அருகே முழங்கால்களை ஊன்றி உட்கார்ந்துகொண்டு தந்தையின் மார்பின் மீது தன் தலையை வைத்து "அப்பாஜி" என்று அழைத்தாள்.

வீரராஜனுக்கு வாழ்க்கையில் இப்பொழுது மகிழ்ச்சி தரக்கூடியது இது ஒன்று தான். மகள் 'அப்பாஜி' என்று அழைக்கும் பொழுது அவன் உடலிலுள்ள நரம்புகளெல்லாம் ஒரு முறை பூரித்துத் தணியும். இந்தத் தன்னுடைய மகளுக்கு துரோகம் செய்ய நினைக்கிறார்களென்பதற்காகவே அவன் தன் தங்கையின் மீதும் அவள் கணவனின் மீதும் துவேஷத்தை வளர்த்துக் கொண்டிருந்தான். தன் மகள் பெண்ணாகையால் அவளை விலக்கி விட்டு ஆண் என்கிற காரணத்தால் தனது தங்கையின் மகனை ஜனங்கள் அரசனாக்கிவிடக் கூடும் என்று அவனுக்குப் பயம். இதன் காரணமாக அவனுக்குத் தங்கையின் குழந்தை மீது எல்லையில்லாத பொறாமை. தங்கையும் தங்கையின் கணவனும் ஓடிப் போகாமல் அப்பங்கொளத்திலேயே இருந்திருந்தாலும் கூட இந்தப் பொறாமை வலுத்த கணத்தில் அவன் தன் மருமகனின் கழுத்தை நெரித்துக் கொன்றிருப்பான். மகள் அருகில் வந்து மார்பின் மீது தலையைப் புதைத்துக்கொண்டு "அப்பாஜி" என்று

கூப்பிட்டதும் வீரராஜன் சொல்லமுடியாத ஒரு ஆனந்தத்தை அநுபவித்தான். அவன், "என்னம்மா?" என்று கேட்டான்.

"அப்பாஜி, பாப்பா எவ்வளவு நன்ருக விளையாடுகிறது தெரியுமோ?"

"ஊம்."

"அம்மாவைக் காணுமல் அது அழுகிறது அப்பாஜி; அதை அத்தையிடம் அனுப்பிவிடுவோம் அப்பாஜி."

ராஜகுமாரி தன் பேச்சை முடிக்கவில்லை. வீர ராஜன் உதைத்த பந்துபோல விருட்டென்று எழுந்தான். மகளை தூரத் தள்ளினுன்; "யாரடி உனக்கு இதைச் சொல்லிக் கொடுத்தார்கள்? போ அப்பால். அந்த வேசி சொல்லிக் கொடுத்தாளா, உன்னைப் பெற்றவள்? போ போ" என்று கத்தினுன். மகளை அடித்து விடுவதுபோலக் கையை ஓங்கினுன்.

ராணி கதவுக் கப்பால் நின்றிருந்தாள். கணவனின் கர்ஜனையைக் கேட்டு வேகமாக ஓடிவந்து மகளைக் கட்டியணைத்துக் கொண்டு அங்கிருந்து அகன்று ராணி வாசத்துக்கு வந்தாள்.

தந்தை கூச்சல் போட்டதும் ராஜகுமாரி பிரமித்துப்போய்விட்டாள். அவன் அவளிடம் இதுபோல என்றுமே நடந்துகொண்டதில்லை. எப்பொழுதும் தன்னிடம் பிரீதியையே காட்டிவந்த தந்தை மற்றவர்களைக் கோபித்துக்கொள்வதைப் போலத் தன்னைக் கோபித்துக்கொண்டு போ போ என்று கத்தியபோது அது உண்மை என்றே அவளால நம்ப முடியவில்லை. அரைக் கணத்தில் அது உண்மைதான் என்று தெளிந்தபோது பயம், ஆச்சரியம் இவைகளினுல அவளுக்குக் கை கால் ஓடவில்லை. தூரத் தள்ளிவிட்டு அடிப்பதற்காகக் கையை ஓங்கிக்கொண்டு வந்த தந்தையிடமிருந்து தப்பித்துக் கொள்ளவும் தோன்ருமல் கம்பத்தைப் போல நின்று விட்டாள். முதல் கணத்தில் அவள் முகத்தில் தோன்றிய ஆச்சரியமும் பயமும் சித்திரத்தில் தீட்டிய பாவங்களைப்போல அவள் முகத்தில் பதிந்து விட்டிருந்தன. ராணி வந்து அவளை இழுத்துக்கொண்டு போகாமலிருந்திருந்தால் அரசன் மகளை அடித்து விட்டிருப்பானே என்னவோ? நல்ல வேளை அப்படி நடக்கவில்லை. தாய் தன்னை அழைத்துச் சென்று கொண்டிருந்தபோது ராஜகுமாரி தந்தையின் செயலின் குரூரத்தை நினைந்தாள். தன் தந்தை தன்னை இவ்வாறு நடத்தி விட்டாரே என்று அவமானமும் துக்கமும் அவள் நெஞ்சைப

பிழிந்தன. இதற்கு முன் அனுபவித்திராத ஒரு துக்கத்தை அனுப வித்ததனால் பொறுக்க மாட்டாமல் விம்மி விம்மி அழுதாள். சாவு என்றால் என்னவென்று அறியாத அச்சிறுமி இனி வாழவேண் டாம் என நினைக்கத் தொடங்கிவிட்டாள்.

தனது கோபத்தால் மகளுக்கு இவ்வளவு கடும் வேதனை ஏற்படக்கூடுமென்று வீரராஜனுக்குத் தெரியாது. தெரிந்திருந் தால் வேறு மாதிரியாக நடந்துகொண்டிருப்பான் என்றல்ல. மனிதனின் சுபாவம் காட்டின் குறுக்கே செல்லும் ராஜமார்க்கம் தான். வீரராஜன் இப்படி அல்லாமல் வேறு எப்படியும் நடந்து கொண்டிருக்கலாம் என்று நினைக்கவேண்டியதில்லை. அரசனுக்கு அந்தக் கணத்தில் தோன்றிக்கொண்டிருந்தது ஒரே யோசனை: "நான் இவ்வளவெல்லாம் செய்து கொண்டிருப்பது இந்த மகளுக்காக, இவள் வந்து தனக்கு புத்தி சொல்லுகிறாளே! இவளுடைய நலத்தை மறந்து இவள் தாயார் இவளது தாயாதிக் குச் சாதகமாக நடந்துகொள்கிறாளே! தனக்குத் தெரியாது, இந்த முட்டாள்களுக்குத் தெரியுமோ?"

129

அரண்மனையில் இந்த சங்கதி நடந்திருப்பது தெரியாதவனாக உத்தய்யதக்கன் அரசனைக் காண வந்தான்.

புறப்படுவதற்கு முன்னால் அவன் போபண்ணாவிடம் தான் புறப்படும் நோக்கத்தைச் சொன்னான்; போபண்ணா. "தவிட்டை இடிக்கப் புறப்பட்டிருக்கிறீர்கள். இடிக்கும் கை தான் சளைக்கும். போய் வாருங்கள்," என்றான்.

தக்கன் அரசரின் அறைவாசல் வரை சென்று அங்கிருந்த ஆளிடம், "தக்கர் வந்திருக்கிறார் என்று அரசரிடம் தெரிவியப்பா" என்றான். அவன், இன்று வேண்டாம், தக்கரே; நாளைக்கு வந்து பார்ப்பீர்களாம்" என்றான்.

தக்கன் சிறிது யோசித்து, "அப்படியா சொல்லுகிறாய்?" என்று கேட்டான்.

"அரசரின் மனம் இன்று அமைதியாக இல்லை."

"பசவய்யன் இல்லையா?"

"இருக்கிறார் தக்கரே, கொஞ்சம் உட்காருங்கள், வருவார்."

அப்பொழுது பசவன் வந்தான்; தக்கனைப் பார்த்து, "என்ன தயவு செய்துள்ளீர்கள் தக்கர்?" என்று கேட்டான்.

"அரசரைப் பார்க்கலாமென்று வந்தேன். கொஞ்சம் பேச வேண்டியதிருக்கிறது."

"விஷயம் என்னவென்று சொன்னால் அவரிடம் தெரிவித்து, பார்க்கலாமா என்று கேட்டுச் சொல்லுகிறேன்."

வேறு சமயமாக இருந்தால் தக்கன் அவனிடம் விஷயம் என்ன வென்று சொல்லியிருக்கமாட்டான். இப்பொழுது கிழவனுக்கு இவன் உதவியும் வேண்டியிருந்தது. ஆகையால் அவன் வழக்கத்திற்கும் மேலான பொறுமையுடன் "அரசரின் தங்கை குழந்தையை அதன் தாயிடம் அனுப்பிவிடுங்கள் என்று சொல்ல வேண்டும். இதைச் சொல் என்று லிங்கராஜர் என்னைத் தூண்டு வது போல இருக்கிறது," என்றான்.

தக்கன் அரசரிடம் இந்தப் பேச்சு சொல்வது பசவனுக்குச் சம்மதமே. வெள்ளையர்களை எதிர்த்துக்கொண்டு அரசன் அழிந்து போகப் போகிறான் என்ற பயம் சமீபத்தில் பசவனுக்கு அதிக மாக ஏற்பட்டிருந்தது. அவன், "இருங்கள் தக்கரே, சொல்லிப் பார்க்கிறேன்" என்று அவன் அரசனின் அறைக்குள் சென்றான்.

பசவன் அருகில் வந்து பலிவுடன் நின்றதைக் கண்டு வீர ராஜன், "என்னடாது?" என்று கேட்டான்.

"உத்தயய தக்கன் வந்திருக்கிறார். பார்க்கவேணுமாம்."

"படிதான் கொடுத்தாயிற்றே. இன்னும் என்ன வேண்டுமாம்?"

"தங்கையம்மாவின் குழந்தையைப் பற்றிப் பேசவேண்டுமாம்."

"குழந்தையை என்ன செய்யவேண்டுமென்கிறான்? சாகடிக்கச் சொல்கிறானா, விட்டுவிடச் சொல்கிறானா? சாகடிப்பதானால் அவ னிடமே கொடு. அதை வாழவைப்பதைப் பற்றி என்னிடம் பேசவேண்டாம்."

"வெள்ளையர்கள் மேலே வந்து விழுந்தால் இந்த ஜனங்களின் ஆதரவு நமக்கு வேண்டும் அரசே. எல்லோரையும் அலட்சியப் படுத்துவது நல்லதல்ல."

"என்ன செய்யச் சொல்லுகிறாய்?"

"நீங்கள் சொல்வது நியாயம். பார்ப்போம்! என்று சொன் னால் போதும் அரசே."

"நீயே அப்படிச் சொல். இவர்களெல்லாம் வந்து இந்தப் பேச்சை எடுத்தால் என் தலை சுற்றுகிறது."

"இங்கேயே அழைத்து வருகிறேன் அரசே. அவன் சொல்வதைக் கேட்டுக்கொண்டு ஊம் என்று சொல்லி, பார்க்கலாம் என்று தெரிவித்தால் போதும். அவர் நம்முடையவராகத் திரும்பிப் போவார்."

"சரி, அழைத்துவா. என்ன உளறுகிறானோ உளறித் துலைத்து விட்டுப் போகட்டும்."

பசவன் தக்கனிடம் சென்று அவனை அழைத்துவந்தான். அரசனின் அறையில் ஆசனத்தின்மீது அமரச்செய்து, "அரசருக்கு உடல்நலமில்லை. நீங்கள் சொல்லவேண்டியதைச் சொல்லுங்கள்; கேட்டுக்கொள்வார்" என்றான்.

தக்கன், "சரியப்பா, தடையில்லை லிங்கராஜர் என்னை அவருக்குச் சமமாக நடத்திவந்தார் அரசே. தங்களையும் தங்கள் தங்கையையும் சிறு குழந்தைகளாக இருக்கும் போதிலிருந்தே எனக்குத் தெரியும். அவர் இறக்கும்போது என்னிடம், 'நான் போய்விட்டாலும் நீ போய்விட்டமாதிரி இல்லை உத்தய்யா. சௌகரியப்பட்டபோதெல்லாம் குழந்தைகளின் நலத்தைக் கவனித்துக்கொள்ளுங்கள்,' என்றார். என் பேச்சை யார் கேட்க வேண்டும். நான் விலகியே இருந்துவிட்டேன்; நீங்களும் என்னை எதற்கும் அழைக்கவில்லை. படி தவறியது. ஆறு மாதங்களுக்கு முன்னால் வந்து தங்களைத் தொந்தரவு செய்ய வேண்டியதாயிற்று. குழந்தையின் விஷயம் இப்போது, மறுபடியும் வந்திருக்கிறேன். தங்கள் தந்தை இருந்தால் அவரே சொல்லியிருப்பார். அவர் இல்லை, நான் சொல்ல வேண்டியிருக்கிறது."

இதைச் சொல்லிவிட்டுத் தக்கன் பேசாமலிருந்தான். தான் சொல்வதை அரசன் கேட்டுக்கொண்டிருக்கிறானா இல்லையா என்று அவனுக்குத் தெரியவில்லை. வீரராஜன் பசவனிடம், "ஏண்டா, சொல்லித் தொலைத்துவிட்டுப் போகச் சொல்லேன்," என்றான். பசவன் தக்கனைப் பார்த்து, "சொல்லுங்கள் தக்கரே, கேட்கிறார்" என்று கூறினான்.

தக்கன் : "பெற்ற தந்தைக்கு மகன் வேறு மகள் வேறு அல்ல. மகனின் மகளும், மகளின மகளும் வேறு வேறல்ல. வீட்டு விஷயம் நூறு இருக்கலாம்; அண்ணனும் தங்கையும் சண்டை போட்டுக்கொள்ளலாம். எதுவாக இருந்தாலும் பெரியவர்

களோடு நிற்கவேண்டும். குழந்தை என்பது தெய்வம். தாயின் மேல் கோபம் என்று குழந்தையை அநாதையாக்கக் கூடாது."

அரசன் ஏதும் சொல்லவில்லை. அவன் இவ்வளவு பேச்சையும் கேட்டுக்கொண்டு பேசாமலிருந்ததே பசவனுக்கு ஆச்சரியம். அவன் தக்கனிடம், "குழந்தையைத் தாயிடம் அனுப்பிவிடச் சொல்கிறீர்கள், இல்லையா?" என்றான்.

"ஆமாம்ப்பா, அதைத்தான் நான் சொல்லுகிறேன்."

"நல்லது, பார்க்கலாம் என்று சொல்கிறார் அரசர்."

அரசன் ஒன்றும் சொல்லவில்லை. சொல்லவேண்டியதைச் சொல்லியாயிற்று என்று தக்கன் எழுந்திருந்தான். பசவன் அவனை அழைத்துக்கொண்டு வெளியே வந்து, "அரசருக்கு உடல் நலமில்லை என்று சொன்னேன் அல்லவா? அதனால் தான் அவர் ஒன்றும் சொல்லவில்லை" என்று சமாதானப் படுத்தி அவனை அனுப்பிவைத்தான்.

130

அரண்மனையில் குழந்தை விஷயமாக அரசன் வெகுண்ட செய்தி லக்ஷ்மீநாராயணய்யாவின் வீட்டிற்கும் எட்டியது. ஏற்கெனவே சாவித்ரம்மா அரண்மனைக்கு வந்து ராணியுடன் இது விஷயமாகப் பேசியிருந்தாள். குழந்தையைத் தாயாரிடம் அனுப்பிவிட வேண்டுமென்று ராணி விரும்பியதைப் போலவே கிழவியும் விரும்பினாள். இன்று இந்த அமர்க்களம் நடந்ததை அறிந்து அவள் சென்று அரசனுக்கே உபாயமாக தனது விருப்பத்தைத் தெரிவிப்பதென்று நிச்சயித்துக்கொண்டாள்.

மாலையில் ராணிவாசத்தில் கௌரம்மாஜி குழந்தையுடன் விளையாடிக்கொண்டிருந்தபொழுது சாவித்ரம்மா வந்தாள். தான் வந்திருப்பதன் நோக்கத்தை ராணிக்குத் தெரிவித்தாள். ராணி, "அவசியம் போய்ச் சொல்லுங்கள். உங்கள் நாக்கின் புண்ணியம் எப்படியிருக்குமோ பார்ப்போம்; மகளின் வார்த்தைதான் வேண்டாததாகிவிட்டது. பாட்டியின் பேச்சாவது எடுபடட்டும்," என்றாள்.

கிழவி ஒரு பணிப் பெண்ணை அழைத்துக்கொண்டு அரசரின் அறையின் அருகில் சென்றாள். அரசனைப் பார்க்கவேண்டுமென்று பசவனிடம் சொன்னாள். அவன், "அவருக்கு உடல் நலம் இல்லை, நாளைக்கு வாருங்கள் பாட்டி" என்றான்.

"நாளை ஏது, நான் ஏது? வந்தாயிற்று, பார்த்து விட்டுப்போய் விடுகிறேன். அரசன் வேண்டாமென்று சொல்லப் போவதில்லை, போய்ச் சொல்."

"என்ன விஷயம் பாட்டி? அதையாவது சொல்லுங்கள்."

"வேறு என்ன விஷயம்? அரசரின் தங்கை பிள்ளை விஷயம் தான்."

"ஐயோ, அந்தப் பேச்சையே எடுக்காதீர்கள் அவர் இப்பொழுதே நெருப்பாக இருக்கிறார்."

"நெருப்பாக இருந்தால் எனக்கென்ன? சுட்டால் வெந்து ஒழிந்துபோகிறேன், போய்ச் சொல். வா என்று சொல்லட்டும்."

இவர்களின் பேச்சு உள்ளே அரசனுக்குக் கேட்டது. அவன் பசவனை, "யாரோடுடா பேசுகிறாய்? என்ன சமாசாரம்?" என்று கேட்டான்.

பசவன் அரசனின் அருகில் சென்று, "சாதம்மாஜீ வந்திருக்கிறார்கள். குழந்தை விஷயமாகப் பேசவேண்டுமாம். நான் கூடாது என்றேன்."

"அதற்கென்ன சொன்னாள்? குழந்தை வேண்டுமென்கிறாளா?"

சாவித்ரம்மா இதற்குள்ளாக தானே அறைக்குள் நுழைந்து விட்டாள். அரசனின் பேச்சைக் கேட்டு, "குழந்தை வேண்டுமென்றால் பெற்றுக் கொள்ளக்கூடிய வயசா எனக்கு, புட்டப் பாஜி? வயிறு வற்றிவிட்டது, மார்பு வாடிவிட்டது. அரசனும் அரசியும் குழந்தைகள் பெறுவதைப் பார்த்து சந்தோஷப்படுவதே போதும். பெற்ற குழந்தையைப் பார்த்துக் கொள்ளுங்கள்; தங்கையின் குழந்தையை அதன் தாயிடம அனுப்பிவிடுங்கள். பெரியவர்கள் விஷயம் பெரியவர்களோடு நிற்கட்டும்; குழந்தையை வதைக்கவேண்டாம்," என்றாள்.

உத்தய்யதக்கனின் பேச்சைக் கேட்டு எப்படியோ சகித்துக் கொண்ட வீரராஜனுக்கு முதியவளின் இந்தப் பேச்சைக் கேட்டதும் பொறுமையெல்லாம் கரைந்துவிட்டது. படுத்திருந்தவன் விருட்டென்று எழுந்து உட்கார்ந்துகொண்டு, "அந்தப் பக்கம

தள்ளுடா இந்தக் கிழட்டு மூதேவியை. காதில் மூத்திரம் பெய்தேன் என்ருள் ஒரு நாள்; இன்று ஈயத்தைக் காய்ச்சி ஊற்றி விடப்போகிறேன். தொலையச் சொல் அப்பால். இனி இந்தப் பக்கம் அடியெடுத்து வைக்கக்கூடாது," என்று கர்ஜித்தான்.

அரசன் தலை சுற்றுகிறது என்று சொன்னதனுல் பசவனுக்கு அவன் எங்கே மூர்ச்சித்து விழுந்து விடுவானே என்று பயம். அவன் அரசனின் கால்களில் விழுந்து, "அரசர் எழுந்திருக்க வேண்டாம், படுத்தே இருங்கள். இதை நான் பார்த்துக் கொள்கிறேன்," என்று சாமர்த்தியமாக அவனைப் பிடித்துப் படுக்க வைத்து விட்டு சாவித்ரமாவிடம் கைகூப்பியபடி வந்து, "பேசாதீர்கள்" என்று சைகை காட்டி அவளை வெளியே அழைத்துக் கொண்டு வந்தான். சாவித்ரம்மாவுக்கு அரசனின் நடத்தையால் கோபத்தைவிட அதிகமாக ஆச்சரியம் ஏற்பட்டது. அரசனின் மனம் மிகவும் கெட்டுப் போய்விட்டது, அதைக் கடவுள் தான் திருத்தவேண்டும், அரசனைக் காப்பாற்றவேண்டும் என்று கிழவி வேண்டிக்கொண்டாள். ஒன்றும் பேசாமல் ராணி வாசத்திற்குச் சென்று நடந்த சங்கதிகளை ராணியிடம் சொல்லிவிட்டு தன் வீட்டிற்குச் சென்ருள்.

131

கிழவியை அனுப்பிவிட்டு பசவன் அரசனிடம் வந்தான். அரசன் கோபத்தினுல் தனக்குத்தானே பேசிக்கொண்டிருந்தான். பசவன் அருகில் வந்து நின்றபொழுது, "விபசாரி, வேசிமகள், என்றைக்கோ இவள் பெரியவள் ஆக இருந்தால இப்போதும் அவள் என்னைவிடப் பெரியவளா? மொட்டச்சியைப் போகச் சொல்லவில்லை, மொட்டச்சியை? என் மாப்பிள்ளையை நான் என்ன வேண்டுமானுலும் செய்கிறேன். இவளுக்கென்ன அதைப் பற்றி?" என்ருன்.

பசவன், "கிழவி புறப்பட்டுப் போய்விட்டாள் அரசே. இந்தப் பேச்சுவேண்டாம் அரசே, இந்தப் பேச்சு வேண்டாம்" என்ருன்.

"வெள்ளையர்களுக்குக் கோபமூட்டாதே என்று நீ எனக்குப் போதிப்பது. அப்பன் செத்த உனக்கு நான் தான் அப்பன் என்று அந்தக் கிழவன் சொல்வது, தங்கையின் குழந்தையைக்

காப்பாற்று என்று இந்த மூதேவி வந்து சொல்வது, குடகின் அரச பதவி நல்ல மட்டத்திற்கு வந்திருக்கிறது!''

அரசன் கோபத்தில் பேசுகிறான் என்பதை பசவன் புரிந்து கொண்டான். ஒன்றும் பதில் பேசவில்லை.

"இந்தக் குழந்தையை எதனால் செய்திருக்கிறார்களாம்? எல்லாரையும் போல தோலினாலேயா அல்லது தங்கத்தாலோ? அதன் வயிற்றில் வைரமும், வைடூரியமும் நிரப்பியிருக்கிறார்களா? வயிற்றைக் கிழித்துக் காண்பித்தால் தெரியும், அதுவும் எல்லாரையும் போலத்தான் என்று.''

இவ்வாறு விட்டு விட்டு நிமிடத்திற்கொரு முறை அல்லது இரண்டு நிமிடங்களுக்கொரு முறை அரசன் தனக்குத்தானே கோபமாகப் பேசிக்கொண்டு படுத்திருந்தான். பசவன் சிறிது நேரம் அருகில் நின்று அவன் பேச்சைக் கேட்டுவிட்டுப் பிறகு வெளியே சென்று ஆட்களிடம், "டேய் அரசருக்கு உடம்பு சரியாக இல்லை. கூப்பிட்டாலும கூப்பிடுவார். இங்கேயே இருங்கள். ஒன்றும் பேசாதீர்கள், ஏதாவது கேட்டால் என்னைக் கூப்பிடுங்கள்'' என்று உத்தர விட்டு விட்டு தன் வேலையைக் கவனிக்கச் சென்றான்.

132

மத்தியான்னம் மகளின் பேச்சைக் கேட்டுக் கோபமடைந்து கத்தியதிலிருந்தே வீரராஜனின் மனம் அவனை யறியாமல் கலங்கிப் போயிருந்தது. இப்படிப் பட்ட சமயங்களில் அவன் செய்து கொள்ளும் சிகிச்சை சிறிது மது அருந்துவது தான். இன்றைக்கு அவன் கொஞ்சமாக இல்லாமல் நிறையவே குடித்தான். அதன் பலனாக வழக்கத்தை மீறிய பொறுமையுடன், அல்ல, பலவீனத்தால் பசவனின் பேச்சுக்கு இணங்கி உத்தரவு தக்கனைத் திட்டாமல் அனுப்பினான். மறுபடியும் சிறிது மது அருந்திவிட்டு சாவித்ரம்மா வந்தபொழுது வெகுண்டு எல்லையை மறந்து அவளைத் திட்டி பேயாட்டம் ஆடி ஓய்ந்தான். இவைகளினால் அவனது உடலில் உஷ்ணம் ஏறியது. உடலின் உஷ்ணத்தோடு உள்ளமும் காய்ந்து ஜ்வலித்தது.

தனக்கு இந்த வருஷத்தின் யோகம் கம்சயோகமல்லவா? மருமகன் கிருஷ்ணன் மாமன் கம்சனைக் கொன்றான். தானும் மருமகனின் கையால் சாவேன் என்று தானே தீட்சிதர் சொன்னார்?

தான் தங்கையை எவ்வளவு பிரியத்துடன் நடத்தினான்! அவள் கணவன் துஷ்டன். இந்தத் தங்கை அவனோடு சேர்ந்துகொண்டு தன்னைப் பீடித்தாள், வேறு விதியில்லாமல் அவளைச் சிறையிலடைத்தால் திருட்டுத்தனமாக கர்ப்பம் தரித்தாள். இந்தக் குழந்தையை பெற்றாள். குழந்தையை வழியில் எறிந்து விட்டு அந்நியர்களிடம் சரண் புகுந்தாள். இந்த முண்டங்களைத் தண்டிக்காமல் விட்டால் கதி என்ன? தண்டிக்கவேண்டும். ஆனால் அவர்கள் எங்கே? அவர்களில்லை, அவர்களுக்குப் பிரதிநிதியாக தண்டனை பெறுவதற்கென்றே தான் இது தன் கைகளில் சிக்கியிருக்கவேண்டும் அல்லவா?

தாயாதிகளைக் கொன்று பெரியப்பா அரசனாக வாழ்ந்தான். தாயாதிகளைக் கொல்லாமல் தன் தகப்பன் அரசனாக முடியவில்லை, வாழ இயலவில்லை; தான் அரசனாகி தைரியமாக வாழ முடியவில்லை; பெரியப்பாவின் மகனைக் கொல்விக்க வேண்டியதாயிற்று; வேண்டாத தாயாதிகளையெல்லாம் நிர்மூலமாக்க வேண்டியதாயிற்று.

இப்பொழுது நூறு கண்கள் தன்னைப் பார்த்துக்கொண்டிருக்கின்றன. தான் போய்விட்டால் தன் மகள் பட்டத்துக்கு வரவேண்டும். 'அவளல்ல, நான் தான் வரவேண்டும்' என்கிறாள் ஓடிப்போன இந்தத் தங்கை. தங்கையின் புருஷன், அந்த முட்டாள், தங்கள் குழந்தை தான் அரசனாக வரவேண்டும் என்று சொல்லுகிறான்.

தங்கையின் மகன்! தன் மகள் இருக்கும்போது இந்தத் தங்கையின் மகனுக்குப் பட்டமா? இந்தக் குழந்தை இருந்தாலல்லவா பட்டத்திற்கு வருவதைப் பற்றிய பேச்சு? இந்தப் புழுவை நசுக்கிவிடவேண்டும்; அதன் அப்பனின் வயிறு எரியவேண்டும்.

சில நிமிடங்களுக் கொருமுறை எழுந்திருந்து அரசன் ஒரு வாய், இரண்டு வாய் மது அருந்தினான். உடம்பின் காய்ச்சல் அதிகரித்தது. மனத்தின் காய்ச்சலும் அதிகரித்தது.

இரவு நீண்டது. அரண்மனையில் எல்லோரும் படுத்துவிட்டார்கள். பசவன் அரசனின் அறைக்கு வெளிப்புறமிருந்த அறையில்

காவலாகப் படுத்துக்கொண்டான். அரசனுக்கு சரியாகத் தூக்கம் வரவில்லை. அரைகுறைத் தூக்கத்தில் ஒரு கனவு கண்டான்.

தன் அருகில் தந்தை லிங்கராஜன் நின்று கொண்டிருக்கிறான். எதிரே தங்கையின் குழந்தை உட்கார்ந்திருக்கிறது. யாரோ வந்தார்கள். சட்டென்று தன்னருகில் வந்து தன் தலைமீதிருந்த கிரீடத்தை எடுத்துக்கொண்டு போய் அக்குழந்தையின் தலைமீது வைத்து விட்டார்கள். குழந்தையின் ஒரு பக்கத்தில் தாய் தேவம்மாஜி, மற்றொரு பக்கத்தில் தந்தை சென்னபசவய்யன், எதிரில் மைசூர் ரெஸிடெண்ட், பெரிய அதிகாரி.

அரசனுக்கு இது தன் மனப்பிரந்தியினால் ஏற்பட்டதென்று தோன்றவில்லை. பின்னால் நிகழப்போகும் சம்பவங்களின் முன னறிவிப்பு என்றே அவன் நம்பினான். குழந்தையைத் தீர்த்து விடவேண்டும் என்று நிச்சயம் செய்துகொண்டான்.

இந்த நிச்சயம் செய்து கொண்ட அரசன் உள் அறைக்குச் சென்று ஒரு அரிவாளை எடுத்துக்கொண்டான். நிசப்தமாகத் தனது அறையை விட்டு வெளிப்பட்டு ராணிவாசத்தை அடைந் தான். கதவுகளின் அருகில் காவலாளிகள் உட்கார்ந்து தூங்கி வழிந்து கொண்டிருந்தார்கள். இவன் வந்ததை அவர்கள் கவனிக்கவில்லை. அரசன் மெதுவாக ராணியின் அறைக்குள் புகுந்தான். வெளிப்புற அறையில் மகள் படுத்துக்கொண்டிருக் கிறாள். கட்டிலின் கீழே பணிப்பெண். நடு அறையில் குழந்தை யின் தொட்டில். அதில் குழந்தை தூங்கிக்கொண்டிருக்கிறது பணிப்பெண் அருகில் படுத்திருக்கிறாள். மூன்றாவது அறையில் ராணி படுத்திருக்கிறாள்.

அரசன் தொட்டிலின் அருகில் நின்றான். குழந்தையை நன்றாக உற்றுப் பார்த்தான். அரிவாளை எடுத்து குழந்தையின் கழுத்து மீது வைத்து ஒரு அழுத்து அழுத்தினான். தூக்கத்தில் புரள் வதைப் போல ஒரு தடவை உடலைக் குலுக்கி குழந்தை அசைவற் றுப்போய் விட்டது. அழுத்திய அரிவாளை குழந்தையின் கழுத் திலேயே விட்டு விட்டு சப்தம் செய்யாமல் ராணி வாசத்தி லிருந்து புறப்பட்டுத் தனதறைக்குச் சென்றான்.

எல்லோரும் அவரவர்களிடத்தில் தூங்கி வழிந்து கொண்டிருக் கிறார்கள். அரசன், "இவர்கள் காவல் இருக்கும் லட்சணம் இது தான் போலிருக்கிறது" என்று நினைத்துக்கொண்டான். நாற் காலியில் அமர்ந்து பின்னால் சாய்ந்து கொண்டான்.

அப்பொழுது அவன் மனத்தில் ஏதோ பயம் தோன்றியது. அவன் "டேய் பசவா, இருக்கியாடா முண்டமே," என்று கூப்பிட்டான்.

133

நீங்கை, தங்கை புருஷன் இவர்கள் மேலுள்ள துவேஷம்; மகள், ராணி இவர்கள் பேரில் ஏற்பட்ட வெறுப்பு; உத்தய்யன், சாவித்ரம்மா இவர்கள் மீதுள்ள கோபம்; இவை அரசனின் உடல் ஜுரத்தைப்போல அவன் குரலையும் விகாரமாக்கியிருந்தன. தங்கையின் குழந்தையைக் கொல்ல அவன் மனத்தை உறுதிப் படுத்திக்கொண்டுதான் சென்றான். திரும்பி வருவதற்குள்ளாக அவன் மனம் அந்தக் கொடுஞ் செயலின் கோரத்தால் தைரியத்தை இழந்துவிட்டது. அவன் பசவனைக் கூப்பிட்ட குரல் மிகவும் பலவீனமானதாக இருந்தது; பசவனுக்கு அந்தக் குரல் மிகவும் விகாரமாகக் கேட்டது.

கூப்பிட்டது அரசன்தான்; ஆனால் குரல் அவனுடையதல்ல. பசவன் திடுக்கிட்டு படுக்கையினின்றும் எழுந்தான். விகாரமான அக்குரலினால் ஏற்பட்ட பயத்தோடு அரசனின் அறைக்குள் நடந்து வந்தான்.

அரசன் மறுபடியும், "வந்தியாடா நொண்டி?" என்றான்.

அரசனின் 'நொண்டி' என்ற இந்த அழைப்புக்கு ஏதும் அர்த்தம் இல்லை என்பதை பசவன் அறிவான். இளம் சிறுவனாக இருந்த நாள் முதற்கொண்டு அரசன் தனது நண்பனை சில வேளைகளில் கோபத்தில் 'நொண்டி' என்று கூப்பிட்டது போலவே சில வேளைகளில் ஹாஸ்யத்திற்காகவும், சில வேளைகளில் பிரியத்துடனும் அவ்வாறு கூப்பிட்டுக்கொண்டு வந்திருக்கிறான். அவன் வாயிலிருந்து வரும் அச்சொல் இவன் செவிகளுக்கு அர்த்தமற்றதாகப் போய்விட்டது. பசவன் என்பதுபோல அதுவும் ஒரு பெயராகப் போய்விட்டது.

அரசனின் குரல் முதலைப் போல விகாரமாகவே இருந்தது. பசவன் அருகில் மண்டியிட்டு அமர்ந்துகொண்டு, "வந்தேன் அரசே, வந்து விட்டேன். காய்ச்சல் அதிகமாக இருக்கிறதா? உடம்பு சுடுகிறதா?" என்று கேட்டான்.

வீரராஜன், "அந்தப் புழுவை நசுக்கி விட்டு வந்து விட்டேண்டா" என்றான்.

பசவனுக்கு அது புரியவில்லை. ஜுரம் அதிகமாக இருக்கிறது, அரசன் உளறுகிறான் என்று நினைத்து அவனது நெற்றியின் மீது கைவைத்துப் பார்த்தான். ஜுரம் சாதாரணமாகத்தான் இருந்தது. நினைவை இழக்கச் செய்யக்கூடிய ஜுரமல்ல, அவன், "என்ன சொன்னீர்கள் அரசே? தூக்கக் கலக்கமா?" என்று கேட்டான்.

"எவ்வளவு தடவை சொல்லச் சொல்கிறாயடா? தங்கையின் குழந்தையை முடித்துவிட்டு வந்து விட்டேன்."

இதற்குள்ளாக வீரராஜனின் குரல் வழக்கமான குரலாக மாறிவிட்டது. பசவன் வந்து அவன் அருகில் உட்கார்ந்ததும் அவன் மனத்திற்குச் சிறிது தைரியம் வந்தது. அவன் சொன்னதைக் கேட்டு பசவன் திடுக்கிட்டான். "ஐயோ அரசே!" என்று அலறி விட்டான்.

"ஏண்டா, பேடிப் பயலே, ஐயோ என்ன? போய்ப் படுத்துக் கொள் போ."

அரசனின் குரல் இப்போது மிகவும் உறுதியாக இருந்தது. பசவன் எழுந்து வெளியே வந்து தன் படுக்கையில் உட்கார்ந்து கொண்டான்; படுக்கவில்லை.

வீரராஜனுக்கு தங்கையின் மீதும், அவள் புருஷனின் மீதும் மிகுந்த கோபம் இருக்கிறது. அதற்கு இந்தக் குழந்தை பலி, அவன் குழந்தையை எந்த வகையில் ஹிம்ஸிப்பானோ அல்லது கொன்றே விடுவானோ, என்ற பயம் குழந்தை கிடைத்த அன்று முதலே பசவனுக்கு உண்டு, கொல்வது என்ற முடிவானால் அவன் அந்த வேலையைத் தன்னிடம்தான் ஒப்படைப்பான். அதை எவ்வாறு நிறைவேற்றுவது என்று கூட அவன் இரண்டொரு முறை யோசித்தது உண்டு. இப்பொழுது பார்த்தால் அரசனின் கோபம் அவனைக் கொலைகாரனாகவே செய்து விட்டதே, எல்லை மீறிய கோபத்தை ஜனங்கள் "சண்டாளக் கோபம்" என்று கூறுவதை பசவன் அறிவான். அதன் பொருள் இப்பொழுதுதான் அவனுக்கு விளங்கியது. அரசன் தன் கைகளாலேயே இந்தக் காரியத்தைச் செய்திருக்கவேண்டுமா?

எப்படியோ இந்தக் காரியம் தன் கைகளால் நடைபெறாமல் தப்பியது; அது வரையில் நல்லது. இவ்வாறு பசவனின் மனத்

தின் ஏதோ ஒரு மூலையில் ஒரு சமாதானம் ஏற்பட்டது. குழந்தையைக் கொல் என்ற கட்டளை பிறப்பிக்கப்பட்டிருந்தால் பசவன் அதை நிறைவேற்றத் தயங்கியிருப்பான் என்றல்ல; ஆனால் கோரத்தைக் கண்டு சகித்துக்கொள்ளக்கூடிய சேவகன் கூட அதைச் சகித்துக்கொள்ளவேண்டிய தேவை இல்லையென்றால் நல்லதென்றே மகிழ்ச்சியடைகிறான்.

இந்த நினைவுகள் முடிந்ததும் பசவனின் அடுத்த யோசனை அரசனின் இச் செயலின் விளைவுகள் என்னவாக இருக்கப் போகின்றனவோ என்பது. நாடு முழுவதும் அரசனை ஏசப் போவது நிச்சயம். குழந்தையைத் திருப்பி அனுப்பியிருந்தால் அதனால் ஏதாவது அபாயம் ஏற்பட்டிருக்குமோ, ஏற்பட்டிருக்காதோ? அதைக் கொன்றதனால் அதைவிட மோசமான ஆபத்து ஏற்பட்டிருக்கிறது. தங்கையும் தங்கை புருஷனும் என்றுமே நண்பர்களாக இல்லை. இப்பொழுது அவர்கள் காரணமாக ஆங்கிலேயர்களும் நண்பர்களல்ல. அரசன் அரசனாக இருப்பது முடியுமோ முடியாதோ, ஒன்றும் நிச்சயமாகச் சொல்வதற்கில்லை.

தன் அரசன் இந்தக் காரியத்தைச் செய்துவிட்டான். தான் அவனைக் காப்பாற்றுவது எப்படி?

பசவனின் மனம் இந்த கட்டத்தில் மேற்கொண்டு யோசிக்க முடியாமல் நின்றுவிட்டது. அரசன் ஒழிந்தால் கூடவே தானும் ஒழிந்தேன் என்ற அடிப்படை எண்ணமே இந்த யோசனைகளுக்கெல்லாம் காரணமாக இருக்கக்கூடும். ஆனால் இந்த எண்ணம் எங்கோ ஆழத்தில் புதைந்துகிடந்தது. மேலே வரவில்லை முதலில் வரவில்லை, முன் வரவில்லை.

அரை நாழிகை கழித்து பசவன் ராணிவாசத்தின் கதவருகே சென்று இந்த கோர சம்பவம் நடந்திருப்பதை ராணிக்குச் சொல்லி அனுப்புவதா என்று யோசித்தான். அந்தக் கணத்தில் அவனுக்கு அரசன் பிரமையினால் இவ்வாறு சொல்லியிருக்கலாம், குழந்தை க்ஷேமமாகவே இருக்கக்கூடும், என்று தோன்றியது. இதுவரையில் தோன்றாத இந்த எண்ணம் இப்பொழுது தோன்றி, "ஆஹா, அரசர் குழந்தையைக் கொல்லாமலிருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்!" என்று எண்ணி விவரிக்க முடியாத ஒரு திருப்தியை அவன் அநுபவித்தான்

134

அப்பொழுது ராணிவாசத்தின் உள்ளேயிருந்து "ஐயோ" என்று அலறும் சப்தம் கேட்டது.

குழந்தை தினமும் இந்நேரத்துக்கு விழித்துக்கொண்டு அழுவது வழக்கம். அன்று தொட்டிலின் அருகே படுத்திருந்த தாதி விழித்துக் கொண்டவள், குழந்தை வழக்கம்போல் கூட எழுந்திருக்கவில்லையே, எவ்வளவு அசந்து தூங்குகிறது என்று நினைத்துக் கொண்டு படுத்தபடியே தொட்டிலை ஆட்டி விட்டுத் திரும்பிப் படுத்துக்கொண்டாள்.

அதே சமயத்தில் ராணியும் விழித்துக்கொண்டாள். அவள் பணிப் பெண்ணை அழைத்து, "படுக்கை ஈரமாகியிருக்கப் போகிறது. பார்த்து வேறு துணி மாற்றிப் போடச் சொல்," என்றாள்.

பணிப் பெண் எழுந்து உடகார்ந்தாள்; குழந்தையைப் பார்த்தாள். கழுத்தின்மேல் பளபளக்கும் அரிவாள்; அதைக் கண்டு என்னவென்று புரியாமல் அவள் எழுந்து நின்றாள். என்ன நடந்திருக்கிறது என்பது மனத்திற்குப் புரிந்ததுமே "ஐயோ" என்று அலறினாள்.

பசவனுக்குக் கேட்டது பணிப் பெண்ணின் இந்தக் கூக்குரல் தான்.

தாதியின் கூக்குரலினால் ராணி பயந்துவிடடாள்; அவள் படுக்கையிலிருந்து குதித்தெழுந்தாள். "என்ன ஆச்சுடி?" என்று கேட்டுக்கொண்டே தொட்டிலினருகில் ஓடிவந்தாள்.

தாதி சுவர் மாடத்திலிருந்த அகல் விளக்கைத் தூண்டிப் பெரிதாக்கி, தொட்டிலின் அருகே கொண்டுவந்து பிடித்தாள். அரிவாள் குழந்தையின் கழுத்திலே ஆழப் பதிந்திருக்கிறது; துணியெல்லாம் ரத்தம் தோய்ந்துகிடக்கிறது; குழந்தை செத்துப் போயிருந்தது.

அந்த அரிவாள் அரசனின் பிரத்தியேக ஆயுத சாலையில் உள்ளது என்பதை ராணி அறிவாள். அவனேதான் வந்து குழந்தையைக் கொன்றிருக்கவேண்டும். அவளால் பேச முடியவில்லை. கோரமான பாவம் நிகழ்ந்துவிட்டிருக்கிறது. இதனால் ஏதோ பயங்கரமான விபத்து நேரப்போகிறது. தன் மகனுக்கு

என்ன ஆகுமோ? மின்னலைவிட வேகமாக இந்த நினைவுகள் ராணியின் மனத்தில் தோன்றி அங்கே இருள் மண்டச்செய்தன. அவள் கீழே விழுந்துவிட இருந்தாள்; சமாளித்துக் கொண்டு உட்கார்ந்து கொண்டாள். தலைமீது கையை வைத்துக்கொண்டு துயரத்தில் முழுகினாள்.

தாதி "ஐயோ" என்று கூவியதால் ராஜகுமாரியின் நித்திரையும் கெட்டுப்போய்விட்டது. பக்கத்து அறையிலிருந்து அவள், "என்ன அது கூச்சல்? சொப்பனமா?" என்று கேட்டாள் ஏதும் பதில் வராமலிருக்கவே ஒரு கணம் கழித்து அவள்கூடவே விழித்துக் கொண்ட இன்னொரு சேவகியுடன் தொட்டிலருகே வந்தாள்.

தாதி குனிந்து அவள் காதில், "குழந்தை செத்துப்போய் விட்டது. கொன்றுவிட்டார்கள்" என்று மெல்லிய குரலில் சொன்னாள்.

ராஜகுமாரிக்குப் புரியவில்லை; புரிந்ததை நம்பமுடியவில்லை. தொட்டிலினருகே வந்து குனிந்து பார்த்தாள். அரிவாளின் பிடி அவள் நெற்றியில் இடித்ததும் திடுக்கிட்டுப் பின்வாங்கினாள். செத்துப்போய் கன்றிப்போன குழந்தையின் முகத்தைக் கண்டு "ஐயோ" என்றலறினாள்; நினைவிழந்து கீழே விழுந்துவிட்டாள்.

கதவுக்கு வெளியே அங்கங்கே தூங்கிக்கொண்டிருந்த அரண்மனை ஆட்களெல்லாம் விழித்துக் கொண்டனர். ஒவ்வொருவராக வந்து கதவருகில் கூடினார்கள். நடந்தது என்ன என்று ஒருவரிடமிருந்து ஒருவர் அறிந்துகொண்டு தங்களுக்குள் கசமுச வென்று ஏதோ பேசிக்கொண்டார்கள். ராணிக்கோ, ராஜகுமாரிக்கோ கெடுதல் ஏற்படவேண்டுமென்பது யாரும் விரும்பவில்லை. ஆனால், "பாவி மகள், இவன் நாசமாய்ப் போக" என்று அரசனைத் திட்டினார்கள்.

துயரத்தின் முதல் வேகத்தைச் சமாளித்துக்கொண்டு ராணி எழுந்து நின்றாள். தாதியிடம், "குழந்தை போய்விட்டது என்று மாத்திரம் சொல். மேற்கொண்டு எதுவும் நீ பேசவேண்டாம். மற்ற ஆட்களும் எதுவும் பேசக்கூடாது. யார் கேட்டாலும் எவ்வளவு திருப்பித் திருப்பிக் கேட்டாலும் குழந்தை போய் விட்டது என்பதை மாத்திரம் தான் சொல்லவேண்டும். தெரிந்ததா?" என்றாள்.

தாதி, "தெரிந்தது அம்மாஜி" என்றாள்.

தனது கூட இருந்த ஆட்களிடம், "தெரிந்ததாப்பா?"

"தெரிந்ததாம்மா?" என்று கேட்டாள். "தெரிஞ்சதம்மா" என்றார்கள் எல்லோரும்.

ராணி தாதியிடம், "பசவய்யனை வரச்சொல். ஆட்களெல்லாம் அவரவர்கள் இடங்களுக்குப் போகட்டும்" என்றாள்.

பசவன் ராணிவாசத்தின் கதவருகே வந்து நின்றிருந்தான். ராணி கூப்பிட்டனுப்பிய மறுகணமே எதிரில் வந்து நின்றாள்.

"இது உனக்குத் தெரியுமா பசவய்யா?" என்று ராணி கேட்டாள்.

"அரசர் சொன்னாரம்மா."

"சரி, இதைக் கொண்டு போய் செய்யவேண்டியதைச் செய்."

"சரியம்மா"

"தொட்டிலையே எடுத்துக்கொண்டு போ"

பசவன் ஓர் ஆளுக்குச் சைகை காட்டி தொட்டிலைப் பிடி என்று தெரிவித்தான். தான் ஒரு பக்கம் பிடித்துக்கொண்டு அதை எடுத்துக்கொண்டு சென்றான். ராஜகுமாரி, "என் கண்ணே" என்று புலம்பியவாறு குழந்தையின் மீது விழப்போனாள்; ராணி அவளைப் பிடித்து நிறுத்தினாள்; அணைத்துக் கொண்டு தனதறைக்கு அழைத்துச் சென்றாள்.

பசவன் தொட்டிலை வெளியே எடுத்துக்கொண்டு சென்றான். அரிவாளை எடுத்து நன்றாகக் கழுவித் தன்வசம் வைத்துக்கொண்டான். குழந்தையின் சடலத்தை மிக விலையுயர்ந்த வஸ்திரங்களால் அலங்கரித்து முந்திய அரசர்களெல்லாம் புதைக்கப்பட்டிருந்த இடத்திற்கருகே புதைக்கச் செய்தான்.

135

விடிவதற்குள்ளாக செய்தி ஊரின் நான்கு மூலைகளிலும் பரவிவிட்டது. அரண்மனையில் இரவு இருந்த ஆட்கள் வீட்டுக்குச் சென்று ரகசியமாக வீட்டாருக்குத் தெரிவித்தார்கள். அவர்கள் வழக்கம்போல ரகசியம் என்று அதைத் தங்களுக்கு வேண்டியவர்களிடம் தெரிவித்தார்கள். இவ்வாறு அரசன் தன் தங்கையின் குழந்தையைக் கொன்றுவிட்டான் என்ற செய்தி ஆயிரம்

பேர் காதுகளில் விழுந்தது. ஆயிரம் நாக்குகள் அரசனைச் சபித்தன.

அரசன் இப்படிச் செய்து விட்டான் என்பது காதில் விழுந்ததுமே, "அடப் பாவி மகனே, இவன் வம்சம் நா..." எனச்சொல்ல ஆரம்பித்தவர்கள் ராணியையும் ராஜகுமாரியையும் நினைத்துக் கொண்டவர்களாய் "நாசமாய்ப்போக" என்ற வார்த்தையைச் சொல்லாமல் அடக்கிக்கொண்டார்கள்.

காதில் விழுகின்ற இச்செய்தி அதே உருவத்தில் பிறருக்குச் செல்வதில்லை. கேட்பவர்களின் ஊகத்திற்குத் தக்கவாறு கைகால் இறக்கை முளைத்து புது உருவம் பெற்று வளர்ந்து வேருகி தன் பிரயாணத்தைச் செய்கிறது.

கடைவீதியின் ஒரு மூலையில் ஒருவன் சொல்லிகொண்டிருந்தான்; "நடு ராத்திரியில் அரசர் கத்தியை எடுத்துக்கொண்டு புறப்பட்டாராம். ராணியம்மா வேண்டாமென்று தடுத்தாராம். போடி முண்டை என்று அவருக்கே இரண்டடி கொடுத்துவிட்டு அரசர் முன்னால் சென்று குழந்தையை வெட்டியே போட்டு விட்டாராம்."

இன்னொருவன்: "அப்படியானால் ராணியம்மாவுக்கு அடி என்று சொல்."

மற்றொருவன்: "இல்லாமலிருக்குமா? பிசாசுபோல ஒரு ஆண் பிள்ளை கத்தியால் அடித்தால்? அவரும் அரை உயிராகத்தான் இருக்கிறாராம். படுத்த படுக்கையாம்."

இன்னொரு மூலையில் மூன்று பெண்கள் பேசிக்கொண்டிருந்தார்கள். ஒருத்தி, "அரசனே, பிசாசோ! எப்படிக் கை வந்தது, அந்தத் துளிரை நசுக்குவதற்கு? இவன் வீடு பாழா..."

இன்னொருத்தி, "வேண்டாண்டி, விட்டது என்று சொல். ராணியம்மாவும் அந்தப் பெண்ணும் என்ன தப்புச்செய்தார்கள்? இவன் நாசமாகப் போகட்டும் என்று சொல்லி அவர்களை சபிக்கக்கூடாது."

மூன்றாமவள்; "அது சரிதாண்டியம்மா. நாம் ஏன் யாரையும் திட்டவேண்டும்? பெண்டாட்டியும், மகளுமே பொறுத்துக் கொள்கிறார்களாம், ஊராரான நமக்கு என்ன வந்தது?"

மற்றொரு மூலையில் நான்கைந்து பேர் கும்பல் கூடியிருந்தார்கள். ஒருவன் சொன்னான். "நல்ல பிழைப்பு இது! தங்கையின்

மீது கோபத்திற்கு மருமகனைக் கொல்கிறானே அரசன்! நானிருக்கும் போது கம்சன் எதற்கு என்று சொல்வது போலிருக்கிறதே!"

ஒரு பெண்மணி "வயிற்றிலே சுமந்து வேதனை அநுபவித்துப் பெற்றிருந்தால் தெரியும். ஆண் பிள்ளைக்கு என்ன தெரியும் குழந்தையின் அருமை?"

மற்றொருவன்; "என்னம்மா ஆண் பிள்ளைகள் எல்லாரையும் ஒன்றாக சேர்த்துவிட்டாயே. யாரோ ஒருவன் செய்தான் என்றால் எல்லோரும் அப்படிச் செய்வார்களா?"

முதலாமவன்: "சொல்லட்டும் விடு. நாங்கள் ஆண் பிள்ளைகள்; ஆண்களுக்கு இரக்கம் குறைச்சல் தான்."

இன்னொரு மூலையில் நான்கு பேர் நின்றிருந்தார்கள். ஒருவன் சொன்னான்; "இந்த வேலை செய்த பிறகு இவர் அரசராக நீடிப்பது அவ்வளவு தான்."

இரண்டாமவன்; "மெதுவாகப் பேசப்பா. நமது தலையும் போய் விடும்."

மூன்றாமவன் முதல்வனிடம்: "அரசனை யார் தொடமுடியுமப்பா? இதெல்லாம் அவருக்குப் புதிதா?"

முதல்வன்; "புதிதல்ல, பழையது தான். சரி. பண்டிகையன்று நாடகத்தைப் பார்த்தாயோ இல்லையோ? அதை ஏற்பாடு செய்த வெள்ளைக்காரர்கள் சாமானியப் பட்டவர்களல்ல. இவருடைய இந்த ஆட்டத்தையெல்லாம் அவர்கள் கணக்குப் பார்த்துக் கொண்டு தானிருப்பார்கள்."

136

ஜனங்கள் இவ்வாறு பேசிக் கொண்டிருக்கும்போதே ஊருக்கு மற்றொரு செய்தி வந்தது. அரசன் தங்களை அலட்சியப்படுத்தி விட்டதனால் வெள்ளையர்கள் அவன்மீது படையெடுத்து வருகிறார்கள் என்பது தான் அது. படை ஏற்கனவே நான்கு நாட்கள் பிரயாணம் செய்து குடகை எட்டிவிட்டது.

குடகு நம்முடையது, இதன் மீது அந்நியர்களின் படை நடப்பது நமக்கு அவமானம் என்கிற எண்ணம் ஊரின் பிரஜைகளில் பல

ருக்கு இருக்கவில்லை. குடகு அரசனுடையது; வெள்ளையர்கள் வந்தால் அவனைத் தண்டிப்பார்கள்; தண்டிக்கட்டும், நல்லதுதான் இது தான் பலருடைய எண்ணம்.

ஆனால் சிலருக்கு மட்டும் இந்த அந்நியர்களின் படை வருவது இஷ்டமில்லை. இந்தச் சிலர் ஊரிலுள்ள பணக்காரர்கள் தான். வெளியிலிருந்து வரும் சேனை தவறி நடந்த அரசனை மாத்திரம் தண்டிப்பதோடு நிற்காமல், ஊரிலுள்ள செல்வந்தர்களின் வீட்டில் நுழையலாம். "நம் வீட்டுக்குள் நுழைந்து விட்டால் என்ன செய்வது?" என்பது இவர்கள் கவலை. இன்னும் சிலருக்கு, "வீட்டில் வயது வந்த பெண்கள் இருக்கிறார்களே; சேனை ஊரில் நுழைந்தால் அவர்களின் மானம் தங்கவேண்டுமே" என்ற கவலை.

அரசன் சொத்தைக் கொள்ளையடித்ததும், பெண்களைக் கெடுத்ததும் உண்டு. இருந்தாலும் இப்பொழுது அவனுடைய அவிவேகம் குறைந்து மறைந்து கொண்டு வந்தது. பலியால் வயது நிரம்பிய பழைய பூதம் போய் பசியோடு கூடிய புதிய பூதம் வருவது நல்லதா?

பணக்காரர்கள் தங்கள் ஆஸ்திகளைப் பத்திரப்படுத்தத் தொடங்கினார்கள். பெண்களின் மரியாதையைப் பற்றிக் கவலைப் பட்டவர்கள் அவர்களை உட்புறப் பிரதேசங்களுக்கு அனுப்பிவிட யோசித்தனர்.

சிக்கண்ண செட்டி இரண்டு செய்திகளையும் கேள்விப்பட்டான். "இந்த அரசனின் காலம் இன்றோடு முடிந்துவிட்டது" என்று நினைத்துக்கொண்டான். தனது சகாக்களையெல்லாம் வரவழைத்து, "நாம் எல்லா விஷயத்திலும் போபண்ண அவர்களின் ஆணைப்படியே தான் நடக்கவேண்டும்; அரசர் நேரில் சொல்லும் எந்த உத்தரவையும் நிறைவேற்றக்கூடாது; என்ன சொல்லுகிறீர்கள்?" என்று கேட்டான். எல்லோரும் இந்த அபிப்ராயத்தை ஆமோதித்தார்கள். பார்சண்ண போபண்ணவின் வீட்டிற்குப் போய் இந்த முடிவைத் தெரிவிக்கவேண்டியது என்றும் தீர்மானமாயிற்று.

பார்சண்ண போபண்ணவின் வீட்டிற்கு வந்த பொழுது போபண்ண லக்ஷ்மீநாராயணய்யாவின் வீட்டிற்குப் போயிருந்தார். பார்சண்ண இருவரையும் பார்த்தாற்போல இருக்கட்டுமென்று அங்கேயே சென்றான்.

லக்ஷ்மீநாராயணய்யாவின் வீட்டில் முற்றத்தின் உள் அறையில் லக்ஷ்மீநாராயணய்யாவும் போபண்ணவும் உட்கார்ந்து

கொண்டிருந்தார்கள். சாவித்ரம்மா அவர்களிடம் ஏதோ சொல்லிக்கொண்டிருந்தாள். பார்சண்ணு வந்திருப்பதை அறிந்து மந்திரிகள் அவனை உள்ளே வரவழைத்துக் கொண்டார்கள்.

சாவித்ரம்மா பார்சண்ணுவிடம், "செட்டியார்களெல்லாம் கூடிப்பேசியாயிற்று பார்சண்ணு, இவ்வளவு சீக்கிரம்?" என்றாள்.

"எங்கள் பேச்சு எவ்வளவு நேரம் அம்மா? செட்டியார் இப்படி என்று சொன்னார். நாங்களெல்லரம் சரி என்றோம். மந்திரிகளுக்குத் தெரியப்படுத்தச் சொல்லி என்னை அனுப்பினார்கள்."

சாவித்ரம்மா, "நான் சொல்லிக் கொண்டிருக்கிறேனப்பா. என் பையனிடமும் போபண்ணுவிடமும், 'ஆகக்கூடாதது ஆகிவிட்டது. அவன் செய்தது தப்பு, ஆனால் அவன் மேலுள்ள கோபத்தை மிகைப் படுத்தாதீர்கள்.' விரல் அசிங்கத்தைத் தொட்டு விட்டது என்பதற்காக அதைத் துண்டித்து விட முடியுமா? உங்களுக்கும் அதே பேச்சுத்தான். என்ன செய்யவேண்டுமென்று தோன்றுகிறதோ அதைச் செய்யுங்கள். ராணியம்மாவுக்கும் அவள் பெற்ற அந்த மகளுக்கும ஏதும் அபாயம் விளையக்கூடாது; அதைப் பார்த்துக்கொள்ளுங்கள்," என்று கூறி விட்டு வெளியே சென்றாள்.

கிழவி வெளியே சென்ற பிறகு லக்ஷ்மீநாராயணய்யா போபண்ணுவிடம், "நாம் சிக்கண்ண செட்டிக்குச் சொல்லி அனுப்ப வேண்டுமென்று நினைத்துக்கொண்டிருக்கும் போதே அவரே பார்சண்ணனை அனுப்பியிருக்கிறார். நமது முடிவை அவருக்குத் தெரிவித்து விட்டால் சரி," என்றார்.

போபண்ணு, "தெரிவியுங்கள் ஐயா," என்றார்.

லக்ஷ்மீநாராயணய்யா பார்சண்ணுவிடம் சொன்னார்; "அரசர், செய்யக்கூடாத அக்கிரமத்தைச் செய்துவிட்டார் பார்சண்ணு; இனி இவரை அரசராகக் வைத்துக்கொண்டிருக்கிறோம் என்று நாம் சொன்னால் மக்கள் சம்மதிக்கமாட்டார்கள். இவர் மேல் கோபம்கொண்டு வெள்ளையர்கள் வேறு படையெடுத்து வந்து கொண்டிருக்கிறார்கள். வெளி சேனை நாட்டுக்குள் வருவது நல்லதல்ல. அரசரையே வேண்டிக் கொள்ளவேண்டும்; பட்டத்தை விட்டு விலகிக்கொண்டு வேறொருவரை அரசாக்குங்கள் என்று, வெள்ளையர்களை எல்லைக்கு வெளியே நிறுத்திவைப்பதற்காக நமது படையை அனுப்பவேண்டும். போபண்ணுவும் நானும் இவ்வாறு யோசித்திருக்கிறோம், பேட்டை ஜனங்கள் இதற்குச் சாதகமாக நடந்து கொள்ளுங்கள்."

"சரி ஐயா, செட்டியார் சொல்லச் சொன்னார். இனிமேல் நாங்கள் எப்பொழுதும் போபண்ணாவின் கட்டளைப்படி தான் நடப்போம். அரசர் நேரில் என்ன சொல்லி அனுப்பினாலும் உங்களைக் கேட்காமல் செய்யமாட்டோம். நீங்கள் இதற்குச் சம்மதம் என்று சொன்னால் போதும்."

"சம்மதம் தான் இல்லையா போபண்ணா?"

போபண்ணா; "ஆஹா! சம்மதமே."

இதன் பிறகு, "பேட்டை ஜனங்கள் அநாவசியமாக பயப்படாதபடி பார்த்துக் கொள்ளுங்கள்," என்று கூறி மந்திரிகள் இருவரும் பார்சண்ணாவை அனுப்பிவைத்தார்கள்.

இவர்கள் பேசிக்கொண்டிருந்து நடுவில் நிறுத்திய பேச்சை மீண்டும் தொடர்ந்தார்கள். "அரசருக்கு நமது அபிப்ராயத்தை பசவய்யன் மூலம் தெரிவிக்கவேண்டியது தானே?"

"அது தான் சரி. நான் அரசனைப் பார்க்கமாட்டேன். இந்த விஷயத்தைச் சொல்ல நீங்கள் போவது அழகல்ல, இருக்கிறானே அந்தரங்க மந்திரி. சொல்லட்டும் அவனே."

"இவர் சம்மதித்தால் யாரை அரசராக்குவது? ஒப்பாவிட்டால் என்ன செய்வது?"

"அநேகமாக சம்மதிக்க மாட்டாரென்றே வைத்துக்கொள்ளலாம்."

"அப்படியானால் என்ன செய்வது?"

"பலாத்காரமாகப் பட்டத்தை விட்டு நீக்குவதென்றால் இந்தப் பக்கம் பத்துபேர், அந்தப் பக்கம் பத்துபேர் என்று ஏற்பட்டு கலகம் மூளும். அது ஊருக்குக் கெடுதல், வெளியிலிருக்கும் சேனை உள்ளே வருவது நல்லதல்ல என்று சொல்வதே இதற்காகத் தான். அந்தக் கேட்டை நீக்கி இந்தக் கேட்டை வரவழைத்துக் கொள்வதில் என்ன பயன்?"

"ஆமாம் போபண்ணா, நமது வழி என்ன என்று நாம் நிச்சயித்துக் கொள்ள வேண்டுமே. என்ன செய்யவேண்டுமென்பதையே நாம் நிச்சயித்துக் கொள்ளாவிட்டால் மிகவும் கஷ்டம். நாம் எப்பொழுதும் ஒரே இடத்தில் இருக்கப்போவதில்லை. ஒருவரையொருவர் சந்தித்துப் பேச முடியாமல் போகலாம். என் அபிப்ராயம் உங்களுக்குத் தெரியாமலும் உங்கள் அபிப்ராயம் எனக்குத் தெரியாமலும் விவகாரம் ஏறத்தாழ ஏதாவது நடந்து விட்டால் பிரயோஜனம் இல்லை."

"முதலில் நம் அபிப்ராயத்தை பசவனுக்குத் தெரிவிப்போம். அவன் அரசனுக்குத் தெரிவிக்கட்டும். அரசன் என்ன சொல்கிறானென்பது தெரியட்டும். பிறகு இது பற்றிப் பேசுவோம், யோசிப்போம்."

"அப்படியே ஆகட்டும் போபண்ணா. நான் உங்களைப்போல அவ்வளவு விரைவாக ஒரு முடிவுக்கு வரக்கூடியவனன்ல, இது ஞாபகம் இருக்கட்டும். நான் எப்படி நடந்து கொள்ளவேண்டுமென்பதை நீங்கள் முதலிலேயே தெரிவித்து விடவேண்டும்."

"வேகமும் இல்லை ஒரு மண்ணும் இல்லை ஐயா; உங்கள் மனம் என்னுடையதை விட இளகியது. அரசன் என்றால் உங்களுக்குக் கொஞ்சம் இரக்கம், நான் கல்."

"கல்லல்ல. போபண்ணா. நீங்கள் நியாயப்படி நடக்கிறீர்கள். நான் கொஞ்சம் தாட்சண்ணிய சுபாவமுள்ளவன். ஐயோ பாவம் என்று நினைக்கப்போய் சில சமயங்களில் நியாயம் எது என்பதே மறந்து விடுகிறது. ராஜ்ய நிர்வாகம் செய்யும் தலைவர்கள் உங்களைப் போலத்தான் இருக்கவேண்டும். என்னைப் போல அல்ல."

"பெரியவர் நீங்கள் என்னைத் தட்டிக்கொடுத்து நல்லவன் என்று சொல்கிறீர்கள். என்னாலான மட்டும் நல்லதையே நான் செய்கிறேன்."

"அதில் எனக்கு நம்பிக்கை உண்டு. என்ன செய்யப்போகிறீர்கள் என்பதை முதலில் தெரிவிக்கச் சொல்கிறேன். அவ்வளவு தான்."

"அந்தச் சமயத்தில், அந்தக் கணத்தில் எதையோ கண்டு எதையே கேட்டு இப்படிச் செய்யவேண்டும் என்று நான் முடிவு செய்யலாம். அப்பொழுது நீங்கள் அருகில் இருந்தால் தவறாமல் தெரிவிப்பேன், ஐயா இல்லாவிட்டால் தெரிவிப்பது சாத்தியமில்லை. சரி என்று தோன்றியதைச் செய்துவிட வேண்டியது தான்."

"சரி போபண்ணா, நீங்கள் ஒன்றும் அறியாதவரல்ல, அவசரப்படுபவருமல்ல, மந்திரியானவன் என்ன செய்தாலும் ஆயிரம் பேர் அதனால் பாதிக்கப்படுவார்கள் என்பதைத் தெரிந்தவர், இன்று நாட்டிற்கு இருக்கும் ஒரே வழிகாட்டி நீங்கள். கடவுள் உங்களை நல்ல வழியில் செலுத்தட்டும்."

"அதுவும் சரி ஐயா, நீங்கள் ஆசீர்வதியுங்கள். ஆசீர்வதிக்கச் சொல்லி அம்மா அவர்களிடமும் சொல்லுங்கள். நீங்கள் சொல்கிறபடி நான் கடவுள் கடவுள் என்று சொல்வதில்லை. ஆனால் நல்ல வழியில் நடக்கவேண்டும் என்று விருப்புகிறேன். நல்ல வழி எனக்குத் தோன்றட்டும். உங்கள் அன்பு என்னை அவ்வழியில் நடத்திச் செல்லட்டும்."

போபண்ணா வீட்டிற்குச் சென்று பசவனுக்குச் சொல்லி அனுப்பினான், பசவன் உடனே வந்தான். போபண்ணா அவனிடம் தமது விருப்பத்தைத் தெரிவித்து "இதை அரசரிடம் சொல்லி அவர் என்ன சொல்கிறார் என்பதை என்னிடம் வந்து தெரிவிக்கவேண்டும்" என்றான்.

பசவன் மறுபேச்சுப் பேசாமல் வழக்கமில்லாத விநயத்துடன், "சரி, சொல்லிவிட்டு வந்து தெரிவிக்கிறேன்" என்று கூறி விட்டு அரண்மனைக்குத் திரும்பிச் சென்றான்.

137

தான் சொன்னதை பசவன் எதிர்ப்பு இல்லாமல் இப்படிக் கேட்டுக்கொண்டு மரியாதையுடன் நடந்துகொள்வான் என்று போபண்ணா எதிர்பார்த்திருக்கவில்லை. சொன்னதையெல்லாம் கேட்டுக்கொண்டு பசவன் ஒரே வார்த்தையில் பதில் சொல்லிவிட்டு எழுந்தது அவரை ஆச்சரியமடையச் செய்தது. பசவன் ஏதாவது சொல்லியிருந்தால் அவர் கேட்டிருப்பார் என்றல்ல, போபண்ணா பசவனை அரசனுக்கு இதுபோன்ற ஒரு செய்தியை எடுத்துச் செல்லத்தக்க ஆள் என்று நினைக்கத்தான் தயாராக இருந்தார்; இது போன்ற விஷயங்களைத் தன்னுடன் சர்ச்சை செய்யக்கூடிய அதிகாரி என்று ஒப்புக்கொள்ளத் தயாராயில்லை. அவன் ஏதாவது எதிர்த்துச் சொல்லுமான், அவனிடம், "இதை அரசரிடம் போய்த் தெரிவிப்பதுதான உன் வேலை. அதிகம் பேச வேண்டாம்," என்று சொல்லவேண்டி வரும் என்று போபண்ணா நினைத்திருந்தார். அந்த அவசியம் ஏற்படவில்லை. அது அவருக்கு ஆச்சரியமாக இருந்தது.

பசவன் போபண்ணாவின் பேச்சைக் கேட்டுக்கொண்ட முறை, அதற்கு பதில் கொடுத்த முறை இரண்டும் யாருக்குமே ஆச்சரிய

முண்டாக்கக் கூடியதாகத்தான் இருந்தன, அதற்குக் காரணம் இருந்தது.

குழந்தையின் சடலத்தைப் புதைத்து விட்டு பசவன் காலையில் அரசனின் அறைக்கு வந்தபொழுது வீரராஜன், "நொண்டி எங்கேடா?" என்று கேட்டபடி ஏதேதோ பிதற்றிக்கொண்டிருந்தான். ஆட்கள் அருகில் சென்று என்ன வேண்டும் என்று கேட்கப் பயந்துகொண்டு நின்றிருந்தார்கள். அரசன், "இதை ஏண்டா இங்கே கொண்டு வந்தே? அப்பால் எடுத்துச் செல்" என்று சொல்லிக் கொண்டிருந்தான்.

பசவன் வந்து அரசனின் அருகில் நின்றான். வீரராஜன், "எங்கேடா போனே, நொண்டி முண்டமே? இதை ஏன் இங்கே கொண்டு வந்தே?" என்று கேட்டான்.

"எதை அரசே?"

"அந்தச் சுவர் அருகில் பார், அதை யார் அங்கே வைத்தார்கள்? ஏன் வைத்தார்கள்?"

பசவன் அரசன் குறிப்பிட்ட இடத்தைப் பார்த்தான். சுவரின் அருகே ஏதுமே இருக்கவில்லை. அரசனுக்குத் தூக்கக் கலக்கமோ அல்லது பிரமையோ இருக்கவேண்டும். இது போன்ற சமயங்களில் பசவனின் மூளை வெகு கூர்மையானது. வெகு விரைவில் அது வேலை செய்யும். அவன் அரசனிடம், "அதை அப்புறப்படுத்தி விட்டேன் அரசே" என்று பதில் கொடுத்தான். அரசரின் நிலை ஆட்களுக்குத் தெரியக்கூடாது என்பதற்காக, "அரசர் கோபமாக இருக்கிறார்; எல்லோரும் தூரவே இருங்கள்" என்று எல்லோரையும் அறைக்கு வெளியே அனுப்பிவிட்டு, தான் சென்று அரசனின் அருகில் நின்று கொண்டான்.

அரசன், "அக்கய்யா வந்திருக்கிறாளா? யார் உன் பக்கத்தில்?" என்று கேட்டான்.

இதுவும் பிரமைதான். பசவன் அரசனிடம், "வரவில்லை அரசே, சொல்லி அனுப்பட்டுமா?" என்று கேட்டான்.

"எதற்காகச் சொல்லி அனுப்புவது? இங்கேயே இருக்கிறாளே, முக்காடு போட்டுக்கொண்டு அழுதுகொண்டிருக்கிறாளே."

யாருக்கோ சமாதானம் சொல்வதுபோல பசவன், "அழாதீர்கள் அம்மா, அரசர் வேதனைப்படுகிறார். இப்படி வாங்கம்மா" என்று யாரையோ அழைத்துக்கொண்டு போவதுபோல வெளியே சென்றான். ஒரு சேவகனை அழைத்து, "டேய், போய் அம்மாஜி

யவர்களிடம் சொல். அரசருக்கு ஜுரம் ஜாஸ்தியாக இருக்கிறதென்று சொல். ஒரு கணம் இங்கே வரட்டும்," என்றான்.

அவன் மறுபடியும் கட்டிலண்டை வந்தபொழுது, "எடுத்துக் கொண்டு போனேன் என்று சொன்னாய்: மறுபடியும் அங்கேயே இருக்கிறதேடா முண்டமே," என்று முன்புபோல சுவரின் அருகே சுட்டிக் காண்பித்துத் தலையாட்டினான்.

ராணி வேகமாக நடந்து வந்து சேர்ந்தாள். வரும்போதே பட படப்புடன், "என்ன ஆச்சு பசவய்யா?" என்று கேட்டாள்.

பசவன், "கொஞ்சம் பாருங்கம்மா" என்றான்.

ராணி கட்டிலின் அருகே வந்து நின்று கொண்டு அவனைப் பார்த்தபொழுது அரசன், "டேய், இவளை ஏன் இங்கே விட்டே? இந்த வீட்டிற்கு ஏன் வந்தாள் இவள்?" என்று கத்தினான்.

ராணிக்கு ஒன்றும் புரியவில்லை, பசவன் அவளுக்கு சைகை காட்டி, "கேட்டுக்கொண்டிருங்கள்" என்று குறிப்பிட்டு விட்டு, அரசனிடம், "தெரியாமல் வந்து விட்டார்கள் அரசே, இதோ அனுப்பி விடுகிறேன்" என்றான்.

"இவள் அப்பன் வைத்து விட்டுப்போன பணம். அரண்மனையினுடையது, இவளுடையதல்ல. கொடுத்ததைத் தின்று கொண்டு பேசாமல் கிட என்று சொல். சிறையை விட்டு வெளியே வந்தால் குண்டு போட்டுச் சுட்டு விடுவேன், குண்டு போட்டு."

"சரி அரசே."

"அதை எடுத்து அப்புறப்படுத்து, இவளை அழாதே என்று சொல் முகத்தை முக்காடிட்டு மறைத்திருக்கிறாள், திருட்டு முண்டை, யாரென்று தெரியாதபடி."

138

அரசனின் நிலை என்ன என்பதை ராணி புரிந்து கொண்டு விட்டாள். அவள் முகம் வாடி விட்டது. இனி என்ன கதி என்று நினைத்து அவள் துயரமடைந்தாள்.

இரண்டு கணம் படுக்கையின் அருகில் நின்றிருந்து பிறகு கதவண்டை சென்று அவள் பசவனை வெளியே வரும்படி சைகை

காட்டி அழைத்தாள். தாங்கள் பேசுவது அரசனுக்குத் தெரியாத வாறும், ஆனால் அவன் அழைத்தால் உடனே அவனிடம் செல்ல வசதியாகவும், கதவின் வெளிப்புறம் நின்றுகொண்டு ராணி பசவனிடம். "வைத்தியர் வழக்கம்போல் வருவதென்றால் தாமத மாகும் பசவய்யா, அவருக்கு இப்பொழுதே சொல்லியனுப்பு, சிறிது குளிர்ச்சியாகும்படி ஏதாவது மருந்து கொடுக்கட்டும். தூக்கக் கலக்கம் இரண்டு நாழிகை கழித்துச் சரியாய்ப்போகும்," என்றாள். பசவன், "சரியம்மா நான் போய் அதைப் பார்க்கிறேன். நீங்கள் இங்கேயே இருங்கள்" என்றான்.

ராணி, "சரி. நானோ, நீயோ ஒருவர் இல்லாவிட்டால் ஒருவர் இங்கேயே இருப்போம். நீ போய் வைத்தியரைப் பார்" என்றாள்.

"ஆள் படைக்கு இது தெரியவேண்டாமென்று அவர்களையெல் லாம் விலகியிருக்கச் சொல்லியிருக்கிறேன், அம்மா."

"நல்லது ஜுரம் ஜாஸ்தியாயிருக்கிறது. கோபம் அதிகம் வருகிறது எல்லோரும் விலகியே இருங்கள் என்று சொல்."

"புட்டம்மாஜி இங்கே வரவேண்டாம் அம்மா. பயப்படுவார்."

"ஆமாம் அப்படியே சொல்லி விடு. வைத்தியர் சீக்கிரம் வரட்டும் போ"

பசவன் சொல்லியனுப்பி வைத்தியன் ஒரு நாழிகைக்குள் வந்து சேர்ந்தான்; ராணியின் சூசனைப்படி அரசனுக்கு ஒரு மருந்தைத் தண்ணீரில் கரைத்துக் கொடுத்தான்; அறைக்கு வெளியே போய் உட்கார்ந்து கொண்டான். ராணி தன் அறைக் குச் சென்றாள்.

பசவன் வைத்தியனிடம், "இது விஷயம் வெளியே தெரிந்தால் தலை போய் விடும், பண்டிதரே," என்றான், வைத்தியன், "நான் அரண்மனைக்குப் பழகியவன்தான் பசவய்யா, அரண்மனை சேவகம் என்ற பிறகு தவறாமல் இருந்தால் கூட தலைபோகக் கூடும்; எனக்கு அது தெரியும்," என்றான்.

பசவன் சிரித்தான்: வைத்தியன் வாசலில் காவல் உட்கார்ந் திருந்ததனால் பசவன் இரண்டு மூன்று நிமிடங்களில் முடித்துக் கொண்டு வரக்கூடிய தன் வேலையைக் கவனிப்பதற்காகச் சென்றான்.

வைத்தியனின் மருந்தால் அரசனுக்கு ஒரு வகையான அரை மயக்கம் ஏற்பட்டது. நான்கு நாழிகை கழித்து அவன் விழித்துக் கொண்டான். வைத்தியன் அருகிலேயே இருந்து அவன் நன்றாகக்

கண் விழித்தவுடன் ஒரு குளிகையைப் பாலில் கரைத்துக் கொடுத்தான்; அரசன் மறுபடியும் தூங்கிவிட்டான்.

இங்கே விஷயம் இப்படி இருக்கும்போதுதான் போபண்ணு பசவனை அழைத்ததாகச் செய்தி வந்தது. குழந்தை இறந்த சங்கதி ஏற்கனவே ஊரில் பரவி ஊர் மக்கள் பலவாறாகப் பேசிக் கொண்டிருக்கிறார்கள் என்ற சங்கதி அரண்மனைக்குத் தெரிந்திருந்தது. போபண்ணு இதற்கு முன் என்றுமே பசவய்யனை அழைத்தது கிடையாது. ஆகையால் இந்த அழைப்பு ஏதோ மிகவும் முக்கியமான விஷயத்தைப் பற்றியது என்று பசவன் தெரிந்துகொண்டான்.

அரசன் நன்றாக இருந்திருந்தால் பசவன் அவன் உத்தரவைக் கேட்டிருப்பான். இப்பொழுது அதற்கு வசதியில்லை. அவன் ராணிக்குச் சொல்லியனுப்பி ஒரு நிமிஷம் வந்து பார்க்கலாமா என்று கேட்டான். ராணி அரசனின் அறைக்கே வந்தான். போபண்ணு சொல்லி யனுப்பியிருப்பதையும், பசவன் சொன்னதையும் கேட்டு, "ஆமாம். ஏதோ முக்கியமான விஷயமாகத் தான் இருக்கவேண்டும். போய்ப் பார்," என்றாள்.

"அவர் என்ன சொன்னாலும சரி என்று சொல்லிவிட்டுப் பேசாமல் வந்து விடுகிறேன் அம்மா. அரசருக்கு நினைவு தவறியிருப்பது யாருக்கும் தெரியவேண்டாம்."

"சரி பசவய்யா. என்ன செய்வதாக இருந்தாலும் அரசரைக் கேட்டுக் கொண்டல்லவா செய்யவேண்டும்? போய் சொல்வதைக் கேட்டுக் கொண்டு பேசாமல் வா."

அரண்மனை சந்தர்ப்பம் இவ்வாறு இருந்ததனால்தான், பசவன் போபண்ணு சொன்னதை யெல்லாம் கேட்டுக் கொண்டு பதில் ஏதும் சொல்லாமல் திரும்பி வந்தான்,

139

பசவன் போபண்ணு சொன்னதைத் தெரிவித்தபோது கௌரம்மாஜி அரண்மனைக்கு ஏற்பட்டுள்ள நிலையைக் குறித்து மிகவும் வருந்தினாள்.

மந்திரி யொருவன் தன் அரசனுக்கு அவனுடைய சேவகன் மூலம் இப்படியொரு செய்தியை அனுப்பும்படியாயிற்றே! பத்து

மாதங்களுக்கு முன்னர் மந்திரிகள் இந்தப் பேச்சை எடுத்தார்கள் என்பது உண்மை. ஆனால் அப்பொழுது அவர்கள் அதை மரியாதையுடன் நேரில் வந்து தெரிவித்தார்கள்; ஒரு முடிவுக்கு வந்த பிறகு அரசருக்குத் தெரிவிக்கலாமென யோசித்திருந்தார்கள். இப்பொழுது இந்த தாட்சண்ணியம் ஏதும் இல்லை; அது மாத்திரம் அல்ல: அரசரின் மனத்தை முறிக்கவேண்டும் என்ற குரூரமும் அதில் இருந்தது. ஆட்சி பீடத்தைவிட்டு இறங்கு என்று அவனிடம் நேரில் சொல்லும்படி ஆகிவிட்டதே; அதையும் சொல்லியனுப்புவது அரசனின் ஆள் மூலமாக.

போபண்ணா கோபக்காரர்; ஆனால் மரியாதையைப் புறக்கணிக்கக் கூடியவரல்ல; லக்ஷ்மீ நாராயணய்யா இது போன்ற சமயங்களில் அவரைத் தடுப்பது வழக்கம். இப்போது இவர் இப்படி நடந்து கொண்டிருக்கிறார்; அவர் தடுக்காமல் விட்டிருக்கிறார். தான் என்ன நினைப்பேன் என்பதைக் கூட இந்த மந்திரிகள் யோசிக்காமல் விட்டு விட்டார்களே. அரசனுக்கு ஏற்பட்ட அவமானத்தில் ஒரு பகுதி தன்னையும் சேர்ந்ததென்று கௌரம்மாஜிக்குத் தோன்றியது.

விஷயம் பசவனோடு பேசக் கூடியதல்ல. அரசன் ஆரோக்கியமாக இருந்திருந்தால தான் இந்த விஷயத்தில் தலையிடவேண்டிய தேவையே இல்லை. ஆனால் எப்பொழுது அரசன் இந்த சமாசாரத்தைக் கேட்டு அதற்கு பதில் சொல்லக்கூடிய நிலையில் இல்லையோ, அப்பொழுது அதைத் தான் கவனித்துக கொள்ளத் தான் வேண்டும். என்ன செய்யவேண்டும் என்று யோசிக்கலாமென்றால் பசவனைத் தவிர வேறு யாருமில்லை. அரசன் தனது நடத்தையால் எப்படித் தன்னந்தனி மனிதனாகியிருந்தான், தான் அப்படி ஆனதோடல்லாமல் தன் மனைவியையும், மகளையும் எவ்வளவு நாதியற்றவர்களாக்கிவிட்டான் என்பது ராணியின் மனத்தில் தைத்தது. இதனால் அவள் தனக்காகவும், அதைவிட அதிகமாகத் தன் கணவனுக்காகவும் எல்லாவற்றுக்கும் மேலாக தன் மகளுக்காகவும் மீளாத் துயர் கொண்டாள்.

பல நிமிடங்கள் யோசித்துவிட்டு, "இது ஜனங்களின் விருப்பம் என்று சொன்னாரா?" என்று கேட்டாள்.

"ஆமம்மா. குழந்தையின் கொலையினால் மக்களின மனம் பொங்கிவிட்டிருக்கிறது. வெள்ளையர்கள் படையுடன் புறப்பட்டு வந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களைத் தடுத்து நிறுத்த

வேண்டுமானால் ஜனங்களின் உதவி வேண்டும். அரசர் பதவியி லிருந்தால் ஜனங்கள் தங்கள் ஆதரவைத் தரமாட்டார்கள். அதனால் அரசர் விலகியிருக்கவேண்டும். இதுதான் அவர் சொன்னது."

ராணி மறுபடியும் யோசித்தாள். அரசன் விலகி நின்றான் என்றால், யார் பட்டத்திற்கு வருவது? முன்பு தான் பட்டத்துக்கு வரவேண்டுமென்று அவர்கள் சொன்னார்கள். அது அவளுக்கு அப்போதும் விருப்பமில்லை; இப்போதும் விருப்பமில்லை. தான் முடியாது என்றால் தான் மகள் பட்டத்திற்கு வரவேண்டும். அதற்கு இவர்கள் சம்மதிப்பார்களா?

இதை எப்படி அறிந்துகொள்வது? இதனிடையே அரசனின் அறிவு கலங்கியுள்ளது. அது இன்றோ நாளையோ குணமாகி விடலாம். அதற்குள்ளாக இந்தப் பேச்சை எடுப்பது உசித மல்ல. பேச்சை எடுக்காவிட்டால் அரசனின் நிலையை வெளியே சொல்லி ஆகவேண்டும். அப்படிச் சொல்லிவிட்டால் அரசனைப் பட்டத்திலிருந்து விலக்கவேண்டியதற்கு இன்னும் உறுதியான காரணம் ஏற்பட்டுவிடும்.

இரண்டு நிமிடம் யோசித்து ராணி பசவனிடம், "பசவய்யா, நீ உன் எஜமானரைக் கடவுள் போலப் போற்றி வந்திருக்கிறாய். இப்போது அவரது அறிவு ஒரு நிலையில் இல்லை. இந்த விஷயத்தை அவர் தெரிந்துகொள்ளும்படியாக இல்லை. இவர் இப்படியிருப்பது வெளியே தெரியக்கூடாது. இரண்டு மூன்று நாட்களில் பதில் சொல்வதாகச் சொல்லவேண்டும். என்ன சொல்கிறாய்? யோசித்துச் சொல்," என்றாள்.

"அரசருக்கு இப்படி இருக்கிறதென்று சொல்லவேண்டாம் அம்மா. உடல்நிலை சரியாக இல்லை, நாளைக்குத் தெரியப்படுத்து கிறோம் என்று சொல்லலாம்."

"என்ன உடம்பு என்று எப்படியாவது அவர்களுக்குத் தெரிந்து விடும்."

"அம்மா, எனக்கொன்று தோன்றுகிறது. என்னவோ நடந்து போச்சு, அரசரின் சித்தம் கலங்கிப்போய்விட்டது. சுவர் அருகில் என்கிறார், அழுகிற பெண்பிள்ளை என்கிறார். மூன்று நாள் இந்த இடமே வேண்டாம். புது இடம் எங்கேயாவது அழைத்துக்கொண்டு போனால் என்ன?"

"எங்கே?"

"சின்னவராக இருந்தபொழுது வளர்ந்த இடம் என்பதனால் நால்குநாடு அரண்மனை அவருக்கு மிகவும் பிடித்தது. அங்கே அழைத்துக்கொண்டு போனால் என்ன?"

ராணிக்கு இந்த யோசனை பிடித்தது. "அரசருக்கு உடல் நிலை சரியாக இல்லை. இடம் மாற்றுவதற்காக நாகுநாடு அரண்மனைக்குப் போகிறார். இரண்டு மூன்று நாட்களில் உங்களுக்குப் பதில் தெரிவிப்பார்" என்று சொன்னால் தற்சமயத்திற்கு போபண்ணா காத்துக்கொண்டு இருந்துதானாகவேண்டும். அரசருக்கும் இட மாற்றத்தினால் கெட்ட நினைவுகள் தோன்றாமலிருக்கலாம். மனம் சீக்கிரம் சமாதானமடையலாம். அவள் பசவனிடம், "இந்த யோசனை நல்லது பசவய்யா; கூட நானும் போகிறேன். நம்பிக்கையானவர்களாகப் பார்த்து எங்களுடன் அனுப்பு. சீக்கிரம் ஆகவேண்டும். நாங்கள் இங்கே புறப்பட்டதும் நீ போய் அங்கே மந்திரிகளிடம் இதைச் சொல்லலாம்" என்றாள்.

"அம்மா, என்னைக் கேட்டீர்களானால், நீங்கள் அங்கே போக வேண்டாம்."

"நீ போகிறாயா?"

"இவர்களோடு பேசுவதற்கு நானும் இங்கிருந்து ஆகவேண்டும் அம்மா."

"அங்கே?"

"நீங்கள் சரி என்றால் தொட்டவ்வாவை அனுப்புகிறேன். அவள் ஒருத்தி இருந்தால் பத்து பேர் இருக்கிறமாதிரி."

பத்து வருடங்களுக்கு முன்பாக இருந்தால் ராணிக்கு இந்தப் பேச்சு வெறுப்பாக இருந்திருக்கும். பொறுக்கமுடியாத அவமானத்தைத் தனக்குத் தேடித் தந்த அரசனின் துர்நடத்தைக்கெல்லாம் மூலகாரணமானவள் தொட்டவ்வா. ஆனால் இவ்வாறு வெறுப்புக்கொள்ளும் மனோபாவத்தையெல்லாம் கௌரம்மாஜி வெகுநாட்களுக்கு முன்னரே விட்டுவிட்டாள். தனது பெருந்தன்மையால் தனக்குக் கிடைக்கக்கூடிய கௌரவம் ஒன்றே இப்போது அவளுக்கு ஆஸ்தி. அரசனின் உறவால் யாரும் அவளுக்கு கௌரவம் அளிப்பவர்கள் இல்லை.

ஒரு கணம் யோசித்துவிட்டு அவள், "சரி பசவய்யா, தொட்டவ்வா போகட்டும், வைத்தியர் போகட்டும். தினமும் காலையிலும் மாலையிலும் செய்தி சொல்லியனுப்பட்டும்; தேவையானால் நாம் யாராவது போகலாம்," என்றாள்.

அரசன் இதை யொன்றையும் அறிந்துகொள்ளக்கூடிய நிலையில் இல்லை. பசவன் இந்த ஏற்பாடுகளையெல்லாம் செய்தான். இந்தப் பேச்சு நடந்த இரண்டு நாழிகைகளுக்குள்ளாக அரசனை ஒரு சிவிகையில் படுக்கவைத்து, பின்னால் தொட்டவ்வாவும் பண்டிதனும் போகச்செய்து, மிகவும் நம்பிக்கையான நான்கு ஆட்களுடன் அரசனை நால்குநாடு அரண்மனைக்கு அனுப்பிவைத்தனர். பிறகு சிறிது நேரங்கழித்து பசவன் போபண்ணாவிடம் சென்றான். "நீங்கள் சொன்னதை அரசருக்குச் சொல்லலாமென்று போனால் ராணியம்மா அவர்கள், 'அவருக்கு உடல் நலமில்லை, கொஞ்சம் பொறு' என்றார். இடம் மாற்றவேண்டுமென்று வைத்தியர் சொன்னாராம். அரசர் நால்குநாடு அரண்மனைக்குப் போயிருக்கிறார். இரண்டு நாள் விட்டு நான் சென்று அவரோடு பேசி அவர் உத்தரவு என்ன என்பதைத் தெரியப்படுத்துகிறேன், அண்ணா," என்றான்.

அரண்மனையிலிருந்து ஒரு சிவிகை, இரண்டு டோலி, நான்கு ஆட்கள், பத்து காவல் குதிரைகள் புறப்பட்டுச் சென்ற செய்தி ஏற்கெனவே போபண்ணாவுக்கு எட்டியிருந்தது. அது அரசனின் பிரயாணம் சம்பந்தப்பட்டது என்று அப்பொழுது அவருக்குப் புரியவில்லை; இப்பொழுது பசவன் சொன்னதும்தான் புரிந்தது.

140

அரசனின் சித்தப்பிரமை காரணமாக அவனைப் பார்த்துக் கொள்ளவேண்டி வந்ததாலும், போபண்ணா சொல்லியனுப்பிய விஷயமாக யோசிக்கவேண்டியிருந்ததாலும், அதன் பிறகு அரசனை நால்குநாடு அரண்மனைக்கு அனுப்புகிற ஏற்பாடுகளைக் கவனிக்கவேண்டியிருந்ததாலும் ராணி இதுவரையில் மற்ற யோசனைகள் எதையும் செய்யக்கூடிய நிலையில் இருக்கவில்லை. அரசனை அனுப்பித்தந்த பிறகே அவள் தன் மகளின் நிலைபற்றி யோசிக்க முடிந்தது.

தொட்டிலில் செத்துக்கிடந்த குழந்தையைக் கண்டு இரவு மூர்ச்சித்து விழுந்த ராஜகுமாரி சிறிது நேரத்தில் மூர்ச்சை தெளிந்து குழந்தை போய்விட்டதே என்று புலம்பியபடி உட்கார்ந்திருந்தாள். குழந்தையின் சடலத்தை மண்ணிலே புதைக்க

எடுத்துச் செல்வதற்கு அவளைச் சமாதானப் படுத்தி சம்மதிக்க வைப்பது மிகவும் கஷ்டமாகப் போய்விட்டது. சடலம் அந்த அறையை விட்டுப்போன பின் அவள் தான் அந்த அறையில் இருக்கமாட்டேன் என்றாள்; வெளியே வந்தாள். ராணி அறைக்கு வெளியே இருந்த கூடத்தில் அவளை அருகில் அமர்த்திக்கொண்டு முடிந்தவரையில் சமாதானம் செய்தாள். "என்ன செய்வது? சமயம் இப்படித்தான் நேர்ந்து விடுகிறது. பொறுத்துக் கொள்ள வேண்டும் அம்மா," என்றாள்.

ராஜகுமாரி தாயாரின் மார்பில் தன் தலையைப் புதைத்துக் கொண்டு அழுதாள்; அழுதழுது அலுத்துப்போய் அடங்கினாள். "சிறிது நேரம் கழித்து, குழந்தையை அனுப்பி விடு என்று சொன்னதற்காகக கோபித்துக்கொண்டு அப்பாஜி இப்படிப் பண்ணிவிட்டார் பாருங்கம்மாஜி. நான் பேசாமலிருந்திருந்தால் குழந்தை பிழைத்திருக்கும்," என்றாள்.

மகளைச் சமாதானப் படுத்துவதை விட மேலாக ராணி கொலையின் பழியை தானாகட்டும், ராஜகுமாரியாகட்டும் அரசனின் மீது சுமத்தக்கூடாது என்பதில் மிகவும் கவனமாக இருந்தாள். நடந்தது நடந்து விட்டது; பேசுகிறவர்கள் வாய்க்கு வந்தபடி பேசுவார்கள்; அதை ஒன்றையும் தாங்கள் தடுக்கமுடியாது. ஆனால் குழந்தையின் உயிர் போனது அரசனின் கையால் என்பதை தானாகட்டும் மகளாகட்டும் தங்கள் வாயால் சொல்லக் கூடாது அவள் மகளிடம், "குழந்தை என்னமோ போய்விட்டது. அது யாரால் என்பதை நானோ நீயோ சொல்லவேண்டாம் புட்டம்மாஜி," என்றாள்.

பணிப் பெண் வந்து, "பசவய்யா பார்க்க வரலாமா என்று கேட்கிறார் அம்மா" என்றாள். ராணி "வரச்சொல்" என்று சொன்னாள். பசவன் வந்து கைகூப்பி நின்று, "அரசரைப் பார்ப்பதற்கு பகவதியை அனுப்பச் சொல்லி தொட்டவ்வா சொல்லி விட்டுப் போனாளம்மா, புறப்படுகிறபோது. பகவதியை அனுப்பலாமா அம்மா?" என்று கேட்டான்.

"மந்திரம் மாயம் செய்விக்கப் போகிறாளாமா?"

"மந்திரமும் மாயமும் சரி: அதோடு வைத்தியருக்குத் தெரியாத நூறு விஷயங்கள் அவளுக்குத் தெரியும் என்றாள். அமாவாசை இருளிலும் பௌர்ணமி நிலவிலும் பிசாசுபோல காட்டில் அலைகிறாள்; நாறும் வேரும் சேகரிக்கிறாள், வீட்டில் உட்கார்ந்து

கொண்டு பண்டிதர் இதையெல்லாம் என்ன கண்டார் என்கிருள்."

"உண்மை பசவய்யா; சொல்லியனுப்பு. வரட்டும், கொஞ்சம் பார்த்துக் கொள்ளவேண்டும் என்று வேண்டிக்கொண்டு அங்கே அனுப்பிவைப்போம்."

"நானே போய் அழைத்து வரட்டுமா அம்மா?"

"நல்லதாப் போச்சு. அப்படியே செய்."

பசவன் தாமதம் செய்யாமல் உடனே ஒரு குதிரை ஏறி பகவதியின் ஆசிரமத்துக்குச் சென்ருன். "அரசனின உடல் நிலை சரியாக இல்லை; இடமாற்றம் செய்யவேண்டு மென்பதற்காக அவர் நால்கு நாடு அரண்மனைக்குப் போயிருக்கிருர், பகவதி அங்கே போய் அவரைப் பார்க்கவேண்டும், மந்திரமோ ஔஷதமோ சரியான சிகிச்சை செய்யவேண்டும் என்று ராணி வேண்டுகிருர்" என்று தெரிவித்தான்.

பகவதி, "அரசனுக்கு என்ன உடம்பு?" என்று கேட்டாள். பசவன் உடம்பு சரியில்லை என்று தான் சொன்னுனே ஒழிய அரசன் குழந்தையைக் கொன்றதையோ அவன் சித்தம் கலங்கியிருப்பதையோ சொல்லவில்லை. "நால்கு நாடு அரண்மனைக்குச் சென்று அரசரைப் பார்த்தால் எல்லாம் விளங்கும்" என்ருன்.

"நீ எதையோ மறைத்து வைத்துப் பேசுகிருய். அரசரைப் பார்க்கவேண்டுமானுல் ஆள் அனுப்புவதை விட்டு விட்டு நீயே வந்திருக்கிருயே ஏதோ விபரீதம் நடந்திருக்கிறது, என்ன அது சொல்."

"பார்த்தால் தானே தெரிகிறது. நான் வேறு சொல்ல வேண்டுமா?"

"நீ யாரைக் காப்பாற்றுவதாக நினைத்துக் கொண்டிருக்கிருய்? வீரராஜன் உன் எஜமானன் அல்ல; உன் பகைவன். அவனுக்காக ஏன் இவ்வளவு தூரம் உயிரை விடுகிருய்?"

"விட்டது என்று சொல்லுங்கள் அம்மா, விட்டது என்று சொல்லுங்கள். அன்றைக்கும் இதே மாதிரி சொன்னீர்கள். நான் முடியாது என்றேன். அன்னமிட்ட அரசன் எனக்குப் பகைவன் எப்படி ஆவான்? உங்கள் பேச்சுக்கு நான் தடை சொல்பவனல்ல, தயவு காட்டி நால்கு நாடுக்குச் சென்று அரசரைக் காப்பாற்றுங்கள்.

பகவதி, "சரி, பார்ப்போம்," என்றாள். பசவன், "குதிரை தரட்டுமா?" என்றான்.

"வேண்டாம். நான் நடந்தே போவேன்"

பசவன் மடிகேரிக்குத் திரும்பினான். அவன் அரண்மனை மேட்டின் மீது குதிரையைச் செலுத்திக்கொண்டு சென்றபொழுது கீழே பார்ப்பனர்கள் வாழும் சரிவில் பகவதி நடந்து செல்வதைக் கண்டான். அப்பொழுது அவனுக்கு இவள் மந்திர சக்தியால் இங்கே வந்திருக்கிறாளோ என்று தோன்றியது. அடுத்த கணம் தான் மலையடிவாரத்திலிருந்து குதிரை ஏறி மெதுவாக இங்கு வரும் வேளைக்கு அவள் மலை ஏறி இறங்கி அங்கே வந்திருப்பது சாத்தியம்தான் என்று தோன்றியது. இருந்தாலும் பெண், இவ்வளவு வயதானவள், இந்தக் கிழ உடலில் எவ்வளவு சக்தி என்று அவனுக்கு ஆச்சரியம். அவன் அரண்மனைக்கு வந்தான்; ராணியிடம், "பகவதிக்கு உத்தரவைத் தெரிவித்தேன்; போகிறேன் என்று சொன்னார்: இங்கே இப்பொழுது கோவிலண்டை காணப்பட்டார்," என்று செய்தியைச் சொன்னான்.

141

பசவன் புறப்பட்டுச் சென்றதுதான் தாமதம், உடனே மடிகேரிக்குக் கால்நடையாகப் புறப்பட்ட பகவதி அவன் அரண்மனையில் ராணியைக் கண்டு செய்தி சொல்லும் நேரத்திற்குள்ளாக ஓங்காரேஸ்வரன் கோவிலில் தன் பெரியப்பாவை வந்து பார்த்தாள். பசவன் வந்திருந்ததாகவும், அரசனைப் பார்க்கவேண்டும் என்று ராணி சொல்லி யனுப்பியிருந்தாளென்றும் தெரிவித்து, "அரசனுக்கு என்ன உடம்பு, உங்களுக்குத் தெரிந்திருக்கவேண்டுமே?" என்று கேட்டாள்.

"எப்படியும் வந்தது வந்து விட்டாய் பாப்பா; அரண்மனைக்குப் போய் ராணியைப் பார்த்து விடு."

"இவர்கள் அழைத்தார்கள் என்று நான் போகத்தான் வேண்டுமானால் அரண்மனைக்கும் போகலாம், ராணியையும் பார்க்கலாம். ஆனால் இதெல்லாம் எனக்கெதற்கு, அண்ணய்யா?"

"வைத்தியம் தெரிந்தவள் என்பதனால் நோயாளிகள் வந்து வேண்டுகிறார்கள். தெரிந்தவள் சிகிச்சை செய்யவேண்டும், பாப்பா."

"எனக்கு வேண்டாதவர்கள், என் மகனைக் கெடுத்தவர்கள்; இவர்கள் தொலைந்தால் அவன் அரசனாவான். இப்படிப் பட்டவர்களை நான் காப்பாற்றவேண்டுமா?"

"உன் பேச்சு சரியல்ல, பாப்பா. தவறான வழியில் போகிறாய். மருந்து கொடுப்பவள்தான் நீ, காப்பது நீயல்ல. காப்பவனும் அழிப்பவனும் கடவுள் ஒருவனே. நாமெல்லாம் மனிதர்கள்; மனிதர்கள் என்பதை மறக்கக் கூடாது."

"உங்களுக்கு எள்ளளவும் கருணையில்லை அண்ணய்யா. என் தவறு கடுகளவு இருந்தாலும் அது பூசணிக்காயாக உங்களுக்குத் தோன்றுகிறது. என்னைக் கெடுத்தவர்களின் தவறு உங்கள் கண்களில் படவே இல்லை."

"என்னை என்ன வேண்டுமானாலும் சொல் பாப்பா; ஆனால் நீ மட்டும் சரியான வழியில் நட."

"சரி அண்ணய்யா, போகிறேன். என்னாலானதைச் செய்கிறேன்."

"அதுதான் சரி; என் தாயே."

"நீங்கள் சொல்கிறபடி செய்வதாகச் சொன்னால் உடனே உங்கள் பேச்சு எவ்வளவு குழைவாகி விடுகிறது. இப்பொழுது சொல்லுங்கள், அரசருக்கு என்ன உடம்பு என்று."

"அதென்ன யார் வேண்டுமானாலும் சொல்லுவார்கள். போய்க் கேள். மந்திரமோ, மாயமோ நல்லது எதுவோ உனக்குத் தெரிந்ததைச் செய்து விட்டு வா. எனக்கும் பூஜை வேலை இருக்கிறது. நாழிகையாகி விட்டது தெரியுமா?"

142

ஆசிரமத்திலிருந்து புறப்பட்டபொழுது பகவதிக்கு நால்கு நாடுக்குச் சென்று அரசனுக்கு மருந்து கொடுக்கும் உத்தேசம் இருக்கவில்லை. அவனுக்கும் ஆங்கிலேயர்களுக்கும் மனஸ்தாபம் ஏற்பட்டிருப்பதை அறிந்த அவள் "மிகவும் நல்லதாயிற்று; சீக்கி

ரத்திலேயே இவன் கதை முடிந்துவிடும்; தனது விருப்பம் நிறைவேறும்," என்று நினைத்துக்கொண்டாள். அரசனுக்கு ஆரோக்கியமும் கெட்டுப்போயிற்றென்றால் தனது இச்சை நிறைவேறுவது இன்னும் சுலபம். நோயாளியின் சார்பாக யாராவது வந்து உதவி வேண்டினால் வைத்தியம் அறிந்தவர்களின் கடமை என்ன என்பது குறித்து அவளுக்குச் சந்தேகமே இருக்கவில்லை. அவளுக்கு மருத்துவம் கற்றுத் தந்த ஆசான் ஒவ்வொரு மூலிகை, ஒவ்வொரு மந்திரம் சொல்லிக் கொடுத்தபோதும் மீண்டும் மீண்டும் ஓர் எச்சரிக்கை வார்த்தையைச் சொல்லியிருந்தான். மூலிகையைத் தெரிந்துகொள்வதும், மந்திரத்தைக் கற்றுக்கொள்வதும் பெரிதல்ல; தெரிந்துகொண்டதையும் கற்றுக்கொண்டதையும் சிரத்தையுடன் உபயோகிக்கவேண்டும். தன்னைக் கொல்ல வந்தவனைப் பாம்பு கடித்து விட்டால் வைத்தியன் மந்திரம் போட்டு விஷத்தை எடுக்கவேண்டும்; அவன் பிழைத்து எழுந்து நின்ற பிறகு அவனிடமிருந்து தப்பி ஓடவேண்டும். அவன் பகைவன் என்ற காரணத்தால் அவனுக்கு மந்திரிக்கமாட்டேன் என்று சொன்னால் நீ கற்ற மந்திரமும் மண்ணும் ஒன்றுதான். உனக்கு நரகமும் நிச்சயம்: உனக்கும் கற்பித்தவனுக்கும் நரகம் தான். இது வைதிய குருக்கள் எல்லோரும் வைத்திய சிஷ்யர்கள் எல்லோருக்கும் கொடுக்கும் உபதேசம்தான். ஆனால் பல சந்தர்ப்பங்களில் குருவே அதன்படி நடக்காதிருப்பதும் உண்டு. சிஷ்யனைப் பற்றிச் சொல்லவேண்டுமா? பகவதியின் வாழ்க்கையில் இதுபோன்ற சந்தர்ப்பத்தில் குரு சொன்ன எச்சரிக்கை சிஷ்யனுக்கு ஞாபகமிருப்பதில்லை அல்லது ஞாபகமிருந்தும் நிறைவேற்ற விருப்பமிருப்பதில்லை. பகவதியின் மனநிலையும் அதே போலத்தான் இருந்தது. இருந்தாலும் தன் பெரியப்பாவிடம் சங்கதியைத் தெரிவிக்காமல் தான் பேசாமலிருந்து விடலாம் என்கிற தைரியம் அவளுக்கு ஏற்படவில்லை. அதற்குத் தக்கவாறு அவர் அவளுக்கு அவளுடைய கடமையைத் தெளிவாக எடுத்துச் சொல்லிவிட்டார். அதன் பிறகு அவள் தனது முதல் எண்ணப்படி பேசாமலிருப்பது என்பது அசாத்தியமாயிற்று. கோவிலிலிருந்து வெளியே வந்த அவள், "அரண்மனைக்குச் சென்று ராணியைப் பார்ப்பதா? அல்லது நால்குநாடு அரண்மனைக்குப் புறப்பட்டுச் சென்றுவிடுவதா?" என்ற யோசனையில் ஒருகணம் நின்றாள்.

அப்பொழுது நாராயணன் அங்கே வந்தான். இவளைப் பார்த்ததும், "நமஸ்காரம் தாயே, எப்பொழுது வந்தீர்கள்?" என்றான்.

"வந்து ஒரு நாழிகை ஆயிற்று."

"தந்தையைப் பார்த்தீர்களா?"

"பார்த்தேன்."

"என்ன சமாச்சாரம்? என்ன யோசித்துக்கொண்டிருக்கிறீர்கள்? இங்கே நடந்த சமாச்சாரம் தெரியுமல்லவா?"

"இல்லை; என்ன அது?"

"அரசன் தங்கையின் குழந்தையைக் கொன்றுவிட்டான்; விடிவதற்குள்ளாக அவனுக்கு மூளை குழம்பிப்போய்விட்டது. நொண்டி அவனை எலிவளை அரண்மனைக்கு அனுப்பிவிட்டான்."

"அரசருக்கு உடம்பு சரியில்லை என்று மட்டும் கேள்விப்பட்டேன். இவ்வளவு தூரம் தெரியாது. கொன்றேவிட்டாரா?"

"அந்தச் செத்த புழுவை மண்ணிலே வைத்து முப்பது நாழிகைகள் ஆகிவிட்டன. கொன்றவனின் கையை புழுக்கள் தின்ன வேண்டும்: எப்பொழுது தின்னப் போகின்றனவோ ஆண்டவனுக்குத்தான் தெரியும்."

பகவதி இந்த சமாச்சாரத்தைக் கேட்டு வெகுண்டெழுந்தாள் "பச்சைக் குழந்தையைக் கொன்ற படுபாவியான இவனை நான் காப்பாற்றத்தான் வேண்டுமா?" என்று அவள் யோசித்தாள். மறுபடியும் உள்ளே சென்று பெரியப்பாவைக் கேட்கலாமா? ஹூம், பெரியப்பாவுக்கு இவையெல்லாம் தெரியும்; தனக்கு ஒன்றையும் சொல்லவில்லை. "வைத்தியம் தெரிந்தவள் சிகிச்சை செய்" என்று மாத்திரம் சொன்னாரே! ஒரு கணம் யோசித்த பிறகு அவளுக்குத் தோன்றியது. மறுபடியும் போய்க் கேட்டாலும் அவர் அதையேதான் சொல்லப்போகிறார். நல்லது; நூறு சொன்னாலும் அவர் பெரியவர்; அவர் சொல்கிறபடி கேட்பது தனக்கு நல்லது. அரண்மனைக்குச் சென்றால் ராணியோடு இந்தப் பேச்சுக்களையெல்லாம் பேசுவது கஷ்டம். ராணி பெருந்தன்மையான ஸ்திரீ. அரசனின் மீது வெறுப்பு, ராணியின் பேரில் கௌரவம்; இவை யிரண்டையும் தன் மனத்தில் போராட விட்டுக்கொண்டு தனக்கு அதனால் இன்னும் மனக்கிலேசம். ஏன் இந்தத் தொல்லையெல்லாம்? இவ்வாறு யோசித்து அவள் நால்கு நாடிற்கே செல்வதென்று நிச்சயித்துக் கொண்டாள்.

இப்படி அவள் நான்கு கஜ தூரம் நடப்பதற்குள்ளாக ராணி அனுப்பிய ஆள் ஒருவன் அவளிடம் வந்து, "அம்மாஜியவர்கள்

டோலி கொடுப்பதாகச் சொன்னார்கள். நடக்கவேண்டாமென்று கேட்டுக்கொண்டார்கள்," என்றாள்.

அதற்குள்ளாகப் பக்கத்துத் தெருவிலிருந்து நான்கு போயிகள் ஒரு டோலியைத் தூக்கிக்கொண்டு வந்தார்கள். பகவதி அதில் ஏறி உட்கார்ந்துகொண்டு நால்கு நாடு அரண்மனைக்குப் புறப்பட்டாள்.

143

போயிகள் எவ்வளவு வேகமாக நடந்தாலும் இவர்கள் நால்கு நாடு அரண்மனை போய்ச்சேரும் வேளைக்கு விளக்கேற்றி இரண்டு நாழிகையாகிவிட்டது. வழியில் இரண்டு சாமித் தோட்டங்கள் வந்தன. பகவதி அந்த இரண்டு இடங்களிலும் இறங்கி மந்திரம் சொல்லிக்கொண்டே தோட்டத்துக்குள் சென்று சில இலைகளையும் தழைகளையும் பறித்து மடியில் கட்டிக்கொண்டாள். அரண்மனையை அடைந்தவுடன் வைத்தியனுடன் பேசிவிட்டு அரசன் படுத்திருந்த அறைக்குச் சென்றாள். அரசனைப் பார்த்தாள்; அவன் ஆகாரம் சாப்பிட்டானா, தூக்கம் வந்ததா முதலிய விவரங்களை தொட்டவ்வாவிடமிருந்து கேட்டுத் தெரிந்து கொண்டாள்.

நாராயண நீட்சிதன் சொன்ன இரண்டொரு வார்த்தைகளிலிருந்தே அவள் அரசனின் நோய் என்னவென்பதை அறிந்து கொண்டிருந்தாள். ஆகையால் தான் வரும் வழியிலேயே சிகிச்சைக்கு வேண்டியிருக்குமென்று தனக்குத் தெரியுமூலிகைகளைப் பறித்துக்கொண்டு வந்திருந்தாள். தான் கொண்டு வந்திருந்த தழைகளில் சிலவற்றை அரைத்து அரசனின் உள்ளங்கால்களில் பற்றுப் போட்டாள். இன்னும் சில தழைகளை வேகவைத்து கஷாயம் காய்ச்சி இரண்டு கிண்ணிகள் அவனை உட்கொள்ளச் செய்தாள். பிறகு அவள் வைத்தியனைப் பார்த்து, "நீங்கள் நாளைக்கு மடிகேரிக்குத் திரும்பிச் செல்லலாம்," என்றாள்.

வைத்தியன், "அதெப்படியம்மா? அரசரைப் பார்த்துக் கொள்ளச் சொல்லி என்னை இங்கே அனுப்பியிருக்கிறார்கள். அவருக்குக் குணமாகாமல் நான் புறப்படமுடியுமா?" என்றான்.

"நீங்கள் செய்யவேண்டிய சிகிச்சை செய்தாயிற்று. நானும் அதே காரியமாக வந்திருக்கிறேன். இங்கே இரண்டு பேருக்கு வேலை இல்லை."

"நான் ஒன்றும் செய்யாவிட்டாலும் நீங்கள் செய்யும் சிகிச்சையைப் பார்த்து எனக்குத் தோன்றியதைச் சொல்லுவேன்."

"நான் செய்யும் சிகிச்சை பெரும்பாலும் மந்திரம், பண்டிதரே. அதைப் பார்த்த மாத்திரத்தில் யாருக்கும் ஒன்றும் புரியாது. நான் உபயோகிக்கும் நாரையும் வேரையும் மந்திரம் இல்லாமல் உபயோகித்தால் கெடுதல்தான் ஏற்படும். மந்திரம் கற்றுக் கொள்ள வேண்டுமென்றால் நியமம் வேண்டும். இதெல்லாம் தங்களுக்குத் தெரியாததா?"

பண்டிதனின் முகம் சிறுத்துவிட்டது. அவன், "நல்லது தாயே. நான் நாளைக் காலையில் புறப்படுகிறேன். அரசரின் ஆரோக்கியத்தின் பொறுப்பெல்லாம் தங்களுடையது என்று ராணியவர்களிடம் சொல்லுகிறேன்," என்றான்; காலையில் எழுந்து புறப்பட்டுவிட்டான்.

இரவெல்லாம் பகவதி அரசனின் படுக்கையருகில் உட்கார்ந்துகொண்டு ஏதேதோ மந்திரங்களை ஜபித்துக்கொண்டிருந்தாள்; காலையில் அவன் எழுந்திருப்பதற்கு முன்னரே பக்கத்துக் காட்டிலிருந்து சில பச்சைத் தழைகளைப் பிடுங்கிக் கொண்டு வந்திருந்தாள்; மறுபடியும் காலுக்குப் பற்று; வயிற்றுக்குக் கஷாயம் என்று சிகிச்சையைத் தொடர்ந்தாள்.

மூன்று நாள் சிகிச்சை நடந்தது. அரசன் வழக்கத்தைவிட அதிகமாகச் சாப்பிட்டான்; வழக்கத்தைவிட நன்றாகத் தூங்கினான். தூக்கத்தில் முதல் நாள் இருந்த உளறல்கள் மறுநாள் குறைந்தது. மூன்றாவது நாள் நின்றே போய்விட்டது. பகவதி தொட்டவ்வாவிடம், "இவருக்கு இப்போது குணமாகிவிட்டது. நான் நாளைக்குப் புறப்படுகிறேன்," என்றாள்.

இரண்டாவது நாள் பசவன் வந்து அரசனின் நிலைமையைப் பார்த்துக்கொண்டு சென்றான். மறுபடியும் நான்காவது நாள் வருவதாகத் தெரிவித்தான்.

பகவதி காலையில் எழுந்து புறப்படவேண்டும். அவளும் தொட்டவ்வாவும் அரசனின் அறைக்கு முன்னால் இருந்த அறையில் படுத்திருக்கிறார்கள். தொட்டவ்வா, "அரசருக்கு நன்றாகத் தூக்கம் வருகிறது. இனி பயம் இல்லை அல்லவா?" என்றாள்.

"கொஞ்சம்கூட கவலை இல்லை."

"சக்களத்தி மகன் என்கிற வயிற்றெரிச்சல் இல்லாமல் நல்லது செய்தாயம்மா."

"செய்வதும் விடுவதும் மனிதனின் கையில் இல்லை. கடவுள் தான் விரும்பியதை மனிதனின் கையால் செய்விக்கிறார்."

"மகன் அரசனாகும் விஷயம் என்ன ஆயிற்று?"

"தம்பி பிழைத்திருந்தால் அண்ணன் அரசனாகக்கூடாதா?"

"அப்படியானால் ஆசை இன்னும் இருக்கிறது."

"ஆசைப்படுவதனால் பலனென்ன தொட்டவ்வா?"

"பலிக்கலாம் என்பதுதான்."

"முப்பது வருஷத் தவம்; கடவுள் பலன் அளிக்கவேண்டும்"

"இதே வீட்டில் இதே அறையில் இளம் பெண்ணாக அதென்ன சுகபோக வாழ்க்கை? இதே வீட்டில் இதே அறையில் இப்போது செய்துகொண்டிருக்கும் வேலை என்ன? இரண்டையும் பார்த்த இந்தக் கண்களுக்கு ஆச்சரியமாக இருக்கிறது."

"இதை நீ இப்பொழுது சொல்லுகிறாய். நான்கு நாட்களாக என் மனம் இதையே நினைத்துக்கொண்டிருக்கிறது. இந்த முன் கட்டிலல்லவா குழந்தையின் காலை முறுக்கியது? இங்கிருந்தல்லவா தலைமீது துணியைப் போட்டுக்கொண்டு நடந்தது? நினைவெல்லாம் இனிப்பானதல்ல; கசப்பும் உண்டு."

"இல்லாமலா தாயே."

"அப்பொழுது நடந்ததை அறிந்தவர்கள் இரண்டே பேர் தான்; நீயும் தக்கனும்."

"தெரியும். ஆனால் வாய் திறக்கமுடியாது; ஆணையிட்டு விட்டார்கள் இருவருக்கும். எப்படிப்பட்ட ஆணை!"

பகவதி காலையில் புறப்பட்டுப் போய் விடுகிருள் என்ற காரணத்தால் மிகவும் நெருங்கி இரண்டு பேச்சுப் பேசலாம் என்கிற விருப்பத்தில் தொட்டவ்வா இந்தப் பேச்சை எடுத்தாள். அவள் பேச்சை ஆரம்பித்தது மிகவும் மெல்லிய குரலில். அரசன் தூங்கிக்கொண்டிருக்கிருன், அவன் தூக்கம் கெட்டு விடக்கூடாது என்பது அவள் எண்ணம். பேச்சு, பதில் சம்பிரமத்தில் இவர்களின் குரல் சிறிது சிறிதாகப் பெரிதாயிற்று. அரசன் மூன்று நாள் நன்ருகத் தூங்கிவிட்டு அன்று அந்நேரத்திற்கு விழித்துக் கொண்டான். நடு ஜாமம் கழிந்திருந்தது; அரண்மனை நிசப்தமாக இருந்தது. எனவே அவர்கள் பேச்சு முழுவதும் அரசனின் செவிகளில் தெளிவாக விழுந்தது.

145

பகவதியின் சிகிச்சையினுல் வீரராஜன் குணமடைந்தான்; அது மாத்திரம் அல்ல; அவன் உடல் என்றைக்கும் விட லேசாக இருந்தது, மனம் குதூகலத்தில் திளைத்துக்கொண்டிருந்தது.

இவர்களுடைய இந்தப் பேச்சையெல்லாம் கேட்டு அரசனுக்கு ஆச்சரியமாக இருந்தது. பேச்சின் முன்னும் பின்னும் அவனுக்கு அவ்வளவாகப் புரியவில்லை; ஆனுல் இவ்வளவு மட்டும் நிச்சயம்; தொட்டவ்வா பகவதியைச் சிறு வயதிலேயே அறிவாள்; அப்பொழுது அவள் இந்த வீட்டில் இருந்தாள்; இங்கே என்னமோ நடந்து அவள் துயரத்துடன் இந்த வீட்டைவிட்டுச் சென்று விட்டாள்.

மடிகேரியிலிருந்து புறப்பட்டபோது அவனுக்கு அரை மயக்க நிலை, நால்கு நாடு அரண்மனைக்கு வந்து சேர்ந்தபோது அந்த மயக்கம் தெளிந்திருந்தது; அவனைக் கொண்டு வந்து இந்த அறையில் படுக்கவைத்தபோது அவன் இடத்தை அறிந்துகொண்டான். அருகில் நின்ற சேவகனிடம், "நால்கு நாடு அரண்மனையாடா?" என்று கேட்டான். அவன், "ஆமாம் அரசே" என்று சொன்னதும் "ஏன் இங்கே வந்திருக்கிறீர்கள்?" என்று கேட்டான். சேவகன், "இடம் மாற்றவேண்டுமென்று அம்மாஜி உத்தரவிட்டார்கள்," என்ருன். அரசன் அத்துடன் பேச்சை நிறுத்திக் கொண்டான்.

அன்று முழுவதும் அவன் மனநிலை சரியாகவே இருக்கவில்லை. ஆனால் இடமும் குழ்நிலையும் வேறாக இருந்ததால், சுவற்றினருகில் குழந்தையின் பிணம் மூட்டையாகக் கிடப்பதுபோலவோ, யாரோ ஸ்திரீ முக்காடிட்டுக்கொண்டு அழுவதுபோலவோ, பிரமை ஏற்படவில்லை, பகவதி வந்து மருந்து தடவி மருந்து குடிக்கக் கொடுத்ததனால் உடலைத் தகித்துக்கொண்டிருந்த ஏதோ ஒரு உஷ்ணம் குறைந்தது போலிருந்தது. மனத்தைக் கலக்கிக் கொண்டிருந்த கலவரம் நிவர்த்தியாயிற்று.

இரண்டாவது நாள் இரவு அவன் தூக்கத்திலிருந்து விழித்துக் கொண்டபோது அழகான ஸ்திரீயின் முகம் ஒன்று அவன் முகத்தருகே குனிந்து அவனை ஏதோ மாதிரியாகப் பார்த்து கொண்டிருப்பதைக் கண்டான். அந்தக் கணத்தில் அது அவனுக்குத் தன்னுடைய தாயின் முகத்தைப் போலத் தோன்றியது; அடுத்த கணம் அது தன்னுடைய தாயின் முகம் அல்ல என்று அவன் அறிந்துகொண்டான் மனத்தில் ஏதோ பயம் தோன்றி அவன் யார் இது என்று கதத நினைத்தான்; அப்பொழுது அந்த முகத்தினருகில் அவனுக்கு இன்னொரு முகம் தெரிந்தது. அது தொட்டவ்வாவின் முகம்; மனம் சமாதானமடைந்து அவன், "தொட்டி" என்றான்.

தொட்டவ்வா, "எப்படியிருக்கு ராசா? சங்கடம் ஒண்ணும் இல்லியே?" என்றாள்.

"இல்லை; இது யார்?"

"பகவதி; மருந்து கொடுக்க வந்திருக்கிறார்."

அரசனுக்கு மறுபடியும் தூக்கம் வந்து விட்டது. அப்பொழுதே அவனுடைய நோய் பாதி குணமாகிவிட்டது.

மேலும் இரண்டு நாட்கள் கழிந்துவிட்டன. இப்போது இந்த பகவதி தன்னுடைய நோயை முழுதும் குணப் படுத்திவிட்டாள், முன்பு இங்கே இருந்தவள் போலிருக்கிறதே, இவள் யார்? இதைப் பற்றி நாளைக்கு விசாரிக்கவேண்டும்.

அரசன் கட்டிலில் புரண்டு படுத்தான். சிறிது சத்தம் உண்டாயிற்று. அவன் விழித்துக் கொண்டிருப்பதை யறிந்து தொட்டவ்வா அருகில் வந்தாள், போர்வை முதலியவைகளைச் சரிப்படுத்திவிட்டுத் திரும்பிச் சென்றாள்.

விடியற் காலைக்கு முன்னால் பகவதி புறப்பட்டுச் சென்று விட்டாள்.

காலையில் அரசன் தொட்டவ்வாவை, "பகவதி யார், தொட்டி?" என்று கேட்டான்.

அவள், "உங்களுக்குத் தெரியுமே ராசா, ஆத்துக்குப் பக்கத்தில் காட்டில் கோயில் கட்டிகிட்டிருக்காளே," என்றாள். பகவதி யார் என்று கேட்கிறானே, மறுபடியும் இவனுக்கு சித்தபிரமை ஏற்பட்டு விட்டதோ என்று அவளுக்குப் பயம்.

"ஏய் முட்டாள், அது தெரியாதா எனக்கு? முன்பு அவள் இங்கிருந்தாள் என்று நீ ராத்திரி சொல்லிக் கொண்டிருந்தாயே அதைக் கேட்கிறேன்."

"நாங்கள் ராத்திரி பேசிக்கொண்டது காதில் விழுந்ததா ராசா?"

"ஆமாம்."

"தூக்கக் கலக்கத்தில் கேட்டிருக்கிறீர்கள். நாங்கள். பேசிக் கொண்டது வேறே, உங்கள் காதில் விழுந்தது வேறே."

"நீ சொன்னதென்ன?"

"அது வேறொருத்தியைப் பற்றியது. இவளைப் பற்றி அல்ல. இவளுக்கு அவளைத் தெரியும். அவளைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தோம்."

தொட்டவ்வா உண்மையைச் சொல்லவில்லை, எதையோ மறைக்கிறாள், என்று அரசனுக்கு நிச்சயமாகத் தெரிந்தது ஆனால் அவள் விரும்பாவிட்டால் அவளிடமிருந்து உண்மையை வெளிக்கொண்டு வருவதற்கு அது சமயமல்ல, இருந்தாலும் கடைசி முயற்சியாக அவன், "பகவதியை இங்கே வரச் சொல்," என்றான்.

தொட்டவ்வா, "பகவதி காலையிலேயே கோவிலுக்குப் போவதாகப் புறப்பட்டுப் போய்விட்டாள், ராசா" என்றாள்.

146

அரசனுக்கு சித்தபிரமை ஏற்பட்டிருக்கும் சங்கதி வெளியே தெரியக்கூடாதென்று ராணி செய்த முயற்சிகள் பலிக்கவில்லை என்பதை ஏற்கனவே பார்த்தோம். பசவன் பகவதியின் உதவியை வேண்டி அவள் மடிகேரிக்கு வந்து தீட்சிதரைப் பார்க்கும்

நேரத்திற்குள் நாராயண தீட்சிதனுக்கு இது பழைய செய்தியாகி விட்டிருந்தது; ஊரில் இந்தச் செய்தியைத் தெரியாதவர்களே இல்லை.

போபண்ணு சொன்னதை அரசனிடம் சொல்ல முடியவில்லை என்று பசவன் தெரிவித்தபோது போபண்ணு அரசன் பதில் சொல்லாமல் தட்டிக் கழிக்கிறான் என்று நினைத்துக்கொண்டார். சிறிது நேரத்திற்குள்ளாக அரசனின் நிலை பற்றிய செய்தி செவிகளுக்கு எட்டி, தான் சொல்லியனுப்பியது அவர் காதில் விழுந்திருக்கமுடியாது என்பது அவருக்கு நிச்சயமாயிற்று. உண்மையிலேயே அரசன் தட்டிக் கழிக்கிறானு அல்லது தனது யோசனை அவனுக்கு எட்டவில்லையா என்பது போபண்ணுவுக்கு அவ்வளவு முக்கியமான சங்கதியாக இருக்கவில்லை. ஆங்கிலேயர்கள் குடகின் மீது படையெடுத்து வருகிறார்கள் என்கிற செய்தி தெரிகிற வரையில் அவருக்குத் தாம் செய்யவேண்டியதென்ன என்கிற விஷயத்தில் ஒரு முடிவு இல்லாதிருந்திருக்கலாம்; அந்நியர்களின் படை நாட்டுக்குள் நுழையப்போகிறது என்பது தெரிந்த உடனே அவருக்குத் தமது வழி என்ன என்பது தெளிவாகிவிட்டது.

ஏற்கனவே யோசித்திருந்தபடி அவர் அன்றைக்கே குடகின முப்பத்தைந்து பிரிவுகளின் தலைவர்களுக்கும் ஆட்களை அனுப்பினார். "வெளியிலிருந்து சேனை வந்து கொண்டிருக்கிறது. அத்துடன் போராடி நாம் அரசரைக் காப்பாற்ற வேண்டுமென்று எனக்குத் தோன்றவில்லை. இது உங்களுக்குச் சம்மதமா என்று தெரிவியுங்கள். இல்லாவிட்டால் உடனே மடிகேரிக்கு வந்து என்னோடு பேசுங்கள். எப்படியானாலும் உங்கள் பிரதேசத்திலிருந்து இருபது வீரர்களை அனுப்பிக்கொடுங்கள். அவர்களுக்கு வேண்டிய ஏற்பாடுகளை நான் பார்த்துக்கொள்கிறேன்," என்று சொல்லியனுப்பினார்.

அன்றைக்குச் சென்ற ஆட்களில் பலர் அன்றைக்கே திரும்பினார்கள்; மற்றவர்கள் மூன்றாவது நாள் திரும்பி வந்தனர். எல்லாத் தலைவர்களும் ஒரே மாதிரி பதில் சொல்லி அனுப்பியிருந்தார்கள். "எது சரி என்று போபண்ணு சொல்லுகிறாரோ அதற்கு அவர்களுடைய சம்மதம் உண்டு. போபண்ணுவின் உத்தரவுப்படி அவர்கள் அன்றைக்கே இருபது வீரர்களை அனுப்புவார்கள்."

போபண்ணு அவர்களுடைய இந்த ஆதரவையும் நம்பிக்கையையும் கண்டு மகிழ்ந்தார். நாடு பிழைத்துக் கொள்ளும் என்ற தைரியம் அவருக்கு உண்டாயிற்று. தலைவர்கள் இவ்வாறு சொல்லியனுப்பியிருக்கிறார்கள் என்று லக்ஷ்மீ நாராயணய்யாவுக்குத் தெரிவித்தார்.

பிரிவுத் தலைவர்களுக்கு ஆளனுப்பிய அன்றே அவர் எல்லைப் புறப் படைகளின் தலைவர்களுக்கும், "நீங்கள் உடனே மடிகேரிக்கு வந்து மேற்கொண்டு எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதற்கு உத்தரவு பெற்றுச் செல்லவேண்டும்" என்று சொல்லியனுப்பினார். அவர்கள் ஐந்து பேர். ஐந்து பேரும் மறுநாள் வந்தார்கள். போபண்ணு அவர்களிடம், "இது வரையில் பேருக்காக எல்லையைப் பாதுகாத்து வந்தீர்கள். அவ்வளவுதான். சம்பளம் முதலியவைகள் நாம் கொடுத்து வந்தோம். ஏதாவது வேலை இருந்தால் அரசரோ நானோ தெரிவித்து வந்தோம். இப்பொழுது வெளியிலிருந்து சேனை வந்து கொண்டிருக்கிறது. எப்படி நடந்து கொள்ளவேண்டுமென்பது உங்களுக்குத் தெரிந்திருக்கவேண்டும். அரசர் விரும்புகிறபடி நடந்துகொள்ளவேண்டுமென்று நான் நினைக்கவில்லை. ஆனால் என் எண்ணப்படியே உங்கள் எண்ணம் இருக்கவேண்டுமென்று நான் சொல்லவில்லை. நீங்கள் மேலே என்ன செய்யவேண்டுமென்பதைப் பற்றி அரண்மனைக்குச் சென்று அரசரின் உத்தரவைப் பெற்றுக்கொள்ள விரும்பினால் அப்படியே செய்யலாம் அதன்படியும் நடக்கலாம். நான் தடை செய்ய வில்லை," என்றார்.

உத்தய்யன் அவர்களில் ஒருவன். ஐந்து பேரும் சேர்ந்து வெளியே சென்று தமக்குள் கூடிப் பேசிக் கொண்டார்கள். இரண்டு நிமிடங்களில் திரும்பி உள்ளே வந்து, "எங்களுக்கு இது வரையில் நீங்கள்தான் வழிகாட்டிய பெரியவர். இனிமேலும் அப்படித்தான். நாங்கள் அரசரிடம் நேரில் சென்று அவர் உத்தரவைப் பெறவேண்டிய தேவை இல்லை. தாங்கள் சொல்வதுபோல நடந்துகொள்கிறோம். உத்தரவளியுங்கள்," என்றார்கள்.

"அதற்கும் என் ஆட்சேபணை இல்லை. அப்படியானால் நீங்கள் செய்யவேண்டியது இதுதான்: பகைவர்களின் படை எல்லையை அடைந்ததும் ஒருவர் சென்று அவர்களின் தலைவனிடம், 'எங்கள் அதிகாரிகள் உங்கள் அதிகாரிகளிடம் வெகு முக்கியமான பேச்சு வார்த்தை நடத்த எண்ணியிருக்கிறார்கள். அந்தப் பேச்சு வார்த்தைகள் முடியும் வரையில் நாங்கள் உங்களோடு போரிட மாட்

டோம். நீங்கள் எல்லைக்கு வெளியிலேயே நின்றிருங்கள், நாங்கள் உங்கள் வம்புக்கு வரமாட்டோம், என்று சொல்லவேண்டும். அவர்கள் அதற்குச் சம்மதித்தால் நீங்கள் அவர்களை அந்தப் பக்கம் நிறுத்திவிட்டு நீங்கள் இந்தப் பக்கமே நின்றிருங்கள். சண்டை செய்யாதீர்கள். அவர்களின் கர்னல் துரையுடன் பேசி நான் உத்தரவு அனுப்புகிறேன். உங்கள் பேச்சைக் கேட்காமல் அவர்கள் முன்னால் வந்தால் நீங்கள் அவர்களைத் தடுத்துப் போரிடுங்கள்."

படைத்தலைவர்கள் இந்த அறிவுரையை கேட்டுக்கொண்டு தங்கள் எல்லைக்குத் திரும்பிச் சென்றனர் போபண்ணா, இந்தச் சங்கதியையும் லக்ஷ்மீநாராயணய்யாவுக்குத் தெரிவித்தார்.

பிரதேசங்களிலிருந்து புறப்பட்ட வீரர்களெல்லாம் மூன்றாவது நாள் மாலைப் பொழுதில் மடிகேரி வந்து சேர்ந்தார்கள். அவர்களின் தலைவர்கள் போபண்ணாவைக் கண்டார்கள். போபண்ணா அவர்களில் முந்நூறு பேரை மடிகேரியின் காவலுக்காக நிறுத்தி வைத்து விட்டு நானூறு பேரைக் குஷால் நகரத்துக்குச் சென்று தனக்காகக் காத்திருக்கும்படி ஏற்பாடு செய்தார்.

இது நடந்த மூன்று தினங்களில் பெங்களூர் படையின் ஐந்து பிரிவுகள் எல்லையின் ஐந்து வாயில்களைச் சமீபித்து விட்டதாகத் தெரிய வந்தது. பசவன் ராணியின் அநுமதியைப் பெற்று போபண்ணாவிடம் வந்தான். "அரசருக்கு இப்போது குணம் கண்டிருக்கிறது. தங்கள் அபிப்பிராயத்தை அவருக்குத் தெரிவித்து அவர் என்ன சொல்கிறாரென்பதை நாளை உங்களுக்குத் தெரிவிக்கிறேன். இதுவரையில் நீங்கள் செய்திருக்கும் ஏற்பாட்டை எனக்குத் தெரிவியுங்கள்" என்று கேட்டான், போபண்ணா, "மூன்று நாட்களுக்கு முன்னால் அரசர் ஏதாவது உத்தரவு தந்திருந்தால் அதைப் பற்றிக் கவனித்திருக்கலாம். இப்பொழுது இதைப் பற்றியெல்லாம் பேசிக்கொண்டிருக்க நேரமில்லை. பகைவர்களின் நடவடிக்கைகளுக்குத் தக்கபடி நாம் நமது நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். எந்தச் சமயத்தில எது சரி என்று தோன்றுகிறதோ அப்படிச் செய்ய வேண்டும். இதையே அரசருக்குத் தெரிவியுங்கள்," என்றார்.

பசவனுக்கு மிகவும் நிராசையாகப் போய்விட்டது அவன் வந்து ராணியிடம் இந்த விஷயத்தைத் தெரிவித்தான். அவள், "அரசன் மூன்று நாட்களுக்கு முன்னதாகவே பதவியை இழந்

தாயிற்று. இனி இதனால் புதிதாக ஒன்றையும் இழக்கவில்லை" என்று நினைத்து தனக்குள்ளாகவே துயரப்பட்டாள்.

அரசனின் பதவி முடிந்தது; அவன் மனைவியான தனது ராணிப் பதவியும் முடிந்தது. இதற்காகவா தனது மகள் ஒரு அரண்மனையிலே வந்து பிறந்தாள் என்று ராணி மிகவும் மனம் நொந்தாள். இந்தக் குழந்தையை ஆட்சி பீடத்தில அமர்த்த போபண்ணா சம்மதித்தால் அவள் சுகத்தைக் காணலாம். போபண்ணா சம்மதித்தால் அவனது மருமகனை விவாகம் செய்து கொள்ளலாம். தந்தையைவிட கடவுள் என்ற பெயர் எடுத்த தாயைவிட அதிகமான சந்தோஷத்தை அனுபவிக்கலாம். கடவுள் இதை அருளுவாரா?

அவள் யாருடனும் இதைப் பற்றிப் பேசி தன் மனத்தைத் திறந்து காட்டும்படியாக இல்லை. அவள் பசவனிடம், "இப்பொழுது அரசருக்கு குணமாகியிருக்கிறதல்லவா, பசவய்யா?" என்று கேட்டாள்.

"ஆம் அம்மா. படுக்கையை விட்டு எழுந்து விட்டார். நடக்கிறார். பேச்சு கீச்செல்லாம் நல்படியாக இருக்கிறது."

"போய் இப்பொழுது நடந்திருப்பதையெல்லாம் சொல்லி என்ன சொல்லுகிறாரென்று தெரிந்து வருகிறாயா?"

"ஆகட்டும் அம்மா."

147

பசவன் நால்கு நாடு அரண்மனைக்கு உடனே புறப்பட்டான். அரசனுக்கு போபண்ணாவின் சங்கதியையெல்லாம் தெரிவித்தான். "அம்மா அவர்கள் அரசர் என்ன சொல்கிறார் என்று தெரிந்துகொண்டு வா என்றார்கள்" என்றான்.

அரசனுக்கு தனது நிலைமை என்னவாகியிருக்கிறதென்று தெரிந்திருக்கவில்லை. அவன் முதலில், "யாருடா அவன் என்னைப் பதவியிலிருந்து விலகச் சொல்பவன, கைத்துப்பாக்கியால் சுட்டு விடுவேன் ஜாக்கிரதை!" என்றான். "குடகின் அரசன் அவ்வளவு இளப்பமானவனாகி விட்டானா? இந்த போபண்ணாவும் கீபண்ணாவும் எனக்கொரு பொருட்டா?" என்றான். "வெளியிலிருந்து

படைகள் வந்திருக்கின்றனவா? வந்தால் என்ன?'' என்ருன். ''குடகு நாடு அவ்வளவு சுலபமானதல்ல. துருக்கர்கள் பட்ட பாடு இவர்கள் அறிய மாட்டார்கள்'' என்ருன். அறுபது வருடங்களுக்கு முன்னுல் தனது பெரியப்பா குடகு நாட்டு மக்களையெல்லாம் ஒன்ருகத் திரட்டி அந்நியர்களை விரட்டியடித்து அரசனுனதைப்போல தானும் மக்களை ஒன்றுபடுத்தி அந்நியர்களை விரட்டியடிப்பது போலப் பேசினுன். பசவன் இதற்கு என்ன சொல்வது என்று தெரியாமல் பேசாமலிருந்தான்.

சிறிது நேரம் கழித்து அவன் அரசனிடம், ''அரசர் மடிகேரிக்குப் புறப்படலாமா?'' என்ருன். அரசன், ''மடிகேரி என்ன, நால்கு நாடு என்ன? போய் போபண்ணுவிடம் சொல். என் பேச்சுப்படி நடப்பது நல்லது என்று சொல். அப்படியும் அவன் கேட்காமலிருந்தால் நான் மடிகேரிக்கே செல்வேன், எல்லைப்புறத்திற்கும் செல்வேன்.''

பசவன், ''சரி அரசே'' என்று கூறி மடிகேரிக்குத் திரும்பினுன்.

148

பசவன் மடிகேரியை அடையுமுன்னரே போபண்ணு தனது சேனையின் பின்னுல் குஷால நகரத்துக்குப் புறப்பட்டு விட்டார். போபண்ணுவைப் பின்தொடர்ந்து சென்று பார்ப்பதா அல்லது வேறு ஏதாவது செய்வதா என்று பசவனுக்குத் தோன்றவில்லை. என்ன செய்வது என்று அவன் ராணியைக் கேட்டான் ராணி, ''மந்திரி ஐயா அவர்களைப் போய்ப் பார், பசவய்யா'' என்ருள்.

பசவன் போய் லக்ஷ்மீநாராயணய்யாவைப் பார்த்தபொழுது அவர், அரண்மனைக்குச் சென்று அம்மாஜியவர்களுடன் பேசுவோம், என்ருர். இருவரும் ராணியிடம் சென்ருர்கள். லக்ஷ்மீநாராயணய்யா ராணியிடம், ''இப்போது இந்த விஷயமெல்லாம் மிகவும் முற்றிப்போய் என் கையைத் தாண்டி நிற்கிறது தாயே. தாங்கள் என்ன சொன்னுலும் நான் அதை நடத்துகிறேன். ஆனுல் எல்லாவற்றிற்கும் போபண்ணுவின் சம்மதம் வேண்டும்'' என்ருர்.

''அவர் அரசருக்கு விரோதமாக இருக்கிருரே, அவருடைய சம்மதத்தை எப்படிப் பெறுவது?''

"அப்படிப் பார்க்கப் போனால் தாங்களும் அரசருக்கு விரோதி தான் தாயே, இது வரையில் நடந்ததெல்லாம் அதிகமல்ல; இப்பொழுது நடந்தது அதிகம்தான்."

"நடந்துவிட்டதே ஐயா, இப்போது என்ன வழி?"

"போன வருஷம் நாங்கள் வேண்டிக்கொண்டது போல நடப்பதானால்..."

"கணவனைக் காட்டுக்குப் போ என்று சொன்னவர்கள் மனைவிக்கு அதைப் பிரத்தியேகமாகச் சொல்லவேண்டியதில்லை என்று சீதா தேவி சொன்னாராம், ஐயா. அரசருக்கு நேர்ந்தது எனக்கும் தான். வேறு எதற்கும் நான் சம்மதிக்கமாட்டேன்."

"ராமச்சந்திரனைப் பற்றித் தாங்கள் சொல்லுவது யாருக்குப் பொருத்தமானது அம்மா?"

"அதையும் அங்கேயே சொல்லியிருக்கிறார்கள், ஐயா. 'கணவன் கெட்டவனாகவே இருந்திருந்தாலும் நான் அவனை விட்டிருக்கமாட்டேன்' என்று லோகமாதா சொன்னாராம். பெரியவர்கள் எழுதி வைத்திருப்பது; அதைப் படித்த நாம் அதன்படி நடக்க வேண்டும்"

"உங்கள் பேச்சு தோஷமற்றது தாயே. நாட்டுக்கு கஷ்டம் வந்துள்ளது, ஆகையால் ஏதோ பேசி விட்டேன், மன்னிக்க வேண்டும். வேறு என்ன செய்யட்டும், உத்தரவு தாருங்கள்."

"நீங்கள் போய் அரசரைக் கண்டு மகள் ராணியாவதற்கு அவரைச் சம்மதிக்கச் செய்யுங்கள். குஷால் நகரத்திற்குச் சென்று போபண்ணா அவர்களுக்குத் தெரிவித்து இந்தக் குழப்பத்தை இத்தோடு நிறுத்தச் சொல்லுங்கள். பெரிய மனது பண்ணி எங்களை யெல்லாம் சரியாக நடத்தவேண்டும் என்று நான் கேட்டுக் கொண்டதாக போபண்ணாவிடம் சொல்லுங்கள்."

லக்ஷ்மீநாராயணய்யா, "உத்தரவு அம்மா, பார்க்கிறேன்" என்றார். வீட்டுக்கு வந்து நடந்த பேச்சு வார்த்தைகளைத் தாயாருக்குத் தெரிவித்துவிட்டு பசவனுடன் நால்கு நாடு அரண்மனைக்குப் புறப்பட்டார்.

தான் பதவியை விட்டுவிடவேண்டும், மகள் அப்பதவிக்கு வர வேண்டும் என்பதாக மாத்திரம் இருந்தால் அரசன் சம்மதித் திருப்பானோ என்னவோ? ஆனால் போபண்ணாவின் விருப்பப்படி தான் அவ்வாறு செய்யவேண்டும் என்பது அவனுக்கு சம்மதம் இல்லை. அவன் பசவனைத் திட்டினான்; ராணியைப் பழித்தான்; லக்ஷ்மீநாராயணய்யாவை அதட்டினான்; போபண்ணாவைச் சபித் தான். உட்கார்ந்து பேசப் பொறுமையில்லாதவனாய் கைகால் கள் உதறலோடு அறையின் ஒரு கோடியிலிருந்து மற்றொரு கோடி வரையில் நடந்துகொண்டே கத்தினான். கூக்குர லிட்டான்.

லக்ஷ்மீநாராயணய்யா இதையெல்லாம் கேட்டுக் கொண்டு பேசாமலிருந்தார். கடைசியில் பசவன் வீரராஜனின் காலில் விழுந்து, "அரசே, கெட்டவர்களுக்கு இப்போது நல்ல காலம்; குழப்பமான வேளை; அவர்கள் சொல்கிறபடிதான் நடக்கவேண் டும்; சம்மதித்து விடுங்கள்; பிறகு பார்த்துக் கொள்ளலாம்," என்று வேண்டினான். அரசன் மறுபடியும் காலை விடுவித்துக் கொண்டு நான்கு முறை இப்படியும் அப்படியுப் நடந்தான். "சரி, ஐயா! என் மகள் பட்டத்திற்கு வரட்டும், நீங்கள் திரும்பிச் செல் லுங்கள்; உங்கள் செல்லவை உங்களுக்குக் கொடுத்து விடுகிறோம் என்று சொல்லி வெள்ளையனைத் திருப்பி அனுப்பிவிட்டு வாருங் கள்," என்றான்.

லக்ஷ்மீநாராயணய்யா, "உத்தரவு அரசே" என்றார்.

அரசன், "இது நீங்கள் நம்மவராக வெள்ளையருக்குச் சொல்லவேண்டிய பேச்சு," என்றான். லக்ஷ்மீநாராயணய்யா சம்மதித்துக் கை கூப்பினார்; பசவனுடன் வெளியே வந் தார்.

அரசன் சம்மதித்துவிட்டதைக் கேட்டு ராணிக்கு இருளில் சிறிது வெளிச்சத்தைக் கண்டாற்போல ஆயிற்று. நடந்தவைகளை யெல்லாம் தாயாருக்குத் தெரிவித்துவிட்டு லக்ஷ்மீநாராயணய்யா போபண்ணாவைப் பார்ப்பதற்காக குஷால நகரத்துக்குப் புறப் பட்டார்.

பிரேசர் துரையின் ஏற்பாட்டின்படி அவன் கீழிருந்த ஐந்து படைகள் ஒரே நாள் சுமார் மத்தியான்ன வேளையில் தங்கள் பிரயாணத்தை முடித்துக்கொண்டு குடகின் எல்லையை வந்தடைந்தன. பிரேசர் குஷால நகரத்து எல்லைக்கு வந்து சேர்ந்தான். ஐந்து எல்லை வாசல்களிலுள்ள படைத்தலைவர்கள் எதிரிகளின் தலைவர்களிடம் போரபண்ணு கூறியிருந்தது போல சொல்லியனுப்பினார்கள்.

குஷால நகரத்து வந்த படைகளின் சார்பில் பிரேசரே இந்தச் செய்தியைக் கேட்டான்; "ஆட்சேபணையில்லை" என்று பதில் அனுப்பினான். மற்ற நான்கு வாசல்களிலும் எதிரிப் படைகளின் தலைவர்கள் அவ்வாறே தெரிவித்தார்கள். அரகல கூடு வழி எல்லையில் மாத்திரம் கொஞ்சம் தகராறு ஏற்பட்டது.

பெங்களூரைவிட்டுப் புறப்பட்டபோது அப்பாஜி கர்னல் துரையோடு புறப்பட்டான். சிறிது தூரம் சென்ற பிறகு அரகல கூடை நோக்கிச் செல்லும் தளத்திற்கு இடம் பரிசயமுள்ள ஒருவனின் சகாயம் தேவை என்று கண்டதால் அந்த திசையில் புறப்பட்ட தளத்தில் வந்து சேர்ந்து கொண்டான். எல்லையை அடைந்தபொழுது எதிர்ப் பக்கத்திலிருந்து வந்த செய்தியைக் கேட்டு, "என்ன சங்கதி இது? நாம் படைத்தலைவரிடம் போய் இதன் அர்த்தம் என்ன என்று கேட்டுக் கொண்டு வருவது நல்லது," என்றான்.

தன் நாயகனும் அவனும் சிறிது நேரம் பேசி அந்த வேலையை அவனே செய்யவேண்டுமென்று நிச்சயித்தனர். அப்பாஜி, கூட ஒரு ஆளை அழைத்துக்கொண்டு எதிர்ப் புறம் சென்றான்.

எல்லையில் நின்றிருந்த ஆட்களுக்கு படைத்தலைவன் கட்டளையிட்டிருந்தான்: "நாம் சம்மதிக்கும் வரையில் யாரும் இந்தப் பக்கம் அடி எடுத்து வைக்கக்கூடாது. அப்படி வந்தால் வேறு பேச்சே வேண்டாம், துப்பாக்கியை எடுத்துச் சுடுங்கள்," என்று.

எல்லை வீரன், "நில், இங்கே வராதே" என்று கத்தினான். அப்பாஜிக்கு இவன் பேச்சு கேட்கவில்லையோ அல்லது கேட்டும் புரியவில்லையோ அவன், "நான் ஒருவனே வருகிறேன். கொஞ்சம்

பேசவேண்டும். அவ்வளவுதான்" என்று கூறி நடந்து வந்து கொண்டே இருந்தான். நான்கு கஜ தூரம் முன்னால் வந்தான்.

எல்லை வீரன் துப்பாக்கியை எடுத்து அவன் மார்புக்கு நேராகக் குறி வைத்துச் சுட்டான்; அப்பாஜி அங்கேயே செத்து விழுந்தான்.

அப்பாஜியுடன் வந்த ஆள் தரையின்மீது படுத்துக்கொண்டான்; ஒரு கணம் கழித்து எழுந்திருந்து அப்பாஜியின் பிணத்தைத் தூக்கிக்கொண்டு பத்தடி பின்னால் நடந்தான்; மறுபடியும் துப்பாக்கிச் சத்தம் கேட்டதனால் நடையை மெதுவாகக் பிணத்தைப் பிடித்துக்கொண்டு தன் படையை நோக்கிச் சென்றான்.

படைவீரர்கள் எதிரில் வந்தனர்; அப்பாஜியின் பிணத்தை விடுதிக்கு எடுத்துச் சென்றார்கள்; பக்கத்து மைதானத்தில் ஒரு குழி தோண்டி அதை அங்கே புதைத்தார்கள். நடந்த சங்கதியைத் தெரிவித்துவிட்டு வரச்சொல்லி தளநாயகன் குஷால நகரத்துக்கு ஒரு ஆளை அனுப்பினான்.

151

இங்கே குஷால நகரத்தில் கர்னல் துரை போபண்ணாவிடம், "நீங்கள் இங்கே வருகிறீர்களா அல்லது நான் அங்கே வரட்டுமா? உங்கள் விருப்பத்தைத் தெரிவியுங்கள். தங்கள் மரியாதைக்குத் தகாத எந்தக் காரியத்தையும் நாங்கள் செய்யமாட்டோம்," என்று சொல்லியனுப்பினான். போபண்ணா, "நானே அங்கே வருகிறேன்" என்று சொல்லி அனுப்பிவிட்டு அரை நாழிகைக் குள்ளாக அவனது விடுதிக்குச் சென்றார். பிரேசர் போபண்ணாவை மிக்க மரியாதையுடன் வரவேற்றான். தனது கூடாரத்திற்கு அழைத்துச் சென்று ஆசனம் தந்து அமரச்செய்து அவர் அமர்ந்த பிறகு தான் அமர்ந்து "தாங்கள் குடகின் மந்திரி. தங்கள் பதவி பெரியது. தாங்களே இங்கே வந்திருப்பது தங்களின் சௌஜன்யத்தைக் காட்டுகிறது. தாங்கள் கர்வமற்றவர் என்று ஜனங்கள் சொல்வது தவறல்ல," என்றான்.

"ஜனங்களுக்கு என்னைப் பற்றித் தெரியாது, போங்களேன். இருந்தாலும் உங்கள் நல்வார்த்தையில் எனக்கு மகிழ்ச்சி."

"ரொம்பவும் சந்தோஷம். கும்பணி சர்க்காருக்கும் குடகுக்கும் ஏற்பட்டுள்ள இந்த விவகாரம் எப்படி ஒரு ஒழுங்குக்கு வர வேண்டுமென்று தாங்கள் யோசித்திருக்கிறீர்கள்?"

"அரசர் அவரது தங்கை, தங்கையின் கணவர் இவர்கள் விஷயத்தில் தவறாக நடந்து கொண்டுள்ளார். தங்கையும் தங்கையின் கணவரும் தங்களிடம் வந்துள்ளார்கள். இதைப் பற்றிப் பேசுவதற்காக நீங்கள் தூதர்களை அனுப்பியிருந்தீர்கள். அரசர் அவர்களைப் பிடித்து வைத்திருக்கிறார். தங்கையின் கணவர் இவர்களுடைய உயிரையும் மானத்தையும் காப்பாற்றுவதற்காகவும், தூதுவர்களை மீட்டுச் செல்வதற்காகவும் இப்பொழுது நீங்கள் குடகின்மீது படையெடுத்து வந்திருக்கிறீர்கள்."

"அரசர் தமது தங்கையின் குழந்தையைக் கொன்றுள்ளார். அவரைத் தண்டிக்கவேண்டியதும் எங்கள் வேலை. மேலும் குடகின் எதிர்கால நன்மையை முன்னிட்டு தக்க ஏற்பாடுகள் செய்யவேண்டியதும் தங்கள் கடமை என்று கும்பணி சர்க்கார் கருதுகிறார்கள்."

"தங்கை, தங்கையின் கணவர் இவர்களின் மரியாதை என்று சொன்னதிலேயே அரசர் அவர்களுடைய குழந்தையைக் கொன்ற விஷயமும் அடங்கியுள்ளது. குடகின் எதிர்கால நன்மை என்பது குடகின் தலைவர்கள் கவனித்துக்கொள்ள வேண்டிய விஷயம். அந்நியர்களுக்கு அதில் ஏதும் சம்பந்தமில்லை."

"குடகின் தலைவர்கள் விரும்பாத எதையும் துளிகூட வற்புறுத்தி அவர்கள் மீது நாங்கள் சுமத்தமாட்டோம். உங்கள் நாட்டை நீங்கள் பார்த்துக்கொள்ள முடியும். இது கும்பணி சர்க்காருக்குத் தெரியும். இருந்தாலும் இது போன்ற சந்தர்ப்பங்களில் நாட்டு மக்களே தவறைத் திருத்த முயன்றால் தாமதம் ஆகக் கூடும். நண்பர்களான அந்நியர்கள் இதுபோன்ற சமயங்களில் தவறைத் திருத்த உதவுவார்கள். அந்த உதவியைத் தங்களுக்களிப்பதற்காகவே இப்பொழுது நாங்கள் வந்துள்ளோம்."

"சந்தோஷம். தங்கள் நோக்கம் என்ன வென்பதைத் தெரிவியுங்கள்."

"அரசர் கும்பணி சர்க்காரை அவமானப் படுத்தியிருக்கிறார். கும்பணி சர்க்கார் தங்கைக்குப் புகல் அளித்தார்கள் என்ற கோபத்தால் தங்கையின் குழந்தையைக் கொன்றிருக்கிறார். அந்த அவமானத்திற்குத் தண்டனையாக நாங்கள் அவரைப் பட்டத்

திலிருந்து விலக்கவேண்டும். கொலைக்கு சிட்சையாக மரண தண்டனை விதிக்கலாமா என்று பார்க்கவேண்டும்.''

''அரசரை நமது தலைவர்களே ஏற்கனவே பட்டத்திலிருந்து விலக்கியுள்ளார்கள். இது விஷயத்தில் உங்கள் பிரவேசம் இனி அவசியமில்லை.''

''சரி.''

''தங்கையின் குழந்தையைக் கொன்றதற்காக அரசரைத் தண்டிப்பதற்கு உங்களுக்கு அதிகாரம் இல்லை; அவர் கும்பணியின் பிரஜை அல்ல.''

''சரியான பேச்சு, தண்டிக்கவேண்டும் என்று குடகர்களாகிய நீங்கள் விரும்புவீர்கள் என எதிர்பார்த்தோம். வேண்டாம் என்று நீங்கள் சொல்லுவதாலே நாங்கள் அதில் பிரவேசிக்கப் போவதில்லை.''

''சரி, மேலே என்ன சொல்லுங்கள்.''

''எங்கள் தூதர்களை உடனே விடுவித்து விடவேண்டும். அரசரின் தங்கை, அவர் கணவர் விஷயமாக சரியானதொரு ஏற்பாட்டைச் செய்யவேண்டும். நாங்கள் படை திரட்டிக்கொண்டு வந்த செலவை எங்களுக்குக் கொடுத்துவிடவேண்டும். இனிமேல் குடகில் சீர்கேடான நிலை ஏற்படாமலிருக்க நாங்கள் சம்மதிக்கும் படியான ஏற்பாட்டைக் செய்யவேண்டும்.''

''சீர் கேடான நிலை இருக்கக்கூடாது, வாஸ்தவம். ஆனால் அதற்காக நாங்கள் செய்கிற ஏற்பாட்டுக்கு உங்கள் சம்மதம் எதற்காக?''

''எதற்காகவென்றால் குடகு எங்கள் ஆட்சிப் பிரதேசத்தின் மத்தியில் இருக்கிறது. இங்கே ஏதாவது கலவரம் என்றால் அதன் எதிரொலி எங்கள் பிரதேசத்தில் ஏற்படுகிறது. எங்கள் பிரதேசத்தில் தொல்லை இல்லாமலிருக்கவேண்டுமானால் உங்கள் பிரதேசத்தில் தொல்லையில்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.''

''நல்லதையா. இதை நீங்கள் எவ்வாறு செய்ய உத்தேசித்திருக்கிறீர்கள்?''

''நாங்கள் அதை இன்னும் நிச்சயிக்கவில்லை, நீங்களும் நானும் யோசித்து எவ்வாறு செய்தால் உங்களுக்கு விருப்பம் என்பதைத் தெரிந்துகொண்டு அதே போலச் செய்வோம். உங்கள் விருப்பம் இல்லாமல் ஒரு அடிகூட எடுத்து வைக்கமாட்டோம்.''

"ரொம்ப மகிழ்ச்சி ஐயா, சொல்லுங்கள்."

"நாங்கள் இவ்வளவு தூரம் வந்திருப்பது குடகு நாட்டு மக்களின் நலனை முன்னிட்டு. தாங்கள் அழைத்தால் வருகிறோம். அரச பதவிக்கு வாரிசுதாரர் என்பதை நிர்ணயிப்பதில் தேவையானால் உங்களுக்கு உதவி சேவை செய்கிறோம். புது அரசர் பட்டத்துக்கு வந்து இந்த விவகாரம் சுபமாக முடிந்த பிறகு தங்கள் உத்தரவைப் பெற்றுக்கொண்டு தங்களின் நண்பர்களாக எங்கள் இருப்பிடத்திற்குத் திரும்புவோம்."

"இதற்கு நீங்கள் மடிகேரிக்கு வந்து தான் ஆகவேண்டுமென்கிறீர்களா?"

"உங்களுக்கு விருப்பமில்லையென்றால் நாங்கள் வர வில்லை. தக்க ஏற்பாட்டைச் செய்து விட்டு வந்து எங்களுக்குத் தெரிவியுங்கள். நாங்கள் இங்கிருந்தே திரும்பிச் செல்கிறோம்."

"நல்லது. சிறிது யோசித்து ஒரு நாழிகைக்குள் எனது முடிவைத் தெரிவிக்கிறேன்."

"அடுத்த அரசர் யார் என்பதைப் பற்றி யோசிக்கும் பொழுது தாங்கள் தங்களின் மனத்திலிருப்பவர்களோடு வேறு மூன்று பேர், இல்லாவிட்டாலும் இரண்டு பேரைக் கண்டிப்பாகக் கணக்கில் எடுத்துக்கொண்டே ஆகவேண்டும்."

"யார்?"

"அரசரின் மனைவியாரும் அரசரின் மகளும் இயற்கையாகத் தாங்கள் நினைக்கக் கூடியவர்கள். அரசரின் தங்கை மூன்றாவது. இதைத் தாங்கள் ஒப்புவீர்களோ இல்லையோ; ஒப்பக்கூடும் என்ற அர்த்தத்தில் தான் மூன்று பேர் என்று சொன்னேன். தங்கள் நினைவில் வராமலிருக்கக் கூடியவர்கள் அரசரின் பெரியப்பாவின் மகன் ஒருவன், அரசனின் அண்ணன் ஒருவன்."

"அரசரின் பெரியப்பாவின் மகன், அரசரின் அண்ணன்?"

"அரசரின் பெரியப்பா அப்பாஜி என்று ஒருவர் இருப்பதைத் தாங்கள் அறிந்திருக்கக் கூடும்."

"அரசரின் பெரியப்பா அப்பாஜி இறந்து முப்பது வருஷங்கள் ஆய்விட்டன என்பது எல்லோரும் சொல்லுகிற விஷயம்."

"இருக்கலாம். ஆனால் ஒருவர் தான் தாம் அப்பாஜி என்று சொல்லிக்கொண்டு வந்திருக்கிறார், எங்களுடன் இருக்கிறார்."

"இங்கேயே?"

"இல்லை, அரகல கூடுப் பக்கம் சென்ற தளத்தில் இருக்கிறார். தாங்கள் விரும்பினால் அவரை மடிகேரிக்கு வரவழைக்கிறேன்."

"அவருடைய மகனைப் பற்றியல்லவா தாங்கள் சொன்னது?"

"ஆமாம்."

"மகன் இங்கே இருக்கிறாரோ?"

"இல்லை, மடிகேரியில் தங்களைப் பார்ப்பார்."

"இன்னொருவர் அரசரின் அண்ணன்?"

"ஆமாம்."

"இது எனக்கு மிகவும் ஆச்சரியமான செய்தி. அரசருடன் பிறந்தவர்கள் அந்தத் தங்கை ஒருத்தியைத் தவிர இன்னொருவர் இருப்பதாக நான் கேள்விப்பட்டதே இல்லை."

"ஒரு அண்ணன் இருப்பதாக எங்களுக்குக் கடிதங்கள் வந்திருக்கின்றன. அது சம்பந்தப் பட்ட எல்லா தஸ்தாவேஜுகளையும் நான் கொண்டு வந்திருக்கிறேன். அவசியம் நேரிடும் பொழுது தங்களுக்கு ஒய்வு கிடைத்தால் தங்களுக்குக் காண்பிக்கிறேன்."

"நல்லதையா. ஆனால் இவ்வளவையும் தாங்கள் விசாரிக்க வேண்டுமானால் தாங்கள் மடிகேரியில் இருப்பது தான் நல்லது."

"உங்கள் இஷ்டம். வாருங்கள் என்று அழைத்தால் எனக்கு வருவதற்கு ஆட்சேபணை இல்லை."

"ஆனால் இதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள். எங்கள் அழைப்பின் பேரில் நீங்கள் வருகிறீர்கள். வேலை முடிந்ததும் திரும்பிச் சென்றுவிடவேண்டும்; நமது நட்பைக் காப்பாற்ற வேண்டும்"

"உங்கள் நட்பைவிடப் பெரியது எங்களுக்கு வேறொன்றும் இல்லை. நாங்கள் குடகு நாட்டு மக்களின் நண்பர்களாகவும் சேவகர்களாகவும் தான் வருகிறோம். அவர்கள் சௌக்கியமாக வாழ்கிறார்கள் என்பது நிச்சயமானவுடன் அவர்களின் அநுமதி பெற்றுத் திரும்பிச் செல்வோம்."

"சரி, மற்றபடி வேறொன்றும் இல்லையே?"

"இல்லையென்று தான் தோன்றுகிறது. நமக்கிடையே ஏற்பட்டுள்ள இந்த ஒப்பந்தத்தின் சாராம்சத்தை ஆங்கிலத்திலும் கன்னடத்திலும் பத்து பத்து வாக்கியங்களில் எழுதி அனுப்புகிறேன். துபாஷ் ஆங்கில வாசகமும் கன்னட வாசகமும்

பொருந்துவதாக சாட்சியளிப்பார். ஆங்கில வாசகத்தை ஒப்பி நானும், கன்னட வாசகத்தை ஒப்பி நீங்களும், கையெழுத்துச் செய்வோம். அதன் ஒரு பிரதி தங்களிடமும் ஒரு பிரதி என்னி டமும் இருக்கட்டும்."

"அவசியம் என்றால் செய்யுங்கள் ஐயா."

"அரசியலில் இது வழக்கம். எங்கோ யாரோ பேச்சு வெறும் காற்று தானே என்று சொன்னதால் எழுதிவைப்பது எங்கள் வழக்கம்."

"பேச்சு வெறும் மூச்சு என்பவர்கள் எழுத்து வெறும் மை என்று சொல்லமாட்டார்களா' சரி பரவாயில்லை, செய்யுங்கள்."

152

கர்னல் பிரேசர் மிகவும் புத்திசாலி, சேனையை நடத்துவதில் மட்டுமல்ல; ஜனங்களுடன் விவகாரங்கள் நடத்துவதிலும், ஆட்சி புரிவதிலும் கூட அவன் நன்கு தேர்ந்திருந்தான், நிபுணனாக இருந்தான். தனக்கும் போபண்ணாவுக்கும் இடையே நடந்த பேச்சு வார்த்தையின் முக்கிய விவரங்களை அவன் உடனே பத்து வாக் கியங்களில் எழுதினான்; துபாஷை அழைத்து அதைக் கன்னடத் தில் மொழிபெயர்த்து எழுதச் சொன்னான். கன்னட மொழி பெயர்ப்பை போபண்ணாவுக்கு அனுப்பி தாங்கள் பேச சம்மதித்த விஷயங்கள் அதில் சரியாக எழுதப் பட்டிருக்கின்றனவா என்று தெரிவிக்கும்படி வேண்டினான்.

பேச்சுவார்த்தைகள் விவரம் சரியாகவே குறிக்கப்பட்டிருந்தது. போபண்ணா தன் சம்மதத்தைத் தெரிவித்து அந்தக் கையெழுத் துப் பிரதியைத் திருப்பி அனுப்பினார்.

பிரேசர் துபாஷிடம் அதன் இரண்டு பிரதிகளைத் தயார் செய் யச் சொல்லிவிட்டு போபண்ணாவுக்கு, "நான் மத்தியானம் தங்கள் பாளையத்திற்கு வருகிறேன். நமது ஒப்பந்தப் பிரதி களில் இரண்டு பேரும் ஒரே சமயத்தில் கையெழுத்துச் செய்ய லாம்" என்று சொல்லியனுப்பினான்.

மாலையில் அவன் போபண்ணாவிடம் வந்தான். போபண்ணா அவனை மரியாதையுடன் வரவேற்று முதலில் அவனை உட்காரச்

சொல்லிப் பிறகு தான் உட்கார்ந்து, குடகன் மரியாதையில் ஆங்கிலேயனுக்குச் சற்றும் குறைந்தவனல்ல என்னுமாறு நடந்து கொண்டார். ஒப்பந்தப் பத்திரத்தை குமாஸ்தாவைப் படிக்கச் சொல்லிவிட்டு இருவரும் அதில் கையெழுத்திட்டார்கள். பிரேசர் ஒரு பிரதியை போபண்ணுவுக்குக் கொடுத்து மற்றொரு பிரதியை அவர் கையிலிருந்து தான் வாங்கிக்கொண்டான். இவ்வாறு இவர்களுடைய ஒப்பந்தம் அமுலுக்கு வந்தது.

முக்கியமான காரியம் முடிந்தபிறகு பிரேசர் துரை போபண்ணுவுடன் விசுவாசமாக இரண்டு வார்த்தைகள் பேச உட்கார்ந்தான். "மைசூர் வெகு அழகான நாடு. தான் வந்த வழி முழுவதும் வெகு ரமணீயமான பிரதேசமாகவே இருந்தது. காவேரி கண்ணுக்கு வெகு அழகு; குடகு வெகு சுந்தரமான நாடாகத் தோன்றுகிறது. குடகர்கள் தீரர்கள், சுதந்திரப் பிரியர்கள், பண்புள்ளவர்கள் என்று கேள்விப்பட்டிருக்கிறேன்" என்பது போன்ற விஷயங்களைப் பேசினான். போபண்ணு பேச்சாளியல்ல. ஆனால் இது ஆங்கிலேயர்களின் சம்பிரதாயம் என்பது அவருக்குத் தெரியும். எனவே அவன் சொல்வதையெல்லாம் மரியாதையுடன் கேட்டுக்கொண்டு நாலு வார்த்தைக்கு ஒரு வார்த்தை பதில் சொல்லியபடி சம்பாஷணையை நடக்கவிட்டார்.

153

இவர்கள் இவ்வாறு பேசிக்கொண்டிருக்கும் பொழுது வெளியே லக்ஷ்மீநாராயணய்யாவின் குரல் கேட்டது. போபண்ணு தலை நிமிர்ந்து காது கொடுத்துக் கவனித்தார். அது லக்ஷ்மீநாராயணய்யாவின் குரல் தான் என்பது நிச்சயமானவுடன் பிரேசர் துரையிடம், "ஒரு கணம் உத்தரவு கொடுங்கள், எங்கள் சக மந்திரி வந்திருப்பதாகத் தெரிகிறது. அவரை வரவேற்க வேண்டும்" என்று கூறி எழுந்து வாசலுக்குச் சென்றார்.

லக்ஷ்மீநாராயணய்யா அப்பொழுது தான் குஷால நகரம் வந்து சேர்ந்து போபண்ணுவின் விடுதிக்கு வந்திருந்தார். போபண்ணுவைப் பார்க்கவேண்டுமென்று அவர் சிப்பந்தியிடம் தெரிவிக்க அவன், "ஆங்கில கர்னல் வந்திருக்கிறார். மந்திரியவர்கள்

அவரோடு பேசிக்கொண்டிருக்கிறார்" என்று சொல்லிக கொண்டிருந்தான்.

ஆங்கிலேய கர்னல் போபண்ணவின் விடுதிக்கு வருமளவு பேச்சுவார்த்தைகள் நடந்திருக்கக் கூடுமென்று லக்ஷ்மீ நாராயணய்யா நினைத்திருக்கவில்லை. அது தெரிந்ததும் அவருக்கு 'திக்' கென்றது; தான் அரசனிடமிருந்து கொண்டுவந்த செய்தி பலனற்றுப்போய்விட்டது என்று அவர் உணர்ந்தார்.

லக்ஷ்மீநாராயணய்யாவைப் பார்த்ததுமே போபண்ண, "நமஸ்காரம், ஐயா அவர்களே, வாருங்கள்" என்றார். அவர் அருகில் வந்ததும், "கர்னல் துரை வந்திருக்கிறார்; தாங்களும் அவரைப் பார்க்கலாம்" என்றார்.

"அதற்கு முன்னால் நானும் நீங்களும் இரண்டு வார்த்தை பேச வேணடுமே, போபண்ண?"

"அப்படியானால் அவரை அனுப்பிவிடட்டுமா?"

"அனுப்பிவிடுங்கள். நாம் பேசியபிறகு தேவையானால் நாமே அவரிடம் போவோம்."

"சரி; அவரிடம் சொல்லிவிட்டு வருகிறேன்."

என்றிவ்வாறு கூறிவிட்டு போபண்ண பிரேசரிடம் சென்று, "தாங்கள் எனக்குச் சிறிது அவகாசம் தரவேண்டும். தங்கள் கூடாரத்தில் இருந்தால் நானே வந்து பார்க்கிறேன்", என்று கூறிவிட்டு மறுபடியும் லக்ஷ்மீநாராயணய்யாவிடம் வந்தார். பிரேசர் தனது விடுதிக்குத் திரும்பிச் சென்றான்.

154

"நீங்கள் இங்கே வருவீர்களென்று நான் எதிர்பார்க்கவில்லை," என்றார் போபண்ண. லக்ஷ்மீநாராயணய்யா நடந்த சங்கதிகளையெல்லாம் எடுத்துச் சொன்னார். போபண்ண எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டு, "என்னை இதயமற்றவன் என்று நினைக்காதீர்கள், ஐயா. ராணியின் பேரில் எனக்குக் கருணை உண்டு. நீங்களும் அரசரும் சொல்லுகிற ஒரு விஷயத்திற்கு நான் சம்மதிக்கமாட்டேன்," என்றார்.

"அரசரின் விஷயமாக உங்களுக்கு எவ்வளவு வெறுப்போ எனக்கும் அவ்வளவே வெறுப்புதான் போபண்ணா. ஆனால் இனி அதற்குத் தேவையில்லை பாருங்கள். அரசர் பட்டத்தைத் துறக்கச் சம்மதித்திருக்கிறார்; மகள் பட்டத்திறகு வரட்டும் என்று கூறியிருக்கிறார். இதற்கு நாம் சம்மதித்து வெள்ளையர்களைத் திருப்பி அனுப்ப வேண்டுமென்று விரும்புகிறார். இப்படிச் செய்துவிட்டால் தொல்லையெல்லாம் தீர்ந்துவிடுமே."

"அவர் பதவியைத் துறக்கலாம், அவ்வளவுதான்; மகளுக்குப் பதவியைக் கொடுக்க அவருக்கு அதிகாரம் இல்லை. பெரியவர்கள், தலைவர்கள் எல்லோரும் சம்மதித்து அல்லவா அது நடக்க வேண்டும்?"

"அது சரி."

"பாருங்கள் ஐயா, சென்ற வருடம் அல்லது ஆறு மாதங்களுக்கு முன்னால் அல்லது எட்டு நாட்களுக்கு முன்னால் அரசர் இந்தப் பேச்சைச் சொல்லியிருந்தால் நான் சம்மதித்திருப்பேன். அப்பொழுது அவர் பேருக்காவது அரசராக இருந்தார். இப்பொழுது இவரது ஸ்தானம் என்ன?"

"சரி; அவர் சொன்னாரென்பதற்காக வேண்டாம்; நமக்கு வேண்டுமென்பதற்காகவே இதைச் செய்யலாமல்லவா?"

"ஏதும் தடையில்லை. ஆனால் இது அரசரின் ஆக்ஞை என்கிற பேச்சு வேண்டாம். அரசராக இருந்தவர் பட்டத்தைவிட்டு விலகியாயிற்று. இனி யார் அரசர், குடகுக்கும் கும்பணிக்கும் என்ன உறவு இவையெல்லாம் அரசருக்குச் சம்பந்தமில்லாதவை. இந்தப் பேச்சையெல்லாம் அவர் விட்டுவிடவேண்டும்."

"தன் மனத்திலுள்ளதை உங்களுக்குத் தெரிவித்து வெள்ளையர்களோடு பேசி அவர்களைத் திருப்பி அனுப்பச் சொல்லி அரசர் சொன்னார். நீங்கள் 'அவர் மனத்திலுள்ளது எனக்கு வேண்டாம்' என்று சொல்லுகிறீர்கள்."

"எங்கே ஐயா, இன்னொரு முறை சொல்லுங்கள்; அரசர் தன் மனத்திலுள்ளதை உங்களிடம் சொன்னபோது அதை எனக்குத் தெரிவித்துப் பிறகு வெள்ளையர்களிடம் தெரிவிக்கச் சொன்னாரா?"

லக்ஷ்மீநாராயணய்யா பதில் பேசவில்லை. போபண்ணாவின் முகத்தைப் பார்த்துக்கொண்டு பேசாமல் உட்கார்ந்திருந்தார்.

"எனக்குத் தெரிவிக்கச் சொல்லி அரசர் சொல்லவில்லை. அவருக்குச் சப்பைக்கட்டு கட்டுவதற்காக நீங்கள் இப்படிச் சொல்லுகிறீர்கள்."

"உங்களுக்குச் சொல்லச் சொல்லி ஸ்பஷ்டமாகச் சொல்ல வில்லை யென்றாலும் அவருடைய கருத்து அதுதான்."

"பாருங்கள் ஐயா, என் மனமும் உங்கள் மனமும் ஒன்று; ஆனால் நமது எண்ணங்கள் ஒன்றல்ல. நீங்கள் நினைத்திருக்கிறீர்கள் குடகு அரசருடையது என்று. நான் சொல்லுகிறேன் குடகு நம்முடையது என்று. மரியாதைக்காக உங்களைப் போன்றவர்கள் சொல்லுகிற பேச்சைக் கேட்டுக்கொண்டு அரசர் குடகு தன்னுடையதென்று கூத்தாடினார். அந்தக் கூத்தாட்டம் இனி முடிந்துவிட்டது. இனி அரசனாக இருந்த அவர் வெளிப்படையாகவோ, மறைமுகமாகவோ போபண்ணாவுக்குச் சொல் என்று சொல்லவேண்டாம். இவர் சொல்லவில்லை என்பதற்காக நான் நமது ஜனங்களின் கதி என்ன என்று கவனிக்காமல் இருக்கப் போவதில்லை."

போபண்ணா சாதாரணமாக ஒரு மூச்சில் இவ்வளவு பேசக் கூடியவரல்ல. இந்தப் பேச்சைக் கேட்ட லக்ஷ்மீநாராயணய்யா இனி பேசிப் பயனில்லை என்று கண்டுகொண்டார். பேசாமலிருந்துவிட்டார்.

155

பேச்சை முடித்துக்கொண்டு இருவரும் கர்னல் துரையின் கூடாரத்திற்குச் சென்றனர். போகும்போது வழியில் போபண்ணா லக்ஷ்மீநாராயணய்யாவிடம், "அப்பாஜியும் அவர் மகனும் இந்த வெள்ளைக்கார அதிகாரிகளைப் பார்த்திருக்கிறார்களாம். அப்பாஜி அரகலகூடு மார்க்கத்தில் வரும் தளத்துடன் வருகிறாராம்" என்றார். லக்ஷ்மீநாராயணய்யா, "சந்தோஷம். ஆனால் ஜனங்கள் அவர்களை ஏற்றுக்கொள்வதுதான் கஷ்டம். முப்பது வருஷங்களுக்கு மேல் நாட்டுக்கு வெளியே இருந்துவிட்ட அவர்களை அறிந்தவர்களே குறைவு; இனி, வேண்டும் என்பவர்கள் யார் இருக்கப்போகிறார்கள்?" என்றார். போபண்ணா, "நமது அரசருக்கு யாரோ ஒரு அண்ணன் இருப்பதாக இவர்களுக்கு

எழுதியிருக்கிறார்களாம். அவனைக் காட்டுவதாகவும் சொல்லியிருக்கிறார்களாம்," என்றார். லக்ஷ்மீநாராயணய்யா, "எனக்குத் தெரிந்து அப்படி யாரும் இல்லை. யார் யாரை சிருஷ்டித்துக் கொண்டு வரப்போகிறார்களோ! வரட்டும் பார்ப்போம்," என்றார். போபண்ணா, "நானும் துரையிடம் அப்படித்தான் சொன்னேன்," என்றார்.

பிரேசர் துரையின் விடுதியை அடைந்து போபண்ணா, துரைக்கு லக்ஷ்மீநாராயணய்யாவை அறிமுகப்படுத்தினார். கர்னல் எழுந்து நின்று லக்ஷ்மீநாராயணய்யாவுக்குக் கைகூப்பி, "உட்காருங்கள்" என்றான்.

எல்லோரும் உட்கார்ந்தார்கள். க்ஷேம சமாசாரங்கள் விசாரிக்கப்பட்டன. போபண்ணா, "நமது ஐயா அவர்கள் ஒப்பந்தப் பத்திரத்தைப் பார்வையிடுகிறார்" என்று கூறி தனது பிரதியை லக்ஷ்மீநாராயணய்யாவிடம் கொடுத்தார். லக்ஷ்மீநாராயணய்யா ஒப்பந்தத்தைப் படித்தார். "இதை இப்பொழுது ஒன்றும் மாற்ற முடியாதல்லவா?" என்று கேட்டார்.

போபண்ணா, "ஒப்பந்தம் உங்களுக்குச் சரி என்று தோன்றவில்லையா ஐயா?" என்று கேட்டார்.

"ஒரு விஷயம் எனக்குப் புரியாமலிருக்கிறது, போபண்ணா."

"என்ன விஷயம்?"

"இப்பொழுது அரசர் செய்யவேண்டியது என்ன என்பது."

"ஒன்றும் செய்யவேண்டாம். பேசாமல் வரவேண்டும்; நாங்கள் சொல்கிறபடி கேட்கவேண்டும்."

"வருவாரா, போபண்ணா?"

"வரவேண்டாம்; நாங்கள் பிடித்து அழைத்து வருவது."

"நம்முடைய ஆட்கள் அதைச் செய்வார்களா?"

"நம்முடைய ஆட்கள் சென்றால் மரியாதையாக இருக்கும் இல்லாவிட்டால் வெளி ஆட்களை அனுப்பவேண்டியதுதான், ஐயா."

"இவ்வளவு கடினசித்தமுடையவராக இருந்தால் எப்படி போபண்ணா?"

"நான் ஏற்கனவே சொல்லியிருக்கிறேன், ஐயா; நம்மிருவருடைய மனதும் ஒன்று. ஆனால் எண்ணங்கள் வேறு என்று. நான் செய்வது தப்பு என்று தோன்றினால் அப்படிச் சொல்லுங்

கள். நானும் யோசிக்கிறேன். தவறென்று பட்டால் திருத்திக் கொள்கிறேன். தவறென்று எனக்குத் தோன்றுவிட்டால், எனக்குத் தோன்றியபடி செய்யவேண்டியதுதான். சரி என்று நீங்கள் பேசாமலிருக்கவேண்டியதுதான். என்மீது கோபித்துக்கொள்ளக் கூடாது."

லக்ஷ்மீநாராயணய்யா வேறு வழி இல்லாமல் பேசாமல் இருந்தார்.

"குடகு உங்களுடையது போபண்ணா, அதை அங்கியர்களுக்குக் கொடுக்கலாம்," என்றார்.

156

நீமது தூது பயனற்றுப் போய்விட்டது, தாம் சென்று அரசருக்குத் தெரிவிப்பதற்கு ஒன்றுமில்லை என்று லக்ஷ்மீநாராயணய்யாவுக்குத் தோன்றியது. அவர் போபண்ணாவின் அநுமதியைப் பெற்றுக்கொண்டு மடிகேரிக்குத் திரும்பினார். உடனே ராணிக்கும் அரசனுக்கும் தன்னால் செய்யக்கூடியது இனி ஏதும் இல்லை என்றும் எனவே தான் பேசாமலிருப்பதாகவும் சொல்லியனுப்பினார். அவராக வராமலிருந்ததால் அவருக்குத் தன்னை வந்து காண இஷ்டமில்லையென்று அறிந்துகொண்டு ராணி அத்துடன் விட்டு விட்டாள். அவர் சொல்லியனுப்பிய செய்தி பசவனின் மூலமாகத் தெரிந்தபொழுது அரசன், "என்ன சமாச்சாரம் எனபதைத் தானே வந்து சொல்லாமல் சொல்லியனுப்பினானே அந்தப் பார்ப்பான்" என்று வெருண்டு கூச்சல் போட்டான்

லக்ஷ்மீநாராயணய்யா திரும்பிய மறுநாள் கர்னல் பிரேசர் தனது படையை குஷாலநகரத்துக்குள் நடத்திக்கொண்டு வந்தான். அன்று மத்தியான்னம் அந்தப் படையும் போபண்ணாவின் படையும் ஜோடியாக மடிகேரிக்குப் புறப்பட்டன. அன்று மாலை வேளைக்கு அரைவழி நடந்து மறுநாள் காலையில் பாக்கி வழி நடந்து மத்தியான்னம் மடிகேரியை வந்தடைந்தன

போபண்ணா முதலில் சொல்லி அனுப்பி அந்தப் பிரயாணத்துக்கு வேண்டிய சௌகரியங்களை ஏற்படுத்திக்கொண்டிருந்தார். வழியிலுள்ள ஊர்களில் ஜனங்கள் ஆங்காங்கே நின்றுகொண்டு

குழந்தையைத் தேடிக் கொண்டுவர சோமனை சம்பாஜெ பக்கம் அனுப்பிவிட்டு சென்ன பசவய்யன் மனைவியுடன் குறித்த காலத்தில் சுள்யத்திற்கு வந்து சேர்ந்தான். இந்தப் பிரயாணம் முடிவதற்குள்ளாக தேவம்மாஜி முழுவதும் சோர்ந்து போய்விட்டாள். அப்பங்கொளத்திலிருந்து இரவோடு இரவாகப் புறப்பட்டு தூக்கமில்லாமல் இவ்வளவு தொலைவு வந்த பிரயாசையோடு குழந்தையை இழந்துவிட்ட துக்கமும் சேர்ந்து அவளை ஒடுக்கிவிட்டது. இதனால், குழந்தை அகப்பட்டு சோமன் திரும்பி வந்து தம்மோடு சேர்ந்து கொள்வதானால் அநுகூலமாக இருக்கட்டு மென்று சென்ன பசவய்யன் அன்று மாலை வரை சுள்யத்திலேயே தங்கியிருப்ப தென்று முடிவு செய்தான்.

ஊர் மணியகாரர் யார் என்று விசாரித்து அவரைச் சந்தித்து தான் யார் என்பதை ரகசியமாக அவருக்குத் தெரிவித்து தங்கு வதற்கு வேண்டிய ஏற்பாடுகளை சென்ன பசவய்யன் செய்து கொண்டான். சோமன் வந்தால் அவனைத் தடுத்து விறுத்துவதற் காகச் சிறிது நேரம் துக்ரன், சிறிது நேரம் உக்ரி வழியில் நின்று பார்த்துக் கொண்டிருக்கச் செய்தான்.

வெகு நேரமாகியும் சோமன் வரவில்லை. ஆனால் சம்பாஜெயி லிருந்து வாடிக்கையாக வரும் மாட்டு வண்டிக்காரர்கள் கொண்டு வந்த செய்தி ஊரிலெங்கும் பரவியது. இவர்கள் காதிலும் விழுந்தது.

விடியற்காலையில் சம்பாஜெ எல்லையில் வழியருகேயுள்ள புதர் ஒன்றில் கொக்கனின் மனைவி ஒரு குழந்தையைக் கண்டெடுத் தாள்; அவளும் அவள் புருஷனும் அதை மணியகாரரிடம் எடுத் துச் சென்றார்கள்; அதே சமயத்தில் காவல் சாவடியின் அதிகாரி யிடம் அப்பங்கொளத்து ஆள் ஒருவன் அகப்பட்டுக்கொண்டான்; குழந்தை அப்பங்கொளத்ததாக இருக்கவேண்டும், அவன் அதைத் திருடிக்கொண்டு வந்திருக்கவேண்டும் என்று மணிய காரரும், காவல் தலைவனும் அவனையும் குழந்தையையும் அப்பங் கொளத்துக்கு அனுப்பியிருக்கிறார்கள் என்பதுதான் அச் செய்தி.

லக்ஷ்மீநாராயணய்யா, "ஒரு கணம் கழித்து வருகிறேன். மந்திராலோசனை நடக்கட்டும். போபண்ணாவின் தீர்மானமே என் தீர்மானமும் என்று தெரிவியுங்கள்" என்று பதில் அனுப்பினார். இரண்டு நாழிகை கழித்து அவர்களிருந்த இடம் வந்து சேர்ந்தார்.

அதற்குள்ளாக அவர்கள் ஒரு முடிவுக்கு வந்துவிட்டிருந்தனர். பிரேசர் கும்பணி சர்க்காரின் பிரதிநிதியாக ஒரு பிரகடனத்தை வெளியிடவேண்டியது. "குடகின் மன்னர் வீர ராஜேந்திரர் நாட்டின் அரசாட்சியை நல்ல முறையில் நடத்தாமல், தாமும் துஷ்டராக நடந்துகொண்டு, பிரஜைகளைக் கொடுமைப்படுத்தி, அநேக கொலைகளைச் செய்து, ஆங்கிலேயர்களின் தூதுவர்களைச் சிறையிலடைத்து, கும்பணி சர்க்காரை அவமானப்படுத்தியதால் அவருக்குத் தக்க பாடம் கற்பிப்பதற்காக நாம் இங்கே படையுடன் வரவேண்டியதாயிற்று. அரசரால் கொடுமைக்காளானவர்கள் நம்மிடம் புகார் கொண்டு வந்தார்கள். அவர்களது புகார்களை ஸ்தலத்திலேயே விசாரிக்கவேண்டுமென்பது நமது நோக்கம். நாம் இங்கே வந்ததுமே உங்கள் நாட்டுத் தலைவர்களெல்லாம் சேர்ந்து வீரராஜேந்திரனைப் பட்டத்திலிருந்து விலக்கியிருப்பதை அறிந்து கொண்டோம். இது விஷயமாக இனி நாம் செய்யவேண்டியது ஏதும் பாக்கியில்லை. குடகின் ஜனங்கள் புதிதாக ஒருவரை அரசராக நியமிக்கவேண்டியதிருக்கிறது. எப்படியும் நாம் இங்கே வந்திருப்பதால் இந்தக் காரியத்தில் உங்களுக்கு உதவ விரும்புகிறோம். இந்தப் பட்டத்திற்கு உரியவர்கள் தாங்கள் தான் என்று சிலரிடமிருந்து கும்பணி சர்க்காருக்குக் கடிதங்கள் வந்துள்ளன. அவை பற்றியும் நாங்கள் பகிரங்கமாக உங்கள் தலைவர்களின் முன்னிலையில் எடுத்துச் சொல்லுகிறோம். குடகின் மக்கள் சுகமாக இருக்கவேண்டும் என்பதே எங்களது அபிலாஷை. இதை எப்படி சாத்தியமாக்குவது என்பதை குடகு மக்களே தான் தீர்மானிக்கவேண்டும். இது கும்பணி சர்க்காரின் விருப்பம்." இது அதன் சாராம்சம்.

ஆங்கில சேனை வந்ததென்று கேள்விப்பட்டு பயந்து நாலுகாடு அரண்மனைக்குப் போயிருக்கும் வீரராஜருக்கு, "குடகின் நாட்டுத் தலைவர்கள் உங்களை ஆட்சி பீடத்திலிருந்து விலக்கியிருக்கிறார்கள். நீங்கள் உடனே வந்து எங்களைச் சரணடையவேண்டும்," என்று செய்தி அனுப்பவேண்டும். செய்தி கொண்டு செல்லும் சிப்பந்தியுடன் ஐம்பது குடகுப் படைவீரர்களும் ஐம்பது

கும்பணிப் படைவீரர்களும் செல்லவேண்டும். அரசர் உடன் பட்டால் அவரை அழைத்து வரவேண்டியது. முரண்டு பிடித்தால் சண்டை செய்து கைதாக்கிக்கொண்டு வரவேண்டியது.

ராணியவர்களுக்கும், ராஜகுமாரிக்கும் பிரியமான வார்த்தைகளைச் சொல்லவேண்டியது. நாங்கள் ஒரு கேட்டையும் விளைவிக்க மாட்டோம், கவலைப்பட வேண்டிய தேவை இல்லை, என்று நம்பிக்கையூட்டவேண்டும்.

மறுநாள் காலை நாட்டுப் பிரமுகர்களின் சபை நடைபெறவேண்டும். புது அரசரைத் தேர்ந்தெடுக்கும் விஷயமாக ஆகவேண்டிய வைகளைக் கவனிக்க வேண்டியது.

தற்சமயத்திற்குச் செய்யவேண்டியவை இவைதான். அதைக் குறித்துக் கொள்ளும் வேளைக்கு லக்ஷ்மீநாராயணய்யா வந்து சேர்ந்தார். இந்த நடவடிக்கைகளெல்லாம் தமக்குச் சம்மதம் என்று தெரிவித்தார்.

இதன் பிறகு ஒரு நாழிகை நேரத்திற்குள்ளாக குடகின் சேனையிலிருந்து ஐம்பது பேர் கொண்ட ஒரு படையும், கும்பணிச் சேனையின் ஐம்பது பேர் கொண்ட ஒரு படையும் லெப்டினண்ட் கர்னல் ஜாக்சன் என்பவனின் தலைமையில் நால்குநாடு அரண்மனையை நோக்கிப் புறப்பட்டன. குதிரைகளுக்கும் ஆட்களுக்கும் பிரயாசை ஏற்படாவண்ணம் மெதுவாக நடந்துசென்று, இரவில் நடுவழியில் தங்கி, மறுநாள் அதிகாலையில் எழுந்து மீண்டும் நடந்து, மத்தியானத்திற்குள்ளாக நால்குநாடு அரண்மனையின் முன்னால் வந்து நின்றன.

157

பிரேசர் துரையின் பிரகடனம் மடிகேரியின் ஜனங்களுக்கு மிகவும் பிடித்திருந்தது. பலபேர் ஒருவரோடொருவர் அதைப் பற்றி மெச்சிப் பேசிக்கொண்டார்கள்: "இந்தக் கும்பணியார் எவ்வளவு பெருந்தன்மையானவர்கள். படையுடன் வந்திருக்கிறார்கள். மிரட்டினாலும் விரட்டினாலும் எதிர்ப்பவர்கள் இல்லை. இருந்த போதிலும் எவ்வளவு மரியாதையுடன் நடந்துகொள்கிறார்கள்!" என்பதுதான் அவர்களின் பேச்சின் சாரம்.

இரவு இவ்வாறு கழிந்தது. விடிந்தது. குடகின் தலைவர்கள், பேட்டை செட்டிகளின் எஜமானர்கள், ஊரின் பெரியவர்கள் முதலியவர்கள் அரண்மனைக் கருகிலுள்ள மைதானத்தில் கூடத் தொடங்கினர்.

சபை பத்து நாழிகைக்கு ஆரம்பிக்கவேண்டும். கர்னல் துரை அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருந்தான்.

ஒரு ஆள் வந்து அவனிடம், "யாரோ ஒரு ஸ்திரீ உங்களைக் காணவேண்டுமென்று வந்திருக்கிறாள்," என்று தெரிவித்தான். துரை, "உட்காரச் சொல், வந்து விட்டேன்" என்றான்; இரண்டு நாழிகைகள் கழித்து வெளியே வந்தான்.

பார்க்க வந்திருந்த ஸ்திரீ பகவதி. அவள் நின்று கை கூப்பினாள். அப்போது துபாஷ் ஒரு அறையிலிருந்து வெளியே வந்தான். துரையின் அருகில் வந்து நின்று கொண்டான். "என்ன சொல்லவேண்டும், சொல்லுங்கள்" என்று பகவதியிடம் கூறினான்.

பகவதி, "என்னை இங்கே எல்லோரும் பகவதி என்று அழைக்கிறார்கள். நான் கர்னல் துரைக்குத் தெரிவிக்கவேண்டிய சங்கதி ஒன்று இருக்கிறது. அதைத் தெரிவிக்கத்தான் வந்தேன்," என்றாள்.

பிரேசர்: "சந்தோஷம்; சொல்லுங்கள்."

"நான் யார் என்பதை உங்களுக்கு இன்னும் கொஞ்சம் விவரமாகத் தெரிவிக்கவேண்டும். பெங்களூர் துரைக்கு ஏற்கனவே சில கடிதங்கள் கிடைத்திருக்கும். லிங்கராஜருக்கு ஒரு பெரிய மகன் இருப்பதாகவும் இப்பொழுது இருக்கும் அரசனைவிட அவனுக்கே குடகின் பட்டத்திற்கு வர அதிக உரிமை உண்டென்றும் அந்தக் கடிதங்களில் சொல்லப்பட்டிருக்கிறது."

"ஆமாம்."

"அந்தக் கடிதங்களை எழுதியவள் நான் தான்.

"அப்படியா? சந்தோஷம். இந்த விஷயமெல்லாம் இப்போது நடக்கப்போகும் சபையில் விவாதத்திற்கு வரும். இதைத் தாங்கள் அங்கே சொல்லுங்கள்."

"சொல்லுகிறேன். ஆனால் என்னை அறிமுகப்படுத்திக் கொள்வதற்காக இதை இங்கே சொன்னேன்."

"சரி."

"நீங்கள் அரசரைப் பிடித்து வருவதற்காக ஆட்களை அனுப்பியிருக்கிறீர்களாம். அங்கே செய்ய வேண்டிய வேலையைக் குறித்து நான் ஒரு அபிப்ராயம் சொல்லவேண்டும் என்று தோன்றுகிறது."

"அவசியம் சொல்லுங்கள்."

"அரசர் சம்மதித்து உங்களை சேனையோடு வந்தால் சரி. அநேகமாக வரமாட்டார். எதிர்ப்பார். உங்கள் படை அரண்மனையை முற்றவேண்டிவரும். அதற்கு நீங்கள் அனுப்பியிருக்கும் படை வீரர்கள் போதாது."

"தாங்கள் மிகவும் அறிவாளியாகக் காணப்படுகிறீர்கள். இப்பொழுது எத்தனை வீரர்கள் போயிருப்பதாகத் தாங்கள் நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள்?"

"சுமார் நூறு பேர். இன்னொரு நூறு பேராவது போகவேண்டும். அப்படியிருந்தாலும் அரசர் சுலபத்தில் கைக்குக் கிடைக்க மாட்டார். சுபாவத்திலேயே அவர் பிடிவாதக்காரர். அரண்மனையிலிருந்து தப்பி ஓடி காட்டுக்குள் நுழைந்துகொண்டு உங்களை அலைக்கழிப்பார் இவ்வாறு அவர் தப்பித்துக் கொள்ளாமல் ஏற்பாடு செய்யவேண்டும்."

"என்ன செய்யவேண்டும்? உங்கள் அபிப்ராயத்தைச் சொல்லுங்கள். அவசியம் செய்கிறேன்."

"நால்கு நாடு அரண்மனையில் அரசரின் படுக்கையறையிலிருந்து பக்கத்திலுள்ள காட்டிற்கு ஒரு சுரங்கப்பாதை இருக்கிறது. முற்றுகை பலமாகி, தப்புவது கடினம் என்று தோன்றினால் அரசர் இந்த மார்க்கமாகத் தப்பிச் செல்லக்கூடும் நீங்கள் சுரங்கத்தின் வெளி வாயிலுக்கு ஆட்களை அனுப்பி அவர் அங்கே வந்தால் பிடித்துக்கொள்ள ஏற்பாடு செய்யவேண்டும்."

"சுரங்கத்தின் வெளி வாயில் எங்கிருக்கிறதென்று தாங்கள் எனக்குத் தெரிவிக்க முடியுமா இப்பொழுது?"

"ஆஹா, நிலத்தில் அடையாளம் போட்டுக் காண்பிக்கிறேன். உங்கள் ஆள் அதைப் புரிந்துகொள்ளட்டும்."

"மிகவும் நன்றி பகவதியவர்களே; நான் தங்களுக்கு எவ்வளவு நன்றி செலுத்தினாலும் தகும். நாங்கள் வந்திருக்கிற வேலை முடிந்ததும் தாங்கள் செய்யும் இந்த உபகாரத்திற்கு தகுந்த முறையில் தாங்கள் விரும்பும் பிரதியுபகாரம் செய்ய முயற்சிப்போம்."

"நான் வேறொன்றையும் விரும்பவில்லை. இப்பொழுது இருக்கும் அரசரின் அண்ணன் அரசனாகட்டும் என்பது ஒன்றேதான் என் அபிலாஷை."

துரைக்கு இந்த சமயத்தில் ஒரு கேள்வி கேட்க வேண்டுமென்ற ஆசை உண்டாயிற்று. "அவனுக்குத் தாங்கள் ஏதாவது உறவா?" உதடு வரையில் வந்து விட்ட இந்தக் கேள்வியை அவன் கேட்கவில்லை. வெறுமே 'நல்லது' என்றான்.

"அரசருடன் அவரது மந்திரி பசவய்யன் என்பவன் இருக்கிறான். உங்கள் ஆட்கள் அவர்கள் இருவரையும் பிடித்துக் கொண்டு வரவேண்டும். அவர்களில் எவருக்கும் ஏதும் கேடு விளைவிக்கக்கூடாது. இருவரையும் க்ஷேமமாக இங்கே கொண்டு வருமாறு தாங்கள் ஏற்பாடு செய்யவேண்டும்."

இந்த வேண்டுகோளின் அடிப்படையான அவளது மனநிலை துரைக்குப் புரியவில்லை. அரசன் இவளுக்கு வேண்டாதவன் அவனுக்குக் கேடு விளைந்தால் இவளுக்கு என்ன? அவன் இங்கே க்ஷேமமாக வரவேண்டுமென இவள் விரும்புவானேன்?

இந்த வேண்டுகோள் ஒருக்கால் மந்திரியைப் பற்றியதாக இருக்கலாம். அவன் இவளுக்கு வேண்டியவனாக இருக்கலாம். இவளுடைய அன்பனாக இருக்கலாம். இந்த ஸ்திரீ அழகி இவளுக்கு ஒரு காதலன் இருந்தால் ஆச்சரியப்படுவதற்கில்லை. இதை வாய்விட்டுச் சொல்லமுடியாது. துரை ஒரு கடிதத்தையும் ஒரு பென்சிலையும் வர வழைத்து அவள் கையில் கொடுத்து, "அரண்மனை வாசல் எந்தப் பக்கம் இருக்கிறது, சுரங்கம் எந்தப் பக்கம் இருக்கிறது, குறிப்பிட்டுத் தாருங்கள்," என்றான். பகவதி அவ்வாறே செய்தாள். துரை, "மிகவும் உபகாரம் செய்தீர்கள். தாங்கள் எங்களுக்குத் தெரிவிக்கவேண்டிய விஷயம் இன்னும் ஏதாவது உண்டா?" என்றான். "வேறொன்றும் இல்லை. நான் தேவி உபாசகள். இந்த சந்தர்ப்பத்தில் அரசர் உங்கள் கைகளில் கிடைக்கவேண்டியது சரி. ஆனால் அவரது உயிருக்கு ஆபத்து ஏற்படக்கூடாது: அவருக்கு அடிகூடப் படக்கூடாது. அப்படி ஏதாவது நேரிட்டால் அது நான் அனுஷ்டித்து வரும் விரதத்திற்குப் பங்கமாகும். ஆகையால் அவருக்கோ அவரது மந்திரிக்கோ அபாயம் நேரிடாதபடி பார்த்துக் கொள்ளவேண்டும்; இது என்னுடைய விசேஷ வேண்டுகோள்."

"நல்லது பகவதியவர்களே. அதை நான் பார்த்துக் கொள்கிறேன்."

பகவதி விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டாள். துரை ஒரு சேவகனை அழைத்து போபண்ணுவுக்கு ஒரு சிறு கடிதம் எழுதி யனுப்பினான். "நால்கு நாடு அரண்மனைக்கு இன்னும் சில படை வீரர்களை அனுப்புவது நல்லதென்று ஒரு அபிப்ராயம் வந்திருக்கிறது. எங்கள் ஆட்கள் ஒரு பட்டாளம் புறப்படுகிறது; நாங்களும் ஒரு பட்டாளம் அனுப்பினால் நல்லது. நன்றாக வழி தெரிந்தவர்களாக இருக்கவேண்டும்." போபண்ணு உடனே பதில் அனுப்பினார். ஒரு படைத் தலைவனும் ஐம்பது குடகர்களும் ஒரே நாழிகையில் துரையின் பங்களாவுக்கு எதிரில் வந்து நின்றனர்.

சிறிது நேரத்திற்கெல்லாம் காப்டன் கார்பெண்டர் என்னும் அதிகாரியின் தலைமையின் கீழ் இந்தப் புதுப் பட்டாளம் நால்கு நாடு அரண்மனையை நோக்கிப் புறப்பட்டது.

158

லக்ஷ்மீநாராயணய்யா தாமே வராமல் செய்தியை மாத்திரம் அனுப்பினாரே என்று கோபம் கொண்டு இரவைக் கழித்த வீர ராஜன் காலையில் எழுந்து வெளியே வரும் வேளைக்கு மடிகேரியிலிருந்து ஒரு படை வருகிறது என்பது தெரிய வந்தது. இதற்கு முன்னரே பசவன் சுற்றுப் புறமுள்ள கிராமங்கள் மூன்றிற்குச் சொல்லியனுப்பி ஒரு இரு நூறு ஆட்களைத் தயாராக வரவழைத்து வைத்திருந்தான். படை வந்து கொண்டிருப்பது நல்லதற்கல்ல என்பதை அறிந்துகொண்ட அவன் இந்த ஆட்களை அரண்மனையின் சுற்றுச் சுவரின் உட்புறம் நிறுத்தி வைத்தான்; தான் செய்திருக்கும் ஏற்பாட்டை அரசனுக்குத் தெரிவித்தான். வீரராஜன் சுபாவத்தில் பேடியல்ல: வாலிபத்தில் அவன் யானைகளையும் புலிகளையும் கொன்றவன். ஆனால் இப்போது பல காரணங்களினால் அவனது சக்தி ஒடுங்கிப் போயிருந்தது. பசவன் சொன்னதைக் கேட்டு அவன் முகம் விகாரமடைந்தது. அவன், "மருந்தும், குண்டும், துப்பாக்கியும் இருக்கிறதா?" என்று கேட்டான்.

"பயமில்லை அரசே. நம்மவர்கள் நன்றாகக் குறி பார்த்து சுடக் கூடியவர்களாகவும் இருக்கிறார்கள். தேவையானால் ஒரு நாள், இரண்டு நாள் கூடப் போரிடலாம்."

"சரி பார்ப்போம்; யார் வருகிறார்கள் என்று தெரியட்டும்."

சிறிது நேரத்திற்கெல்லாம் படை காணப்பட்டது; அதை நடத்திக்கொண்டு வந்தவன் ஒரு ஆங்கில அதிகாரி.

சைன்னியத்தை சிறிது தூரத்திலேயே நிறுத்திவிட்டு ஆங்கிலேயன் ஒரு ஆளின் கையில் ஒரு வெள்ளைக் கொடியைக் கொடுத்து, "அரண்மனையிலிருந்து யாராவது வரவேண்டும்; பேசவேண்டிய விஷயம் இருக்கிறது" என்று சொல்லியனுப்பினான்.

பசவன் அரண்மனையிலிருந்து ஒரு சிப்பந்தியை அனுப்புவித்தான். அவன் ஆங்கிலேயனுடன் பேசிவிட்டு வந்து, "பெங்களூரிலிருந்து வந்திருக்கும் படையாம், கர்னல் துரை மடிகேரிக்கு வந்திருக்கிறதாம், அரசர் தாமாகவே மடிகேரிக்கு வந்து புகலடைந்தால் சரி, இல்லாவிட்டால் பிடித்துக்கொண்டு வாருங்கள், என்று படையை அனுப்பியிருக்கிறாராம்," என்றான்.

இதைக் கேட்டவுடன் அரசனுக்குக் கோபமும் ஆங்காரமும் பொங்கின. அவன், "அட இவர்களின் திமிரே! என்ன கொழுப்புப் பேச்சு! போய்ச் சரணடையவேண்டும், இல்லாவிட்டால் பிடித்துக்கொண்டு போய் விடுவார்களாமா' துப்பாக்கியை எடுத்து நான்கு முண்டங்களைச் சுட்டுத் தள்ளு, புத்தி வரும்," என்று கூச்சல் போட்டான்.

பசவன். "சரி அரசே, ஆனால் வந்திருப்பவர்கள் பெங்களூர்க்காரர்கள். அவர்கள் துப்பாக்கிகள் நமது துப்பாக்கிகளைவிடச் சிறந்தவையாக இருக்கும். நாம் மறைவிலிருந்து அவர்களைச் சுடுவது வாஸ்தவம் தான். இருந்தாலும் வெகு நேரம் அவர்களைச் சமாளிக்கமுடியாது," என்றான்.

"அப்படியானால அவர்களிடம் மாட்டிக்கொள் என்று சொல்கிறாயா?"

"இல்லை அரசே, தாங்கள் சரி என்றால் நான் போய், 'எங்கள் அரசர் அவரே வருவார், பிடித்துக்கொண்டு போகவேண்டிய பேச்செல்லாம் பேசவேண்டாம்' என்று சொல்லிவிட்டு வருகிறேன். அவமானம் இல்லாமல் தலை நிமிர்ந்துகொண்டு போய்விட்டு வரலாம்."

"நீ என்ன ரொம்பவும் புத்திசாலி ஆகிவிட்டதாக நினைத்துக்கொண்டிருக்கிறாயாடா, நொண்டி? சொன்னதைக் கேட்டு நடக்கிற அளவு இன்னும் வரவில்லையா உனக்கு?"

"கேட்கிறேன் அரசே. இருந்தாலும் ஒரு நாழிகை அல்லது இரண்டு நாழிகைக்குப் பிறகு அவர்கள் உள்ளே நுழைந்து விட்டால் நீங்கள் இங்கே இருப்பது நல்லதல்ல."

"பின் என்ன செய்து நாசமாகப் போகச் சொல்கிறாய்?"

"இரண்டு அல்லது மூன்று நாழிகைகள் நான் இவர்களைச் சமாளிக்கிறேன் அரசே தாங்களும் இங்கும் அங்குமாகச் சிறிது தலையைக் காட்டி இங்கே இருப்பது போல அவர்களிடம் காட்டி விட்டு படுக்கையறைச் சுரங்கம் வழியாக வெளியே சென்று விடுவது நல்லது. இவர்கள் கைகளில் பிடிபடாமல் இருக்க வேண்டுமானால் சிலகாலம் காட்டில் தலை மறைவாக இருக்க வேண்டும். வெள்ளையர்களின் படை திருப்பிச் சென்ற பிறகு வெளியே வரவேண்டும். மடிகேரிக்குப் போகவேண்டும்."

"அது தான் சரி; அப்படியே செய்யலாம். நான்கு துப்பாக்கிகளை வைத்துச் சுடு. என் துப்பாக்கியைக் கொண்டு வா."

"சரி அரசே."

என்று கூறிவிட்டு பசவன் சிப்பந்தியிடம், "அவர்களிடம் போய்ச் சொல், அரசர் சம்மதிக்கவில்லை என்று. மீறி அவர்கள் முன்னேறினால் சண்டைதான். பல பேர் சாகவேண்டும் என்று சொல்" என்று உத்தரவிட்டான். சுற்றுச் சுவரின் அருகே நின்றிருந்தவர்களிடம், "தயாராயிருங்கள், உத்தரவு கொடுத்ததும் சுட்டுத்தள்ளுங்கள். குண்டுகளை வீணாக்காதீர்கள், ஒரு குண்டுக்கு ஒருவன் சாகவேண்டும், ஜாக்கிரதை" என்று கூறினான். அரசனின் கையில் ஒரு துப்பாக்கியைக் கொடுத்து, "நீங்கள் உள்ளேயிருந்தே சுடவேண்டும் அரசே, வெளியே காலடி எடுத்து வைக்கக்கூடாது," என்றான். ஐந்து குதிரையாட்களை அழைத்து, "நீங்கள் அரண்மனையின் பின்புறம் சுரங்கவாயில் குடிசை இருக்கிறதே, அங்கே போய்க காத்திருங்கள், இரண்டொரு நாழிகைக்குள் அரசர் அங்கு வருவார். வந்ததுமே தாமதிக்காமல் அவரைக் குதிரையின் மீது ஏற்றிக்கொண்டு மேற்கு மலைக் காடுகளுக்கு அழைத்துச் சென்று விடுங்கள்," என்று உத்தரவிட்டான்.

அவர்கள், "சரி" என்றார்கள். அவர்களின் தலைவனை மாதப்பன் அவர்களை அழைத்துக்கொண்டு சுரங்க வாயில் நோக்கிப் புறப்பட்டான்.

சிப்பந்தி அரண்மனையிலிருந்து சென்று பசவன் சொன்னபடி ஆங்கில தளபதியிடம் செய்தி சொன்னான். தளபதி, "அரசருக்கும் மந்திரிக்கும ஏதும் அபாயம் விளைவிக்கக் கூடாதென்று எங்களுக்குக் கட்டளை. நாங்கள் அவர்களுக்கு ஒரு கெடுதலும் செய்யமாட்டோம். சண்டை போடத்தான் வேண்டுமென்றால், சண்டை முடியும் வரையில் அவர்கள் மறைவிலிருக்கட்டும். நாங்கள் அவர்களைச் சிறை பிடித்து அழைத்துச் செல்லவேண்டும்," என்று சொல்லியனுப்பினான். தனது படைவீரர்கள் யார் யார் எங்கெங்கே நிற்கவேண்டுமென்று யோசித்து வியூகம் வகுக்கத் தொடங்கினான்.

சிப்பந்தி அரண்மனைக்குச் சென்று ஆங்கில தளபதியின் செய்தியைச் சொன்னது தான் தாமதம், அரண்மனை வீரர்கள் துப்பாக்கியால் சுட ஆரம்பித்துவிட்டனர். அதற்குப் பதிலாக வெளியிலிருந்த சேனையும் சுட ஆரம்பித்தது. சண்டை தொடங்கியது.

ஆங்கில தளபதியின் நோக்கம், நிலத்தின் மேடு பள்ளங்களை உபயோகித்துக்கொண்டு தனது நூறு ஆட்கள் இரண்டிரண்டு பேர்களாக முன்னேறவேண்டும்; எதிரிகளின் குறி தவறும்படியாக இப்படியும் அப்படியும் அலைந்து கொண்டே முன்னேற வேண்டும்; சிலர் குண்டடி படவேண்டியது தவிர்க்க முடியாதது தான்; மற்றவர்கள் சுற்றுச் சுவரிலுள்ள தலைவாயிலை நெருங்க வேண்டும், எதிரே இருப்பவர்களைச் சுடவேண்டும், அரண்மனைக்குள் நுழையவேண்டும், என்பது.

இது அவ்வளவு சுலபமல்ல என்று அவன் அறிவான். அரண்மனையிலுள்ள தயாரிப்பு, திட்டம் இவைகளையெல்லாம் பார்த்து இன்னும் சில ஆட்கள் அதிகமாக வந்திருந்தால் சௌகரியமாக இருந்திருக்கும் என்று நினைத்துக்கொண்டான்.

சிறிது நேரம் சண்டை நடந்தது. வெளியிலுள்ள சேனை ஒரு ஐம்பது கஜம் முன்னேறியிருந்தது. படிகேரியிலிருந்து இரண்டாவதாகப் புறப்பட்ட படையின் பெரும் பாகம் வந்து இவர்களோடு சேர்ந்துகொண்டது.

அரசன் உப்பரிகையின் மீது இருந்துகொண்டு, ஒரு கம்பம் இல்லாவிட்டால் இன்னொரு கம்பத்தின் மறைவில் இருந்து

கொண்டு தமது படையும், வெளியிலுள்ள படையும் செய்து வந்த வேலைகளைக் கவனித்துக் கொண்டிருந்தான். தனது படையிலிருந்து பறந்து வந்த குண்டுகளால் வெளியிலுள்ளவர்களில் நான்கு பேர் கீழே விழுந்ததைக் கண்டு அவனுக்கு தைரியம் வந்தது. அரண்மனைப் படைகளில் அப்பொழுது ஒருவன் தான் காயமுற்றிருந்தான். பசவன் அரண்மனையின் முன் முகப்பில் நின்றுகொண்டு தன் ஆட்களிடம் இங்கே சுடு அங்கே சுடு என்று கட்டளையிட்டபடி மேற்பார்வை பார்த்துக் கொண்டிருந்தான். மொத்தத்தில் ஆரம்பம் அரண்மனைக்குச் சாதகமாக இருந்தது.

உதவிப்படை வந்ததும் இனி சிறிது அதிக தைரியத்துடன் நடந்துகொள்ளலாம் என்று ஆங்கில தளபதி யோசித்தான். அவனது வீரர்கள் அதிக வேகத்துடன் முன்னேறினார்கள். அதிகம் பேர் காயமுற்றார்கள்; இருந்தாலும் இதே வேகத்தில் அவர்கள் முன்னேறினால் இன்னொரு நாழிகையில் அரண்மனை சுற்றுச் சுவரை அடைந்து விடுவார்கள். அதன் பிறகு அரண்மனை வீரர்களுக்கு இப்போது இருக்கும் அநுகூலம் இருக்காது. ஆனால் எதிரெதிரே நின்று கை கலக்கும்போது தனது ஆட்களுக்கும் அபாயம் அதிகம் தான்.

இதற்குள்ளாக பசவன் அனுப்பியிருந்த ஐந்து குதிரையாட்கள் சாங்கவாயிலண்டை வந்து சேர்ந்திருந்தனர். மாதப்பன் அவர்களில் ஒருவனை ஒரு இடத்திலும் இன்னொருவனை இன்னொரு இடத்திலும் நிறுத்தி வைத்துவிட்டு "அரசர் வந்ததும் குதிரை மீது உட்காரவைத்துக் கொண்டு விடுங்கள். வெறும் குதிரை ஒன்றைப் பிடித்துக்கொண்டு நீங்கள் இரண்டு பேரும் ஓடவேண்டும். நூறு கஜதூரத்தில் பின்னால் மற்ற இரண்டு பேரும் ஓடவேண்டும்" என்று கட்டளையிட்டு விட்டுத் தான் ஒரு ஓரத்தில் காத்துக் கொண்டு நின்றான். அரை நாழிகைக்குள் ஐந்து குதிரையாட்கள் அங்கே வந்தனர். அவர்களின் தலைவன் முத்தப்பன் என்பவன். அவன் மாதப்பனைவிட உயர்ந்த பதவியில் உள்ளவன். மாதப்பனுக்கு அவனைத் தெரியும் ஆனால் அவன் போபண்ணாவுடன் சேர்ந்துகொண்டு ஆங்கிலேயர்களுக்கு உதவியாக இருக்கிறான் என்பது இவனுக்குத் தெரியாது, வந்துகொண்டே முத்தப்பன்; "அரசர் இன்னும் வரவில்லையா?" என்று கேட்டான். மாதப்பன்; "இல்லை" என்று சொல்லிவிட்டு உடனே 'இவன் மடிகேரியில் இருக்கவேண்டியவனாயிற்றே, இங்கெங்கே வந்தான்?' என்று யோசித்து, "நீங்கள் எப்போது வந்தீர்கள்?" என்று கேட்டான்.

முத்தப்பன், "இப்போமுது தான்" என்றான். மாதப்பன்: "உங்களை பசவய்யா அனுப்பினாரா?" முத்தப்பன்: "இந்தப் பேச்செல்லாம் இப்போது வேண்டாமப்பா. நம்முடைய வேலையைச் செய்து முடிப்போம்."

என்றிவ்வாறு கூறி முத்தப்பன் தனது ஆட்களை முன்னால் கொண்டுவந்தான். சுரங்க வாயிலில் இன்னும் முன்னால் கொண்டுபோய் நிறுத்தினான். இரண்டு நிமிடங்களில் இவர்கள் வந்த வழியிலேயே இன்னும் இரண்டு பேர் வந்தார்கள். ஜேணம் போட்ட இரண்டு குதிரைகளைக் கொண்டுவந்தார்கள்.

முத்தப்பனை பசவன் அனுப்பியிருக்கவேண்டும் என்பதைத் தவிர வேறு எண்ணமே மாதப்பனுக்குத் தோன்றவில்லை. "நல்லதாயிற்று. வேலைக்கு இன்னும் நாலு பேரை உதவிக்கு அனுப்பியிருக்கிறார்" என்று நினைத்துக்கொண்டு அமைதியாக இருந்தான்.

160

அரண்மனை முன்னால் சண்டை வலுத்தது. வெளி ஆட்கள் கற்றுச்சுவரை அநேகமாக நெருங்கிவிட்டார்கள். பசவன் தன் ஆட்களுக்கு தைரிய வார்த்தைகள் கூறிவிட்டு உள்ளே ஓடினான்; "இனி அரசர் இங்கே இருக்க வேண்டாம். சுரங்க வழியாக ஓடிவிடுங்கள்," என்று அரசனை வேண்டினான்.

அரசன், "நீ என்ன செய்யப்போகிறாய்?" என்று கேட்டான்.

"நானும் வருகிறேன் அரசே. நீங்கள் செல்லுங்கள். வெளியே போனதும் உடனே புறப்பட்டுவிடுங்கள். நான் பின்னாலேயே வருகிறேன். எனக்காக நீங்கள் காத்திருக்கவேண்டாம்."

அரசனையும் இன்னொரு ஆளையும் சுரங்கத்தில் இறக்கிவிட்டு பசவன் மீண்டும் முன் வாயிலுக்கு வந்தான்.

சுரங்கத்திலிருந்து வெளிப்பட்ட அரசன் தனக்காகக் காத்துக் கொண்டிருந்த முத்தப்பனையும் மாதப்பனையும் பார்த்தான். முத்தப்பன் முன்னால் நின்றுகொண்டு தான் கொண்டுவந்திருந்த குதிரை ஒன்றை முன்னால் எடுத்துவரச் செய்து, அதன்மீது ஏறுவதற்கு அரசருக்கு உதவினான். தானும் குதிரையின் மீதமர்ந்து அவனது பக்கத்தில் நிறுத்திக்கொண்டு "வாருங்கள்

என்று தன் ஆட்களை உரக்கக் கூப்பிட்டான். அவர்களில் ஒருவன் ஏதோ ஒருவகையான சீழ்க்கை அடித்தான். இரண்டொரு கணத்தில் அவர்கள் வந்த திசையிலிருந்து இன்னும் ஒரு பத்து குதிரைகள் வந்தன. ஓர் ஆங்கிலேயன் அவைகளை நடத்திக் கொண்டு வந்தான். அவன் குதிரையை ஓட்டிக்கொண்டு முத்தப்பனிடம் வந்து ஹிந்துஸ்தானியில், "அரசரல்லவா?" என்று கேட்டான். முத்தப்பன் "ஆமாம்" என்றான். ஆங்கிலேயன் வீரராஜனுக்கு சலாம் செய்து ஹிந்துஸ்தானியில், "தாங்கள் எங்கள் கைதியாகியுள்ளீர்கள்; நாங்கள் தங்களை மரியாதை யுடன் அழைத்துச் செல்வோம்; தடை செய்யாமல் தயவு செய்து எங்களுடன் வரவேண்டும்; தங்களிடம் மிகவும் நன்றியுள்ளவர் களாக இருப்போம்."

வீரராஜனுக்கு ஒன்றும் தோன்றவில்லை. "இதென்ன பசவனின் சூழ்ச்சியா?" என்று அவன் யாரையும் குறிப்பிட்டுப் பார்க்காமல் பொதுவாகக் கேட்டான். அவனது கை தானாகவே இடுப்பிலிருந்த கைத் துப்பாக்கியை நாடியது.

முத்தப்பன், "அப்படித்தான் இருக்கவேண்டும் அரசே" என்று பதிலளித்தான். அதே கணத்தில் ஆங்கில தளபதி, "அரசர் கைத் துப்பாக்கியைத் தொடக்கூடாது. அப்படி ஏதாவது செய்வதாக இருந்தால் நான் அதைப் பறிமுதல் செய்யவேண்டியிருக்கும். தங்களுக்கு அந்த அவமரியாதையைக் காட்ட நான் விரும்ப வில்லை," என்றான்.

அரசன் கையை துப்பாக்கியினின்றும் எடுத்துவிட்டான். ஒரு அரைக்கணத்தில் அவன் மனத்தில் பசவனைக் குறித்து நூறு எண்ணங்கள் மின்னல் வேகத்தில் தோன்றி மறைந்தன. "இந்த பசவன், அந்த பகவதி, தொட்டவ்வா இவர்கள் மூவரிடையே ஏதோ ரகஸ்யம் இருக்கிறது தனக்குத் தெரியாதபடி ஏதோ தந்திரம் நடந்திருக்கிறது. ஏதோ நன்மையை உத்தேசித்து பசவன் தன்னை ஆங்கிலேயர்களிடம் பிடித்துக் கொடுத்து விட்டான்," என்று அவன் முடிவு செய்துவிட்டான்.

ஆங்கில தளபதி அரசனைச் சுற்றி வளைத்துக்கொண்ட வீரர் களுக்குத் தலைமை தாங்கி, "அரசர் தயவுசெய்து என்னோடு வர வேண்டும்" என்று அரசரிடம் சொல்லி, "நமது ஆட்கள் மூன்று பக்கங்களிலும் சுற்றிவரட்டும்" என்று முத்தப்பனுக்குக் கட்டளை யிட்டான். இவ்வாறு இவர்கள் மலையைச் சுற்றிக்கொண்டு அரண்மனையின் முன்பாகத்திற்கு வந்து சேர்ந்தனர்.

அரண்மனை முகப்பில் நின்றுகொண்டு பசவன் தனது ஆட்களுக்கு உற்சாகமூட்டிப் போரை நடத்திக்கொண்டிருந்தான். அரசனும், அவனைச் சுற்றி ஒரு இருபது பேரும் குதிரைமீது அமர்ந்து எதிரே வருவது அவன் கண்களில் பட்டது. அவனால் தன் கண்களையே நம்ப முடியவில்லை. அது அரசராக இருக்காது, வெறும் பிரமை என்று நினைத்துக்கொண்டான். அடுத்த கணம் இவர்கள் சுரங்க வாயிலிலிருந்து வருகிறார்கள் என்பதைத் தெரிந்துகொண்டு அவன் அந்தக் கும்பலின் மடுவில் வந்துகொண்டிருந்த உருவத்தை உற்றுப் பார்த்தான். இதற்குள்ளாக அந்தக் கூட்டம் அருகில் வந்துவிட்டது. நன்றாகப் பார்த்த பொழுது பசவனுக்கு சந்தேகமெல்லாம் நீங்கிவிட்டது. ஏதாவது உதவி வந்து அரசர் மறுபடியும் சண்டை செய்வதற்கென்றே பின்னாலிருந்து வந்தாரோ என்று ஒரு கணம் அல்ல ஒரு விநாடி அவன் நினைத்தான். ஆனால் அந்த ஒரு விநாடிக்குள்ளாகவே அந்த எண்ணம் தவறென்று தெரிந்துவிட்டது. அரசனின் பக்கத்தில் ஆங்கில அதிகாரி இருக்கிறான்! பசவனின் இதயம் விண்டு போய்விட்டது. இந்த ஆங்கிலேயன் சுரங்க வாசலில் நின்றிருந்து அரசனைச் சிறைபிடித்திருக்கவேண்டும், தங்களது சூழ்ச்சியெல்லாம் பயனற்றுப் போய்விட்டது. அரசன் சிறைப்பட்டுவிட்டானே, இனி என்ன கதி என்று அவன் கலவரமடைந்தான். முகப்பிலிருந்து இறங்கி ஓடிச்சென்று சுற்றுச் சுவரின் தலைவாசலைத் திறக்கச் செய்து வெளியே வந்தான் தடதடவென்று கீழே இறங்கி "ஐயோ அரசே, இவர்களிடம் அகப்பட்டுக் கொண்டுவிட்டீர்களா," என்று கத்திக்கொண்டே அரசரை நோக்கிக் கை நீட்டியபடி வந்தான்.

நொண்டிக் கொண்டும், குதித்துக் கொண்டும் வரும் அந்த உருவத்தைக் கண்டதும் ஆங்கில தளபதி சைகை காட்டி தனது ஆட்களை நிற்கச்செய்தான். அரசனின் குதிரையையும் தன் குதிரையையும் அப்படியே நிற்கச் செய்து இருந்த இடத்திலேயே இருந்தான்.

"அகப்பட்டுக் கொண்டு விட்டீர்களா?" என்று கத்திக்கொண்டு வரும் பசவனைக் கண்டு அரசனுக்கு ஆக்ரோஷம் பொங்கியது.

அவனுக்கு பசவன் ஏதோ கத்திக்கொண்டு வருவது தான் தெரிந்ததே யொழிய என்ன சொல்கிறான் என்று புரியவில்லை. அவனேதான் தன்னைப் பிடித்துக் கொடுத்திருக்கவேண்டும் என்னும் அவன் முடிவு இப்போது உறுதி பெற்றிருந்தது. இந்தச் சுரங்க விஷயம், அதன் மூலமாகத் தான் தப்பிச் செல்லும் விஷயம் இவை இவனைத் தவிர வேறு யாருக்கும் தெரியாது. அரண்மனை எதிரில் சண்டை செய்வதைப்போலக் காண்பித்துக் கொண்டு சில ஆட்களை சுரங்க வாயிலுக்கு அனுப்பச் சொல்லி இவனே முற்றுகையிட்டிருக்கும் தளபதிக்குத் தெரிவித்திருக்கவேண்டும்

இந்த எண்ணத்தினால் அரசனின் மனத்தில் தோன்றியிருந்த கோபம் பொங்கியெழுந்தது. "நீயே பிடித்துக் கொடுத்துவிட்டு அகப்பட்டுக்கொண்டாயா என்கிறாயா, முண்டமே" என்று வெகுண்டு கூச்சலிட்டு அவன் தன் இடுப்பிலிருந்த கைத் துப்பாக்கியை எடுத்தான். எதிரில் வந்துகொண்டிருந்த பசவனை நோக்கிச் சுட்டான்.

வீர ராஜன் நன்றாகக் குறி பார்த்துச் சுடக் கூடியவன். துப் பாக்கியைப் பிடிக்கும் நேரத்தில் அவன் கை எப்பொழுதுமில் லாத ஒரு உறுதியைப் பெற்று விடும். அவனது துப்பாக்கி யிலிருந்து புறப்பட்ட குண்டு அதன் இலக்கைச் சுடுவது நிச்சயம். இந்த குண்டு நேராக பசவனின் இதயத்தைச் சென்று தாக்கி யது. தனது அரசன் தன்னைச் சுடுகிறான் என்பதைக் கண்டு ஆச்சரியம் கொண்ட பசவன் "ஐயோ அரசே" என்று கதறிய வண்ணம் அங்கேயே விழுந்து இறந்தான். ஒரு விநாடியில் அவன் உடல் சுருண்டு ஒரு மூட்டையாக அரசனின் எதிரில் கிடந்தது.

ஆங்கில அதிகாரி அரசனின் கையைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு, "ஏன் இப்படிச் செய்தீர்கள்?" என்று கேட்டான்.

அரசன் தனது கையை விடுவித்துக்கொள்ள முயற்சித்தபடி, "இவன் துரோகி; என்னை உங்களுக்குப் பிடித்துக்கொடுத்தான்" என்றான்

"சீ, உங்கள் எண்ணம் தவறு."

"ஏன் தவறு? சுரங்க வாயிலுக்கு உங்களை அனுப்பியது அவன் தான்."

"இல்லை, சுரங்க விஷயம் எங்களுக்கு மடிகேரியில் தெரிய வந்தது. அது தெரிந்ததனால்தான் நான் இரண்டாவது படை யுடன் வந்தேன்."

அரசனுக்கு நம்பிக்கை பிறக்கவில்லை. அவன், "இந்த ஆங்கிலேயன் புளுகுகிறான்," என்று நினைத்துக்கொண்டான். பசவனைக் கொன்றதற்காகப் பச்சாதாபப் படவில்லை.

162

முதல் மாலை ஊரில் தண்டோரா போட்டுத் தெரிவித்திருந்தபடி அன்று காலை பத்து நாழிகைக்கு குடகின் தலைவர்கள், பெரியவர்கள், பிரமுகர்களின் சபை அரண்மனையின் வெளி சவுக்கத்தில் தொடங்கியது. 'சரியான நேரத்திற்கு வரமுடியவில்லை, ஒரு நாழிகை பொறுத்துக்கொள்ளவேண்டும்' என்று சொல்லி அனுப்பிவிட்டு கர்னல் பிரேசர் சிறிது தாமதமாக வந்தான். போபண்ணா, லக்ஷ்மீநாராயணய்யா அல்லாமல் மந்திரி ஹொன்னப்பாவும் அவர்களோடு நின்று துரையை வரவேற்றார். தீட்சிதரும், உத்தய்யதக்கனும் அங்கே இருந்தார்கள்.

சவுக்கத்தில் அமைந்திருந்த மேடையின் மீது நடுவில் நான்கு ஆசனங்களில் துரையும் மூன்று மந்திரிகளும் உட்கார்ந்து கொண்டார்கள். பின்னால் தீட்சிதர், உத்தய்யதக்கன், லிண்ட்சே உட்கார்ந்து கொண்டார்கள். மேடையின் வலது புறம் குடகப் பெரியோர்களும், இடது புறம் பேட்டை செட்டிப் பிரமுகர்களும் உட்கார்ந்திருந்தார்கள் நிறைந்திருந்த ஜனங்கள் வரிசை வரிசையாக சவுக்கம் முழுவதும் உட்கார்ந்திருந்தார்கள். துரையின் இடது புறம் மந்திரிகளுக்குப் பின்னால் துபாஷ் உட்கார்ந்து கொண்டிருந்தான்.

ஜனங்களிடம் என்ன சொல்லவேண்டுமென்று பிரேசரும் போபண்ணாவும் முதலிலேயே தீர்மானம் செய்திருந்தார்கள். சபை நடவடிக்கைகளையெல்லாம் துரையே நடத்தவேண்டுமென்று முடிவு செய்திருந்தனர். பிரேசர் தான் சொல்லவேண்டியவைகளையெல்லாம் ஹிந்துஸ்தானியில் சொன்னான்.

"ஆரம்பிக்க வேண்டியதுதானே, போபண்ணா அவர்களே?"

போபண்ணா, "ஆமாம் துரையே" என்று கூறி, "சரிதானே பொன்னப்ப மந்திரியவர்களே? ஐயா அவர்களே?" என்று சக மந்திரிகளைக் கேட்டார். அவர்கள் "சரிதான், சரிதான்" என்றார்கள்.

பிரேசர்: "உங்கள் அரசரான வீரராஜர் நாட்டைச் சரியாக ஆளவில்லையென்று கோபம் கொண்டு நீங்கள் அவரைப் பதவியிலிருந்து விலக்கியிருப்பதாகக் கேள்விப்பட்டோம். இது உண்மைதானா?"

யாரும் பதில் பேசவில்லை பிரேசர் துபாஷிடம், "இதைக் கன்னடத்தில் சொல்லுங்கள்" என்று உத்தரவிட்டான். துபாஷ் அவ்வாறே செய்தான்.

போபண்ணா பெரியோர்களின் பக்கம் பார்த்து சைகை காட்டினார்: அவர்கள் "ஆமாம்" என்று பல குரல்களில் சொன்னார்கள். போபண்ணா செட்டியார்கள், பிரமுகர்கள் உட்கார்ந்திருந்த பக்கம் பார்த்து சைகை காட்டினார். அவர்களும் பல குரல்களிலும், "ஆமாம்" என்றார்கள்.

பிரேசர்: "கும்பணி சர்க்கார் உங்கள் விருப்பத்தை நடத்திக் கொடுப்பதற்காக உதவி செய்ய எங்களை அனுப்பியிருக்கிறார்கள். நாங்கள் வருவதற்கு முன்னரே நீங்கள் இந்த முடிவுக்கு வந்திருப்பது நல்லதாயிற்று. வெளியாராகிய நாங்கள் வந்து இங்கே குழப்பத்தை ஏற்படுத்தி விட்டோம் என்ற பழி இல்லாமல் போனது எனக்கு மிகவும் சந்தோஷம்."

போபண்ணா மறுபடியும் சைகை காட்டினான். மறுபடியும் சபையோர் "அப்படிப் பழி ஒன்றும் இல்லை" என்று பதிலளித்தார்கள்.

பிரேசர்: "எனவே இப்பொழுது குடகின் பிரஜைகளான நீங்கள் வேறு ஒரு அரசரைத் தேர்ந்தெடுக்கவேண்டும். அரசருக்கு ஆண் குழந்தை இல்லை. ராணியின் வயிற்றில் பிறந்த ஒரு மகள் இருக்கிறாள். சகஜமாக அவள் தான் பட்டத்திற்கு வரவேண்டும். ஆனால் அவளுக்கு இன்னும் வயது வரவில்லை. அவளை அரசியாக்குவதானால் அவள் சார்பில் நாட்டு விவகாரங்களைப் பார்த்துக்கொள்ள ஒருவர் தேவை. அவளது தாயார் இதற்குச் சம்மதிப்பதானால் இந்த ஏற்பாட்டைச் செய்யலாம்."

போபண்ணா பொன்னப்பாவின் பக்கம் திரும்பினார்: பொன்னப்பா, "குமாரியை அரசியாக்கி ராணியை ரட்சகராக நியமிப்பதைவிட ராணியவர்களையே அரசபதவியில் அமர்த்தி விடுவது மேல்," என்றார்.

"ராணி பட்டம் சூட்டிக்கொள்ள சம்மதிப்பவளல்ல. இதை போபண்ணா அறிவார். இருந்தாலும் பொன்னப்பாவின் மூலமாக

இந்த வார்த்தைகளைச் சொல்ல வைக்கிறார். இது ஏன்?" என்று லக்ஷ்மீநாராயணய்யா யோசித்தார். அவர் போபண்ணாவிடம், "போபண்ணா, இதையெல்லாம் நாம் தனியாக ஆலோசித்து சரி என்று தோன்றினால் ராணியவர்களைச் சென்று பார்த்து அவரிடம் விண்ணப்பித்துக்கொண்டு, அவர் விருப்பத்தை அறிந்து அதன்படி நடப்பது மேலல்லவா?" என்றார். போபண்ணா, "அதைச் செய்யவே வேண்டும் ஐயா; மக்களின் மனத்தை அறிந்து கொள்வோம். சிறிது கேளுங்கள்" என்று அவருக்கு சமாதானம் சொன்னார்.

பிரேசர் : "பொன்னப்ப மந்திரியவர்கள் அரசபதவியை ராணிக்குக் கொடுத்துவிட வேண்டுமென அபிப்பிராயப்படுகிறார். இதை நீங்கள் ஒப்புக்கொள்கிறீர்களா?"

போபண்ணா பெரியவர்களின் பக்கம் பார்த்தார். அவர்கள், "ஒப்புக்கொள்கிறோம் துரையே" என்றார்கள். போபண்ணா, "இதை ராணியவர்களுடன் பேசி முடிவு செய்யவேண்டும் என்று மந்திரி ஐயா அவர்கள் சொல்லுகிறார்கள். என் அபிப்ராயமும் அதுதான்," என்றார்.

பிரேசர் மெதுவான குரலில், "சந்தோஷம். நாம் ராணியை எப்பொழுது பார்க்கமுடியும், விசாரிக்கிறீர்களா?" என்று கேட்டான்.

போபண்ணா : "விசாரிக்கலாம். ஆனால் அவரோடு பேசி விட்டு வர நேரம் பிடிக்கும். அது வரையில் எல்லோரும் இங்கே காத்திருக்கவேண்டாம். மத்தியான்னம் நான்கு நாழிகைக்குமேல் திரும்பி வரட்டும். அப்பொழுது எல்லாவற்றையும் முடிவு செய்து விடலாம்."

பிரேசர் : "நல்லது போபண்ணா அவர்களே, அப்படியே செய்வோம்."

இவ்வாறு கூறி பிரேசர், ஜனங்களைப் பார்த்து, "நானும் மந்திரிகளும் ராணியைப் பார்த்துப் பேசவேண்டிய விஷயம் இருக்கிறது. மாலையில் மறுபடியும் இதைத் தொடர்ந்து பேசலாம். தாங்களெல்லாம் இப்பொழுது வீட்டுக்குச் சென்று மாலை நான்கு நாழிகைக்குமேல் வரவேண்டும்" என்றான்.

எல்லோரும் எழுந்திருந்தனர்: புறப்படத் தொடங்கினர். இவர்கள் பேட்டி காணவேண்டுமென ராணிக்குச் சொல்லியனுப்பினர். ராணி, "உடனே வரலாம். அரசரின் மண்டபத்திலேயே

பார்க்கலாம்" என்று பதில் சொல்லி அனுப்பினாள். இவர்கள் சென்று மண்டபத்தை அடைவதற்குள்ளாக ராணி அங்கே வந்திருந்தாள்.

163

இவர்கள் அரசரைப் பதவியிலிருந்து விலக்கிவிட்டார்கள் என்ற செய்தி அவளுக்குத் தெரிந்திருந்தது. ஓர் அரசனைப் பதவியிலிருந்து தள்ளுவது இவர்களுக்கு இவ்வளவு சுலபமாகி விட்டதே என்று அவள் மிகவும் கொந்து கொண்டாள். இவர்கள் தன்னைப் பார்க்க வேண்டுமென்று சொல்லியனுப்பியபோது அவளுடைய முதல் யோசனை, "இஷ்டம்போலச் செய்யுங்கள். என்னைக் கேட்க வேண்டியது ஒன்றுமில்லை. உங்கள் மனம் போலச் செய்ய உங்களுக்கு அதிகாரம் இருக்கிறது," என்று பதில் அனுப்பவேண்டுமென்பதுதான். ஆனால் இன்றில்லாவிட்டால் நாளை தன் மகள் அரசியாக வேண்டும், தான் ஆத்திரப்பட்டு அவள் அதிருஷ்டம் கெட்டுப்போகக் கூடாது என்று தோன்றவே அவள் இவர்களைக் காணச் சம்மதித்தாள். நான்கு வார்த்தைகளுக்கு மேல் பேசக்கூடாது, தான் தைரியத்தை இழந்து விட்டதாக அவர்களுக்குத் தோன்றுமாறு நடந்து கொள்ளக்கூடாது, என நினைத்துக்கொண்டு கம்பீரமாக அவள் நடந்து வந்தாள். பெருந்தன்மையோடு கூடிய ஒரு கௌரவத்தையுடன் அவர்களை வரவேற்று உட்காரச் சொல்லி, தானும் உட்கார்ந்து கொண்டாள். ஒரு கணத்தில் ராஜகுமாரி பின்னாலிருந்து வந்தாள். தாயின் அருகில் அவளது இடுப்பை வளைத்து அணைத்துக்கொண்டு நின்றாள்.

பிரேசர், "நான் கர்னல் பிரேசர். தங்களை இவ்வாறல்லாமல் வேறு ஏதாவது நல்ல சமயத்தில் சந்திக்க முடிந்திருந்தால் நன்றாக இருந்திருக்குமே என வருந்துகிறேன். நாங்கள் பேசப் போகும் விஷயம் உங்களுக்குப் பிடிக்காமலிருக்கலாம். அதிலே, குறிப்பிட்ட யாரையும் அவமரியாதை செய்யும் நோக்கம் இல்லை என்பதை நான் உறுதி கூறுகிறேன்," என்று மிகவும் மரியாதையோடு தெரிவித்தான்.

ராணி, "நீங்கள் மிகவும் சத்தியவந்தர்கள் என்று கேள்விப் பட்டிருக்கிறேன். தவறாக நடக்க மாட்டீர்கள். மற்றவை கடவுளின் விருப்பம். சொல்லுங்கள்" என்றாள்.

பிரேசர்: "அரசர் விஷயமாக மக்கள் செய்திருக்கும் முடிவு உங்களுக்குத் தெரிந்திருக்கிறதல்லவா?"

"ஆமாம்."

"மக்கள் தாங்கள் அரசியாகப் பதவி ஏற்க வேண்டுமென்று விரும்புகிறார்கள்."

"அது இயலாது. அது எங்கள் தர்மத்திற்கே விரோதமானது. நான் இதை ஏற்கனவே இந்தப் பெரியவர்களிடம் தெரிவித்துள்ளேன். இந்தப் பேச்சை வளர்த்த வேண்டாமெனக் கேட்டுக் கொள்கிறேன்."

பிரேசர் மந்திரிகளின் முகத்தைப் பார்த்தான். லக்ஷ்மீ நாராயணய்யா, "அப்படியானால் தங்கள் குமாரி பதவியை ஏற்றுக் கொள்ளட்டும். அவள் தக்க வயது அடையும் வரையில் தாங்கள் அவளுக்குக் காவலராக இருக்கவேண்டும்" என்றார்.

"அரசர்?"

"அவருக்குப் பிரியமான ஒரு இடத்திற்கு அனுப்பிவைத்து அங்கே அவருக்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்து கொடுக்கிறோம்."

"அரசர் இருக்கும் இடத்தில் நானும் இருக்க வேண்டியவள். என் மகள் அரச பதவிக்காக இங்கே இருக்கட்டும். அவளுடைய உதவிக்கு வேறு ஏற்பாடு செய்யுங்கள்."

ராஜகுமாரி, "அம்மாஜி, வேண்டாம் அம்மாஜி. நான் உங்களோடுதான் இருப்பேன்," என்றாள். தாயின் கன்னத்தோடு கன்னத்தை வைத்துக்கொண்டாள்.

இதைக் கண்டு எல்லோர் மனமும் நெகிழ்ந்தது. பிரேசர்கூட வருந்தினான். ஆனால் என்ன செய்வது, வேறு வழி இல்லை. அவன், "தாங்கள் இப்படிச் சொல்வதனால் மூன்று நான்கு வருடங்களுக்கு வேறு ஏற்பாடு செய்யவேண்டும்," என்றான்.

ராணி அதற்கு ஒன்றும் சொல்லவில்லை.

பிரேசர்: "இது விஷயமாகத் தங்களுக்கு அபிப்ராயம் ஏதாவது உண்டா?"

"சில வருடங்களில் எனது மகள் பட்டத்திற்கு வரவேண்டு மென்பதுதான் என் ஆசை. அதுவரையில் உங்களுக்குச் சரி என்று தோன்றுகிற ஏற்பாட்டை நீங்கள் செய்யலாம்." என்று கூறி ராணி எழுந்திருப்பவள் போலக் காணப்பட்டாள். "இனி நான் போகலாமா?" என்று கேட்டாள்.

ராணி இப்படிக் கேட்டதுமே பிரசர் எழுந்து நின்றான்; மிகவும் மரியாதையோடு அவளுக்குக் கை கூப்பினான். "நாங்கள் உத்தரவு பெற்றுக்கொள்பவர்கள்; தாங்கள் உத்தரவு அளிக்க வேண்டியவர்கள்" என்றான்.

ராணி எழுந்து கை கூப்பிவிட்டு மகளை அழைத்துக்கொண்டு ராணி வாசத்திற்குச் சென்றாள்.

164

அரண்மனையை விட்டு வெளியே வரும்பொழுது லக்ஷ்மீ நாராயணய்யா தயங்கி நின்று போபண்ணாவைத் தன்னருகில் அழைத்து, "நான் உங்களுக்கு ஒன்று சொல்லவேண்டியிருக்கிறது, போபண்ணா: நீங்கள் அதன்படி நடக்கவேண்டும்" என்றார்.

"என்னவென்று சொல்லுங்கள் ஐயா."

"அரசரை விலக்கியாயிற்று. வேறு ஏற்பாடு ஒன்றும் சரிப்பட்டு வரவில்லை இதற்கு ஒரே ஒரு வழிதான். அதற்கு உங்கள் சம்மதம் வேண்டும்.

"செய்யக்கூடியதானால் எனக்கு ஆட்சேபணை இல்லை, ஐயா."

லக்ஷ்மீநாராயணய்யா ஒரு கணம் யோசித்துவிட்டு, "அரசரு மில்லை, அம்மாஜியுமில்லை, மகளும் இல்லை என்ற பிறகு தயவு செய்து நீங்களே அந்தப் பதவியை ஏற்றுக்கொள்ள வேண்டும்."

போபண்ணா லக்ஷ்மீநாராயணய்யாவைத் திடுக்கிட்டுப் பார்த்தார். இதை அவர் எதிர்பார்த்திருக்கவில்லை. இந்தப் பிராம்மணர் கிண்டலாக இதைச் சொல்லுகிறாரா என்ன என்று அவருக்கு ஒரு கணம் தோன்றியது. லக்ஷ்மீநாராயணய்யாவின் முகத்தில் கபடம் தெரியவில்லை. அவர் தூய உள்ளத்துடன் தான் இந்த அபிப்ராயத்தை வெளியிட்டிருக்கவேண்டும் என்று தோன்

றியது. போபண்ணு சமாதானமடைந்தார். அவர் முகம் மலர்ந்தது. அவர் சிரித்தார்: "நல்லா சொன்னீர்கள் ஐயா. குடகன் இப்படி ஒரு காரியம் செய்வானு? வேறொன்றுக்காகவும் அல்ல. அரசனை விலக்கிவிட்டு வேறொருவரை அங்கே உட்காரவைத்தால் நல்லதுக்காகச் செய்தோம் என்று சாதிக்கமுடியும். அரசரை விலக்கிவிட்டு நான் போய் அங்கே உட்கார்ந்து கொண்டால் கண்மைக்காகச் செய்தேனு, சுய நலத்துக்காகச் செய்தேனு என்று யார் தீர்மானிப்பது? நீங்கள் துரோகம் துரோகம் என்று சொல்லிர்களே. பார்ப்பவர்கள் என்னைப் பற்றியும் இந்த வார்த்தையைச் சொன்னால் நான் இல்லை என்று எப்படிச் சொல்ல முடியும்?"

"நீங்கள் ஒன்றும் சொல்லவேண்டாம் போபண்ணு துரோகம் அல்ல என்று நான் சொல்லுகிறேன். நான் வேண்டிக்கொண்டதாகச் சொல்லுகிறேன். நீங்கள் மந்திரியாக இருப்பது நாட்டின் புண்ணியம் என்பதை ஜனங்கள் அறிவார்கள். உங்களைப் போன்றவர்கள் அரசராவது அதை விடப் புண்ணியம் என்று ஜனங்கள் நினைப்பார்கள், முடிவு செய்யுங்கள். நானே அருகில் இருந்து மந்திரி வேலை பார்க்கிறேன்."

"நீங்கள் அதைச் செய்வீர்கள் ஐயா, சந்தேகமில்லை, மேலே உட்காருபவன் பெரியவனுமல்ல, கீழே நிற்பவன் சின்னவனுமல்ல. துரோகம் என்கிற பழிமொழியையும் நான் பொருட்படுத்தமாட்டேன். ஆனால் நான் குடகன். நான் எப்படி அரசனாகட்டும்?"

"வேறு விதியில்லாவிட்டால் ஆகத்தான் வேண்டும்."

"நான் மரட்டேன் சுவாமி, குடகர்கள் பூமித்தாயின் குழந்தைகள். பூபதி என்கிற பெயரை அவர்கள் எப்போதும் ஏற்றுக்கொண்டதில்லை, எனக்கேன் அந்தப் பழி? குடகன் தானே அரசனாவதாக இருந்தால் இந்த அரசனின் முப்பாட்டனின் முப்பாட்டனை ஏன் ஆட்சிபீடத்தில் உட்காரவைத்தான், அவனுக்கு முன் இருந்த அரசன் இறந்ததும் வேறு அரசனை நியமிக்கவேண்டி வந்தபோது நாட்டுத் தலைவர்களெல்லாம் சேர்ந்து அந்த பிச்சைக்கார சாமியாரை அரசனாக்கவில்லையா? அரசனின் வேலைக்குத் தகுந்தவன் பிச்சைக்காரன் தான், குடகனல்ல என்று பெரியவர்கள் தீர்மானித்தார்கள். இன்றைக்கும் அதுவே சரி, யாரோ ஒரு பண்டாரம் வரட்டும்; பீடத்தின்மீது உட்காரட்டும்; அரசனென்று அவனை நடத்துவோம். அவனும் மரியாதையுடன் நடந்துகொள்ளட்டும்; நாம் அருகில் நின்று அரசாட்சியை நடத்துவோம். இது

குடகனின் வேலை, பிராம்மணனின் வேலை. பட்டம் சூட்டிக்கொள்வது பெரிதல்ல."

போபண்ணா இதைச் சொன்ன மாதிரியில் இனி சர்ச்சைக்கு இடமில்லை என்று தெரிந்தது. லக்ஷ்மீநாராயணய்யா மௌனமாகிவிட்டார். இருவரும் வாசலுக்கு வந்தனர்.

165

வாசலில் மற்றவர்கள் யாரும் இல்லை. எல்லோரும் புறப்பட்டுச் சென்றிருந்தனர். தீட்சிதர், உத்தய்யதக்கன் இரண்டு பேரும் மட்டும் காத்திருந்தனர் பிரேசர் அவர்களுடன் மரியாதைக்குப் பேசிக்கொண்டிருந்தான்.

இவர்கள் வந்த பிறகு பிரேசர் இவர்களோடு சேர்ந்து பேசி மேற்கொண்டு செய்ய வேண்டியவைகளை நிச்சயித்துக் கொண்டான். போபண்ணா தற்போதைக்காவது நாட்டின் ரட்சகனாக இருக்கவேண்டும் என்பது தான் எல்லோருடைய எண்ணம் என்று லக்ஷ்மீநாராயணய்யா தெரிவித்தார். தான் பெரிய பதவியில் அமரவேண்டுமென்பதற்காக போபன் வெளியிலிருந்து ஆட்களை வரவழைத்து இவ்வளவும் செய்தான் என்ற பெயர் வரும், அப்படிக் கெட்ட பெயர் வாங்கிக்கொண்டு ஜீவித்திருப்பதைவிட இறப்பதே மேல் என்று கூறி போபண்ணா அந்த ஏற்பாட்டுக்கும் ஒத்துக்கொள்ளவில்லை. உத்தய்யதக்கனும் இது தான் சரி என்று அவருக்கு ஆதரவளித்தான். பிரேசர், "போபண்ணாவின் உயர்ந்த தன்மைக்கு அவர் இப்படி நடந்து கொள்வது இயற்கையே. அவர் ரட்சகனாக இருந்தால் நல்லது என்று எனக்கும் தோன்றுகிறது. இருந்தாலும் நமது நட்பின் காரணமாக நான் அவரது முடிவை ஏற்றுக்கொள்கிறேன்," என்றான்.

பொன்னப்பாவாவது லக்ஷ்மீநாராயணய்யாவாவது தற்போதைக்கு ரட்சகராக இருக்கட்டும் என்ற அபிப்ராயம் எழவே இல்லை. அரசனின் தங்கை அல்லது அவள் கணவன் ரட்சகராக இருப்பது என்பது போபண்ணாவுக்கு சம்மதமில்லை. லிங்கராஜரின் மகள் என்ற காரணத்தால் உத்தய்ய தக்கன் கொஞ்சம் அவள் சார்பில் ஆதரித்துப் பேசினான். ராஜகுமாரியின் தாயாதிகளான அவர்களுக்கு தற்கால அதிகாரம் கொடுப்பது சரியல்ல

வென்று பிரேசர் அபிப்ராயப் பட்டான். மற்றவர்களும் சம்மதித்தார்கள்.

இனி மிகுந்திருந்த பேச்சு அரசனின் பெரியப்பாவான அப்பாஜியின் மகன் அரசனாக வேண்டுமென்பது. அப்பாஜியின் பெயரை இவர்கள் எல்லோரும் அறிவார்கள். அப்பாஜியின் மகன் எங்கிருக்கிறான் என்பது யாருக்கும் தெரியாது. பிரேசர், "அப்பாஜி எங்களுடன் பெங்களூரிலிருந்து புறப்பட்டு ஹெப்பாலெயை நோக்கிச் சென்ற தளத்துடன் போனார். அந்த எல்லையை அடைந்து அங்கே இருந்த காவலாட்களால் சுடப்பட்டு இறந்து போனார். குஷால நகரத்திலிருந்து புறப்படும்போது இந்தச் செய்தி எனக்குக் கிடைத்தது." என்று தெரிவித்தான். இனி அவனுடைய மகன் யாரென்று விசாரிக்க வேண்டும்.

அப்பொழுது தீட்சிதர், "அப்பாஜியவர்களின் மகன் இங்கே சந்நியாசி வேஷத்தில் அபரம்பர சுவாமி என்ற பெயருடன் திரிந்து கொண்டிருந்தவன். அவன் பெயர் வீரண்ணா" என்றார்.

மற்றவர்கள் இதை அறியமாட்டார்கள். இதை நிச்சயமாகச் சொல்லக்கூடிய அப்பாஜி இறந்துவிட்டான். "அபரம்பரசுவாமி தான் அரசனாக வேண்டுமென்று கோரினால் அப்பொழுது இதைப் பற்றி யோசிக்கலாம்" என்று பிரேசர் அபிப்ராயப்பட்டான். மந்திரிகள் அதை ஒத்துக்கொண்டார்கள்.

பிரேசர், "கடைசி விஷயம்: அரசருக்கு ஒரு அண்ணன் இருக்கிறார், அவர் அரசராக வேண்டும் என்பது. இந்த அண்ணன் யார், எங்கே இருக்கிறார் என்பது எனக்குத் தெரியாது. நேற்று உங்கள் ஊரிலிருக்கும் பகவதி என்னும் ஸ்திரீ என்னிடம் வந்து இந்த விஷயம் எனக்குத் தெரியும் என்றும் இன்று சபையில் தெரிவிப்பதாகவும் சொன்னார். தாங்களெல்லாம் சம்மதிப்பதானால் சாயங்காலம் சபையில் இந்த சங்கதியை அந்த அம்மை யாரிடம் விசாரிக்கலாம்." என்றான்.

உத்தயயதக்கன், "இது எனக்கும் தெரியும். ஆனால் நான் தெரிவிக்கக்கூடாது என்று ஆணை இருக்கிறது. அந்த அம்மா சொன்ன பிறகு நானும் சொல்லுகிறேன்" என்றான். சாயங்காலம் மறுபடியும் சந்திக்கலாம் என்று தீர்மானித்துக்கொண்டு அவரவர்கள் வீட்டிற்குச் சென்றனர்.

காலையில் தீர்மானித்தபடி பெரியோர்கள், தலைவர்கள், பிரமுகர்கள், செட்டி மக்கள், பொது ஜனங்கள் எல்லோரும் மாலை சபைக்கு வந்து சேர்ந்தனர். எல்லோரும் தத்தம் ஆசனங்களில் அமர்ந்து கொண்டனர். மந்திரிகளும் பிரேசரும் சரியான நேரத்தில் வந்து தமது பீடங்களில் அமர்ந்து கொண்டனர்.

பிரேசர் காலையில் தாங்கள் செய்திருந்த முடிவுகளைச் சுருக்கமாக ஆங்கிலத்தில் குறித்துக்கொண்டு துபாஷின் மூலமாக அவைகளைக் கன்னடத்தில் மொழி பெயர்க்கச் செய்திருந்தான். சபைக்கு வந்ததும் ஒரு கணம் உட்கார்ந்திருந்து பிறகு எழுந்து நின்று தான் ஆங்கிலத்தில் குறித்துக் கொண்டிருந்தவைகளை ஹிந்துஸ்தானியில் சொன்னான். அதன் பிறகு துபாஷை விட்டு கன்னட மொழிபெயர்ப்பைப் படிக்கச் செய்தான்.

அரசனைக் குறிதத முடிவு: ராணியும் ராஜகுமாரியும் அவனோடு போகவேண்டும் என்கிற முடிவு, போபண்ணா ரட்சகர் பதவியை ஏற்றுக்கொள்ள சம்மதிக்காதது; அரசனின் தங்கை அல்லது அவள் கணவன் அல்லது அவர்களிருவரும் அந்தப் பதவியில் இருப்பது உசிதமல்ல என்பது; இவ்வளவையும் படித்துச் சொன்ன பிறகு பிரேசர் மறுபடியும் எழுந்து நின்று, "இதற்கெல்லாம் தாங்கள் சம்மதிப்பீர்களென்று நினைக்கிறேன்" என்றான்.

பெரியவர்களில் ஒருவர், "இவைகளுக்கெல்லாம் மந்திரிகள் சம்மதித்திருக்கிறார்களா?" என்று கேட்டார்.

பிரேசர்: "சம்மதித்திருக்கிறார்கள்."

பெரியவர்; "நாங்களும் சம்மதிக்கிறோம்" என்று கூறி அப்படித்தானே என்று மற்ற பெரியவர்களையும், எதிரிலிருந்த செட்டித் தலைவர்களையும், வெளியே நின்றிருந்த பொது ஜனங்களையும் பார்த்துக் கேட்டான். எல்லோரும் "ஆம், ஆம்" என்றார்கள்.

பிரேசர்: "இனி பாக்கியிருப்பது இரண்டு விஷயங்கள் தான். முதலாவது, அரசரின் பெரியப்பாவின் மகன் வீரண்ணனைக் குறித்தது. அபரம்பரசுவாமி எனப்படுகிறவர் இங்கே இருக்கிறாரா?" நாராயணதீட்சிதன் பிரமுகர்களிடையே உட்கார்ந்திருந்தவன், எழுந்து, "சுவாமிகள் காலையில் இங்கு வந்திருந்தார்.

மத்தியான்னம் ஹெப்பாலெயில் அவரது உறவினர் யாரோ இறந்துவிட்டதாகச் செய்தி வந்து அங்கே போனார்" என்றான்.

பிரேசர், "சரி. அவர் வந்த பிறகு அவரைப் பற்றிய விஷயத்தைப் பேசலாம். இப்பொழுது இன்னொரு விஷயத்தை முடிவு செய்யவேண்டும். அரசருக்கு ஒரு அண்ணன் இருப்பதாக உங்களில் ஒரு பெண்மணி எங்களுக்குத் தெரிவித்துள்ளார். அந்த அம்மாள் வந்து அந்த அண்ணன் யார் என்பதை சபைக்குத் தெரிவிக்கவேண்டும். அந்த அம்மையார் இங்கே வந்திருக்கிறாரா?" என்றான்.

பகவதி ஏற்கனவே வந்து ஊர்ப் பிரமுகர்கள் உட்கார்ந்திருந்த இடத்தில் சிறிது விலகி உட்கார்ந்திருந்தாள். பிரேசர் கேட்டதும் அங்கிருந்து எழுந்து முன்னால் வந்து சபையிலுள்ள பெரியோர்களுக்குக் கைகூப்பி, "இதோ வந்திருக்கிறேன்" என்றாள்.

பகவதி எழுந்து வந்ததைக் கண்டு சபையில் சிறிது பரபரப்பு ஏற்பட்டது. "அட, பகவதியப்பா" என்று ஒருவன், "இவளுக்கும் இதற்கும் என்ன சம்பந்தம்?" என்று இன்னொருவன், "அரசனின் அண்ணனை இவள் எங்கே கண்டாளப்பா?" என்று மூன்றாமவன் பேசிக்கொண்டார்கள். கூட்டத்தில் கசமுசவென்று சத்தம் தொடங்கியது.

பிரேசர் பகவதியிடம், "தாங்கள் என்ன சொல்ல வேண்டுமோ சபைக்குத் தெரிவியுங்கள்" என்றான்.

பகவதி மிகவும் கம்பீரமான குரலில், "லிங்கராஜரின் மகன், வீரராஜனைவிடப் பெரியவன் ஒருவன் உண்டு. லிங்கராஜருக்குப் பிறகு அவனே அரசனாகியிருக்கவேண்டும்; அநியாயமாக அதை நடக்காமல் செய்துவிட்டார்கள். இப்பொழுது எப்படியும் வீரராஜ உடையாரை அரசபதவியிலிருந்து விலக்கியிருக்கிறது. அந்தப் பதவியை அவருடைய அண்ணனுக்குக் கொடுத்து, பழைய அநியாயத்தை நிவர்த்திக்கவேண்டும்," என்றாள்.

மந்திரி பொன்னப்பா, "யாரம்மா இந்த அண்ணன்? எங்களுக்கு யாருக்கும் ஒன்றும் தெரியாதே?" என்றார்.

பகவதி; "லிங்கராஜர் உங்களுக்குத் தெரியாமல் சத்தியத்தை மறைத்து வைத்தார். மந்திரி பசவய்யா அவரது மூத்த மகன்."

இந்த சமாசாரத்தைக் கேட்டு ஆச்சரியப்படாதவர்கள் உத்தய்யதக்கனைத் தவிர வேறு யாரும் கிடையாது. தன் மகளுக்கு ஒரு மகன் இருக்கிறான் என்பதைத் தெரிந்திருந்த

தீட்சிதருக்குக் கூட அந்த மகன் பசவய்யன் என்று தெரிந்திருக்கவில்லை. போபண்ணா, பொன்னப்பா, லக்ஷ்மீநாராயணய்யா எல்லோரும், "நொண்டி?" "நாவிதன்?" "பசவய்யன்!" என்று ஆச்சரியக் குரலெழுப்பி அவனைப் பார்த்தார்கள். சபையிலுள்ள மற்றவர்களும் இதே மாதிரி ஆச்சரியப்பட்டார்கள். இதையெல்லாம் கண்ட பிரேசர், "இது இங்கே யாருக்கும் தெரியாது போலிருக்கிறது. இதற்கு ருஜு என்ன?" என்று கேட்டான்.

பகவதி: "பசவய்யன் என் மகன். இதை அறிந்தவர் இங்கே இருக்கிறார். லிங்கராஜர் என்னை மணந்திருந்தார். இதையும் அவர் அறிவார். சபையில் தங்கள் பின்னால் உட்கார்ந்திருக்கும் தீட்சிதர் எனது பெரிய தந்தையார்."

பிரேசரும் மந்திரிகளும் தீட்சிதரைத் திரும்பிப் பார்த்தார்கள். தீட்சிதர் எழுந்து நின்று, "இவள் எனது தம்பியின் மகள். லிங்கராஜரோடு இவள் வாழ்க்கை நடத்தினாள். இவளுக்கு ஒரு மகன் உண்டு. அந்த மகன் பசவன் என்பது எனக்கு இப்பொழுது தான் தெரியும்," என்றார்.

பிரேசர் பகவதியைப் பார்த்து, "பசவன் தங்கள் மகன் என்பது தங்கள் பெரியப்பாவுக்கே தெரியவில்லையே. இதை ஜனங்கள் எப்படி நம்புவார்கள்?" என்று கேட்டான்.

"எங்கள் பெரிய தகப்பனார் இதுபோன்ற விவகாரங்களைக் காதில் போட்டுக்கொள்பவரல்ல. அவருக்கு இந்த சங்கதியைத் தக்க சமயத்தில் சொல்வதாக நான் சொல்லியிருந்தேன். அந்த சமயம் இப்பொழுது தான் கிடைத்திருக்கிறது. ஆனால் இந்த விஷயம் உத்தய்யதக்கனுக்குத் தெரியும்."

உத்தய்யதக்கன் எழுந்து நின்றான். பகவதியைப் பார்த்து, "ஆமாம் போம்மா. நீ லிங்கராஜருக்கு ராணியை விட மேலாக இருந்தாய். இந்தக் குழந்தையையும் பெற்றாய். ஆனால் என்ன பிரயோஜனம்? கல்யாணம் கல்யாணம் என்று சொல்லி உன்னை ஏமாற்றினார், துரத்தினார். மகனின் காலை முறித்தார்; நாய்களின் மத்தியில் எறிந்தார். இதைப் பார்த்துக் கொண்டிருந்த எனக்கும் தொட்டவ்வாவுக்கும் நீங்களாக இதை வெளியே சொல்லாதீர்கள் என்று ஆணையிட்டார். நாற்பது வருஷம் ஆகிவிட்டது. இனி உன் மகன் எங்கே அரசனாவது?" என்றான்.

பகவதி: "ஆண் ஏமாற்றினாலும் பெண் மனைவியாக வாழ்ந்தது பொய்யா? அப்பன் மகனுக்கு அநியாயம் செய்தான். பெரியவர்கள் அதற்கு இப்பொழுது பரிகாரம் செய்யுங்கள்."

போபண்ணா: "என்னத்தைப் பரிகாரம் செய்வது? அரசனையே வேண்டாமென்று விலக்கியவர்கள் அரசனின் நாயாக வாழ்ந்தவனை அரசனாக்குவார்களா?"

பகவதி: "ஏன் நாயாக வாழ்ந்தான்? மந்திரிகளோடு சமமாக மந்திரியாக வாழவில்லையா?"

போபண்ணா: "அப்பொழுதே சொன்னேன் அது பெரிய தவறு என்று. இப்பொழுதும் சொல்லுகிறேன், இந்தப் பேச்சு வேண்டாமென்று. நொண்டி அரசனின் ஆப்த மந்திரி. அரசன் போகும் இடத்திற்கு அவனும் போகவேண்டியது தான்."

பகவதி; "ஏன் அவனை நொண்டி என்று சொல்லி வாயை அசுத்தப் படுத்திகொள்கிறீர்கள். பிறக்கும் பொழுது அவனும் உங்களைப் போலத்தான் பிறந்தான். அநியாயக்காரர்கள் அவன் காலை முறித்தார்கள்."

போபண்ணா, "சரி போதும் இந்தப் பேச்சு" என்று கூறி பிரேசர் பக்கம் திரும்பி, "பசவன் என்னவாக வேண்டுமானாலும் இருந்து விட்டுப் போகட்டும். அரசருக்கு அண்ணன் என்ன, அப்பனாக வேண்டுமானாலும் இருக்கட்டும். அவனை நாங்கள் யாரும் அரசன் என்று ஏற்றுக் கொள்ளமாட்டோம்" என்று சொல்லி சபையின் பக்கம் திரும்பி "என்ன செட்டியார்களே, பெரியோர்களே?" என்று கேட்டார். எல்லோரும் "ஆம், ஆம்" என்று பதிலளித்தார்கள்.

167

பகவதி இன்னும் என்ன சொல்லியிருப்பாளோ, மேலே பேச்சு எப்படி வளர்ந்திருக்குமோ, பிரேசர் நடந்த விஷயங்களையெல்லாம் துபாஷின் மூலமாக நன்றாகக் கேட்டுத் தெரிந்துகொள்வதற்குள் அவனது கீழதிகாரி தளபதி கார்பெண்டர் குதிரையின் மீதமர்ந்தே மேடைவரை வந்து விட்டான். குதிரையிலிருந்து இறங்கி ராணுவ முறையில் பிரேசருக்கு வணக்கம் செலுத்தி விட்டுத் தன் பாஷையில், "நால்கு நாடு படை திரும்பி வந்து கொண்டிருக்கிறது; அரசனையும் பசவனையும் அழைத்துக் கொண்டு வருகிறது" என்ற செய்தியைத் தெரிவித்தான்.

பிரேசர், "அப்படியா? ரொம்ப நல்லதாகப் போயிற்று" என்று சொல்லி துபாஷிடம், "இதை எல்லோருக்கும் தெரியப்படுத்து" என்றான்.

துபாஷ் இந்தச் செய்தியைச் சொன்னதும் வெளியே நின்றிருந்தவர்களெல்லாம் சந்தோஷ ஆரவாரம் செய்தனர். பசவன், அரசன் இருவரையும் பிடித்துக்கொண்டு வருகிற சேனையைப் பார்ப்பதற்காக அரண்மனையின் வெளி வாசற்கதவை நோக்கித் தங்கள் கண்களைத் திருப்பினர்.

சில நிமிடங்களில் அந்த சேனை கண்ணில் பட்டது. முன்பக்கம் ஆங்கில தளபதி; பின்னால் இரண்டு குதிரை வீரர்கள், ஒரு டோலி; அதற்குப் பின்னால் நான்கு குதிரைவீரர்கள்; அதன் பிறகு இன்னொரு டோலி; மிகுந்தவர்கள் அதன் பின்னால். அவர்களெல்லாம் போதுமான அளவு வேகமாகவே வந்து கொண்டிருந்தார்கள். ஆங்கில தளபதி குதிரையினின்றும் இறங்கி முதலில் வந்தவன் செய்தது போலவே கர்னல் பிரேசருக்கு வணக்கம் செய்து, "நமது காரியம் கைகூடியது. அரசரைப் பிடித்து வந்திருக்கிறோம். ஆனால் பசவய்யா அவர்கள் குண்டு பட்டு இறந்து விட்டார் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். டோலியில் அவரது பிணத்தைப் படுக்க வைத்துக்கொண்டு வந்திருக்கிறேன்," என்றான். துபாஷ் போபண்ணாவிடம் இதன் பொருளைச் சொன்னான். போபண்ணா, "என்னது? நொண்டி செத்துப் போய்விட்டானா?" என்றார்.

இது பகவதியின் காதில் விழுந்தது. அவள் இதயம் உடைந்தது. அவள் "என்னது?" என்று அலறினாள். துபாஷ், "பசவய்யா குண்டு பட்டு இறந்து விட்டாராம்" என்று உரத்த குரலில் தெரிவித்தான்.

இதற்குள்ளாக படைவீரர்கள் சொல்ல, செய்தி கூட்டத்தாரிடையே பரவி விட்டது.

தன் மகன் இறந்து விட்டான். அவனது சடலம் பின்னால் டோலியில் இருக்கிறது என்பதை ஒரு கணத்தில் பகவதி அறிந்து கொண்டாள். "ஐயோ மகனே! போய்விட்டாயா?" என்று அலறியபடி வாயிலும் வயிற்றிலும் அடித்துக்கொண்டு "ஐயோ, ஐயோ" என்று பிணம் இருக்கும் டோலியை நோக்கி ஓடினாள். இரண்டாவது டோலியின் அருகில் இருந்தவர்களுக்கும் அப்பொழுது பசவன் அவளுடைய மகன் என்பது தெரிந்து விட்டிருந்தது. அவர்கள் இவளுக்கு வழி விட்டு விலகி நின்றனர். பகவதி முழங்

கால்களை ஊன்றிக்கொண்டு நின்று டோலியினுள் தலையை நுழைத்து செத்த மகனின் மோவாயைப் பிடித்துக்கொண்டு, "மகனே, நீ அரசனாகவேண்டுமென்று எவ்வளவு பாடுபட்டேன். எல்லாம் வீணாகப் போயிற்றே" என்று அழுதாள்.

அழுகை எதுவுமே தூய்மையானது; மற்ற அழுகைகளைவிட ஒரு தாயின் அழுகை இன்னும் தூய்மையானது. மிருகங்களிடையேயும் இது உண்மை. மனிதர்களைப் பற்றிச் சொல்லவேண்டுமா? செத்தது பசவனாக இருந்தாலும் அவனுடைய இந்தத் தாயின் துயரத்தைக் கண்டு ஜனங்கள் வருந்தினர். "பாவம், பெற்ற வயிறு துடிக்காமலிருக்குமா?" என்று நொந்தனர்.

பிரேசர் போபண்ணாவுடன் கலந்தாலோசித்து சபையை இப்பொழுது முடித்துவிடலாம் என்று நிச்சயித்தான்; தன் பக்கலிலிருந்த பெரியவர்களிடம் ஒரு நிமிடம் இருக்கச் சொல்லி தான் அரசனின் டோலி அருகில் சென்றான். அரசனுக்கு மரியாதையாக வணக்கம் செலுத்தி, "வரவேண்டும்" என்று கூறி அவனை டோலியிலிருந்து இறக்கினான்.

டோலியிலிருந்து இறங்கிய அரசன் நிற்க முடியாமல் நடுங்கிக் கொண்டிருந்தான். பத்து நாட்களாக நோயாளியாக இருந்தது ஒரு காரணம்; இன்றைய நிகழ்ச்சிகளெல்லாம் மற்றொரு காரணம்; இனி என்ன கதி என்ற கவலை மற்றொரு காரணம். அவன் முகமெல்லாம் வியர்த்திருந்தது; அவன் மிகவும் தாழ்ந்த குரலில், "நமஸ்காரம், துரையே" என்றான்.

பிரேசர், "நமஸ்காரம் அரசே. நான் செய்ய வந்திருக்கும் காரியம் சந்தோஷமானதல்ல. அதைச் செய்யவேண்டியது என்னுடைய கடமையாக இருக்கிறது; ஆனால் அதை நிறைவேற்றுவதில் நான் தங்கள் பேரில் எந்த விதத்திலும் கடுமையாக நடந்துகொள்ளமாட்டேன். தமது பதவிக்குத் தகுந்த எல்லா மரியாதைகளையும் கொடுப்பேன். இப்பொழுது தாங்கள் தங்களது அரண்மனைக்குள் வரவேண்டுமாகக் கோருகிறேன். நான் பிறகு தங்களைப் பார்க்கிறேன்" என்றான்.

அரசன் ஏதும் சொல்லவில்லை, பிரேசர் அவனை அழைத்துக் கொண்டு அரண்மனை முகப்பில் பிரவேசித்தான். அங்கேயிருந்தவர்களில் சிலர் அரசனுக்குக் கை கூப்பினார்கள்; மற்றவர்கள் பேசாதிருந்தனர். பிரேசர் அரசனுடன் அவன் அறை வரையிலும் சென்று, அவனை உள்ளே அனுப்பிவிட்டு ஆங்கில தளபதி ஒருவனை அங்கேயே இருக்கச் சொல்லி ஏற்பாடு செய்து விட்டுத்

திரும்பினான். போபண்ணாவுடனும் மற்ற மந்திரிகளுடனும் ஒரு ரண்டு வார்த்தைகள் பேசி விட்டு, "இன்றைய நிகழ்ச்சிகள் முடி வடைந்துள்ளன. இதன் முடிவுகளை நாளை தெரிவிக்கிறோம். இப்பொழுது எல்லோரும் போகலாம்" என்று தெரிவித்தான். பிறகு மந்திரிகளைப் பார்த்து, "உங்கள் பகவதி என்கிற அம்மை யார் எங்களுடைய விஜயத்திற்குப் பெரிதும் காரணமாக இருந் தார். அவருக்கு ஏற்பட்டுள்ள துயரத்திற்கு நான் அநுதாபம் காண்பிக்கவேண்டும். தாங்களும் வருவதானால் அவசியம் என் னோடு வாருங்கள்" என்றான். பிரமுகர்களும் மந்திரிகளும் அவனு டன் சென்றார்கள்; அவன் பகவதியின் அருகில் வந்தான், வரும் வழியில் தளபதி ஜாக்சன் மூலமாக பசவன் இறந்த விவரங்களைக் கேட்டுத் தெரிந்துகொண்டார்கள்.

168

சபை முடிந்தாலும் ஜனங்களெல்லாம் புறப்பட்டுச் செல்லவில்லை. பகவதியின் துயரத்தைப் பார்த்துக் கொண்டு பலர் நின்றனர். அவர்களில் அநேகர் பெண்மணிகள். ஏதும் அறியாத இளம் சிறுமி முதல் எல்லாம் முடிந்தது என்று சொல்லக்கூடிய வயதான கிழவி வரை, கந்தல் உடுத்த வாடிய முகத்தினளான பிச்சைக் காரி முதல் நகை நட்டுக்கள் அணிந்துள்ள பணக்கார வீட்டு ஸ்திரீ வரையில், பலவகைப் பெண்கள் அங்கே நிறைந்து, தங்களைப் போல ஒரு பெண்ணின் துயரத்தைக் கண்டு கண்ணீர் வடித்தனர்.

பிரேசர் டோலியின் அருகில் வந்து தனது தொப்பியைக் கையிலெடுத்துக் கொண்டு குனிந்து வணக்கம் செலுத்திவிட்டு பகவதியிடம், "அம்மா, தங்களுக்கு நேர்ந்துள்ள இந்த துக்கத்தில் நானும் பங்குகொள்கிறேன். தங்கள் துயரத்தைத் துடைப்பது கடினம் தான். இருந்தாலும் தங்கள் மகனுக்கு உசிதப்படி சம்ஸ்காரங்கள் நடத்தவேண்டும். அதிக காலதாமதம் செய் யாமல் நாம் அதை நிறைவேற்ற வேண்டும்" என்றான்.

பகவதி, "நீங்கள் இவனை இதுவரையில் பார்த்துக்கொண்டது போதும். இனி என்ன செய்யவேண்டியிருக்கிறது? மண்ணில் புதைக்கவேண்டியதுதானே? பிணத்தை நாய்க்குப் போடுங்கள்

என்று சொல்லாமல் புதைக்கச் சொல்லி உத்தரவிட்டால் போதும். நான் மற்றவைகளைப் பார்த்துக்கொள்கிறேன்'' என்றாள்

"இறந்தவரின் தாய் என்பதனாலேயே எனக்குத் தங்கள் வார்த்தைகள் மதிப்புக்குரியவை. எங்கள் வருகைக்குக் காரணமாக இருந்து தாங்கள் மேலும் எங்களது மரியாதைக் குரியவராக இருக்கிறீர்கள். தங்கள் மகன் இறந்துவிட்டது உண்மை. ஆனால் எங்கள் தளபதி சொல்கிறார்: இது எங்களுக்குத் தெரியாமல் நடந்து விட்டது. இது விஷயத்தில் தாங்கள் பொறுமையோடு எங்களுடன் நடந்துகொள்ள வேண்டும்.''

"இல்லாவிட்டால் என்ன செய்வீர்கள்? உங்களுக்கு ஏன் தொந்தரவு? நீங்கள் இனி போகலாம். இந்த உடலை மட்டும் எனக்கு அளிக்க உத்தரவிடுங்கள் போதும்.''

"தடையில்லாவிட்டால் ஈமச் சடங்குகளுக்குத் தங்களுடன் நானும் வருகிறேன்.''

"ஈமச் சடங்குகளை நான் இங்கே செய்வதில்லை. எனது கோவில் அருகில் செய்கிறேன். தாங்கள் அங்கே வரவேண்டிய தேவை இல்லை.''

"சரி தாயே. தாங்கள் துயருற்றிருக்கும் இச்சமயத்தில் தங்களை வற்புறுத்தி எதுவும் செய்யக்கூடாது.''

என்று கூறி பிரேசர் தன் கையின் கீழிருந்த காப்டன் லெஹார்டியிடம், "பத்து பேரை வைத்துக்கொண்டு இவருக்கு வேண்டிய உதவியைச் செய்'' என்றான். தொப்பியை முன்னால் நீட்டி தலை குனிந்து வழக்கமான மரியாதையை மறுபடியும் செலுத்திவிட்டு, நிமிர்ந்து மற்றவர்களைப் பார்த்து, "இனி நாம் புறப்படலாமல்லவா?'' என்று கேட்டான். அவர்கள் சம்மதித்து அவனுடன் புறப்பட்டார்கள். தீட்சிதர் ஒருவர் மாத்திரம் அங்கேயே நின்றார்.

169

பகவதி அவரது கால்களின்மீது புரண்டாள்; அவரது முழங்கால்களைக் கட்டிக்கொண்டு, "இது என்ன அண்ணய்யா, இப்படி

ஆகிவிட்டதே? பதவி வருகிறதென்று நினைத்துக் கொண்டிருக்கும் பொழுது செத்துப் பிணமாகிவிட்டானே," என்று கதறினாள்.

தீட்சிதர் கண்ணீர் பெருக்கினார் "எழுந்திரம்மா, எழுந்திரு. நீ தெரியாதவளா? பகவதி உபாசனை செய்துள்ள உனக்கு நான் சொல்லிக் கொடுக்கவேண்டுமா? எழுந்திரு; மேலே ஆகவேண்டியவைகளைப் பார்," என்றார்; குனிந்து மகளின் தோள்களைப் பற்றி அவளை எழுப்பி நிறுத்தினார்.

பகவதி எழுந்து நின்றாள். "இதென்ன இப்படி ஆகிவிட்டது?" என்றாள்.

"பகவான் இச்சை நடந்துவிட்டது."

"ஜோசியம் பொய்யாகிவிட்டது."

"இதையெல்லாம் பிறகு பேசிக்கொள்வோம். இப்பொழுது கிரியைகளுக்கான ஏற்பாடுகள் நடக்கட்டும்."

"ஐயோ, கிரியையா? நான் எப்படி அதைச் செய்வேன்? அதைச் செய்து நான் உயிர் வாழமாட்டேன். ஆசிரமத்தின் பின்னால் இருக்கும் மலையின் மீது ஏறி உச்சியிலிருந்து கீழே விழுந்து செத்துப்போகிறேன்."

"சரியான யோசனை. நீ அப்படிச் செய்வதைப் பார்த்துவிட்டு நானும் அப்படியே விழுந்து செத்துப்போகட்டுமா? இருவருடைய உபாசனையும் பயன்பட்டாற் போலாகும்."

பகவதி திடுக்கிட்டு தீட்சிதரின் முகத்தைப் பார்த்தாள்.

"மகன் போய்விட்டான், அப்பா மாத்திரம் ஏன் இருக்க வேண்டும் என்றால் மலை உச்சியில் ஏறு, விழுந்து செத்துப்போ. அப்பா வேண்டும் என்றால் போ, ஈயக் கடன்களை முடித்துவிட்டு என் முன்னால் வா."

பகவதி தீட்சிதரின் அன்புத்தன்மையை அறுத்தெரிய முடியாதவளானாள். எப்படியோ என்னவோ சொல்ல முடியாத வகையில் அவள் துயரம் அவளுக்குக் கட்டுப்பட்டது. அவள், "சரி அண்ணய்யா, அந்தப் பேச்சை விட்டுவிட்டேன்" என்றாள்.

தீட்சிதர்: "சரி, புறப்படு. எவ்வளவு நேரமானாலும் திரும்பி வந்து என்னைப் பார். கோவிலில் இருப்பேன்."

பகவதி மகனின் சடலத்தைத் தூக்கச் செய்து புறப்பட்டாள். தீட்சிதர் வீட்டுக்கு வந்தார். வீட்டிலுள்ளவர்களை யெல்லாம் குளிக்கச் சொன்னார். தான் கோவில் புஷ்கரிணியில் குளித்தார். பூஜைகளை யெல்லாம் வழக்கம்போல முடித்துக்கொண்டு

மண்டபத்திற்கு வந்து பகவதியை எதிர்பார்த்துக் கொண்டு உட்கார்ந்தார்.

அன்று இரவு ஊரில் அநேகமாக யாருமே தூங்கவில்லை. குடகின் சரித்திரத்தில் அன்று ஒரு முக்கியமான திருப்ப நாள். நிசியானாலும் விழித்துக்கொண்டிருந்த ஊரின் மையத்திலிருந்த ஓங்காரேஸ்வரன் கோவிலில் அந்த இரவின் இருளிலும் குளிரிலும் வேறு யாருக்கும் மதிப்பற்றதாக இருந்த ஒரு பெண்ணின் உயிரைக் காப்பதற்காக தீட்சிதர் உட்கார்ந்து கொண்டிருந்தார்.

இரவு மணி இரண்டு. ஏன் அவள் வரவில்லையென்று தீட்சிதர் இரண்டு முறை கவலைப்பட்டார். வெகுநேரம் கழித்து பகவதி வந்தாள். "வந்துவிட்டேன் அண்ணய்யா" என்றாள். தீட்சிதர் அவளை அருகே வரச் சொன்னார். "படுத்துக்கொள், பாப்பா. ஓங்காரனை மனத்தில் நினைத்துக்கொள். அவன் நாமத்தின் நினைவில் துயரம் மறந்துவிடும்," என்றார்.

பகவதி மண்டபத்தின் ஒரு சுவரருகே படுத்தாள். "நீங்கள் படுக்கவில்லையா, அண்ணய்யா?" என்று கேட்டாள். தீட்சிதர், "படுக்கிறேன் பாப்பா. ஜபம் சிறிது பாகியிருக்கிறது. அதை முடித்துவிட்டுப் படுக்கிறேன்," என்றார்.

170

பாரதி வெளியாரின் மோசத்தாலும் பாதி காவலாளிகளின் அஜாக்கிரதையினாலும் சிறைப்பட்ட அரசன் பசவனைக் கொன்ற பிறகு மாதப்பன் இனி தனக்கு ஏதும் வேலை இல்லை என்பதை அறிந்து கொண்டான். "உங்களுக்குக் கீழ்ப்படிந்து நடக்கிறேன்" என்று வென்றவர்களுக்கு வாக்குக் கொடுத்து அரண்மனையிலிருந்த ஆள் படைகளை அழைத்துக்கொண்டு ஆயுதங்களையும் திரட்டிக்கொண்டு வெற்றி பெற்றவர்களுடன் மடிகேரிக்கு வந்தான். அரண்மனையை வந்தடைந்ததுமே முத்தப்பனின் அனுமதியைப் பெற்று நடந்த சங்கதிகளையெல்லாம் ராணிக்குத் தெரிவிப்பதற்காகச் சென்றான்.

அரசன் சிறைப்பட்டு வருகிற செய்தியை அறிந்த ராணி உப்பரிகையின் சாளரத்தின் வழியாக வெற்றிகொண்ட சேனை வந்து

கொண்டிருப்பதைப் பார்த்தவாறு நின்றிருந்தாள். அரசன் பல்லக்கிலிருந்து இறங்கியது முதலாயவைகளைக் கவனித்த அவள். அவனை எதிர்கொண்டழைப்பதற்காகக் கீழே இறங்கி வந்தாள். பகவதி துயரத்தால் அலறியதையும் அவள் கவனித்தாள். ஒரு சேவகனை அனுப்பி அதன் காரணம் என்னவென்பதையும் தெரிந்துகொண்டாள். பகவதி தனது மாமனாரின் ஆசைக் கிழத்தி, பசவன் அரண்மனைப் பிள்ளை என்பதை அறிந்ததும், அவள் பிரமித்துப் போய்விட்டாள்.

பிரேசர் அரசனை அழைத்துக்கொண்டு வந்து அவனது அறை வாயிலில் விட்டுச் சென்றதுமே ராணி மகளுடன் அரசனைக் காணச் சென்றாள். அரசன் மஞ்சத்தின் மீது சாய்ந்தவாறு படுத்திருந்தான். ராணி மகளை அரசனின் அருகில் உட்கார வைத்துவிட்டுத் தான் அவன் பாதங்களின் அருகில் அமர்ந்தாள்.

பணிப்பெண் ஒருத்தி வந்து, "மாதப்பன் வந்திருக்கிறார், பார்க்கவேண்டுமாம்" என்று ராணியிடம் அறிவித்தாள். ராணி வெளியே வந்தாள்.

மாதப்பன் நால்கு நாடு அரண்மனையில் நடந்த சங்கதிகளை யெல்லாம் தெரிவித்தான். அவன் சொன்னதிலிருந்து பசவனை அரசனே கொன்று விட்டான் என்பது ராணிக்குத் தெரியவந்தது. "இது என்ன விதியின் விளையாட்டு" என்று அவள் மனம் நடுக்க முற்றது.

தொட்டவ்வா வந்திருக்கிறாளென்று கேள்விப்பட்டு ராணி மாதப்பனை அரசனின் அருகில் இருக்கச் சொல்லி விட்டு தான் தனது அறைக்குச் சென்றாள். தொட்டவ்வாவை வரவேற்று, முதலில் அரசனின் உடல் நிலை குணப்பட்டு விட்டதா என்று கேட்டுத் தெரிந்து கொண்டாள். பிறகு, "பசவன் யார், பகவதி யார் என்பதெல்லாம் உனக்குத் தெரிந்துதானே இருந்தது தொட்டவ்வா. அதைப் பற்றிக் கொஞ்சம் கூட வெளி விடாமல் என்னிடமிருந்து மறைத்து வைத்திருந்தாயே," என்றாள்.

தொட்டவ்வா: "என்னுடைய தவறு எவ்வளவோ அம்மாஜி. தாங்கள் அதையெல்லாம் மன்னித்து என்னைக் காப்பாற்றவேண்டும். எல்லாம் எனக்குத் தெரிந்த விஷயம்தான். ஆனால் வாய் திறக்க முடியாமல் இருந்தது."

"ஏன்?"

"ஆணையிட்டிருந்தாரம்மா பெரிய ராஜா அன்றைக்கு. அப்பொழுது அவர் அரசரே அல்ல, அந்த என் தங்கையின் மகனைப் பார்த்தபோது, எறும்பும் வெல்லமும் ஒட்டிக்கொண்டிருப்பதை விட அதிகமாக ஒட்டிக்கொண்டிருந்தார்கள் இருவரும். குழந்தையும் அரசருக்கு மிகவும் பிரியமானவனாகத் தான் இருந்தான். ஆனால் ராணி இந்த அரசனைப் பெற்றதும் அவருக்கு மூத்த மகன் வேண்டாதவனாகி விட்டான். என் தங்கை நச்சரித்தாள்; மகனை மாத்திரம் வைத்துக்கொண்டு அதன் தாயையும் அவள் தாயையும் நாடு கடத்தினார். குழந்தையைக் கொண்டு வந்து என் மடியில் போட்டார். "டீ தொட்டி, எடுத்துக்கொள் உன் தங்கையின் பேரனை. வளர்த்துக்கொள் நீயே. குழந்தை யாருடையதென்று யாரிடமாவது சொன்னாயோ ஜாக்கிரதை. தானாக விஷயம் வெளிப்பட்டு யாராவது அப்படியா என்று கேட்டால நீ உண்மையைச் சொல், பரவாயில்லை. நீயாக வாய் திறக்காதே. ஆணை வைத்துக்கொள் என்றார். அப்படியே வைத்துக்கொண்டேனம்மா. ஒன்றல்ல மூன்று ஆணை வைத்துக்கொண்டேன். அதைச் சொல்லக்கூட எனக்கு வெட்கமாக இருக்கிறதம்மா. 'தவறி நடந்தாயோ, அன்றைக்கே நீயும் உன் பேரனும் சாக வேண்டியது தான்' என்றார். போய் விட்டார். நான் போனால் போகிறேன். ஆனால் இந்த அநாதையை ஏன் கொல்லவேண்டும் என்று உதட்டுக்குப் பூட்டு போட்டு வைத்தேன் அம்மா. இன்று இந்தக் கண்ணராவியைப் பார்த்தேன்."

தொட்டவ்வாவின் கண்களில் நீர் நிரம்பியிருந்தது. ராணியின் கண்களும் பனித்தன.

"உன் ஆணை இருக்கட்டும். அரச குமாரன் நாற்பது வருஷங்கள் நாவிதனாக வாழ்ந்தாயிற்று."

"குப்பையில் கிடந்த குந்துமணி அம்மா. குந்துமணியானாலும் குப்பை குப்பை தானே? அவன் கேட்டுக்கொண்டு வந்தது அவ்வளவுதான். அதை அநுபவித்துவிட்டுப் போய்விட்டான். எல்லோர் கதியும் அவ்வளவு தானம்மா."

ஒரு கணம் பேசாமலிருந்து விட்டு ராணி, "பாரம்மா. அந்த ஒரு ஜீவன் போனது அரசருக்கு நண்பன், ஊழியன், மந்திரி எல்லாரும் போய்விட்ட மாதிரி. நாளைக்கு எங்கேயோ எப்படியோ? எல்லாம் நான் தான் பார்த்துக்கொள்ளவேண்டும். இன்றைக்கு மாதப்பன் இருக்கிறான்; நீயும் கதவண்டை இரு. தெரிந்தவர்களாக இருக்கட்டும்," என்றாள்.

தொட்டவ்வா, "உத்தரவு அம்மாஜி" என்று கைகூப்பி விட்டுச் சென்றாள்.

ராணி "அப்படியே. முடிந்தால் பேரனின் உடலை அடக்கம் செய்கிற வேலையையும் கொஞ்சம் கவனித்துக்கொள்" என்றாள். தொட்டவ்வா நின்று, "சரியம்மா" என்று சொல்லி விட்டு வெளியே நடந்தாள்.

171

மறு நாள் காலையில் பிரேசர் மந்திரிகளெல்லோருடனும் பேசி விட்டு அரண்மனைக்கு ஒருவனே வந்தான். அரசனைப் பார்த்து அதுவரையில் முடிவு செய்யப்பட்டிருந்த சங்கதிகளை அவனுக்கு விவரித்துச் சொன்னான்.

வீரராஜன், தானே மேற்கொண்டும் அரசனாக இருக்கவேண்டுமென்றும் தான் எல்லா விஷயங்களிலும் ஆங்கிலேயர்களுக்குக் கீழ்ப்படிந்து நடப்பதாகவும் சொன்னான். பிரேசர், "அது முடியாத காரியம்; வேண்டுமானால் அரசனின் மகள் அரசபதவியை ஏற்றுக்கொள்ளலாம், அதுவும் கவர்னர் ஜெனரல் விருப்பத்தைப் பொறுத்தது. இப்பொழுது அரசன் வேலூருக்குச் சென்று அங்கே முன்பு திப்புசுல்தானின் மகனின் வாசஸ்தலமாக இருந்த கட்டடத்தில் வசிக்கவேண்டும்; அவன் ராணியும், மகளும், அளவோடு பரிவாரமும் அவனோடு வேலூருக்கு வருவார்கள்; அரசனுக்கு மாதம் ஆறுபிரம் ரூபாய் உபகாரச் சம்பளம் கொடுக்கப்படும்", என்று தெரிவித்தான். இவை எவற்றையும் வீரராஜன மீறும்படியாக இல்லை.

"தாங்கள் இங்கிருந்து எவ்வளவு சீக்கிரம் புறப்படுகிறீர்களோ அவ்வளவுக்கு எல்லாவிதத்திலும் நல்லது. தாங்கள் எப்பொழுது புறப்படக் கூடும்?"

"அரசனல்ல என்ற பிறகு நான் ஏன் ஒரு நாழிகை கூட இங்கிருக்கவேண்டும்? இப்பொழுதே புறப்படுகிறேன். அனுப்பி விடுங்கள்."

"சரி, இந்த விஷயத்தை ராணியவர்களுக்குச் சொல்லியனுப்பியிருக்கிறேன். இங்கிருந்து தாங்கள் எடுத்துச் செல்ல விரும்பும்

ககை நட்டுக்கள், துணிமணிகள், அரண்மனைக்குச் சொந்தமான பொருள், பண்டம், பதார்த்தம் எல்லாவற்றையும் தாங்கள் எடுத்துச் செல்லலாம். கூடவே எடுத்துக் கொண்டுபோக முடிந்தவைகளை எடுத்துக் கொண்டுபோகலாம். மற்றவைகளை நாங்கள் பிறகு அனுப்பிக் கொடுக்கிறோம்.''

"அதெல்லாம் என்னிடம் சொல்லாதீர்கள்: பசவனிடம்..."

பழக்க பலத்தால் பசவனின் பெயர் இயற்கையாக அரசனின் நாவில் வந்து விட்டது. அவன் வாக்கியத்தை முடிக்கவில்லை. "ஓ, முண்டத்தைக் கொன்று விட்டேனு" என்று மனம் வருந்தி மௌனமானான். இப்பொழுது அவன், பசவன் தன்னைப் பிடித்துக் கொடுக்கவில்லை, சுரங்க விஷயத்தை பகவதி தெரிவித்தாள், இவனுக்கோ பசவனுக்கோ ஏதும் அபாயம் ஏற்படாமல் இருவரையும் பிடித்து வரவேண்டுமென்று அவள் துரையிடம் வேண்டிக்கொண்டிருந்தாள் என்பதையெல்லாம் அறிந்து கொண்டிருந்தான்.

பிரேசர், "உண்மை. இதையெல்லாம் மற்றவர்கள் பார்த்துக் கொள்வார்கள், எல்லா ஏற்பாடுகளும் ஆன பிறகு நான் தங்களுக்குத் தெரிவிக்கிறேன்," என்றான் அரசனின் அநுமதி பெற்றுக் கொண்டு புறப்பட்டான்.

அரசன், ராணி, ராஜகுமாரி இவர்கள் ஊரை விட்டுப் புறப்படுவதற்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளையும் செய்ய போபண்ணுவின் சூசனைப்படி லக்ஷ்மீநாராயணய்யா நியமிக்கப்பட்டார். லக்ஷ்மீநாராயணய்யா, "நான் எந்த முகத்துடன் ராணியைப் போய்ப் பார்க்கட்டும்? மேலும் இதிலே நான் செய்யவேண்டியது என்ன இருக்கிறது? இது முக்கால் வாசி ராணி வாசத்தைப் பொறுத்த விஷயம்", என்று கூறி வீட்டுக்கு வந்து எல்லா விஷயங்களையும் தாயாரிடம் சொன்னார். ஏற்பாட்டின் விவரங்களை ராணிக்கு விவரிதது பிரயாணத்திற்குத் தயாராயிருங்கள் என்று சொல்வதற்காக கிழவியை அனுப்பினார். சாவித்ரம்மா, "அநிஷ்டத்திற்கு சனீஸ்வரன் என்றபடி இந்த அசுப காரியத்திற்கு மொட்டைத் தலை தான் சரியப்பா," என்றாள். அரண்மனைக்கு வந்து அழுதுகொண்டே எல்லாவற்றையும் ராணிக்குத் தெரிவித்தாள்.

கௌரம்மாஜி அவள் சொன்னவைகளையெல்லாம் அமைதியோடு கேட்டுக்கொண்டாள். ஆட்களை அழைத்து தனக்குச் சொந்தமானதும் அரண்மனைப் பொக்கிஷத்திலுள்ளதுமான

துணிமணிகள், நகை நாணயங்களைப் பத்து பெட்டிகளில் நிரப்பச் செய்தாள். தங்கக் கட்டிகள், ஆபரணங்கள் இவைகளை நான்கு பெட்டிகளில் நிரப்பச் செய்தாள். ஏழை பாகைகளுக்குக் கொடுப்பதற்கென்று நகை, துணி மணிகள், சுவாமிக்கு அர்ப்பணம் செய்வதற்காக ஐந்து ரத்தினங்கள், ஆயிரம் பொன் இவைகளைத் தனியாக எடுத்து வைக்கச் செய்தாள்.

"நாங்கள் என்னவோ புறப்பட்டுச் செல்லுகிறோம். எங்கள் ஆள், படைகளின் பாடென்ன? இது தெரிந்தால் நாங்கள் மன அமைதியோடு புறப்பட்டுச் செல்லலாம்," என்று அவள் லக்ஷ்மீநாராயணய்யாவுக்குச் சொல்லியனுப்பினாள். அவர் பிரேசர் துரையைக் கண்டு இது விஷயமாகப் பேசி விட்டு அரண்மனைக்கு வந்தார். "முறையாக அரண்மனைச் சேவகத்தில் இருந்து வரும் யாரையும் நாம் கதியில்லாதவர்களாக விட்டுவிட மாட்டோம். வயதானவர்களுக்கு உபகாரச் சம்பளம் கொடுப்போம். வாலிபர்களுக்கு வேலை கொடுப்போம். இல்லாவிட்டால் நிலம் கொடுப்போம். அரசர் வைத்துக்கொண்டிருந்த பெண்களை மாத்திரம் நாங்கள் ஆதரிக்க முடியாது" என்று அவன் சொன்னதை ராணியிடம் தெரிவித்தார்.

ராணி ஆட்களுக்கெல்லாம் இதைத் தெரிவித்தாள். தொட்டவ்வாவை அழைத்து, "அந்தப்புரப் பெண்கள் யாராவது கூட வர வேண்டுமா என்று அரசரைக் கேட்டுக்கொண்டுவா" என்றாள்.

தொட்டவ்வா சென்று அரசனைக் கேட்டாள். அவன் நாட்டை இழந்து விட்டிருந்தபோதிலும் இந்த விஷயத்தில் அக்கறை இழந்துவிடவில்லை. வேறு வேறு காரணங்களுக்காகத் தனக்குப் பிடித்திருந்த நான்கு பெண்கள் தங்களுடன் வரட்டும் என்றான்.

தொட்டவ்வா திரும்பி வந்து இதை ராணியிடம் தெரிவித்தாள். கௌரம்மாஜி சிறிதும் மனவருத்தம் காண்பித்துக் கொள்ளாமல், "இவர்கள் கூட வரட்டும். பாக்கி இன்னும் எவ்வளவு பேர்கள் இருக்கிறார்கள் என்று பார்த்துச் சொல்" என்றாள். தனக்கென்று எடுத்து வைத்துக்கொண்டிருந்த புடவைகளைக் கொடுத்து, "இவைகளை சிக்கண்ண செட்டியின் வீட்டுக்கு எடுத்துச் செல்லுங்கள். அவர் இதற்கு என்ன விலை போட்டுக் கொடுக்கிறாரோ அதைக் கொண்டு வாருங்கள்" என்றாள்.

ராணியின் நோக்கத்தை அறிந்துகொண்டு சிக்கண்ண செட்டி தானே ஓடி வந்தான். "அம்மாஜி, தங்கள் சொந்தமான துணி மணிகள், நகை, தங்கம் எதையும் ஒரு துண்டு கூட இங்கே விட்டு

விட்டுப் போகவேண்டாம். அந்தப்புரத்திலுள்ள பெண்கள் யாரும் திக்கற்றவர்களாகப் போகாமல் நான் பார்த்துக்கொள்கிறேன். அவர்களெல்லாம் என்னுடைய பெண் குழந்தைகள் என்று நினைத்துக் கொள்கிறேன்," என்று ராணியை வேண்டிக் கொண்டான்.

ராணி, "நீங்கள் மிகப் பெரியவர் செட்டியாரே. நீங்கள் உங்கள் வார்த்தையைக் காப்பாற்றுவீர்கள் என்றாலும் அரண்மனையை நம்பிக்கொண்டு வந்துவிட்ட இந்தப் பெண்களுக்கு அன்னமும் நீரும் கொடுத்து ஆதரிக்கவேண்டியது அரண்மனையின் கடமை. அதை அரண்மனை மற்றவர்களின்மீது சுமத்தக் கூடாது. இனிமேல் எனக்கெதற்கு துணிமணிகளும் நகைகளும்? ராஜகுமாரிக்கு வேண்டியதை எடுத்துக்கொண்டிருக்கிறேன். இவர்கள் உங்களுடைய குழந்தைகள் என்று சொல்லுகிறீர்கள். அவர்கள் எனக்கும் குழந்தைகளே. என்னால் செய்ய முடிந்ததைச் செய்துவிடுகிறேன். போதாததை நீங்களும் செய்யுங்கள். அந்தப்புரத்திலிருந்த பெண்கள் தெருவில் அலையக் கூடாதல்லவா? இதைக் கவனித்துக்கொண்ட புண்ணியம் எனக்கும் இருக்கட்டும்," என்றாள்.

சிக்கண்ண செட்டி வேறு வழி இல்லாமல் இதற்குச் சம்மதித்தான். ராணி கொடுத்த பெட்டிகளைச் சுமந்து சென்றான்.

இந்த ஏற்பாடுகளுக்கெல்லாம் காலதாமதம் ஆவதைக் கண்ட அரசன், தான் அன்று மாலையே புறப்படுவதாகவும் ராணியும் மகளும் மெதுவாக மறுநாள் புறப்பட்டு வரும்படியும் சொல்லியனுப்பினான். ராணி இதற்குச் சம்மதிக்கவில்லை. "இனி என்ன ஏற்பாடு செய்யவேண்டியிருக்கிறது? நாங்களும் சாயங்காலமே புறப்பட்டுவிடுகிறோம்" என்று சொல்லியனுப்பினாள். ஓங்காரருக்கு விசேஷ பூஜை நடத்தச் சொல்லி தீட்சிதருக்குச் சொல்லியனுப்பிவிட்டு, மாலையில் தாங்கள் புறப்படும்பொழுது யாரும் கும்பலாகச் சுற்றிக்கொள்ளக் கூடாது என்று தன் அருகில் உள்ளவர்களுக்கெல்லாம் தெரிவித்தாள்.

அரண்மனையின் ஆட்கள் எல்லோரும் வந்து ராணியின் காலில் விழுந்தார்கள்; இப்படியாகிவிட்டதே என்று அழுதார்கள். ராணி மகளைப் பக்கத்தில் உட்காரவைத்துக்கொண்டு அவளை அணைத்தபடி உறுதியாக உட்கார்ந்துகொண்டு எல்லோருக்கும் நல்ல வார்த்தைகளும் சமாதானமும் சொல்லி, "இந்த ராஜகுமாரி ராணியாக வரவேண்டும் என்று கடவுளிடம் பிரார்த்தியுங்கள்,"

என்றாள்; எல்லோருக்கும் மகளின் கையால் பொற்காசுகள் வழங்கினாள்.

தொட்டவ்வா அருகில் வந்து, "அந்தப்புரத்துப் பெண்கள் தங்களுக்கும் அரசருக்கும் வணக்கம் தெரிவிக்க விரும்புகிறார்கள்" என்றாள். கௌரம்மாஜி, "வரச்சொல், தொட்டவ்வா" என்றாள்.

வரிசை வரிசையாக அந்தப் பெண்கள் வந்தார்கள்; ராணி, ராஜகுமாரி இருவரின் பாதங்களிலும் பணிந்தார்கள். ராணியைப் பார்த்து, "எங்கள் தவறுகள் எல்லாவற்றையும் மறந்துவிடவேண்டும்" என்று வேண்டினார்கள். கௌரம்மாஜி, "அரசருக்கு சேவை செய்த நீங்களெல்லோரும் எங்களுக்கு வேண்டியவர்கள். நீங்கள் ஏதும் தவறு செய்யவில்லை. அரசருக்கும் அவர் மகளுக்கும் நல்லதாகட்டும் என்று ஆசி கூறிச் செல்லுங்கள்," என்றாள். மகளின் கையால் அவர்களுக்கும் பொற்காசுகள் வழங்கச்செய்தாள்.

தொட்டவ்வா இவர்களையெல்லாம் அரசனின் அறைக்கு அழைத்துச் சென்றாள். இவர்களெல்லாம் ஒவ்வொருவராக அரசனுக்கு நமஸ்காரம் செய்துவிட்டு வெளியே வந்தார்கள். அரசன் யாருடனும் பேசவில்லை. வணக்கம் செலுத்திய ஒவ்வொருவரையும் பார்த்துக்கொண்டே பேசாமல் இருந்தான். ஒவ்வொருவரைப் பார்த்தபொழுது அவன் கண்களில் நீர்த் திரையிட்டது. எல்லோரும் வணங்கிவிட்டுச் செல்லும் நேரத்திற்கு கண்ணீர் கன்னங்களின்மீது தாரை தாரையாக வழிந்தோடியது.

அவர்களெல்லோரும் அழுதார்கள். தொட்டவ்வாவினாலும் அழுகையை அடக்க முடியவில்லை. அவள் இவர்களிடம், "இனி புறப்படுங்கள். நான் வருகிறேன்" என்று கூறி அவர்களை அனுப்பிவிட்டு அரசனின் அருகில் வந்து, "அம்மாஜி இவர்களுக்கெல்லாம் வேண்டிய ஏற்பாட்டைச் செய்திருக்கிறார்; அரசர் கவலைப்படவேண்டாம்" என்றாள். வீரராஜன் தனக்கு அது தெரியும் என்பதாகத் தலையை ஆட்டினான்.

"உத்தரவானால் நான் இங்கேயே இருந்து கொள்கிறேன். கோவில் பிராகாரம் பெருக்கிக் கொண்டு காலம் கழிக்கிறேன். கிழவியாகிவிட்டேன்" என்றாள்.

வீரராஜன் அதற்கும் சம்மதம் தெரிவித்தான்; தொட்டவ்வா புறப்பட்டுச் சென்றாள்.

தீட்சிதர் மத்தியான்னம் சுவாமி பிரசாதம் கொண்டு வந்து கொடுத்தார். கௌரம்மாஜி பிரசாதத்தை அரசருக்கும் மகளுக்கும் கொடுத்துவிட்டு பிறகு தானும் எடுத்துக்கொண்டாள்.

அன்று மாலையே மூன்று பல்லக்குகளில் அமர்ந்து வீரராஜன், கௌரம்மாஜி, ராஜகுமாரி மூவரும் வேலூருக்குப் புறப்பட்டார்கள்.

172

வீரராஜன் மடிகேரியிலிருந்து புறப்பட்டுச் சென்றதுமே பிரேசர் ஒரு பிரகடனம் வெளியிட்டு அதன் கன்னட அர்த்தத்தை தண்டோரா மூலம் தெரியப்படுத்துமாறு செய்தான்.

"குடகு நாட்டு மக்கள் இனிமேல் தங்களுக்கு வீரராஜேந்திர உடையார் அரசராக இருக்கக்கூடாதென்றும், கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆங்கில சர்க்கார் இந்த நாட்டை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும் ஏகமனதாகத் தீர்மானித்ததனால் அந்த அரசர் இதுவரை ஆண்டுவந்த இந்த நாட்டை இந்தியா தேசத்தின் கவர்னர்-ஜெனரல் துரையவர்கள் மகிழ்ச்சியுடன் கனம் கம்பெனி சர்க்காரின் ஆட்சியின் கீழ் எடுத்துக்கொண்டுள்ளார்.

நாட்டை மறுபடியும் இந்த அரசரின் ஆட்சிக்கு உட்படுத்துவதில்லை என்றும், நாட்டு மக்களின் லௌகீக மத விஷயங்களில் அவரவர்களுடைய வழக்கத்தை கௌரவித்து நடத்துவதாகவும், ஜனங்களின் க்ஷேமத்தை வளர்ப்பது தங்களது கடமையென்றும் இந்தக் கடமையை எப்பொழுதும் மறப்பதில்லை யென்றும் கனம் கம்பெனியின் ஆங்கில சர்க்கார் இதன் மூலம் உறுதியளிக்கிறது.

மடிகேரி
7-5-1834

ஜி. எஸ். பிரேசர்
லெப்டினண்ட் கர்னல் மற்றும் ராஜ பிரதிநிதி."

இந்தப் பிரகடனத்தின் வாசகத்தைக் குறித்து கர்னல் துரைக்கும் மந்திரிகளுக்கும் சிறிது விவாதம் நடந்தது. பின்னால் ராஜகுமாரிக்கு நாட்டைக் கொடுத்தாலும் கொடுக்கக்கூடும் என்கிற சூசனை இதில் இருக்கவேண்டும் என்பது மந்திரிகளின் அபிப்ராயம். பிரேசர், "நீங்களெல்லாம் அவ்வாறு விரும்பினால் அதற்கு என்ன தடை? அவள் பெரியவளான பிறகு நீங்களெல்

லாரும் இதை ஏகமனதாக விரும்பினால் தானே நடக்கிறது," என்றான்.

லக்ஷ்மீநாராயணய்யா, "இதை எழுத்தில் வைப்பது நல்ல தில்லையா போபண்ணா?" என்று கேட்டார், போபண்ணா, "நாமெல்லாம் வேண்டும் என்று சொன்னால் வேண்டாமென்று சொல்வதற்கு இவர்கள் யார்? கவலைப்படாதீர்கள்" என்று தைரியம் கூறினார்.

குடகின் புது அரசாங்கத்திற்கு மைசூர் சமஸ்தானத்தின் சீப்-கமிஷனர் பிரபுவே சீப்-கமிஷனர் என்றும் தான் அவனுக்கு அடுத்ததாக பிரத்தியேக அதிகாரி கமிஷனர் என்றும், ஆட்சியை நேரிடையாக நடத்துவதற்கு சூபரிண்டெண்டெண்ட் என்கிற ஒரு அதிகாரி இருப்பானென்றும் பிரேசர் தெரிவித்தான். லெஹார்டி என்கிற ஆங்கில தளபதி, இவர்களுடன் வந்தவன், முதல் சூபரிண்டெண்டெண்டாக நியமிக்கப்பட்டான்.

மேக்லிங் பாதிரியின் சூசனைப்படி ராஜகுமாரி கௌரம்மாஜிக்கு ஆங்கில பாஷையையும், ஆங்கிலேயர்களின் வாழ்க்கை முறையையும் கற்பிப்பதற்காகவும், அவள் விரும்பினால் கிறிஸ்தவ மதத்தின் சிறப்பை அவளுக்கு போதிப்பதற்காகவும் ஒரு ஆசிரியையும் துணைவியும் இருப்பது நல்லது என நினைத்து வீர ராஜனின் சம்மதத்தைப் பெற்று மதராஸ் கவர்னரின் அநுமதியின் பேரில் குமாரி லூஸி ஹாகர என்பவளை அந்த வேலைக்கு நியமித்தார்கள்.

வீரராஜனின் தங்கை தேவம்மாஜிக்கு அவளுடைய மானியம் வீடுகளும் நிலமும் அல்லாமல் மாதம் இருநூற்றைம்பது ரூபாய் உபகாரச் சம்பளம் கொடுப்பதென்று தீர்மானிக்கப்பட்டது. அரசனுடையதாக இருந்த நான்கு அரண்மனைகளில் ஒன்றில் அவர்கள் வசிக்கலாமென்றும் முடிவு செய்யப்பட்டது. சென்ன பசவன் தான் செய்த உதவிக்கு இது மிகவும் குறைவான பிரதிபலன் என்று கர்னல் துரையை நிந்தித்தான்; உபகாரச் சம்பளம் அதிகமாக வேண்டும், அரண்மனையைத் தனக்கே கொடுத்துவிட வேண்டும் என்று விரும்பினான். அவன் விருப்பம் நிறைவேறவில்லை. தேவம்மாஜியின் குழந்தையின் காரணமாக பலியானான் என்பதற்காக சோமனின் மனைவிக்கு வருஷத்திற்கு நான்கு பவுன் உபகாரச் சம்பளம் கிடைத்தது.

ஓங்காரேஸ்வரர் கோவில், தலைக்காவேரி, பாகமண்டலம், லக்ஷ்மணதீர்த்தம் நதிமூலம், இங்குள்ள கோவில்கள் ஆகிய இதர

ஸ்தாபனங்களில் இது வரை நடந்து வந்த எல்லா பூஜை, சேவை காணிக்கைகளெல்லாம் நடக்க வேண்டுமென்று கமிஷனர் துரை விசேஷக் கட்டளை பிறப்பித்தான்.

பகவதி செய்த உதவிக்காக அவளுக்கு ஏதாவது மானியம் கொடுப்பதாக கமிஷனர் சொன்னான். அவள் தனக்கு அப்படி எதுவும் வேண்டாமென்று சொல்லி விட்டாள்.

சில மாதங்களில் கமிஷனர், நிலச் சொந்தக்காரர்கள் சர்க்காருக்கு தானியத்தை வரியாகச் செலுத்துவது அநுகூலமான ஏற்பாடாக இல்லை என்று சொல்லி, அவர்கள் செலுத்த வேண்டிய தானியத்தின் விலையைப் பணமாகச் செலுத்தவேண்டும் என்று உத்தரவிட்டான்.

குடகு நாட்டில் மாட்டைக் கொல்லும் வழக்கம் இல்லாமலிருந்தால் அவன் அது விஷயமாக ஒரு பிரகடனத்தை வெளியிட்டு குடகின் எல்லைக்குள் ஆங்கிலேயர்களோ மற்ற எவருமோ ஆகாரத்தின் நிமித்தம் பசு, எருது, கன்று இவைகளைக் கொல்லக் கூடாது என்று பிரார்த்தித்துக்கொண்டான்.

நிரன்கு மாதங்கள் கழிந்தன. உத்தய்யதக்கன் ஒரு நாள் போபண்ணுவிடம் வந்து, "எல்லாம் சிறிது அமைதி பெறட்டும் பிறகு உங்களிடம் சொல்லலாம் என்று இருந்தேன், ஐயா. இப்பொழுது உங்களிடம் அதைச் சொல்லலாமென்று வந்திருக்கிறேன்," என்ருன்.

"சொல்லுங்கள் தக்கரே."

"அரசர் கெட்டவரானுலும் என்னுடைய நண்பரின் மகன். பட்டத்தைத் துறந்தாலும் அவர் இங்கேயே இருந்திருந்தால் நன்ருக இருந்திருக்கும். அவர் இங்கேயே இருக்கலாம் என்று நீங்கள் சொன்னீர்கள். துரை கேட்கவில்லை. உங்கள் பேச்சு சரி என்ருர்; சிரித்தார்; மழுப்பினர்; ஆனுல் தமது விருப்பத்தை நிறைவேற்றி விட்டார். நமது மனிதர் வனவாசம் போகவேண்டியதாகிவிட்டது."

"அதைப் பற்றி எனக்கேதும் வருத்தமில்லை, தக்கரே. பட்டத்தைத் துறந்த அரசர் இங்கேயே இருந்தால் வேண்டியவர்கள் என்கிறவர்கள் ஏதாவது சூழ்ச்சியில் இறங்கலாம். வேண்டாமென்கிறவர்கள் அவர்களைத் தாக்கக்கூடும். ஏன் இந்த அவஸ்தை? தூரத்திலேயே இருக்கட்டும், சாப்பிட்டுக்கொண்டு சௌக்கியமாக இருக்கட்டும். சாப்பாட்டுக்கும் துணிக்கும் வேண்டியது கொடுத்திருக்கிறது."

"வீட்டில் உட்கார்ந்து கொண்டிருந்தால் விங்கர ஜர் எங்கிருந்தோ, 'என்ன நீ என்னுடைய சிநேகிதன். என் மகனைக் கொஞ்சம் கவனித்துக் கொள்ளவேண்டாமா?' என்று கேட்பது போல இருக்கிறது. நான் என்ன செய்யட்டும், ஜனங்களுக்கு அவன் வேண்டாதவனுகிவிட்டான் என்று எனக்கு நானே சொல்லிக் கொள்கிறேன். ராணியையும் மகளையும் கூடவா ஜனங்கள் வேண்டாமென்று, விட்டார்கள் என்று உள்ளேயிருந்து குரல் கேட்கிறது."

"என்ன செய்வது தக்கரே? பாதி அழுகிப்போன பழம். அழுகிப்போன பாதியை எறிந்து விடுவோம், நல்ல பாதி இருக்

கட்டும் என்றேன். நானிருந்தால் அதுவும் இருக்க வேண்டும், அது போனால் நானும் போகிறேன், என்று பிடிவாதம் செய்தது நல்ல பாதி. இது இருக்கவேண்டும் என்பதற்காக அதையும் வைத்துக்கொள்ள முடியுமா?"

"பேச்செல்லாம் சரியாகத் தானிருக்கிறது, ஐயா; மனம்தான் சமாதானப்படவில்லை. அம்மாஜி குடக ஸ்திரீ; மகள் குடகப் பெண். நூறு சொன்னாலும் அவர்கள் இங்கேதான் இருக்க வேண்டும்."

"வாஸ்தவம் தக்கரே; என்ன செய்யலாம் சொல்லுங்கள்."

"நீங்கள் நடத்துவதாகச் சொல்லுங்கள்; நான் சொல்லுகிறேன்."

"எப்படியாவது வழியை விட்டு விலகியாவது நடத்துவோம். உங்கள் யோசனையைச் சொல்லுங்கள்."

"உங்கள் மருமகன் உத்தய்யனைத் தன் மகள் மணந்துகொள்ள வேண்டுமென்பது அம்மாஜியின் விருப்பமாக இருந்தது. நீங்கள் தான் வேண்டாமென்று விட்டீர்கள்."

"குலம் நல்லதல்ல, தக்கரே, அதனால் வேண்டாமென்றேன்."

"குலம் தகப்பனுடையது மாத்திரம் அல்ல ஐயா. தாயுடையதும் தான். மகளின் குலம் தந்தையைவிட அதிகமாக தாயுடையது தான்."

"சரிதான்; உத்தன் செய்து கொள்கிறேன் என்றால் நடக்கட்டும்; நடத்துங்கள், எனக்குத் தடையில்லை."

உத்தய்யதக்கன் இதைக் கேட்டு மிகவும் சந்தோஷப் பட்டான்; போபண்ணாவை வாயாரப் புகழ்ந்தான்; இந்த யோசனைக்கு சின்ன உத்தய்யனின் சம்மதத்தைப் பெறுவதற்காகப் புறப்பட்டான்.

உத்தய்யனுக்கு ராஜகுமாரியை மணந்து கொள்ளச் சம்மதம் தான்; ஆனால் மாமா வேண்டாமென்று சொன்ன பெண் இப்பொழுது இந்தக் கிழவரின் வற்புறுத்தலுக்காக ஒத்துக்கொண்டிருக்கிறார் தான் வேண்டாம் என்று சொல்லவேண்டுமென மாமா எதிர்பார்க்கிறாரோ? ஒரு நாள் முழுவதும் யோசித்தான். கடைசியில் மாமாவின் விருப்பு வெறுப்பை விட அப்பெண்ணின் அழகே அவனுக்கு முக்கியமாகத் தோன்றியது. அவன், "தாத்தா போபண்ண மாமா சரி என்றால் எனக்கும் சம்மதம் தான்," என்றான்.

இந்தப் பேச்சு எதையும் ரகசியமாக நடத்தும் நோக்கம் அவர்களுக்கு இல்லை. போபண்ணு தமது உத்தேசத்தை ஸ்தல அதிகாரிக்குத் தெரியப்படுத்தினார். அவன் கமிஷனருக்குச் செய்தியை அறிவித்தான். கமிஷனர், "நிலைமையைப் பெரிதும் மாற்றக்கூடிய இந்த ஏற்பாட்டிற்கு இன்னும் சிறிது காலம் காத்திருந்தால் நல்லது" என்று மட்டும் கூறி உத்தய்ய தக்கனும் சின்ன உத்தய்யனும் வேலூருக்குச் சென்று இது விஷயமாகப் பேச சம்மதம் அளித்தான்; கூடவே, இச்செய்தியை சென்னை கவர்னருக்கும் வீர ராஜனுக்கும் தெரியப்படுத்தினான். அதே நேரத்தில் லூஸிக்கு ஒரு கடிதம் எழுதி, "ராஜகுமாரி இப்போது தொடங்கியிருக்கும் பாடங்களை முடித்துவிட்டுப் பிறகு மணம் புரிந்துகொள்வது அவரது எதிர்காலத்திற்கு நல்லது என்பது என் அபிப்ராயம். இதை அரசரிடம் தெரிவிக்கவும். என் சொந்த அபிப்ராயம் அவரது முடிவிற்குத் தடையாக இருக்கவேண்டாம். இருந்தாலும் அது அவருக்குத் தெரிந்திருப்பது நல்லது என்பதனால் குறிப்பிட்டேன்," என்று தெரிவித்தான்.

174

தக்கன், உத்தன் இருவரும் போவதா, தக்கன் ஒருவனே போவதா, உத்தன் ஒருவனே போவதா என்றெல்லாம் ஆலோசித்து விவாதித்து கடைசியில் இருவரும் புறப்பட்டார்கள்; வேலூருக்குப் போய்ச் சேர்ந்தார்கள்: ராணி கௌரம்மாஜியைக் கண்டார்கள்.

ராணி கண்ணீர் பெருக்கினாள், கமிஷனரிடமிருந்து ஏற்கனவே வந்திருந்த கடிதம் அரசனின் வாயில் பேசக்கூடாத வார்த்தைகளையெல்லாம் பேசவைத்திருந்தது. அரசன் தனது எல்லா துரதிர்ஷ்டங்களுக்கும் போபண்ணுவே காரணம் என்று நினைத்திருந்தான். அந்தப் படுபாவியின் மருமகன் தன் மகளை மணந்து கொள்வதா? அத்துடன் லூஸி கமிஷனரின் சொந்த அபிப்ராயத்தை வேறு அரசனுக்குத் தெரிவித்திருந்தாள்; ராணிக்கும் சொல்லியிருந்தாள்; என்ன இருந்தாலும் புட்டாம்மாஜி ஒரு ராஜ புத்திரி, பரத கண்டத்தின் எந்தப் பெரிய அரண்மனையிலும் மருமகளாக நுழையத் தகுதி உள்ளவள். அவள் குடகின் ஆட்சி

பீடத்திற்கு வருவதானால் அவள் கணவன் அப்படிப்பட்ட ஒரு ராஜகுமாரனாக இருப்பதுதான் அழகு, குடகில் பிறந்து குடகில் வளர்ந்த ஒரு சாதாரண வாலிபனுக்கு என்ன சிறப்பு?

இத்துடனல்லாமல், மேக்லிங் பாதிரியின் தூண்டுதலின் பேரில் லூஸி மற்றொரு பிரயத்தனத்தில் ஈடுபட்டிருந்தாள். ராஜகுமாரி கிறிஸ்தவ மதத்தில் சேர்ந்துவிட்டால் குடகு முழுவதுமே கிறிஸ்தவ மதத்தைத் தழுவக்கூடும். இப்பொழுது இந்த மக்கள் கடைப்பிடித்து வரும் காட்டுமிராண்டி மதத்தை அவர்கள் விட்டு விடுவதே நல்லது. "நாட்டை மீண்டும் கொடுக்கிறோம். கிறிஸ்தவ மதத்தில் சேர்ந்து விடுங்கள்" என்று சொல்வது சுலபமல்ல. இந்தப் பெண்ணையும், இவளது ஜனங்களையும் நரக ஜீவாலையிலிருந்து கடைத்தேற்றிக் காப்பாற்றுவது கடவுளுக்குப் பிரியமான சேவை. இவள் இப்பொழுதே கல்யாணம் செய்து கொண்டு குடகுக்குத் திரும்பிவிட்டால் இவள் கிறிஸ்தவ மதத்தைத் தழுவுவதற்கு வசதி இல்லாது போய் விடும்.

லூஸி ஹாகரின் மனத்தில் இன்னும் ஒரு எண்ணம் உண்டு. காப்டன் துரை ராஜகுமாரியைக் கல்யாணம் செய்து கொண்டால், குடகின் அரண்மனையின் விலை மதிப்பற்ற ரத்தின ராசிகள் தங்களுக்குக் கிடைக்கும். காப்டன் சமீபத்தில் வட இந்தியாவுக்கு மாற்றலாகிப் போயிருந்தான். இருந்தாலும் குடகை நினைத்துக் கொண்டு இரண்டொரு கடிதங்கள் எழுதியிருந்தான்.

இவ்வளவு காரணங்களின் சேர்க்கையினால் உத்தய்ய தக்கனின் முயற்சி பலனில்லாமல் போயிற்று. வீரராஜன் இவர்களைப் பார்க்கமுடியாது என்று கூறிவிட்டான், "என் மகளைக் கேட்பதற்கு எவ்வளவு தைரியம் இந்தப் பிச்சைக்காரப் பயல்களுக்கு? இங்கே அடி எடுத்து வைக்கக்கூடாது. தொலைந்து போகச் சொல்" என்று கூச்சல் போட்டான். ராஜகுமாரிக்கு உத்தய்யனை மணந்து கொள்ளச் சம்மதம்; ஆனால் தந்தையின் விருப்பத்தை எதிர்த்து அவ்வாறு செய்துகொள்ள அவள் விரும்பவில்லை. கௌரம்மாஜிக்கு ஒரு பிரச்னை. மகள் உத்தய்யனை மணந்து கொண்டால் பின்னால் ராணியாகும் ஆசையை மறந்து விடவேண்டியது தான். அரசாட்சியை மீண்டும் கைப்பற்ற வேண்டுமானால், இந்த ஆங்கிலேயர்கள் சொல்லுகிறபடி கேட்க வேண்டும். ஒரு சாதாரண குடும்பப் பெண்ணாக வாழ்வதா அல்லது குடகின் அரசியாக வாழ்வதற்காகக் காத்துக் கொண்டிருப்பதா? மகளுக்கு எது நல்லது? கௌரம்மாஜியால் ஒரு

முடிவுக்கு வரமுடிய வில்லை. அந் நிலையில் தன் கணவனின் முடிவே மகளுக்கு நன்மையைத் தரக்கூடும் என்று அவளுக்கு நம்பிக்கை ஏற்பட்டது. எப்படியும் அவன் விருப்பத்தை மீறி நடப்பதும் அவ்வளவு சுலபமாக இருக்கவில்லை.

உத்தய்யதக்கன் நிராசையடைந்தான். "வந்த வழிக்கு சுங்கம் இல்லை; வா தம்பி போவோம்" என்று உத்தனை அழைத்துக் கொண்டு திரும்பினான்.

175

உத்தய்யதக்கனும், சின்ன உத்தய்யனும் வேலூருக்கு வந்து போனதினால் குடகின் சீப்-கமிஷனரும் சென்னை கவர்னரும் யோசிக்கத் தொடங்கினார்கள். அரசன் மடிகேரியில் இருந்தால் புது ஏற்பாட்டை ஏற்றுக்கொள்ளாதவர்கள் அவனைச் சேர்த்து கொண்டு ஏதாவது புரட்சி செய்யக் கூடும் என்று பயத்தால் அவனை மடிகேரியிலிருந்து கிளப்பி வேலூரில் கொண்டுபோய் வைத்தார்கள். இந்தக் கிழவனும் வாலிபனும் ஒரு விஷயத்தைப் பேசவதற்காக இங்கே வந்து விட்டுப் போனார்கள் என்றால் வேலூர் மடிகேரியிலிருந்து போதுமான அளவு தொலைவில் இல்லை என்றாகிறது.

மதராஸ் கவர்னர் அரசனை, "ஒரே இடத்தில் இருப்பது தங்களுக்கு அலுப்பாக இருக்கலாம். வட நாட்டையும் பார்த்தாற் போலிருக்கட்டும். காசியில் சில நாட்கள் இருக்கலாமல்லவா?" என்று கேட்டு அனுப்பினான். அதே சமயத்தில் லூஸியின் மூலமாக, "காசி தங்களுடைய புண்யஸ்தலம்; அங்கே சென்றால் மனத்திற்கு மேலும் அமைதி உண்டாகலாம்" என்று ராணிக்கு சூசனையளிக்குமாறு செய்தான்.

வீரராஜன், கௌரம்மாஜி இருவரும் இதற்குச் சம்மதித்தார்கள். வேலூரில் ஒரு வருஷம் இருந்து விட்டு அவர்கள் காசிக்குப் புறப்பட்டார்கள். புறப்படுவதற்கு முன்னால் ராணி, "எப்படியும் புண்ய க்ஷேத்திரத்திற்குப் போகிறோம். அரண்மனை சார்பில் விசுவேசுவரனுக்கு எல்லா சேவைகளையும் தெற்கத்திய சம்பிரதாயப்படி நடத்த, பார்த்துக்கொள்ள, நமது புரோகிதர் இருந்தால் நல்லது" என்று சொல்லியனுப்பி தீட்சிதரை வரவழைத்

துக்கொண்டாள், மற்றவர்களுடன் அவரும் காசிக்குப் புறப்பட்டார்.

இவர்கள் காசிக்குச் சென்ற ஒரிரண்டு மாதங்களில் மேக்லிங் பாதிரியின் சூசனைப்படி வட இந்திய கிறிஸ்தவ மத பிரசார சபையின் பிரமுகர் ஒருவர் ராஜகுமாரிக்கு ஆங்கில சமூகத்தின் வாழ்க்கை முறைகளையும், கிறிஸ்தவ மதத்தின் விசேஷ தத்துவங்களையும் கற்பிப்பதற்காக காப்டன் துரையின் தமக்கை ஸ்ரீமதி லோகன் என்பவரை நியமிக்குமாறு ஏற்பாடு செய்தார்.

ராணி தீட்சிதரின் மூலமாக விசுவேசுவரரின் சேவையை இடைவிடாமல் நடத்திக் கொண்டிருந்த அதே சமயத்தில் இவர்கள் ராஜகுமாரியின் மனத்தை கிறிஸ்தவ மதத்தின்பால் இழுத்துக் கொண்டிருந்தார்கள்.

சில மாதங்களில் இவர்களில் யாரோ அரசனிடம், "உங்கள் மகள் கிறிஸ்தவ மதத்தைத் தழுவினால் அவருக்கு நாடு கிடைப்பது சுலபமாகும். ராணியாக வருபவர் மக்களை நல்ல முறையில் கவனித்துக்கொள்வார் என்ற நம்பிக்கை கம்பெனி சர்க்காருக்கு வேண்டும். குமாரி கிறிஸ்தவராலால் இந்த நம்பிக்கை தானே ஏற்படும்" என்று சொன்னார்கள். அரசன், "ஏன் கூடாது? இந்த மதத்தைத் தழுவி வந்த லாபம் என்ன? அந்த மதத்தைத் தழுவினால் என்ன கெட்டுவிடும்? ராஜ்ஜியத்தை அவளுக்குக் கொடுக்கட்டும். அவள் கிறிஸ்தவச்சி ஆவாள்" என்றான்.

இது ராணிக்குத் தெரிந்த விஷயமதான். அரசனுக்கு என்றுமே மதத்தில் நம்பிக்கை இல்லை. ஆனால் மகளின் மனதும் வேறு மதத்தின் பால் செல்லுகிறது என்பதைக் கண்டு ராணி மிகவும் துயருற்றாள். தீட்சிதரைப் பார்த்து ஒரு நாள், "எனக்கு வாழ்க்கை வெறுத்துவிட்டது, ஐயா. இனி பிழைத்திருக்க வேண்டாம் என்று தோன்றிக் கொண்டிருக்கிறது. விசுவேசுவரன் என்னை அவன் பாதங்களில் சேர்த்துக்கொண்டால் தேவலை," என்றாள்.

தீட்சிதருக்கு இவளது வெறுப்பின் காரணம் தெரியும். அவளுக்காக அவர் பெரிதும் துயரப்பட்டார். "அம்மாஜி, நான் அதிகம் தெரிந்தவனல்ல. ஆனால் பெரியவர்களிடம் சில விஷயங்களைக் கேட்டுத் தெரிந்து கொண்டுள்ளேன். ஏழு ஜன்மத்து சுகத்தாலும் மூன்று ஜன்மத்து கஷ்டத்தாலும் ஜீவன் கடைத்தேறுகிறது என்று சொல்லியிருக்கிறார்கள். கஷ்டப்பட்ட ஜீவனுக்கு சீக்கிரம் உய்வு கிடைக்கிறது. ஆண்டவன் பேரைச்

சொல்லிக் கொண்டு கஷ்டத்தைப் பொறுத்துக்கொள்ள வேண்டும்," என்றார்.

"கஷ்டத்தைக் கொடுக்கும் ஆண்டவனை விடுதலையைக் கொடு என்று வேண்டுகிறேன் ஐயா."

தீட்சிதர் இதற்கு எதும் பதில் சொல்லாமல் இருந்துவிட்டார். எவ்வளவு உயர்ந்த உள்ளம் எத்தகைய துயரத்தினால் வாடிக் கொண்டிருக்கிறது என்று தமது ராணிக்காக தீட்சிதர் பச்சாத் தாபம் கொண்டு மனம் நெகிழ்ந்தார்.

176

ஒரு வருடம் கழிந்தது. காசிக்குச் சென்ற இரண்டாவது சிராவண மாதத்தில் ராணி ஒரு மண்டலம் அநுசரிக்கவேண்டிய விரதம் ஒன்றை ஆரம்பித்தாள்; தினமும் மூன்று முறை கங்கா ஸ்நாநம்; சந்தர்ப்பணை, அன்னதானம்; விசுவேசுவரனுக்கு அபிஷேகம். இவ்வாறு மிகவும் கடினமான சேவையைத் தொடங்கினாள். அரசனுக்கும் மகளுக்கும் நன்மை செய்யுமாறு விசுவேசுவரனிடம் சதாகாலமும் வேண்டிக்கொண்டாள்.

கங்கா ஜலம் புண்ணிய தீரத்தம். இருந்தாலும் சிராவண மாதத்தில் அதில் குளிப்பவர்களுக்கு ஒவ்வொரு சமயம் தொல்லை ஏற்படுவதுண்டு. மண்டல ஸ்நாநம் செய்ததனால் ராணிக்கு உடலில் அசதி தோன்றியது; மூன்று நாட்களில் அது ஜுரமாக மாறியது.

தீட்சிதர், "ஜுரத்தின்போது விரதத்தை நடத்த வேண்டிய தேவை இல்லை. ஜுரம் நிற்கட்டும், பிறகு விரதத்தை மறுபடியும் ஆரம்பிக்கலாம்," என்று ராணியை வேண்டிக்கொண்டார். ராணி சம்மதிக்கவில்லை. "உடம்பு என்றால் ஜலதோஷம், தலைவலி, காய்ச்சல் என்று இல்லாமல் இருக்குமா? இதற்காக விரதத்தை நிறுத்தமுடியுமா? பாக்கியிருப்பதும் அதிகமில்லை. இதை முடித்து விடுகிறேன்," என்றாள்.

கௌரம்மாஜி சாகவேண்டுமென நிச்சயித்து விட்டாளோ? இதை அவளுடைய அந்தரங்கம் தான் அறியும். வேறு யார் அறிவார்கள்? ஜுரம் அதிகரித்தது. விரதம் முடியும் தறுவாயில்

விபரீதமாகி விட்டது. ராணி இனி தான் இந்த உடலை விட்டுவிட வேண்டியதுதான் என்று தெரிந்துகொண்டாள்.

அன்று மாலை அவள் மகளை அருகில் அழைத்து, "புட்டவ்வா, நான் உன்னை விட்டுப் போகிறேன் என்று தோன்றுகிறது. நீ தைரியமாக இருக்கவேண்டும் தெரியுமா? நீ எப்பொழுதும் என்னிடம் வெகு நல்லபடியாகவே நடந்துகொண்டிருக்கிறாய். இனி மேலும் இப்படியே நடந்துகொள். நல்லவள் என்று பெயர் எடு, நல்லபடியாக வாழ்," என்று கூறினாள். பிறகு தீட்சிதரிடம், "எனக்கு மனத்தில் பயம் இல்லை, ஐயா. கடவுளை நினைத்துக் கொண்டே இருக்கிறேன். இங்கே காரியம் முடிந்ததும் நீங்கள் ஊருக்குச் செல்லுங்கள்; ஓங்காரனின் கோவிலுக்கென்று ஒரு பை பொற்காசுகள் வைத்திருக்கிறேன்; என் கழுத்து மாலையையும் வைத்திருக்கிறேன். இவைகளை எடுத்துக்கொண்டு செல்லுங்கள்; அங்கே சேவை நடத்துங்கள். நான் செய்த புண்ணியத்தால் ஆண்டவன் உங்களை இத்தனை நாட்களும் என் அருகில் இருக்கச் செய்தார்," என்றாள்.

"இந்தப் பேச்செல்லாம் எதற்காகத் தாயே? தாங்கள் குணமடையப் போகிறீர்கள்; மறுபடியும் ஆண்டவனின் வழிபாட்டில் ஈடுபடப் போகிறீர்கள். ஓங்காரனை மீண்டும் காணப் போகிறீர்கள்," என்று தீட்சிதர் தனக்கே இல்லாத தைரியத்தை அவளுக்குச் சொல்லி சமாதானப்படுத்த முயன்றார்.

ராணி அதற்கு ஒன்றும் சொல்லவில்லை. "இந்த மாலை, இந்தக் காசுகள் விஷயத்தை வேறு யாருக்காவது சொல்லவேண்டும் சிப்பந்தி யாராவது இருந்தால் அழையுங்கள்" என்றாள். தீட்சிதர் சிப்பந்தியை அழைத்து வரச் சொன்னார். ராணிக்கு உடல் நிலை சரியில்லையென்று கேள்விப்பட்டு ராஜகுமாரியின் இரு உபாத்தியாயினிகள் அவளைப் பார்க்க வந்தார்கள். ராணி கழுத்துமாலை, பொற்காசு விஷயத்தை லூஸிக்குத் தெரிவித்தாள்; இதை அரசருக்குத் தெரியப்படுத்துங்கள் என்று சொன்னாள், லூஸி, "உத்தரவு அம்மாஜி" என்று கூறி மனத்திற்கு ஒரு யோசனை தோன்றி, "அரசரை இங்கே வரச்சொல்லி அழைக்கட்டுமா?" என்று கேட்டாள்.

ராணி "வேண்டாம் அம்மா, அவரைத் தொந்தரவு செய்ய வேண்டாம்," என்றாள்; ஆயாசம் மிகுந்ததால் பேசாமல் கண்களை மூடிக்கொண்டாள்.

ராஜவைத்தியன் வந்தான்; நாடி பிடித்துப் பார்த்தான்; தீட்சிதரின் காதுகளில், "சுவாமி சந்நிதியில் விளக்கேற்றி வையுங்கள்" என்றான்.

ஒரு நாழிகை கழிந்தது. ராணியின் மூச்சு சிறிது சிறிதாக பலஹீனமாகிக் கொண்டு வந்தது. வெகுநேரமாகக் கண்ணை மூடிக்கொண்டிருந்தவள் கண் திறந்தாள்; தலை மாட்டில் உட்கார்ந்திருந்த மகளைப் பார்த்தாள். மெல்லிய குரலில், "விசுவேசுவரா, ஓங்காரா, என்னைக் காப்பாற்று" என்றாள். பிறகு பேசவில்லை.

கண் திறந்தபடியே இருக்க உயிர் பிரிந்துவிட்டது. தீட்சிதர் ராஜகுமாரிக்குச் சொல்லி இமைகளை மூடச் செய்தார். ஜுர வேதனையால் வாடிப் போயிருந்த முகத்தில் கடைசி மூச்சு நின்றதும் ஒரு மலர்ச்சி ஏற்பட்டது. கௌரம்மாஜியின் கடைசி முக முத்திரை அவள் வாழ்க்கையைப் பிரதிபலிப்பதுபோல சாந்தமாகவும், கம்பீரமாகவும் விளங்கியது. சாவு முகத்தின் அழகைத் தீண்டவில்லை. மாறாக, அசாதாரணமான ஒரு அமைதி அங்கே நிலவியதனால் அதன் அழகு அதிகரித்திருப்பது போலக் காணப்பட்டது.

177

அங்கிருந்த வீரசைவ மடத்துப் பெரியோர்களின் உதவியைப் பெற்று தீட்சிதர் கௌரம்மாஜியின் சடலத்திற்குச் செய்ய வேண்டிய ஈமக்கிரியைகளைச் செய்து முடித்தார். ஸ்தலத்தின் ஆங்கிலேய அதிகாரியிடம் சென்று ராணியின் ஆத்ம சாந்திக்காகத் தான் பல புண்ணிய க்ஷேத்திரங்களுக்குச் சென்று ஆண்டவன் சந்நிதியில் பூஜைகளை நடத்தவேண்டியிருக்கிறது, இதற்கு உதவி புரியவேண்டும் என்று வேண்டிக்கொண்டு அவரிடமிருந்து ஒரு அறிமுகக் கடிதம் கேட்டுப் பெற்றுக்கொண்டார். ராணி சுவாமிக்காகக் கொடுத்த மாலை, பொற்காசுகள் இவைகளை மடிகேரி அதிகாரிக்குக் கிடைக்கும்படிச் செய்யவேண்டுமென்று அவர் கையில் ஒப்புவித்தார். இனி தான் திரும்பிச் செல்வதாக வீரராஜனிடமும் ராஜகுமாரியிடமும் அநுமதி பெற்றுக்கொண்டு புறப்பட்டார்.

தீட்சிதருக்கு ராணி கௌரம்மாஜியின் பேரில் மிகுந்த கௌரவம் ஏற்பட்டிருந்தது. அந்தப் புண்யவதி எந்த யோக பலத்தால் இந்த சித்தியை அடைந்தாளோ! அந்திம காலத்தில் இவ்வளவு அமைதியுடன் ஆண்டவனை நினைத்தவாறு இச்சைப்படி மரணம் எய்தவேண்டுமென்றால் எவ்வளவு தவம் செய்திருக்கவேண்டும், தெய்வத்தை எப்படி மகிழ்வித்திருக்கவேண்டும்! இப்படிப் பட்ட ஆதமாவுக்கு சாந்தி கிடைத்துவிட்டதென்றே வைத்துக்கொள்ளலாம்; சாந்தியை அருள் என்று ஆண்டவனை வேண்டுவது அனுவசியம். ஆனாலும் இந்த புண்யஜீவனை நினைத்துக்கொண்டு பத்து க்ஷேத்திரங்களுக்குச் செல்வது தனக்கு நல்லது. கங்கா தீர்த்தத்தை எடுத்துச் சென்று பத்து சந்நிதிகளில் ராணியின் பெயரால் பத்து பேர்களுக்கு அன்னதானம் செய்வதுதான் தனது எஜமானியின் நினைவுக்குத் தான் செய்யக்கூடிய கடைசி சேவை.

காசியிலிருந்து புறப்பட்ட தீட்சிதர் பிரயாகை, ஜாபால க்ஷேத்திரம், ஜகந்நாதபுரி, காளஹஸ்தி, சிம்மாசலம், திருப்பதி, காஞ்சிபுரம், ஸ்ரீரங்கம், மதுரை, ராமேசுவரம், கன்யாகுமாரி, திருவனந்தபுரம் ஆகிய ஊர்களுக்கெல்லாம் சென்று விட்டு மலையாளத்திற்கு வந்து வைநாடு, வீரராஜபேட்டை மார்க்கமாக மடிகேரியை அடைந்தார். இந்தப் பிரயாணத்தைச் செய்து முடிக்க அவருக்கு ஒன்றரை வருட காலம் பிடித்தது.

காசியில் ராணி இறந்து விட்ட செய்தி ஒரு வருஷத்திற்குப் பிறகு தான் மடிகேரியில் தெரியவந்தது. அவள் சுவாமிக்கு அர்ப்பணிக்கச் சொல்லிக் கொடுத்திருந்த பொற்காசுகளின் அளவு பொற்காசுகளைக் கோவிலுக்குக் கொடுக்கும் படியும், இந்த மாலையையும் கொடுக்கும் படியும் காசி அதிகாரி மடிகேரி அதிகாரிக்கு மாலையுடன் அனுப்பிய கடிதமும் அப்பொழுது தான் வந்து சேர்ந்தது. தீட்சிதர் ஊரை அடைந்ததும் அவருடைய மகன் அவருக்கு இதைத் தெரிவித்தான்.

மூன்று வருடங்கள் விலகி நின்று நினைவில் மட்டுமே தனக்குக் காட்சியளித்து வந்த ஓங்காரன் மீண்டும் தன் கைகளினால் சேவை செய்யக் கிடைக்கப் பெற்ற போது தீட்சிதருக்கு அபாரமான ஒரு ஆனந்த அநுபவம் ஏற்பட்டது. அந்த அநுபவத்திற்கு ஒரே ஒரு குறை தான். இந்த சந்நிதியில் அளவற்ற சிரத்தையுடன் சேவை செய்து வந்த கௌரம்மாஜி இனி அவ்வாறு செய்யமாட்டாள், ஒருக்கால் செய்வாளோ? உடலின் தலையிலிருந்து விடுவித்துக்

கொண்ட அந்த சூட்சும சக்தி ஏற்கனவே ஒரு வருஷமாக இங்கே தெய்வ சந்நிதியில் சேவை செய்து வருகிறதோ? ஆனந்தத்தை அநுபவித்து வருகிறதோ?

இவ்வாறு ராணியை நினைத்தவாறு தீட்சிதர் தேவ பூஜையை மறுபடியும் தொடங்கினார். ராணியின் பெயரில் சேவை நடத்தி சந்தர்ப்பணையும் செய்வித்தார். ஏழைகளுக்கு அன்னதானம் செய்தார்.

இதன் பிறகு ராணி சமர்ப்பித்த மாலையையும் காசுகளையும் கேட்பதற்காக அவர் போபண்ணாவைத் தேடிச் சென்றார்.

178

இதனிடையே இரண்டு நாட்களில் நாராயணன் அவருக்கு குடகில் நடந்திருந்த எல்லா சங்கதிகளையும் தெரிவித்தான்.

நாட்டில் அரசரின் காலத்தில் இருந்ததைவிட அமைதி நிறைந்திருந்தது. ஒரே குறை என்ன என்றால் நிலத்தைக் குத்தகைக்கு எடுத்துக் கொண்டவர்கள் தானியத்திற்குப் பதில் பணமாக வாரம் கொடுக்க வேண்டுமென்று பிறப்பிக்கப்பட்ட கட்டளை, சம்பாஜெ பிரதேசத்து ஜனங்களுக்கு இது சரிப்படாததால் அவர்கள் புது சர்க்காரை எதிர்த்துப் புரட்சி செய்தார்கள். இதைப் பயன் படுத்திக்கொண்டு லக்ஷ்மீநாராயணய்யாவின் தம்பி சூரப்பா, அப்பாஜியின் மகன் வீரப்பாஜி அரசனாக வேண்டும் என்ற கூக் குரலை எழுப்பி சில ஆட்களைச் சேர்த்துக்கொண்டு அரசாங்கத் திற்கு எதிராகக் கிளர்ச்சி செய்தான்.

புது சர்க்கார் குடகர்களின் உதவியினால் இந்தக் கிளர்ச்சியை அடக்கிவிட்டது. இந்த வீரப்பாஜி என்பவன் அபரம்பர சுவாமி என்கிற சந்நியாசி வேடதாரி என்பதை அறிந்து ஆங்கிலேய கமிஷனர் ஒரு விசாரணை நாடகம் நடத்தி சூரப்பாவை நாடு கடத்தினான்; வீரப்பாஜியை பெங்களூரில் சிறைவைத்தான்.

லக்ஷ்மீநாராயணய்யா தன் தம்பி சூரப்பாவுக்கு உதவியாக இருந்தார் என்ற சந்தேகத்தின் பேரில் கமிஷனர் துரை அவரை பெங்களூருக்கு வரவழைத்து, "இனி நீங்கள் பெங்களூருக்குச் செல்லக்கூடாது. இங்கேயே எங்கள் எதிரில் இருக்க

வேண்டும்,'' என்று உத்தரவிட்டான். இது அநியாயம் என்று போபண்ணு கமிஷனர் துரைக்குச் சொன்னார். கமிஷனர் லக்ஷ்மீநாராயணய்யாவை விட்டுவிடலாமென்று யோசித்துக் கொண்டிருந்தபோது லக்ஷ்மீநாராயணய்யாவே, "இருக்கட்டும் போபண்ணு, விடுங்கள் மடிகேரியானால் என்ன, பெங்களூரானால் என்ன? இப்பொழுது என் மனத்திற்கு மடிகேரி பிடிக்கவில்லை. பெங்களூரிலேயே காலம் தள்ளுகிறேன்," என்றார்.

அவருடைய தம்பியின் மகன் மடிகேரியிலேயே தங்கினான். அரசாங்கம் அதற்குத் தடை விதிக்கவில்லை. சாவித்ரம்மா, "பிறந்த ஊர்; வாழ்ந்த ஊர்; இன்னும் நான் இருக்கப்போகும் நான்கு நாட்களுக்கு வேறு எங்கு போய் இருப்பேன்," என்று கூறி, பேரனுடன் மடிகேரியிலேயே தங்கிவிட்டாள்.

பகவதி ஒரு வருஷம் தனது கோவிலில் இருந்தாள். அவ்வப்பொழுது மடிகேரிக்கு வந்து தொட்டவ்வாவுடன் பேசிவிட்டும், கோவிலில் சேவை செய்துவிட்டும், தீட்சிதருடைய மக்களுடன் பேசிவிட்டும் போவாள். வருடத்திற்குப் பிறகு அவள் வரவில்லை. எங்கே போனாள் என்று யாருக்கும் தெரியாது.

179

தீட்சிதர் போபண்ணுவிடம் வந்து க்ஷேம சமாசாரங்களை விசாரித்த பிறகு தாம் வந்த காரியத்தைச் சொன்னார். போபண்ணு, "சரி ஐயா, அதற்கென்ன கஷ்டம்?" என்றார்; காசியில் நடந்த சங்கதிகளையெல்லாம் விசாரித்தார். ராணி இவ்வளவு விரைவில் காலமாகிவிட்டதைக் கேட்டு அவர் மிக்க துயரமடைந்தார். ஆனால் குடகை அரசரின் ஊழியிலிருந்து விடுவித்தது தான் ஜன்மம் எடுத்ததன் பயனை அடைந்தாற்போல என நினைத்தார். "அந்நியர்கள் ஆளுகிறார்கள்; அதனால் என்ன கெட்டுப்போய்விட்டது? ஆள்பவன் ஒரு ஆள்; ஜனங்கள் அவனை சரியானபடி நடத்தவேண்டும். நான் இருக்கும்வரையில் இதைப் பார்த்துக்கொள்கிறேன். பிறகு அடுத்த தலைமுறையார்தான் பார்த்துக்கொள்ளவேண்டும்." தீட்சிதர் கேட்டார்: "எந்த அரசாட்சியும் ஒரேமாதிரி எப்பொழுதும் தர்மத்துடன் நடைபெறுவதில்லை. நான்கு நாட்கள் சரியாக நடைபெறுகிறது; நான்கு

நாட்கள் மக்களுடன் போராடி கீழே விழுந்து விடுகிறது. இது ஈசுவர சங்கல்பம். கீதையின் யதாயதாஹி சுலோகம் இந்தத் தத்துவத்தைத்தான் சொல்லுகிறது.''

போபண்ணா: "இதிலெல்லாம் உங்களுக்கு மிகவும் நம்பிக்கை, இல்லையா ஐயா?''

''ஆமாம், மந்திரியாரே.''

"இப்பொழுது நான் மந்திரி இல்லை, ஐயா; மற்றவர்களைப் போல நானும் ஒரு பெரிய மனிதன். அதுபோகட்டும். இந்தப் புதியவர்களும் அநியாயம் செய்கிறார்கள், அடிவாங்குகிறார்கள் என்று சொல்லுகிறீர்களே நீங்கள்?''

''ஆமாம்.''

"இவர்கள் எவ்வளவு நாள் இருப்பார்கள்? கணக்குப் போட்டுச் சொல்லுகிறீர்களா?''

''ஏற்கனவே கணக்குப் போட்டு வைத்திருக்கிறேன், சுவாமி. உங்களுக்கு அதில் நம்பிக்கை இல்லையோ?''

"நம்பிக்கை இல்லையென்று அல்ல ஐயா; தெரிந்துகொண்டு செய்யப்போவது ஒன்றும் இல்லை என்று, அவ்வளவுதான். பாருங்கள்; நீங்கள் சொல்லிக்கொண்டிருந்தீர்களாம்; அரசன் தன் மருமகனைக் கொல்லப்போகிறான் என்று. எல்லோரும் சொல்லிக்கொண்டுதான் இருந்தோம், கொன்றுவிடுவான் கொன்றுவிடுவான் என்று. நாம் சொல்லிக்கொண்டிருந்தபடியே அவன் கொன்றுவிட்டான். தெரிந்ததனால் என்ன ஆயிற்று சொல்லுங்கள்?''

"உண்மை சுவாமி. இருந்தாலும் நிச்சயம் செய்துள்ள கஸ்வரன் காலில் நாம் விழுந்து வேண்டினால் அந்த நிச்சயத்தை மாற்றுவாரோ என்ற சபலம்தான். மாற்றுவிட்டால் அநுபவிக்க வேண்டியதுதான்.''

"அது சரிதான் என்று வைத்துக்கொள்ளுங்கள்; நாம் குதிரையின்மீது உட்கார்ந்திருக்கிறோம். அது கடிவாளத்திற்கு அகப்பட்டு ஓடுகிறது. கடிவாளத்தைப் பல்லில் கடித்துக் கொண்டு விட்டாலோ அதன் ஓட்டம் நம் விருப்பத்தைப் பொறுத்ததல்ல; குதிரையின் விருப்பம்தான். அது எங்கே போனாலும் நாம் அங்கே போகவேண்டும். அப்பொழுது நம் எண்ணமெல்லாம் எப்படி கீழே விழாமல் அதன் முதுகோடு ஒட்டிக்கொண்டிருப்பது என்பதுதான்.''

"சரியான பேச்சு. விதி கடிவாளத்தைப் பல்லால் கடித்துக் கொண்டுவிட்டால் எல்லோரின் கதியும் அவ்வளவுதான்."

"குடகின் இன்றைய அதிருஷ்டம் எவ்வளவு நாள் நடக்கு மென்கிறீர்கள்?"

"உண்மையாகத்தானே கேட்கிறீர்கள். விளையாட்டில்லையே?"

"சேசே. உங்களுக்குத் தெரிந்திருப்பதைச் சொல்லுங்கள், ஐயா."

"இரண்டு வருடச் சக்கரம் இந்த அரசாட்சி நடைபெறும், சுவாமி. இடையில் அவர்களே விட்டாலும் விட்டுவிடலாம் அல்லது நீங்களும் விடுவிக்கலாம் இரண்டும் நடைபெறாமல் போனால் நூறு வருஷம் உறுதி."

"அப்புறம் தான் இது ஏன் அழியவேண்டும்?"

"எது அழிவதற்கும் காரணம் ஒன்றே. 'நான்' முன்னால் வந்தால் தான் பாழ். சுய நலம் வளரும், சொரூப ஞானம் போய் விடும். காரியம் கெட்டுவிடும்."

"சரி ஐயா, வேறென்ன விஷயம்?"

ஏதோ இரண்டொரு விஷயங்கள் பேசி விட்டு தீட்சிதர் புறப்பட்டு வந்தார்.

180

பத்து வருடங்களுக்கு மேல் ஓடிவிட்டன. குடகின் ஜனங்கள் தமது முன்னாள் அரசன் வீரராஜன் மகளுடன் இங்கிலாந்துக்குச் சென்று விட்டதாகக் கேள்விப் பட்டனர். மகளுக்கு ராஜ்ஜியத்தைச் சம்பாதித்துக் கொடுக்கும் ஆசையில் வீரராஜன் விக்டோரியா ராணியாருக்கு விண்ணப்பம் செய்துகொண்டு மகளை கிறிஸ்தவ மதத்தில் சேர்க்க ஏற்பாடுகள் செய்தான். அந்த ராணி இவன் பிரார்த்தனையை ஏற்றுக்கொண்டாள்; ராஜகுமாரி கிறிஸ்தவ மதத்தில் சேர்ந்தாள். இந்தச் செய்தி குடகுக்கு அப்பொழுது எட்டவில்லை. மெக்லிங் அவளுக்கு அரசபதவியை வாங்கிக் கொடுக்க முயற்சி செய்தான். ஆனால் அவன் முயற்சிகள் பலனளிக்கவில்லை. ஒரிரண்டு வருஷங்களில் ராஜகுமாரி காப்டன்

துரையைக் கல்யாணம் செய்து கொண்டாள். சில வருடங்களுக்குள்ளாக ஒரு பெண் மகளை ஈன்றாள். குழந்தை பிறந்த மூன்றாவது வருடத்தில் வீரராஜன் இறந்து போனான்; அதன் பிறகு இரண்டு வருஷங்களுக்குள்ளாக ராஜகுமாரியும் இறந்து விட்டாள். குடகின் அரண்மனையாரின் ஆங்கில வாழ்க்கையின் அறிகுறியாக எடித் சாது விக்டோரியா கௌரி காம்பெல் என்கிற சிறுமி ஒருத்தி தனது தந்தையான காப்டன் துரையின் கையில் இங்கிலாந்தில் இருந்தாள்.

இப்போது குடகு ஆங்கிலேயர்களின் கைக்கு வந்து முப்பது வருடங்கள் சென்றுவிட்டன. குடகின் மக்கள் இவை எதையும் அறியாமலே வாழந்தனர்.

7. முடிவுரை

இன்னும் அறுபது வருடங்கள் சென்றன. பரத கண்டம் ஆங்கிலேயர்களின் பிடியிலிருந்து தப்புவதற்கு ஆரம்பித்திருந்தது. நண்பர் உத்தய்யா அவர்களின் அழைப்பை ஏற்றுக்கொண்டு நான்கு மைசூர் நண்பர்கள் சகோதரப் பிரதேசமான குடகைப் பார்த்து வரப் புறப்பட்டனர்; அதன் அழகைக் கண்டு மயங்கினர். 'மைசூர்க்காரர்களான எங்களுக்குத்தான் அறிவில்லாமல் போய் விட்டது, குடகு நாட்டு மக்கள் ஏன் இதைத் தாங்களாகவே ஆங்கிலேயர்களிடம் கொடுத்துவிட்டனர்' என்று ஆச்சரியப்பட்டார்கள். நண்பர் உத்தய்யா அவர்கள் சிகவீரராஜனின் கதையை விவரித்தார். தமது பாட்டனார் உத்தய்யா அந்த அரசனின் மகளைக் கல்யாணம் செய்து கொள்வதாக இருந்ததென்றும், ராஜ்யத்தை மீண்டும் பெறவேண்டுமென்ற ஆசையில் வீரராஜன அந்த ஏற்பாடடிற்குச் சம்மதிக்காமல் மகளைக் கிறிஸ்தவ மதத்தில் சேர்த்துவிட்டதாகவும் சொன்னார். அதே சமயத்தில் அந்த அரசனைக் குறித்து குடகுநாட்டு மக்களிடையே நிலவி வரும் பல கதைகளும் தெரியவந்தன. சிக்கவீர ராஜனின் கதை நமது ஜனங்களின் மனத்தைக் கலக்கக் கூடிய கதை என்பதை இவர்கள் அறிந்து கொண்டார்கள். கதாசிரியர் இதை எழுதுகிற யோசனையைக் கைக்கொண்டார்.

அது நடந்து நான்கு வருடங்கள் கழிந்தன. பரத கண்டத்தின் விடுதலை வரலாறு ஒரு கட்டம் முன்னேறி இங்கிலாந்தில் வட்ட மேஜை மகாநாடு நடைபெற்றது. அப்பொழுது இந்த நண்பர்களில் ஒருவர் இங்கிலாந்துக்குச் சென்றார்.

மனிதன் கதையை எழுதுவது போல வாழ்க்கையும் கதை எழுதுகிறது. ஒருக்கால் வாழ்க்கை கதை எழுதுவதனாலேயே மனிதனுக்குள்ளும் அந்தத் தன்மை காணப்படுகிறதோ என்னவோ. இங்கிலாந்துக்குச் சென்ற நண்பருக்கு சில நாட்களுக்குள்ளாகவே இந்த அநுபவம் ஏற்பட்டது. தமது ஆசிரிய நண்பர் குடகின் கதையை எழுதவேண்டுமென்று யோசித்திருந்தது இந்தப் பெரியவருக்குத் தெரிந்திருந்தது. எனவே

அந்த நண்பர் தமது அநுபவத்தைப் பற்றி கதாசிரியருக்கு ஒரு கடிதம் எழுதினர்.

"நண்பர் உத்தய்யாவும் நாமும் குடகின் சரித்திரத்தைக் குறித்துப் பேசியது, நீங்கள் குடகின் வரலாற்றைத் தழுவி ஒரு கதை எழுதவேண்டுமென்று யோசித்தது, இவையெல்லாம் இந்த மூன்று நாட்களில் நடந்த அநுபவத்திலிருந்து எனக்கு மீண்டும் நினைவுக்கு வந்தன. சங்கதியைத் தெரிவித்தால் நீங்கள் ஆச்சரியப் பட்டுப்போவீர்கள். இந்தச் சங்கதி உங்கள் கதைக் காகவே நடந்தது என்று தோன்றினல், இல்லை என்று நான் சொல்லமாட்டேன்.

"மூன்று நாட்களுக்கு முன்னல் இந்த மகாநாட்டுக்கு வந்திருக் கும் நான்கு பேர் நாங்கள் சபை மண்டபத்திலிருந்து சற்றுத் தள்ளியிருக்கும் பலகார விடுதியில் மத்தியான்ன உணவிற்காகக் கூடினோம். சாப்பிட்டுக்கொண்டே சபையில் நடந்த விவாதத்தைக் குறித்து ஒவ்வொருவருடைய அபிப்ராயத்தையும் உரக்கவே சொல்லிக்கொண்டோம். பக்கத்து மேஜையில் உட்கார்ந்திருந்த ஓர் ஆங்கில மாது எங்கள் சாப்பாடு முடிவதற்காகவே காத்திருந் தது போல எங்களிடம் வந்தார்; அவர்கள் வழக்கப்படி வணக்கம் செலுத்தி, 'மன்னிக்கவேண்டும், எதேச்சையாக உங்கள் பேச் சைக் கேட்க நேரிட்டது. அதிலிருந்து நீங்கள் மைசூரிலிருந்து வந்திருப்பவர்கள் என்று தெரிந்தது. உங்களோடு பேசவேண்டு மென்ற விருப்பத்தினல் வந்திருக்கிறேன்', என்றார்.

"நாங்கள் எழுந்து அவரை வரவேற்று உட்காரச் சொல்லி ஆசனம் கொடுத்து, 'உங்களுக்கு மைசூரின் மீது அக்கறை இருப் பதற்குக் காரணம் இருக்கவேண்டும். அதை நாங்கள் தெரிந்து கொள்ளலாமா?' என்றோம்.

'நான் மைசூரைப் பற்றி ஆவலுடன் விசாரித்ததற்குக் காரணம் அது குடகை அடுத்தாற்போலுள்ள சமஸ்தானம் என் பதனல். நான் குடகு நாட்டுடன் தொடர்புடையவள்'

'மிக்க சந்தோஷம். தங்களுக்கு அங்கு காப்பித்தோட்டம் ஏதா வது இருக்கலாம் அல்லவா?'

'இல்லை, ஆனல் தெய்வ இச்சை இருந்திருந்தால் குடகே என்னுடையதாக இருந்திருக்கக் கூடும்.'

'அப்படியென்றல்' தயவு செய்து விவரமாகச் சொல்ல வேண்டும்.'

'குடகின் கடைசி அரசர் வீரராஜேந்திரர் இந்த நாட்டிற்கு வந்து இங்கே மரணமடைந்தார். உங்களுக்கு அது தெரியுமல்லவா? அவரது மகள் விக்டோரியா கௌரம்மாவும் இங்கேயே இறந்து போனார். அவர் காப்டன் காம்பெல் என்பவரை மணந்து கொண்டிருந்தார். அவருடைய ஒரே மகள் நான். என் பெயர் எடித் சாது.'

"எங்களுக்கெல்லாம் மயிர்க் கூச்சிட்டது. மிகுந்த சந்தோஷத்துடன், 'உங்களைப் பார்த்ததை ஒரு புண்யம் என்றே கருதுகிறோம்' என்றோம்.

"நாங்கள் மீண்டும் சபைக் கூட்டத்திற்குப் போகவேண்டியிருந்தது. அந்த அம்மாளுக்கும் வேறு வேலை இருந்தது. ஆகையால் அவர் தமது விலாசம் குறித்துள்ள அறிமுக அட்டையைக் கொடுத்து, 'ஓய்வு கிடைத்தபொழுது தயவு செய்து என் வீட்டிற்கு வந்து தேநீர் அருந்திவிட்டுப் போகவேண்டும். எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருக்கும்' என்றார்.

"ஓய்வு கிடைப்பதற்குச் சில நாட்கள் ஆகலாம். அது வரையில் இதைத் தெரிவிக்காமலிருக்க மனம் கேட்கவில்லை. ஆகையால் இக் கடிதம் எழுதியிருக்கிறேன். அவரைப் பார்த்துப் பேசிய பிறகு மேற்கொண்டு கதை."

182

பதினைந்து நாட்களுக்குப் பிறகு அவரிடமிருந்து வந்த கடிதத்தில் கதை மேலும் வளர்ந்திருந்தது.

கடிதம்

இன்று நானும் ராயரும் ஸ்ரீமதி எடித் சாது கௌரம்மா அவர்களின் வீட்டிற்குச் சென்றிருந்தோம். ஒரு மணி நேரம் உட்கார்ந்து கொண்டு ஆசை தீரப் பேசிவிட்டு தேநீர் அருந்தி வந்தோம். முழு விவரமும் தருகிறேன்.

ரா. ரா. "நீங்கள் உங்கள் பாட்டனாரைப் பார்த்திருக்க மாட்டீர்கள் இல்லையா?"

அவர்: "அது உண்மை. என் தாயைப் பார்த்ததுகூட சரியாக நினைவில்லை. என் தந்தை இறந்துவிட்டதைத் தாங்கள் பத்திரிகை

களில் படித்திருக்கலாம். அப்பொழுது எனக்கு வயது சுமார் ஏழு. அவரது முகம் ஒன்றுதான் எனக்கு உண்மையில் நினைவிருக்கிறது."

"உண்மையில் அவர் என்ன ஆனாரென்று பிறகாவது தெரிய வந்ததா? உங்கள் ஆஸ்தியாக உங்கள் தாயார ராஜகுமாரி கௌரம்மாஜியவர்கள் வைத்திருந்த நகைகளையும் ரத்தினங்களையும் எடுத்துக்கொண்டு ஒரு நாள் காலையில் புறப்பட்டுச் சென்றவர் என்னவானார் என்று யாருக்குமே தெரியவில்லை என்று புத்தகங்களில் எழுதப்பட்டிருக்கிறது."

"ஆமாம். என் தந்தை ஏதோ காரியமாக பிரான்சுக்குப் போக வேண்டியிருந்ததாம். விலை மதிப்பற்ற இந்த நகை நாணயங்களையும் ரத்தினங்களையும் வீட்டில் விட்டுச் செல்லவேண்டாமென்று, பாங்கில் டிபாஸிட் செய்துவிட்டுப் போகலாம் என்று எடுத்துக்கொண்டு ஒருநாள் காலையில் பாங்குக்குப் புறப்பட்டாராம். அவர் பாங்குக்கே போய்ச் சேரவில்லை. அது அன்று மாலையில்தான் எங்களுக்குத் தெரியவந்தது. போலீஸில் புகார் செய்தோம். போலீசார் எனனென்னமோ செய்துபார்த்தார்கள். என் தந்தை எப்படி மறைந்துவிட்டார் என்பதை யாராலும் கண்டுபிடிக்க முடியவில்லை. என் தந்தையே விலைமதிப்பற்ற இப்பொருள்களை அபகரித்துச் சென்றிருக்கலாம் என்று சிலர் அபிப்ராயப்பட்டார்கள். இன்னும் சிலர் அப்படித்தான் இருக்க வேண்டுமென்று நிச்சயமாக நம்பினார்கள். ஆனால் உண்மை அப்படி இருக்கமுடியாது."

"உங்கள் தந்தை உங்களை மோசம் செய்துவிட்டு ஓடக்கூடியவரல்ல என்கிறீர்கள்."

"ஆமாம். அவர் இந்த விலையில்லா ஆபரணங்களை பாங்குக்கு எடுத்துச் செல்லும் சங்கதியை நமது ஆட்களின் மூலமாக அறிந்துகொண்ட யாரோ முரடர்கள் அவரை இழுத்துக்கொண்டு போய் ஏதாவது செய்து தீர்த்துவிட்டிருக்கவேண்டுமென்று என் அத்தை நினைத்தாள். அப்பொழுது நான் மிகச் சிறியவள். இது போன்ற விஷயங்களைக் குறித்துச் சிந்திக்கும் அளவு வளர்ச்சி பெற்றிருக்கவில்லை. ஆனால் இப்பொழுது யோசிக்க யோசிக்க என் அத்தையின் எண்ணம்தான் சரியென்று தோன்றுகிறது."

சு. ரா. "உங்கள் அத்தை என்பது ஸ்ரீமதி லோகன் அல்லவா?"

அவர்: "ஆமாம்."

ரா. ரா. "இது விஷயங்களில் உங்கள் அபிப்ராயமே முடிவானது. திருடினார், மோசம் செய்தார் என்றெல்லாம் சொல்லி உங்கள் தந்தையின் பெயரை மாசுபடுத்த யாருக்கு என்ன அதிகாரம்?"

அவர்: "சரியான பேச்சு. தங்களுக்கு மிகவும் நன்றி."

சு. ரா. "இந்தப் பொருள்கள் கெட்டுப் போனதனால் உங்களுக்கு மிகவும் கஷ்டமாக இருந்திருக்குமே?"

அவர்: "அதெல்லாம் ஒன்றுமில்லை. கெட்டுப்போனது மிகப் பெரிய ஆஸ்திதான். இருந்தாலும் என் தாயாரின் பெயரிலிருந்து என் பெயருக்கு வந்திருந்த நிதி, என் தந்தையின் சேமிப்புப் பணம் இவை போதுமான அளவு இருந்தது. அத்தை லோகன் என்னை நன்றாகவே வளர்த்தாள்."

சு. ரா. "தங்களுக்குச் சொல்வதற்குத் தடையில்லை என்றால் இப்போது தங்கள் நிலைமை எப்படி இருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறோம்"

அவர்: "தடையென்ன? தெரிவிக்கிறேன் கேட்டுக்கொள்ளுங்கள். நான் இருபதாவது வயதில் கல்யாணம் செய்து கொண்டு ஒரு மகனைப் பெற்றேன். ஆயிரத்துத் தொளாயிரத்துப் பத்தில் எனது கணவர் காப்டன் மார்ட்லி இறந்துபோனார். அதற்கு முன்பே என் மகன் ராணுவத்தில் ஒரு கமிஷன் பெற்றிருந்தான். ஆயிரத்துத் தொளாயிரத்துப் பதினெட்டில் யுத்த காலத்தில் ஆஸ்திரேலியாவுக்குச் சென்றான். அங்கே சமீபத்தில் மடிந்து போனான். இப்பொழுது நான் தனிக்கட்டை. என் காலம் எப்பொழுது வருகிறதென்று காத்துக்கொண்டிருக்கிறேன்."

ரா. ரா. "அது வெகுவாக வரட்டும். உங்களிடம் உங்கள் தாயார், பாட்டி, பாட்டனார் இவர்கள் சம்பந்தப்பட்ட கடிதங்கள், பத்திரங்கள் இருக்கவேண்டுமே?"

அவர்: "ஏதோ சில இருந்ததாகக் கேள்விப் பட்டிருக்கிறேன். அவைகளில் சில கெட்டுப் போய்விட்டதாகவும் மற்றவைகளை அரசாங்க நூல் நிலையத்திற்குக் கொடுத்து விட்டதாகவும் என் அத்தை சொல்லிக் கொண்டிருந்தாள். இப்பொழுது என்னிடம் மிகுந்திருப்பது என் தாய் என்னைத் தூக்கிவைத்துக்கொண்டு, என் தந்தை, பாட்டனார் இவர்களோடு சேர்ந்து எடுத்துக் கொண்ட புகைப் படம்; என் தாய் தானே வர்ணத்தில் தீட்டிய என் பாட்டியின் ஒரு சித்திரம். இவைகளைக் காண்பிக்கிறேன்."

என்று கூறி அவர் உள்ளே சென்று ஒரு கட்டுடன் வெளியே வந்தார்.

புகைப் படத்தைப் பார்த்தோம். வீரராஜனின் முகம் தேஜஸுடன் கூட கம்பீரமாக இருந்தது. மகள் நோயாளி என்பது காணப்பட்டது. மாப்பிள்ளை ஆறுக்கு மேலில்லை மூன்றுக்குக் கீழில்லை என்று சொல்லும்படியான சாதாரண மனிதன்.

அதன் பிறகு அவர் பிரேம் போட்ட ஒரு படத்தை எங்கள் கையில் கொடுத்து. "இது என் பாட்டி" என்றார்.

நாங்கள் அதைப் பார்த்தோம். எங்களுக்கு ஒரே வியப்பாகப் போய் விட்டது. ஏனென்றால் அது பிரபல நடிகை எலென் டெரரியின் படம்.

நாங்கள் வாய்திறப்பதற்கு முன்னரே எங்கள் முகபாவத்திலிருந்தே அது தமது பாட்டியின் படம் அல்ல என்பதை அவர் தெரிந்துகொண்டு, "ஏன், மறுபடியும் நான் தவறு செய்து விட்டேன் போலிருக்கிறது. ஒவ்வொரு தடவையும் இப்படியே எலென்டெர்ரி படத்தைக் கொடுத்து இல்லை என்று சொல்லி மறுபடியும் பாட்டியின் படத்தைக் கொடுக்கிறேன். எலென் எனக்குப் பரிசயமானவள். மிகவும் பிரபல மடைந்தவள். இந்தப் படத்தை எனக்குக் கொடுத்தாள். என் பாட்டியின் படம் இது," என்று கூறி வேறொரு படத்தைக் கொடுத்தாள்.

ஆஹா! அது என்ன முகம்! ஆமாம். அது குடகின் ராணியின் முகம்.

நானும் நண்பர்களும் சட்டென எழுந்தோம். படத்தின் முன்னால் கை கூப்பிக்கொண்டு நின்றோம். பிறகு மறுபடியும் உட்கார்ந்து வெகு நேரம் அதையே பார்த்துக் கொண்டிருந்தோம். எவ்வளவு பார்த்தாலும் போதும் என்று தோன்றவில்லை.

அவர்: "படம் உங்களுக்கு இவ்வளவு பிடித்திருப்பது குறிதது எனக்கு மகிழ்ச்சி. என் பாட்டி இயற்கையாகவே ராணி என்பது அப்படத்தில் தெரிகிறது."

ரா. ரா, "ஆமாம் அம்மா, சந்தேகமில்லை, தன் தாயாரை இவ்வாறு எழுதவேண்டுமென்றால் உங்கள் தாய் நல்ல சைத்திரிகராக இருந்திருக்கவேண்டும்."

அவர்: "ஆமாம். ஆனால் திறமையைவிட அதிகமாக அவரது சிரத்தையினால் அந்தப் படத்திற்கு அழகு வந்தது என்று அதை சொல்லுவாள்."

சு. ரா. "உங்கள் அத்தை தன் தம்பியின் மனைவியை மிகவும் அக்கறையுடன் கவனித்துக் கொண்டிருக்க வேண்டுமென்று இதனால் தெரிகிறது."

அவர்: "நீங்கள் நினைப்பது சரி. என் தாயாரின் வாழ்க்கையில் என் அத்தையின் சஞ்சலமில்லாத அன்பு மற்றெல்லாவற்றைக் காட்டிலும் அதிகமாக அவரது மகிழ்ச்சிக்குக் காரணமாயிருந்தது.

ரா. ரா. "இதைக் கொஞ்சம் விவரமாகச் சொல்ல வேண்டும்."

அவர்: "சொல்லுகிறேன் கேளுங்கள். மூடி மறைப்பதேன்? கடைசி நாட்களில் என் தாய் தந்தையரிடையே சிறிது மனக் கசப்பு ஏற்பட்டுவிட்டிருந்தது."

ரா. ரா. "இதைப்பற்றி நான் படித்திருக்கிறேன்."

அவர்: "ஆமாம். என் தாயார் சிறு வயதில் உத்தய்யன் என்ற இளைஞனை அறிந்திருந்தாராம். அவனைக் கல்யாணம் செய்து கொள்வதாகவும் இருந்திருக்கவேண்டும். என் தந்தை அப்பொழுது இந்தியாவில் இருந்தார்; இந்தச் சங்கதி அவருக்குத் தெரியும். என் தாயார் கர்ப்பிணியாக இருந்த பொழுது அவரது ஆரோக்கியம் மிகவும் கெட்டுப்போயிருந்ததாம். பிரசவநாள் நெருங்கியபோது, பிரசவம் ஆனதும் தான் இறந்துவிடுவதே நிச்சயம் என்று தோன்றி அவர், குழந்தை பிழைத்தால் அதன் பெயரில் ஆணாக இருந்தால் உத்த என்கிற பெயரையும், பெண்ணாகில் சாது என்கிற பெயரையும் சேர்க்கச்சொல்லி கேட்டுக் கொண்டாராம். மனைவி தனது பழைய காதலனை நினைத்துக் கொண்டிருக்கிறாள் என எண்ணி என் தந்தை வெறுப்புற்றாராம். என் அத்தை அவரை நீ பெரிய ஒதெல்லோவாக இருப்பாய் போலிருக்கிறதே என்று கோபித்துக்கொண்டாராம்."

சு. ரா. "ஆமோ ஒதெல்லோ."

அவர்: "இதனால் என் தாயார் மனம் நொந்தார். நான் பெண்ணாகப் பிறந்ததால் நல்லதாகப்போயிற்று என்றார். கூட அவருக்கு இன்னொரு குறையும் இருந்தது."

நாங்கள் ஒன்றும் பேசவில்லை. ஒருகணம் விட்டு அவரே தொடர்ந்தார்.

"தந்தையின் விருப்பப்படி தானெனனவோ கிறிஸ்கவ மதத்தை சேர்ந்துவிட்டார். ஆனால் தன் தாய பக்தியுடன் ஆராதித்து வந்த ஓங்கார சுவாமிக்கு அவர் பெயரில் தான் ஒரு வைரத்தை

சமர்ப்பிக்கவேண்டும் என்று அவருக்கு ஆசை. அவர் அதற்காகவே ஒரு வைரத்தை எடுத்து வைத்திருந்தார். இந்தியாவுக்கு அதை அனுப்ப முடியவில்லை. 'நான் அனுப்பாமல் தாமதம் செய்துவிட்டேன், நீங்களாவது அனுப்புங்கள்' என்று கண் மூடுவதற்கு முன்னால் என் தந்தையிடம் சொன்னாராம்."

ரா. ரா. "அது சுவாமிக்கு வந்து சேரவில்லையா?"

அவர்: "இல்லை. என் தந்தையும் தாமதம் தெய்தார். தந்தை மறைந்த அன்று மற்ற நகை நாணயங்களோடு அதுவும் போய் விட்டது."

சு. ரா. "அதற்குப் பதிலாக தாங்கள் வேறு எதையாவது கொடுத்துவிடலாமே. வசதி இல்லையோ?"

அவர்: "பத்தாயிரம் பவுன் விலையுள்ள வைரம். அதற்கு ஈடாக நான் எதைக் கொடுக்கமுடியும்?"

வேறு சில விஷயங்களைப் பேசிவிட்டு நாங்கள் விடை பெற்றுக் கொண்டு வந்தோம்.

எப்படியிருக்கிறது சமாசாரம்? ஆச்சரியமாக இல்லை? வீர ராஜரின் மகளை தமது பாட்டனார் படைத்தலைவர் உத்தய்யா என்பவர் கல்யாணம் செய்துகொள்வதாக இருந்தது, வீரராஜர் வேலூருக்குப் போனதனால் இது தவறிவிட்டது, பிறகு பாட்டனார் உத்தய்யா உத்தய்யதக்கனின் பேத்தியை மணந்துகொண்டார் என்று நமது நண்பர் உத்தய்யா சொன்ன கதைக்கும் இதற்கும் பொருந்துகிறதல்லவா?

நீங்கள் கதையை இன்னும் ஆரம்பித்ததாகவே தெரியவில்லை. சீக்கிரம் எழுதுங்கள். நான் இப்பொழுது தெரிவித்துள்ள விஷயங்களும் பயன்படக்கூடும். எப்படி பொருத்தமாக இருக்குமோ அப்படி இவைகளை உபயோகித்துக்கொள்ளுங்கள். கதையை நீங்கள் எவ்வளவு சீக்கிரம் எழுதி முடிக்கிறீர்களோ அவ்வளவு சீக்கிரம் நான் அதைப் படித்து சந்தோஷப் படுவேன்.

கடிதம் இவ்வாறு முடிந்தது. அந்தப் பெரியவரின் கடிதத்தில் கண்டுள்ள அவ்வளவு விவரங்களும் இந்தக் கதையில் பயன் பட்டுள்ளன. அந்தக் கடிதத்தைக் கதையில் உபயோகப் படுத்துவது மட்டுமல்ல, அதன் வாக்கியங்களாலேயே கதையை முடிப்பதே அழகு. பெரியவர்களின் வாக்கு பொன்செய் மருந்து என்றார் முனிவர். ராயரின் கடிதம் கதைக்கு பரதவாக்கு.

முற்றும்